# COMPANION TO THE BIBLE.

---

# வேதோபகரணம்.

"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே." யோவா. 5. 39.

"கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் தியானமாயிருக்கிற [illegible] பாக்கியவான்." சங். 1. 2.

MADRAS:

THE RELIGIOUS TRACT AND BOOK SOCIETY,

C. K. S. PRESS, VEPERY.

1883.

C. K. S. PRESS, VEPERY, MADRAS, 1883.

587
220.4
TAMIL NADU ARCHIVES LIBRARY
5598

# பொருளடக்கம்

## முதலாம் பங்கு.

### முகவுரை.

| | | பக்கம் |
|---|---|---|
| I. | வேதாகமத்தின் பேர் | 2 |
| II. | வேதாகமப் பிரிவு | 3 |
| III. | வேதாகமத்தின் புராதனம் | 4 |
| IV. | வேதாகம கர்த்தாநிச்சயம் | 5 |
| | புதிய ஏற்பாட்டு கர்த்தாநிச்சயம் | 6 |
| | பழைய ஏற்பாட்டு கர்த்தாநிச்சயம் | 11 |
| | வாக்கிய வித்தியாசங்கள் | 13 |
| V. | வேதாகமத்தின் காரியநிச்சயம்: வேதாகமம் நம்பப்படத்தக்கது | 15 |
| | புதிய ஏற்பாட்டின் காரியநிச்சயம் | ,, |
| | பழைய ஏற்பாட்டின் காரியநிச்சயம் | 17 |
| VI. | வேதாகமம் திவ்விய அதிகாரமுள்ளது | ,, |
| | புதிய ஏற்பாடு திவ்விய அதிகாரமுள்ளது | 18 |
| | பழைய ஏற்பாட்டின் திவ்விய அதிகாரம் | 21 |
| | புதிய பழைய ஏற்பாடுகள் தேவஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டது | ,, |
| VII. | வேதாகமம் கொடுக்கப்பட்ட நோக்கம் | 23 |
| VIII. | வேதாகமம் இங்கிலீஷ்பாஷையில் திருப்பப்பட்டது | 25 |
| IX. | தமிழ் வேதாகமத் திருப்புதல் | 28 |

# இரண்டாம் பங்கு.

௨

## பழைய ஏற்பாடு.

பக்கம்.

I. பழைய ஏற்பாடு எழுதப்பட்ட பாஷை .... 32
II. பழைய ஏற்பாட்டு பூமிசாஸ்திரம் .............. 34
III. பழைய ஏற்பாட்டின் காலக்கணிதம் ....... 57
IV. பழைய ஏற்பாட்டின் ஒழுங்கு .............. 60
V. தனித்தனியான புஸ்தகங்கள் .............. 61

### பஞ்சாகமங்கள்.

1. ஆதியாகமம் .................................... 70
2. யாத்திராகமம் .................................... 75
3. லேவியராகமம் .................................... 77
4. எண்ணாகமம் .................................... 79
5. உபாகமம் .................................... 81

### சரித்திராகமங்கள்.

1. யோசுவாவின் ஆகமம் ........................ 84
2. நியாயாதிபதிகளின் ஆகமம் ................ 87
3. ரூத்தின் ஆகமம் ................................ 89
4. சாமுவேலின் இரண்டு ஆகமங்கள் ........ 90
5. ராஜாக்களின் இரண்டு ஆகமங்கள் ........ 92
6. நாளாகமத்தின் இரண்டு புஸ்தகங்கள் ..... 95
7. எஸ்றாவின் ஆகமம் ............................ 97
8. நெகேமியாவின் ஆகமம் ........................ 98
9. எஸ்தரின் ஆகமம் ............................ [illegible]



பக்கம்.

### பாட்டாகமங்கள்.

1. யோபின் ஆகமம் .................................. 100
2. சங்கீத ஆகமம் .................................. 103
3. நீதிமொழிகளின் ஆகமம் ........................ 110
4. பிரசங்கியின் ஆகமம் ............................ [illegible]
5. சாலொமோனின் உன்னதப்பாட்டு ....... 114

### தீர்க்கதரிசன ஆகமங்கள்.

1. எசாயாவின் தீர்க்கதரிசன ஆகமம் ........ 118
2. எரேமியாவின் ஆகமம் ........................ 123
3. எரேமியாவின் புலம்பல் ........................ 128
4. எசேக்கியேல் தீர்க்கதரிசியின் ஆகமம் ...... 129
5. தானியேல் தீர்க்கதரிசியின் ஆகமம் ....... 132
6. ஓசியா தீர்க்கதரிசியின் ஆகமம் ............ 136
7. யோவேல் தீர்க்கதரிசியின் ஆகமம் ......... 139
8. ஆமோஸ் தீர்க்கதரிசியின் ஆகமம் ......... 140
9. ஒபதியா தீர்க்கதரிசியின் ஆகமம் ........... 142
10. யோனா தீர்க்கதரிசியின் ஆகமம் ............ 143
11. மீகா தீர்க்கதரிசியின் ஆகமம் ............... 146
12. நாகூம் தீர்க்கதரிசியின் ஆகமம் ............ 148
13. ஆபகூக் தீர்க்கதரிசியின் ஆகமம் ........... 150
14. செப்பனியா தீர்க்கதரிசியின் ஆகமம் ...... 151
15. ஆகாய் தீர்க்கதரிசியின் ஆகமம் ............ 152
16. சகரியா தீர்க்கதரிசியின் ஆகமம் ........... 154
17. மல்கியா தீர்க்கதரிசியின் ஆகமம் .......... 156

# மூன்றாம் பங்கு.

## புதிய ஏற்பாடு.

I. புதிய ஏற்பாடு எழுதப்பட்ட பாஷை .... 159
II. புதிய ஏற்பாட்டு பூமிசாஸ்திரம் .............. 160

பக்கம்.

III. புதிய ஏற்பாட்டின் காலக்கணிதம் ........ 182
IV. புதிய ஏற்பாட்டின் கனோன் ........ 185
V. தனித்தனியான ஆகமங்கள் ........ 193

சரித்திராகமங்கள்.

1. மத்தேயு எழுதின சுவிசேஷம் ........ 197
2. மாற்கு எழுதின சுவிசேஷம் ........ 201
3. லூக்கா எழுதின சுவிசேஷம் ........ 205
4. யோவான் எழுதின சுவிசேஷம் ........ 209
5. அப்போஸ்தலர் நடபடிகள் ........ 214

உபதேச ஆகமங்கள் அதாவது நிருபங்கள்.

1. தெசலோனிக்கேயருக்கு எழுதப்பட்ட முதலாம் நிருபம் ........ 219
2. தெசலோனிக்கேயருக்கு எழுதப்பட்ட இரண்டாம் நிருபம் ........ 222
3. கலாத்தியருக்கு எழுதப்பட்ட நிருபம் ........ 224
4. கொரிந்தியருக்கு எழுதப்பட்ட முதலாம் நிருபம் ........ 226
5. கொரிந்தியருக்கு எழுதப்பட்ட இரண்டாம் நிருபம் ........ 230
6. ரோமாபுரிக்கு எழுதப்பட்ட நிருபம் ........ 233
7. யாக்கோபு எழுதின நிருபம் ........ 238
8. எபேசியருக்கு எழுதப்பட்ட நிருபம் ........ 242
9. கொலோசெயருக்கு எழுதப்பட்ட நிருபம் 246
10. பிலேமோனுக்கு எழுதப்பட்ட நிருபம் ........ 248
11. பிலிப்பியருக்கு எழுதப்பட்ட நிருபம் ........ 251
12. பேதுரு எழுதின முதலாம் நிருபம் ........ 253
13. பேதுரு எழுதின இரண்டாம் நிருபம் ........ 256
14. தீமோத்தேயுவுக்கு எழுதின முதலாம் நிருபம் ........ 258
15. தீத்துவுக்கு எழுதின நிருபம் ........ 260



பக்கம்.

. தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்ட இரண்டாம் நிருபம் ........ 263
. எபிரேயருக்கு எழுதப்பட்ட நிருபம் ........ 269
. யூதா எழுதின பொதுவான நிருபம் ........ 274
. யோவான் எழுதின பொதுவான முதலாம் நிருபம் ........ 277
20. யோவான் எழுதின இரண்டாம் நிருபம் .. 280
21. யோவான் எழுதின மூன்றாம் நிருபம் ........ 281

தீர்க்கதரிசன ஆகமம்.

. வெளிப்படுத்தின விசேஷம் ........ 282

## நாலாம் பங்கு.

### பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் இணைத்தல்.

I. சரித்திர இணைப்பு ........ 287
II. உபதேச இணைப்பு ........ 290

## ஐந்தாம் பங்கு.

வேதாகமத்தை ஆராய்ந்து விஸ்தரிப்பதற்குரிய சுருக்கக் குறிப்புகள் ........ 305

## அநுபந்தம்.

A. பூர்வ கையெழுத்துப் பிரதிகள் ........ 322
B. புதிய ஏற்பாட்டு கையெழுத்துப் பிரதிகள் ........ 324
C. பழைய ஏற்பாட்டு காலக்கணிதச் சுருக்கம் ........ 325

பக்கம்.
D. பழைய ஏற்பாட்டு அப்போகிரிபா ஆகமங்கள் ...... 345
E. எபிரெயருடைய பண்டிகைகள், பருவ காலங்கள் முதலியவைகள் ...... 351
F. எபிரெய செய்யுள் ...... 358
G. சங்கீதங்கள் எழுதப்பட்ட சந்தர்ப்பம் காலம் முதலியவற்றைக் காட்டிய அட்டவணை ...... 363
H. பழைய ஏற்பாட்டு ஆகமங்கள் எழுதப்பட்ட காலக்கிரமம் ...... 372
I. புதிய ஏற்பாட்டில் அடங்கிய சங்கதிகளைக் காட்டிய காலக்கணிதச் சுருக்கம் ...... 373
J. சுவிசேஷ சங்கதிகளின் காலக்கிரம அட்டவணை ...... 380
K. புதிய ஏற்பாட்டு தன்றுபடி ஆகமங்கள் ...... 399
L. புதிய ஏற்பாட்டு ஆகமங்கள் எழுதப்பட்ட காலக்கிரம அட்டவணை ...... 40[illegible]
M. இயேசுகிறிஸ்துவானவர் செய்த அற்புதங்கள் ...... 402
N. இயேசுகிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள் ...... [illegible]
O. யூதருக்குள்ளிருந்த சமயவகுப்புகள் ...... 4[illegible]
P. புதிய ஏற்பாட்டில் காட்டப்பட்டிருக்கிற பதிகங்கள், சமயவகுப்பார் ...... 40[illegible]
Q. [illegible]த்தில் வழங்கிவருகிற அளவைவாய்பாடுகள் .. 410

# வேதோபகர்ணம்

## முதலாம் பங்கு.

### முகவுரை.

1. யுக்தி புத்தி சிந்தனையுள்ள ஒருவன், முதலாவதாக வேதாகமத்தை வாசிக்கிறதாயிருந்தால், அவன், அந்தப் புத்தகம் சாதிக்கிறவைகளைப்பற்றிப் பல காரியங்களை விரும்பும்படி [illegible]வப்படுவான். அவன், அதைப் பரும்படியாக வாசித்தபோதிலும், தான் அறிந்த எந்த நூலிலும், அது மிகப் பூர்வீகமுள்ள[illegible]தென்றும்; அது மகா பரிசுத்தமான காரியங்களைப்பற்றிச் [illegible]சொல்லுகிறதென்றும்; அதை எழுதினவர்களாகச் சொல்லப்படுகிறவர்கள், தாங்கள் உன்னதமானவருடைய அதிகாரத்தினாலும் ஏவுதலினாலும், அதை எழுதினதாக அறிக்கையிட்டிருக்கிறார்கள் என்றும் கண்டுகொள்வான். மேலும், அவன் அந்தப் புத்தகம் பல காலங்களில் எழுதப்பட்டாலும், அதின் வாசகக்கட்டு பலவகையுள்ளதாய் இருந்தாலும், எல்லாம் விசேஷித்த நோக்கத்துக்கும் கருத்துக்கும் இசைவு இணக்கமாய்ப் பின்னபேதமின்றி கட்டப்பட்டிருப்பதாயும் அறிந்துகொள்வான். இந்தப் புத்தகத்தில் காட்டப்பட்டிருப்பவைகளோடே மற்றப் புத்தகங்களையும் ஆராய்ந்து பார்த்தானானால், அது உண்டுபண்ணிவருகிற பயனையும், அதை தலைமுறை தலைமுறைதோறுமுள்ள ஜனங்கள், மதித்துக் கண்ணியப்படுத்தி வந்திருப்பதையும் கண்டு பிரமைகொள்ளாதிரான். மேலும், அவன் அந்தப் புத்தகத்தின் முந்தின பாகம், யூதர்களால் பயபக்தியோடும் ஒடுக்க வணக்கத்தோடும் எண்ணப்பட்டு வந்ததென்றும்; அதின் செய்யுள், அவர்களுடைய மிக பரிசுத்த ஆராதனை முறைமையில் வழங்கப்பட்டு வந்ததென்றும்; அதின் சரித்திரம், அந்த ஜாதியாரின் மாட்சிமைக்கும் பிரதாபத்துக்கும் மூலம்

என்றும் கற்றுக்கொள்ளுவான். அந்தப் புத்தகத்தின் பிந்திய பாகத்தைப்பற்றி, (முந்திய பாகம் நீங்கலாகவல்ல) அவன் உலகத்தில் தலையெடுத்து நாகரீகத்தில் தேர்ந்த ஜாதியாரும், அதின் போதனைக்கு அமைந்து நடந்து வந்தார்கள் என்றும்; மனுப்புத்திரரில் சிறந்தவர்களும் அந்தப் புத்தகத்தின் ஏதுவாலே தாங்கள் நாகரீகத்தில் தேறி திருந்தினதாக அறிக்கையிட்டிருக்கிறார்கள் என்றும் அறிந்துகொள்வான். பின்னும், அவன் ஆராய்ச்சி செய்வானாகில் அந்தப் புத்தகத்தின் ஒவ்வொருபாகமும், இயேசுகிறிஸ்துவாகிய ஒரே மனிதனைப்பற்றி அதாவது சிலுவையில் அவர் அடைந்த மரணமாகிய ஒரே சங்கதியைப் பற்றிப் பேசிவருவதாக அறிவான்.

2. அவன் இன்னமும் ஆராய்ச்சிசெய்வதில் முயற்சியாய் இருந்தால், பின்னும் பற்பல கேள்விகள் அவன் மனதில் எழும்ப, அந்தப் புத்தகத்தின் பூர்வம் என்ன? அது எவ்வண்ணமாய் இப்போதிருக்கிற பிரகாரம் வந்திருக்கிறது? இப்போதிருக்கிறபடிதானோ அது எப்போதும் இருந்தது? என்ன ஆதாரத்தின்மேல் அதின் சாதனைகள் நிலைநிற்கிறது? அது தெய்வீகமுள்ளதா? என்ன கருத்தின்படி தெய்வீகமுள்ளது? என விசாரிப்பான்.

3. இப்படிப்பட்ட கேள்விகளுக்கும் இதைப்போன்றவைகளுக்கும் உத்தரமாக இந்தப் புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது.

# I. வேதாகமத்தின் பேர்.

1. பைபில் என்கிற வார்த்தை, "புத்தகம்" என்று அர்த்தங்கொள்ளும். "பிப்லொஸ்" என்கிற கிரேக்கச் சொல்லிலிருந்து வந்தது. ஒன்றாய்த் திரட்டிச் சேர்க்கப்பட்ட பழைய ஏற்பாட்டுக்கு, அலெக்சந்திரியாவிலுள்ள யூதர்களால் "புத்தகங்கள்" என்கிற பன்மைச்சொல் வழங்கப்பட்டது. வேதாகமகனோன்,* முடிந்தபின்பு ஒன்றாகத் திரட்டிச் சேர்க்கப்பட்ட பழைய புதிய ஏற்பாட்டு ஆகமத்துக்கு "புத்தகங்கள்" என்கிற பேரும்

* "கனோன்" என்பதைப்பற்றி இப்புஸ்தகத்தின் மூன்றாம் பங்கு கனோம் பிரிவில் வாசிக்கலாம்.



கொடுக்கப்பட்டது. அந்தப்பேர் பன்மையாக வழங்கப்பட்டு வந்ததென்பதை 5-ம் நூற்றாண்டுவரையுமுள்ள கிரேக்கு லத்தீன் சபை சரித்திரங்களில் பார்க்கலாம். இங்கிலிஷ், தமிழ் முதலான நவீன பாஷைகளில் அது "புத்தகம்" என்று வழங்கி வருகிறது. மற்றப் புத்தகங்களுக்கு எதிரிடையாக, இந்தப் புத்தகமே சரியானதும் குறைவில்லாததும் பூரணமும் தெய்வீகமுமுள்ள புத்தகம் என்று காட்டும்படி, இந்தப் பெயர் அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

2. புதிய ஏற்பாட்டை எழுதினவர்கள், பழைய ஏற்பாட்டுக்கு "வேதவாக்கியம்"[1] என்றும், "வேதவாக்கியங்கள்"[2] என்றும், "பரிசுத்த வேத எழுத்துகள்"[3] என்றும், "தேவனுடைய வார்த்தை"[4] என்றும், "வேதம்"[5] என்றும் பேர்கொடுத்து அழைத்திருக்கிறார்கள். நாமோ வேதபுத்தகம் முழுமைக்கும் இந்தப் பெயரை வழங்குகிறோம். பரிசுத்த எழுத்துகள் என்பதில், பரிசுத்த என்கிற பதம் வேதாகமத்தின் இலட்சணத்தையும், அது கொடுக்கப்பட்ட நோக்கத்தையும் காட்டுகிறது.

# II. வேதாகமப் பிரிவு.

1. வேதாகமம், பழைய ஏற்பாடு என்றும், புதிய ஏற்பாடு என்றும், இருவகையாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறது. தேவன், இருவகையாய் மனுப்புத்திரரோடே செய்திருக்கிற ஏற்பாடு அல்லது உடன்படிக்கையைக் காட்டு நோக்கமாய், இந்தப் பெயர் அதற்கு இடப்பட்டிருக்கிறது. ஏற்பாடு அல்லது உடன்படிக்கை என்கிற பதம், முதலாவது தேவனுக்கும் மனுஷருக்கும் இருக்கிற சம்பந்தத்தைக் காட்டும் கருத்தாய் இடப்பட்டது. பின்பு அந்தச் சம்பந்தத்தைக் காட்டிய புத்தகத்துக்கும், அது பெயராகக் கொடுக்கப்பட்டது.

2. யூதர்களால் பழைய ஏற்பாடு; நியாயப்பிரமாணம் (அல்லது மோசேயின் ஐந்து ஆகமங்கள்) என்றும், தீர்க்கதரிசிகள்

[1] அப். 8. 32.
[2] லூக். 24. 27. 2 தீமோ. 3. 16. 2 பேது. 3. 16.
[3] 2 தீமோ. 3. 15.
[4] லூக். 11. 28.
[5] மத். 21. 42. கலா. 3. 22.

என்றும், எழுத்துகள் என்றும் பிரிக்கப்பட்டது. சிலவேளைகளில் எழுத்துகள் (அதாவது கிரேக்க பாஷையில் வழங்கிய ஹகியோகிராபா அல்லது பரிசுத்த எழுத்துகள்) என்கிற பிரிவு, அந்தப் பிரிவில் முதலாவதாக வருகிற சங்கீத புத்தகத்தின் பேரால், சங்கீதங்கள் என்றும் வழங்கப்பட்டதுண்டு.

§ 3. புதிய ஏற்பாடானது; சரித்திர ஆகமம், உபதேச அல்லது நிருப ஆகமம், தீர்க்கதரிசன ஆகமம் என மூன்று விசேஷித்த பிரிவாகப் பிரிக்கப்படலாம். சரித்திர ஆகமத்தில், நாலு சுவிசேஷங்களும் அப்போஸ்தலர் நடபடியும் அடக்கம். உபதேச ஆகமத்தில் நிருபங்கள் அடங்கியிருக்கிறது. தீர்க்கதரிசன ஆகமத்தில் வெளிப்படுத்தின விசேஷம்மாத்திரம் சேர்ந்திருக்கிறது. இந்தப் பிரிவுகளே தீர்மானமுள்ளவைகள் என் முற்றும் சொல்லக்கூடாது. ஏனென்றால், சரித்திர ஆகமத்தில், உபதேசங்களும் தீர்க்கதரிசனங்களும் உண்டு. நிருபங்களில், சரித்திரங்களும் தீர்க்கதரிசனங்களும் இருக்கிறது. என்றாலும், பொது இலட்சணத்தின்பேரில், மேற்படி மூன்று பிரிவுகளும் சரியானவைகள் என்று ஒப்புக்கொள்ளலாம்.

## III. வேதாகமத்தின் புராதனம்

வேதாகமம் புராதனமுள்ளதென்பதை, அதின் மேல்பார்வையிலேயே அறிந்துகொள்ளலாம். அதின் பாஷை நடை, அதின் சாடைகள், அதின் இலட்சணம் எல்லாம், அது புராதனமுள்ளதென்றே சாட்சியிடுகிறது. அது பூர்வீகமுள்ளதென்பதற்குரிய இதிகாச அத்தாட்சி நமக்குப் பூரணமாய் உண்டு. புதிய ஏற்பாடு, சத்துருக்களாலும் மித்துருக்களாலும் ஆயிரத்தெண்ணூறு வருஷங்களாய் குறிப்பிட்டுக் காட்டப்பட்டு வந்திருக்கிறது. இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூல்களில், புதிய ஏற்பாட்டிலிருந்து உதாரண வாக்கியங்கள் எடுத்துக் காட்டப்பட்டிருப்பதைக் காணலாம். புதிய ஏற்பாடு எழுதப்படுகையில், பழைய ஏற்பாடு மிகப் பூர்வீகமுள்ளதாயிருந்ததென்பது தெளிவான காரியம். பழைய ஏற்பாட்டின் முந்தின புத்தகங்கள், கிறிஸ்துவின் ஆகமனத்துக்கு ஆயிரத்தைந்நூறு வருஷங்களுக்கும், அதின் கடைசியான புத்தகம், நானூறு வருஷங்களுக்கும் முன்னே எழுதப்பட்டிருந்தன. புதிய ஏற்பாட்டு ஆகமங்கள் எழுதப்படுமுன், பழைய ஏற்பா-



டும் மற்றும் சில நூல்களும் மாத்திரம் எழுதப்பட்டிருந்தன. பழைய ஏற்பாட்டின் முந்திய புத்தகங்கள், இக்காலத்தில் இருக்கிற எந்த நூலையும் விட, மிகப் பூர்வமுள்ளது. மோசே என்பவன், திரோயாப் பட்டண முற்றிகைக்கு நானூறு வருஷங்களுக்கு முன்னும், கிரேக்கதேசம், ஆசியாக்கண்டம், இவைகளிலுள்ள பூர்வீக ஞானிகளாகிய தாலேஸ், பித்தாகோராஸ், கன்பூசியுஸ் என்பவர்களுக்குத் தொளாயிரம் வருஷங்களுக்கு முன்னும் இருந்து, தன் ஆகமங்களை எழுதினான். நமக்குத் தெரிந்திருக்கிறபடி எல்லாவற்றிலும் பூர்வீக இதிகாச நூலாசிரியனான ஏரொதோத்து, மல்கியாவின் காலத்துக்கு முந்தி தன் இதிகாசத்தை எழுதவில்லை. ஏரொதோத்துக்கு முந்தி, ஹோமர், ஹெசியட் என்கிற கவிஞர்கள் இருந்தார்கள். இவர்களில் முந்தினவனாகிய ஹோமர் கி. மு. அறுநூற்றுத் தொண்ணூற்றில் ஏசாயாவின் காலத்திலாவது; அல்லது கி. மு. எண்ணூற்றுத் தொண்ணூற்றிரண்டில் எலியாவின் காலத்திலாவது, தன் செய்யுளைக் கட்டியிருக்கவேண்டும். சீசர், சிசிரோ, வேர்ஜில், ஹோராஸ் முதலிய ரோமபாஷைய வித்துவான்கள், பழைய ஏற்பாட்டு ஆகமத்தின் கடைசிபுத்தகத்தை எழுதினவன் சென்று சமாதிக்குட்படுத்திக்கொண்ட நானூறு வருஷங்களுக்குப் பின்வந்தவர்களாயிருந்தார்கள்.

## IV. வேதாகம கர்த்தாநிச்சயம்.

இவ்வளவு புராதனமுள்ள புத்தகம் கர்த்தாநிச்சயம் உள்ளதாய் இருக்குமா? என்கிற கேள்வி, முதலாவதாக கேட்கப்படலாம். ஒரு புத்தகம் அதை எழுதினவனாகச் சொல்லப்பட்டவனாலேயே எழுதப்பட்டதென்றால், அல்லது அதை எழுதினவன் இன்னான் என்று திட்டமாய்த் தெரியாதிருந்தாலும் அது எழுதப்பட்டதாகச் சொல்லப்படுகிற காலத்தில் அல்லது அந்தப் புத்தகத்தில் கண்டிருக்கிற காலத்தில் எழுதப்பட்டதென்றால், அது கர்த்தாநிச்சயம் உள்ளதென்று சொல்லப்படும். அந்தப் புத்தகம், அவன் எழுதின மூலத்துக்கு வித்தியாசமாயிருந்தால், அது புரட்டு என்று சொல்லப்படும். அந்தப் புத்தகம், அதை எழுதினவனாகச் சொல்லப்படுகிறவனால் எழுதப்படாமல் இன்னொருவனால் எழுதப்பட்டதானால், அது கள்ளப் புத்தகம் எனப்படும்.

2. வேதாகமத்திலுள்ள ஒவ்வொரு புத்தகத்தின் மூலப்பிரதி இருந்தால், அதின் கர்த்தாநிச்சயத்தைப்பற்றி யாதொரு சமுசயப்படவேண்டியதாய் இராது. அந்த மூலப்பிரதிக்கு ஒத்து வருகிற நகல் பிரதிகள் எல்லாம் உண்மையுள்ளதாய் இருக்கும். ஆனால் அப்படிப்பட்ட மூலப்பிரதி நம்மிடத்தில் இல்லை. ஆகவே, தற்காலத்தில் நமது வசமாயிருக்கிற புத்தகங்களில் நாம் காணக்கூடிய உதாரணங்களையும், அந்தப் புத்தகம் பாதுகாக்கப்பட்டு நம்மிடம்வரையும் வந்தெட்டியிருக்கிறதுமான காரியங்களையும் விசாரித்து, அவைகளின் கர்த்தாநிச்சயத்தைக்குறித்து திருப்தியடைய வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

## § புதிய ஏற்பாடு கர்த்தாநிச்சயம்.

3. நம்முடைய வசம் இருக்கிற புதிய ஏற்பாடானது, முதலாவதாக அச்சடிக்கப்பட்டபோதிருந்த திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்டதென்பதற்கு யாதொரு சந்தேகம் இல்லை. அச்சடிவித்தையானது கல்விமுயற்சிக்குரிய சிறந்த நன்மையை மனிதருக்குக் கொடுத்திருக்கிறது. இது, புதிய ஏற்பாட்டுக்கு ஒரு கால எல்லையைக் குறிக்கிறது. அதிகமான பிரதிகள், பற்பல இடங்களில் திரும்பத் திரும்ப அச்சடிக்கப்படுவதால், புரட்டுண்டாவதற்கு ஏதுவில்லை. இதால் நாம், ஒரே அடியாய் பதினாறும் நூற்றாண்டு துவக்கம்வரையும் [illegible]திருக்கிறோம். பாரிஸ் பட்டணத்தில் கி. பி. 1516 இராஸ்மஸ் என்பவனால் பிரசித்தம் செய்யப்பட்ட கிரேக்க புதிய ஏற்பாடுகளும், ஸ்பானியாவிலுள்ள அல்கேலா அல்லது கம்புலுற்றம் பட்டணத்தில் கி. பி. 1514 பிரசுரஞ்செய்யப்பட்ட கிரேக்கு லத்தின் பிரதிகளும் இந்நாள்வரையும் இருக்கின்றன. அவைகளை, ஒவ்வொன்றோடும் நவீனகாலத்தில் பிரசுரமானவைகளோடும் ஒத்திட்டுப் பார்க்கில் அவைகள் மொத்தத்தில் சரியாய் இருக்கின்றன.

4. அச்சடிவித்தை கண்டுபிடிக்கப்படுமுன் கர்த்தாநிச்சயத்தை அறிய, நாம் கையெழுத்து பிரதிகள்மேல் சாரவேண்டியவர்களாய் இருக்கிறோம். இந்தக் கையெழுத்துப் பிரதிகளின் சாயல்களைப்பற்றி, இவ்விடத்தில் காட்டவேண்டிய அவசியம் இல்லை. அந்தச் சாயல்கள், காலத்துக்குத்தக்கதாக வேற்றுமைப்பட்டிருப்பதுண்டு.[1] இந்தக் கையெழுத்துப் பிரதிக

பூர்வகாலத்து கையெழுத்துப் பிரதிகளைப்பற்றி அநுபந்தம் A பார்க்க.



ளின் சாயல்களையும் அட்சரங்களையுங்கொண்டு, அந்த நகல்கள் எப்பொழுதெப்போது செய்யப்பட்டன என்று நிர்மாணிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். இதில், நாம் கவனிக்கவேண்டிய முக்கியமான குறிப்பு என்னவென்றால், தேவன், அதிசயமானவிதமாய் இந்தக் கையெழுத்துப் பிரதிகள் தரும் அத்தாட்சியைப் பிந்திய தலைமுறையாராகிய நமக்கும் பிரயோசனமாகப் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறார் என்பதே.

விபட்சமாக, கிரேக்கர் ரோமருடைய சிறந்த கர்த்தாக்கள் எழுதின நூல்களுக்கு எவ்வளவான அத்தாட்சி போதும் என்று கேட்கப்படலாம். அதற்கு உத்தரவாக, இருபது அல்லது பத்து கையெழுத்துப் பிரதிகள் மூலவாக்கியங்களுக்கு அடுத்து வந்தவைகளாய் இருந்தால், போதுமானவைகளாய் இருக்கும் என்று சொல்லலாம். ஏரோதோத்துவின் நூலை ஆட்சேபிப்பார் உண்டா? அவன் நூலுக்கு பதினைந்து கையெழுத்துப் பிரதிகள் நுட்ப சாஸ்திரிகள் கைவசம் அகப்பட்டிருக்கிறது. அவைகளில் மிகப் பூர்வமாயுள்ளது பத்தாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. அது, அசல்பிரதி எழுதப்பட்ட பதினாலு நூற்றாண்டுகளுக்குப் பின்புள்ளதாய் இருக்கிறது. இவ்வளவு பிரதிகள், அவ்வகை [illegible] நூல்களுக்குச் சகட்டுமேனிக்குப் போதுமானதாய் இருக்கிறது. ரோமாபுரி வாற்றிகன் என்னும் புத்தகசாலையில், வெர்ஜில் எழுதின செய்யுளுக்கு, நாலாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதி ஒன்றிருக்கிறது. அது, அசல்பிரதி செய்யப்பட்ட நானூறு அல்லது ஐந்நூறு வருஷங்களுக்குப் பிற்பாடு எழுதப்பட்டதாய் இருக்கிறது. அந்த சிறந்த வித்துவான்கள் செய்த நூல்களுக்கு, இப்போது நமது வசமாய் இருக்கிற கையெழுத்துப் பிரதிகள் பொதுப்பட பத்தாம் பதினைந்தாம் நூற்றாண்டுகளுக்கு இடையில் செய்யப்பட்டவைகள். அப்படியானால் அந்த வித்துவான்கள் இறந்துபோன அநேக நூற்றாண்டுகளுக்குப்பின்பு, அவைகள் செய்யப்பட்டன என்று அறிகிறோம். புதிய ஏற்பாடு முதலாவது அச்சடிக்கப்பட்டபோது, ஐரோப்பாகண்டத்தின் புத்தகசாலைகளில் புதிய ஏற்பாட்டுக்கு அநேக கையெழுத்துப் பிரதிகள் இருந்தன. அவைகள், நடுயுகத்தில் இருந்த சபையின் பிதாக்கள் எழுதின பிரபந்தங்களுக்கும் மற்ற வைதீக ஆசிரியருடைய நூல்களுக்கும் ஒத்த காலமுள்ளதாய் இருக்கிறது என்பதைப் பதினைந்தாம் நூற்றாண்டின் புத்தகசாலைகளின் அட்டவணைகளில் காணலாம். அவைகள் பூர்வத்தில் எழுதப்பட்டாலும் ஒரேகாலத்தில் எழுதப்படாமல், பூர்வத்திலே, பலகாலங்களில்

எழுதப்பட்டன; அவைகள் எழுதப்பட்ட காலத்திற்குத்தக்க தாக, அவைகள் மதிக்கப்படும். பூர்வத்தில் எழுதப்பட்ட கை யெழுத்துப் பிரதிகளே மிகவும் ஏராளமாய் இருக்கின்றன. நவீனமாய் அச்சுப்பதிப்பிக்கப்பட்ட புதிய ஏற்பாடு அநநூறு கை யெழுத்துப் பிரதிகளோடு ஒத்திடப்பட்டிருக்கிறது. அந்தப் பிரதிகள் நாலாம் நூற்றாண்டுமுதல் எழுதப்பட்டவைகள். திசென்டார்வ் என்கிற வேதசாஸ்திரியார் 1844-ம் வருஷத்திலும் 1859-ம் வருஷத்திலும் சேந் கத்தரினுள் சந்நியாசமடத் தில் கண்டெடுத்த சீனாய் கையெழுத்துப் பிரதி (கோடெக்ஸ் சீனாற்றிக்கஸ்) நாலாம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாயிருக்க வேண்டும். அந்த நூற்றாண்டில்தானே வாற்றிக்கன் பிரதியும் (கோடெக்ஸ் வாற்றிக்கானஸ்) எழுதப்பட்டிருக்கிறது. இதுவ ரையும் கண்டுபிடிக்கப்பட்ட பிரதிகளில் இவைகள்தான் மிகப் பூர்வமானவை. ஐந்தாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட அலெக் சந்திரியா பிரதியும் (கோடெக்ஸ் அலெக்சந்திரினஸ்) மிகவும் விசேஷித்தது. அலெக்சந்திரியாவில் முன் பேற்றிரியார்க்காய் இருந்த சிரில் லூக்கா என்பவன், அலெக்சந்திரியாவிலிருந்து கொண்டுவந்து, அதை 1628-ம் வருஷத்தில் இங்கிலாந்து முத லாம் ஜார்லஸ் ராஜாவுக்குக் கொடுத்தான். அது, இப்போது பிரித்தானியா மியூசியம் என்கிற பலபொருள் காட்சிசாலையில் வைக்கப்பட்டிருக்கிறது. மற்ற கையெழுத்துப் பிரதிகளைப் பற்றி, இங்ஙனம் சொல்ல ஏதுவில்லை. காலம் செல்லச் செல்ல நூதனமாய்க் கண்டுபிடிக்கப்பட்ட நகல் பிரதிகள் அநேகமாய் இருக்கின்றன. ஆனால், அவைகளில் மிகப் பூர்வமாயுள்ளது தான் அதிகமாய் மதிக்கப்படும். அதிபூர்வ பிரதிகளுக்கு நம் மிடத்தில் இப்போதிருக்கிற புதிய ஏற்பாடு மொத்தத்தில் ஒத்தி ருக்கிறது.

5. கண்டுபிடிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் ஒவ்வொ ன்றிலும், புதிய ஏற்பாடு முழுவதும் அடங்கியிருக்கிறதில்லை. எல்லாவற்றிலும் மிகப் பூர்வமாயுள்ள சீனாய் கையெழுத்துப் பிரதியில், பழைய புதிய ஏற்பாடுகள் அடங்கியிருக்கிறது. அதில் புதிய ஏற்பாடு ஒரு இடம் குறைவின்றி எல்லாம் இருக் கிறது. வாற்றிக்கன் பிரதியில், நாலு சுவிசேஷங்களும், அப் போஸ்தலர் நடபடியும், ஏழு பொதுவான நிருபங்களும், பவு லின் நிருபங்களில் ஒன்பதும், எபிரேயரில் 9-ம் அதிகாரம் 14-ம் வாக்கியம் வரையும் அடங்கியிருக்கிறது. மேற்படி வாக்கியம் முதல் புதிய ஏற்பாடு கடைசிவரையும் அது குறை வுள்ளதாய் இருக்கிறது. அலெக்சந்திரியா பிரதியில் புதிய ஏற்



பாட்டு புத்தகங்கள் எல்லாம் அடங்கியிருந்தாலும் அநேக வாக் கியங்கள் மாத்திரம் விடப்பட்டிருக்கிறது.[1]

இப்படிப்பட்ட பிரதிகளில் காணப்படும் குறைவு, மற்ற ஆதாரங்களை நாம் நோக்கும்போது, நீக்கப்படுகிற ஏதுவாய் இரு க்கிறது. கிரேக்கு கையெழுத்துப் பிரதிகள் ஏராளமாய் இருக்கி றதோடு, கிரேக்கு கையெழுத்துப் பிரதிகளுக்கு முந்திய கால த்தில், மற்ற பாஷைகளில் திருப்பப்பட்ட திருப்புதல்களும் நமக்குண்டு. திருஷ்டாந்தமாக பெஷீத்தோ (கோர்வை, சரி யான) என்றழைக்கப்பட்ட பூர்வ சீரியபாஷைத் திருப்புதலில் பேதுருவின் இரண்டாம் நிருபம், யோவானின் இரண்டாம் மூன்றாம் நிருபங்கள், யூதாவின் நிருபம், வெளிப்படுத்தல் என்கிற புத்தகங்கள் தவிர மற்றப் புதிய ஏற்பாட்டின் ஆகமங்கள் எல்லாம் அடங்கியிருக்கின்றன. அந்தத் திருப்புதல், இரண் டாம் நூற்றாண்டில் செய்யப்பட்டதென்பதற்குச் சந்தேகம் இல்லை. மேலும் அந்த நூற்றாண்டிலே பூர்வ லத்தீன் திருப்பு தல் செய்யப்பட்டு, பிந்தியகாலத்தில் அது ஜெரோம் என்பவ னால் மூலத்துக்குச் சரியாக மறுபடியும் ஒத்திட்டு, திருப்பப் பட்டு மேலை அநேக லத்தீன் சபைகளில் இந்நாள்வரை பன் னிரண்டு நூற்றாண்டுகளாக வழங்கப்பட்டு வந்திருக்கிற திருப் புதலும் நமதுவசம் இருக்கிறது. நித்திரியன் வனாந்தரத்திலுள்ள சந்நியாசமடத்திலிருந்து கொண்டுவரப்பட்டு, இப்போது பிரி த்தானியா மியூசியத்தில் இருக்கிற சீரியா சுவிசேஷங்களும் இருக் கின்றன. அது ஐந்தாம் நூற்றாண்டில் செய்யப்பட்டதாக சொல் லப்பட்டபோதிலும், இப்போது வழங்கிவருகிற பெஷீத்தோ திருப்புதலுக்கு அது முந்தினதாய் இருக்கவேண்டும் என்று தேறின நூட்பசாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். இவை களைத்தவிர (எகிப்திலுள்ள) கொப்திக், தேபெயிக், பாஷைக ளின் மொழிபெயர்ப்புகளும் நமக்குண்டு. இந்த மொழிபெ யர்ப்பு மூன்றாம் நூற்றாண்டில் அல்லது நாலாம் நூற்றாண்டி லேயேத்திலில் செய்யப்பட்டிருக்கவேண்டும்.

மேற்சொல்லிய காரியங்கள் அன்றியில், பூர்வ திருச்சபை பிதாக்களும், கிறிஸ்துமார்க்க விரோதிகளும் பதினருமானவர் கள் புதிய ஏற்பாட்டாகமங்களில் இருந்து உதாரண வாக்கி யங்களை எடுத்துக் காட்டியிருப்பதோடே அந்தப் புத்தகங்க ளைப்பற்றி நேராயும் குறிப்பாயும் உரைத்து, அவைகள் கிறிஸ் துமார்க்கத்துக்கு அதிகாரமுள்ள புத்தகங்கள் என்று எழுதிவை

[1] B அநுபந்தத்தில் புதிய ஏற்பாட்டு பூர்வ கையெழுத்துப் பிரதிகளைப்பற்றிப் பார்க்க.

த்திருக்கிறார்கள். ஐந்தாம் நூற்றாண்டில் சிப்புருத்தீவில் இருந்த தேயோடொரேட்டு என்பவன், பரிசுத்த பவுல் அப்போஸ்தலனுடைய நிருபங்களைப்பற்றியும், அந்த நூற்றாண்டின் முடிவிலேயே, அவனுக்கு முந்தியிருந்த அலெக்சந்திரியாபட்டணத்து சிரில் என்பவன் பரிசுத்த யோவான் சுவிசேஷத்தின்பேரிலும் எழுதியிருக்கிறார்கள். நாலாம் நூற்றாண்டில், கிறிசொஸ்தம் என்பவன், புதிய ஏற்பாடு முழுவதின்பேரிலும் வியாக்கியானம் எழுதியிருக்கிறான். அந்த நூற்றாண்டில் இருந்த லக்தான்சியஸ், யூசிபியஸ், அதனாசியு, பாசில், கிரக்கொரி, நாசியான்சன், அம்புரோஸ் முதலான அநேகம்பேரும்; மூன்றும் இரண்டாம் நூற்றாண்டுகளில் இருந்த ஓரிஜன், தார்த்துல்லியான், சிப்பிரியான், அலெக்சந்திரியாவிலுள்ள கிளெமெந்து, ஐரினியு, யுஸ்தின்மார்ட்டர் முதலியவர்களும்; முதலாம் நூற்றாண்டின் கடைசியில் இருந்த ரோமாபுரி கிளெமெந்து, இக்னேசியு, போலிகார்ப் என்பவர்களும் எழுதின ஆகமங்கள் இப்போதும் இருக்கின்றன. மேலும், இந்த நூற்றாண்டுகளில், கிறிஸ்துமார்க்க விரோதிகளும் பதிதரும் அநேகர் இருந்தார்கள். அவர்களைப்பற்றி இங்கே விபரஞ்சொல்ல ஏதுவில்லை. இந்த ஆகமக்காரர் எழுதியிருக்கிற நூல்களில், புதிய ஏற்பாட்டிலிருந்து எடுத்துக் காட்டப்பட்டிருக்கிற வாக்கியங்களும், நாம் முன் காட்டியிருக்கிற திருப்புதல்களும், இப்போது நாம் அங்கீகரித்திருக்கிற வாக்கியங்களுக்கு மொத்தத்தில் ஒத்திருக்கின்றன.

6. பூர்வசபை ஆசிரியருக்குள், நாம் மேல்காட்டியிருக்கிற பேர்கள் மிகவும் சொற்பம். மேற்படி ஆசிரியர்களில் நூற்றெண்பதுபேர் எழுதின ஆகமங்கள் தற்காலத்தில் இருக்கிறது. அவைகள் எல்லாவற்றிலும் புதிய ஏற்பாட்டிலிருந்து வாக்கியங்கள் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. ஏராளமான வாக்கியங்கள் அவைகளில் எடுத்துரைக்கப்பட்டிருப்பதால் புதிய ஏற்பாடு காணாமல்போனாலும், மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்னிருந்த ஆகமக்காரர் எழுதினவைகளில் இருந்து மறுபடியும் அதை உண்டாக்கலாம் என்று சொல்லப்பட்டிருப்பது உண்மை என்று விளங்குகிறது.[1]

[1] அப்பூரிய பென்றீஸ் என்னும் சாஸ்திரி பரீட்சித்ததில் அது உண்மையென்று கண்டார். ஹெய்ல்ஸ் என்கிற நியாயாதிபதி பரீட்சித்ததில், பதினொரு வாக்கியங்கள் தவிர புதிய ஏற்பாட்டிலுள்ள மற்றவைகளை எல்லாம் முதல் மூன்று நூற்றாண்டுகளிலுள்ள ஆகமக்காரருடைய நூல்களில் இருந்து அவர் எடுத்தெழுதி காண்பித்திருக்கிறார்.



7. புதிய ஏற்பாட்டின் கர்த்தாநிச்சயத்தைப்பற்றி, இரண்டாம் நூற்றாண்டிற்கு முன்னுள்ள புறஅத்தாட்சி, நமக்குப் போதுமானதாய் இருக்கிறது. இப்போது, அகஅத்தாட்சியைப் பற்றிப் பார்ப்போம். அது, தருவகாரியத்தின்பேரில் சார்பாய் இருக்கிறது. எப்படியெனில், இரண்டாம் நூற்றாண்டில் சத்துருக்களாலும் மித்துருக்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஆகமங்கள், அவைகள் எழுதப்பட்ட கொஞ்சக்காலத்துக்குள்ளாகப் புரட்டப்பட்டிருக்குமோ என்று யாராவது சொல்லக்கூடியதா? அந்த ஆகமங்களில் அடங்கிய சங்கதியைப்பற்றி அப்போஸ்தலருக்கடுத்த காலத்திலேயே கொடுமையான தர்க்கங்கள் உண்டாயிருந்ததால், புதிய ஏற்பாட்டில் ஏதாவது புரட்டு செய்யப்பட்டிருந்தால், அது உடனே எடுத்துக் காட்டப்படாதிருக்குமா? புதிய ஏற்பாட்டின் பாஷைநடையைப் பார்க்கையில், அதை எழுதினவர்களாகச் சொல்லப்பட்டவர்களுடைய தன்மைக்கேற்றதாக அது இருக்கிறதென்று அறியலாம். அவர்கள் கிரேக்குப்பாஷையில் எழுதினாலும், கிரந்த கிரேக்குப்பாஷை நடையில் எழுதவில்லை. ஒரு யூதன் எழுதக்கூடியபடி அது எழுதப்பட்டிருக்கிறது. முதலாம் நூற்றாண்டிலுள்ள யூதன் எழுதும் கிரேக்க நடையாய் இருக்கிறது என்று தேறின நிபுணரான வித்துவான்களும் நாட்பசாஸ்திரிகளும் சொல்லியிருக்கிறார்கள். அந்த சாட்சியம் நமக்குப் போதுமானதாய் இருக்கிறது.

## § பழைய ஏற்பாட்டு கர்த்தாநிச்சயம்.

8. பழைய ஏற்பாட்டு ஆகமங்களின் கர்த்தாநிச்சயம் புதிய ஏற்பாட்டில் அதிகமாய் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாலும், பழைய ஏற்பாட்டிலிருந்து புதிய ஏற்பாட்டில் வாக்கியங்கள் எடுத்துக் காட்டப்பட்டிருப்பதாலும், புதிய ஏற்பாட்டின் கர்த்தாநிச்சயத்தைப்பற்றிய அத்தாட்சிகளை நாம் முதலாவதாகப் பார்க்கவேண்டியதாய் இருந்தது. அதுமாத்திரம் அல்ல, புதிய ஏற்பாட்டாகமங்களுக்கு இருப்பதைப்போல், பழைய ஏற்பாட்டாகமங்களுக்குத் திரளான கையெழுத்துப்பிரதிகள் உண்டு. எபிரேய வேதாகமத்துக்கு, பதினொராம் நூற்றாண்டிலும், அதற்கு முன் நாலாம் நூற்றாண்டுவரையும் எழுதப்பட்ட பிரதிகள் இதுவரையும் காக்கப்பட்டிருப்பது ஆச்சரியமாய் இருக்கிறது. கென்னிகட் என்னும் சாஸ்திரி எபிரேய வேதாகமத்தை அச்சடிப்பித்தபோது 630 பிரதிகளை ஒத்துப்பார்த்தார். டி ரோசி 951 நகல்களை ஒத்துப்பார்த்தார். ஆனால், நாம் பழைய ஏற்பாட்டின்

கர்த்தாநிச்சயத்தைப்பற்றி புதிய ஏற்பாட்டில் பார்ப்போமானால் நமதுவசம் இருக்கிற பழைய ஏற்பாடு, நம்முடைய இரட்சகருடைய காலத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டபடியே இருக்கிறதென்று முன் நாம் குறிப்பிட்டிருக்கிற அத்தாட்சி போந்ததாய் இருக்கிறது என்று அறியலாம். புதிய ஏற்பாட்டை எழுதினவர்கள் காலத்தில் இருந்த யோசேப்புஸ் என்கிற யூதசரித்திரக்காரன் எபிரேய ஆகமங்களின் நாம அட்டவணையை எழுதிவைத்திருக்கிறான். அந்த அட்டவணை இப்போது நமக்குள் இருக்கிற புத்தகங்களுக்குச் சரியாய் இருக்கிறது. மேற்சொல்லிய காலத்திலே பழைய ஏற்பாட்டிலுள்ள சில ஆகமங்களின்பேரில் எழுதப்பட்ட தார்கூம்கள் என்னப்பட்ட கல்தேய வியாக்கியானங்கள் இப்போதும் இருக்கின்றன.

9. இன்னம் அதற்கு முந்திய காலங்களிலுள்ள அத்தாட்சிகளைப் பார்ப்போம். கி. மு. 180-ல் இருந்த சீராக்கின் குமாரன் இயேசு தான் எழுதின (தள்ளுபடி) ஆகமத்தில், பழைய ஏற்பாட்டு சரித்திரத்தைப்பற்றி அடிக்கடி எடுத்துக் காட்டுகிறான். அவனுக்கு ஐம்பது வருஷங்களுக்குப்பின், அவன் எழுதின ஆகமத்துக்கு அவன் பேரன் பாயிரம் எழுதினதில், பழைய ஏற்பாட்டாகமங்களை "நியாயப்பிரமாணம், தீர்க்கதரிசிகள், மற்ற புத்தகங்கள்" என்கிற பிரிவுகளால் பிரித்துக் காட்டியிருக்கிறான். இதற்கு முந்தி, செப்துவஜென்று என்கிற கிரேக்கத்திருப்புதல், கி. மு. 285-ல் செய்யப்பட்டது. இந்தத் திருப்புதல் யூதராலும் கிறிஸ்தவர்களாலும் அங்கீகரிக்கப்பட்டு வருவதுடன், புதிய ஏற்பாட்டிலும் அடிக்கடி உதாரண வாக்கியங்கள் அதிலிருந்து எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் திருப்புதல் யூதருடைய ஜெப ஆலயங்களிலும் பூர்வீக கிறிஸ்துசபையிலும் சாதாரணமாய் வழங்கப்பட்டது.

10. இப்படி பழைய ஏற்பாட்டின் கர்த்தாநிச்சயத்தைப் பற்றி, கிறிஸ்துவுக்கு முன்னூறு வருஷங்களுக்கு முன்னுள்ள அத்தாட்சி உண்டு என்று பார்க்கிறோம். ஆகவே, எபிரேய வேதாகமம் இப்போது நமது வசம் இருக்கிறபடி, கர்த்தாநிச்சயமுள்ளதென்று அறிகிறோம். மேலும், அந்தப் புத்தகங்கள் பலகாலங்களில் எழுதப்பட்டவைகள். பிந்தி எழுதினவர்கள், முந்தி எழுதப்பட்ட புத்தகங்களில் இருந்து வாக்கியங்களை எடுத்துரைத்து இருக்கிறார்கள்; அந்தப் புத்தகங்களைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். கி. மு. 470-ம் வருஷத்தில் இருந்த எஸ்றா, கி. மு. 608-ம் வருஷத்தில் இருந்த எரேமியாவைப்பற்றியும்; எரேமியா, கி. மு. 756-ம்



வருஷத்தில் இருந்த மீகாவைக்குறித்தும், எஸ்றா, தாவீது, யோசுவா என்பவர்கள் மோசேயைக்குறித்தும், குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். பின்னும், யூதர்கள் தங்கள் ஆகமங்களைப் பாதுகாப்பதில் மிகவும் கவலையுள்ளவர்களாய் இருந்தார்கள். ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வொரு எழுத்தும் பரிசுத்தமுள்ளது என்று எண்ணி, அவைகளை நகல்பண்ணின பாரகர் மிகவும் கனபத்தியோடே ஒவ்வொரு புத்தகத்தின் எழுத்துகளையும் எண்ணிவந்தார்கள். அவர்கள் மனதிலிருந்து ஒரு வார்த்தையாவது ஒரு எழுத்தாவது ஒரு புள்ளியாவது எழுத இடம்பெறவில்லை. நகல்பண்ணுவது பரிசுத்தமான வேலையாக அவர்களுக்குள்ளே எண்ணப்பட்டது. நகல்பண்ணுகிறவர்களுக்குச் சில சட்டங்களும் கொடுக்கப்பட்டிருந்தது; அவர்கள் தங்கள் வேலையைத் துவக்குமுன், தண்ணீரில் தங்களை முழுவதுமாய்ச் சுத்திகரித்துக்கொண்டு, யூதனுக்குரிய முழு ஆடையையும் தரித்துக்கொண்டு எழுதவேண்டும்; தேவனுடைய நாமம் வரும்போதோ, வேறே இறகுவைத்து எழுதவேண்டும்; அந்த நாமத்தை எழுதும்போது ஒரு ராஜா அவனோடே பேசினாலும் அதை அவன் எண்ணவும் கூடாது. இவ்வகை சட்டங்கள் மனதுக்கு வருத்தத்தையும் வீண்பக்தியையும் கொடுக்கத்தக்கதாய் இருந்தபோதிலும், வாக்கியங்களைத் திட்டமாய்ப் பெயர்த்தெழுதுவதற்கு மெத்த அநுகூலமாய் இருந்தது. ஆகவே, மற்றெந்த லௌகீக புத்தகத்தின் கர்த்தாநிச்சயத்துக்கு இருக்கிற அத்தாட்சியைவிட, பழைய ஏற்பாட்டுக்கு இருக்கிற அத்தாட்சி அதிகமாய் இருக்கிறதென்று சந்தேகமறச் சொல்லலாம்.

## வாக்கிய வித்தியாசங்கள்.

11. நம்மிடத்தில் இருக்கிற வேதாகமம், மொத்தத்தில் மூலத்துக்கு ஒத்திருக்கிறதென்று முன் சொல்லப்பட்டிருக்கிறது. என்றாலும், அற்பவித்தியாசங்கள் உண்டென்பதை நாம் ஒத்துக்கொள்ளவேண்டும்.

12. கையெழுத்துப் பிரதிகளில் சில வித்தியாசங்கள் இருப்பதுண்டு. தலைமுறை தலைமுறையாய்ப் பல இடங்களிலுள்ளவர்கள் நகல்பண்ணும்போது, சொற்பவித்தியாசங்கள் வராதிருப்பது கூடாதகாரியம். சிலர், ஒரு நகலை வைத்துக்கொண்டு பார்த்து பிரதிபண்ணி இருக்கலாம். சிலர், ஒருவன் வாசிக்க வாசிக்க, நகல்செய்திருக்கலாம். இருவிஷயத்திலும்,

ஒருவன் கண்ணினாலும் மற்றவன் காதினாலும் வஞ்சிக்கப்பட்டும் இருக்கலாமே. இப்படித் திரும்பத் திரும்ப நூல் இடங்களில், பல காலங்களில், நகல்செய்யப்பட்ட பிரதிகள் இவ்வளவு பூரணதிட்டமாய் எழுதப்பட்டு வந்திருப்பதைக் கவனிக்கையில் தேவசெயலின்றி இவ்வளவுக்கு இருக்கமாட்டாது என்று விளக்கத்தகும்.

13. பூரணதிட்டம் என்று சொல்லுகையில், உருபிடைச்சொற்கள் கூட்டிடைச்சொற்கள் இலக்கங்கள் முதலியன குறைவின்றி பூரணமாய் எழுதப்பட்டிருக்கவேண்டும் என்பது கருத்தல்ல. அப்படி எழுதப்பட்டிருந்தால் வேதாகமத்தை அருளினவரைக் கனப்படுத்தாமல் அந்தப் புத்தகத்தையே முக்கியமாய்க் கனப்படுத்தும்படி மனிதர் ஏவப்படலாம். வெளிப்படுத்தல் கொடுக்கப்பட்ட நோக்கத்துக்கு இசைவாய், அது திட்டமாக எழுதப்படுவது போதுமானதாய் இருக்கிறது. உபதேசங்கள் மறைப்படாதிருக்கவேண்டும்; விசேஷித்த போதனைகள் சீர்குலையாதிருக்கவேண்டும்; அந்தப் புத்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வார்த்தைகளில் ஒன்றாவது கூட்டவும் குறைக்கவும் படாதிருக்கவேண்டும். அந்தப் புத்தகத்தோடே ஒன்றைக் கூட்டினாலும் அதிலிருந்து ஒன்றைக் குறைத்தாலும், அது திவ்வியபோதனைக்குக் குறைவை உண்டுபண்ணும்.

14. வாக்கிய வித்தியாசத்தையிட்டு, கல்லாதவர்களும் பேதமையானவர்களும் பயப்படவேண்டியதில்லை. பொதுப்பட அந்த வித்தியாசங்கள் "உம்" "ஆனால்" "என்னால்" என்ற இடைச்சொற்களைத் தழுவினதாய் இருக்கின்றன. ஆனால் சிலவை முக்கியமானது. திருஷ்டாந்தமாக: யோவான், 1. 18. "ஒரேபேறான குமாரன்" என்பதற்குப் பதிலாக "ஒரேபேறான தேவன்" என்று சொல்லியதும்; யோவான், ௫. 4-ம் வாக்கியமும், யோவான், 8-ம் அதிகாரத் துவக்கத்தில் காட்டப்பட்டிருக்கிற சங்கதியும் சந்தேகத்துக்குரியவைகள். மேலும் 1 யோவான், 5. 7, 8. வாக்கியங்களில் பிறைக்குள் போடப்பட்டிருக்கிற பாகங்களும் நீக்கப்படவேண்டியது. மேற்காட்டியவைகள் அதிபூர்வ நகல்களில் காணப்படுகிறதில்லை. புதிய ஏற்பாட்டில் 7959 வாக்கியங்கள் உண்டு. அவைகளில் பத்து அல்லது பன்னிரண்டு வாக்கியங்கள் மாத்திரம் விசேஷித்த வகையில் வித்தியாசப்படுவதுண்டு. பழைய ஏற்பாட்டில் வித்தியாசப்படுகிறவைகள் இலக்கத்துக்கு உரியவைகளும் வாக்கியங்களின் கருத்தைப் பூரணப்படுத்துகிறவைகளுக்கு உரியவைகளுமாம்.

---



# V. வேதாகமத்தின் காரியநிச்சயம்: வேதாகமம் நம்பப்படத்தக்கது.

௧. இதுவரையும், நாம் வேதாகமத்தின் கர்த்தாநிச்சயத்தைப்பற்றிப் பார்த்தோம். இனிமேல், அதின் காரியநிச்சயத்தையும், அது நம்பப்படக்கூடியதென்பதையும் குறித்துப் பார்ப்போமாக. காரியநிச்சயம் சங்கதிக்குரியது. காரியநிச்சயமென்பது சங்கதிகள் கட்டுக்கதைகள் அல்ல, மெய்யாய் நடந்தவைகள் என்பதைக் குறிக்கும். நம்பப்படத்தக்கது என்பது அங்கிகாரத்துக்கேற்ற உண்மையுள்ள சங்கதி என்பதைக் குறிக்கும். ஆகவே, கர்த்தாநிச்சயத்துக்கும் காரியநிச்சயத்துக்கும் வித்தியாசம் உண்டென்று அறிகிறோம். ஒரு புத்தகம் கர்த்தாநிச்சயமுள்ளதாய் இருக்கலாம்; ஆனால் அது காரியநிச்சயமுடையதாய் இராதிருக்கும். அது காரியநிச்சயமுடையதாய் இருக்கலாம்; ஆனால் கர்த்தாநிச்சயமுடையதல்லாதிருக்கும். புதிய ஏற்பாட்டின் காரியநிச்சயத்தைப்பற்றி முதலாவதாகப் பார்ப்போம்.

## § புதிய ஏற்பாட்டின் காரியநிச்சயம்.

2. புதியஏற்பாட்டாகமங்கள், எந்தக்காலத்தில் எழுதப்பட்டதென்று சொல்லப்பட்டிருக்கிறதோ அக்காலத்திலேயே எழுதப்பட்டன என்று பார்த்தோம். அந்தக் காலம் முதலாம் நூற்றாண்டே. ஆனால், அந்த ஆகமங்களை எழுதினவர்கள் யார்? அவர்கள் சொல்லியது நம்பத்தக்கவைகளா? அவர்கள், தாங்கள் எழுதினவைகளின் நிச்சயத்தை அறியத்தக்கதாக ஏற்ற சமயம் அவர்களுக்கு இருந்ததா? உண்மையுள்ளவைகள் என்று தாங்கள் அறிந்ததையே எழுதினார்கள் என்று எப்படி நாம் நிச்சயமாய் அறியலாம்?

3. புதிய ஏற்பாட்டின் முதல்பங்கில் நாலு சுவிசேஷங்கள் அடங்கி இருக்கின்றன. அவைகள் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்பவர்களால் எழுதப்பட்டன. அவைகளை எழுதினவர்களாகச் சொல்லப்பட்டவர்களாலேயே அவைகள் எழுதப்பட்டன என்பதற்கு யாதொரு சந்தேகம் இல்லை. அதி

பூர்வகாலமுதல் அப்படியே அங்கிகரிக்கப்பட்டு வந்திருக்கின்றன. கிறிஸ்துமார்க்க பிரபல்லிய ஆரம்பம் முதல் உண்டான எல்லாத் தர்க்கங்களிலும் விவாதங்களிலும் அதைப்பற்றி மறுப்பார் இல்லை. மேலும் அவ்வாகமங்களை எழுதினவர்களுடைய தன்மைக்குத் தக்கதாக அவர்கள் புத்தகங்களின் தன்மை இலட்சணம் பொருள் ஒத்திருக்கின்றன.

4. அந்த ஐந்து புத்தகங்களை எழுதினவர்கள், தாங்கள் எழுதின சங்கதிகளின் நிச்சயத்தை அறிய தகுந்த சமயம் அவர்களுக்குக் கிடைத்திருந்ததென்பது எதிர்பேசப்படாத சத்தியம். ஏனென்றால், மத்தேயும் யோவானும் நம்முடைய ஆண்டவரின் அப்போஸ்தலர்களாய் இருந்தார்கள். அவருடைய பணிவிடைநாட்களில் எல்லாம், அவர்கள் அவரோடுகூடவே இருந்தார்கள். அவர்கள் கண்கண்ட சாட்சிகளாய் இருந்தார்கள். மாற்கும் லூக்காவும் அப்போஸ்தலர் அல்லாதிருந்தும், அப்போஸ்தலருடைய காலத்தில் இருந்தவர்களாயும் அவர்களுடைய கூட்டாளிகளாயும் இருந்தார்கள். லூக்கா எழுபது சீஷர்களில் ஒருவனாய் இருந்தான் என்று பலர் அபிப்பிராயப்படுவதும் உண்டு. அப்படியிருந்தால், அவனுக்கும் மற்றுமுள்ள அப்போஸ்தலரைப்போல கிறிஸ்துவைப்பற்றிய அறிவு இருக்கவேண்டும். மேலும், அவன் அநேக வருஷங்களாய் பவுல் அப்போஸ்தலனுடைய கூட்டாளியாய் இருந்தான். அவனுடைய அநுமதியின்பேரில், தன் சுவிசேஷத்தை எழுதியும் இருக்கலாம். மாற்கு என்பவன் பேதுருவுக்குக் கூட்டாளியாய் இருந்து, அந்த அப்போஸ்தலனுடைய அநுமதியின்படி தன் சுவிசேஷத்தை எழுதினான்.

5. சுவிசேஷங்களுக்குப் பின்பு, அப்போஸ்தலர் நடபடி புத்தகம் வருகிறது. அதை எழுதினவன் லூக்கா என்பதைத் தெளிவாய் அறிவோம்.[1]

6. இந்த ஐந்து புத்தகங்களையும் எழுதினவர்கள் தாங்கள் எழுதின சங்கதிகளைப்பற்றி தெளிந்த அறிவுடையவர்களாய் இருந்தார்கள் என்பது பிரத்தியட்சமாய் இருக்கிறது. அந்த அறிவு அவைகள் முக்கியமாக சுயமாய்க் கவனித்து கற்றவைகளினால் உண்டானது. தங்களுக்கு முன் தெரியாதிருந்ததைப்பற்றி, தெளிவாய் அறிந்தவர்களிடத்திலிருந்து கற்று எழுதினார்கள். அவர்கள் தாங்களே வஞ்சிக்கப்படக்கூடாதவர்களுமாய் இருந்ததுமன்றி, மற்றவர்களை வஞ்சிக்கவேண்டும் என்ற நோக்கமும்

[1] லூக். 1. 1–4. அப். 1. 1–4.



இல்லாதவர்களுமாய் இருந்தார்கள். அவர்கள் ஆகமங்கள், உண்மை மனச்சுத்தம் முதலிய நீதிநெறியைக் காட்டிப் போதிக்கின்றன. அவர்களுடைய கொடிய பகைஞரும் அவர்களுடைய நடக்கையின் துப்புரவைப்பற்றி அவதூறாய் ஒரு வார்த்தையும் சொல்லத் துணியவில்லை. மேலும், நடவாத சங்கதிகளை எழுதுவதினால் அவர்களுக்கு ஒரு லாபம் இருந்ததும் இல்லை. சத்தியம் என்று தாங்கள் கண்டறிந்து போதித்த காரியத்துக்காக தங்களுக்கு அருமையாய் இருந்த எல்லாவற்றையும் அவர்கள் இழந்துவிட்டார்கள். அந்தச் சங்கதிக்காகத் தங்கள் ஜீவனையும் சாட்சியாக ஒப்புவித்து, அதை நிலைநிறுத்தினார்கள்.

7. புதிய ஏற்பாட்டின் மற்ற புத்தகங்களின் காரியநிச்சயத்தைப்பற்றி இனிமேல் சொல்லுவோம்.

### § பழைய ஏற்பாட்டின் காரியநிச்சயம்.

8. பழைய ஏற்பாட்டின் காரியநிச்சயம் புதிய ஏற்பாட்டின் அதிகாரத்தின்மேல் முக்கியமாய்ச் சார்ந்திருக்கிறது. அது காரியநிச்சயமுள்ளதென்று நமது கர்த்தர் ஒப்புக்கொண்டு அதிலிருந்து நியாயங்களை எடுத்துரைத்திருக்கிறார். பிந்தியகாலத்தில் அப்போஸ்தலரும் அதை அங்கிகரித்து தங்களுடைய நியாயத்துக்கும் அத்தாட்சிக்கும் அதையே ஆஸ்திபாரமாக வைத்திருந்தார்கள். மேலும், யூதமார்க்கம் இந்நாள்வரையும் இருப்பதே யூதருடைய சரித்திர உண்மைக்கு அத்தாட்சியாய் இருக்கிறது. யூதர்கள் வருஷாந்தம் அநேக நூற்றாண்டுகளாக கிரமமாய்க் கொண்டாடின உற்சவங்கள், என்னத்திற்காக ஏற்படுத்தப்பட்டு கொண்டாடப்பட்டன என்பதை, பழைய ஏற்பாட்டால்மாத்திரம் அறியக்கூடும். அவர்களுடைய சடங்காசாரங்கள் இன்ன வகைக்காகக் கொடுக்கப்பட்டதென்றும் அவைகளின் கருத்து இன்னதென்றும் பழைய ஏற்பாடு இல்லாவிடில் நமக்குத் தெரியமாட்டாது.

## VI. வேதாகமம் திவ்விய அதிகாரமுள்ளது.

1. இதற்குமுன் பார்த்தவைகளைவிட இப்போது நாம் பார்க்கப்போகிற காரியம் மிகவும் விசேஷித்தது. வேதாகமத்துக்கு இருக்கிற அதிகாரம் என்ன? அது திவ்விய அதிகாரமுள்

னதா? அது தன்னிலே தானே திவ்விய அதிகாரமுள்ளதென்று சாதிக்கிறதா? அந்தச் சாதனை உள்ளபடி உறுதியானதா?

## ௫ புதிய ஏற்பாடு திவ்விய அதிகாரமுள்ளது.

2. புதிய ஏற்பாட்டின் திவ்விய அதிகாரம் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அதிகாரத்தின்மேல் நிலைநிற்கிறது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஒரு எத்தனாய் இருந்தாரானால், அவருடைய ஜீவிய சரித்திரமும் போதனைகளும் அடங்கிய சரித்திரங்களும் எத்தென்றே சொல்லவேண்டும். ஆனால், நாம் விசுவாசிக்கிறபடி அவர் இருக்கிறவரும் இருந்தவரும் இருப்பவருமானால் அவரைப்பற்றிச் சொல்லிய புத்தகங்கள் அவருடைய அதிகாரத்தினால் முத்திரிக்கப்பட்டிருக்கின்றன.

3. புதிய ஏற்பாட்டிலுள்ள ஒவ்வொரு ஆகமமும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவானவர் திவ்விய அருள் பெற்று வந்தவர் என்று சாட்சியிடுகிறது. அவர் "தேவனிடத்திலிருந்து வந்த போதகர்"[1] என்றும்; "பிதாவின் மகிமையின் பிரகாசமும் அவருடைய தன்மையின் சொரூபமுமாய் இருக்கிறார்"[2] என்றும்; "மெய்யான ஒளி"[3] என்றும் சொல்லியிருக்கிறது. நம்முடைய கர்த்தரும் தாம் திவ்விய அதிகாரமுடையவர் என்று தெளிவாய்ச் சொல்லவும் செய்தார்.

அதை மெய்ப்பிக்க, அவர் அநேக அற்புத அடையாளங்களைச் செய்தார். அவர் சொன்ன தீர்க்கதரிசனங்களும் அதை உறுதிப்படுத்துகிறவைகளாய் இருக்கின்றன. அவர் நடக்கை மாசற்றதும் தூய்மையுமாய் இருந்தது. அவர் தம்மைப்பற்றித் தாம் தீர்க்கதரிசனமாய் உரைத்தபடியே "தம்மை தேவனுக்கு ஒப்பாக்கினதின் நிமித்தம்" மரணத்துக்குள் ஆக்கப்பட்டார். அவர் மரித்து அடக்கம்பண்ணப்பட்ட பின்பு கல்லறையிலிருந்து உயிரோடு எழுந்தருளினார்.

4. நம்முடைய ஆண்டவர் திவ்விய அதிகாரமுடையவர் என்றால், அவருடைய அப்போஸ்தலரும் திவ்விய அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் என்றே சொல்லவேண்டும். தம்முடைய பணிவிடையை நிறைவேற்றுவதற்கென்று அவராலே அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர் தாம் போன பின்பு, அவர்களோடேகூட இருக்கவும் அவர்களுக்குத் தாம் போதித்தவைகளை நினைப்பூட்டவும் தம்மைப்பற்றிய பூரண

[1] யோவா. 3. 2. [2] எபி. 1. 3. [3] யோவா. 1. 9.



முள்ள நிலையுள்ளதுமான அறிவை அருளவும் திவ்விய போதகனை அனுப்புவேன் என்று தாம் உயிரோடே இருந்தகாலத்தில் நாலுதரம் அவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்தார். அப்போஸ்தலர் பிந்தியகாலத்தில் தேவனால் அனுப்பப்பட்டவர்கள் என்பதை ரூபிக்கும்படி தங்களுடைய எஜமானின் நாமத்தினாலேயும் வல்லமையினாலேயும் அற்புதங்களைச் செய்தார்கள். மேலும், தாங்கள் பெற்றுக்கொண்ட ஆவிக்குரிய வரங்களை மற்றவர்களுக்கும் கொடுக்கத்தக்கதான வரத்தையும் பெற்று அப்படியே கொடுத்தும் வந்தார்கள்.

5. நம்முடைய கர்த்தருடைய தெய்வீக தன்மையும் அவருடைய அப்போஸ்தலருக்குக் கொடுக்கப்பட்ட திவ்விய அதிகாரமுமான இரண்டு காரியங்களும் நம்முடைய நியாயத்துக்குப் போந்ததாய் இருக்கிறது. நம்முடைய ஆண்டவர் போதித்தவைகள் சத்தியம் என்பதற்கு யாதொரு சந்தேகமும் ஆட்சேபனையும் இல்லை. அவர் போதித்தவைகளையே அப்போஸ்தலரும் போதித்தார்கள். அவைகளை ஞாபகத்தில் இருந்துமாத்திரம் அல்ல, வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேற்றரவாளன்,[1] அவர்களுக்கு அவைகளை நினைப்பூட்ட அவர்கள் போதித்து வந்தார்கள். அப்போஸ்தலர் போதித்தவைகளும் சத்தியமுள்ளவைகளே. ஏனென்றால், அவர்கள் கிறிஸ்துவின் அதிகாரத்தினாலும் பரிசுத்த ஆவியானவருடைய ஏவுதலினாலும் போதித்தும் எழுதியும் இருக்கிறார்கள். புதிய ஏற்பாட்டை எழுதின எட்டுப்பேர்களில், மத்தேயு, யோவான், பேதுரு, யாக்கோபு, யூதா என்ற ஐந்துபேர் நம்முடைய கர்த்தருடைய காலத்தில் அவருடைய அப்போஸ்தலராக அவராலே ஏற்படுத்தப்பட்டிருந்தார்கள். ஆதலால் மேற்சொல்லிய நியாயங்கள் அவர்களுக்கும் சரியாக ஒக்கும்.

6. மற்ற மூன்றுபேர்கள், மாற்கு, லூக்கா, பவுல் என்பவர்களே. மாற்கு லூக்கா சுவிசேஷங்கள் அப்போஸ்தலரால் எழுதப்படாதிருந்தும், அப்போஸ்தலர்காலத்தில் இருந்தவர்களாலும் அவர்கள் கூட்டாளிகளாலும் எழுதப்பட்டன. மாற்கு என்பவன் பேதுருவால் குணப்படுத்தப்பட்டவனும் அவனுடைய தோழனுமாய் இருந்தான்.[2] லூக்கா என்பவன் பவுல் அப்போஸ்தலனுடைய உத்தம சிநேகிதனும் கூட்டாளியுமாய் இருந்தான். மாற்கு சுவிசேஷம் பேதுரு சொல்ல மாற்கு என்பவனால் எழுதப்பட்டது என்றும், அல்லது பேதுரு அதை

[1] யோவா. 14. 26. [2] I பேது. 5. 13.

ஒப்புக்கொண்டு அதற்கு அநுமதிகொடுத்தான் என்றும், பூர்வ காலமுதல் அங்கீகரிக்கப்பட்டு வந்திருக்கிறது. லூக்கா சுவிசேஷமும் அப்போஸ்தலர் நடபடியும் பவுல் அப்போஸ்தலனால் ஒப்புக்கொள்ளப்பட்டதாகப் பெரும்பாலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன.

7. பவுலின் காரியம் இப்போது பிரத்தியேகமாய் இருக்கிறது. அவன் அகாலப்பிறவிபோன்றவனாய் இருந்தான்.[1] நம்முடைய கர்த்தர் உயிர்த்தெழுந்து பரமேறினதற்குச் சில வருஷங்களுக்குப் பின்பு, அவன் குணப்பட்டு கிறிஸ்தவனானான். அவன், நம்முடைய இரட்சகர் மாம்சத்தோடிருந்தகாலத்தில் அவரைக் கண்டிருப்பானோ என்பது நமக்குத் தெரியாது. ஆனால், அவன் தான் சொல்லியிருக்கிறபடியும் அப்போஸ்தலர் நடபடியில் காட்டப்பட்டிருக்கிறபடியும் கர்த்தர் தம்மை அவனுக்கு வெளிப்படுத்தினார். அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் கர்த்தருடைய நாமத்தை அறிவிக்கிறதற்காகத் தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரமாய் இருந்தான்.[2] அப்போஸ்தலர்களும் அவனை அப்போஸ்தலனாகவே அங்கீகரித்தார்கள். பவுல் தானும் அப்போஸ்தல அதிகாரம் தனக்கு இருக்கிறதென்பதை, அற்புதங்கள் செய்ததினாலும் மற்றவர்களுக்கு ஆவிக்குரிய வரங்களைக் கொடுத்ததினாலும் மெய்ப்பித்தான். பூர்வ சபைகள் எல்லாம், அந்த அதிகாரம் அவனுக்கு உண்டாயிருந்ததென்பதை அங்கீகரித்திருந்தார்கள். மேலும், அவன் தான் முன் அவமதித்துத் துன்பப்படுத்தினவருடைய பணிவிடைக்குத் தன்னை முழுவதுமாய் ஒப்புக்கொடுத்து, அதில் மிகவும் சித்திபெற்றவனாய் இருந்தான். அதுவுமல்லாமல், அவன் கிறிஸ்துவின் நாமத்தினால் பேசியிருப்பதாலும் அவன் போதனைகளும் மற்ற அப்போஸ்தலருடையவைகளுக்கு ஒப்பாய் இருப்பதாலும், அவனும் திவ்விய அதிகாரமுடையவனாய் இருந்தான் என்று சொல்லவேண்டியது.

8. மேற்சொன்ன நியாயங்கள் போதுமானவைகள் ஆயினும் இன்னொரு விசேஷித்த நியாயத்தையும் சொல்லலாம்; அதாவது: அவர்கள் போதனையின் தன்மையும் அதால் உண்டான பயனும் இவ்வாகமத்தின் திவ்விய தன்மைக்கு அத்தாட்சியாய் இருக்கிறது.

---

[1] 1 கொரி. 15. 8.
[2] அப். 9. 15.



## § பழைய ஏற்பாட்டின் திவ்விய அதிகாரம்.

9. பழைய ஏற்பாடு திவ்விய அதிகாரமுள்ளதென்பதை நம்முடைய ஆண்டவருடைய வாக்கினாலும் அவருடைய அருள்பெற்றவர்களுடைய வாக்கினாலும் அறியலாம். இதை விட வேறே நியாயம் நமக்கு வேண்டியதில்லை. பழைய ஏற்பாடு அர்த்தநிச்சயமும் காரியநிச்சயமும் உள்ளது. அவைகள் அற்புதத்தினால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது; தீர்க்கதரிசனத்தினால் முத்திரிக்கப்பட்டிருக்கிறது. அது திவ்விய அலங்காரத்தினாலும் சிறப்பினாலும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. மோசே, யேகோவாவோடே "முகமுகமாய்" சம்பாஷித்தான். யோசுவா, எலியா, சாமுவேல், தாவீது என்பவர்கள் தேவனுடைய அதிகாரத்தின்பேரில் பேசி காரியங்களை நடப்பித்தார்கள். ஏசாயா, எரேமியா முதலான தீர்க்கதரிசிகள் எப்போதும் "கர்த்தர் உரைக்கிறதாவது" என்று பேசினார்கள். இக்காரியங்களைப் பார்க்கில், நம்முடைய ஆண்டவரும் அவருடைய அப்போஸ்தலரும் [illegible] என்றாவது பழைய ஏற்பாட்டை எழுதினவர்கள் எத்தர்கள் அல்லது எத்தப்பட்டுப் போனவர்கள் என்றாவது சொல்லவேண்டும். அப்படி அல்லவென்றால் பழைய ஏற்பாடானது, புதிய ஏற்பாட்டைப்போல திவ்விய அதிகாரமுடையதென்று சொல்லவேண்டியதாய் இருக்கிறது.

## § புதிய பழைய ஏற்பாடுகள் தேவஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டது.

10. தேவஆவியானவருடைய ஏவுதலின் தன்மையைப்பற்றி நாம் இவ்விடத்தில் விபரமாய்க் காட்ட ஏதுவில்லை. அதைக் குறித்து அநேகமான தர்க்கங்கள் நடந்திருப்பதுண்டு; அதற்கு இன்னும் சரியான உத்தரவு கண்டுபிடிக்கப்படவில்லை. வேதாகமத்தில் அடங்கிய சங்கதிகள் உண்மையுள்ளவைகள்; அவைகளைப் பரிசுத்த மனிதர் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு எழுதினார்கள் என்பது நிச்சயம் என்று நமக்குத் தெரிந்தால் அது போதும். அந்த ஆவியானவருடைய ஏவுதலின் வகையைக் குறித்து உண்டாகும் விகற்பங்களைப்பற்றி தெளிவடைவதற்கு நாம் பொறுமையாய்க் காத்திருக்கவேண்டும். ஏற்றகாலத்தில் அது தெளிவிக்கப்படும்.

11. திவ்விய ஏவுதல் என்றால், பிழையின்றிப் பேசுதல் அல்லது எழுத தேவஆவியானவர் மனிதருடைய மனதிலே திவ்விய அறிவைக் கொடுப்பதாம். ஆதலால், அவர் அருளும் போதனை திவ்விய அதிகாரமுடையதாகிறது. திவ்விய ஏவுதல் பலபடியுள்ளது. வேதத்தில் அநேக பங்கை மனிதர் தாங்கள் சுயமாய் அறிந்த அறிவைக்கொண்டு எழுதினார்கள். அவர்கள் பிழையற எழுதும்படி பரிசுத்த ஆவியானவர் அவர்களை மேல் நடத்தினார். பின்வரும் சங்கதிகளைப் பற்றிய தீர்க்கதரிசனங்களை அவர்கள் எழுதினபோது, வெளிப்படுத்தல் இல்லாமல் அவைகள் அவர்களுக்குத் தெரியாததால், தேவன் நேராய் அவைகளை அவர்களுக்கு வெளிப்படுத்தினார்.

12. வேதாகமத்தை எழுதினவர்கள் தாங்கள் திவ்விய ஏவுதலால் எழுதினதாகச் சாதித்தார்கள். பழைய ஏற்பாட்டாகமங்களை எழுதினவர்கள் தடையின்றி அப்படிச் சொன்னார்கள். எனென்றால் பஞ்சாகமத்தில் "கர்த்தர் மோசேயோடே சொன்னது"[1] என்றும், இஸ்ரவேலின் இன்பகவிஞன் "கர்த்தருடைய ஆவியானவர் என்னைக்கொண்டு பேசினார். அவருடைய வசனம் என் நாவில் இருக்கிறது"[2] என்றும், கர்த்தர் எரேமியாவிடத்தில் "நான் சிறுபிள்ளை என்று நீ சொல்லாதே; நான் உன்னை அனுப்புகிற எல்லாரிடத்திலும் நீ போய், நான் உனக்குக் கட்டளையிடுகிறவைகளை எல்லாம் நீ பேசுவாயாக"[3] என்றும், சொல்லப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டாகமங்களை எழுதினவர்கள், பழைய ஏற்பாடு திவ்விய அருளால் எழுதப்பட்டதென்று சாட்சியிட்டதோடே தாங்களும் தேவ ஆவியின் ஏவுதலை உடையவர்களாய் இருந்தார்கள் என்று அறிக்கையிட்டும் இருக்கிறார்கள். அடியில் வருகிற வாக்கியங்களைப் பார்க்க.[4]

13. பழைய புதிய ஏற்பாட்டை எழுதினவர்கள், தாங்கள் ஆவியின் ஏவுதலால் எழுதினதாகச் சாதிப்பதினால்மாத்திரம் அல்ல, அவர்களுக்கும் கிறிஸ்துவானவருக்கும் இருக்கிற சம்பந்தத்தைப்பற்றி அவர்கள் சாதிப்பதினாலும் அதை நாம் நம்பலாம். கிறிஸ்துவானவர் நாம் முன் சொல்லியபடி "தேவனிடத்திலிருந்து வந்த போதகராய் இருந்தார்." இதுதான் நமக்கு

[1] யாத். 4. 15, 16: 19. 9. [2] 2 சாமு. 23. 2. [3] எரே. 1. 7–9.
[4] 2 பேது. 1. 20, 21. 1 பேது. 1. 11. அப். 1. 16: 28. 27. எபி. 3. 7. யோவா. 14. 26: 16. 13, 14. 1 கொரி. 2. 13: 14. 37. 1 தெச. 2. 13: 4. 8. 2 பேது. 3. 1, 2.



ஆதாரமான சத்தியம். அவர் போதித்தது தவறாமையுள்ளது. அது கலப்பில்லாத சத்தியம். அவரால் ஏற்படுத்தப்பட்டு அநுமதி பெற்றவர்கள் அவரால் போதிக்கப்பட்டுப் போதித்ததால் அவர்கள் போதனைகளும் தவறாமையுள்ளது.

அவர்கள் போதித்தது அவர் போதித்ததே. அவர்கள் அநுமதிசெய்தது அவர் அநுமதிசெய்ததே. இயேசுகிறிஸ்து வெளிப்படுத்தின விசேஷம் என்று வெளிப்படுத்தின விசேஷத்துக்குச் சொல்லப்பட்ட பேர், பழைய புதிய ஏற்பாடுகளுக்கும் கொடுக்கத்தகும். கிறிஸ்துவானவரும் அவருடைய அப்போஸ்தலரும் பழைய ஏற்பாட்டை திவ்விய அருளால் எழுதப்பட்டதென்று அங்கீகரித்தார்கள். இதுவே நமக்குப் போதுமான அத்தாட்சியாய் இருக்கிறது. அதோடே அந்தப் புத்தகத்தில் கண்டிருக்கிற அற்புதங்களும் தீர்க்கதரிசனங்களும் நன்னெறிகளும் சாட்சி.

## VII. வேதாகமம் கொடுக்கப்பட்ட நோக்கம்.

1. தேவன் வேதத்துக்கு ஆக்கியோன் ஆனதினாலும் அது பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் எழுதிக் கொடுக்கப்பட்டிருப்பதினாலும் அது விசேஷித்த நோக்கத்துக்காக எழுதப்பட்டதென்று நாம் அறிந்துகொள்ளவேண்டியவர்களாய் இருக்கிறோம். தேவனுடைய சிருஷ்டிகளாகிய நாம் அவருக்கு இருக்கிற சம்பந்தத்தை நமக்குத் திட்டமானபடி காட்டவும் நாம் அவரைப் பூமியில் மகிமைப்படுத்தி பின்பு என்றென்றைக்கும் அவரை அநுபவிக்கவுமாக நமக்கு அவசியமான அறிவைக் கொடுக்கும் நோக்கமாய் எழுதப்பட்டிருக்கிறது. வேதாகமமானது, வைதீகத்துக்குரிய எல்லாக் காரியங்களுக்கும் நித்திய நிலைமைக்கும் அடுத்த ஒவ்வொரு காரியத்தையும் போதிக்கும் நோக்கமாய் எழுதப்படவில்லை. மறைவானவைகள் தேவனுக்கு உரியது. மேலும், அது இதிகாசம் பூமிசாஸ்திரம் முதலிய கல்விகளைப் படிப்பிக்கும் நோக்கமாகவும் எழுதப்படவில்லை. இப்படிப்பட்ட அநேக காரியங்களை அதில் கண்டு

பிடிக்கத் தேடுவது வீணாய் இருக்கும். வெளிப்படுத்தல் யுக்தியைக் கையாடாதபடி தடுக்கிறதில்லை; ஆராய்ச்சி முதலியதைச் செய்யக்கூடாதென்று விலக்குகிறதும் இல்லை. மனிதன் தன் ஆராய்ச்சியினாலே கண்டுபிடிக்கக் கூடியதைக் கண்டுபிடிக்கவேண்டியதுதான். யுக்தி தவறும்போது வெளிப்படுத்தல் யுக்திக்குச் சார்புதுணையாய் வருகிறது.

2. வேதாகமம் எழுதப்பட்ட பெரிய நோக்கம் என்னவென்றால், கிறிஸ்துவுக்குள் தேவனை வெளிப்படுத்துவதே. ஆம், தேவன் கிறிஸ்துவுக்குள் உலகத்தாரைத் தமக்குள் ஒப்புரவாக்கிக்கொள்வதை அது நமக்கு வெளிப்படுத்துகிறது. புதிய ஏற்பாடுமாத்திரம் அல்ல, பழைய ஏற்பாடும் இந்த நோக்கமாகவே எழுதப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவைப்பற்றிய அறிவை பழைய ஏற்பாட்டில் கண்டுபிடிக்கக்கூடாதென்றால், அதின் நோக்கத்தையும் அர்த்தத்தையும் கிரகிக்கக் கூடாமையாகிய அறிவீனத்தை அது காட்டுகிறதாய் இருக்கிறது. பழைய ஏற்பாடு, கிறிஸ்துவின் வருகைக்கு ஜனங்களை ஆயத்தப்படுத்துகிறதாயும், புதிய ஏற்பாடு, அவர் வந்தாயிற்றென்ற சரித்திரத்தையும் பழைய ஏற்பாட்டில் காட்டப்பட்டிருக்கிற தீர்க்கதரிசனம் முதலியவற்றின் நிறைவேறுதலையும் காட்டுகிறது. பழைய ஏற்பாட்டின் துவக்கத்தில்தானே பாவத்தின் பலனைப்பற்றியும் பாவத்தினின்று மனிதனை மீட்கும்படியாக இரட்சகனை அனுப்பும் வாக்குத்தத்தத்தைப்பற்றியும் காட்டியிருக்கிறது. புதிய ஏற்பாட்டின் ஆரம்பத்திலே, "நாங்கள் கிழக்கில் அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு அவரை வணங்கும்படியாக வந்தோம்" என்று சொல்லிக்கொண்டு வருகிறது. மோசே, கிறிஸ்துவுக்கு முன்னடையாளமாய் இருந்தான்; ஆபிரகாம் அவருடைய நாளைக் கண்டான்; தாவீது அவரைப்பற்றி எழுதியிருக்கிறான்; தீர்க்கதரிசிக்குப்பின் தீர்க்கதரிசி அவருடைய மகிமையை அறிவித்து, அவருடைய வருகையைப்பற்றிக் கட்டியம் கூறியிருக்கிறான். அப்போஸ்தலர், சிலுவையில் அறையப்பட்டும் உயர்த்தப்பட்டும் சிம்மாசனத்தில் ஏற்றப்பட்டும் இருக்கிற அவரைப் பிரசங்கித்தார்கள். வேதத்தினால் கிறிஸ்துவை எவ்வளவுக்கு அறிகிறோமோ அவ்வளவுக்கு வேதாகமம் எழுதப்பட்ட சரியான நோக்கத்தையும் அறிந்துகொள்வோம்.



## VIII. வேதாகமம் இங்கிலீஷ் பாஷையில் திருப்பப்பட்டது.

1. வேதாகமத்தைப் பற்றி, இதற்குமுன் சொல்லப்பட்டதெல்லாம் பழைய ஏற்பாடு எழுதப்பட்ட எபிரேய பாஷையையும் புதிய ஏற்பாடு எழுதப்பட்ட கிரேக்க பாஷையையும் பற்றினதாய் இருக்கிறது. ஆனால், அந்தப் பாஷைகளை அறியாத திரளான பேர்கள் உண்டு. ஆதலால், வேதாகமத்தைப்பற்றி முன் சொல்லப்பட்டிருக்கிற நியாயங்கள் திருப்புதல்களுக்கு எவ்வளவுக்குச் செல்லும் என்பதை பார்க்கவேண்டும்.

2. ராஜ அதிகாரம் பெற்ற இங்கிலீஷ் திருப்புதல் முதலாம் ஜேம்ஸ் அரசன் காலத்தில் நிறைவேற்றப்பட்டது. அது கி. பி. 1607-ல் வசந்தகாலத்தில் துவக்கப்பட்டு, 1611 வருஷத்தில் முடிவுபெற்றது. அதைச் செய்யும்படி ஐம்பத்துநாலு பேர் நியமிக்கப்பட்டார்கள். ஆனால், அதை முடிக்குமுன் சிலர் இறந்துபோனார்கள்; சிலர் வேறு முகாந்தரத்தால் தடைப்பட்டுப்போனார்கள்; நாற்பத்தேழுபேர் அதைத் திருப்பி முடிக்கும்படி நேரிட்டது. இராஸமஸ் கி. பி. 1516-லும், ராபர்ட் ஸ்தேவானன் 1550-லும் தங்களுக்கு அகப்பட்ட நகல் பிரதிகளைக்கொண்டு செய்திருந்த கிரேக்க வேதாகமத்தை ஆதாரமாக வைத்து, தங்கள் கிரியையை நடப்பித்தார்கள். புதிய திருப்புதலைச் செய்யாமல் பழைய திருப்புதல்களை ஒத்திட்டுப் பரிசோதித்து மூலத்துக்கு ஒத்துவரத்தக்கதாக திருப்பும்படி அவர்களுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டபடியே செய்தார்கள்.

3. முந்திய திருப்புதல்களைக் குறித்து விபரமாய்ச் சொல்லுவது நம்முடைய நோக்கத்துக்கு இங்கே இசையாது. பொதுவாக இரண்டொரு காரியத்தைமாத்திரம் சொல்லுகிறோம். கி. பி. 735-ல் பீட் என்பவர், யோவான் சுவிசேஷம் முதல் பன்னிரண்டு அதிகாரத்தையும் இங்கிலீஷில் திருப்பினார். அல்பிரெட் ராஜா லத்தீனிலிருந்து வேதாகமத்தில் சில பாகங்களையும் சங்கீதத்தில் சில பாகங்களையும் கி. பி. 900-ல் திருப்பினார். கி. பி. 1350-ல் யோவான் உவிக்லிவ், வேதாகமம் முழுமையையும் திருப்பினார். இந்தத் திருப்புதல் அநேக வருஷங்களாக கையெழுத்துப் பிரதியாய் இருந்தது; இப்போது அச்சுப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. கி. பி. 1526-ல் உவில்லியம் டின்டல், புதிய ஏற்பாட்டில் ஒரு பாகத்தையும் கி. பி. 1532-ல் பழைய ஏற்பாட்டில் ஒரு பாகத்தையும் திருப்பி அச்சிட்டார்.

டிண்டேல் மரித்தபின்பு, மைல்ஸ் கோவர்டேயில் மீதியானதைத் திருப்பி முழுவதையும் திரும்பப் பார்வையிட்டார். டிண்டேலுக்கு, அந்த்வார்ப் பட்டணத்தில் உதவிசெய்த யோவான் ராஜர்ஸ் என்பவர், டிண்டேல் கோவர்டேயில் என்பவர்கள் பிரசுரம்செய்ததைத் திரும்பவும் ஒத்துப்பார்த்து அச்சிட்டார். பெரிய வேதாகமம் அல்லது கிரான்மரின் வேதாகமம் என்று சொல்லப்படுவது, கி. பி. 1539 வருஷத்திலும்; ஜெனீவா வேதாகமம் கி. பி. 1560 வருஷத்திலும்; கண்காணிமாரின் வேதாகமம் கி. பி. 1568 வருஷத்திலும் அச்சிடப்பட்டன.

4. இவைகளையும் மற்றவைகளையும் ஆதாரமாக வைத்துக்கொண்டு, ஜேம்ஸ் அரசன் காலத்தில் வேதாகமத்தைத் திருப்பினவர்கள் தங்கள் கிரியையை நடப்பித்தார்கள். அதை எப்படி நிறைவேற்றி முடித்தார்கள்? உலகத்தில் உண்டான திருப்புதல்களில் பொதுப்படச் சொல்லில் அது முதல்தரமானதென்று சொல்லவேண்டும். மூலத்தின் கருத்துத் திட்டமாய் அதில் காட்டப்பட்டிருக்கிறது. அது, அவர்கள் பிரயாசத்துக்கேற்ற சிறந்த பயனாய் இருக்கிறது. அது, கல்விமான்களாலும் பேதைகளாலும் ஒன்றுபோலவே நன்குமதிக்கப்படுகிறது. மூலபாஷைகளை அறியாதவர்கள் தங்கள் சுயபாஷையில் தேவாவியானவர் வெளிப்படுத்தின காரியங்கள் தங்களுக்குக் கிடைத்திருப்பதற்காக, நன்றியறிதலுள்ளவர்களாய் இருக்கவேண்டும்.

5. இந்தத் திருப்புதலை இதைவிட செம்மையாக்கக் கூடாதென்று சொல்லுவது வியர்த்தம். எபிரேயு கிரேக்குப் பாஷைகளில் தேறின வித்துவான்கள் வரவர அதிகமான சீர்திருத்தம் செய்திருக்கிறார்கள். ராஜ அதிகாரம் பெற்ற திருப்புதல் பத்தாம் நூற்றாண்டு கையெழுத்துப் பிரதியிலிருந்து திருப்பப்பட்டது. இப்போது நமதுவசம், நாலாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட பிரதிகள் அகப்பட்டிருக்கின்றன. மேலும், கடைசியான திருப்புதலில் காட்டப்பட்டிருக்கிற வார்த்தைகளில் சிலவை இப்போது வழங்காதவைகளாயும், சிலவை வேறே அர்த்தமாய் வழங்கப்படுகிறவைகளாயும் இருக்கின்றன. இவ்விதக் குறைவுகள் இருந்தாலும், அந்தத் திருப்புதல் சிறந்ததென்பதற்குச் சந்தேகம் இல்லை.

அந்தக் குறைவுகளை நிவிர்த்திக்கும்படி, இப்போது மறுபடியும், இங்கிலீஷில் திருப்பும்படி, பிரயத்தனம் செய்யப்பட்டு புதிய ஏற்பாடு திருப்பப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டையும் துவக்கியிருக்கிறார்கள். அது முடியும்போது மூலத்



துக்குச் சரியான வாசகமாய் இங்கிலீஷ் வேதாகமம் காணப்படும். அப்போது, அது அங்கிலேயருக்குச் சிறந்த ஆபரணமாய் இருக்கும்.

இந்த அதிகாரத்தை முடிக்குமுன், இரண்டொரு காரியங்களைச் சொல்லவேண்டும்.

a. இங்கிலீஷ் வேதாகமத்தில், கையெழுத்து ஜாடையாக அச்சடிக்கப்பட்டிருக்கிற வார்த்தைகள், மூலத்தில் இல்லாதவைகள். கருத்தை இசைக்கும்படி, அவைகள் போடப்பட்டிருக்கின்றன. ஆனால், சில தருணங்களில் அவைகள் மூலத்தின் அர்த்தத்திற்கு ஒத்துவராமையாய் இருப்பதும் உண்டு.

b. கர்த்தர் என்று வருகிற தேவநாமம் எல்லாம் யேகோவா என மூலத்தில் வரும்.

c. அநேக வேதாகமங்களில், பக்கத்தில் சில வார்த்தைகள் போடப்பட்டிருக்கும்; அந்த வார்த்தைகள் மூலத்திற்குச் சரியான பதில் அர்த்தமுள்ளவைகள்.

d. ஒவ்வொரு அதிகாரத்தின் துவக்கத்தில் காட்டப்பட்டிருக்கிற பொருளடக்கமும், அந்தந்தப் புத்தகத்தின் பேரும், புதிய ஏற்பாட்டின் ஒவ்வொரு புத்தகத்தின் கடைசியில் அது எழுதப்பட்டதாகச் சொல்லப்படும் இடப்பேர்களும் தேவ அருளால் எழுதப்படவில்லை.

e. அதிகாரங்களாயும் வாக்கியங்களாயும் பிரிக்கப்பட்டிருப்பதும், புத்தகங்களின் ஒழுங்கும், திவ்விய அதிகாரத்தால் உண்டானதும் அல்ல; மிகப் பூர்வமுள்ளதும் அல்ல. அவைகள் வைக்கப்பட்டிருக்கிற ஒழுங்கு காலக்கிரமப்படி வைக்கப்படாமல், அந்தந்த ஆக்கியோன்கள் எழுதின பொருளுக்குத் தக்கதாகவும், அந்தஸ்துக்குத் தக்கதாகவும் வைக்கப்பட்டிருக்கின்றன. திருஷ்டாந்தமாக: நிருபங்களில் முதலாவதாய் வைக்கப்பட்டிருக்கிற ரோமர் நிருபம், எழுதப்பட்ட காலக்கிரமத்தைப் பார்த்தால் ஆறாவதாக இருக்கவேண்டும். கொரிந்தியர் இரண்டு நிருபங்களும் அதற்குப்பின் வைக்கப்பட்டிருந்தாலும், அதற்கு முந்தி எழுதப்பட்டவைகள். அப்படியே, பழைய ஏற்பாட்டு ஆகமங்களையும் குறித்துச் சொல்லலாம்.

ஏசாயாவின் ஆகமம், தீர்க்கதரிசன ஆகமங்களில் முதலாவதாக வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்கு முந்தி, யோனா, யோவேல், ஆமோஸ், ஓசியா வரவேண்டியது. எரேமியா இரண்டாவது வைக்கப்பட்டிருக்கிறது; அது நியாயமானபடி யோனா, யோவேல், ஆமோஸ், ஓசியா, ஏசாயா, மீகா,

நாகமம், செப்பனியாவுக்குப் பிந்தி வரவேண்டியது. வேதாகமம், அதிகாரங்களாக முதலாவதாய்ப் பதின்மூன்றும் நூற்றாண்டில் லத்தீன் திருப்புதலில், லாங்டன் என்னும் சிரேஷ்ட அத்தியக்ஷராலாவது கார்டினல் ஹியுகோ என்பவராலாவது செய்யப்பட்டது. அதை வாக்கியங்களாக முதலாவது கி. பி. 1551-ல் ரொபர்ட் ஸ்தேவான், பாரிஸ் பட்டணத்தில் இருந்து லியோன் பட்டணத்துக்குப் பிரயாணஞ்செய்கையில் பிரித்தான். கி. பி. 1445-ல் மொர்தேகாய் நாத்தான், எபிரேய வேதாகமத்தை அதிகாரங்களாகவும், கி. பி. 1661-ல் அத்தியாஸ் என்பவன் அதை வாக்கியங்களாகவும் பிரித்தார்கள். இந்தப் பிரிவுகள் மெத்த குறைவுள்ளது; அவைகள், பொருளையும் கருத்தையும் கருகலாக்கத்தக்கவை. அவைகள், வாக்கியங்களின் இடத்தைக் கண்டுபிடிப்பதற்கு அநுகூலம். ஆனால் ஆக்கியோன்களின் கருத்தை தெளிவாயும் பூரணமாயும் கண்டுபிடித்து அறியவேண்டுமானால், அந்தப் பிரிவுகளை நாம் எண்ணக்கூடாது.[1]

## IX. தமிழ் வேதாகமத் திருப்புதல்.

1. இங்கிலீஷ் வேதாகமம் 1611-௵ அச்சிடப்பட்டு பிரசுரமானது. இதற்குச் சரியாய் 100 வருஷங்களுக்கு பின்பு, தமிழ் புதிய ஏற்பாடு திருப்பி முடிந்தது.[2]

[1] வேதத்தின் ஆகமங்கள் பழைய ஏற்பாட்டில் 39; புதிய ஏற்பாட்டில் 27; தொகை 66. அதிகாரங்கள், பழைய ஏற்பாட்டில் 929; புதிய ஏற்பாட்டில் 260; தொகை 1,189. வாக்கியங்கள், பழைய ஏற்பாட்டில் 23,214; புதிய ஏற்பாட்டில் 7,959; தொகை 31,173. நடு அதிகாரம், 117-ம் சங்கீதம், அதுவே எல்லாவற்றிலும் சின்னதாயும் இருக்கிறது. நடு வாக்கியம், 118-ம் சங்கீதம் 8. யெகோவா என்கிற வார்த்தை 6,855 தரம் வருகிறது. பழைய ஏற்பாட்டில் நடுப்புத்தகம், நீதிமொழி; நடு அதிகாரம், யோபு 29; நடு வாக்கியம் 2 நாளாகமம் 20. 18; சின்னவாக்கியம், 1 நாளாகமம் 1. 1. புதிய ஏற்பாட்டில் நடுப்புத்தகம், 2 தெசலோனிக்கேயர்; நடு அதிகாரம் ரோமர் 13-ம், 14-ம் அதிகாரங்களுக்கு மத்தி; நடு வாக்கியம், அப்போஸ்தலர் 17. 17; சின்னவாக்கியம், யோவான் 11. 35. இதுவே எல்லாவற்றிலும் சின்னவாக்கியம். 2 இராஜா 19-ம் அதி. ஏசாயா. 37-ம் அதி. ஒன்றுபோல் இருக்கின்றன. எஸ்றா. 7. 21ல் இங்கிலீஷ் எழுத்துக்கள் எல்லாம் உண்டு.

[2] இதைப்பற்றி விபரமாய் விசுவாசிகளின் ஜெயம் 92-ம் பக்கம் பார்க்க.



2. சீகன்பால்கு ஐயர், கி. பி. 1708-௵ புதிய ஏற்பாட்டைத் திருப்பத் துவக்கி, 1711-௵ முடித்தார். சிருண்டலர் ஐயர், அதை 1715-ல் தரங்கன்பாடியில் அச்சிட்டார். இது, நாலுதரம் பதிப்பிக்கப்பட்டது. 1743-௵ இலங்கை கவர்னர் அநுமதிப்படி புதிய ஏற்பாடு தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு கொழும்பில் அச்சிடப்பட்டது.

3. சீகன்பால்க் ஐயர், பழைய ஏற்பாட்டில் ரூத்தின் ஆகமம் வரையும் மொழிபெயர்த்தார். சூல்ச்சு ஐயர் மற்ற புத்தகங்களைத் திருப்பத்துவக்கி 1728-ல் முடித்து, பழைய ஏற்பாட்டை நாலு பங்குகளாக அச்சிட்டார்.

4. பெப்ருசியுஸ் ஐயர் 1773-௵ புதிய ஏற்பாடு 27 ஆகமங்களையும், முந்திய திருப்புதல்களையும் வைத்துக்கொண்டு, மூலத்துக்கு இசைய திருப்பி அச்சிட்டார். பின்பு பழைய ஏற்பாட்டின் மொழிபெயர்ப்பை எபிரேய மூலத்துக்கு இசைய திருப்ப முயற்சிசெய்தார். முழுவதையும் அவர் செய்தாரோ என்பது திட்டமாய் விளங்கவில்லை. பழைய ஏற்பாடு நாலு பங்காகப் பிரசுரம் செய்யப்பட்டது. இந்த வேதாகமம் 50 வருஷங்களாக சபையில் வழங்கப்பட்டது.

5. இரேனியுஸ் ஐயர் 1816-௵ புதிய ஏற்பாட்டை மொழிபெயர்க்க ஏற்பட்டார். அது அச்சிடப்பட்டு முற்றுபெற 12-௵ சென்றது. பின்பு, அவர் பழைய ஏற்பாட்டில் முதலிலிருந்து நியாயாதிபதிகளின் புத்தகம் வரையும், சங்கீதம், ஏசாயா, தானியேலின் புத்தகங்களையும் மொழிபெயர்த்தார். ஆனால் அவைகள் அச்சிடப்படவில்லை. இவர் செய்த புதிய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பு, சர்ச்சுமிசியோன், லண்டன் மிசியோன், உவெஸ்லியன் மிசியோன் ஸ்தானங்களில் வழங்கி வந்தது.

6. பெப்ருசியுஸ் திருப்புதல், சில சபைகளுக்குள்ளும் இரேனியுஸ் திருப்புதல் சில சபைகளுக்குள்ளும் வழங்கப்பட்டதால், சென்னை வேதாகம சங்கத்தார் அநுமதிப்படி பெர்சிவேல் ஐயரும் யாழ்ப்பாணத்திலுள்ள சில ஐயன்மாரும் நூதன திருப்புதல் ஒன்றை செய்து, 1850-௵ அதைப் பிரசித்தப்படுத்தினார்கள். அந்தத் திருப்புதல் கருகலானது.

7. 1857-௵ ரோமான் மார்க்கத்தார் நாலு சுவிசேஷங்களையும் நடபடி புஸ்தகத்தையும் திருப்பி, புதுச்சேரியில் அச்சிட்டார்கள். அது மூலபாஷையிலிருந்து திருப்பப்பட்டதல்ல. ரோமகுருக்கள் இந்துதேசத்துக்கு வந்த 300 சின்

வானம் வருஷங்களுக்குப் பின்பு அதைச் செய்திருப்பதைப் பார்க்கும்போது, விநோதமாயும் ஆச்சரியமாயும் இருக்கிறது.

8. தமிழ்நாட்டிச் சபையார் யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்க ஒரு புது திருப்புதலை உண்டுபண்ணும்படி வேதாகமச் சங்கத்தார் 1855-ம் வருஷம் ஆலோசனைசெய்து, அடுத்த வருஷத்தில் பல மிஷியோன்களைச் சேர்ந்த ஐயன்மார்களில் பிரதிநிதிகளை சென்னைபட்டணத்துக்கு வருத்தி, அதைப்பற்றி [illegible]டுசெய்தார்கள். அந்த மொழிபெயர்ப்புக்கு பவர் ஐயரை முதலாளியாக நியமித்தார்கள். இந்த மகத்தான வேலை 1858-௵ ஏப்பிரில் மாசத்திலே ஆரம்பிக்கப்பட்டது. பவர் ஐயர் முதலாவது புதிய ஏற்பாட்டைத் திருத்தினார். அது 1863-௵ முடிவடைந்தது. பழைய ஏற்பாட்டையும் திருப்ப முயற்சியெடுத்ததில் அது 1868-௵ முடிவுபெற்றது. இந்தத் திருப்புதலுக்கு ஏற்பட்ட பிரதிநிதிகள் எல்லாரும் வேதசாஸ்திரத்தில் தேறினவர்கள்; தமிழ்பாஷையை நன்றாய்க் கற்றுத் தேர்ந்தவர்கள்; கிரேக்க பாஷையைத் தெளிவாய் அறிந்தவர்கள்; ஒருவர் எபிரேயு பாஷையில் நிபுணர். பரிசுத்த வேதத்தை நமக்கு நம்முடைய சுயபாஷையில் தந்த இந்தக் கனவான்களுடைய பேர் யாவருக்கும் அருமையாய் இருக்கும்.[1]

9. பரிசுத்த வேதம் விலைபெற்ற செல்வம். அதை நாம் மதிப்போமாக. எந்தக் காலத்திலும் எந்த ஜாதியாருக்குள்ளும் இப்படிப்பட்ட புத்தகத்தைக் காண்பது அரிது. தேவனே அதற்கு ஆக்கியோன்; இரட்சண்யம் அதின் முடிவு; கலப்பில்லாத சத்தியம் அதில் அடங்கியிருக்கிறது; பொருளில் தப்பறை அற்றது; சாகும் மஞ்சத்தில் இந்தப் புத்தகமே நமக்கு ஆறுதலைக் கொடுக்கிறதாய் இருக்கிறது. அதைக் கைக்கொண்டு நடப்பதினால் திரளான பலன் உண்டு.

[1] வேதாகமத்தைத் திருப்பினவர்களின் நாமங்கள். சார்ச்சென்ற் அத்தியட்சர், கால்ட்வெல் அத்தியட்சர், பேலிஸ் ஐயர், பிரோதர்ற்றன் ஐயர், டப் ஐயர், கில்னர் ஐயர், கோலப் ஐயர், ஸ்படர் ஐயர், ஸ்பாக்கல் ஐயர், ஹிரேகி ஐயர், பவர் ஐயர் முதலானோர்.

# இரண்டாம் பங்கு.

## பழைய ஏற்பாடு.

1. நம்முடையவசம் இருக்கிற பழைய ஏற்பாட்டு ஆகமங்கள் முப்பத்தொன்பது. அந்தப் புத்தகங்களை பல நூற்றாண்டுகளில் இருந்த பற்பல அந்தஸ்துள்ள பரிசுத்த மனிதர்கள் எழுதினார்கள். இதற்குமுன் காட்டி இருக்கிறபடி, அவைகள் யூதர்களால் நியாயப்பிரமாண ஆகமம் என்றும் தீர்க்கதரிசன ஆகமம் என்றும் ஹகியோகிரிபா அல்லது பரிசுத்த எழுத்துக்களின் ஆகமம் என்றும் பிரிக்கப்பட்டன. அவைகளில் என்னென்ன புத்தகம் எந்தெந்தப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்ததென்பதை இப்போது விபரமாய்ப் பார்ப்போமாக.

2. நியாயப்பிரமாண ஆகமத்தில் மோசே எழுதின ஐந்து ஆகமங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அந்தப் புத்தகங்களின் இலக்கத்துக்குச் சரியாய் அவைகள் பஞ்சாகமம் என்று அழைக்கப்பட்டன. அவைகள், ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம் எனப் பேர் விளங்கும். அந்தந்தப் புத்தகத்தின் முகப்பில் வருகிற எபிரேய பதங்களின் பேரால் அந்தந்தப் புத்தகம் எபிரேயு பாஷையில் அழைக்கப்படுவதுண்டு.

3. இரண்டாவது பெரிய பிரிவில் தீர்க்கதரிசன ஆகமங்கள் அடங்கியிருக்கின்றன. அவைகள், முந்தின தீர்க்கதரிசன ஆகமம் என்றும் பிந்தின தீர்க்கதரிசன ஆகமம் என்றும் வகுக்கப்பட்டன. முந்தின தீர்க்கதரிசன ஆகமங்களில், யோசுவா, நியாயாதிபதிகள், சாமுவேலின் புத்தகங்கள், ராஜாக்களின் புத்தகங்கள் அடங்கியிருக்கின்றன. பிந்திய தீர்க்கதரிசன ஆகமத்தில், சரியான கருத்தின்படி தீர்க்கதரிசிகளாய் இருந்தவர்களால் எழுதப்பட்ட புத்தகங்கள் அடங்கியிருக்கின்றன. பிந்தின தீர்க்கதரிசன ஆகமங்கள், பெரிய தீர்க்கதரிசன ஆகமம் என்றும் சின்ன தீர்க்கதரிசன ஆகமம் என்றும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. பெரிய தீர்க்கதரிசன ஆகமத்தில்.

எசாயா, எரேமியா, எசேக்கியேலும், சின்ன தீர்க்கதரிசன ஆகமத்தில் ஓசியா முதல் மல்கி வரையுமுள்ள பன்னிரண்டு ஆகமங்களும் அடங்கியிருக்கிறது. தானியேலின் புத்தகம் தீர்க்கதரிசன ஆகமத்தோடே சேர்க்கப்படவில்லை.

4. பழைய ஏற்பாட்டின் மற்றப் புத்தகங்கள் பரிசுத்த எழுத்துக்களின் ஆகமம் என்கிற மூன்றாம் பெரிய பிரிவில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவைகள் பொதுப்பட பின்வருகிற ஒழுங்குப்படி வரிசைப் படுத்தப்பட்டிருக்கின்றன. அவையாவன: சங்கீதம், நீதிமொழி, யோபு, உன்னதப்பாட்டு, ரூத், புலம்பல், பிரசங்கி, எஸ்தர், தானியேல், எஸ்றா, நெகேமியா, நாளாகமங்களே. இந்தப் புத்தகங்களை மூன்று பிரிவாக வகுக்கலாம். முதலாவது: பக்திவணக்கத்துக்கும் போதனைக்கும் அடுத்த ஆகமங்கள். சங்கீதம், நீதிமொழி, யோபு, அதைச் சேர்ந்தவைகள். இரண்டாவது: ஐந்துசுருள் என்னப்பட்ட உன்னதப்பாட்டு, ரூத், எரேமியாவின் புலம்பல், பிரசங்கி, எஸ்தர். விசேஷித்த பண்டிகைகாலங்களில் ஜெபஆலயங்களிலே ஆராதனை நடத்தப்படுகையில் உபயோகிக்கும்படி வெவ்வேறான ஐந்து சுருளில் எழுதப்பட்டிருந்தபடியால், இந்தப் பேர் அதற்கு உண்டாயிற்று. மூன்றாவது: சரித்திர ஆகமங்கள். அவை தானியேல், எஸ்றா, நெகேமியா, நாளாகமம் என்பவைகளே.

5. அந்தந்தப் புத்தகங்களில் அடங்கிய பொருளுக்கு இசைவாய், நாம் அவைகளைப் பஞ்சாகமம், சரித்திராகமம், பாட்டாகமம், தீர்க்கதரிசன ஆகமம் என்று பிரிக்கலாம். சில புத்தகங்கள் மேற்படி பிரிவுகளில் இரண்டு மூன்றைச் சேரத்தக்கதாய் இருந்தபோதிலும் நாம் இந்த நாலு பிரிவுகளையே இந்தப் புத்தகத்தில் உபயோகப்படுத்துவோம்.

## I. பழைய ஏற்பாடு எழுதப்பட்ட பாஷை.

பழைய ஏற்பாடு எபிரேயு பாஷையில் எழுதப்பட்டது. எஸ்றா தானியேலின் புத்தகங்களில் சில பாகங்களும், எரேமியா தீர்க்கதரிசன ஆகமத்தில் ஒரு வாக்கியமும் மாத்திரம்



எபிரேயுவுக்குச் சம்பந்தமான கல்தேயு பாஷையில் எழுதப்பட்டிருக்கின்றன.[1] ஆபிரகாமின் சந்ததியார் எபிரேயர்[2] என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் சுயாதீனராய் இருந்த காலத்தில் பேசின சுயபாஷை எபிரேயு என்ற பெயரால் வழங்கப்படுகிறது. எபிரேயர் என்ற ஜாதிப்பெயரிலிருந்து அவர்கள் பாஷைக்குப் பெயர் உண்டாயிற்று. இஸ்ரவேலர் கானானில் குடியேறுமுன் கானானியர் பெனிக்கேயர் என்ற ஜாதிகள் இந்த எபிரேயு பாஷையைப் பேசினார்கள் என்றும் தோன்றுகிறது. எபிரேயு ஆபிரகாமின் சந்ததியாருடைய ஜநபாஷையாய் இருந்ததுபோல, அது கானானியரின் பாஷையாயும் இருந்தது. யூதர்கள் பாபிலோனில் சிறைகளாய் இருந்தபோது, பாபிலோனிலும் அதற்கு அடுத்த இடங்களிலும் பிறந்து வளர்ந்த யூத ஜனங்கள் அந்தத் தேசத்தின் பாஷையாகிய அராமிய அல்லது கல்தேய பாஷையைப் பேசும்படியான அவசியம் நேரிட்டது. இந்த ஆராமிய பாஷை மெசொப்பொத்தாமியாவிலும் பாபிலோனியாவிலும் பேசப்பட்டது. அது சேமித்திய பாஷைகளுக்கும் பலஸ்தீனுவில் பேசப்பட்ட எபிரேயு பாஷைக்கும் சம்பந்தமாய் உள்ளது. சிறையிருப்பிலிருந்து யூதர் திரும்பி வந்தபின்பு, சீரிய-ஆராமிய பாஷையைக் கற்று அதை வழங்கிவந்தார்கள். இந்தப் பாஷைதான் நம்முடைய ஆண்டவருடைய காலத்தில் யூதரால் பேசப்பட்டுவந்தது. கிறிஸ்துவுக்கு ஏறக்குறைய இருநூறு வருஷங்களுக்குமுன்னே எபிரேயு பேசாப் பாஷையாய் போனபோ

---

[1] கல்தேயு பாஷையில் எழுதப்பட்டிருக்கிறவைகள்:—எஸ்றா 4. அதி. 8. வாக்கியமுதல், 6. அதி. 18. வாக்கியம்வரை; 7. அதி. 12. வாக்கியமுதல் 26. வாக்கியம்வரை; தானியேல். 2 அதி. 4. வாக்கியமுதல் 7. அதி. 28. வாக்கியம்வரை; எரேமியா. 10 அதி. 11. வாக்.

[2] எபிரேயன் என்ற வார்த்தை மூவகையினால் வழங்கப்பட்டிருக்கலாம். சிலர் கடந்துபோகிறது என்ற வினைச்சொல்லிலிருந்து அந்த வார்த்தை வழங்கப்பட்டிருக்கலாம் என்பார்கள். இந்தக் கருத்தின்படி ஆபிரகாம் ஐப்பிராத்து நதியைக் கடந்து வந்ததினால், கானானியர் முதலானவராக அந்தப் பேரை அவனுக்கு இட்டிருக்கலாம். வேறு சிலர் அப்பால் என்று அர்த்தங்கொள்ளும் உருபினைச் சொல்லிலிருந்து வழங்கப்பட்டிருக்கலாம் என்பார்கள். அப்படியானால் மெசொப்பொத்தாமியாவுக்கு அந்தப்பக்கத்தில் ஐப்பிராத்துக்கு அப்பால் வாசம்பண்ணினவன் என்று அர்த்தமாகும். ஆனால், சரியானபடி ஆபிரகாமுடைய முன்னோன் ஏபேர் என்பவனால் எபிரேயன் என்ற பேர் ஆபிரகாமுக்கு உண்டாயிருக்கலாம் என்று நினைக்கத்தக்கதும். ஆதி. 10. 21, 24: 11. 14, 16, 17. எண். 24. 24.

திலும், ஜெபஆலயங்களில் பரிசுத்த வேதாகமத்தை வாசித்து விஸ்தரிக்கும்படியாக அதை ரபிமார் முக்கியமாய்க் கற்று ஆராய்ந்து வந்தார்கள். எபிரேய வேதவாக்கியங்களின்பேரில் யூத கல்விமான்கள் எழுதிவைத்ததும் ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டதுமான நுட்பமான குறிப்புகளுக்கு மசொரா என்று பேர். அந்தக் கல்விமான்களுக்கோ மசொரியர் என்ற நாமம் தரிப்பிக்கப்பட்டது.

## II. பழைய ஏற்பாட்டு பூமிசாஸ்திரம்.

பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிற தேசங்களில் எகிப்தைத் தவிர மற்ற முக்கியமானவைகள் எல்லாம் ஆசியாக் கண்டத்தின் மேல்பாகத்தில் இருக்கின்றன. ஆசியாவிலே முதல்மனுஷன் சிருஷ்டிக்கப்பட்டான். அங்கே முற்பிதாக்கள் வாசம்பண்ணினார்கள். அங்கே நோவாவின் சந்ததியார் ஜலப்பிரளயத்துக்கு வெகுகாலத்துக்குப் பின்னும் குடியிருந்தார்கள். அங்கே அசீரியா, பாபிலோன், பாரசியா என்ற பெரிய ராஜ்யங்கள் எழும்பி செழித்தோங்கின. அந்த ராஜ்யங்களிலுள்ள தேசங்களிலும், கிரேக்கர் ரோமர் குடியேற்றின ஆசியாவிலும், உச்சிதமான மாடமாளிகைகள் சிறப்பான அரமனைக் கட்டிடங்கள் அழிந்துகிடப்பதைப் பார்க்கில் பூர்வத்தாருடைய ஐசுவரியத்தையும், ஜனத்திரட்சியையும் பற்றி பற்பல சரித்திரக்காரரும் பரிசுத்த வேதாகமத்தை எழுதினவர்களும் எழுதிவைத்திருக்கிற காரியம் மெய் என்று ரூபகாரப்படுகிறது.

இந்த அதிகாரத்தில், பழைய ஏற்பாட்டுப் பூமிசாஸ்திரத்தை அதின் சரித்திரத்தோடே சம்பந்தப்படுத்திச் சொல்லப்போகிறோம்.

1. பழைய ஏற்பாட்டில் முதலாவதாக சொல்லப்படுகிற இடம் "ஏதேனில் கிழக்கே இருக்கிற தோட்டம்." அங்கே முதல்மனுஷன் குடியிருக்கும்படியாக வைக்கப்பட்டான். அந்தத் தோட்டம் இன்ன இடத்தில் இருந்ததென்பதை இன்னமும் தெளிவாய் அறியக்கூடாதிருக்கிறது. வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற மற்ற இடங்கள் விசேஷித்த முகாந்தரங்களையிட்டு மறைக்கப்பட்டிருப்பதுபோல அதுவும் மறைக்கப்பட்டிருக்கலாம். அந்தத் தோட்டம் இருந்த இடத்தைப்பற்றி ஆதியாகமம். 2. 8–14 வாக்கியங்களில் சொல்லப்பட்டிருப்பதைக்கொண்டுமாத்திரம் அறியலாம். அந்த வாக்கியங்களில் காட்டப்பட்டிருக்கிற இதிகிரிஸ் ஐப்பிராத்து[1] நதிகளைப்பற்றி ஒருக்காலும் ஒருவரும் ஆட்சேபியாததால், அந்த நதிகளால் தண்ணீர் பாய்ச்சப்பட்ட இடத்தில் மனிதன் சிருஷ்டிக்கப்பட்டிருக்கவேண்டும். இதைவிட மிஞ்சி நாம் அறிய ஏதுவில்லை.



2. வேதத்தில் பின்பு வரும் இடம் நோத் என்னும் தேசம். காயீன் அந்த இடத்துக்குப் போய் அங்கே ஒரு பட்டணத்தைக் கட்டி அதற்குத் தன் குமாரனாகிய ஏனோக்குடைய பேரை இட்டான். நோத்[2] தேசம் ஏதேனுக்குக் கிழக்கே இருந்தது. ஏதேன் எங்கே இருந்ததென்று நமக்குத் தெரியாததால் நோத் இருந்த இடத்தையும் அறியக்கூடாதவர்களாய் இருக்கிறோம். ஆதாமும் ஏவாளும் பரதீசிலிருந்து துரத்தப்பட்டபின்பு எந்த இடத்துக்குப் போனார்கள் என்பதும் நமக்குத் தெரியாது.

3. அராராத்து மலை.[3] ஜலப்பிரளயத்துக்குப் பின்பு பேழை அந்த மலையில் தங்கினது. அராராத்து அர்மேனியாவின் வட

[1] இதிகிரிஸ் (இதெக்கேல்) நதியும், ஐப்பிராத்து நதியும், விஸ்தாரமான தரையைச் சுற்றி ஓடி இரண்டும் ஒன்றுசேர்ந்து பாரசியாக் குடாக் கடலில் சங்கமம் ஆகிறது. இரண்டு நதிக்கும் நடுவே இருக்கிற தரை எபிரேயரால் ஆராம் நாகாரீம் என்றும் கிரேக்கரால் மெசொபொத்தாமியா (இரண்டு நதிக்கூடே இருக்கிற தேசம்) என்றும் தற்கால அரபியரால் எல்ஜிசைரா (தீவு) என்றும் அழைக்கப்படுகிறது. இதிகிரிஸ் நதி, கோல் செக் அல்லது கோலென்சிக் என்னும் மலைகளிலும், ஐப்பிராத்து நதி அர்மேனியா மலைகளிலும் உற்பத்தி ஆகிறது.

[2] ஆதி. 4. 16. ஆபேல் கொலைசெய்யப்பட்டபோது, ஆதாமுக்கு வேறு பிள்ளைகள் இருந்ததாகச் சொல்லப்படாததால், காயீன் நோத்திற்குப் போய் அங்கே மனைவியை விவாகம்பண்ணினான் என்று சொல்லியது கூடியகாரியமா என்று பலருடைய மனதிலும் குழப்பங்கள் தோன்றினதுண்டு. வேதாகமத்தில் அதைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிற சங்கதி மிகச் சுருக்கம். இதைச் சேர்ந்த அநேக சங்கதிகள் விடப்பட்டிருக்கலாம். அந்தந்த வாக்கியத்தில் காயீன் ஒரு பட்டணத்தைக் கட்டினான் என்று சொல்லியிருப்பதைக் கவனிக்கையில் அந்தப் பட்டணத்தைக் கட்டவும் அதில் வாசம்பண்ணவும் தக்கதான ஆட்கள் இருந்திருக்கலாம் என்று அறியலாமே.

[3] ஆதி. 8. 4.

கிழக்கில் இருக்கிறது. அர்மேனியா மேடான பூமி. அது, கௌகாஸ் தவுரு மலைகளால் குறுக்கிடப்பட்டதாய் இருக்கிறது. இந்த மலைகளில் இருந்து ஐப்பிராத்து, திகிரிஸ், ஆராக்கிஸ், அக்கம்ஸிஸ் என்ற நதிகள் எழும்புகின்றன. முந்தின இரண்டு நதிகளும் பார்சியாக் குடாக்கடலிலும் பிந்தின இரண்டும் கஸ்பியன் யூக்ஜின் கடல்களிலும் விழுகின்றன. தற்காலத்தில், அராராத்து என்று அழைக்கப்படுகிற மலைக்கு இரண்டு கொடுமுடி உண்டு; அவைகள் ஒன்றுக்கொன்று ஏழு மைலுக்கப்பால் இருக்கிறது. அந்தக் கொடுமுடிகளுக்கு இடையில் பேழை தங்கினதாய் எண்ணப்படுவதுண்டு. ஆனால், இதைப்பற்றி அநேக ஆட்சேபனைகள் உண்டு; ஆதலால் நிச்சயத்தை அறியக் கூடாத நிலைமையில் இருக்கிறோம்.

4. ஜலப்பிரளயத்துக்குப் பின்பு, நோவா அர்மேனியாவில் இருந்ததாகத் தோன்றுகிறது. அங்கேயிருந்து அவன் சந்ததியார் பூமியில் குடியேறப் புறப்பட்டுப்போனார்கள். அவன் குமாரர் பேர் யாப்பேத்து, காம், சேம்[1] என்பவர்களே.

5. ஆனால், ஜலப்பிரளயத்துக்கு சில காலத்துக்குப்பின்பு தான் அவர்கள் பரம்பத் துவக்கினார்கள். நூறு வருஷங்களுக்கு மேலாக, நோவாவின் சந்ததியார் அர்மேனியாவிலேயே குடியிருந்தார்கள். அதன்பின்பு செழிப்புள்ள பூமியும், சுவாத்தியமும் உள்ள நல்ல இடம்பார்த்து அதில் வாசம்பண்ண விரும்பி, "கிழக்கேயிருந்து பிரயாணம்செய்து, சிநெயார் தேசத்திலே சமபூமியைக் கண்டு, அங்கே குடியிருந்தார்கள்."[2] இந்த சிநெயார், பாபிலோனியா அல்லது கல்தேயாவைக் குறிக்கும். இந்தத் தேசத்துக்குத்தான் இஸ்ரவேலர் அநேக நூற்றாண்டுகளுக்குப்பின்பு சிறைகளாகக் கொண்டுபோகப்பட்டார்கள். இந்தத் தேசத்திலேதான் பாபிலோன் பட்டணம் சிறப்பாய்க் கட்டப்பட்டது. அதைக்குறித்து, நேபுகாத்

[1] யாப்பேத்தின் சந்ததியாருடைய தேசம் மெதித்தரானியன் கடலோரமாய் இருக்கிற ஐரோப்பாவிலும் சின்ன ஆசியாவிலும் முக்கியமாய் இருக்கிறது. அர்மேனியா துவக்கி திகிரிஸ் ஐப்பிராத்து நதிகளின் பள்ளத்தாக்கின் வடகிழக்காயும் மேதியா பார்சியாவரையும் எட்டுகிறது. அந்த ஜாதியார் மேற்கே ஐரோப்பாவிலும் கிழக்கே இந்தியாமட்டும் பரம்பினார்கள். காமின் சந்ததியார் ஆப்பிரிக்காவிலும் ஆசியாவின் தென்பாகங்களிலும் குடியேறினார்கள். சேமின் வம்சத்தார் ஆசியாவின் தென்மேற்கு மூலையிலும் அரபியா கானானிலும் வாசம்பண்ணினார்கள்.

[2] ஆதி. 11. 2.



நேச்சார் பெருமைத்தனமாய், "இது நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா?"[1] என்று சொன்னான். இந்தத் தேசத்திலேதான் நோவாவின் சந்ததியார் வீணாய்ப் பேரிசையினால் ஏவப்பட்டு பாபேல்[2] கோபுரத்தைக் கட்டினார்கள். அந்த வேலையை நடத்திக்கொண்டிருந்தபோது, (ஆதி. 11. அதிகாரத்தில் சொல்லியபடி) அந்த ஜனங்கள் சிதறடிக்கப்பட்டார்கள்.

6. இனிமேல் பழைய ஏற்பாட்டிலே முக்கியமாய் சேமின் சந்ததியார் குடியிருந்த தேசங்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. அந்தச் சந்ததியில் ஒரு வம்சத்தார் பிந்தின காலத்தில் கானான்தேசத்தில் குடியேறினார்கள். நோவா மரித்த இரண்டு வருஷத்துக்குப் பின்பு, அதாவது, ஜலப்பிரளயத்துக்கு முந்நூற்றைம்பது வருஷங்களுக்குப் பின்பு, ஆபிரகாம் என்று அழைக்கப்பட்ட ஆபிராம் பிறந்தான். ஆபிராம் சேமின் சந்ததியானும் ஊர் என்ற கல்தேய தேசத்தானுமாய் இருந்தான். ஆபிராம் குடியிருந்த ஊர் என்ற பட்டணம் தற்காலத்தில் ஊர்பா என்று அழைக்கப்படுகிற பட்டணம் என்று மிகப் பூர்வ பாரம்பரியம் சொல்லுகிறது. அது ஐப்பிராத்துக்குச் சமீபமாய் மெசொப்பொத்தாமியாவில் ஒரு திடலின்மேல் கட்டப்பட்டிருக்கிறது. பிந்திய காலத்தில் அது எட்சா என்று சொல்லப்பட்டது. ஊர் என்ற பட்டணத்தை விட்டு, ஆபிராமும் அவன் குடும்பத்தாரும் தெற்குமுகமாய்ப் பிரயாணம்செய்து, இருபது மைலுக்கு அப்பால் இருக்கிற ஆரானுக்கு வந்து அங்கே குடியிருந்தார்கள். புதிய ஏற்பாட்டில் அது காரான்[3] என்று அழைக்கப்படுகிறது. "தாங்கள் சம்பாதித்திருந்த சம்பத்தெல்லாவற்றையும், ஆரானிலே சவதரித்த ஜனங்களையும்"[4] என்று சொல்லப்பட்டிருப்பதைக் கவனிக்கையில், ஆபிராம் ஆரானில் வெகுகாலமாய் குடியிருந்ததாகத் தோன்றுகிறது. ஆபிராம் இன்னம் அதிகமான பிரயாணம் செய்யவேண்டியதாய் இருந்தது. கர்த்தர் அவனிடத்தில் "நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் உன் தகப்பன் வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ; நான் உன்னைப் பெரிய ஜாதியாக்குவேன்"[5] என்றார். தேவ கட்டளை

[1] தானி. 4. 30. [2] ஆதி. 11. 4.

[3] அப். 7. 4. இந்தப் பட்டணம் இன்னமும் ஆரான் என்று அழைக்கப்படுகிறது. அது ஐப்பிராத்து நதிக்கு உபநதியாகிய பெலிக் நதியோரத்தில் கட்டப்பட்டிருக்கிறது.

[4] ஆதி. 12. 5. [5] ஆதி. 12. 1.

யின்படி ஆபிராம் ஆரானைவிட்டுப் புறப்பட்டு ஐப்பிராத்து நதியைக் கடந்து வந்ததில், தன் சொந்த பழைய வாசஸ்தலத்தை முற்றிலும் கைவிட்டுவிட்டான் என்று அறியலாம். அவன் எங்கே போனான்? எபிரேயர் நிருபத்தில் சொல்லியபடி தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான்.[1] அவன் திவ்விய கரத்தால் நடத்தப்பட்டு சீரியா வனாந்தரத்தைக் கடந்து, பாரம்பரியம் சொல்லுகிறபடி தமஸ்குவில் தங்கி, கடைசியாக சீகேமுக்கு வந்து சேர்ந்தான். அங்கே கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி, கானான் தேசத்தை அவன் சந்ததிக்குக் கொடுப்பதாக வாக்குத்தத்தம்பண்ணினார். சீகேமுக்கும் ஆரானுக்குமுள்ள தூரம் முந்நூறு மைலுக்குக் குறையாது.

7. ஆபிராமுடைய சரித்திரத்தை விபரமாய்ப் பார்ப்பதற்கு இது இடம் அல்ல. ஆனால், அவன் வந்திறங்கின பரிசுத்த தேசத்தையும் அதைச் சூழ்ந்த தேசங்களையும் பற்றிப் பார்க்க வேண்டியது நமது கடமை.

பரிசுத்த தேசம் அல்லது பலஸ்தீனா என்பது ஆசியாக்கண்டத்தின் மேல்பாகத்தில் இருக்கிறது. அது சமசீதள உஷ்ண பூமி. அதற்கு மேற்கே மெதித்திரானியாக் கடலும், கிழக்கே அரபியாவும், தெற்கே எகிப்தின் நதியும் சீன் அல்லது பெயெர்செபா வனாந்தரமும் சவக்கடலின் தென்கரையும் அர்னோன் நதியும், வடக்கே லீபனோன் மலைகளும் எல்லைகளாய் இருக்கின்றன. இந்த மலையடிவாரத்தில் தாண் நகரம் இருந்தது. ஆகவே பரிசுத்த வேதாகமத்தில் தாண்முதல் பெயெர்செபாமட்டும் என்கிற வாசகத்தை அடிக்கடி வாசிக்கிறோம். இதினால் இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட தேசத்தின் நீளம் குறிக்கப்படுகிறது. அது 13,620 சதுரமைல் அளவுள்ளது.

இஸ்ரவேலராகிய ஆபிரகாமின் சந்ததியார் கானான் தேசத்தைக் கட்டிக்கொள்ளுமுன் அதிலே கானானியர் குடியிருந்தார்கள். ஆதலால் அது கானான் தேசம் என்றும் அழைக்கப்படும். கானானியர் காமின் குமாரனாகிய கானானின் சந்ததியார். கானானுக்குப் பதினொரு குமாரர் பிறந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவருடைய குடும்பமும் கோத்திரமாய்ப் பெருகிப்போயின.[2] ஆபிராமின் காலத்தில் யோர்தானுக்குக் கிழக்கே கேனியர் கெனிசியர் கத்மோனியரும், மேற்கே[3]

[1] எபி. 11. 8. [2] ஆதி. 10. 15–19. [3] ஆதி. 15. 18–21.



ஏத்தியர் பெரிசியர் ரெப்பாயீமியர் எமோரியர் கானானியர் கிர்காசியர் எபூசியரும் இருந்தார்கள். யோர்தானுக்கு மேற்கே குடியிருந்த ஜாதியார், மோசேயின் காலத்தில் ஏத்தியர் கிர்காசியர் எமோரியர் கானானியர் பெரிசியர் ஏவியர் எபூசியர்[1] என்று அழைக்கப்பட்டார்கள். இந்த ஜாதியாரைத்தவிர, வேறே ஜாதியாரும் அந்தத் தேசத்திலும் அதைச் சூழ்ந்த தேசத்திலும் குடியிருந்தார்கள். இவர்களில் மிகக் கொடியவர்கள் பெலிஸ்தியர். இவர்கள் பெயரால் கானான் தேசம் பலஸ்தீனா என்றும் அழைக்கப்படுவதுண்டு. மேலும், கேத்தூராளால்[2] ஆபிரகாமுக்குப் பிறந்த நாலாம் குமாரன் மீதியானுடைய சந்ததியாராகிய மீதியானியரும், லோத்துக்கு முறைகேடாய்ப் பிறந்தவர்களிடத்தில் இருந்துண்டான மோவாபியரும் அம்மோனரும்[3] அமலேக்கின் சந்ததியாரான அமலேக்கியரும், ஏதோம் என்று அழைக்கப்பட்ட ஏசாவின் சந்ததியாரான ஏதோமியரும் குடியிருந்தார்கள். இந்த ஜாதியாருடைய வரலாறுகள் அடிக்கடி வேதத்தில் வரும்.

8. இப்போது, நாம் ஆபிராம் சீகேமில் இருந்ததைப் பற்றிப் பார்க்கவேண்டியதாய் இருக்கிறது. இந்த சீகேம்பட்டணம் பிந்தி யாக்கோபின் காலத்தில் இருந்த எமோரியனாகிய சீகேம் பேரால் அழைக்கப்பட்ட பட்டணந்தானோ என்பதைப் பற்றி தெளிவாய்ச் சொல்ல ஏதுவில்லை. ஆனால் "அக்காலத்திலே கானானியர் அத்தேசத்தில் இருந்தார்கள்" என்று, தெளிவாய்ச் சொல்லப்படிருப்பதைக் கவனிக்கையில், அந்தக் கானானியர் முந்தின குடிகளைத் துரத்தி, அவர்களுடைய தேசத்தைக் கட்டிக்கொண்டார்கள் என்று எண்ணவேண்டியதாய் இருக்கிறது. அந்த ஜனங்கள் திரளான ஆடுமாடுகளையுடைய ஆபிராமைப் பட்சத்தோடே நடத்தாமல் காய்மகாரமாய்ப் பார்த்திருப்பார்கள் என்று எண்ணத்தக்கதாய் இருக்கிறது. அப்படியிருந்தும் ஆபிராம் பிந்திய காலத்தில், யாக்கோபு பட்டயத்தையும் வில்லையும் உபயோகித்ததுபோல உபயோகிப்பதற்கு அவனுக்கு வல்லமை இருந்ததும் இல்லை, மனதிருந்ததும் இல்லை. ஆகவே, அவன் தெற்கே பயணம்பண்ணி யூதராச்சியத்தின் வட எல்லைக்கு வந்து, பெத்தேல் என்று அழைக்கப்பட்ட லூஸ் தனக்கு மேற்காகவும் ஆயி தனக்குக் கிழக்காகவும் இருக்கக் கூடாரம்போட்டு, அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினான்.[4]

[1] உபா. 7. 1. யோசு. 3. 10. 24. 11. [2] ஆதி. 25. 2.
[3] ஆதி. 19. 30–38. [4] ஆதி. 12. 8.

9. ஆபிராம் எவ்வளவு காலம் அங்கே இருந்தான் என்பது நமக்குத் தெரியாது. கானான் தேசத்தில் பஞ்சம் கொடுமையாய் இருந்ததால் அவன் அதை விட்டு எகிப்துக்குப் போனான். எகிப்தில் எவ்வளவு காலம் இருந்தான் என்பதும் தெரியாது. சில வருஷங்கள் சென்றபின்பு, அவன் மறுபடியும் பெத்தேலுக்கு வந்ததாகத் தோன்றுகிறது. அப்போது, அவன் மிருகஜீவன்களும் வெள்ளியும் பொன்னுமான ஆஸ்திகளையுடைய சீமானாய் இருந்தான்.[1] அவன் சகோதரன் மகன் லோத்தும் அங்கே அவனோடேகூட இருந்தான். அங்கே அவர்கள் இருக்கையில் லோத்து ஆபிராமை விட்டுப் பிரிந்துபோனான்.[2] அவர்கள் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்தபின்பு, ஆபிராம் தேவ உத்தரவின்பேரில் தெற்கே பிரயாணம் செய்து, எபிரோனில் இருக்கும் மம்ரேயின் சமபூமியில் வாசம்பண்ணினான்.[3] லோத்து யோர்தானுக்கு அருகான சமபூமியைத் தெரிந்துகொண்டு சோதோமுக்கு நேராகக் கூடாரம் போட்டான்.[4]

10. இவ்வண்ணமாக ஆபிராம் தேசத்தில் நிலைபட்டான் என்று பார்க்கிறோம். அது ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தங்கும் இடம் ஆயிற்று. இதற்குக் கொஞ்சங்குறைய ஐந்நூறு வருஷங்களுக்குப்பின்பு, அவர்கள் சந்ததியார் திரும்பிவந்து அதைச் சுதந்தரித்துக்கொண்டார்கள்.

லோத்தின் சரித்திரத்தைப்பற்றி இங்கே சொல்லவேண்டிய அவசியம் இல்லை. அவன் தனக்குக் குடியிருப்புக்காகத் தெரிந்துகொண்ட பட்டணங்களைச் சவக்கடல்[5] மூடிப்போட்டது.

---

[1] ஆதி. 13. 2. [2] ஆதி. 13. 14. [3] ஆதி. 13. 18. [4] ஆதி. 13. 12.

[5] சவக்கடல், அரபிப்பாஷையில் "லோத்தின் கடல்" என்று அழைக்கப்படுகிறது: சமபூமியின் பட்டணங்கள் அழிக்கப்பட்ட சங்கதியை இது விளக்குகிறதாய் இருக்கிறது. அந்தப் பட்டணங்கள் அழிக்கப்பட்டபோது, சுற்றுப்பட்டணங்களிலும் விசேஷித்த மாறுதல் உண்டாயிற்று. அவைகள் முன் கர்த்தருடைய தோட்டம்போல் இருந்தாலும், கந்தகத்தாலும் உப்பாலும் எரிக்கப்பட்டது என்று மோசே சொல்லி இருக்கிறான். (உபா. 29. 23.). வேதாகமத்தில் சவக்கடலானது, சமனான வெளியின் கடல் என்றும் உப்புக்கடல் என்றும் (உபா. 3. 17.) கிழ்க்கடல் என்றும் அழைக்கப்படுகிறது. முதல் பெயர் அந்தக் கடல் யோர்தானின் சமபூமியில் இருப்பதாலும், இரண்டாவது பெயர் அந்தக் கடல் தண்ணீர் மற்றக் கடல்களின் தண்ணீரைவிட அதிகமான உப்புள்ளதாய் இருப்பதாலும், மூன்றாவது பெயர் மேல் கடலை (மெதித்திரானியாவை) வித்தியாசப்படுத்தத் தக்கதாகவும் கொடுக்கப்பட்டது. அந்தக் கடல் 40 மைல் நீளமும் எழு எட்டுமைல் அகலமும் உள்ளது.



பாரானைப்பற்றிப் பார்ப்போம்: இது எபிரோனுக்குத் தெற்கே சற்றுத் தொலையில் இருந்தது. ஆபிரகாமின் மறுமனையாட்டியாகிய ஆகார் பெற்ற இஸ்மவேல் அங்கே குடியிருந்தான். இஸ்மவேலின் சந்ததியார் அரபியாவில் வடக்கும் மேற்குமாகக் குடியேறினார்கள்.

11. இப்போது ஆபிரகாம் என்று அழைக்கப்பட்ட ஆபிராம் எபிரோனில் குடியிருந்ததுமுதல் அவன் சந்ததியார் எகிப்துக்குப் போனதுவரைக்கும் உள்ள சரித்திரத்தை விட்டுவிடுவோமாக. எபிரோன் ஆபிரகாமின் சந்ததியாருக்கு 200 வருஷக் காலங்களாய் குடியிருப்பு ஸ்தலமாய் இருந்தது. அவ்விடத்தில் மக்பேலா என்ற கெபியில் ஆபிரகாமும் அவன் மனைவி சாராளும் அடக்கஞ்செய்யப்பட்டார்கள். ஆபிரகாமின் மரணத்துக்குச் சற்றுமுன், ஈசாக்கு தன் மனைவி ரெபெக்காளை அந்தப் பட்டணத்துக்குக் கொண்டுவந்தான். அந்த இடத்திலிருந்து யாக்கோபும் அவன் குடும்பத்தாரும் எகிப்துக்குப் போனார்கள்.

12. எகிப்து அந்தக் காலத்தில் பலத்த ராஜ்யமாயும் ஐசுவரியத்திலும் நாகரீகத்திலும் பேர்போனதாயும் இருந்தது. அதின் பூர்வீக சரித்திரம் கட்டுக்கதைகளால் நிறைந்திருக்கிறதால் அதின் உண்மையை அறிய ஏதுவில்லை. ஆபிரகாம் அங்கே போயிருந்தபோதும் அது பலத்த ராஜ்யமாகவே இருந்தது. அதற்கு 200 வருஷங்களுக்குப் பின்பு, யோசேப்பு அங்கே கொண்டுபோகப்பட்டபோது அது சிறப்பிலும் மகத்துவத்திலும் மேன்மை அடைந்திருந்தது. அதை அடுத்திருந்த மற்றத் தேசங்களுக்குள் அப்படிப்பட்ட சிறப்பும் மகத்துவமும் கிடைக்கவே மாட்டாது. ஆபிரகாமின் காலத்திலே பிரமிட் என்னும் கோபுரங்களும், தேப்ஸ் இப்சாம்புல் என்ற பட்டணங்களில் காண்கிற கோரிகள் சித்திரங்களில் பார்க்கிறபடி ராஜ அரமனைகளும் அந்தர்ப்புரங்களும் பிரபுக்களும் அடிமைகளும் சுமை சுமக்கிற மிருகங்களும் இருந்ததாகத் தோன்றுகிறது.

யோசேப்பின் காலத்தில் அவ்வித சிறப்புகள் மிகவும் அதிகமாய் இருந்தன. அவன் சரித்திரம் எழுதப்பட்டிருக்கிற ஆதியாகம அதிகாரங்களில் அதைத் தெளிவாய் அறிந்துகொள்ளலாம்.

எகிப்தைப் பற்றிச் சில காரியங்களைப் பார்ப்போம். யூதேயாவுக்குப்பின்பு, எகிப்து விசேஷித்த இடமாக பழைய ஏற்பாட்டில் வருவதைக் காணலாம். அது சாதாரணமாய் மூன்று பிரிவாக வகுக்கப்பட்டிருக்கிறது. முதலாவது, கீழ்எகிப்து அல்லது டெல்ற்று; இந்தப் பாகம் கிரேக்கப் பாஷையின் நாலாம்

எழுத்தின் சாயலாக முக்கோணவடிவுள்ளதாய் இருப்பதால், இப்பேர் கொடுக்கப்பட்டது. இரண்டாவது, நடு எகிப்து; நீல்நதி ஓடுகிற பள்ளத்தாக்கின் மிகுதியான பங்கு இதில் அடக்கம். மூன்றாவது, மேல் எகிப்து அல்லது சாய்ட்; இந்தப் பாகத்தில் நீல்நதியின் இருபக்கங்களிலும் மலைகள் நெருங்கிக்கொண்டிருப்பதால் இது மலைச்சந்துபோல் இருக்கிறது. உள்ளபடி சொல்லவேண்டுமானால் எகிப்து தேசமானது நீல்நதி ஓடுகிற ஒரு பள்ளத்தாக்காம். இதற்கு அப்பால் உள்ளதெல்லாம் பாழும் குடியில்லாததுமாய் இருக்கிறது. மேல் எகிப்து, வேதத்தில் பத்ரோஸ் என்றும் தென்தேசம்[1] என்றும் அழைக்கப்பட்டிருக்கிறது. இதற்குத் தெற்கே கூஷ் அல்லது எத்தியோப்பியா தேசம் இருக்கிறது. அது எபிரேயரால் சேபா என்ற பெயரால் அழைக்கப்பட்டது. இப்போது நியுபியா அபிசினியா என்ற நாமங்களால் அழைக்கப்படுகிற தேசங்கள் அதில் அடங்கி இருந்தது. காமின் மகனும் நிம்ரோத்தின் தகப்பனுமாகிய கூஷ் என்பவனுடைய சந்ததியார் மிகுதியாய்ப் பலுகிப் பெருகிப் பரம்பி, பூர்வத்தில் அரபியாவிலும் பார்சியாவிலும் குடியிருந்து, பின்பு அங்கேயிருந்து எகிப்தைக் கடந்து, ஆபிரிக்காவுக்கு வலசைவாங்கினார்கள்.

லிபியா, இது மெதித்திரானியாக் கடலோரத்தில் இருக்கிற விஸ்தாரமான ஒரு நாடு. பூர்வத்தில் இது லூபியியரைச் சேர்ந்ததாய் இருந்தது.[2] சகாரா வனாந்தரம் லிபியாவின் வனாந்தரமாக இக்காலவரையும் சொல்லப்பட்டுவருகிறது.

பூர்வ எகிப்துக்கு மிசர் அல்லது மிஸ்ராயீம் என்று பேர் கொடுக்கப்பட்டிருந்தது. மிஸ்ராயீம் காமின் குமாரன். ஜலப்பிரளயத்துக்குப் பின்பு, அவன் முதலாவதாக எகிப்திற்குப் போய் அதைச் சுதந்தரித்துக்கொண்டான். தற்காலத்தில் இருக்கிற குடிகள், எகிப்தை மிசர் என்கிற பெயரால் இன்னமும் அழைக்கிறார்கள். வேதாகமத்திலுள்ள பாட்டாகமங்களில் அது ராகாப் என்கிற பெயரால் அழைக்கப்படுகிறது.[3]

பூர்வ எகிப்தின் சரித்திரத்தைப்பற்றி விபரமாய் இங்கே பார்க்க ஏதுவில்லை. அது மூன்று பங்காகப் பிரிக்கப்பட்டிருந்தது என்று மாத்திரம் காட்டுவது போதும். முதலாவது, பூர்வீக ராஜ்யபாரம்; அந்த ராஜ்யபாரத்தின் காலத்திலெல்லாம் மெம்பிஸ் தலைநகரியாய் இருந்தது. பிரமிட்ஸ் என்ற கோபுரங்

[1] எசே. 29. 14; 30. 14. எரே. 44. 15.
[2] 2 நாளா. 12. 3; 16. 8. நாகூ. 3. 9.
[3] ஏசா. 51. 9. சங். 89. 10.



கள் கட்டப்பட்டன. அது அந்த ராஜ்யம் ஆரம்பித்தது முதல் மிலேச்சரான அரபியர் படையெடுத்து வந்ததுவரையும் எட்டுகிறது. எகிப்தியர் அவர்களை ஹைக்ஸோ அல்லது மேய்ப்பர் ராஜாக்கள்[1] என்று அழைத்தார்கள். இரண்டாவது, நடு ராஜ்யபாரம்; இது ஹைக்ஸோ ஜாதியார் எகிப்தில் பிரவேசித்தது முதல், அவர்கள் துரத்தப்பட்டதுவரையும் எட்டினது. மூன்றாவது, புது ராஜ்யபாரம்; இது அமோசிஸ் என்பவனால் சுதேச ராஜ்யபாரம் திரும்ப ஸ்தாபிக்கப்பட்டது முதல், பாரசியர் அதை ஜெயித்ததுவரையும் எட்டினது. ஹைக்ஸோ ஜாதியார் துரத்தப்பட்டதற்கும் பத்தொன்பதாம் வம்சத்தில் முதல் [illegible] முதலாம் இராமேசேஸ் ஆளுகைக்கும் இடையில் ஆபிரகாம் எகிப்துக்கு வந்தான் என்று எண்ணத்தக்கதாய் இருக்கிறது. இந்த வம்சத்தில் பிந்தி வந்த முதலாம் சேதொஸ் என்பவன் காலத்தில் யோசேப்பு அதிகாரத்துக்கு வந்தான். அந்த வம்சத்திலே சிம்மாசனம் ஏறின இரண்டாம் இராமேசேஸ் என்பவன் காலத்தில் இஸ்ரவேலர் குரூரமாய் உபத்திரவப்படுத்தப்பட்டார்கள். மேனபெத்ஸ் என்ற ராஜன் கையிலிருந்து மோசே அவர்களை மீட்டுக்கொண்டான்.[2]

13. யோசேப்பு சிறைச்சாலையில் இருந்து விடுதலைபெற்ற பின்பு, மெம்பிஸ் பட்டணத்தில் குடியிருந்தான். எருசலேமைச் சுற்றிலும் பர்வதங்கள் இருக்கிறாப்போல மெம்பிஸைச் சுற்றிலும் பிரமிட் கோபுரங்கள் இருந்தன. யோசேப்புக்கு ஓன் அல்லது எலியாப்போலி பட்டணத்திலும் ஒரு வீடு இருந்திருக்கலாம். அந்தப் பட்டணத்தின் ஆசாரியன் மகளை பார்வோன் யோசேப்புக்கு மனைவியாகக் கொடுத்தான். அந்தப்

[1] இந்தச் சத்துருக்களின் படையெடுப்பைப் பற்றி எகிப்தியர் எப்போதும் கசப்போடே ஞாபகத்தில் வைத்திருந்தார்கள். ஆகையினாலேதான் ஆதியாகமத்தில் நாம் பார்க்கிறபடி மேய்ப்பரைப்பற்றி அவர்கள் விரோதம் சாதித்தார்கள்.

[2] மேற்சொல்லப்பட்ட சங்கதிகள் ஒருவாறு நம்பக்கூடிய தன்மையுள்ளதாய் இருக்கிறது. என்றாலும் எகிப்தின் சரித்திரமும் காலக்கணிதமும் குழப்பமுள்ளதாய் இருக்கிறது. பார்வோன் என்கிற பேர் வேதாகமத்தில் எகிப்தின் சுதேச அரசர்களுக்குக் கொடுக்கப்பட்ட பட்டப்பேராக வருகிறதென்று அறியவேண்டியது. அப்படியே ஆபிரகாம் யோசேப்பு என்பவர்களின் காலத்திலும் இருந்த ராஜாக்களுக்கு பார்வோன் என்கிற பேர் வழங்கப்படுகிறது. இஸ்ரவேலர் உபத்திரவப்பட்டபோதும் மீட்டுக்கொள்ளப்பட்டபோதும் இருந்த ராஜாக்களும் பார்வோன் என்றே அழைக்கப்படுகிறார்கள். பார்வோன் என்பதற்கு சூரியன் என்று அர்த்தம்

பட்டணத்தில் சூரியன் தெய்வமாக வணங்கப்பட்டது. ஒரு சிறந்த ஆலயமும் கட்டப்பட்டிருந்தது. அது சித்திரப்படங்களாலும் ஒருவகைக் கல் சிலைகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. எலியாப்போலி பட்டணத்தில் தற்காலத்தில் எழுபது அடி உயரமான ஒரு கோபுரமும் சில சிலைகளும் ஸ்தம்பங்களும் மாத்திரம் இருப்பதைக் காணலாம். இந்தப் பட்டணத்துக்குச் சமீபமாய் யாக்கோபும் அவன் குமாரரும் வாசம்பண்ணின கோசேன் நாடு இருந்தது. கோசேனில் யாக்கோபு மரித்தான். ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குத்தத்தக் காலம் நிறைவேறி இஸ்ரவேலர் எகிப்தைவிட்டுப் புறப்பட்டதுவரையும் இஸ்ரவேலர் அங்கே குடியிருந்தார்கள்.

14. அந்த வாக்குத்தத்தம் நிறைவேறின ஆச்சரியமான கதையைப்பற்றி இங்ஙனம் காட்ட ஏதுவில்லை. யோசேப்பின் சகோதரர் எகிப்தில் குடியேறினது முதல், மோசே அவர்களை மீட்கும்படியாக அனுப்பப்பட்டதுவரையும் உள்ள 200 வருஷங்களிலே மிச்சமான காலம், யோசேப்பை அறியாத பார்வோன் ராஜாக்களால் இஸ்ரவேலர் உபத்திரவங்களை அநுபவித்து வந்தார்கள். மோசே தேவ உத்தரவைப் பெற்றபோது மீதியான் தேசத்தில் இருந்தான். அவன் நாற்பது[1] வயசாய் இருந்தபோது, அந்த இடத்துக்குப் போய், பின்னும் நாற்பது வருஷம் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தான். அவன் எண்பது[2] வயசானபோது, தேவன் இஸ்ரவேலரை அடிமைத்தன வீட்டிலிருந்து அழைத்துக்கொண்டு போகும்படி அவனுக்கு உத்தரவு கொடுத்தருளினார். மோசே மீதியானிலுள்ள சீனாய்க்குடாநிலத்தில் தேவ உத்தரவைப் பெற்றுக்கொண்டான் என்று எண்ணத்தக்கதாய் இருக்கிறது. சீனாய்க்குடாநிலம் சிவந்த சமுத்திரத்தின் இரண்டு கவர்களால் சூழப்பட்டிருக்கிறது. அதின் தென்பாகத்தில் பிரமாண்டமான கருங்கல் மலை உயர்ந்திருக்கிறது. இதுதான் பொதுப்பட சீனாய் என்று அழைக்கப்படுகிறது. அங்கே தேவபர்வதமாகிய ஓரேப் மலையும் இருக்கிறது. இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்து புறப்பட்ட பின்பு, இந்தக் குடாநிலத்துக்கு வந்து சேர்ந்தார்கள். இந்த மலைகளில் இருந்து தேவன் ஆச்சரியமான விதமாய் அவர்களோடே பேசி பிரமாணங்களை அருளினார்.

15. இஸ்ரவேலர் எகிப்தை விட்டுப் புறப்பட்டது உலகத்திலுள்ள சம்பவங்களில் மிக ஆச்சரியமானது. அவர்கள் எகிப்

[1] அப். 7. 23. [2] அப். 7. 30.



தில் இருந்தபோது, அவர்களில் மிகுதியான பேர் ஆளோட்டிகளால் மிகுந்த உபத்திரவத்தை அநுபவித்தார்கள். அவர்களை எவ்வளவுக்கு உபத்திரவப்படுத்தினார்களோ அவ்வளவுக்கு அவர்கள் அதிகமாய்ப் பலுகிப் பெருகினார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.[1] இருநூறு வருஷங்களுக்குமுன்னே எகிப்துக்குப் போனவர்களின் தொகை எழுபது[2] மாத்திரம். இப்போதோ அவர்கள் பெண்களும் பிள்ளைகளுந்தவிர ஆறுலட்சம்[3] பேராய்ப் பலுகியிருந்தார்கள். அவர்கள் ராமசேஸ் அல்லது கோசேனில் இருந்து பிரயாணம் துவக்கி முதல்நாளிலே சுக்கோத்துக்கு வந்தார்கள். அதற்குக் குடிசை அல்லது கூடாரம் என்று அர்த்தம். அது வியாபாரக் கூட்டத்தார் வந்து தங்கும் இடமானதால் அந்தப் பேர் அதற்குக் கொடுக்கப்பட்டது. சுக்கோத்து இன்ன இடத்தில் இருந்ததென்பது திட்டமாய்த் தெரியாது.[4] அதிலிருந்து வனாந்தரத்தின் ஓரமாய் இருக்கிற ஏத்தாமில் பாளயம் இறங்கினார்கள்.[5] ஏத்தாம், சேபாபியர் அல்லது எழுகிணறு என்ற இடத்துக்குச் சமீபமாய்க் குடாக்கடல் துனியின் மேல்பக்கத்தில் இருந்து அது மூன்று மைலுக்கப்பால் பாழான இடத்தில் இருக்கலாம். இஸ்ரவேலர் ராமசேசை விட்டபோது பட்டணங்களையும், சுக்கோத்தை விட்டபோது தோப்புகளையும் ஊர்களையும், ஏத்தாமை விட்டபோது எகிப்தின் பசுமையான இடங்களையும் தாண்டி வனாந்தரத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் குடாக்கடல் துனியைச் சுற்றி நேர்வழியாகப் போகாமல், "திரும்பி" மிக்தோலுக்கும் சமுத்திரத்துக்கும் நடுவே பாகால்செபோனுக்கு முன்பாக இருக்கிற ஈரோத் பள்ளத்தாக்கின் முன்னடியிலே பாளயமிறங்கும்படி உத்தரவு கொடுக்கப்பட்டது.[6] அந்த இடத்தைப்

[1] யாத். 1. 12. [2] யாத். 1. 5.

[3] யாத். 12. 37. எகிப்தை விட்டுப் புறப்பட்ட இஸ்ரவேலர், 20 அல்லது 30 லட்சம் பேர் என கணக்கிடப்படுவதுண்டு.

[4] ஒருநாள் பிரயாணம் 15 மைலாய் இருக்கும். சுக்கோத்து வனாந்தரத்தில் இருக்கமாட்டாததால் அது ராமசேசுக்கு 15 மைலுக்குக் கிழக்கே இருக்கலாம். கூடாரப்பண்டிகை அல்லது சுக்கோத்து என்னப்பட்ட உற்சவம் இஸ்ரவேலர் அந்த இடத்துக்கு வந்ததை நினைப்பூட்டும்படியான ஒரு முகாந்தரமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம். கர்த்தர் இஸ்ரவேலரை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினபோது அவர்களைக் கூடாரங்களில் குடியிருக்கப்பண்ணினதை பின்சந்ததியார் நினைவுகூரும்படிக்கும் அந்தப் பண்டிகை ஏற்படுத்தப்பட்டது. லேவி. 23. 40–41.

[5] யாத். 13. 20. [6] யாத். 14. 2.

பற்றி இவ்வளவு திட்டவட்டமாய்ச் சொல்லப்பட்டிருப்பதால் அது இருந்த இடத்தை இலகுவாய் அறியலாம் என்று சொல்லலாம்; ஆனால் காரியம் அதற்கு முற்றிலும் எதிரிடையாய் இருக்கிறது. அவ்வளவு நுட்பமாய்க் காட்டப்பட்டிருக்கிற அந்த இடங்கள் இன்னின்ன ஸ்தானத்தில் இருந்ததாகத் திட்டமாய்ச் சொல்ல ஏதுவில்லை. இஸ்ரவேலர் தேசத்திலே திகைத்துத் திரிகிறார்கள் என்று சொல்லப்பட்டிருப்பதைக் கவனிக்கையில் ஈரோத்துப் பள்ளத்தாக்கு, மலைகளுக்கும் சமுத்திரத்துக்கும் இடையிலுள்ள ஒடுக்கமான ஒரு இடம் என்றும் அந்த இடத்தில் அவர்கள் பிரவேசித்தார்கள் என்றும் எண்ணப்படுவதுண்டு. ஆனால், நமக்குத் தெரிந்திருக்கிறபடி சிவந்த சமுத்திரம் இஸ்ரவேலருக்கு முன்பாக கிழக்கே இருந்தது. அவர்களைப் பார்வோன் வன்மையாய்ப் பின்தொடர்ந்து வந்தான். அப்போது அவர்களுக்கு ஆச்சரியமான இரட்சிப்பு கிடைத்தது. அவர்கள் அதை எப்போதும் நன்றியறிதலோடே எண்ணிவந்தார்கள். இது விஷயம் சகல ஜாதியாருடைய வித்தை, செய்யுள், பாட்டுகளில் ஞாபகமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

சிவந்த சமுத்திரத்தை இன்ன இடத்திலே இஸ்ரவேலர் கடந்தார்கள் என்பதைப்பற்றி அவாவாய் ஆராய்ச்சி செய்யப்படுவதுண்டு. மூவாயிர வருஷக்காலமாய் சிவந்த சமுத்திரத்தின் விஸ்தீரணமும் ஆழமும் அதிகமான மாறுதலடைந்திருப்பதாய்ப் பிரயாணிகள் ஒன்றுபட அபிப்பிராயப்படுகிறார்கள். அதுவும் அல்லாமல் அந்தக் கடலின் பூர்வீக தரை மணலால் அதிகமாய் மூடப்பட்டும் இருக்கிறது. இது காரியங்களினால் இஸ்ரவேலர் இன்ன இடத்தில் அதைக் கடந்தார்கள் என்று சொல்வது வருத்தமாய் இருக்கிறது. என்றாலும் இஸ்ரவேலர் ஆத்கா என்ற மலையின் சிகரத்துக்குச் சமீபமாய் சுவேசு பட்டணத்துக்கு சில மைலுக்குத் தெற்கே அதைக் கடந்ததாகப் பொதுப்படக் குறிக்கப்படுகிறது. அந்த இடத்தில் கடல் பத்து மைல் அகலமும் பதினாலு பாகம் ஆழமுமாய் இருக்கிறதாகச் சொல்லப்படுகிறது.

சிவந்த சமுத்திரத்துக்குக் கீழ்ப்பக்கம் வந்தபோது, இஸ்ரவேலர் தாங்கள் ஷூர் வனாந்தரத்தில் இருப்பதாகக் கண்டார்கள்.[1]

[1] ஆகார் சாராளைவிட்டு ஓடின சம்பவத்தில் ஷூர் என்ற பேர் முதலாவதாக வேதத்தில் வருகிறது. (ஆதி. 16. 7.) ஆபிரகாம் பிந்திய காலத்தில் காதேசுக்கும் ஷூருக்கும் நடுவாகக் குடியேறி, கேராரில் தங்கினதாக வாசிக்கிறோம். (ஆதி. 20. 1.) அது இன்ன இடத்தில்



இந்த வனாந்தரத்தில் அவர்கள் முதலாவது பாளயம் இறங்கின இடம் கசப்பு என்று அர்த்தங்கொள்ளும் மாராவே. அங்கே கசப்புள்ள தண்ணீர் நல்ல தண்ணீராக அற்புதமாய் மாற்றப்பட்டது.[1] அந்த இடம் சுவேசில் இருந்து சீனாய்க்கு வழக்கமாய்ப் போகும் ரஸ்தாவில் இருக்கிற வேடி அமாரா என்ற ஊர் என்று சொல்லப்படுகிறது. மாராவில் இருந்து ஏலீமுக்கு வந்தார்கள். அங்கே பன்னிரண்டு துரவுகளும் எழுபது பேரீந்து மரங்களும் இருந்தன.[2] இந்த இடம் குரண்டல் பள்ளத்தாக்கு என்று அழைக்கப்படுகிறது. அது தற்காலத்தில் அரபியருக்குள் தண்ணீர்ப் பாய்ச்சலான முக்கிய இடமாய் இருக்கிறது. பின்பு ஏலீமுக்கும் சீனாய்க்கும் இடையே இருக்கிற சீன்[3] வனாந்தரத்துக்கு வந்தார்கள். அங்கே காடைகளும் மன்னாவும் அற்புதமாய் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அங்கே மோசே கன்மலையை அடிக்க தண்ணீர் திரளாய்ப் புறப்பட்டது. மூன்றாம் மாஸத்தில் அவர்கள் சீனாயிக்கு வந்து அவ்விடத்தில் ஒரு வருஷமாய்த் தங்கியிருந்தார்கள்.

சீனாயைப்பற்றி நாம் சற்று விபரமாய்ப் பார்ப்போமாக: அங்கே சர்வவல்லவர் தம்முடைய திருச்சித்தத்தை வெளிப்படுத்தினார். அங்கே பத்துக்கற்பனைகள் கொடுக்கப்பட்டது; இஸ்ரவேலரோடே உடன்படிக்கை செய்யப்பட்டது;[4] அங்கே இஸ்ரவேலர் பொன்கன்றுக்குட்டியை உண்டுபண்ணி வணங்கினார்கள்; ஜனங்கள் தொகையிடப்பட்டார்கள்; ஆலயக் கூடாரம் செய்யப்பட்டது; ஆரோனும் அவன் குமாரரும் திவ்விய ஊழியத்துக்கென்று அபிஷேகம் செய்யப்பட்டார்கள்; பஸ்கா இரண்டாவதாக ஆசரிக்கப்பட்டது; நாதாபும் அபியூவும் அந்நிய அக்கினியை பலிபீடத்தில் உபயோகித்ததற்காகக் கொல்லப்பட்டார்கள்.

நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட மலை ஓரேப் மலை என்று உபாகமத்தில் சொல்லி இருக்கிறது; பஞ்சாகமத்தின் மற்றப் புஸ்தகங்களில் அது சீனாய்மலை என்று அழைக்கப்படுகி

இருந்ததென்பதைக்குறித்து இஸ்மவேலின் சந்ததியாரைப்பற்றிய சங்கதியில் சொல்லப்பட்டிருக்கிறது. "அவர்கள் ஆவிலா துவக்கி எகிப்துக்கு எதிராக அசீரியாவுக்குப் போகிற வழியில் இருக்கும் ஷூர்மட்டும் வாசம்பண்ணினார்கள்." (ஆதி. 25. 18; I சாமு. 15. 7; 27. 8ஓடே ஒத்துப்பார்க்க.) ஷூர் வனாந்தரம் ஏத்தாம் வனாந்தரம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. (எண். 33. 8.)

[1] யாத். 15. 23–25. [2] யாத். 15. 27. [3] யாத். 16. 1.
[4] யாத். 20. 1–17; 24. 7, 8.

றது. இந்தப் பெயர்கள் கூட்டமான மலைகளுக்குள் நடுவே இருக்கிற மலையில் ஒன்றுக்கொன்று எதிராய் இருக்கிற இரண்டு கொடுமுடிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அது தென் வடக்காய் இரண்டு மைல் நீளமும் ஒரு மைலுக்குள்ளாக அகலமும் உள்ளதாய் இருக்கிறது. ஓரேப் வடகோடியில் பயங்கரப்படத்தக்க செங்குத்தான பருவதமாய் இருக்கிறது. அது கடல் மட்டத்துக்குமேல் 7000 அடி உயரமுள்ளது. இந்த மலைகளின் அடிவாரத்தைச் சுற்றி ஆழமும் ஒடுக்கமுமான பள்ளத்தாக்கு இருக்கிறது. சீனாயில் இஸ்ரவேலர் பாளயம் இறங்கி இருந்த இடத்தைப்பற்றி சிலர் ஆட்சேபித்து அவ்வளவு திரள் ஜனம் இறங்கத்தக்கதான வசதியான இடம் சீனாய் மலைப்பக்கங்களில் இல்லை என்று சாதிக்கிறார்கள். ஆனால் நவீன பிரயாணிகள் அந்த இடங்களுக்குப் போய், விஸ்தாரமான இடம் இருக்கிறதென்று கண்ணால் பார்த்தறிந்து, அந்த ஆட்சேபனைகளுக்கு எதிரிடையாக எழுதிவைத்திருக்கிறார்கள், அந்தத் திசை எல்லாம் எக்காலத்திலும் மனிதர் மிகுந்த [illegible] யோடே பார்க்கும் இடமாய் இருக்கிறது.

சீனாயிலிருந்து பதினொருநாள்[1] பிரயாணம் செய்தால் இஸ்ரவேலர் கானான்தேசத்தின் தென் எல்லைக்கு வந்து சேரலாம். அவர்கள் காதேஸ் அல்லது காதேஸ்பர்னேயாவுக்கு வந்தபோது தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ள உத்தரவு கொடுக்கப்பட்டது. சிலர் இந்தக் காதேஸ்பட்டணம் பெத்ராபட்டணம் என்று சொல்வார்கள். அது எமோரியரின் மலைகள் அருகே இருந்தது உண்மை என்றாலும், அது இருந்த சரியான இடம் திட்டமாய்த் தெரியாது. ஜனங்கள் தேசத்துக்குள் பிரவேசிக்குமுன், அதை வேவுபார்த்து செய்தியைத் தெரியப்படுத்தும்படி ஆட்கள் அனுப்பப்பட்டார்கள். வேவுகாரர் நாற்பதுநாள் தேசத்தைச் சுற்றிப்பார்த்து, வடக்கே ஆமாத்துக்குப் போகிற வழியாகிய ரேகொப் மட்டும் போய், [illegible] வழியாய்த் திரும்பினார்கள். வேவுகாரர் என்ன செய்திகொண்டு வந்தார்கள் என்பதையும் அதினால் உண்டான பயன் இன்னதென்பதையும் நாம் அறிவோம். இஸ்ரவேலர் கர்த்தரை விசுவாசியாமல் போனபடியால் அவர்கள் சிவந்த சமுத்திரத்தின் வழியாய் வனாந்தரத்துக்குத் திரும்பும்படியாயும் தேசத்தை வேவுபார்த்த நாற்பது நாட்களுக்குச் சரியாக நாற்பது வருஷம் அங்கே அலையும்படியாயும் தீர்ப்புப்பெற்றார்கள். அதால் நாற்-

1 உபா. 1. 1.



பது வயதுக்கு அதிகப்பட்டவர்கள் வனாந்தரத்தில் பிரேதமாய் விழுந்தார்கள்.

இஸ்ரவேலர் நாற்பது வருஷங்களாய்ச் செய்த பிரயாணத்தை இங்கே விபரமாய்க் காட்டுவது கூடாதகாரியம். அதைப்பற்றி வேதாகமத்தில் சொல்லப்பட்டிருப்பது மிகவும் சுருக்கம். மோசே அவர்களை நடத்திக்கொண்டு போன இடங்கள் இன்னின்ன ஸ்தலங்களில் இருக்கிறதென்று சிலவைகளைத் தவிர, மற்றவைகளைப்பற்றி நாம் தெளிவாய் அறியக்கூடாத நிலைமையில் இருக்கிறோம்.[1] இஸ்ரவேலர் வனாந்தர பிரயாணத்தை எல்லாம் முடித்து மோவாப் தேசத்திலுள்ள பள்ளத்தாக்கண்டை வந்து சேர்ந்தார்கள். அதைப்பற்றி சற்று பார்ப்போமாக.

நாற்பது வருஷம் இப்போது கடந்துபோய் விட்டது; மோசே மோவாபின் சமனானவெளிகளில் இருந்து எரிகோவுக்கு எதிரான நேபோ மலையில் இருக்கும் பிஸ்கா கொடுமுடியில்[2] மரிக்கும்படியாக ஏறிப்போனான். சமனான வெளிகளில் இருந்த இஸ்ரவேலர் கர்த்தருடைய கட்டளைக்காகக் காத்துக்கொண்டிருந்தார்கள். மோசேக்காகத் துக்கங்கொண்டாடின

1 இஸ்ரவேலர் பிரயாணம் செய்த இடங்கள். ராமசேஸ் (எண். 33. 3.), சுக்கோத்து (5.), ஏத்தாம் (6.), ஈரோத் பள்ளத்தாக்கு (7.), ஏத்தாமில் மூன்றுநாள் பிரயாணம் (8.), மாரா (8.), ஏலீம் (9.), சிவந்த சமுத்திரத்தின் அருகே (10.), சீன்வனாந்தரம் (11.), தொப்கா (12.), ஆலூஸ் (13.), ரெவிதீம் (14.), சீனாய்வனாந்தரம் (15.), தபேரா (எண். 11. 4.), கிப்ரோத் அத்தாவா (எண். 33. 16.), ஆசரோத் (17.), ரித்மா (18.), ரிம்மோன் பேரேசு (19.), லிப்னா (20.), ரீசா (21.), கேலாத்தா (22.), சாப்பேர்மலை (23.), ஆரதா (24.), மக்கெலோத்து (25.), தாகாத்து (26.), தாராகு (27.), மித்கா (28.), அஸ்மோனா (29.), மோசெரோத்து (30.), பெனெயாக்கான் (31.), கித்காத்மலை (32.), யோத்பாத்தா (33.), எப்ரோனா (34.), எசியோன் கேபேர் (35.), காதேஸ் (36.), பேரோத்து பெனெயாக்கான் (உபா. 10. 6.), ஓர்மலை (எண். 33. 37.), குத்கோதா (உபா. 10. 7.), யோத்பாத் (உபா 10. 7.), சிவந்த சமுத்திரவழி (எண். 21. 4.), சல்மோனா (எண். 33. 41.), பூனோன் (42.), ஓபோத் (43.), அபாரீம் (44, 45.), சாரேத் பள்ளத்தாக்கு (எண். 21: 12.), அர்னோன் ஆறு (எண். 21: 13.), திபோன்காத் (எண். 33: 45.), அல்மோன் திப்லத்தாயிம் (46.), பேயேர் (எண். 21. 16.), மாத்தனா (19.), நகாலியேல் (19.), பாமோத் (19.), அபாரீம் மலை (அல்லது பிஸ்கா எண். 33. 47.), எரிகோவுக்குச் சமீபமாய் யோர்தானுக்கு அருகான மோவாபின் சமபூமி. (48.)

2 உபா. 34. 1.

முப்பதுநாள் முடிந்தபின்பு இஸ்ரவேலர் முன் சிவந்த சமுத்திர தண்ணீர் பிரிக்கப்பட்டு தரைவழியாய் நடந்ததுபோல, யோர்தான் கரைபுரண்டோடினாலும் அதின் தண்ணீரும் பிரிக்கப்பட அவர்கள் தரைவழியாய் நடந்து அக்கரைசேர்ந்து, எரிகோவுக்கு ஏழு அல்லது எட்டுமைல் தூரத்துக்கப்பால் பாளயம் இறங்கினார்கள். இதற்கப்பால் உள்ள சரித்திரம் யுத்த நடபடிகளாய் இருப்பதால் அதைப்பற்றி இங்கே சொல்ல அவசியம் இல்லை.

16. தேவன் இஸ்ரவேலருக்குக் கொடுத்த தேசம் பங்கிடப்பட்டதைப்பற்றி சில காரியங்களைச் சொல்லவேண்டியது இவ்விடத்தில் சரியாய் இருக்கும். அவர்கள் அதை [illegible]ளாகச் சுதந்தரித்துக்கொண்டார்கள் என்றல்ல; அதை முழுதும் சுதந்தரிக்குமுன்னே அநேக கொடிய யுத்தங்களைச் செய்ய வேண்டியதாய் இருந்தது. அநேக பராக்கிரமமுள்ள ஜனங்கள் மடியவேண்டியதாயும் இருந்தது. ஆனாலும், [illegible] பேரிலே உன்னதமானவரின் உத்தரவுப்படி அவர்கள் தேசத்தைக் கோத்திரங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொண்டார்கள். ஒவ்வொரு கோத்திரத்தாருடைய தொகைக்குத்தக்கதாக தேசம் சீட்டின்பேரில் பங்கிடப்பட்டது. யோசேப்பின் இரண்டு பிள்ளைகளான எப்பிராயீம் மனாசேயும் யாக்கோபின் பிள்ளைகளைப்போலவே சரிபங்கு பெற்றுக்கொண்டார்கள். லேவிக்கு மாத்திரம் தேசத்தில் பங்கு கொடுக்கப்படவில்லை. அவர்கள் பரிசுத்தகாரியங்களில் உலகக் கவலைகள் இல்லாமல் ஊழியஞ்செய்யும்படி ஏற்படுத்தப்பட்டபடியால் தேவன் அவர்களுக்கு தசமபாகத்தையும் நிலத்தின் முதல் விளைச்சலையும் பாகமாகக் கொடுத்தார். லேவியருக்குக் குடியிருப்புக்காக நாற்பத்தெட்டு பட்டணங்களும் கொடுக்கப்பட்டது. அவைகள் லேவியரின் பட்டணங்கள் என்னப்படும். இந்தப் பட்டணங்களில் இருபத்துமூன்று கோகாத்தியருக்கும், பதின்மூன்று கெர்சோனருக்கும், பன்னிரண்டு மொராரியருக்கும் பங்கிடப்பட்டது. அவைகளில் ஆறு, ஜனங்களின் வசதிக்காக யோர்தானுக்குக் கிழக்கே மூன்றும் மேற்கே மூன்றுமாக அடைக்கலப்பட்டணங்களாக ஏற்படுத்தப்பட்டது.[1] கைப்பிசகாய்க் கொலைசெய்தவன் பழிவாங்கவேண்டியவன் கைக்குத் தப்பி அவைகளில் ஒன்றிலே அடைக்கலம் புகுந்து அந்தக் காலத்து பிரதான ஆசாரியன் மரணபரியந்தம் அங்கே இருப்பான்.

[1] எண். 35. 6-15. உபா. 19. 1-10. யோசு. 20. 7-9.



17. தேசப்பிரிவு சவுலின் மரணபரியந்தம் அஞ்ஞூறு வருஷகாலமாய் அந்தப்படியே நிலையாய் இருந்தது. யோசுவாவின் காலத்திலும் நியாயாதிபதிகளின் காலத்திலும் இஸ்ரவேலர் கானான் தேசத்தில் தங்களை நிலையாய் உறுதிப்படுத்திக்கொண்டார்கள். யோசுவாவின் காலத்தில் கானான்தேசப் பூர்வீகக் குடிகளை நிர்மூலம்பண்ணும்படி இஸ்ரவேலர் ஓயாமல் யுத்தம் செய்துவந்தார்கள். யோசுவாவின் மரணத்துக்குப் பின்பு மீதியான குடிகளை அவர்கள் கீழ்ப்படுத்தி கப்பம் கட்டும்படி செய்தார்கள். இஸ்ரவேலின் முதல் ராஜாவாகிய சவுல் யோர்தானுக்கப்பால் படையெடுத்து எபிரெயரின் பூர்வசத்துருக்களான அடுத்த ஜாதியாரை மடங்கடித்து ஜெயித்தான். அழிவுக்கு நியமிக்கப்பட்ட அமலேக்கியரை அதம்பண்ணினான்.[1] சவுலின் மரணபரியந்தம் இஸ்ரவேல் ராஜ்யம் அதிக விஸ்தாரம் ஆகாமல் மிகுதியான பங்கு பூர்வ ராஜாக்களால் ஆளப்பட்டிருந்தது.

18. தாவீது இஸ்ரவேலின் சிங்காசனம் ஏறினது ஒரு புது காலாவதிபோல் இருந்தது. முதலில் தாவீது எபிரோனில் ஆண்டான். யூதாக்கோத்திரத்தார் மாத்திரம் அவனை ராஜாவாக அங்கீகரித்து வந்தார்கள். அப்னேரும் இஸ்போசேத்தும் மரித்தபின்பு மற்றக் கோத்திரத்தார் அவனைத் தங்கள் ராஜாவாக ஏற்றுக்கொண்டார்கள். அவன் அப்புறம் சீயோன் மலையில் இருந்த எபூசியரின் துருக்கத்தைப் பிடித்து அதைத் தன் ராஜ்யத்துக்குத் தலைநகரியாக்கிக்கொண்டான். அதுமுதல் எருசலேம் வேதசரித்திரத்தில் விசேஷித்த இடமாகக் காட்டப்பட்டிருக்கிறது. எருசலேமில், தாவீதின் வம்சத்தாருடைய சிங்காசனங்களாகிய நியாயாசனங்கள் வைக்கப்பட்டிருந்தது;[2] அங்கே கர்த்தருடைய மகத்தான ஆலயம் இருந்தது; மூவாயிர வருஷங்களாய் திரள்திரளான பேர் அதற்கு ஸ்தலயாத்திரை போய்வருகிறார்கள். தாவீது மரித்து அடக்கம் பண்ணப்பட்ட ஆயிரம் வருஷங்களுக்குப் பின்பு "தாவீதின் குமாரனும் தாவீதின் ஆண்டவருமானவர்" அங்கே வாசம்பண்ணி மரித்தார்.

19. எருசலேம் ராஜதானியானபின்பு இஸ்ரவேல் ராஜ்யம் விஸ்தீரணமாக்கப்பட்டது. அதைப்பற்றிப் பார்ப்போமாக. தாவீது ராஜாவாய் இருந்ததுபோல யுத்தவீரனாயும் இருந்ததால் முன் இஸ்ரவேலருக்கு வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசம் முழுமையையும் கட்டிக்கொள்ளும்படி இயற்கையாகப் பிரிய

[1] சாமு. [illegible] 14. உபா. 25. 19. [2] சங். 122. 5.

5548

முன்னவனாய் இருப்பான். ஆகவே, அவன் எருசலேமைப் பிடித்து அதில் குடியிருந்து, கீரியாத்யாரீமிலிருந்து கர்த்தருடைய கிருபாசனப் பெட்டியை தான் அதற்காக உண்டுபண்ணின கூடாரத்துக்குள் வைத்தபின்பு, தேசங்களைக் கட்டிக்கொள்ள யுத்தத்தைத் தொடங்கினான். முதலாவதாக, அவன் மேற்கே பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தஞ்செய்து காத்பட்டணத்தையும் அதைச்சேர்ந்த கிராமங்களையும் பிடித்துக்கொண்டான்.[1] பின்பு, அவன் கிழ்திசையாகத் திரும்பி யோர்தானுக்கு அப்பால் இருக்கிற மோவாபியரை மேற்கொண்டு,[2] அங்கிருந்து வடமுகமாய்ச் சென்று, சோபாவிலும் தமஸ்குவிலும் உள்ள சீரியரை முறியடித்து ஐபிராத்து நதிவரையுமுள்ள தேசத்தைக் கட்டிக்கொண்டான்.[3] தாவீது இந்த ஜெயங்களை அடைந்துவருகையில் அவனுடைய தளகர்த்தனாகிய அபிசாயி என்ற யுத்தவீரன் சவக்கடல் தென்கோடியில் உப்புப்பள்ளத்தாக்கிலே ஏதோமியரை முறியடித்தான். பின்பு, தாவீது சேயீர் மலைத்தேசத்துக்கு விரோதமாய்ப் படையெடுத்து அதைப் பிடித்து அங்கே தாணயம் வைத்தான்.[4] தாவீது இதைக் கட்டிக்கொண்டது எபிரெய ராஜ்யத்துக்கு மிகவும் அநுகூலமாய் இருந்தது. அதால் சிவந்த சமுத்திரத்தின் கவர்களில் ஒன்றும் எசியோன்கேபேரும் அவர்கள் அதிகாரத்துக்குள் ஆனது. சாலொமோன் காலத்தில் அவனுடைய கப்பல்கள் பெனிக்கேயருடைய கப்பல்களுடன் சேர்ந்து, ஓப்பீருக்கும் தர்ஷீசுக்கும் போய் புறத்தேச சரக்குகளை யூதேயாவுக்குக் கொண்டுவந்தன[5] என்று பார்க்கிறோம்.

20. சாலொமோன் இருபதுவயதில் பட்டத்துக்கு வந்தபோது மெசித்திராணியாமுதல் ஐபிராத்துவரையும், லீபனோன்முதல் சிவந்த சமுத்திரம்வரையும் உள்ள விஸ்தாரமான ராஜ்யத்துக்குச் சக்கிரவர்த்தி ஆனான்.[6] அவன் தன் தகப்பனாகிய தாவீது கட்டும்படி விரும்பின தேவாலயத்தைக் கட்டி அதைக் கர்த்தருக்குப் பிரதிஷ்டைபண்ணினான். மேலும் அவன் தனக்காக மிகவும் சிறப்பான ஒரு அரமனையையும் எடுப்பித்ததோடே எருசலேமைச் சுற்றிலும் அரண்களையும்

[1] 2 சாமு. 8. 1. 1 நாளா. 18. 1.
[2] 2 சாமு. 8. 2.
[3] 2 சாமு. 8. 3–10.
[4] எண். 24. 18. 1 நாளா. 18. 12, 13. 2 சாமு. 8. 14.
[5] 1 இரா. 10. 2–18.
[6] 1 இரா. 4. 21.



உண்டாக்கினான். அவனுடைய ராஜரீக மகத்துவம் சுற்றிலும் இருந்த ஜாதியாருக்குப் பிரமிப்பையும் அச்சத்தையும் கொடுத்தன. இப்படியெல்லாம் இருக்கையில் அவன் கர்த்தருக்கு முன்பாகப் பொல்லாப்பானதைச் செய்து,[1] தனக்குக் குறைச்சலை உண்டுபண்ணித் தன் ராஜ்யம் பிரிந்துபோவதற்குக் காரணம் ஆனான்.

21. சாலொமோனின் மரணத்துக்குப்பின்பு ராஜ்யம் இரண்டாகப் பிரிந்துபோயிற்று. தாவீதின் காலத்திலும் சாலொமோனின் காலத்திலும் பெரும்பாலும் கோத்திரங்களின் எல்லைகளும் அவர்கள் பிரபுக்களால் ஆளப்பட்டவகையும் விகாரப்படாமல் இருந்தது. ஆனால், ரெகொபெயாமின் ஆளுகையில் ராஜ்யம் பிரிந்தபோது, பிரபுக்களுடைய ஆளுகை ராஜாக்களுடைய ஆளுகையாக மாறிற்று. பத்துக்கோத்திரத்தார் கலகம்பண்ணி வேறே ராஜ்யமாகப் பிரிந்துகொண்டார்கள். யூதராஜ்யத்துக்கும் இஸ்ரவேல் ராஜ்யத்துக்கும் உரிய எல்லை இன்னதென்பதைத் திட்டமாய்ச் சொல்ல ஏதுவில்லை. ரெகொபெயாம் தன் துடுக்குப் புத்தியினாலே தன் தகப்பனுடைய ராஜ்யத்தில் முக்கால்பங்கு பிரிந்துபோகும்படி ஏதுவானான். பத்துக்கோத்திரத்தார் அவனைவிட்டு மருளவிழுந்துபோகிலும் அவன் ராஜ்யத்தின் குடிகள் ஜனத்தொகையில் இஸ்ரவேல் ராஜ்யத்துக்குச் சமமாய் இருந்தார்கள். எனென்றால், எரொபெயாமின் விக்கிரகாராதனைக்கு இணங்காத திரளான லேவியரும் பக்தியுள்ள இஸ்ரவேலரும் யூதாவுக்கு வந்து அங்கே குடியிருந்தார்கள். ஆகவே, இஸ்ரவேல் ராஜ்யத்தைவிட யூதராஜ்யம் ஜனத்திரட்சியுள்ளதாயும் நெருக்கமாய்க் குடியேறப்பட்டதாயும் இருந்தது. இஸ்ரவேல் ராஜ்யத்துக்கு முதலாவது சீகேமும், பின்பு திர்சாவும், அப்புறம் சமாரியாவும் தலைநகரிகளாய் இருந்தன. பென்யமீன் கோத்திரத்தாரும் யூதாக்கோத்திரத்தாரும் ரெகொபெயாமுக்கு உண்மையைக்காட்டி வேறு ராஜ்யத்தார் ஆனார்கள். இந்த ராஜ்யத்துக்கு எருசலேம் தலைநகரியாய் இருந்தது. இஸ்ரவேல் ராஜ்யம் இருநூற்று ஐம்பத்துநாலுவருஷம் நிலைநின்று, பின்பு அசீரியாவின் ராஜாவாகிய சல்மனாசாரால் அழிக்கப்பட்டது. அப்போது எபிரெய ராஜ்யப் பிரிவினையும் அற்றுப்போயிற்று.

22. மேற்சொல்லப்பட்ட சல்மனாசாரால் இஸ்ரவேல் ராஜ்யம் கவிழ்க்கப்பட்ட சங்கதியானது, நாம் இதற்குமுன் பார்

[1] 1 இரா. 11. 6.

த்த தேசங்களைப்பற்றி இன்னம் சில காரியங்களைச் சொல்லும்படி ஏதுவாய் இருக்கிறது. ஆபிரகாம் குடியிருந்த மெசொப்பொத்தாமியா நாட்டிலும் நோவாவின் சந்ததியார் வாசம்பண்ணின சிநெயார் தேசத்திலும் அசீரியா பாபிலோனியா என்ற இரண்டு பெரிய ராஜ்யங்கள் எழும்பின. அசீரியாவுக்கு நினிவேயும் பாபிலோனியாவுக்குப் பாபிலோனும் ராஜதானிகளாய் இருந்தன.

அசீரியா ராஜ்யம் சேமின் குமாரனாகிய அசூர் என்பவனால் ஸ்தாபிக்கப்பட்டதென்று பொதுப்படச் சொல்லப்படுகிறது. அசூர் சிநெயார் தேசத்தைவிட்டு வடக்கே பிரயாணம் செய்து நினிவேயைக் கட்டினான். நினிவேயைப்பற்றி வேதத்தில் முதலாவதாக கி. மு. 862 யோனாவின் ஆகமத்தில் காட்டியிருக்கிறது. அந்த ராஜ்யத்தின் ஆரம்பம் அற்பமாய் இருந்தது. ஆனால் வரவர அதில் யுத்தவீரரான ராஜாக்கள் எழும்பி மேதியா பார்சியா மெசொப்பொத்தாமியா பலஸ்தீனா முதலான தேசங்களைக் கட்டிக்கொள்ளவே, அந்த ராஜ்யம் உலகத்திலே அக்காலத்தில் இருந்த ராஜ்யங்களில் மிகவும் பலத்ததும் கீர்த்திப்பிரதாபமும் உள்ளதாயிற்று. யோனாவின் காலத்தில் அது "மகா பெரிய நகரி" என்று அழைக்கப்பட்டது. அந்தப் பட்டணம் திகிரிசின் கிழக்கரை ஓரமாய்க் கட்டப்பட்டிருந்தது. நதிமுதல் கிழக்கே இருக்கிற மலைவரையும் அது குடியேறப்பட்டிருந்தது. அது நாற்பத்தெட்டு அல்லது அறுபது மைல் சுற்றளவுள்ளதாய் இருந்தது. அதின் மதில்கள் நூறு அடி உயரமுள்ளதும் மூன்று ரதங்கள் தாராளமாய் ஓடத்தக்கதான அகலமுள்ளதுமாய் இருந்தன. பட்டணத்தைச் சூழ்ந்த மதில்களின்மேல் ஆயிரத்து ஐந்நூறு கோபுரங்கள் கட்டப்பட்டிருந்தன. ஒவ்வொரு கோபுரமும் இருநூறு அடி உயரமுள்ளதாய் இருந்தது. யோனாவின் காலத்தில் "வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம்பேர்" (குழந்தைகள்) இருந்ததாக வாசிக்கிறோம். இதை வைத்துக்கொண்டு அதின் ஜனத்தொகை இருபது லட்சமாவது இருக்கவேண்டும் என்று தொகையிடப்பட்டிருக்கிறது. அந்த ராஜதானியின் சிறப்பையும் ஐசுவரியத்தையும் கவனிக்கையில், அந்த ராஜ்யம் எவ்வளவோ மேன்மை பிரதாபமுள்ளதாய் இருக்கவேண்டும் என்றறியலாம்.

பாபிலோனியா ராஜ்யத்தின் ராஜதானி அசீரியா ராஜ்யத்தின் ராஜதானிக்கு சிறப்பில் எவ்வளவும் குறைவுள்ளதல்ல. ஏரோதோத்து என்பவன் சொல்லியிருக்கிறபடி பாபிலோன்பட்ட-



ணம் சதுரமும் அறுபது மைல் சுற்றளவுமுள்ளது. அது ஐபிராத்து இருபக்கங்களிலும் கட்டப்பட்டிருந்தது. இரண்டு பிரிவுகளையும் இணைப்பதற்கு கற்றூண்களின்மேல் பாவப்பட்ட பலகைப் பாலம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. தெருக்கள் சமதூரம் உள்ளவைகளாய் இருந்தன. கோட்டையில் நூறு வாசல்களும் கோட்டையைச்சுற்றி அகலமும் ஆழமுமான அகழும் இருந்தது. வாசல்கள் அடி வெண்கலத்தால் செய்யப்பட்டிருந்தது. கோட்டையின் மதில்கள் தாழ்ந்தபட்சத்தில் எழுபத்தைந்து அடி உயரமாயும் முப்பத்திரண்டு அடி அகலமாயும் இருந்தது. அவைகளில் கோபுரங்களும் கட்டப்பட்டிருந்தன. பட்டணத்தின் நடுவில் ஜூப்பித்தர் அல்லது பேலுவின் ஆலயம் இருந்தது. அது கால் மைல் சமசதுரமுள்ளது. அந்தப் பட்டணத்தின் ஜனத்தொகை குறைந்தபட்சம் பன்னிரண்டு லட்சமாக இருக்கவேண்டும்.

இவ்வித ராஜதானிகளால் குறிக்கப்பட்டிருக்கிற ராஜ்யங்கள் என்றும் நிலைபெறும் என்று எண்ண இடம் உண்டு. ஆனால் காரியம் அப்படி அல்ல; உலகம் ஆளப்பட்டுவருகிற பிரமாணம் வேறே. விஸ்தாரமான அசீரியா ராஜ்யம் கல்தேய ராஜாவான நேபுகாத்நேச்சாரால் கவிழ்க்கப்பட்டது. நினிவே வனாந்தரத்தேரியால் மூடப்பட்டுப்போயிற்று. திரண்ட ஐசுவரியமும் மிகுந்த மேன்மையும் அதிக விஸ்தாரமுமான அந்தப் பட்டணம் இன்ன இடத்தில் இருந்தது என்பது முதலாய்ச் சந்தேகமாய் இருக்கிறது. அதின் அழிவைப்பற்றி நாகூம் தீர்க்கதரிசனம் உரைத்திருந்தான். மேதியரும் பார்சியரும் சேர்ந்து பாபிலோன்மேல் யுத்தஞ்செய்து அதைப் பிடித்து தங்கள் ஆளுகைக்குட்படுத்தினார்கள். பட்டணம் பிடிபட்ட இரவில் அதின் ராஜாவாகிய பெல்ஷாத்சாரும் கொல்லப்பட்டான். இதற்குப் பின்பு, அது வரவர சிதைந்தழிந்துபோயிற்று. அதின் அழிவுக்கு இருநூறு வருஷங்களுக்குமுன் ஏசாயாவும் எரேமியாவும் அதற்கு விரோதமாய்த் தீர்க்கதரிசனம் உரைத்திருந்தார்கள். "ராஜ்யங்களுக்குள் அலங்காரமும் கல்தேயருடைய பிரதான மகிமையுமாகிய பாபிலோனானது தேவனால் சோதோமும் கொமோராவும் கவிழ்க்கப்பட்டதுபோல் கவிழ்க்கப்படும்" என்றும், அதின் அலங்கங்கள் "விழும்" என்றும், "இடிக்கப்படும்" என்றும், "தரையாக்கப்படும்" என்றும், அதின் பட்டணங்கள் "பாழாகும்" என்றும், அதின் தேசம் "வனாந்தரமாகும்" என்றும், "காட்டு மிருகங்கள் அங்கே படுத்துக்கொள்ளும்" என்றும், "கோட்டான்கள் அங்கே குடிகொள்

ளும்" என்றும், "அங்கே அரபியன் கூடாரம் போடுவதும் இல்லை, அங்கே மேய்ப்பர் மந்தையை மறிப்பதும் இல்லை" என்றும் இந்தப் பொன்னான பட்டணத்துக்கு விரோதமாய்ச் சொல்லப்பட்டவைகள் எல்லாம் திட்டமாய் நிறைவேறி இருக்கிறது.[1]

23. சீரியா பாபிலோனியா ராஜ்யத்தார் மிகுந்த மகிமையோடே இருந்த காலத்தில் மேல்திசையை நோக்கி அமராடப்போனார்கள். அசீரியர் இஸ்ரவேல் ராஜ்யத்தைக் கவிழ்த்துப்போட்டார்கள். அதற்கு நூறு வருஷங்களுக்குப் பின்பு, பாபிலோனியர் யூதராஜ்யத்துக்கு முடிவுண்டாக்கினார்கள். யூத இஸ்ரவேலருடைய சிறையிருப்பு அவரவர் ராஜ்யம் அழிக்கப்பட்டதுமுதல் தொடங்கிற்று. இந்தச் சிறையிருப்பு எவ்வளவு கொடிதாய் இருந்ததென்பதை வேத சரித்திரத்திலும் சங்கீதங்களிலும் சொல்லப்பட்டிருப்பதைக்கொண்டு அறியலாம். தீர்க்கதரிசிகள் இந்த அந்தகாரமான நாட்களிலும் யூதர்கள் தங்கள் தேசத்துக்குத் திரும்பிவருவதைப்பற்றி உரைத்திருக்கிறார்கள். சமயம் வந்தபோது கோரேசுடைய உத்தரவின் பேரில் லேவி பென்யமீன் கோத்திரத்தாரின் முக்கியஸ்தர் எழும்பி, அநேக ஆசாரியர் லேவியரோடும் பிரியங்காட்டின இஸ்ரவேலரோடும் தங்கள் தேசத்துக்குத் திரும்பிப்போய், அங்கே பட்டணத்தையும் ஆலயத்தையும் மறுபடியும் கட்டி குடியிருந்தார்கள். திரும்பினவர்களின் தொகை நாற்பத்திராயிரத்து முன்னூற்றறுபது பேர்.[2]

———

[1] சில வருஷங்களுக்கு முன்னே, நீச்சி போட்டா லேயார்ட் என்பவர்கள் நினிவேயிலும், நீச்சி பக்கங்களும் முதலானவர்கள் பாபிலோனிலும் மண்ணால் மூடப்பட்டு மறைந்துகிடந்த பூர்வ பட்டணங்களைத் தோண்டி வெளியாக்கி இருக்கிறார்கள். அங்கே காணப்பட்ட சித்திரங்கள் கற்பணிகள் மண்டபங்கள், முதலியவை அநேக தீர்க்கதரிசனங்களை தெளிவிக்கிறதற்கும் வேதாகம உண்மையை உறுதிப்படுத்துகிறதற்கும் அநுகூலமாய் இருக்கின்றன.

[2] புதிய ஏற்பாட்டு பூமிசாஸ்திரத்தைப்பற்றி பின்பு ஒரு அதிகாரத்தில் காட்டும்போது பழைய ஏற்பாட்டுக்குரிய பூமிசாஸ்திரமும் அதில் இன்னமும் சேர்த்துக் காட்டப்படும்.



# III. பழைய ஏற்பாட்டின் காலக்கணிதம்.

1. வேதாகமக் காலக்கணிதம் எக்காலத்திலும் மிகுந்த ஆவலோடே ஆராய்ச்சி செய்யப்பட்டு வந்திருக்கிறது. பழைய ஏற்பாட்டுக் காலக்கணிதம் மிகுந்த சிக்குள்ளதாய் இருக்கிறதால் சரியானபடி அதைக் கிரமத்துக்குக் கொண்டுவருவது கூடாத காரியம். காலக்கணித நூலை ஸ்தாபிக்க நமக்குக் காலாவதி இல்லை. சாலொமோன் காலமுதல், அல்லது இஸ்ரவேலரின் யாத்திரைமுதல், அதற்குப் பின்னுள்ளவைகளைக் கூடியமட்டும் கிரமப்படுத்திக்கொள்ளலாம். அதற்கு முந்தின காலங்களைக் கணிப்பதற்கு நமக்குத் தகுந்த ஆதாரம் இல்லை. என்றாலும் நமக்கு இருக்கிற அற்பமான ஆதாரத்துக்காக நன்றியறிதலுள்ளவர்களாய் இருந்து ஏற்றத் தாழ்வாய் இருந்தாலும் அதை அங்கீகரிக்கவேண்டியவர்களாய் இருக்கிறோம். பூர்வகாலக் கணிதத்தைப்பற்றி நாம் தலைமுறை அட்டவணையைச் சாரவேண்டியவர்களாய் இருக்கிறோம். அந்தத் தலைமுறை அட்டவணைகளும் சரிவரப் பூரணமாய் இருந்தால் அவ்வளவு சங்கடம் இருக்கமாட்டாது.

2. தலைமுறை அட்டவணையைக் காட்டிய நகல்களை ஒத்துப்பார்க்கில் அவைகள் காலக்கணிதத்துக்குச் சற்று உதவியாய் இருக்கும். ஆனால் அப்படி ஒத்துப்பார்த்ததிலும் வித்தியாசம் காணப்படுகிறது. திருஷ்டாந்தமாக, சிருஷ்டிப்புமுதல் ஜலப்பிரளயம் வரையுமுள்ள காலத்தைக் கணிக்கையில் எபிரெய ஆகமத்தின்படி அது 1656 வருஷங்கள் என்றும், சமாரிய ஆகமத்தின்படி 1307 வருஷங்கள் என்றும், செப்த்துவஜெந்த் ஆகமத்தின்படி 2262 அல்லது 2256 வருஷங்கள் என்றும், கணக்கிடப்பட்டிருக்கிறது. ஜலப்பிரளயமுதல், இஸ்ரவேலர் எகிப்தைவிட்டுப் புறப்பட்டதுவரையுமுள்ள காலத்தைக் கணிக்கையில் அது எபிரெய ஆகமத்தின்படி 857 வருஷங்கள் என்றும், சமாரிய ஆகமத்தின்படி 1502 வருஷங்கள் என்றும், செப்த்துவஜெந்த் ஆகமத்தின்படி 1637 வருஷங்கள் என்றும், தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அப்படியானால், இஸ்ரவேலர் புறப்பட்டது உலகம் உண்டானதற்குப்பின்பு எபிரெயக் கணக்கின்படி 2513-ல் என்றும், சமாரிய கணக்கின்படி 2749-ல் என்றும், செப்த்துவஜெந்த் கணக்கின்படி 3899-ல் என்றும்

சொல்லவேண்டியதாய் இருக்கிறது. இவைகள் எல்லாம் சரி அல்ல என்பது பிரத்தியட்சமாய் இருக்கிறது. ஒருவேளை அவைகளில் ஒன்றும் சரியாய் இருக்கமாட்டாது.

3. பலகாலங்களிலும் ஆராய்ச்சி செய்யப்பட்டுவந்த காலக் கணிதத்தினால் அதிகப்பிரயோஜனம் உண்டு. இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்டதுமுதல் சூரேன் அட்டவணை முடிவானதுவரையுமுள்ள கணிதம் பூரணமாய் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. இந்தக் கணிதத்தில் யாதொரு வித்தியாசமும் இல்லை என்று கல்விமான்கள் எல்லாரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். அதற்கு முந்தி ஆபிரகாமின் அழைப்பு வரைக்கு முன்ன காலமும் கொஞ்சங்குறைய நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. ஆபிரகாமுக்குமுந்தி சிருஷ்டிப்பு வரைக்குமுள்ள கணிதம் அவ்வளவு துல்லியமுள்ளதல்ல என்றாலும் காலக்கிரமப் படி கூடியமட்டும் குறிக்கப்பட்டிருப்பதால் அதை ஒப்புக் கொள்ளவேண்டியவர்களாய் இருக்கிறோம்.

4. பழைய ஏற்பாட்டுக் காலக்கணிதத்தை ஆறு பிரிவாகப் பிரிக்கலாம்.

1-வது. சிருஷ்டிப்புமுதல் ஜலப்பிரளயம் வரையும்; இந்த இரண்டுக்கும் இடையில் எவ்வளவு காலம் சென்றிருக்கிற தென்பதை வேதத்தினால் மாத்திரம் அறியக்கூடியவர்களாய் இருக்கிறோமே அன்றி, வேறே ஆதாரம் இல்லை.

2-வது. ஜலப்பிரளயமுதல் ஆபிரகாம் பிறந்ததுவரையும்; இவைகளுக்கு இடையேயுள்ள காலத்தையும் வேதாகமத்தி னால் மாத்திரம் அறியக்கூடியது. எபிரெய ஆகமத்தின்படி 292 வருஷங்களுக்குமேல் என்றும், சமாரிய ஆகமத்தின்படி 942 வருஷங்களுக்குமேல் என்றும், செப்த்துவஜெண்ற் ஆகமத்தின் படி 1072 அல்லது 993 வருஷங்களுக்குமேல் என்றும் கணக் கிடப்பட்டிருக்கிறது.

3-வது. ஆபிரகாம் அழைக்கப்பட்டதுமுதல் இஸ்ரவேலர் எகிப்தைவிட்டுப் புறப்பட்டதுவரையும்; இதைப் பற்றிய கணி தம் துல்லியமாய் இருக்கிறது. 430 வருஷம் அதின் தொகை.

4-வது. இஸ்ரவேலர் புறப்பட்டதுமுதல் சாலொமோன் தேவாலயத்தைக் கட்டினதுவரையும்; இதைப்பற்றி சில வருத் தங்கள் உண்டு. சிலர் 479 வருஷங்கள் என்றும், சிலர் 621 வருஷங்கள் என்றும் சொல்லுவார்கள்.

5-வது. சாலொமோன் ஆலயத்தைக் கட்டினதுமுதல் யூதருடைய சிறையிருப்புவரையும்; இது ஏறக்குறைய 476 வருஷக்காலம் உள்ளது.



6-வது. யூதர் சிறையிருப்பிலிருந்து திரும்பினதுமுதல் இரட்சகர் பிறந்ததுவரையும்; இது ஏறக்குறைய 536 வருஷக்காலம் உள்ளது.

5. முன்சொல்லப்பட்ட காரியங்களினாலே நீண்ட காலக் கணிதமுறை குறுகின காலக்கணிதமுறை என இரண்டு உண் டென்று அறியலாம். நீண்ட காலக்கணிதமுறை செப்த்துவ ஜெண்ற் ஆகமத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு செய்யப் பட்டது. யோசேப்புஸ் சரித்திரக்காரன் மொழித்தில் அதை உறுதிப்படுத்தி இருக்கிறான். குறுகின காலக்கணிதம் மசொரா என்பதி[illegible]ருந்து கணிக்கப்பட்டது. குறுகின கணக்கின்படி சிருஷ்[illegible] கிறிஸ்துவானவர் பிறந்ததுவரையும் 4000 வருஷ[illegible] என்றும், [illegible]ண்ட கணக்கின்படி அது 5500 வருஷம் என்று[illegible] தொகையி[illegible]ப்பட்டிருக்கிறது.

இந்தக் காலக்கணிதமுறை மனுஷரால் செய்யப்பட்டது. அது திவ்விய அதிகாரமுடையதல்ல; அதை அங்கீகரித்தாலும் அங்கீகரியாவிட்டாலும் நம்முடைய விசுவாச ஆதாரத்தை அது அசைக்கமாட்டாது.

6. சில முக்கியமான சங்கதிகளைப் பற்றி நவீன காலக்கணித சாஸ்திரிகள் குறிப்பிட்டிருக்கிற காலங்களைக் குறித்து இங் ஙனம் எடுத்துக் காட்டுகிறோம்.

| | குறுகினமுறை. | | | நீண்டமுறை. | |
|---|---|---|---|---|---|
| | அஷர் கி. மு. | பெத்தாவியஸ் கி. மு. | கிளின்றன் கி. மு. | ஹேயில்ஸ் கி. மு. | ஜாக்ஸன் கி. மு. |
| சிருஷ்டிப்பு ........ | 4004 | 3983 | 4188 | 5411 | 5426 |
| ஜலப்பிரளயம் ........ | 2348 | 2327 | 2482 | 3155 | 3170 |
| ஆபிரகாமின் அழைப்பு ... | 1921 | 1961 | 2055 | 2078 | 2023 |
| இஸ்ரவேலர் எகிப்தைவிட்டுப் புறப்பட்டது .... | 1491 | 1531 | 1625 | 1648 | 1593 |
| தேவாலய அஸ்திபாரம் .... | 1012 | 1012 | 1013 | 1027 | 1014 |
| தேவாலய அழிவு ...... | 588 | 589 | 587 | 586 | 586 |

இங்கிலீஷ் வேதாகமத்திலும் தமிழ் ஒத்தவாக்கிய வேதாகமத் திலும் அஷருடைய காலக்கணிதம் வழங்கப்பட்டிருக்கிறது. அஷர் ஹேயில்ஸ் என்பவர்களுடைய காலக்கணிதத்தில் இரு ந்து எடுக்கப்பட்ட சுருக்கத்தை அநுபந்தத்தில் பார்க்கலாம்.[1]

[1] அநுபந்தம் C. பார்க்க.

# IV. பழைய ஏற்பாட்டின் கனோன்.[1]

வேதாகமம் நமக்கு வந்த விதம் எப்படி? என்ற கேள்வி அருமையானது. பழைய ஏற்பாடு யூதர்களிடத்தில் இருந்து நமக்கு வந்தது. எந்த அதிகாரத்தினாலே அதை நாம் யூதரிடத்தில் இருந்து பெற்றுக்கொண்டோம் என்றால், கிறிஸ்துவானவருடைய அதிகாரத்தினாலும் அவருடைய அப்போஸ்தலருடைய அதிகாரத்தினாலுமே. ஆனால், யூதர்கள் எந்த அதிகாரத்தினாலே அதைப் பெற்றார்கள்? அது திவ்விய ஏவுதலினால் எழுதப்பட்டதென்று அவர்கள் எண்ணினது எப்படி? வேறே வார்த்தையாய்ச் சொல்லின் பழைய ஏற்பாட்டின் கனோன் புதிய ஏற்பாடின்றி வேறே எந்த அதிகாரத்தில் நிலைநிற்கிறது? நாம் அங்கிகரித்துவருகிற புத்தகங்கள் அல்லாமல், வேறே புத்தகங்கள் வெளிப்படுதலைச் சேரவில்லை என்று புதிய ஏற்பாட்டை அல்லாமல் வேறே வகையாய் அறியலாமா? என்ற கேள்விகள் விசேஷித்தவைகள். அதற்கு உத்தரவு;

புதிய ஏற்பாட்டின் காலத்தில் அப்போஸ்தலர்கள் இருந்த தன்மையின்படியே பழைய ஏற்பாட்டின் காலத்தில் தீர்க்கதரிசிகளும் இருந்தார்கள். அப்போஸ்தலர் போதித்தவைகள் திவ்விய அதிகாரம் உள்ளவைகள் என்று எப்படி ஒப்புக்கொள்ளப்பட்டனவோ அப்படியே தீர்க்கதரிசிகள் போதித்தவைகளும் திவ்விய அதிகாரம் உள்ளவைகள் என்று யூதர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டன. அப்போஸ்தலருக்கு இருந்த அதிகாரமே தீர்க்கதரிசிகளுக்கும் இருந்தது. அவர்கள் அல்லது அவர்களில் சிலர் அற்புதங்களைச் செய்தார்கள். மேலும், தாங்கள் திவ்விய அருள் பெற்றவர்கள் என்பதைத் தாங்கள் சொன்ன தீர்க்கதரிசனத்தினாலே மெய்ப்பித்தார்கள். மிகுந்த தைரியத்தோடே அவர்கள் திரும்பத் திரும்ப "கர்த்தர் உரைக்கிறதாவது" என்று கூறினார்கள். அப்போஸ்தலருடைய அதிகாரம் அவர்களுக்கும் கிறிஸ்துவுக்கும் இருந்த சம்பந்தத்தின்பேரில் நிலைநிற்கிறதுபோல, தீர்க்கதரிசிகளுடைய அதிகாரமும் அவர்கள் எகோவாவுக்கு இருந்த சம்பந்தத்தின்பேரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

1 கனோன் என்பதற்கு மூல அர்த்தம் "நேர்தடி." பின்பு சட்டம் என வந்தது. திருச்சபையார் தேவ ஆவியின் ஏவுதலால் கொடுக்கப்பட்டது என்றும் தங்கள் விசுவாசத்துக்கும் நடக்கைக்கும் சட்டம் என்றும் ஒப்புக்கொள்ளுகிற பழைய புதிய ஏற்பாட்டு ஆகமங்களுக்கு கனோன் புத்தகங்கள் எனப் பேர் வழங்கினது.



இவ்வித ஆதரவைக்கொண்டு நாம் பழைய ஏற்பாட்டின் கனோனைப்பற்றிப் பார்ப்போமாக.

**1. பஞ்சாகமங்களைப்பற்றிப் பார்ப்போம்.** மோசே அவைகளுக்கு ஆக்கியோன் என்பதைப் பின்னாலே பார்க்கலாம். இங்கே அந்த ஆகமங்கள் மோசேயினால் எழுதப்பட்டவைகள் என்றும் அவைகளில் அடங்கிய சங்கதிகள் உண்மையுள்ளவைகள் என்றும் வைத்துக்கொள்ளுவோம். அப்படியானால், மோசே என்ற பெரிய நியாயப்பிரமாணிக்களைவிட மேன்மைபொருந்தியவன் எவன்? அவன் அழைக்கப்பட்டதுமுதல் ஜீவகால பரியந்தமும் எகோவாவோடே நெருங்கிய சம்பாஷணைகளைச் செய்துவந்தான். உலகம் உண்டானதுமுதல் ஒருவனும் அவனைப்போல தேவனோடே அவ்வளவாய் அடிக்கடி சம்பாஷணைகள் செய்ததில்லை. அவன் தான் திவ்விய அதிகாரத்தோடே பேசுவதைப்பற்றி எத்தனையோ தரம் தன் ஆகமங்களில் எடுத்துக் காட்டியிருக்கிறான். தான் அப்படிச் சொன்னது நியாயம் என்பதை விசேஷித்த வகையாய் மெய்ப்பித்திருக்கிறான். அவனுடைய ஜீவியகாலம் நீண்ட அற்புதம்போல் இருந்தது; அவனுடைய போதனை அற்புதமாய் இருந்தது; அவன் மரணம் அற்புதமாய் இருந்தது. அவன் வெகுகாலத்திற்குப்பின் சம்பவிக்கப்போகிறவைகளைப்பற்றி தீர்க்கதரிசனமாக எழுதிவைத்தான். அவைகள் தற்காலத்தில் நிறைவேறிவருகிறதைப் பார்க்கிறோம்.

தான் பின்வைத்துப்போன புஸ்தகத்தைப் பற்றி மோசே தானே என்னசொல்லியிருக்கிறான்? அது "நியாயப்பிரமாணப் புஸ்தகம்" என்றும் "மோசேயின் நியாயப்பிரமாணப் புஸ்தகம்" என்றும் "கர்த்தர் இஸ்ரவேலருக்குக் கட்டளையிட்ட மோசேயின் நியாயப்பிரமாணப் புஸ்தகம்" என்றும் அழைக்கப்பட்டிருக்கிறதைப் பார்க்கிறோமே.[1] மோசே "இந்த நியாயப்பிரமாணத்தை எழுதி அதைக் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற லேவி புத்திரரான ஆசாரியருக்கும் இஸ்ரவேலுடைய மூப்பர் எல்லாருக்கும் ஒப்புவித்து, அவர்களுக்குக் கட்டளையிட்டது என்னவென்றால், விடுதலையின் வருஷமாகிய ஒவ்வொரு ஏழாம் வருஷத்தின் முடிவிலே கூடாரப்பண்டிகையில் உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்துகொள்

1 உபா. 31. 9–13, 24–26; 17. 18–20.

னும் ஸ்தானத்தில் இஸ்ரவேலர் எல்லாரும் அவருடைய சந்நிதியில் சேர்ந்து வந்திருக்கும்போது, இந்த நியாயப்பிரமாணத்தை இஸ்ரவேலர் எல்லாரும் கேட்க அவர்களுக்கு முன்பாக வாசிக்கக்கடவாய். புருஷரும் ஸ்திரீகளும் பிள்ளைகளும் உன் வாசல்களில் இருக்கும் அந்நியர்களும் கேட்டு கற்றுக்கொண்டு, உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளின்படி எல்லாம் செய்யக் கவனமாய் இருக்கும்படிக்கும் அதை அறியாத அவர்கள் பிள்ளைகளும் கேட்டு, நீங்கள் யோர்தானைக் கடந்து சுதந்தரிக்கப் போகிற தேசத்தில் உயிரோடிருக்கும் நாள் எல்லாம் உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பயப்படக் கற்றுக்கொள்ளும்படிக்கும் ஜனத்தைக் கூட்டி அதை வாசிக்கவேண்டும்" என்றும், "மோசே இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகள் முழுவதையும் ஒரு புஸ்தகத்தில் எழுதி முடித்தபின்பு மோசே கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற லேவியரை நோக்கி: நீங்கள் இந்த நியாயப்பிரமாணப் புஸ்தகத்தை எடுத்து அதை உங்கள் தேவனாகிய கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியின் பக்கத்திலே வையுங்கள் என்றும் அவன் (அதாவது இஸ்ரவேலர் பிந்தியகாலத்தில் தங்கள்மேல் ராஜாவாக ஏற்படுத்துகிறவன்) தன் ராஜாசனத்தின்மேல் வீற்றிருக்கும்போது அவனுடைய இருதயம் அவன் சகோதரர்பேரில் மேட்டிமை கொள்ளாமலும் கற்பனையை விட்டு வலதுபுறம் இடதுபுறம் சாயாமலும் இந்த நியாயப்பிரமாணத்தின் எல்லா வார்த்தைகளையும் இந்தக் கட்டளைகளையும் கைக்கொண்டு, இவைகளின்படி செய்வதற்காகத் தன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்திருக்கும்படி கற்றுக்கொள்ளும்பொருட்டு அவன் லேவியராகிய ஆசாரியரிடத்தில் இருக்கிற நியாயப்பிரமாணநூலைப் பார்த்து தனக்காக ஒரு பிரதியை எழுதி தன்னிடத்தில் வைத்துக்கொண்டு, தன் ஜீவனுள்ள நாள் எல்லாம் அதை வாசிக்கக்கடவன்" என்றும் சொல்லியிருப்பதை நாம் கவனிக்கையில் இந்த வாக்கியங்கள் நாம் இப்போது பார்க்கிற காரியத்துக்கு எவ்வளவோ பிரயோஜனமாய் இருக்கிறது. அவைகள் பழைய ஏற்பாட்டின் கனோன் எப்படித் துவக்கப்பட்டது என்பதையும் கனோன் ஆகமத்துக்கு ஆதாரம் இன்னது என்பதையும் காட்டுகிறதாய் இருக்கிறது. கனோன் ஆகமத்துக்கு முக்கிய ஆதாரம் என்னவென்றால், அந்த ஆகமத்தில் மனிதனுக்குத் தேவனால் அருளப்பட்ட விருத்தாந்தம் அடங்கியிருப்பதே. பஞ்சாகமத்தில் இதைக் காணலாம்; மற்றப்படி



மோசே எத்தன் என்றாவது அல்லது எழுதப்பட்டுப் போனான் என்றாவது சொல்லவேண்டும். அல்லவென்றால், அவன் ஆகமத்தில் தேவனுடைய வெளிப்படுதல் அடங்கியிருக்கிறது என்று அங்கீகரிக்கவேண்டும்.

2. சரித்திர ஆகமங்களைப்பற்றி அவ்வளவு தெளிவு இல்லை. அவைகளை எழுதினவர்கள் இன்னார் என்பதைப்பற்றி நமக்குத் திட்டமாய்த் தெரியாது. அவைகளில் சிலவை [illegible] முன் எழுதிவைக்கப்பட்டவைகளில் இருந்து எடுத்து எழுதப்பட்டிருக்க[illegible]. ஆனால், அந்தப் புத்தகங்கள் பரிசுத்தமானவைகள் என்று [illegible] அருள்பெற்றவர்களால் எண்ணப்பட்டன. அவைகளில் சிலவை "கர்த்தருக்கு முன்பாக" அதாவது நியாயப்பிரமாணப் புஸ்தகம் வைக்கப்பட்டிருந்த கிருபாசனப் பெட்டி அண்டை வைக்கப்பட்டன என்பதற்குத் திருஷ்டாந்தம் உண்டு. தீர்க்கதரிசிகள் எழுதினவைகளும் அந்த ஆகமங்களில் சேர்க்கப்பட்டும் இருக்கிறது. சரித்திர ஆகமங்களை எழுதினவர்கள் தீர்க்கதரிசிகள் என்றும், ஞானதிருஷ்டிக்காரர் என்றும் வேதத்தில் சில தருணங்களில் சொல்லப்பட்டிருப்பதும் உண்டு.

3. தீர்க்கதரிசன ஆகமங்களில் தீர்க்கதரிசனங்கள் அடங்கியிருப்பதால் அவைகளைக் கனோன் ஆகமங்கள் என்று சொல்வதற்குத் தடை இல்லை. சாமுவேலின் காலமுதல் நேராய்த் திவ்விய அதிகாரம் பெற்று பரிசுத்தஆவியானவரால் ஏவப்பட்டுப் பேசின மனுஷர் காலந்தோறும் எழும்பிக்கொண்டே இருந்தார்கள். சாமுவேலின் காலமுதலே தீர்க்கதரிசன ஆகமங்கள் எழுதப்பட்டு வந்தன என்று நாம் சொல்லுகிறது இல்லை. சாமுவேல்முதல் உசியா ராஜாவின் காலம்வரையும் முன்னூறு வருஷங்களாய் யோனாவின் தீர்க்கதரிசனம் தவிர வேறே தீர்க்கதரிசன ஆகமம் எழுதப்படவில்லை. ஏசாயா, எரேமியா, எசேக்கியேல், தானியேல் என்பவர்கள் எழுதின புத்தகங்களில் சரித்திரங்கள் சேர்க்கப்பட்டிருப்பதுபோல முந்திய தீர்க்கதரிசிகள் எழுதின ஆகமங்களில் பொதுப்பட சரித்திரம் எழுதப்பட்டிருக்கிறது. தீர்க்கதரிசன ஆகமங்கள் உசியாவின் காலமுதல் துவக்கி எழுதப்பட்டன. அவன் ஆளுகையிலே ஓசியா, ஆமோஸ், ஏசாயாவும் எழும்பினார்கள். ஒருவேளை யோனாவும் யோவேலும் எழும்பியும் இருக்கலாம். மீகா, ஏசாயாவின் காலத்தில் அவனுக்குச் சற்று பிந்தி தீர்க்கதரிசி உத்தியோகத்துக்கு வந்தான். அப்பால் மற்றத் தீர்க்கதரிசன ஆகமக்காரர் தொடர்ச்சியாய் எழும்பினர். அவர்கள் எல்லாரும் எழுதின

ஆகமங்கள் தீர்க்கதரிசனங்களாய் இருக்கிறபடியால் அவைகள் கனோனுக்கு உரியவைகளாய் இருக்கின்றன.

**4 பாட்டாகமங்கள்.** இவைகளைப்பற்றி இனிமேல் பார்ப்போம். அவைகள் கனோனுக்கு உரியவைகள் என்பது அக அத்தாட்சியினால் மெய்ப்பிக்கப்படும். நம்முடைய ஆண்டவரும் அவருடைய அப்போஸ்தலரும் அவைகளை அங்கீகரித்து இருக்கிறார்கள். பொதுப்படச் சொல்லில் நமது கர்த்தரும் அவருடைய அப்போஸ்தலரும் பழைய ஏற்பாட்டு ஆகமங்களை அங்கீகரித்துக்கொண்டதே அவைகளின் உண்மைக்குப் [illegible] அத்தாட்சியாய் இருக்கிறது.

5. இந்தப் புத்தகங்கள் எவ்வண்ணமாகக் காக்கப்பட்டு வந்தன? அவைகளை யார் ஒன்றாய்த் திரட்டி இப்போது இருக்கிற பிரகாரமாய்ச் சேர்த்தது? என்று கேட்கப்படலாம்.

எஸ்றா நெகேமியாவின் காலம்வரைக்கும் அந்தத் திவ்விய புத்தகங்கள் காக்கப்பட்டு வந்த விதத்தைப்பற்றி நமக்குக் கிடைத்திருக்கிற அறிவு மிகச் சொற்பம். அதைப்பற்றி வேதாகமத்தினால் மாத்திரம் அறியக்கூடும். மோசே நியாயப்பிரமாணத்தை எழுதி "அதைக் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற லேவி புத்திரரான ஆசாரியருக்கும் இஸ்ரவேலுடைய மூப்பர் எல்லாருக்கும் ஒப்புவித்து அதை உங்கள் தேவனாகிய கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியின் பக்கத்திலே வையுங்கள்"[1] என்று சொன்னதைப்பற்றி முன் காட்டியிருக்கிறோம். யோசுவாவின் புத்தகக் கடைசியில், "இந்த வார்த்தைகளை யோசுவா தேவனுடைய நியாயப்பிரமாணப் புஸ்தகத்திலே எழுதினான்"[2] என்று சொல்லியிருக்கிறது. இதற்குப் பிந்திய காலத்தில் சாமுவேல் "ராஜாங்கத்தின் முறைமையை ஜனங்களுக்குத் தெரிவித்து அதைப் புத்தகத்தில் எழுதி கர்த்தருடைய சந்நிதியில் வைத்தான்"[3] என்று காட்டியிருக்கிறது. இல்க்கியாவின் காலத்தில் "கர்த்தருடைய ஆலயத்திலே நியாயப்பிரமாணப் புஸ்தகத்தைக் கண்டுபிடித்ததாக"[4] அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஏசாயா தன்னுடைய ஆகமத்தைப்பற்றி ஜனங்களைப் பார்த்து, "கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள்; இவைகளில் ஒன்றும் குறையாது"[5] என்று உரைத்திருக்கிறான். தானியேல் சிறையிருப்பு "வருஷங்களின் தொகையைப் புஸ்தகங்களால் அறிந்துகொண்டதாக"[6]

[1] உபா. 31. 9, 26. [2] யோசு. 24. 26. [3] 1 சாமு. 10. 25. [4] 2 இரா. 22. 8. [5] ஏசா. 34. 16. [6] தானி. 9. 2.



தெரிவித்திருக்கிறான். இவைகளினாலே நாம் கவனிக்கிறது என்னவென்றால், முதலாவது மோசே தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அதிகாரத்தினாலே அநுமதிபெற்ற புத்தகங்கள் சிறையிருப்புக்கு முந்தி யூதர்களால் திவ்விய அதிகாரம் உள்ளவைகளாக ஒப்புக்கொள்ளப்பட்டன என்பதையும், இரண்டாவது அந்தப் புத்தகங்களுக்குச் சரியான உண்மையுள்ள நகல் ஒன்று ஆலயத்தில் ஆசாரியர் வசம் ஒப்புவிக்கப்பட்டது என்பதையும்; அதில் இருந்து நகல்கள் எழுதப்பட்டு ஜனங்களுக்குள் பிரசித்தப்படுத்தப்பட்டது என்பதையும், மூன்றாவது பாபிலோனில் தானியேலிடத்தில் புத்தகங்கள் இருந்தன என்பதையும், எரேமியா தன் ஆகமத்தில் முந்தின தீர்க்கதரிசன ஆகமங்களில் இருந்து வாக்கியங்களை எடுத்துக் காட்டியிருக்கிறான் என்பதையும் பார்க்கையில் அந்த ஆகமங்களை சுயப்பிரயோஜனத்துக்காகப் பக்தியுள்ளவர்கள் சேர்த்துவைத்திருக்கலாம் என்று சொல்லவேண்டியவர்களாய் இருக்கிறோம்.

இந்த ஆகமங்களை ஒன்றாகத் திரட்டி கனோனை முடித்தது எஸ்றா என்று யூதருடைய பாரம்பரியம் முக்கியப்படுத்திச் சொல்லுகிறது. இந்தப் பாரம்பரியம் நிச்சயம் என்று அங்கீகரிக்கப்படத்தக்கதாய் இருக்கிறது. இந்தக் கிரியைக்கு அவன் தகுந்தவன் என்பதற்குச் சந்தேகம் இல்லை. அவன் "கர்த்தருடைய கற்பனைகளின் வார்த்தைகளிலும் அவர் இஸ்ரவேலுக்குக் கொடுத்த கட்டளைகளிலும் படித்துத் தேறினவன்"[1] என்றும் "கர்த்தருடைய வேதத்தை ஆராயவும் அதின்படி செய்யவும் இஸ்ரவேலிலே கட்டளைகளையும் நீதிநியாயங்களையும் உபதேசிக்கவும் தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான்" என்றும் சொல்லப்பட்டிருக்கிறான். இந்தக் கிரியையில் எஸ்றாவுக்கு ஆகாய், சகரியா, நெகேமியா, மல்கியா என்பவர்கள் உதவிசெய்தார்கள். ஆகையால் இந்தப் புத்தகங்கள் நல்ல மனிதரால் மாத்திரம் அல்ல திவ்விய அருள்பெற்ற மனிதராலும் ஒன்றாய்த் திரட்டிச் சேர்க்கப்பட்டன என்று அறிகிறோம். எஸ்றா அல்லது அவனுக்குப் பின்னுள்ளவர்களால் திரட்டிச் சேர்க்கப்பட்டபடியே கனோன் ஆகமங்கள் இருந்தது என்பதைப்பற்றி பின்வந்த சரித்திரக்காரரும் நூலாசிரியர்களும் எழுதிவைத்திருப்பதால் அதை நிச்சயமாய் அறியலாம். ஆகவே, நம்முடைய கர்த்தராலும் அவருடைய அப்போஸ்தலராலும் உண்மையுள்ளவைகளாக அங்கீகரிக்கப்பட்ட ஆகமங்களே மொத்

[1] எஸ்றா, 7. 10, 11.

தத்தில் நம்முடைய வசமாய் இருக்கிறது என்று அறியவேண்டியவர்களாய் இருக்கிறோம்.

6. தள்ளுபடி ஆகமங்களைப்பற்றி இப்போது பார்ப்போம்: அந்தப் புத்தகங்களை ஏன் கனோனில் சேர்க்கவில்லை? கனோன் ஆகமங்களாக அங்கீகரிக்கப்படும் புத்தகங்களுக்குச் செல்லும் குறிப்புகள் அவைகளுக்கு ஒத்துவராததினாலேயே யூதசபையார் அவைகளைக் கனோன் ஆகமங்களாக ஒப்புக்கொண்டதும் இல்லை, நம்முடைய ஆண்டவராலும் அவருடைய அப்போஸ்தலராலும் அவைகளிலிருந்து வாக்கியங்கள் எடுத்து உரைக்கப்பட்டிருப்பதும் இல்லை. (பவுல் அப்போஸ்தலர் அஞ்ஞானக் கவிஞர் நூல்களில் இருந்து மூன்றுதரம் எடுத்துச் சொல்லியிருந்தும் இவைகளில் இருந்து ஒரு வசனமாவது எடுத்துக் காட்டவில்லை.) தேவ ஆவியின் ஏவுதலால் எழுதின கடைசியான தீர்க்கதரிசி தன் தேசத்தார் மோசேயின் பிரமாணத்தை அங்கீகரித்து அதின்படி நடக்க அவர்களை ஏவி இரண்டாம் எலியா வரும்பரியந்தம் வேறொரு தூதனுக்காக அவர்கள் எதிர்நோக்கவேண்டியதில்லை என்று தன் ஆகமத்தில் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறான். தள்ளுபடி ஆகமங்களின் அக அத்தாட்சியைக் கவனிக்கையிலும் அவைகள் திவ்விய அருள்பெற்றவர்களால் எழுதப்படவில்லை என்பது தெளிவாய் இருக்கிறது. அவர்களில் ஒருவராவது தங்களுக்குத் திவ்விய அதிகாரம் உண்டென்று சாதிக்கவில்லை. அவர்களில் சிலர் அப்படிப்பட்ட அதிகாரம் தங்களுக்கு இல்லை என்றே சொல்லியிருக்கிறார்கள். பின்னும், மற்றும் சரித்திரங்களுக்கு விகற்பமான காரியங்கள் அவைகளில் காட்டப்பட்டிருக்கிறது. அவைகளில் ஒன்றுக்கொன்று விரோதமான காரியங்களையும் காட்டியிருக்கிறது. வேத உபதேசங்களுக்கும் போதனைகளுக்கும் விகற்பமானவைகள் அவைகளில் எழுதியிருக்கின்றன. ஆனால் அவைகள் யூதருடைய சரித்திரத்தை அறிகிறதற்கும் நல்லொழுக்கத்தில் தேறுகிறதற்கும் பிரயோஜனம் உள்ளவைகளாய் இருக்கின்றன. அவைகள் திவ்விய அதிகாரம் உடையவைகள் அல்லாததால் நம்முடைய விசுவாச சட்டத்துக்கு உரியவைகள் அல்ல.



## V. தனித்தனியான புஸ்தகங்கள்.

1. பஞ்சாகமங்கள் (ஐஞ்சுருள் புஸ்தகம்.). இவைகள் பழைய ஏற்பாட்டில் முதலாவதாக வருகிற புஸ்தகங்கள். காலக்கிரமத்தின்படியும் இவைகள் முதலாவதாக எழுதப்பட்டவை. சிலர் யோபின் ஆகமம் பஞ்சாகமம் எழுதப்பட்டகாலத்தில் எழுதப்பட்டதாக அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் இந்த அபிப்பிராயம் பொதுப்பட அங்கீகரிக்கப்படவில்லை. எப்படியும் சரித்திர ஆகமங்களுக்குள் பஞ்சாகமம் முதலாவதாக எழுதப்பட்டது என்பதற்குச் சந்தேகம் இல்லை. இதுதான் உலகத்தில் உண்டாய் இருக்கிற சரித்திர ஆகமங்களில் முந்தி எழுதப்பட்டது. இது எப்போது ஐந்து ஆகமங்களாகப் பிரிக்கப்பட்டது என்று திட்டமாய்த் தெரியாது. எபிரெய கையெழுத்துப் பிரதியில் பஞ்சாகமம் ஒரே சுருள் அல்லது புத்தகமாக இருக்கிறது. ஆனால் இது பெரிய பிரிவுகளாகவும் சிறிய பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு புத்தகத்துக்கும் கொடுக்கப்பட்டிருக்கிற நாமங்கள் கிரேக்கில் இருந்து வந்திருப்பதால் அந்தந்தப் புத்தகத்தின் பேர் பழைய ஏற்பாட்டைக் கிரேக்கப் பாஷையில் திருப்பினவர்களாலே கொடுக்கப்பட்டிருக்கலாம் என்று அநேகர் நினைக்கிறார்கள்.

2. பஞ்சாகமத்தை மோசேயே எழுதினான் என்று யூதர்கள் எல்லாரும் ஒன்றுபடச் சொல்லுகிறார்கள். பாரம்பரியங்கள் எல்லாம் அப்படியே சாதிக்கின்றன. இந்தப் பாரம்பரியம் சரி என்பதற்கு அநேக விசேஷித்த முகாந்தரங்கள் உண்டு. முதலாவது, அந்த ஆகமங்களிலேயே இது விஷயம் சாதிக்கப்பட்டிருக்கிறது. உபா. 31. 9, 24–26ல் மோசே இந்த நியாயப்பிரமாணத்தை எழுதி அதைக் கர்த்தருடைய பெட்டியைச் சுமக்கிற லேவிபுத்திரரான ஆசாரியருக்கும் இஸ்ரவேலுடைய மூப்பருக்கும் ஒப்புவித்தான் என்றும், மோசே இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தை முழுவதையும் ஒரு புஸ்தகத்தில் எழுதி முடித்தபின்பு மோசே கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற லேவியரை நோக்கி நீங்கள் இந்த நியாயப்பிரமாணப் புஸ்தகத்தை எடுத்து அதை உங்கள் தேவனாகிய கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியின் பக்கத்திலே வையுங்கள்; அங்கே அது உனக்கு விரோதமான சாட்சி

யாய் இருக்கும் என்றும் சொல்லியிருப்பதாக வாசிக்கிறோம். யாத்திராகமத்தில் 17. 14. கர்த்தர் மோசேயை நோக்கி இதை நினைவுகூரும்பொருட்டு நீ ஒரு புஸ்தகத்தில் எழுது என்றும், 24. 4, 7. மோசே கர்த்தருடைய வார்த்தைகளை எல்லாம் எழுதிவைத்து..................உடன்படிக்கையின் புஸ்தகத்தை எடுத்து ஜனங்களின் காதுகேட்க வாசித்தான் என்றும், 34. 27, 28. கர்த்தர் மோசேயை நோக்கி இந்த வார்த்தைகளை நீ எழுது என்றார்..........அவன் உடன்படிக்கையின் வார்த்தைகளைப் பலகைகளில் எழுதினான் என்றும், எண்ணாகமம் 33. 2. மோசே தனக்குக் கர்த்தர் கட்டளையிட்டபடியே அவர்கள் புறப்பட்டபிரகாரமாக அவர்களுடைய பிரயாணங்களை எழுதினான் என்றும், உபா. 28. 58–61. நீ இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளின்படி எல்லாம் நடக்கக் கவனமாய் இராவிட்டால்...............கர்த்தர் நீங்காத பெரிய வாதைகளையும்...............இந்த நியாயப்பிரமாணப் புஸ்தகத்தில் எழுதியிராத எல்லாப் பிணியையும் வாதையையும் நீ அழியுமளவும் கர்த்தர் உன்மேல் வரப்பண்ணுவார் என்றும் சொல்லப்பட்டிருப்பதைக் கவனிக்கையில் மோசே ஒரு புஸ்தகத்தை அல்லது ஒரு புஸ்தகத்தில் எழுதினான் என்பது பிரத்தியட்சமாய் இருக்கிறது. நம் பஞ்சாகமம் என்று அழைக்கும் புஸ்தகமே அந்தப் புஸ்தகம் என்பதை மோசேக்குப் பின்பு ஆளுகைக்கு வந்த யோசுவாமுதல் ஆயிரம் வருஷங்களுக்கு மேலாக இருந்தவர்களால் எடுத்துக் காட்டப்பட்ட உதாரண வாக்கியங்களினாலும் தெளிவாகிறதும் அன்றி நம்முடைய கர்த்தரும் அவருடைய அப்போஸ்தலரும் அதைப்பற்றிச் சொல்லிய குறிப்புகளினாலும் பிரத்தியட்சமாய் இருக்கிறது. மேலும், மோசேயே பஞ்சாகமத்தை எழுதினான் என்பது அக அத்தாட்சியினாலும் விளங்கும்.

3. மோசே தன் காலத்துக்கு முந்தின சரித்திரங்களை முன்னே எழுதிவைக்கப்பட்ட சாதனங்களில் இருந்து எடுத்து எழுதினதாக அநேக நுட்பசாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். அப்படியானாலும் அது மோசேயின் கர்த்தாநிச்சயத்துக்கு விரோதம் இல்லையே. பற்பல பிரிவுகளிலே எலோயீம் எகோவா என்ற பல தேவநாமங்கள் வழங்கப்பட்டிருப்பதால் எலோயீம் என்ற நாமத்தை ஒரு சாதனத்தில் இருந்தும் எகோவா என்பதை இன்னொரு சாதனத்தில் இருந்தும் எடுத்திருக்கவேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். இதை நாம் அநுசரித்தாலும் அநுசரியாவிட்டாலும் வித்தியாசம் இல்லை. அது கல்விநுட்பத்துக்கு உரியது. ஆனால் மோசேயின் கர்த்தாநிச்சயம் அதால பெலவீனப்படுகிறதில்லை.



4. பஞ்சாகமத்தில் சில வாக்கியங்கள் பிந்தியகாலத்திலே உள்ளே பாய்ச்சப்பட்டிருப்பதுண்டு. அதினாலே மோசேயின் கர்த்தாநிச்சயத்துக்கு விரோதம் உண்டா என்று பார்த்தால் அப்படியும் இல்லை. அப்படிப் பாய்ச்சப்பட்ட வாக்கியங்கள் இல்லை என்று சாதிப்பது வீணாய் இருக்கும். அவைகளின் தொ[illegible]ரீகச் சொரூபம். மோசே அந்தப் புஸ்தகங்களை எழுதினவர் என்று நாம் வைத்துக்கொண்டால் அவனுடைய மரியாதையை நாம் கவனிக்கும்போது தன்னைப்பற்றிப் பின் சொல்லப்படுகிற வாக்கியங்களை அவன் எழுதியிருக்கமாட்டான் என்று எண்ணத்தகும். திருஷ்டாந்தமாக "மோசே என்பவன் எகிப்துதேசத்தில் பார்வோனுடைய ஊழியக்காரரின் பார்வைக்கும் ஜனங்களின் பார்வைக்கும் மிகவும் பெரியவனாய் இருந்தான்." (யாத். 11. 3.) மோசே தன்னைப்பற்றியும் தன் சகோதரனைப்பற்றியும் பின்வருகிற வகையாய் விசேஷித்து எழுதவுமாட்டான். திருஷ்டாந்தமாக: "இஸ்ரவேல் புத்திரரை அணியணியாய் எகிப்து தேசத்திலிருந்து நடத்திக்கொண்டுபோவதற்குக் கர்த்தரால் கட்டளைபெற்ற ஆரோனும் மோசேயும் இவர்களே. இஸ்ரவேல் புத்திரரை எகிப்தில் இருந்து நடத்திக்கொண்டுபோவதற்கு எகிப்தின் ராஜாவாகிய பார்வோனோடே பேசின மோசேயும் ஆரோனும் இவர்கள்தானே." (யாத். 6. 26, 27.) பின்னும் மோசே பின் வருகிறபிரகாரம் எழுதியிருக்கவும்மாட்டான். "கர்த்தர் மோசேயினிடத்தில் சொன்ன இந்தக் கற்பனைகள் எல்லாவற்றின்படியும் கர்த்தர் மோசேயைக் கொண்டு கட்டளைகொடுத்த நாள்முதற்கொண்டு அவர் உங்களுக்கும் உங்கள் சந்ததிகளுக்கும் நியமித்த எல்லாவற்றின்படியேயும் நீங்கள் செய்யாமல் ழ." (எண். 15. 22, 23.) "இஸ்ரவேல் புத்திரர்மேல் ராஜாக்கள் அரசாளுகிறதற்குமுன்னே எதோம் தேசத்திலே ஆண்ட ராஜாக்களாவன" (ஆதி. 36. 31.) என்ற வாக்கியத்தையும் அவன் எழுதி இருக்கமாட்டான். (யாத். 16. 35.) இந்த வாக்கியங்கள் எல்லாம் பிந்தியகாலத்தில் கூட்டப்பட்டிருக்கும். "இஸ்ரவேல் புத்திரர் குடியிருப்பான தேசத்துக்கு வரும்மட்டும் நாற்பதுவருஷமளவும் மன்னாவைப் புசித்தார்கள்; அவர்கள் கானான் தேசத்தின் எல்லையில் சேரும்வரைக்கும் மன்னாவைப் புசித்தார்கள்." இந்த வாக்கியத்தை யோசு. 5. 12ல், "அவர்கள் தேசத்தின் தானியத்திலே புசித்த மறுநாளிலே மன்னா பெய்யாமல் ஒழிந்தது; அதுமுதல் இஸ்ரவேல் புத்திரருக்கு மன்னா இல்லாமல்

போய் அவர்கள் கானான்தேசத்துப் பலனை அந்த வருஷத்தில் தானே புசித்தார்கள்" என்று சொல்லியதோடே ஒத்துப் பார்த்தால் இதைப்பற்றிக் குறிப்பாகச் சொல்லியிருக்கிறது என்று அறியலாம். மன்னாவானது மோசேயின் மரணத்துக்குப் பின்புதான் பெய்யாமல் நின்றுபோனது. மோசேயின் மரணத்தைப்பற்றிய சங்கதியும் (உபா. 34. அதி.) பிந்தியகாலத்தில் வேறொருவரால் எழுதப்பட்டிருக்கவேண்டும். இப்படிப்பட்ட வாக்கியங்கள் திவ்விய அதிகாரம் பெற்ற ஆள் அல்லது ஆட்களால் சேர்க்கப்பட்டிருக்கவேண்டியது என்று எண்ணத்தகுமானதாய் இருக்கிறது. ஏனென்றால், அந்தப் புத்தகம் பின்வந்த தீர்க்கதரிசிகளாலும் நம்முடைய ஆண்டவராலும் அவருடைய அப்போஸ்தலர்களாலும் திவ்விய அதிகாரம் உள்ளதென்று அங்கீகரிக்கப்பட்டதை நாம் அறிந்திருக்கிறோம். வாக்கியங்கள் இப்படிப் பிந்தியகாலத்திலே சேர்க்கப்பட்டிருந்தாலும் மோசேயின் கர்த்தாநிச்சயத்தைப்பற்றி எவ்வகையிலும் விகற்பமாய்ச் சொல்ல ஏதுவில்லை. எஸ்றாவைப்போல திவ்விய அருள்பெற்ற தீர்க்கதரிசிகள் முதலானவர்கள் பஞ்சாகமத்தைப் பேர்த்து எழுதினபோது வாசிப்பவர்களுக்குப் பிரயோஜனமாகச் சில இடங்களில் வியாக்கியானமான சிலவைகளைச் சேர்த்திருக்கலாம். தேவனுடைய மனிதர் தேவஆவியின் ஏவுதலால் அப்படிப்பட்ட வாக்கியங்களைச் சேர்த்ததினால் அது பஞ்சாகமத்தின் பொருளை வேற்றுமைப்படுத்தமாட்டாது. அது உள்ளபடி மோசே எழுதின ஆகமம் எனத்தகும். அப்படியே புதிய ஏற்பாட்டை எழுதினவர்களும் சொன்னார்கள்.[1]

பஞ்சாகமத்தின் கர்த்தாநிச்சயம் ரூபிக்கப்பட்டிருக்கிறது என்று நாம் ஒப்புக்கொண்டு அந்த ஆகமத்தில் அடங்கிய ஒவ்வொரு புத்தகத்தையும்பற்றிப் பார்ப்போமாக.

## 1. ஆதியாகமம்.

1. நாம் முன் சொல்லி இருக்கிறபடி மோசேயின் ஐந்து ஆகமங்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிற நாமங்கள் கிரேக்கத்

[1] பூர்வகாலத்து வழக்கம் இக்காலத்து வழக்கம்போல் அல்ல. இக்காலத்தில் ஒரு விசேஷித்த காரியத்தைக் காட்டவேண்டுமானால் கவனிப்பு போடப்படும். உபாகமத்தின் கடைசியில் மோசேயின் மரணம் யாதொரு கவனிப்பும் போடாதபடிக்கு கூட்டப்பட்டிருக்கிறதைப் பார்க்கிறோம். பிந்தின தலைமுறையாரை வஞ்சிக்கும் நோக்கமாய் அது எழுதப்பட்டதானால் அப்படி யாராவது எழுதுவார்களா? எழுதமாட்டார்களே.



திருப்புதலில் இருந்து உண்டானது. (ஜெனிசிஸ்) என்ற பேருக்கு உற்பத்தி என்று அர்த்தம். எபிரெயர் இந்தப் புஸ்தகத்தை பெரிஷித் (ஆதியிலே) என்று அழைத்தார்கள். நம்முடைய பாஷையில் இது **ஆதியாகமம்** என்று எபிரெயபேருக்கொப்பந்தம் அழைக்கப்படுகிறது. இது யூதரால் பன்னிரண்டு படலங்களாயும் நாற்பத்துமூன்று பிரிவுகளாயும் பிரிக்கப்பட்டது. நம்முடைய வேதாகமத்தில் இது ஐம்பது அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

2. இது பொதுப்பட இரண்டுபங்குகளாகப் பிரிக்கப்படும்.

I. மனிதருடைய ஆதி சரித்திரம். அதி. i–xi.
   1. சிருஷ்டிப்புமுதல் ஜலப்பிரளயம்வரையும் உள்ள உலகசரித்திரம். அதி. i–viii.
   2. ஜலப்பிரளயம்முதல் ஆபிரகாம் அழைக்கப்பட்டது வரையும் உள்ள சரித்திரம். அதி. ix–xi.

II. இஸ்ரவேலருடைய ஆரம்ப சரித்திரம்.
   1. ஆபிரகாமின் சரித்திரம். அதி. xii–xxv. 18.
   2. ஈசாக்கின் சரித்திரம். அதி. xxv. 19–xxviii. 10.
   3. யாக்கோபின் சரித்திரம். அதி. xxviii. 11–l.

இந்தப் புத்தகம் யோசேப்பு மரித்து அடக்கம்செய்யப்பட்ட சங்கதியோடே முடிகிறது. வழக்கமாய் ஒப்புக்கொள்ளப்படுகிற கணக்கின்படி இதில் அடங்கிய சங்கதிகளின் காலம் 2369 வருஷங்கள். ஹேல்ஸ் கணக்கின்படி 3619 வருஷங்கள்.

3. இந்தப் புத்தகத்தில் அடங்கிய சங்கதிகள் முடியாத தர்க்கங்களைப் பிறப்பித்திருக்கிறது என்பதை இங்ஙனம் சொல்வது அவசியம் இல்லை. சிருஷ்டிப்பின் சங்கதியும் மனிதன் பாவத்தில் விழுந்த சங்கதியும் அடங்கிய முதல் மூன்று அதிகாரங்களும் தலைமுறைதோறும் தர்க்கங்களுக்கு ஏதுவாகவே வந்திருக்கிறது. சிலர் இந்த அதிகாரங்களும் அவைகளுக்குப் பின் வருகிற சிலவைகளும் கட்டுக்கதைகள் என்று எண்ணுகிறார்கள். ஆனால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் திவ்விய அதிகாரத்தை விசுவாசிக்கிறவன் இந்த எண்ணத்தை அங்கீகரிக்கமாட்டான். விசுவாசிகளுக்குள்ளே சரித்திரத்தின் உண்மையைப்பற்றி சமுசயம் இல்லை. அதின் வியார்த்தியைப்பற்றி மலைவுண்டு. திருஷ்டாந்தமாக "ஆதியிலே" (ஆதி. 1. 1.) என்ற வார்த்தை ஆதிமனிதர் சிருஷ்டிக்கப்படுவதற்குச் சற்றுமுன் உள்ள காலத்தைக் குறிக்கும் என்று எண்ணப்படுவது உண்டு.

ஆனால், அது சிருஷ்டிப்புக்கு முன்னுள்ள எண்ணிறந்த காலத்தையும் குறிக்கலாம். சிருஷ்டிப்பின் "ஆறுநாள்" என்பது நமக்குள்ளே வழங்கப்பட்டு வருகிற ஆறுநாட்களைக் குறிக்கலாம் அல்லது நீண்ட காலங்களுள்ள பல யுகங்களைக் குறிக்கலாம். ஜலப்பிரளயம் உலகம் அனைத்தின்மேலும் வந்தது என்று சிலரும், வேறுசிலர் அது தேவனுடைய நோக்கம் நிறைவேறத்தக்கதாக சில இடமட்டுமாத்திரம் சென்றிருக்கவேண்டும் என்றும் எண்ணுவது உண்டு. இப்படிப்பட்டவைகள் எல்லாம் வியாக்கியானத்துக்கு உரியவைகள். நட்பசாஸ்திரத்தில் இருந்தும் லௌகீகசாஸ்திரத்தில் இருந்தும் நமக்குக் கிடைக்கும் உதவியைக்கொண்டு நாம் நன்றியறிதலோடே அவைகளுக்கு ஏற்ற உத்தரவைக் கற்றறிந்துகொள்ளவேண்டியவர்களாய் இருக்கிறோம். வெளிப்படுத்தலை அருளின தேவனே இயற்கைக்கும் தேவனாய் இருக்கிறார். கல்வி சாஸ்திரங்கள் இயற்கையைப்பற்றியே பேசுகின்றன. தேவன் தமக்குத் தாமே எதிரிடையானவைகளைச் செய்யார். இயற்கைக்குரிய சாஸ்திரங்களைச் சரியானபடி அறிந்து வெளிப்படுத்தலின் போதனைகளைத் தக்கபடி வியாக்கியானம் செய்கிறதாய் இருந்தால் இரண்டும் ஒன்றுக்கொன்று இசைவாய் இருப்பதைக் காணலாம். இயற்கை சாஸ்திரம் இன்னம் சாத்திய சித்தாந்த தீர்மானமாக ஒன்றும் உரைக்கவில்லை என்பது ஒரு விசேஷித்த காரியம். வியாக்கியானமும் அப்படியே இருக்கிறது. மெய்யான **சாஸ்திரம்** எப்போதும் பணிவுள்ளதாய் இருக்கும்; அது பிடிவாதம் செய்யாது; துடுக்காய் இராது; முயற்சிசெய்து பொறுமையாய் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும். மெய்யான **விசுவாசமும்** இப்படிப்பட்ட சில இலட்சணங்களுள்ளதாய் இருக்கிறது.

4. இந்தப் புத்தகத்தில் அடங்கிய சரித்திரத்தையும் காலக்கணிதத்தையும்பற்றிய தர்க்கங்களைப்பற்றி இங்ஙனம் காட்ட ஏதுவில்லை. அவைகளில் சிலவை இன்னமும் தெளிவிக்கக்கூடாதவைகளாய் இருக்கின்றன. ஒரு காலத்தில் மயக்கமாய்க் காணப்பட்டவைகள் இப்போது யாவருக்கும் மனத்திருப்தி உண்டாகத்தக்க வண்ணமாய்த் தெளிவாக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் புத்தகத்தில் அடங்கிய சங்கதிகள் **யாவும்** மிகவும் உன்னதமான அதிகாரம் பெற்றிருக்கிறதென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இப்படிப்பட்ட நீண்ட காலத்துச் சரித்திரங்கள் அவ்வளவு சுருக்கமான அதிகாரங்களுக்குள் அடக்கிக் காட்டியிருப்பதைப்பார்க்கில் அவைகளில் மயக்கம் காணப்படும் என்பது அசாத்தியம் அல்லவே.



5. இந்தப் புத்தகத்தில் அடங்கிய தர்க்கத்துக்குரிய காரியங்களை நாம் இப்போது விட்டுவிட்டு அதின் போதனைக்குரியவைகளைப் பார்ப்போமாக. இதில் காட்டப்பட்டிருக்கிற முக்கிய காரியம் தேவனுடைய ஏகத்துவம். அதற்கு இரண்டாவது, மனிதஜாதியார் யாவரும் ஒரே வம்சத்திலிருந்து தோன்றினவர்கள் என்பதே. இந்தப் புத்தகத்தில் சிருஷ்டிப்பைப்பற்றியும் மனிதன் பாவத்தில் விழுந்ததைப்பற்றியும் காட்டியிருக்கிறது. அதோடே பாவத்தினால் உண்டான கேட்டினின்று மனிதரை மீட்கும் இரட்சகரைப் பற்றிய வாக்குத்தத்தமும் அதில் காட்டப்பட்டிருக்கிறது. இந்தப் புத்தகமின்றி மனிதர் அந்தகாரத்தில் இருக்கிறவர்கள்போல் காணப்படுவார்கள். தாங்கள் எப்படி வந்தவர்கள் என்றும் எங்கே போகிறவர்கள் என்றும் அறியாதவர்களாய் இருப்பார்கள். இதின் உதவியின்றி சாஸ்திரிகள் 4000 வருஷங்களாக கண்டுபிடிக்கக்கூடியதைவிட ஒரு பிள்ளை இதின் முதல் ஏட்டை வாசிப்பதினால் ஒரு மணிநேரத்தில் அதிகமானவைகளைக் கற்றுக்கொள்ளும். இவ்வாகமத்திலே பாவமில்லாத காலத்தில் விவாக நிலைமையும் ஓய்வுநாள் ஆசரிப்பும் ஏற்படுத்தப்பட்டது என்று கற்றுக்கொள்ளுகிறோம். தேவனுடைய ஞானம், வல்லமை, இரக்கம், நீதி, தயவு என்பவைகளையும் அறிந்துகொள்ளலாம். மேலும் அவர் ஜெபத்தைக் கேட்கிறவர் என்றும், தம்முடைய ஜனங்களைக்கொண்டு மற்றவர்களை ஆசீர்வதிக்கிறவர் என்றும், யாவற்றையும் தமது சித்தத்துக்கு ஏற்றபடி நடத்துகிறவர் என்றும், வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்றுகிறவர் என்றும், தேவனுடைய ஆலோசனைகள் அளவறுக்கப்படக் கூடாதவைகள் என்றும், பற்பல முகாந்தரங்களைக்கொண்டு மனிதர்களைத் தமக்குக் கீழ்ப்படியப் பண்ணுகிறவர் என்றும் அறிந்துகொள்ளலாம்.

மீளவும் மனிதர் யாவரும் சோதனைக்கு ஏதுவானவர்கள் என்றும், அவர்களில் அநேகர் சோதனைக்கு உட்பட்டு பாவத்தில் விழ ஏதுவாய் இருக்கிறார்கள் என்றும், அவர்கள் எச்சரிக்கப்பட்டும் பாவத்தில் விழ ஏதுவாய் இருக்கிறார்கள் என்றும், அவர்கள் தங்களையே வஞ்சித்து மோசம்போகிறவர்கள் என்றும், பாவத்திலே அவர்கள் மிஞ்சி நடக்கிறவர்கள் என்றும், பாவத்துக்குத் தண்டனையாக அநேகம் துர்ப்பலன்கள் உண்டாகிறது என்றும், மெய்ப்பாக்கியத்தைப்பற்றி அவர்கள் தப்பாய் எண்ணுகிறார்கள் என்றும், மனிதர் நிச்சயிக்கிற நன்மை அடிக்கடி அவர்களுக்குக் கிடையாமல் போகிறது என்றும், துன்பத்தினாலே அவர்களுக்கு அந்தப் பலன் வருகிறது என்றும் அறிந்துகொள்ளலாம்.

ஆதாம் மெல்கிசேதேக்கு ஈசாக்கு முதலானவர்கள், கிறிஸ்துவுக்கு முன்னடையாளமாய் இருந்தார்கள். ஆபிரகாமின் இரண்டு குமாரர் இரண்டு உடன்படிக்கைகளுக்கு முன்னடையாளம்.

## ஆதியாகமத்தில் இருந்து புதிய ஏற்பாட்டில் குறிப்பிக்கப்பட்டிருக்கிற வாக்கியங்கள்.

| | | | |
|---|---|---|---|
| அதி. | 1. | 1. | எபி. 11. 3. |
| ,, | ,, | 27. | மாற். 10. 6. |
| ,, | 2. | 3. | எபி. 4. 4. |
| ,, | ,, | 7. | 1 கொரி. 15. 45. |
| ,, | 3. | 4. | 2 கொரி. 11. 3. |
| ,, | ,, | [illegible] | 1 தீமோ. 2. 14. |
| ,, | ,, | 1[illegible] | யோவா. 8. 44. 1 யோ. 3. 8. |
| ,, | 4. | 4. | எபி. 11. 4. |
| ,, | ,, | 8. | 1 யோவா. 3. 12. |
| ,, | 5. | 24. | எபி. 11. 5. |
| ,, | 6. | 12. | 1 பேது. 3. 20. |
| ,, | ,, | 14. | எபி. 11. 7. |
| ,, | 7. | 7. | மத். 24. 38. |
| ,, | 12. | 1. | அப். 7. 3. எபி. 11. 8. |
| ,, | ,, | 3. | கலா. 3. 8. |
| ,, | 14. | 18. | எபி. 7. 1. |
| ,, | 15. | 5. | ரோ. 4. 18. |
| ,, | ,, | 6. | ரோ. 4. 3. யாக். 2. 23. |
| ,, | ,, | 13, 14. | அப். 7. 6, 7. |
| ,, | 16. | 15. | கலா. 4. 22. |
| ,, | 17. | 5. | ரோ. 4. 17. |
| ,, | 18. | 10. | ரோ. 9. 9. |
| ,, | ,, | 12. | 1 பேது. 3. 6. |
| ,, | 19. | 25. | 2 பேது. 2. 6. |
| ,, | ,, | 26. | லூக். 17. 32. |
| ,, | 21. | 10. | கலா. 4. 30. |
| ,, | ,, | 12. | ரோ. 9. 7. |
| ,, | 22. | 1–10. | எபி. 11. 17. யாக். 2. 21. |
| ,, | ,, | 16, 17. | எபி. 6, 13, 14. |
| ,, | ,, | 18. | அப். 3. 25. கலா. 3. 16. |
| ,, | 25. | 23. | ரோ. 9. 12. |
| ,, | ,, | 33. | எபி. 12. 16. |
| ,, | 46. | 27. | அப். 7. 14. |
| ,, | 48. | 15–18. | எபி. 11. 21. |
| ,, | 50. | 24, 25. | எபி. 11. 22. |



## 2. யாத்திராகமம்.

1. நாம் யாத்திராகமம் என்று அழைக்கிற இந்த ஆகமம் எபிரெய பாஷையிலே "நாமங்கள் இவைகளே" என்று அர்த்தங்கொள்ளுகிற (வீ-எலீ-ஷிமோத்) என்று ஆரம்பிக்கிறதால் யூதர்கள் இதற்கு "நாமங்களின் ஆகமம்" என்று பேர்தரித்தார்கள். இஸ்ரவேலர் எகிப்தில் இருந்து புறப்பட்டு பிரயாணம் செய்த சரித்திரம் இந்த ஆகமத்தில் அடங்கியிருப்பதால் செப்துவஜென்ற் மொழிபெயர்ப்பில் "யாத்திரை" அல்லது "புறப்படுதல்" என்று அர்த்தங்கொள்ளுகிற (எக்சடஸ்) என்று பேர் கொடுக்கப்பட்டது. அந்த நாமத்துக்கு இசைவாக தமிழிலும் இவ்வாகமத்துக்கு பேர் கொடுக்கப்பட்டிருக்கிறது. யூதர்கள் இதை பதினொரு படலங்களாயும் இருபத்தொன்பது பிரிவுகளாயும் பிரித்தார்கள். நமக்குள் இது நாற்பது அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

2. இந்தப் புத்தகத்தில் அடங்கிய சங்கதிகளை மூன்று பங்குகளாகப் பிரிக்கலாம்.

I. இஸ்ரவேலர் எகிப்தை விட்டுப் புறப்படுவதற்குச் செய்யப்பட்ட ஆயத்தங்கள். (அதி. i–xii. 30.)

II. அவர்கள் எகிப்தில் இருந்து சீனாய்மலைவரையும் செய்த பிரயாணம். (அதி. xii. 31–xix. 2.)

III. நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதும் தேவாதிபத்தியம் ஸ்தாபிக்கப்பட்டதுமான சங்கதிகள். (அதி. xix. 3–xl.)

இதில் யோசேப்பு மரணம் முதல் ஆலயக்கூடாரம் நிலைநிறுத்தப்பட்டதுவரையும் உள்ள 145-வருஷ சங்கதிகள் அடங்கி இருக்கின்றன. 215 அல்லது 360-வருஷ சரித்திரம் அடங்கியிருக்கிறதாகச் சொல்வாரும் உண்டு.

3. வேதாகமமானது தேவ இலட்சணங்கள் மனிதனுடைய குற்றகுணங்கள் மனிதனுடைய மீட்பின் கிரியை ஆகிய மூன்று விசேஷித்த காரியங்களைக் காட்டும் நோக்கமாய் எழுதப்பட்டிருக்கிறது; அவைகளை இவ்வாகமத்தில் திருஷ்டாந்தப் பூர்வமாய்க் கண்டறியலாம்.

எகிப்தில் நடந்த அற்புதமான வாதைகளைப் பற்றி ஆட்சேபனைகள் சொல்லப்படுவதுண்டு; ஆனால் அவை நிராதாரமுள்ளவைகள். அற்பமாய் எண்ணப்பட்ட ஜாதியில் ஒரு அந்நியன்

தனக்குத் தூம் இல்லாமலும், தான் மீட்கும்படி வந்த ஜனங்களின் உதவி இல்லாமலும், இயற்கையான சாதுரிய சாமர்த்தியம் இல்லாமலும், ஐசுவரியத்தினால் உண்டாகும் அதிகாரத்திறம் இல்லாமலும், பராக்கிரமமும் கோபதாபமுமுள்ள ராஜாவின் கண் முன்பாகவும் விரோதம் சாதித்து சுயாயத்தை விரும்பினவர்களுமான ஜனத்தின் முன்பாகவும் அடிமைப்பட்டிருந்த ஜாதியாரை ஜெயகம்பீரமாய் நடத்திக்கொண்டு போனதற்குச் சரியான ஆதாரம் காட்டாவிடில் இவ்வாகமத்தில் காட்டப்பட்டிருக்கிற அற்புதங்களைவிட அதுவே பெரிய அற்புதம் என்று சொல்லவேண்டியதாகும். சாதாரண நியாயத்தின்படி இரண்டில் சிறியதையாகிலும் நாம் ஒப்புக்கொள்ளவேண்டியதாய் வருவதால், தெய்வீக அதிகாரமாகிய அற்புதம் செய்யப்படாவிட்டால் ராஜாவின் பிடிவாதமும் அவன் ஜனங்களின் வெறுப்பான எண்ணமும் மேற்கொள்ளப்படமாட்டாது என்று சொல்லத் துணியலாமே. இஸ்ரவேலர் எகிப்தில் இருந்து சிவந்த சமுத்திரம் வனாந்தரம் யோர்தான்நதி முதலியவற்றின் வழியாய்ப் பிரயாணம் செய்து கானான் தேசத்திற்குள் பிரவேசித்தது, புதிய ஏற்பாட்டில் சொல்லியிருப்பதின்படி திருச்சபையானது இவ்வுலகமாகிய வனாந்தரவழியாய் மோட்சபதவி சேருவதைக் குறிக்கும். இவ்வாகமத்தில் கிறிஸ்துவுக்கு முன்னடையாளமாகக் காட்டப்பட்டிருக்கிற ஆட்கள், பொருள்கள்;— மோசே, ஆரோன், பஸ்கா ஆட்டுக்குட்டி, அடியுண்ட கன்மலை, மன்னா, கிருபாசனம் முதலியவைகளே. திருச்சபைக்கு முன்னடையாளமானவைகள்; ஆசாரியர், யூதசபை, முட்செடி, ஆசரிப்புக்கூடாரம் முதலியவைகளே.

## யாத்திராகமத்தில் இருந்து புதிய ஏற்பாட்டில் குறிப்பிக்கப்பட்டிருக்கிற வாக்கியங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| அதி. | 1. | 4. | அப். 7. 15. | |
| ,, | ,, | 7. | அப். 7. 18. | |
| ,, | 2. | 2. | எபி. 11. 23. | |
| ,, | ,, | 9. | அப். 7. 21. | |
| ,, | ,, | 11. | எபி. 11. 24. | அப். 7. 23, 24. |
| ,, | ,, | 13, 14. | அப். 7. 26. | |
| ,, | 3. | 2. | அப். 7. 30. | |
| ,, | ,, | 5–10. | மத். 22. 32. | மாற். 12. 26. |
| | | | அப். 7. 32–34 | |
| ,, | 9. | 16. | ரோ. 9. 17. | |



| | | | | |
|---|---|---|---|---|
| அதி. | 12. | 7. | எபி. 12. 24. | |
| ,, | ,, | 46. | யோவா. 19. 36. | |
| ,, | 13. | 2. | லூக். 2. 23. | |
| ,, | 14. | 22. | 1 கொரி. 10. 1. | எபி. 11. 29. |
| ,, | 16. | 15. | யோவா. 6. 31–49. | 1 கொரி. 10. 3. |
| ,, | ,, | 18. | 2 கொரி. 8. 14. | |
| ,, | 17. | 6. | 1 கொரி. 10. 4. | |
| ,, | 19. | 6. | 1 பேது. 2. 9. | |
| ,, | ,, | 12, 13. | எபி. 12. 20. | |
| ,, | 20. | 12, ஞ. | மத். 15. 4; 19. 18, 19. | |
| | | | மாற். 7. 10; 10. 19. | லூக். 18. 20. |
| | | | ரோ. 7. 7; 13. 9. | எபே. 6. 2, 3. |
| | | | யாக். 2. 11. | |
| ,, | 21. | 17. | மத். 15. 4. | மாற். 7. 10. |
| ,, | 22. | 28. | அப். 23. 5. | |
| ,, | 24. | 6, 8. | எபி. 9. 19–22. | |
| ,, | 25. | 40. | எபி. 8. 5. | |
| ,, | 26. | 35. | எபி. 9. 2. | |
| ,, | 32. | 1. | அப். 7. 40. | |
| ,, | ,, | 6. | 1 கொரி. 10. 7. | |
| ,, | 33. | 19. | ரோ. 9. 15. | |

## 3. லேவியராகமம்.

1. இந்த ஆகமத்தில் எபிரெயு பாஷையிலே "அவர் கூப்பிட்டார்" என்று அர்த்தங்கொள்ளுகிற வாயிக்ரா என்று துவக்கி இருப்பதால் யூதர்கள் இதற்கு அந்தப் பேரை வழங்கினார்கள். இதில் லேவிகோத்திரத்தாருடைய ஊழியங்களைப் பற்றிச் சொல்லியிருப்பதால் பழைய ஏற்பாட்டை கிரேக்கில் மொழிபெயர்த்தவர்கள் இதற்கு "லேவியராகமம்" என்று பெயரிட்டார்கள். அந்தப் பெயரே நமக்குள்ளும் வழங்கப்படுகிறது. யூதர்கள் இதைப் பத்துப் படலங்களாயும் இருபத்து மூன்று பிரிவுகளாயும் பிரித்தார்கள். நமக்குள் இருபத்தேழு அதிகாரங்களாக வகுக்கப்பட்டிருக்கிறது.

2. இவ்வாகமத்தை ஐந்து பங்குகளாகப் பிரிக்கலாம்.

I. பலிகளைப் பற்றிய சட்டங்கள் (அதி. i–vii.). தகனபலி (i. அதி.), போஜனபலி (ii. அதி.), சமாதானபலி (iii. அதி.), அறியாமல் செய்த குற்றத்துக்குச் செலுத்தும் பாவநிவாரணபலி (iv, v. அதி.), பலி செலுத்தும் விஷயத்தில் ஆசாரியருடைய கடமைகளைப்பற்றிய பிரமாணம (vi, vii. அதி.).

II. ஆசரிப்புக் கூடாரம் பிரதிஷ்டையாக்கப்பட்டதும் ஆரோனும் அவன் குமாரரும் ஆசாரிய உத்தியோகத்துக்காக அபிஷேகம்பண்ணப்பட்டதும் கர்த்தருக்கு முன்பாக நாதாபும் அபியூவும் அந்நிய அக்கினியை உபயோகித்ததற்காகக் கொல்லப்பட்டதுமான சங்கதிகள். (viii–x. அதி.)

III. புசிக்கத்தக்கவைகள் புசிக்கத்தகாதவைகளான ஜெந்துக்களைப்பற்றியும் ஜனங்கள் ஆசரிப்புக்கூடாரம் ஆசாரியர் முதலியவர்களுடைய சுத்திகரிப்பைப் பற்றியும் உள்ள பிரமாணங்கள். (xi–xvi. அதி.)

IV. இஸ்ரவேலருக்கும் மற்ற ஜாதியாருக்கும் இருக்கும் வித்தியாசத்தைக் காட்டத்தக்க விசேஷித்த நோக்கமாய் ஏற்படுத்தப்பட்ட பிரமாணங்கள். (xvii–xx. அதி.)

V. ஆசாரியரையும் பலிகளையும் பற்றியும், ஏழு பெரிய பண்டிகைகளாகிய ஓய்வுநாள் பஸ்கா முதல்விளைச்சல்பண்டிகை பெந்தெகோஸ்தே எக்காளப்பண்டிகை பாவநிவிர்த்தியின் சிறந்தநாள் கூடாரப்பண்டிகை[1] ஆகிய இவைகளைப் பற்றியும், பற்பல வாக்குத்தத்தங்களையும் பயமுறுத்துதல்களையும் பொருத்தனைகளையும் பிரார்த்தனைகளையும் தசமபாகத்தையும் பற்றியும் விதிக்கப்பட்ட சட்டங்கள். (xxi–xxvii.)

இந்த ஆகமம் இஸ்ரவேலர் எகிப்தை விட்டுப் புறப்பட்ட இரண்டாம் வருஷம் முதலாம் மாசத்தில் நடந்த சங்கதிகளைக் காட்டுவதால் ஒரு மாசக்காலசரித்திரம் உடையதாய் இருக்கிறது.

3. இவ்வாகமத்தில் நியமிக்கப்பட்டிருக்கிற பலிகளும் காணிக்கைகளும் இதற்கு அநேக நூற்றாண்டுகளுக்குப் பின்பு நம்முடைய இரட்சகர் நிறைவேற்றின பிராயச்சித்தத்துக்கு அடையாளமாய் இருக்கின்றன. எபிரெயர் நிருபத்திலே இதைப் பற்றி விஸ்தாரமாய்ப் பேசப்பட்டிருக்கிறது. அந்த நிருபம் லேவியராகமத்துக்குத் திவ்விய அருள்பெற்ற வியாக்கியானமாய் இருக்கிறது. அதிலே பலிகள் சடங்குகளின் சரியான கருத்துகளைக் கண்டறியலாம்.

---

[1] எபிரெயருடைய பண்டிகைகள் காலங்களைப்பற்றி E அநுபந்தம் பார்க்க.



## லேவியராகமத்தில் இருந்து புதிய ஏற்பாட்டில் குறிப்பிக்கப்பட்டிருக்கிற வாக்கியங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அதி. | 4. 21. | எபி. | 13. 11. | | |
| ,, | 11. 44. | 1 பே. | 1. 16. | | |
| ,, | 12. 8. | லூக். | 2. 21–24. | | |
| ,, | 14. 3. | மத். | 8. 3, 4. | | |
| ,, | 16. 14–16. | எபி. | 9. 13. | | |
| ,, | ,, 17. | லூக். | 1. 10. | | |
| ,, | 18. 5. | ரோ. | 10. 5. | கலா. | 3. 12. |
| ,, | 19. 18. | மத். | 19. 19; 22. 39. | | |
| | | மாற். | 12. 31. | லூக். | 10. 27. |
| | | ரோ. | 13. 9. | கலா. | 5. 14. |
| | | யாக். | 2. 8. | | |
| ,, | 20. 10. | யோவா. | 8. 5. | | |
| ,, | 23. 34–36. | யோவா. | 7. 2–37. | | |
| ,, | 26. 12. | 2 கொரி. | 6. 16. | | |

## 4. எண்ணாகமம்.

1. எபிரெயு வேதாகமத்திலே "வனாந்தரத்தில்" என்று அர்த்தங்கொள்ளுகிற ஐந்தாம் வார்த்தையாகிய **பமிட்பார்** என்கிற பேர் இந்த ஆகமத்துக்கு யூதர்களால் வழங்கப்பட்டது. "அவர் பேசினார்" என்று கருத்துகொள்ளுகிற **வாயடபாரீ** என்று இதற்குப் பேர் கொடுக்கப்பட்டதும் உண்டு. நமக்குள் வழங்குகிற பேர் கிரேக்கப்பேரிலிருந்து வந்தது. இந்த ஆகமத்தின் துவக்கத்தில் காட்டப்பட்டிருக்கிறபடி சீனாய்மலையிலும் அதின் கடைசியில் வருகிறபடி மோவாபின் சமபூமியிலும் இஸ்ரவேலர் எண்ணப்பட்டதால் இந்தப் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. யூதர்கள் இதைப் பத்துப்படலங்களாயும் முப்பத்திரண்டு பிரிவுகளாயும் பிரித்திருந்தார்கள். நம்முடைய வேதாகமத்தில் முப்பத்தாறு அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

2. இவ்வாகமத்தை நாலுபங்குகளாக வகுக்கலாம்.

I. ஜனங்கள் தொகையிடப்பட்டது. (அதி. i–iv.)

II. பல சடங்குகள் ஏற்படுத்தப்பட்டது. (அதி. v–x. 10.)

III. சீனாயிலிருந்து மோவாப்தேசம் வரைக்கும் அவர்கள் செய்த பிரயாணங்கள். வழியில் அவர்கள் காட்டின

எட்டு முறுமுறுப்புகள் முதலிய சம்பவங்கள். (அதி. x. 11–xxi. 20.)

IV. மோவாபின் சமபூமியில் நடந்த சங்கதிகள். (அதி. xxi. 21–xxxvi. அதி.)

இஸ்ரவேலர் எகிப்தை விட்டுப் புறப்பட்ட இரண்டாம் வருஷம் இரண்டாம் மாசம் முதல் நாற்பதாம் வருஷம் பதினொராம் மாசம்வரையும் இடையேயுள்ள முப்பத்தெட்டு வருஷம் பத்து மாசங்களில் நடந்த சங்கதிகள் இவ்வாகமத்தில் காட்டப்பட்டிருக்கிறது. இதில் எழுதப்பட்டிருக்கிற அநேக சங்கதிகள் இரண்டாம் வருஷத்திலும் முப்பத்தெட்டாம் வருஷத்திலும் சம்பவித்தன. இடையிலுள்ள வருஷங்களில் மிகச் சொற்பமான காரியங்கள்மாத்திரம் நடந்ததாகப் பார்க்கிறோம்.

3. எண்ணாகமத்தில் எங்கும் தேவனுடைய ஆச்சரியமான செயல்களையும் பராமரிப்பையும் காணலாம். தேவன் தம்முடைய நோக்கங்களுக்கும் பிரமாணங்களுக்கும் இசைவாய் நீதியையும் இரக்கத்தையும் விளக்குகிறவர் என்பதையும் இஸ்ரவேலருடைய பிரயாணத்தில் அவர் தமது உருக்க இரக்கங்களைப் பாராட்டிப் பாதுகாக்கிறவர் என்பதையும் அவர்கள் அவருக்கு விரோதமாய் முறுமுறுத்துக் கலகம்பண்ணி அடிக்கடி அவருக்குக் கோபத்தை மூட்டினபோது அவர்களுடைய அவிசுவாசத்தின் நிமித்தம் "என் ஓய்வுக்குள் பிரவேசிப்பதில்லை" என்று நீதியாய்த் தீர்ப்புச்செய்கிறவர் என்பதையும் கண்டுகொள்ளுகிறோம். (எபி. 3. 18.)

4. இவ்வாகமத்தில் இஸ்ரவேலர் இரண்டுதரம் தொகையிடப்பட்டதை வாசிக்கிறோம். முதலாவது அவர்கள் புறப்பட்ட இரண்டாம் வருஷத்துவக்கத்தில் சீனாயிலும் இரண்டாவது நாற்பது வருஷப் பிரயாணத்தின் கடைசியில் மோவாபின் சமபூமியிலும் இலக்கம் பார்க்கப்பட்டார்கள். அதில் முந்தின தொகையிலும் பிந்தின தொகை குறைவாய் இருக்கிறது. அவர்களுடைய அவிசுவாசத்துக்காக ஒரு தலைமுறையார் முழுமையும் வாக்குத்தத்த தேசத்தில் பிரவேசியாதபடி விலக்கப்பட்டதோடே அடிக்கடி தேவகோபாக்கினையையும் தங்கள்மேல் வருவித்துக்கொண்டதால் அவர்கள் எகிப்தில் உபத்திரவப்பட்டபோது அதிசயமாய்ப் பெருகினதற்கு எதிரிடையாய்ச் சிறுத்துப்போகும்படி நேரிட்டது என்று அறியலாம். இவ்வாகமத்தில் வெண்கலசர்ப்பம் அடியுண்ட கன்மலை கிறிஸ்துவுக்கு முன்னடையாளமாய் இருக்கின்றன.



## எண்ணாகமத்தில் இருந்து புதியஏற்பாட்டில் குறிப்பிக்கப்பட்டிருக்கிற வாக்கியங்கள்.

| | |
|---|---|
| அதி. 8. 17. | லூக். 2. 23. |
| ,, 9. 17–19. | 1 கொரி. 10. 1. |
| ,, 11. 4. | 1 கொரி. 10. 6. |
| ,, 12. 7. | எபி. 3. 2. |
| ,, 14. 27. | 1 கொரி. 10. 10. |
| ,, ,, 29. | எபி. 3. 17. |
| ,, 16. 5. | 2 தீமோ. 2. 19. |
| ,, 19. 3. | எபி. 13. 11. |
| ,, 20. 8. | 1 கொரி. 10. 4. |
| ,, 21. 5, 6. | 1 கொரி. 10. 9. |
| ,, ,, 9. | யோவா. 3. 14. |
| ,, 22. 21–28. | 2 பே. 2. 15. யூதா. 11. வச. |
| ,, ,, 30. | 2 பே. 2. 16. |
| ,, 24. 14. | வெளி. 2. 14. |
| ,, 25. 9. | 1 கொரி. 10. 8. |
| ,, 26. 65. | 1 கொரி. 10. 5. |
| ,, 28. 9. | மத். 12. 5. |

## உபாகமம்.

1. யூதர்கள் இவ்வாகமத்தை "வசனங்கள் இவைகளே" என்று அர்த்தங்கொள்ளும் **எலிஹடிபாரிம்** என்று அழைத்தார்கள். கிரேக்கத் திருப்புதலில் இது இரண்டாம் பிரமாணம் அல்லது திரும்பக் கூறுதலின் பிரமாணம் என்று அர்த்தங்கொள்ளும் **டியூட்டரானமி** எனப் பேர் வழங்கினது. ஏனென்றால் முன் கூறப்பட்ட பிரமாணங்கள் திரும்பவும் இவ்வாகமத்தில் இரண்டாவதாகக் கூறப்பட்டு இருப்பதினாலேயே. இது யூதர்களால் பதினொரு படலங்களாயும் இருபத்தேழு பிரிவுகளாயும் பிரிக்கப்பட்டது. நம்முடைய ஆகமத்தில் முப்பத்துநாலு அதிகாரங்களாக வகுக்கப்பட்டிருக்கிறது.

2. இவ்வாகமத்தின் பொருளை நாலு பங்காக வகுக்கலாம்.

I. முந்தின புத்தகங்களில் காட்டியபடி இஸ்ரவேலர் பண்ணின வனாந்தர பிரயாணங்களை எடுத்துக் காட்டி அவைகளினால் விளங்கிய தேவதயவைக் கொண்டு அவர்கள் தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்ளும்படி ஏவுகிறார். (அதி. i–iv.)

II. நன்மார்க்கப் பிரமாணத்தையும் சடங்குப் பிரமாணம் துரைத்தனப் பிரமாணங்களைச் சில கட்டளைமாற்றலோடும் எடுத்துரைக்கிறார். (அதி. v–xxvi.)

III. நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு ஆசீர்வாதத்தையும் அதை மீறுகிறவர்களுக்குச் சாபத்தையும் உரைத்து பின்பு இஸ்ரவேலர் நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்ப்படிந்து நடக்க புத்திசொல்லி உண்மையாய்க் குணப்படுகிறவர்களுக்கு மன்னிப்பு அளிக்கப்படும் என்ற வாக்குத்தத்தங்களையும் எடுத்துக் காட்டுகிறார். (அதி. xxvii–xxx.)

VI. நியாயப்பிரமாணம் லேவியர்வசம் ஒப்புவிக்கப்பட்டதையும் அந்தத் தருணத்தில் மோசே சொன்ன எச்சரிக்கைகளையும் அவன் பாடின வெற்றிச்சிறு பாட்டையும் காட்டி (அதி. xxxi–xxxii. 47.) பின்பு அடுத்துவரும் மோசேயின் மரணத்தைப் அவனுக்கு அறிவிக்கப்பட்டதையும் அவன் பன்னிரண்டு கோத்திரங்களையும் ஆசீர்வதித்ததை அவன் மரணத்தையுங்குறித்து காட்டியவைகளை அடக்கம். (அதி. xxxii. 48–xxxiv.)

இஸ்ரவேலர் எகிப்தைவிட்டுப் புறப்பட்ட நாற்பதாம் வருஷத்தின் கடைசி இரண்டு மாசங்களில் நடந்த சங்கதிகள் இந்த ஆகமத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

3. இவ்வாகமத்தில் மோசே இஸ்ரவேலருடைய சரித்திரத்தையும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பிரமாணங்களையும் திரும்பக் கூறியிருக்கிறான். xv; ii. அதி. 15, 18, 19. வாக்கியங்களில் ஒரு விசேஷித்த தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டிருக்கிறது. அது கிறிஸ்துவைக்குறிக்கும் என்று அப். 3. 22, 23; 7. 37ல் தெளிவாகக் காட்டப்பட்டிருக்கிறது. (யோவா. 1. 45; 5. 45, 46; 6. 14. ஒத்துப்பார்க்க.)

4. ஆதியாகமம் பஞ்சாகமங்களுக்குப் பாயிரமாய் இருக்கிறது. அதன்னியில் தேவனுடைய நோக்கங்கள் நமக்குத் தெளிவாகமாட்டாது. உபாகமம் ஆதியாகமத்துக்கு ஒழிபியலாய் இருக்கிறது. உபாகமத்தில் மற்ற ஆகமங்களில் காட்டியிருப்பதுபோல தேவனுடைய உண்மை அவருடைய பணிவிடையின் மேன்மை கீழ்ப்படிதலுக்குக் கிடைக்கும் மாட்சிமையான பலன் அவருடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படியாதவர்களுக்கு வரும் பயங்கரமான ஆக்கினைகள் கூறப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். ஐந்து ஆகமங்களிலும் சாதாரண



கணக்கின்படி 2553 வருஷக்கால சரித்திரங்கள் அடங்கியிருக்கிறது. இது கி. மு. 1451–ஆம் வரையும் வந்து எட்டுகிறது.

### உபாகமத்திலிருந்து புதிய ஏற்பாட்டில் குறிப்பிக்கப்பட்டிருக்கிற வாக்கியங்கள்.

| | | |
|---|---|---|
| உபா. 6. 4, 5. | மத். 22. 37. | மாற். 12. 29, 30. |
| | லூக். 10. 27. | |
| ,, ,, 13. | மத். 4. 10. | லூக். 4. 8. |
| ,, ,, 16. | மத். 4. 7. | லூக். 4. 12. |
| ,, 8. 3. | மத். 4. 4. | லூக். 4. 4. |
| ,, 9. 19. | எபி. 12. 21. | |
| ,, 10. 17. | அப். 10. 34. | ரோ. 2. 11. |
| ,, ,, | எபே. 6. 9. | கொலோ. 3. 25. |
| ,, 17. 6. | எபி. 10. 28. | |
| ,, 18. 1. | 1 கொரி. 9. 13. | |
| ,, ,, 15, 19. | அப். 3. 22, 23; 7. 37. | |
| ,, ,, 18. | யோவா. 1. 45. | அப். 3. 22; 7. 37. |
| ,, 19. 15. | யோவா. 8. 17. | 2 கொரி. 13. 1. |
| ,, 21. 23. | கலா. 3. 13. | |
| ,, 24. 1. | மத். 5. 31; 19. 7. | மாற். 10. 4. |
| ,, 25. 4, 5. | மத். 22. 24. | மாற். 12. 19. |
| | லூக். 20. 28. | 1 கொரி. 9. 9. |
| ,, 27. 26. | கலா. 3. 10. | |
| ,, 30. 12–14. | ரோ. 10. 6–9. | |
| ,, 31. 6. | எபி. 13. 5. | |
| ,, 32. 17. | 1 கொரி. 10. 20. | |
| ,, ,, 21. | ரோ. 10. 19. | |
| ,, ,, 35, 36. | ரோ. 12. 19. | எபி. 10. 30. |
| ,, ,, 43. | ரோ. 15. 10. | |

## சரித்திர ஆகமங்கள்.

யோசுவாவின் ஆகமம் முதல் எஸ்றா ஆகமம் வரையும் உள்ள பன்னிரண்டு ஆகமங்களிலும் மோசேயின் மரணமுதல் நெகேமியாவின் சீர்திருத்தம்வரையும் இருந்த இஸ்ரவேலருடைய சரித்திரங்கள் அடங்கியிருக்கின்றன. இதில் சென்றிருக்கிற காலம் கி. மு. 1451 முதல் கி. மு. 445 வரையும் 1006 வருஷங்கள்.

## 1. யோசுவாவின் ஆகமம்.

1. சரித்திர ஆகமங்களில் முதலாவதாக யோசுவாவின் ஆகமம் வருகிறது. மோசேக்குப் பின்பு இஸ்ரவேலருக்குத் தலைவனான யோசுவாவின் காலத்தில் நடந்த சங்கதிகள் இதில் காட்டப்பட்டிருப்பதால் இது யோசுவாவின் ஆகமம் என்று அழைக்கப்படுகிறது. மோசேயின் மரணமுதல் யோசுவாவின் மரணம் வரையும் உள்ள 25 அல்லது 30 வருஷக்காலச் சங்கதிகள் இதில் அடங்கியிருக்கிறது. இதை இஸ்ரவேலருடைய சரித்திரத் தொடர்ச்சியைக் காட்டும் அருமையும் அவசியமுமான ஆகமம் என்று சொல்லலாம். யோசுவா இதை எழுதினதாகச் சொல்லப்படுவது உண்டு. இந்த எண்ணம் சரி எனத்தகும். யோசுவா மோசேக்குப்பின் இஸ்ரவேலரை மற்றெல்லா விஷயத்திலும் நடத்தினதால் இந்த விஷயத்திலும் இயல்பாய்த் தன் ஜனங்களின் சரித்திரத்தைப் பாதுகாக்க நோக்கமுள்ளவனாய் மோசேயின் மாதிரியின்படியே இதை எழுதியிருக்கலாம். இந்தப் புஸ்தகத்தை யோசுவா எழுதியிராவிட்டால் அவன் எழுதிவைத்திருந்த சாதனங்களைப் பார்த்து வேறே ஒருவன் எழுதியிருக்கலாம். ஆனால் இவ்வாகமத்தை எழுதினவன் யோசுவாவின் காலத்தில் இருந்திருக்கவேண்டும். ஏனென்றால், வேசியாகிய ராகாபைப்பற்றி "அவள் இந்நாள் வரைக்கும் இஸ்ரவேலில் குடியிருக்கிறாள்" (6. 25.) என்று சொல்லியிருக்கிறது. மேலும் இவ்வாகமத்தின் ஆக்கியோன் யோர்தானைக் கடந்துபோனவனாயும் இருக்கவேண்டும். (5. 1.) "யோர்தானுக்கு மேல்கரையில் குடியிருந்த எமோரியரின் சகல ராஜாக்களும், சமுத்திரத்தருகே குடியிருந்த கானானியரின் சகல ராஜாக்களும் கர்த்தர் யோர்தானின் தண்ணீரை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக நாங்கள் கடந்து தீருமட்டும் வற்றிப்போகப்பண்ணினதைக் கேட்டதுமுதற்கொண்டு அவர்கள் இருதயம் கரைந்து, இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகச் சோர்ந்துபோனார்கள்" என்று சொல்லியிருக்கிறது. மோசேயின் ஆகமங்களில் பிந்தியகாலத்தில் சிலவை கூட்டப்பட்டு இருப்பதுபோல இவ்வாகமத்திலும் சிலவைகள் பிந்திய காலத்தில் சேர்க்கப்பட்டிருப்பதும் உண்டு. திருஷ்டாந்தமாக: xxiv. அதி. 29–31, 33ல் யோசுவா எலியேசர் என்பவர்களின் மரணம் யோசுவாவுக்குப் பின்பு உயிரோடிருந்த மூப்பருடைய நாட்களில் இருந்த இஸ்ரவேலருடைய வைதீகநிலைமை ஆகிய இவைகள் யோசுவாவுக்குப்பின் நடந்த சங்கதிகள் xix. அதி.



47ல் காட்டப்பட்டிருக்கிறபடி தாண் கோத்திரத்தார் லேசை வாங்கிப்போனது யோசுவாவின் மரணத்துக்கு இருபது வருஷங்களுக்குப் பின்பு நடந்தது. இதைப்பற்றி நியாயாதிபதிகளின் ஆகமத்தில் விவரமாய்க் காட்டியிருக்கிறது. xv. அதி. 13–19ல் காட்டப்பட்டிருக்கிற சங்கதி யோசுவாவின் மரணத்துக்குப் பின்பு சம்பவித்தது. காலேப் தனக்குக் கொடுக்கப்பட்ட சுதந்தரத்தை யோசுவாவின் ஜீவகாலத்தில் கட்டிக்கொள்ளவில்லை. இவ்வித சங்கதிகள் அதில் சேர்க்கப்பட்டு இருப்பதால் அது யோசுவாவினால் எழுதப்படவில்லை என்று சொல்வது அபத்தம். மோசேயின் ஆகமங்களில் சில காரியங்கள் பிந்தியகாலத்தில் கூட்டப்பட்டாலும் அந்த ஆகமங்களை மோசேயே எழுதினான் என்று ஒப்புக்கொள்வதுபோல இதையும் யோசுவாவே எழுதினான் என்று அங்கீகரிக்கலாம். இவ்வாகமம் அப்படிக் கூட்டப்பட்டவைகளோடே பின்வந்த தீர்க்கதரிசிகளால் ஒப்புக்கொள்ளப்பட்டும் வந்திருக்கின்றது. அது பழைய ஏற்பாட்டின் ஆகமங்களைச் சேர்ந்ததாக நம்முடைய ஆண்டவரும் அவருடைய அப்போஸ்தலரும் அங்கீகரித்தும் இருக்கிறார்கள்.

2. யோசுவாவின் ஆகமத்தை மூன்று பங்காக வகுக்கலாம்.

I. இஸ்ரவேலர் கானான் தேசத்தைக் கட்டிக்கொண்ட சரித்திரம். (i–xii. அதி.)

II. தேசம் பங்கிடப்பட்ட சரித்திரம். (xiii–xxii. அதி.)

III. யோசுவாவின் கடைசிப் பிரசங்கமும், அவனுடைய மரணமும் அடங்கிய சரித்திரம். (xxiii–xxiv. அதி.)

3. தேவன் பிதாக்களுக்குப் பண்ணின தம்முடைய வாக்குத்தத்தத்தைத் திட்டமாய் நிறைவேற்றுகிறதில் உண்மையுள்ளவர் என்பதையும் தம்முடைய சித்தத்திற்கு எதிர்த்து நிற்கிற விரோதிகளை அழிப்பதில் தமது நீதியை விளக்குகிறவர் என்பதையும் இவ்வாகமத்தினால் பிரத்தியக்ஷமாய் அறிகிறோம். வேதவிரோதிகள் இவ்வாகமத்திற்கு விரோதமாய் வீணான தர்க்கங்களை உண்டுபண்ணுவது ஆச்சரியம் அல்ல. இதில் அடங்கிய அற்புதச் சங்கதிகள் நம்முடைய நம்பிக்கைக்கு விரோதமானவைகள் அல்ல. அற்புதங்கள் நடக்கக்கூடியவைகள் என்று விசுவாசிக்கிறவர்கள் யோர்தான் பிரிக்கப்பட்டதையும் (iii. அதி. 14–17.) எக்காளத்தொனியால் எரிகோ மதில்கள் விழுந்ததையும் (vi. அதி. 20.) சூரியனும் சந்திரனும் யோசுவாவுடைய கட்டளையின்படி நின்றதையும் (x. அதி. 12–15.) பற்றி சம்பாதிரார்கள்.

கானானியர் அழிக்கப்பட்ட சங்கதியைப் பற்றி ஆக்ஷேபிப்பார் உண்டு. "பூமிக்கெல்லாம் நியாயாதிபதி நீதிசெய்யாரோ?" (1.) தேவன் பல பட்டணங்களையும் பல ஜாதியாரையும் இயற்கையில் விளங்கும் சம்பவங்களைக்கொண்டு நிர்மூலம் பண்ணிவருகிறாரே; அவர் ஒருவகைக் கருவியைக்கொண்டு நீதியைச் சரிக்கட்டினால் இன்னொரு வகைக் கருவியைக் கொண்டு ஏன் தமது நீதியை விளக்கக்கூடாது? (2.) ஒருவனை அழிப்பது அநீதி அல்லவென்றால் ஆயிரம் ஆயிரமானபேரை அழிப்பதும் அநீதி அல்லவே. ஒன்று நீதி என்றால் மற்றதும் நீதி என்பதற்குத் தடை என்ன? (3.) அந்த ஜனங்களை அழித்ததில் தேவன் இஸ்ரவேலருக்குச் செய்த இரக்கமான தீர்மானத்தை நிறைவேற்றினார். (4.) தேவன் கானானியர்மேல் அதிக காலம் பொறுமையாய் இருந்தும் அவர்கள் அவருடைய எச்சரிப்பை அசட்டைசெய்தார்கள். ஜலப்பிரளயம் சமபூமியின் பட்டணங்களின் அழிவு அவர்களுக்குச் சமீபமான இடங்களில் நடந்தன. அவைகளை நன்றாய் அறிந்திருந்தும் சீர்படவில்லை; ஆதலால் அவர்கள் தங்கள் அக்கிரமத்தின் அளவை நிரப்பின போது நிர்மூலமாக்கப்பட்டார்கள். அவர்களை தேவன் பெருவாரி வியாதிகள் அக்கினி அல்லது பூகம்பத்தினால் அழித்தால் நியாயமாகக் காணப்படுமே. இந்தக் கருவிகளை அவர் உபயோகியாமல் அந்தக் காலத்துக்கு ஏற்றபடி அவர் இஸ்ரவேலரைக்கொண்டு அவர்களை நிர்மூலம்பண்ணினார். கானானியர் எத்தனைபேரையோ பட்டயத்தால் கொன்றார்கள்; அவர்கள் மற்றவர்களுக்குச் செய்தபடி தேவன் அவர்களுக்கும் செய்தார். தேவன் தம்முடைய வல்லமையை இவ்விதமாகக் காட்டினதில் அது எபிரெயருக்கு நல்ல எச்சரிப்பைக் கொடுத்ததாய் இருந்தது. அவர்கள் பாவஞ்செய்தால் தேவன் அப்படியே அவர்களைப் பட்டயத்துக்கு இரையாக்குவார் என்று அவர்கள் படிப்பினையாகக் கற்றுக்கொள்ளும்படி அப்படிச் செய்தார் என்றும் அறியவேண்டியது.

### யோசுவாவின் ஆகமத்திலிருந்து புதிய ஏற்பாட்டில் குறிப்பித்துக் காட்டப்பட்டிருக்கிற வாக்கியங்கள்.

| | | |
|---|---|---|
| அதி. 1. 5. | எபி. 13. 5. | |
| ,, 2. 1. | எபி. 11. 31. | யாக். 2. 25. |
| ,, ,, 19. | மத். 27. 25. | |
| ,, 3. 14. | அப். 7. 44, 45. | |
| அதி. 6. 20. | எபி. 11. 30. | |
| ,, ,, 23. | எபி. 11. 31. | |
| ,, 14. 1, 2. | அப். 13. 19. | |
| ,, 24. 32. | அப். 7. 16. | |



## 2. நியாயாதிபதிகளின் ஆகமம்.

1. நியாயாதிபதிகளின் ஆகமத்தில் பதின்மூன்று அல்லது பதினாலு மேலான அதிகாரிகளாகிய நியாயாதிபதிகளுடைய சரித்திரங்கள் காட்டப்பட்டிருப்பதால் இந்தப் பேர் உண்டாயிற்று. நியாயாதிபதிகள் விசேஷித்த காலங்களில் பற்பல கோத்திரங்களில் இருந்து தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டும், அவரால் அபூர்வ தைரியம் ஞானம் தெய்வ பக்தி என்ற வரங்களைப் பெற்றும், இஸ்ரவேலரை மீட்கவும் அவர்களை ஆளவுமாக ஏற்படுத்தப்பட்ட விசேஷித்த மனுஷரேயாம். தேவாதிபத்தியத்தில் ஜனங்களை ஆளும்படி சாதாரணமாய் நியமிக்கப்பட்டவர்கள் என்று இவர்களைக்குறித்து எண்ணக்கூடாது; சாதாரண நியாயாதிபதிகள் வேறே. அவர்கள் ஏற்படுத்தப்பட்ட வகையைப்பற்றி யாத்திராகமம் பதினெட்டாம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. விசேஷித்த காலங்களில் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதிகளின் உத்தியோகம் நாடுகளுக்கும் நகரங்களுக்கும் அடுத்ததாய் இராமல் ராஜ்யத்துக்கடுத்ததாய் இருந்தது. அவர்களின் தொகை அபிமெலேக்கைச் சேர்த்தால் பதினாலு அல்லது பதின்மூன்றும். அவர்கள் நாமங்களாவன: 1. ஒத்னியேல். 2. ஏகூத். 3. சம்கார். 4, 5. தெபொராள், பாராக்கு. 6. கிதியோன். 7. அபிமெலேக்கு. 8. தோலா. 9. யாவீர். 10. யெப்தா. 11. இப்சான். 12. ஏலோன். 13. அப்தோன். 14. சிம்சோன். இவர்களில் ஆறு பேருடைய சரித்திரம் விஸ்தாரமாயும் மற்றவர்கள் சரித்திரம் சுருக்கமாயும் சொல்லப்பட்டிருக்கிறது. யோசுவாவின் மரணமுதல் சிம்சோன் மரணம்வரையும் உள்ள சங்கதிகள் இதில் அடங்கும். அதின் காலம் 300 வருஷம் முதல் 400 வருஷம் மட்டுக்கும் இடையே பற்பல கணக்காய்த் தொகையிடப்படுவதுண்டு.

இப்புஸ்தகத்தின் பொருளை மூன்று பங்காக வகுக்கலாம்.

1. யோசுவாவின் மரணத்துக்குப்பின்பு இஸ்ரவேலர் கர்த்தருக்கு ஊழியஞ்செய்வதை விட்டு மருளவிழுந்ததற்கு முன்னுள்ள அவர்கள் நிலைமை. (அதி. i–iii.4.)

II. இஸ்ரவேலர் ஒடுக்கப்பட்டதும் அவர்கள் நியாயாதிபதிகளால் விடுவிக்கப்பட்டதுமான சரித்திரம். (அதி. iii. 5–xvi.)

III. ஒழிபியலாகக் காட்டப்பட்டிருக்கிற இரண்டு சங்கதிகள்; அதாவது தாண்கோத்திரத்தாருடைய விக்கிரகாராதனையும் பென்யமீன் கோத்திரத்தாரின் நிர்மூலமும். (அதி. xvii–xxi.)

3. இந்த ஆகமம் யாராலே எழுதப்பட்டதென்பது நிச்சயமாகத் தெரியாது. யூதர்கள் இதைச் சாமுவேல் எழுதினதாய்ச் சொல்லுகிறார்கள். ஒருவேளை அவன் ஜீவகாலத்தில் அவன் மேல்விசாரணைக்குள்ளாக எழுதப்பட்டிருக்கலாம். இவ்வாகமத்தை யோசுவாவின் ஆகமத்தை எழுதினவனாகிய சாமுவேலாவது பினேகாசாவது எழுதியிருந்தாலும், "அந்நாட்களில் இஸ்ரவேலிலே ராஜா இல்லை" (18. 1.) என்று சொல்லி இருக்கிற குறிப்பைப் பார்க்கில், இது இப்போதிருக்கிற மாதிரிப்படி ராஜாங்கம் ஸ்தாபிக்கப்பட்டபின்பு எழுதப்பட்டிருக்கவேண்டும் என்று நிதானிக்கத்தகும். "பென்யமீன் புத்திரர் எருசலேமிலே குடியிருந்த எபூசியரைத் துரத்திவிடவில்லை; ஆகையால் எபூசியர் இந்நாள்மட்டும் பென்யமீன் புத்திரரோடேகூட எருசலேமில் குடியிருக்கிறார்கள்" (1. 21.) என்று சொல்லி இருப்பதைக் கவனிக்கையில் தாவீது அந்தப் பட்டணத்தைப் பிடிக்கிறதற்கு முந்தி இது எழுதப்பட்டிருக்கவேண்டும் என்று தீர்மானிக்கலாம். இவ்வாகமத்தில் கடைசியாக வருகிற (17–21. அதி.) ஒழிபியல் இது பிந்திய காலத்தில் ஒருவனால் எழுதப்பட்டிருக்கவேண்டும் என்று சொல்லலாம்.

4. இவ்வாகமத்தின் ஆக்கியோனைப்பற்றித் தெளிவில்லாதது போல அதின் காலக்கணிதத்தையிட்டும் தெளிவில்லை; ஆதலால் அதைப்பற்றி இங்கே காட்ட ஏதுவில்லை.

5. இவ்வாகமம் ஒரு ஜாதியாருக்குள் ஆகாமியத்தால் உண்டாகிய பயங்கரமான பலனையும் தேவ வணக்கத்தைப்பற்றி எண்ணமற்றுப்போகிற அரசின்மையால் விளையும் கொடிய ஆபத்துக்களையும் நமக்கு விளக்கிக்காட்டுகிறது. மேலும் தேவனுடைய நீடியபொறுமைக்கும் தேவனுடைய பரிசுத்தத்திற்கும் அவர் தமது வாக்கை நிறைவேற்றுவதில் உண்மையைக் காக்கிறவர் என்பதற்கும் உத்தமமாய் மனந்திரும்புகிறவர்களுக்கு அவர் உருக்க இரக்கங்களைக் காட்டுகிறவர் என்பதற்கும் போந்த திருஷ்டாந்தங்களை இது நமக்குத் தெரிவிக்கிற



தாமாய் இருக்கிறது. இதில் கிதியோன் பாராக் யெப்தா சிம்சோன் என்பவர்களுடைய சரித்திரங்கள் விசேஷித்துக் காட்டியிருக்கிறது.

நியாயாதிபதிகளின் ஆகமத்திலிருந்து புதிய ஏற்பாட்டில் குறிப்பிட்டிருக்கிற வாக்கியங்கள்.

அதி. 2. 16. அப். 13. 20.

பெயர்பெற்ற நியாயாதிபதிகளின் நடபடிகள், எபி. 11. 32–40 வரையும் எடுத்துச் சொல்லப்படிருக்கின்றன.

## 3. ரூத்தின் ஆகமம்.

1. ரூத்தின் ஆகமம் நியாயாதிபதிகளின் ஆகமத்துக்கு அநுபந்தமாயாவது சாமுவேலின் ஆகமங்களுக்கு முகவுரையாயாவது இருக்கிறதாய் வைத்துக்கொள்ளலாம். இதில் அடங்கிய சங்கதி நியாயாதிபதிகளின் காலத்தில் நடந்தது. ஒருவேளை இது கிதியோன் நாட்களில் நடந்திருக்கலாம். இது தாவீது ராஜாவின் முன்னடியாரைச் சேர்ந்த ஒரு ஸ்திரீயின் சரித்திரமாய் இருக்கிறது. இவ்வாகமத்திற்கும் நியாயாதிபதிகளின் ஆகமத்திற்கும் இருக்கிற வித்தியாசம் விசேஷித்தது. நியாயாதிபதிகளின் ஆகமத்தில் அடங்காமையையும் யுத்தகுணத்தையும் பிரலாபத்தையும் காணலாம். ரூத்தின் ஆகமத்தில் அமைதலையும் கபடமின்மையையும் போதனைக்குக் கீழ்ப்படிந்து நடக்கிற குணத்தையும் பார்க்கலாம். ரூத்தின் ஆகமத்தை எழுதினவன் இன்னான் என்பது தெரியாது. யூதர்கள் சாமுவேல் அதை எழுதினதாக எண்ணுகிறார்கள். இதின் கடைசியில் காட்டப்பட்டிருக்கிற தலைமுறை அட்டவணை தாவீதில் முடிகிறதால் இது அவனுக்கு முந்தி எழுதப்படாமல் அவன் காலத்திலே எழுதப்பட்டிருக்கவேண்டும் என்று அறியலாம்.

2. இவ்வாகமம் நாலு அதிகாரங்களாக வகுக்கப்பட்டிருக்கிறது. இதை மூன்று பங்காக வகுக்கலாம்.

I. நகோமி தன் புருஷனாகிய எலிமெலேக்கோடே மோவாப் தேசத்துக்குப் போய் தன் மருமகள் ரூத்தோடே திரும்பினதுமட்டும் உள்ள சரித்திரம். (அதி. i.)

II. போவாஸ் ரூத்தோடே பண்ணின சம்பாஷணை, அவர்கள் விவாகம். (அதி. ii–iv. 12.)

III. ஓபேத் பிறந்தது; தாவீதின் முன்னோர்களின் அட்டவணை. (அதி. iv. 13–22.)

3. இந்த ஆகமம் தாவீதின் பூர்வோத்திரத்தை எடுத்துக்காட்டும் நோக்கமாய் எழுதப்பட்டது. மேலும் அஞ்ஞான ஸ்திரீயாய் இருந்த ரூத்து யூதச்சபையில் சேரவும் கிறிஸ்துவின் வம்சவரிசையில் வரவும் இடம்பெற்றதால் பிற்காலத்தில் புறஜாதியார் அவருடைய சபையில் இரட்சிப்புக்குப் பங்காளிகளாய்ச் சேர்க்கப்படுவார்கள் என்பதற்கு அறிகுறியான நோக்கமாயும் எழுதப்பட்டிருக்கலாம். இந்தச் சரித்திரம் சுருக்கமுள்ளதாய் இருந்தபோதிலும் விசுவாசம் பொறுமை சுறுசுறுப்பு தயவு முதலிய சற்குணங்களுக்கும் தேவன் தம்முடையபேரில் நம்பிக்கை வைப்பவர்களைப் பராமரித்து வருகிறார் என்பதற்கும் இவ்வாகமம் சிறந்த திருஷ்டாந்தங்களைக் காட்டுகிறதாய் இருக்கிறது.

### ரூத்தின் ஆகமத்திலிருந்து புதிய ஏற்பாட்டில் குறிப்பிட்டிருக்கிற வாக்கியங்கள்.

அதி. 4. 18-22. மத். 1. 5. லூக். 3. 31, 32.

## 4. சாமுவேலின் இரண்டு ஆகமங்கள்.

1. ரூத்தின் சரித்திரம் வேதாகம சரித்திர சம்பந்தத் தொடர்ச்சிக்குச் சற்று விலகிவருகிறது; ஆனால் சாமுவேலின் புத்தகங்களில் அந்தத் தொடர்ச்சி மறுபடியும் எடுத்துக் காட்டப்படுகிறது. இவ்வாகமங்களில் கடைசி நியாயாதிபதிகளாகிய ஏலி சாமுவேல் என்பவர்களுடைய சரித்திரங்களும் காட்டப்பட்டிருக்கின்றன.

2. இவ்விரண்டு ஆகமங்களும் யூதர்களால் ஒரே ஆகமமாக எண்ணப்பட்டது. கிரேக்கு மொழிபெயர்ப்பில் வசதிக்காக அவைகள் இரண்டு ஆகமங்களாகப் பிரிக்கப்பட்டது. முதல் ஆகமம் சவுலின் மரணத்தோடே முடிகிறது; இரண்டாம் ஆகமம் தாவீது சிங்காசனம் ஏறினதோடே துவக்குகிறது. லத்தீன் திருப்புதலிலும் இந்தப் பிரிவுகளே வழங்கப்பட்டிருக்கிறது. கிரேக்கில் மொழிபெயர்த்தவர்கள் இவ்வாகமங்களில் அடங்கியிருக்கிற பொருளுக்குத் தக்கதாக அவைகளுக்கு ராஜ்யங்களின் முதலாம் இரண்டாம் புத்தகங்கள் என்றும் லத்தீனில் மொழிபெயர்த்தவர்கள் ராஜ்யங்களின் முதலாம் இரண்டாம் புத்தகங்கள் என்றும் நாமங்களைக் கொடுத்தார்கள்.

3. இவ்வாகமங்கள் இன்னாரால் எழுதப்பட்டன என்பதை மயக்கமறச் சொல்ல ஏதுவில்லை. அதைப்பற்றி பூர்வத்தார்



சாமுவேல் I சாமு. 1-24. அதிகாரங்களை எழுதினான் என்றும், மீதியானவைகளை நாத்தான் காத் என்ற தீர்க்கதரிசிகள் எழுதினார்கள் என்றும் சொல்லியிருப்பது சரியாய் இருக்கலாம். ஏனென்றால் 1 நாளா. 29. 29, 30ல் தாவீதுராஜாவினுடைய ஆதியோடந்த நடபடிகளும் அவன் அரசாண்ட விபரமும் அவனுடைய வல்லமையும் அவனுக்கும் இஸ்ரவேலுக்கும் அந்தந்தத் தேசங்களின் ராஜ்யங்கள் அனைத்துக்கும் நடந்த காலசம்பவங்களும் ஞானதிருஷ்டிக்காரனாகிய சாமுவேலின் பிரபந்தத்திலும் தீர்க்கதரிசியாகிய நாத்தானின் பிரபந்தத்திலும் ஞானதிருஷ்டிக்காரனாகிய காத்தின்[1] பிரபந்தத்திலும் எழுதியிருக்கிறது என்று காட்டியிருப்பதைப் பார்க்கில், அதிலே சாமுவேலின் முதலாம் இரண்டாம் புத்தகங்களைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறதாக எண்ணவேண்டியதாய் இருக்கிறது.

4. இவ்வாகமங்களில் அடங்கியிருக்கிற சங்கதிகளை நாலு பங்காக வகுக்கலாம்.

I. ஏலியின் ஆளுகை. முதலாம் ஆகமம். (அதி. i–iv.)
II. சாமுவேலின் ஆளுகை. (அதி. v–xii.)
III. சவுலின் ராஜ்யபாரம். (அதி. xiii–xxxi.)
IV. தாவீதின் ராஜ்யபாரம். இரண்டாம் ஆகமம் முழுவதும்.

சாமுவேலின் முதலாம் புத்தகத்தில் ஏறக்குறைய நூறுவருஷக்கால சங்கதிகளும் இரண்டாம் ஆகமத்தில் நாற்பது ஐம்

---

[1] நாத்தானும் காத்தும் தாவீதின் காலத்தில் இருந்தார்கள். நாத்தான் தாவீதுக்கு ஒரு விசேஷித்த ஆலோசனைக்காரனும் அவனுக்கு தேவனுடைய சித்தத்தை அடிக்கடி அறிவிக்கும்படி அனுப்பப்பட்டவனும் இருந்தான் (II சாமு. 7. 2: 12. 1.). சக. 12. 12ல் தீர்க்கதரிசிகளின் கூட்டத்துக்குப் பிரதி ஆளாக அவன் நாமம் காட்டப்பட்டிருக்கிறது. காத் "ஞானதிருஷ்டிக்காரன்" என்றும் "ராஜாவின் (தாவீதின்) ஞானதிருஷ்டிக்காரன்" என்றும் அழைக்கப்படுகிறான் (I நாளா. 29. 30. II நாளா. 29. 25. II சாமு. 24. 11. I நாளா. 2[illegible]). அவன் I சாமு. 22. 5ல் சொல்லிய அரணில் தாவீதைச் சேர்ந்துகொண்டான் என்று தோன்றுகிறது. தாவீது ஜனங்களைத் தொகை பார்த்த சங்கதியில் அவன் பேர் திரும்ப வருகிறது (II சாமு. 24. 11-19. I நாளா. 21. 9-19.). மேலே காட்டியிருக்கிறபடி அவன் தாவீதின் சரித்திரத்தை எழுதினதோடே தேவனுடைய ஆலயத்தில் கீத வாத்தியங்களை வைத்துப் பாடும் ஏற்பாடுகளுக்கு தாவீதோடே இருந்து உதவிசெய்ததாகவும் காணப்படுகிறது. (II நாளா. 29. 25.)

பது வருஷங்களுக்கு இடையே உள்ள காலசங்கதிகளும் கண்டிருக்கிறது.

5. இவ்வாகமங்களில் காட்டப்பட்டிருக்கிற விசேஷித்த காரியம் ராஜ அதிகாரம் ஏற்படுத்தப்பட்டதும் அது தாவீதின் குடும்பத்தில் ஸ்தாபிக்கப்பட்டதுமே இக்காலத்தில் தீர்க்கதரிசன வரம் உற்பத்தியானது. அது இடையில் நின்றுபோகாமல் மல்கியாவரையும் தொடர்ச்சியாய் நிலைபெற்றிருந்தது (அப். 3. 24.). தொடர்ச்சியாய் வந்த தீர்க்கதரிசிகளில் சாமுவேல் முதல்வன் என்று சொல்லியிருக்கிறது. தீர்க்கதரிசிகள் ஜனங்களுக்குத் திவ்விய போதனைகளைக் கற்றுக்கொடுத்து வந்ததுடன் கிறிஸ்துவினால் உண்டாகும் மீட்பை முன்னறிவித்து அவர் வருகைக்கு வழியை ஆயத்தம்பண்ணிவந்தார்கள்." அவர்கள் தொடர்ச்சியாய் எழும்பிவருவதற்குத் தீர்க்கதரிசிகளின் பள்ளிக்கூடங்களின் வெகு அநுகூலமாய் இருந்தது. அந்தப் பள்ளிக்கூடங்களைச் சாமுவேல் முதலாவதாய் ஸ்தாபித்ததாக எண்ணப்படுவதுண்டு.

6. இப்புஸ்தகங்கள் சங்கீத ஆகமத்தை விளக்குவிப்பதற்கு மெத்த அநுகூலமுள்ளவைகளாய் இருக்கின்றன.

சாமுவேலின் ஆகமங்களில் இருந்து
புதிய ஏற்பாட்டில் குறிப்பிட்டிருக்கிற
வாக்கியங்கள்.

| | | |
|---|---|---|
| I சாமு. | 13. 14. | அப். 13. 22. |
| „ | 21. 6. | மத். 12. 3, 4. மாற். 2. 25, 26. லூக். 6. 3, 4. |
| II சாமு. | 7. 12. | அப். 13. 36. |
| „ | „ 14. | 2 கொரி. 6. 18. |
| „ | „ „ | எபி. 1. 5. |
| „ | 7. 16. | யோவா. 12. 34. |
| „ | 12. 24. | மத். 1. 6. |

## 5. ராஜாக்களின் இரண்டு ஆகமங்கள்.

1. ராஜாக்களின் இரண்டு ஆகமங்களும் சாமுவேலின் ஆகமங்களோடே சம்பந்தப்பட்டவைகளாய் இருக்கின்றன. யூதர்களுடைய வேதாகம அட்டவணையில் இவ்விரு ஆகமங்களும் ஒரே ஆகமமாகக் காட்டப்பட்டிருக்கிறது. கிரேக்குவத்தின் மொழிபெயர்ப்புகளில் வழங்கிவந்தபடியே நமக்குள்ளும் இவ்வாகமங்களின் பேர் வழங்கப்படுகிறது. முந்தின இரண்டு புஸ்தகங்களும் ராஜாக்கள் அல்லது ராஜ்யத்தின் முதலாம் இரண்டாம் ஆகமங்கள் என்று சொல்லப்படுகிறபடியே இவைகள் மூன்றும் நாலாம் ஆகமங்கள் என்று அழைக்கப்பட்டன.



2. இவ்வாகமங்கள் எரேமியாவால் எழுதப்பட்டன என்பது பொதுவான அபிப்பிராயம்; ஆனால் அது சந்தேகத்துக்குரியது. ராஜாக்களின் இரண்டாம் ஆகமம் 24. அதி. 18. வாக்கியமுதல் அந்த ஆகமத்தின் கடைசிவரையும் உள்ள வசனங்கள் எரேமியாவின் கடைசி அதிகாரத்தில் மிகுதியாய்த் திரும்ப எடுத்து உரைக்கப்பட்டிருப்பதால் எரேமியாவே அவைகளை எழுதியிருக்கவேண்டும் என்று யூதருடைய பாரம்பரியம் சொல்லுகிறது. இவ்வாகமங்களின் ஆக்கியோன் யாராய் இருந்தாலும் சரி அவன் முந்தின சாதனங்களை எடுத்துக்கொண்டு இவைகளை எழுதியிருக்கவேண்டும் என்று நினைக்கலாம்; எரேமியா ஒருவேளை அப்படிச் செய்திருக்கலாம். ஆனால் தாவீது சாலொமோன் எசேக்கியா முதலியவர்கள் தங்கள் காலத்துச் சரித்திரங்களை எழுதிவைத்திருக்கலாம் என்பதாலும் நாத்தான் காத் ஏசாயா இத்தோ என்றவர்கள் அந்தந்தக் காலத்தில் சரித்திரக்காரராயும் இருந்தார்கள் என்பதாலும் யூதர்கள் பாபிலோனில் இருந்து திரும்பினபின்பு திவ்விய அருள்பெற்றவனும் வேதபாரகனுமாய் இருந்த எஸ்றா என்பவன் இப்போதிருக்கிறபடி இவ்வாகமங்களை எழுதிக் கிரமப்படுத்தி இருப்பான் என்று எண்ணத்தக்கதாய் இருக்கிறது.

3. இவ்வாகமங்களில் தாவீது ராஜாவின் மரணத்துக்குப் பின்பு இஸ்ரவேல் ராஜாக்களின் அரசாட்சியில் நடந்த இஸ்ரவேலைப்பற்றிய சரித்திரங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. இவைகளில் சாலொமோன் அபிஷேகம்பண்ணப்பட்டது முதல் எருசலேம் அழிக்கப்பட்டதுவரையும் உள்ள 426 வருஷக்கால சங்கதிகள் அடங்கியிருக்கின்றன.

இவ்வாகமங்களில் அடங்கிய சரித்திரத்தை மூன்றுபங்காக வகுக்கலாம்.

I. ராஜ்யம் பிரிக்கப்படாமல் சாலொமோனால் அது ஆளப்பட்ட சரித்திரம். (I இரா. i-xi அதி.)

II. யூதா இஸ்ரவேல் என்ற ராஜ்யங்களின் சரித்திரம். (I இரா. xii—II இரா. xvii.)

## III. இஸ்ரவேல் ராஜ்யம் முடிவடைந்தபின்பு உள்ள யூத ராஜ்யத்தின் சரித்திரம். (II இரா. xviii–xxv.)

4. இவ்வாகமங்களில் இஸ்ரவேலரின் ராஜ்யபார விர்த்தாந்தமும் தீர்க்கதரிசிகளுடைய சரித்திரங்களும் காட்டியிருக்கிறது. இங்கே சாலொமோனுடைய மகிமைப்பிரதாபத்தையும் அவன் வழுவி சீர்கெட்டுப்போனதையும் பார்க்கிறோம். இங்கே எலியா எலிசா என்ற தீர்க்கதரிசிகளின் சரித்திரங்களையும் பார்க்கிறோம். அவர்களும் மற்றும் தீர்க்கதரிசிகளும் எவ்வளவோ நல்ல பிரயத்தனங்களைச் செய்திருந்தும் கடைசியாக ராஜ்யத்தில் அழிமாறு நேரிட்டதையும் பார்க்கிறோம். இஸ்ரவேல் ராஜ்யத்தில் பத்தொன்பது ராஜாக்கள் ஆண்டார்கள். அவர்கள் எல்லாரும் அவபக்தியுள்ளவர்களும் பொல்லாதவர்களுமாய் இருந்தார்கள். அவர்களுடைய ஆகாத அரசுமுறையால் அந்த ஜாதியாரின் அக்கிரமங்கள் வளர்ந்து கடைசியாக அவர்கள் அழியும்படி நேரிட்டது. யூதராஜ்யத்திலும் அநேகம் பொல்லாத ராஜாக்கள் இருந்தார்கள். ஆனால் அவர்களுக்குள் கர்த்தருக்கு உண்மையாய்ப் பயந்து நடந்த ராஜாக்களும் சிலர் இருந்தார்கள். அவர்களுடைய முயற்சியினாலே தேவனுடைய ஆக்கினைகள் வராதபடி சிலகாலம் பின்னுக்கு நிறுத்திவைக்கப்பட்டதுண்டு. கடைசியாக அந்த ஜாதியாரின் பாவம் நிறைவேறினபோது, கல்தேயர் நேபுகாத்நேச்சாரால் நடத்தப்பட்டுவந்து அவர்கள் ராஜ்யத்தைக் கவிழ்த்துப்போட்டார்கள்.

5. இவ்வாகமங்களில் காட்டப்பட்டிருக்கிற சங்கதிகளை நாளாகமங்களில் அடங்கியிருப்பவைகளோடே ஒத்துப்பார்க்கில் சில வித்தியாசங்கள் காணப்படுவதுண்டு. அந்த வித்தியாசங்கள் முக்கியமாய் நாமங்களையும் இலக்கங்களையும் பற்றியது. இந்த வித்தியாசங்கள் இவ்வாகமங்களை எழுதினவர்களால் அல்ல இவைகளைப் பிந்தியகாலங்களில் நகல்பண்ணினவர்களாலே நேரிட்டிருக்கவேண்டியது என்று சொல்லத்தகும். காலக்கிரமப்படி சங்கதிகள் எழுதப்படவில்லை என்பதையும் பார்க்கிறோம். ஆனால் இவ்வாகமங்களை எழுதினவர்களும் கால ஒழுங்குப்படி சரித்திரங்களைக் காட்டியிருக்கிறதாய்ச் சொல்லுகிறதில்லை.

6. இவ்வாகமங்கள் எருசலேம் அழிக்கப்பட்ட காலத்திலும் அதற்கு முன்னும் இருந்த தீர்க்கதரிசிகள் எழுதின ஆகமங்களை நாம் கற்றறிவதற்கு வெகுதூரம் நமக்குத் தெளிவைக் கொடுக்கின்றன.



### ராஜாக்களின் ஆகமங்களிலிருந்து புதிய ஏற்பாட்டில் குறிப்பிட்டிருக்கிற வாக்கியங்கள்.

| | |
|---|---|
| I இரா. 2. 10. | அப். 2. 29; 13. 36. |
| „ 7. 6–12 | யோவா. 10. 23. அப். 3. 11. |
| „ 8. 46. | I யோ. 1. 8–10. |
| „ 10. 1. | மத். 12, 42. லூக். 11. 31. |
| „ 17. 1–5. | லூக். 4. 25, 26. |
| „ 18. 42. | யாக். 5. 17, 18. |
| „ 19. 10–18. | ரோ. 11. 3, 4. |
| II இரா. 1. 8. | மத். 3. 4. |
| „ „ 10. | லூக். 9. 54. |
| „ 4. 29. | லூக். 10. 4. |
| „ 5. 14. | லூக். 4. 27. |

## 6. நாளாகமத்தின் இரண்டு புஸ்தகங்கள்.

1. யூதர்கள் இவ்விரண்டு ஆகமங்களையும் ஒரே ஆகமமாக எண்ணி, "தினசரி வர்த்தமானம்" என்ற பேரை இட்டார்கள். பூர்வ சாதனங்களிலிருந்து இவை ஒருவேளை எடுத்து எழுதப்பட்டிருந்ததும் ஆதலால் இந்தப் பேரை அவர்கள் கொடுத்திருக்கலாம். கிரேக்கு மொழிபெயர்ப்பைச் செய்தவர்கள் இதை இரண்டாகப் பிரித்து இவைகளுக்கு "விடப்பட்டவைகள்" அல்லது "அநுபந்தம்" என்று அர்த்தங்கொள்ளுகிற "பரலைப் பொமினு" என்ற பேரைத் தரித்தார்கள். முந்தின ஆகமங்களில் விடப்பட்டிருக்கிறவைகள் அநேகம் இவைகளில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நாளாகமம் என்று அர்த்தங்கொள்ளுகிற "குரானிக்கல்ஸ்" என்ற பெயர் முதலாவதாக ஜெரோம் என்பவனால் கொடுக்கப்பட்டது.

2. இவ்வாகமங்கள் எஸ்றா என்பவனால் எழுதப்பட்டன என்பது பொதுவான அபிப்பிராயம். I நாளா. 3. 19–24, செருபாபேலின் வம்சவரிசையை அலெக்சந்தர் காலம்வரைக்கும் காட்டியிருப்பதைப் பார்க்கில் அந்தப் பாகம் பின்னுள்ள ஒருவனால் கூட்டப்பட்டிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது.

3. இவ்வாகமங்களை நாலு விசேஷித்த பங்குகளாக வகுக்கலாம்.

### I. ஆதாம் முதல் எஸ்றாவின் காலம்வரைக்கும் உள்ள வம்ச அட்டவணைகள். (I நாளா. i–ix. 34.)

II. இஸ்ரவேலின் முந்தின ராஜாக்களாகிய சவுல் தாவீது என்பவர்களின் சரித்திரம். (I நாளா. ix. 35–xxix. 22.)

III. சாலொமோனுடைய ராஜ்யபார சரித்திரம். (I நாளா. xxix. 23–II நாளா ix.)

IV. பத்துக் கோத்திரத்தார் பிரிந்துபோனதுமுதல் நேபுகாத் நேச்சார் யூதராஜ்யத்தைக் கவிழ்த்துப்போட்டது வரையும் உள்ள யூதராஜ்யத்தின் சரித்திரம். (II நாளா. x–xxxvi.)

இவ்வாகமங்களில் ஆதாம் உண்டானதுமுதல் பாபிலோன் சிறையிருப்புவரைக்கும் உள்ள சபையின் சரித்திரத்தை அடக்கமாகக் காட்டியிருக்கிறது. சாதாரண கணக்கின்படி இவைகளில் 3468 வருஷகால சரித்திரம் அடங்கியிருக்கிறது.

4. இவ்வாகமங்கள் முந்தின ஆகமங்களுக்கு அநுபந்தம் என்று முன்சொன்னோம்; ஆதலால் சாமுவேலின் ஆகமங்கள் ராஜாக்களின் ஆகமங்கள் நாளாகமப் புஸ்தகங்கள் ஆகிய இவைகளை ஒத்துப்பார்த்து வாசித்தால் பிரயோஜனமாய் இருக்கும். இவ்வாகமங்களில் கண்டிராத அநேக விசேஷித்த காரியங்கள் முந்தின ஆகமங்களில் காட்டப்பட்டிருக்கின்றன. இவைகளில் எழுதப்பட்டிருக்கிற அநேக விசேஷித்த காரியங்கள் முந்தின புஸ்தகங்களில் எழுதப்படவும் இல்லை. கூட்டப்பட்ட விஷயங்கள் முந்தின சாதனங்களில் இருந்தும் பாரம்பரியங்களில் இருந்தும் எடுக்கப்பட்டிருக்கலாம். இவ்வாகமங்களும் மற்ற ஆகமங்களைப்போலவே திவ்விய அதிகாரம் உள்ளவைகளாக ஒப்புக்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன; ஆதலால் இவைகளில் அடங்கிய சரித்திரங்களும் உண்மையுள்ளவைகள் என்பதற்குச் சந்தேகம் இல்லை.[1]

1 விகற்பமாகக் காணப்படுகிறவைகள். 2 சாமு 24. 13ல் ஏழு வருஷப் பஞ்சம் என்றும், 1 நாளா. 21. 12ல் மூன்று வருஷப் பஞ்சம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. பின்னும் 2 சாமு. 8. 4ஐ 1 நாளா. 18. 4ம்; 2 சாமு. 23. 8ஐ 1 நாளா. 11. 11ம்; 1 ரா. 4. 26ஐ 2 நாளா. 9. 25ம் ஒத்துப்பார்க்க. இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாகக் காணப்படுவதால், இவைகளைக் காட்டிய ஆகமங்களில் பிழைகள் தப்பிதங்கள் இருக்கின்றன என்று சாதிக்கக்கூடாது. ஒரு நீண்ட விருத்தாந்தத்தைச் சுருக்கி இரண்டொரு வாக்கியத்தில் காட்டுவதில் விகற்பங்கள் காணப்படலாம். ஆனால் விருத்தாந்தத்தை முழுவதுமாய் அறிந்திருந்தால் அந்த விகற்பங்கள் விகற்பங்களாய்க் காணப்படாது.



நாளாகம புஸ்தகங்களிலிருந்து புதிய ஏற்பாட்டில் குறிப்பிட்டிருக்கிற வாக்கியங்கள்.

I நாளா. 17. 14. லூக். 1. 33.
„ 23. 13. எபி. 5. 4.
II நாளா. 3. 14. மத். 27. 51. எபி. 9. 5.
„ 19. 7. ரோ. 2. 11.

## 7. எஸ்றாவின் ஆகமம்.

1. நாளாகமங்களின் கடைசி மூன்று வாக்கியங்களும் எஸ்றாவின் ஆகமத்தின் முதல் மூன்று வாக்கியங்களும் ஒத்திருக்கிறதாலும், இரண்டு ஆகமங்களிலும் பாஷைநடையும் வாசகப்போக்கும் இசைவாய் இருக்கிறதாலும் அவைகள் முற்காலத்தில் ஒரே புஸ்தகமாய் இருக்கவேண்டும் என்று எண்ணப்படுவது உண்டு. எஸ்றாவின் ஆகமம் எப்போது, ஏன், அவாதியாய்ப் பிரிக்கப்பட்டதோ அது தெரியாது. கிரேக்கு மொழிபெயர்ப்பில் இதற்கு அவாதியாய் பேரிட்டிருக்கிறது. இது பின்வருகிற நெகேமியாவின் ஆகமத்தோடே சம்பந்தம் உள்ளதாய் இருக்கிறது. யூதர்கள் நெகேமியாவின் ஆகமத்தையும் எஸ்றாவின் ஆகமத்தையும் ஒரே புஸ்தகமாக எண்ணிவந்தார்கள்.

2. பாபிலோனில் யூதர்கள் எழுபதுவருஷம் சிறைகளாய் இருந்து திரும்பினபிற்பாடு உள்ள அவர்கள் சரித்திரத்தின் தொடர்ச்சியை இவ்வாகமம் காட்டுகிறது. இது கி. மு. 536. கோரேசு கட்டளைமுதல் கி. மு. 456. எஸ்றாவின் சீர்திருத்தம் வரையும் உள்ள எழுபது வருஷக்கால சரித்திரம் உள்ளது.

3. இதை இரண்டு பங்காக வகுக்கலாம்.

I. யூதர்கள் செருபாபேலோடே யூதேயாவுக்குத் திரும்பினதும் அநேக விதமான தடைகளுக்குப்பின்பு அவர்கள் எருசலேமில் தேவாலயத்தைக் கட்டி முடித்ததுமான சரித்திரம். (i–vi. அதி.)

II. எஸ்றா எருசலேமுக்கு வந்து அங்கே செய்த சீர்திருத்தம் அடங்கிய சரித்திரம். (vii–x. அதி.)

4. இவ்வாகமம் ஆகாய் சகரியா என்ற தீர்க்கதரிசிகளுடைய ஆகமங்களுக்குச் சம்பந்தம் உள்ளதாய் இருக்கிறது. எஸ்றா 5. அதிகாரத்தை ஆகாய். 1. 12ஓடும் சகரி. iii, iv. அதிகாரங்களோடும் ஒத்துப்பார்க்க. இவ்வாகமத்தின் மிச்சமான பங்கை எஸ்றாவே எழுதியிருக்கவேண்டும் என்று நினைக்கத்தகும்.

## 8. நெகேமியாவின் ஆகமம்.

1. இவ்வாகமத்தில் அடங்கிய சங்கதிகள் எஸ்றாவின் ஆகமத்தில் காட்டப்பட்டிருப்பவைகளுக்குச் சில வருஷங்களுக்குப் பின்பு நடந்தவைகள். நெகேமியா எஸ்றாவுக்குப் பதின்மூன்று வருஷங்களுக்குப் பிந்தி எருசலேமுக்கு வந்தான். அங்கே பன்னிரண்டு வருஷம் அரசாண்டபின் திரும்ப அர்த்தசஷ்டாவண்டைக்கு வந்தான். அந்த ராஜன் மறுபடியும் நெகேமியாவுக்கு அதிகாரம் கொடுக்க அவன் எருசலேமுக்கு மீளவும் திரும்பிப்போனான். அவன் ஏறக்குறைய முப்பத்து நாலு வருஷம் யூதர்மேல் துரைத்தனம் பண்ணினான். இவ்வாகமத்தை நெகேமியா எழுதினான் என்று பொதுப்படச் சொல்லப்படடிருக்கிறது. ஆனால் இதின் கடைசிப்பாகம் பிந்தினகாலத்தில் எழுதப்பட்டிருக்கவேண்டியது.

2. நெகேமியாவின் ஆகமத்தைப் பின்வருமாறு பிரிக்கலாம்.

I. நெகேமியா ராஜ கட்டளைபெற்று எருசலேமுக்குப் பிரயாணம் செய்த சரித்திரம். (அதி. i; ii. 11.)

II. சன்பல்லாத்து முதலியவர்களுடைய விரோதம் சாதித்ததும் பட்டணத்தின் மதில்களைத் திரும்பக் கட்டிமுடித்ததுமான சரித்திரம். (அதி. ii. 12–vii. 4.)

III. நெகேமியா செய்த முதலாவது சீர்திருத்தமும் கர்த்தரைச் சேவிக்கும்படியாகச் செய்த உடன்படிக்கை முத்தரிக்கப்பட்டதுமான சரித்திரம். (அதி. vii. 5–xii. 47.)

IV. நெகேமியா இரண்டாவதாகச் செய்த சீர்திருத்தம். (xiii. அதி.)

நெகேமியா ஆகமத்தோடு பழைய ஏற்பாட்டின் சரித்திரம் முடிகிறது. இது மனிதன் சிருஷ்டிப்புக்கு 3584 வருஷங்களுக்குப் பின்னும், கிறிஸ்துவுக்கு 420 வருஷங்களுக்கு முன்னும் வந்து நிற்கிறது. தீர்க்கதரிசிகளில் கடைசியாக வந்த மல்கியா நெகேமியாவின் காலத்தில் இருந்தான்.

## 9. எஸ்தரின் ஆகமம்.

1. இந்தப் புஸ்தகத்தில் எஸ்தருடைய சரித்திரம் காட்டப்பட்டிருப்பதால் எஸ்தரின் ஆகமம் என்று பெயர் வந்தது. இவ்வாகமத்தை எழுதினவன் இன்னான் என்பது தெரியாது. பற்



பல பேரைப்பற்றி தங்கள் தங்கள் அபிப்பிராயத்தை வெளியி[illegible]ட்டவர்கள் உண்டு. ஆனால்; பொதுவாக இது பார்சிய ராஜாவாகிய அகாஸ்வேருவினுடைய சரித்திரத்தில் இருந்து மொழி பெயர்க்கப்பட்ட சுருக்கம் என்று எண்ணப்படுகிறது. இந்த அகாஸ்வேரு, ஆர்றே சர்க்விஸ் லாங்கிமேனஸ் என்று சொல்எ[illegible]ர் உண்டு. ஆனால் அவன் ஆர்றே சர்க்விவின் தகப்பனும் [illegible]க்கத்தேசத்தின்மேல் படையெடுத்தவனுமாகிய சர்க்சேயாய் இரு[illegible]ண்டும். லாங்கிமேனசைப்பற்றி அவன் சர்க்சேயுக்குப் பின்பு பட்டத்துக்கு வந்தவன் என்றும் அவன் தாய் யூதஸ்திரீ என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆகமம் பார்சியாவின் சரித்திரத்தில் இருந்து எடுக்கப்பட்டதால் தேவநாமம் இதில் காணப்படவில்லை. மேலும் எஸ்தரை "ராஜாத்தி" என்றும் மொர்தெகாயை "யூதன்" என்றும் இதில் சொல்லி இருக்கிறது. "பூரீம்" என்கிற வார்த்தையும் பார்சியபதமாய் இருக்கிறது.

2. இவ்வாகமத்தைப் பின்சொல்லிய பிரகாரம் பகுக்கலாம்.

I. வஸ்திக்குப் பதிலாக எஸ்தர் ராஜாத்தியாக ஏற்படுத்தப்பட்டது. (i, ii. அதி.)

II. ஆமான் உயர்த்தப்பட்டதும் அவன் யூதருக்குச் செய்த சர்ப்பனையும். (iii. அதி.)

III. அதால் யூதருக்கு உண்டான இடுக்கண்கள், ஆமானுடைய சர்ப்பனை அவமாக்கப்பட்டது, யூதர்கள் தங்கள் சத்துருக்களை மேற்கொண்டது, பூரீம் பண்டிகை ஏற்படுத்தப்பட்டது. (iv–x. அதி.)

3. இவ்வாகமம் திவ்விய அதிகாரம் உடையதென்பதை யூதர்கள் எக்காலத்திலும் ஒப்புக்கொண்டு வந்தார்கள்; ஆனால் பஞ்சாகமங்களுக்கு ஒப்பந்தமாய் அல்ல, இரண்டாந்தரமாக அதைக் கனபக்தியுள்ளதாய் எண்ணினார்கள். அதில் காட்டப்பட்டிருக்கிற சங்கதிகள் உண்மை என்பதற்கு யூதர்கள் தலைமுறைதோறும் அநுசரித்துவருகிற பூரீம் பண்டிகை அத்தாட்சியாய் இருக்கிறது.[1] எஸ்தரின் கபிரேன் ஆகமம் பத்தாம் அதிகாரம் மூன்றாம் வாக்கியத்தோடே முடிகிறது. செப்துவஜென்தலத்தின் திருப்புதல்களில் அந்த அதிகாரத்தில் கூடப் பத்து

[1] யூதர்கள் இப்போதும் வருஷாந்தம் ஆதார் மாசத்தில் பூரீம் பண்டிகையைக் கொண்டாடி வருகிறார்கள். ஆதார் மாசம் பெப்புரவரி அல்லது மார்ச்சு மாசத்தில் பிறக்கிறது.

வாக்கியங்களும் பின்னும் ஆறு அதிகாரங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவைகள் எபிரெயுவில் இல்லாததால் தள்ளப்பட்டிருக்கின்றன.

## பாட்டாகமங்கள்.

வேதத்தின் முந்தின புஸ்தகங்களில் சில பாடங்கள் தவிர மற்றவைகள் எல்லாம் வாசகப்போக்காய் எழுதப்பட்டிருந்தன. ஆனால் யோபு, சங்கீதம், நீதிமொழி, பிரசங்கி, உன்னதப்பாட்டு ஆகிய இவ்வாகமங்கள் செய்யுளாக அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால் இவைகளுக்குப் பாட்டாகமங்கள் எனப் பேர் வந்தது.[1]

### 1. யோபின் ஆகமம்.

1. இவ்வாகமத்தில் யோபின் சரித்திரம் காட்டப்பட்டிருப்பதால் இதற்கு இந்தப் பேர் உண்டாயிற்று. அவன் ஊத்ஸ் தேசத்தில் இருந்தான். அவனுடைய விசேஷித்த தேவபக்தி அவனுக்குண்டான உபத்திரவங்கள் கடைசியாக அவன் முந்தின சீருக்கு வந்தது ஆகிய இவைகளைப்பற்றி இதில் சொல்லியிருக்கிறது. சிலர் ஊத்ஸ் தேசம் இதுமேயாவில் இருந்தது என்றும் வேறுசிலர் அது மெசொபொத்தாமியாவில் இருந்தது என்றும் சொல்வார்கள். ஆனால் அது இதுமேயா பலஸ்தீனவுக்கும் ஐப்பிராத்துவுக்கும் இடையில் வனாந்தர அராபியாவில் இருந்ததென்பதே பொதுவான அபிப்பிராயம். சிலர் ஆதி. 36. 33ல் சொல்லிய யோவாபு, யோபு என்று சொல்வார்கள். இவ்விரண்டுபேரும் ஒருவனைக் குறிக்கும் என்று சொல்வது பேர் ஒத்துமையினாலே சொல்லப்படுகிற அபிப்பிராயமே அல்லாமல் வேறல்ல. வேதாகமத்தைக் கிரேக்கில் மொழிபெயர்த்தவர்களும் இந்த அபிப்பிராயம் உடையவர்களாய் இருந்தார்கள். யோபு ஆபிரகாமின் காலத்திலாவது அல்லது அவன் காலத்துக்கும் மோசேயின் காலத்துக்கும் இடையிலாவது இருந்திருக்கவேண்டும் என்று எண்ணத்தகும். இவ்வாகமத்தை இன்னார் எழுதினார் என்பது நமக்குத் தெரியாது. சிலர் இதை யோபு எழுதி

[1] எபிரெயச் செய்யுள் F. அநுபந்தம் பார்க்க.



னான் என்றும் சிலர் எலிகூ அல்லது மோசே எழுதியிருக்கவேண்டும் என்றும் சிலர் தாவீதின் காலத்தில் அல்லது அவனுக்குப் பிந்தினகாலத்தில் ஒருவனால் இது எழுதப்பட்டிருக்கவேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். இந்தப் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற சங்கதி பூர்வீகமுள்ளதாய் இருப்பதால் இது பூர்வத்திலேயே எழுதப்பட்டிருக்கவேண்டும் என்று சாதிக்கவும் கூடாது. இவ்வாகமத்தின் ஆக்கியோனைப்பற்றிச் சொல்வதெல்லாம் அபிப்பிராயத்துக்கு உரியதே அல்லாமல் தெளிவான அறிவுக்கு உரியது அல்ல.

2. இவ்வாகமத்தில் காட்டப்பட்டிருக்கிற சங்கதி நடந்தவைகளோ அல்லது பாவனையோ என்பதைப் பார்ப்பது நலம். யோபு பாவனையான மனுஷன் அல்ல உள்ளபடி அவன் பூமியில் சஞ்சரித்த மனுஷன். அவனைப்பற்றி வேதாகமத்தின் மற்ற இடங்களிலும் காட்டப்பட்டிருக்கிறது. எசேக்கியேல் தீர்க்கதரிசியின் ஆகமம் 14. 14ல் அவனைப்பற்றி "நோவா தானியேல் யோபு ஆகிய இம்மூன்று புருஷரும் அதின் நடுவில் இருந்தாலும், அவர்கள் தங்கள் நீதியினால் தங்கள் ஆத்துமாக்களைமாத்திரம் தப்புவிப்பார்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. யோபோடே சொல்லப்பட்டிருக்கிற நோவாவும் தானியேலும் மனோபாவனையானவர்களாய் இராமல் இவ்வுலகில் சஞ்சரித்து ஜீவனம்பண்ணினவர்களாய் இருந்ததால் யோபும் அப்படிப்பட்டவனாய் இருக்கவேண்டும். யாக்கோபு தன் நிருபத்தில் (5. 11.) "யோபின் பொறுமையைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள், கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்" என்று சொல்லியிருப்பதைக் கவனிக்கையில் மனோதோற்றமான கட்டுக்கதையை உதாரணமாக எடுத்துக் காட்டியிருக்கமாட்டான் என்று சொல்லத்தகும். இவ்வாகமம் நாடகக் கவியான செய்யுளாய் இருக்கிறது. பூர்வத்திலேயும் யாப்பியல் அப்பியாசம் செய்யப்பட்டு வந்ததென்று இதால் அறிகிறோம். இக்காலத்தில் மனிதர் உயர்ந்த செய்யுள் நடையாய்ச் சம்பாஷணை செய்கிறதில்லை. அப்படியே முற்காலத்தோரும் செய்திருக்கமாட்டார்கள் என்று எண்ணவேண்டியதாய் இருக்கிறது. ஆனால் இதில் காட்டப்பட்டிருக்கிற சங்கதி மொத்தத்தில் நடந்தவைகள்தான் என்று ஒப்புக்கொள்ளப்பட்டால் அது போதுமானதாய் இருக்கிறது. அந்தச் சரித்திரம் சிறந்த செய்யுள் அலங்காரத்தோடே எழுதப்பட்டிருக்கிற சாடைகவிஞனுடைய திறமையைக் காட்டுகிறது. இது உலகத்தில் உள்ள சிறந்த செய்யுளில் ஒன்றாய் இருக்கிறது.

5548

கிறது; முந்தின எட்டும் கோராகின்[1] புத்திரர் பாடினதாகச் சொல்லப்படுகிறது. ஐம்பதாம் சங்கீதம் ஆசாப்பும் எழுபத்திரண்டு சாலொமோனும் பாடினதாகச் சொல்லப்படும். மற்று மூன்றும் இன்னார் பாடினது என்று தெரியாது.

**மூன்றாம் பிரிவு. 73–89.** முதல் பதினொன்றையும் ஆசாப்பு எழுதினான் என்றும் எண்பத்தாறும் சங்கீதம் தாவீதாலும் எண்பத்தொன்பது எஸ்ராகியனாகிய ஏத்தானாலும்[2] மற்று நாலும் கோராகின் புத்திரராலும் உண்டுபண்ணப்பட்டதாகவும் சொல்லப்படும்.

**நாலாம் பிரிவு. 90–106.** இவைகளில் மூன்றுக்கு மாத்திரம் பேர் கொடுக்கப்பட்டிருக்கிறது. தொண்ணூறு மோசேயினாலும் நூற்றொன்றும் நூற்று மூன்றும் தாவீதாலும் செய்யப்பட்டன; மற்றவைகள் யாரால் பாடப்பட்டன என்பது தெரியாது.

**ஐந்தாம் பிரிவு. 107–150.** இவைகளில் பதினைந்து தாவீதாலும் நூற்றிருபத்தேழ் சாலொமோனாலும் செய்யப்பட்டன. மீதியான இருபத்தெட்டும் யாரால் பாடப்பட்டது என்பது தெரியாது.

பெயர் காட்டப்படாத சங்கீதங்கள் இன்னாரால் உண்டுபண்ணப்பட்டது என்று தெரியாது. கிரேக்கத் திருப்புதலில் எரேமியா நூற்று முப்பத்தேழையும் ஆகாய் நூற்று நாற்பத்தாறையும் சகரியா நூற்று நாற்பத்தேழையும் பாடினதாகச் சொல்லியிருக்கிறது.

3. சங்கீதங்கள் இன்னாரால் பாடப்பட்டன என்று பெயர் குறிக்கப்பட்டிருக்கிறதே, அதை நம்பலாமா? இந்த நாமக்குறிப்புகள் கிரேக்க மொழிபெயர்ப்புக்கொத்த பூர்வம் உள்ளதாய் இருக்கிறது. அவைகள் சங்கீதங்கள் உண்டாக்கப்பட்ட போது குறிப்பிக்கப்பட்டதற்கு யாதொரு அத்தாட்சி இல்லை. சில பெயர்கள் முழுவதும் தப்பிதமாய்ப் போடப்பட்டிருக்கிறது. திருஷ்டாந்தமாக எழுபத்திரண்டாம் சங்கீதம் சாலொ

[1] கோராகின் புத்திரர் ஆலயத்தில் பாடினவர்களில் முக்கியஸ்தர். தாவீது அவர்களை ஆலயத்தின் வாசலைக் காக்கும்படியாகவும் தேவஸ்துதிகளைப் பாடுவதில் அதை நடத்தும்படியாகவும் ஏற்படுத்தினான். 1 நாளா. 9. 19. அவர்கள் யோசபாத்தின் காலத்தில் எழுந்து நின்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை மகா தொனியோடே கெம்பீரமாய்த் துதித்தார்கள். (2 நாளா. 20. 19.)

[2] எஸ்ராகியனாகிய ஏத்தான் மாகோலினுடைய நாலு குமாரரில் ஒருவன்; அவன் சாலொமோனுக்கு அடுத்த படியில் ஞானத்துக்குப் பேர் போனவனாய் இருந்தான். 1 இரா. 4. 31.



மோனால் எழுதப்படாமல் அவனைப்பற்றி எழுதினதாகத் தோன்றுகிறது. தாவீதின் காலத்தில் இராகத்தலைவனாய் இருந்த ஆசாப்பு எழுதினான் என்று சொல்லப்பட்டிருக்கிற சங்கீதங்கள், அவன் காலத்துக்குப் பிந்தி ஒருவேளை அவனுடைய சந்ததியில் எழும்பின ஆசாப்பு என்ற ஒருவனால் எழுதப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது. தாவீதால் எழுதப்பட்டதாகச் சொல்லப்படுகிற சில சங்கீதங்கள் அவனால் எழுதப்படவில்லை; இன்னாரால் எழுதப்பட்டது என்று பெயர் குறிக்கப்படாத சில சங்கீதங்கள் தாவீதால் எழுதப்பட்டும் இருக்கலாம்.

4. இவ்வாகமத்தில் ஐம்பத்து மூன்று சங்கீதங்களில் இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட சங்கீதங்கள் என்று சொல்லி இருக்கிறது. ஆலயக்கூடாரத்தில் அல்லது தேவாலயத்தில் பாடும்படி குறிக்கப்பட்டவர்களின் தலைவனுக்கு அவைகள் ஒப்புவிக்கப்பட்டிருக்கலாம். கோராகின் புத்திரரின் சங்கீதங்கள் என்று சொல்லப்பட்டவைகள் அவர்களால் எழுதப்பட்டவைகள். ஆரோகண சங்கீதங்கள்; பதினைந்து சங்கீதங்கள் இந்தப் பெயரால் வழங்கப்படுகின்றன. இஸ்ரவேலர் எருசலேமில் பண்டிகைகளைக் கொண்டாடும்படி போய் ஏறும் போது பாட நோக்கமாய் அவைகள் செய்யப்பட்டவைகள். அல்லேலூயா என்ற பதம் பத்துச் சங்கீதங்களின் முகப்பில் வருகிறது. அதற்குக் கர்த்தரைத் துதியுங்கள் என்று அர்த்தம். சேலா என்ற பதம் எழுபதுதரம் வருகிறது. இந்த வார்த்தை வருகிறபோது மெதுவாய்ப் பாடவேண்டும் என்று சிலரும் நிறுத்தவேண்டும் என்று மற்றவர்களும் அபிப்பிராயப்படுகிறார்கள்.[1]

5. சங்கீதங்களில் சிலவை எகோவாவின் கீதங்கள் என்றும் சிலவை எலோயீம் கீதங்கள் என்றும் சொல்லப்படுவது உண்டு. சங்கீதங்களை உண்டுபண்ணினவர்களில் சிலர் எகோவா என்ற பதத்தையும் சிலர் எலோயீம் என்ற பதத்தையும் வழங்கினதால் இப்பேர்கள் உண்டாயிற்று. ஆனால் நாம் பொருளின்படி அவைகளைப் பின்வருமாறு பிரிக்கலாம்.

போதக சங்கீதங்கள். நல்லார் பொல்லாருடைய இலட்சணம், அவர்களுக்கு உண்டாகும் பாக்கியம் நிர்ப்பாக்கியம்; 1, 5, 7, 9–12, 14, 15, 17, 24, 25, 32, 34, 36, 37, 50, 52, 53, 58, 73, 75, 84, 91, 92, 94, 112, 119, 121, 125, 127, 128, 133. தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் மாட்சிமை; 19, 119.

[1] சங்கீதங்கள் யாரால் எப்போது பாடப்பட்டன என்பதைப் பற்றி G. அநுபந்தம் பார்க்க.

மனிதனுடைய வாழ்நாட்களின் மாயை; 39, 49, 90. அதிகாரிகளுடைய கடமை; 82, 101. மனத்தாழ்மை; 131. துதிவணக்க கீதங்கள். தேவனுடைய தயவுகளையும் இரக்கங்களையும் விசேஷமாய் அவர் நல்லவர்களைப் பராமரித்து வருவதையும் உணர்ந்துவருவது; 23, 34, 36, 91, 100, 103, 107, 117, 121, 145, 146. தெய்வீக வல்லமை, மகிமை, இலட்சணங்கள்; 8, 19, 24, 29, 33, 47, 50, 65, 66, 76, 77, 93, 95–97, 99, 104, 111, 113–115, 134, 139, 147, 148, 150. தோத்திர கீதங்கள். தாம் தனியே பெற்றுக்கொண்ட உபகாரங்கள்; 9, 18, 22, 30, 34, 40, 75, 103, 108, 116, 118, 138, 144. இஸ்ரவேலருக்குப் பாராட்டப்பட்ட இரக்கங்கள்; 46, 48, 65, 66, 68, 76, 81, 85, 98, 105, 124, 126, 129, 135, 136, 149. தியான கீதங்கள். பாவ உணர்வு; 6, 25, 32, 38, 51, 102, 130, 143. உபத்திரவத்தில் தேவன்பேரில் நம்பிக்கை; 3, 16, 27, 31, 54, 56, 57, 61, 62, 71, 86. மனத்தளர்ச்சியிலும் தேவன்பேரில் நம்பிக்கை; 13, 22, 69, 77, 88, 143. கொடிய உபத்திரவத்தில் ஜெபித்தல்; 4, 5, 11, 28, 41, 55, 59, 64, 70, 109, 120, 140, 141, 143. திவ்விய ஆராதனைக்கு வராதபடி தடைப்பட்டபோது ஜெபித்தல்; 42, 43, 63, 84. தன் உத்தமத்துக்குத் தக்கதாக உதவிசெய்யும்படி ஜெபித்தல்; 7, 17, 26, 35. உபத்திரவம் துன்பமுள்ள காலத்திலே ஜெபித்தல்; 44, 60, 74, 79, 80, 83, 89, 94, 102, 129, 137. மற்றவர்களுக்காக விண்ணப்பம் செய்தல்; 20, 67, 122, 132, 144. விசேஷித்த தீர்க்கதரிசன சங்கீதங்கள்; 1, 16, 22, 40, 45, 68, 69, 72, 97, 110, 118. இவைகளில் அநேகம் மேசியாவைப்பற்றினது. சரித்திர சங்கீதங்கள்; 78, 105, 106.

6. சங்கீதங்கள் யாரால் எப்போது ஒரே ஆகமமாகச் சேர்க்கப்பட்டது என்பது நமக்குத் தெரியாது. யூதர்கள் இதை ஐந்து பிரிவுகள் அல்லது காண்டங்களாகப் பிரித்தார்கள். இதைப் பார்க்கும்போது பலகாலங்களில் பலரால் இவைகள் திரட்டிச் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும் என்று நினைக்கலாம். கடைசியாக எஸ்றாவும் அவன் சிநேகிதரும் இதை ஒரே ஆகமமாக சேர்த்தார்கள் என்று பொதுவாய்ச் சொல்லப்படுகிறது உண்டு.

7. சங்கீதங்களில் அநேகம் மேசியாவைப்பற்றிய தீர்க்கதரிசனங்களாய் இருக்கிறது. புதிய ஏற்பாட்டை எழுதினவர்களும் நம்முடைய ஆண்டவரும் அப்படியே சொல்லியிருக்கிறார்கள். ஏறக்குறைய ஐம்பது சங்கீதங்களிலிருந்து புதிய ஏற்பாட்டில் வாக்கியங்கள் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.



இரண்டாம் நூற்றுப்பத்தாம் சங்கீதங்கள் நேராய் மேசியாவைக்குறித்துப் பாடப்பட்டவைகள். பதினாறும் சங்கீதத்தில் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், இருபத்திரண்டில் அவர் சிலுவையில் மரணமடைவதையும், நாற்பத்தைந்தில் அவருடைய திவ்விய தன்மையையும், அறுபத்தெட்டில் அவர் பரம் ஏறுதலையும், பரிசுத்த ஆவியை அனுப்புவதையும், எழுபத்திரண்டில் அவருடைய ராஜரீகம் பூமியெங்கும் பரம்புவதையும், நூற்று முப்பத்திரண்டில் அவர் தாவீதின் வம்சத்தில் இருந்து எழும்புவதையும் குறித்துச் சொல்லியிருக்கிறது. நூற்றுப் பதினெட்டாம் சங்கீதம் 22ம் வாக்கியம் புதிய ஏற்பாட்டில் ஆறுதரம் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. அது கிறிஸ்து யூதர்களால் புறக்கணிக்கப்படுவதைப்பற்றிச் சொல்லுகிறது. கிறிஸ்துவானவர் பூமியில் இருந்தபோது சங்கீதங்களை அதிகமாய் உபயோகித்து வந்தார் என்பதற்குச் சந்தேகம் இல்லை. மத். 26. 30. மாற். 14. 26. அவர் இராப்போசனம் பண்ணினபின்பு ஒரு பாட்டைப் பாடினார் என்று சொல்லியிருக்கிறது. அது 113 முதல் 118வரையும் உள்ள சங்கீதங்களைக் குறிக்கலாம். இந்தச் சங்கீதங்களை யூதர்கள் பஸ்காவிலும் கூடாரப்பண்டிகையிலும் பாடுவார்கள். கிறிஸ்துவானவர் கடுந்துயரம் அடைந்தபோது 22. 1 வாக்கியத்தையும் அவர் தமது ஆவியை ஒப்புவித்தபோது 31. 5. வாக்கியத்தையும் சொல்லி ஜெபித்தார்.

8. சாப சங்கீதங்களைப்பற்றிப் பார்ப்பது நலம். தாவீதின் தன்மையைப் பார்க்கையில் அவன் சத்துருக்களுக்கு மன்னிப்பையும் இரக்கத்தையும் காட்டுகிறவனாய் இருந்தான் என்று அறிவோம். 1 சாமு. 24. 4–10; 26. 7–13. 2 சாமு. 1. 17–27; 4. 8–12; 19. 16–23. சில சங்கீதங்களில் தாவீது தன் சத்துருக்கள்பேரில் கொடிய சாபத்தைக் கூறுகிறான். இவைகளில் முக்கியமானது ஐம்பத்தைந்து அறுபத்தொன்பது நூற்றொன்பது நூற்று முப்பத்தேழு. பேதுரு அப்போஸ்தலன் 69. 25 எடுத்து உரைத்து அது யூதாசைக் குறிக்கும் என்று சொல்லியிருக்கிறான். காரியத்தைப் பார்க்கையில் குணப்படாமல் இருதயத்தைக் கடினப்படுத்துகிற பாவிகளின்மேல் வரும் தேவகோபத்தை அல்லது பயமுறுத்தலை அவன் தீர்க்கதரிசியாக எடுத்துக்காட்டுகிறதாய் எண்ணவேண்டியதாய் இருக்கிறது. மேலும் "உனக்கடுத்தவனைச் சிநேகித்து உன் சத்துருவைப் பகைப்பாயாக" என்று பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டது என்று சொல்லியதை வாசிக்கிறோம். இந்தச் சங்கீதங்களும் பூர்வ காலத்தைச் சேர்ந்ததாய் இருக்கின்றன. நம்முடைய ஆண்ட

வரோ "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்தில் இருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராய் இருப்பீர்கள்; அவர் தீயோர்மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்"[1] என்று போதித்திருக்கிறார். கிறிஸ்துமார்க்கம் யூதமார்க்கத்தைவிடச் சிறந்தது. யூதமார்க்க நீதிநெறிகள் மாட்சிமையானவைகள் என்றாலும் அவைகள் கிறிஸ்துமார்க்க நீதிநெறிகளைவிட மாட்சிமையுள்ளது அல்ல. நாம் மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள விரும்புவதுபோல நாமும் மற்றவர்களுக்கு மன்னிக்கிற சுபாவம் உள்ளவர்களாய் இருக்கவேண்டும். இவ்விதப் போதனை கிறிஸ்துவுக்கு முந்தின காலங்களில் அவ்வளவு பூரணமாயும் தெளிவாயும் அருளப்படவில்லை.

### சங்கீத ஆகமத்திலிருந்து புதிய ஏற்பாட்டில் குறிப்பிக்கப்பட்டிருக்கிற வாக்கியங்கள்.

| | |
|---|---|
| சங். 2. 1, 2. | அப். 4. 25, 26. |
| ,, ,, 7. | அப். 13. 33. எபி. 1. 5; 5. 5. |
| ,, 5. 9. | ரோ. 3. 13. |
| ,, 8. 2. | மத். 21. 16. |
| ,, ,, 4–6. | எபி. 2. 6–8. |
| ,, ,, 6. | 1 கொரி. 15. 27. |
| ,, 10. 7. | ரோ. 3. 14. |
| ,, 14. 1–3. | ரோ. 3. 10–12. |
| ,, 16. 8–11. | அப். 2. 25–28, 31. |
| ,, ,, 10. | அப். 13. 35. |
| ,, 18. 49. | ரோ. 15. 9. |
| ,, 19. 4. | ரோ. 10. 18. |
| ,, 22. 1. | மத். 27. 46. மாற். 15. 34. |
| ,, ,, 8. | மத். 27. 43. |
| ,, ,, 18. | மத். 27. 35. மாற். 15. 24. லூக். 23. 34. யோ. 19. 24. |
| சங். 22. 22. | எபி. 2. 12. |
| ,, 24. 1. | 1 கொரி. 10. 26. |
| ,, 31. 5. | லூக். 23. 46. |
| ,, 32. 1, 2. | ரோ. 4. 7, 8. |
| ,, 34. 12–16. | 1 பேது. 3. 10–12. |
| ,, 36. 1. | ரோ. 3. 18. |
| ,, 40. 6–8. | எபி. 10. 5–7. |
| ,, 41. 9. | யோவா. 13. 18. அப். 1. 16. |
| ,, 44. 22. | ரோ. 8. 35. |
| ,, 45. 6, 7. | எபி. 1. 8, 9. |
| ,, 51. 4. | ரோ. 3. 4. |
| ,, 68. 18. | எபே. 4. 8. |
| ,, 69. 4. | யோ. 15. 25. |
| ,, ,, 9. | யோ. 2. 17. ரோ. 15. 3. |
| ,, ,, 21. | மத். 27. 34, 48. மாற். 15. 36. லூக். 2[illegible]. 36. யோ. 19. 28, 29. |
| ,, ,, 22, 23. | ரோ. 11. 9, 10. |
| ,, ,, 25. | அப். 1. 20. |
| ,, 78. 2. | மத். 13. 35. |
| ,, ,, 24. | யோ. 6. 31. |
| ,, 82. 6. | யோ. 10. 34. |
| ,, 89. 20. | அப். 13. 22. |
| ,, 91. 11, 12. | மத். 4. 6. லூக். 4. 10, 11. |
| ,, 94. 11. | 1 கொரி. 3. 20. |
| ,, 95. 7–11. | எபி. 3. 7–11, 15; 4. 3, 5–7. |
| ,, 97. 7. | எபி. 1. 6. |
| ,, 102. 25–27. | எபி. 1. 10–12. |
| ,, 104. 4. | எபி. 1. 7. |
| ,, 109. 8. | அப். 1. 20. |
| ,, 110. 1. | மத். 22. 44. மாற். 12. 36. லூக். 20. 42. அப். 2. 34, 35. 1 கொரி. 15. 25. எபி. 1. 13. |
| ,, ,, 4. | எபி. 5. 6; 7. 17, 21. |
| ,, 112. 9. | 2 கொரி. 9. 9. |
| ,, 116. 10. | 2 கொரி. 4. 13. |
| ,, 117. 1. | ரோ. 15. 11. |
| ,, 118. 6. | எபி. 13. 6. |
| ,, ,, 22, 23. | மத். 21. 42. மாற். 12. 10, 11. லூக். 20. 17. அப். 4. 11. 1 பேது. 2. 7. |
| ,, ,, 25, 26. | மத். 21. 9. மாற். 11. 9. யோ. 12. 13. |
| ,, 132. 11, 17. | லூக். 1. 75. அப். 2. 30. |
| ,, 140. 3. | ரோ. 3. 13. |

[1] மத். 5, 44, 45.

## 3. நீதிமொழிகளின் ஆகமம்.

1. இவ்வாகமத்தின் கடைசி இரண்டு அதிகாரங்களைத்தவிர மற்றவைகள் எல்லாம் சாலொமோனால் எழுதப்பட்டிருக்கவேண்டும்; அல்லது அவனால் திரட்டிச் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால், 1. 1; 10. 1; 22. 17; 25. 1. காட்டப்பட்டிருக்கிற பேர்களைப் பார்க்கும்போதும் சில நீதிமொழிகள் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டிருக்கிறதைக் கவனிக்கும்போதும் (18. 8ஐ 26. 22ம்; 19. 24ஐ 26. 15ம்; 20. 16ஐ 27. 13ம்; 21. 9ஐ 25. 24ம்; 22. 3ஐ 27. 12ம். ஒத்துப்பார்க்க) முக்கியமாய் 25. 1 உரைக்கப்பட்டிருப்பதின்படி இந்த அதிகாரத்திலும் இதற்குப் பிந்தின அதிகாரங்களிலும் உள்ள நீதிமொழிகளை எசேக்கியாவின் மனிதர் எழுதினார்கள் என்பதை யோசிக்கும்போதும் இவ்வாகமம் இப்போதிருக்கிறபடி பல பெயரால் திரட்டப்பட்டிருக்கவேண்டும் என்று அநுமானிக்கலாம்.

2. சாலொமோனுடைய நீதிமொழிகள் மிகச் சிறந்ததாய் இருக்கிறது. 1 இரா. 4. 32. அவன் 3,000 நீதிமொழிகளை எழுதினான் என்று காட்டியிருக்கிறது; இவைகளிலிருந்து இவ்வாகமத்தில் அடங்கியிருக்கிறவைகளில் அநேகமாய் எடுத்து எழுதப்பட்டிருக்கலாம். இவ்வாகமத்தினால் உண்டாகும் போதனை யூதர்களுக்கு மிகத் தெளிவாய் இருக்கும்.

இதை நாலு பங்காகப் பிரிக்கலாம்.

**முதலாவது:** i-ix. அதி. இதை எழுதினது இன்னார் என்றும் இது எழுதப்பட்ட நோக்கம் இன்னது என்றும் காட்டி இருக்கிறது. இதிலே பரம ஞானத்தையும் மெய்யான தேவனுடைய அறிவையும் பற்றிக் காட்டி அவைகள் மெய்ப்பாக்கியத்துக்கு ஊற்று என்று விளக்குகிறான்.

**இரண்டாவது:** x-xxiv. அதி. இது சாலொமோனுடைய நீதிமொழிகள் என்று துவக்குகிறது. நடுப்பிராயம் உள்ளவர்களுக்கும் ஐசுவரியவான்களுக்கும் பெரியோர்களுக்கும் அடுத்த ஆலோசனைகள் இதில் சொல்லப்பட்டிருக்கிறது.

**மூன்றாவது:** xxv-xxix. அதி. எசேக்கியாவின் மனுஷர் பேர்த்து எழுதின சாலொமோனுடைய நீதிமொழிகள். மற்றப் பாகங்களிலுள்ள அநேக நீதிமொழிகள் இந்தப் பிரிவில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

**நாலாவது:** xxx, xxxi. அதி. ஒழிபியல். இதில் ஆகூர் லேமுவேல் என்பவர்களுடைய வசனங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. கடைசியாகச் சொல்லப்பட்ட இவ்விரண்டுபேரும் இன்னார் என்று நமக்குத் தெரியாது. 30. 1. சொல்லிய "உபதேசம்" என்பதற்குரிய எபிரெயுபதம் ஒரு இடத்தைக் குறிக்கும் என்று எண்ணுவார் உண்டு. அப்படியாகில் மாசாவின் ராஜாத்தியினுடைய குமாரன் ஆகூர் வசனித்த வாக்கியங்கள் என்றும் மாசாவின் ராஜாவினுடைய குமாரனாகிய லேமுவேலுக்கடுத்த வசனங்கள் என்றும் சொல்லத்தகும். இதைப் பார்க்கில் ஆகூரும் லேமுவேலும் சகோதரராய் இருக்கலாம்.



3. இந்த நீதிமொழிகளை மற்ற நீதிமொழிகளைப்போலவே பொருட்கருத்துக்கு இசைவாய் விஸ்தரிக்கவேண்டும். நீதிமொழி ஆகமத்தை நாம் வாசிக்கையில் பழைய புதிய ஏற்பாடுகளில் இதற்கு இசைவாய்க் காணப்படும் உதாரணங்களைக் கவனித்தால் அதினால் அதிகப் பிரயோஜனம் இருக்கும். திருஷ்டாந்தரமாக, நீதி. 1. 7. ரெகொபெயாம் [illegible] குமாரர், அத்தேனே ஞானிகள். 1. 10. பிலேயா[illegible]போத்து. 1. 32. சோதோம் நீரு. 3. 5, 6. எசேக்கியா, ஆபிரகாமின் வேலைக்காரன், நெகேமியா. [illegible] 33. பாஷா, ஆகாப்பு, ஏகூ, ஆசகேல், ஏசா; ஆபிரகாம், ஓபேத் ஏதோம். 4. 14. லோத்து, தாவீது, 4. 18, 19. நாத்தானியேல், கந்தாகே என்பவள் மந்திரி, கொருநேலியு; யூதர்கள், ஆகாப்பு. 5. 21. நாத்தானியேல், பாபேல், சோதோம் கொமோரா. 5. 22. அதோனி பேசேக்கு, ஆமான், யூதர்கள். 8. 17. யோசியா, சாமுவேல். 9. 8. தாவீது, பேதுரு. 10. 1. ஏசா. 10. 2. தீரு, ஐசுவரியவான்; நோவா, தானியேல். 10. 7. எலிசா, யோய்தா, தொற்கான், மரியாள்; அப்சலோம், யோயாக்கீம, சேபேல், எரோபெயாம். 10. 8. தாவீது, நமது ஆண்டவருடைய தாயார்; அமத்சியா. 10. 14. நாபால். 10. 23. அப்னேர். 10. 24. காஞனியர், பெல்சாத்சார், ஆகாப்பு, ஆமான்; அன்னான், எஸ்தர், சிமியோன். 10. 25. ஏலா, சிம்றி; ஆபிரகாம், தாவீது. 11. 2. மிரியாம், உசியா, நேபுகாத்நேச்சார்; தானியேல், யோசேப்பு. 11. 3. யோசேப்பு; சவுல். 11. 5, 6. ஆமான், அகித்தோப்பேல், தானியேல்மேல் குற்றம் சாட்டினவர்கள்; எஸ்தர், தாவீது. 11. 7. அப்சலோம், ஐசுவரியவான். 11. 10. மொர்தெகாய்; சிசெரா, அத்தாலியாள். 11. 21. பாபேலைக் கட்டினவர்கள், அதோனிசேதேக்கு; மேவிபோசேத்து, சாலொமோன், அபியாம். 12. 5. கேயேஷம், தானியேல்மேல் குற்றம்சாட்டினவர்கள். 12. 11. அபிமேலேக்கு, அப்சலோம், தெயுதாஸ், யூதாஸ் என்பவர்களைப் பின்பற்றினவர்கள். 12. 15. லோத்தின் மருமக்கள், பரி

சேயர்; மோசே, அப்பொல்லோ, யாக்கோபு, நாத்தானியேல். 12. 19. காலேப் யோசுவாவுக்கு; நாத்தான் தாவீதுக்கு; சேயாஸ், அனனியா, சப்பிராள். 12. 24, எரோபெயாம், யோசேப்பு. 13. 24. எலி, தாவீது. 14. 6. அத்தேனர். 14. 32. ஒய்னி, பினேகாஸ்; யாக்கோபு, ஸ்தேவான், பவுல். 15. 1. கிதியோன், அபிகாயில்; ரெகோபெயாம், பவுல், பர்னபா. 15. 8. சவுல், காயீன்; தானியேல். 15. 23. நாகமான் வேலைக்காரர், யோசேப்பு பார்வோனுக்கு, பவுல் சிறைச்சாலைக்காரனுக்கு. 16. 9. சவுல், யோசேப்பின் சகோதரர், பார்வோன் மகள், சமாரிய ஸ்திரீ. பவுல், சகேயு. 16. 18. நேபுகாத்நேச்சார், ஏரோது, பெருதாத்து. 17. 17. யோனத்தான். பர்சிலாய். 18. 22. ... வா. 19. 11. யோசேப்பு, தாவீது, மோசே. 21. 1. கோரேஸ், தரியு, நேபுகாத்நேச்சார். 21. 30. சனகரிப்பு, பார்வோன், ஏரோது. 22. 6. மோசே, சாமுவேல், தீமோத்தேயு. 25. 21. எலிசா. ... ஆகாப்பின் தீர்க்கதரிசிகள். 27. 17. மோசேயும் எத்திரோவும், பவுலை தீத்து. 27. 21. யோசேப்பு, பவுல், பர்னபா, பேதுரு. 28. 1. ஆதாம், ஏவாள், சீரியரின் சேனை; எலியா, சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ, பவுல். 28. 13. ஆதாம், காயீன், சவுல்; தாவீது, மனாசே, குணப்பட்ட கள்ளன், கெட்டகுமாரன். 28. 26. ஆசகேல், பேதுரு. 29. 25. குருடனின் தாய்தகப்பன்மார், நிக்கொதேமு, அரிமத்தியா ஊர் யோசேப்பு.

### நீதிமொழிகளின் ஆகமத்திலிருந்து புதிய ஏற்பாட்டில் திருப்பிக்கப்பட்டிருக்கிற வாக்கியங்கள்.

| | |
|---|---|
| அதி. 3. 11, 12. | எபி. 12. 5, 6. |
| ,, ,, 34. | யாக் 4. 6. 1 பேது. 5. 5. |
| ,, 10. 12. | 1 பேது. 4. 8. |
| ,, 24. 23. | யாக். 2. 1. |
| ,, 25. 6, 7. | லூக். 14. 8–10. |
| ,, ,, 21, 22. | ரோ. 12. 20. |
| ,, 26. 11. | 2 பேது. 2. 22. |
| ,, 27. 1. | யாக். 4. 13, 14. |

## 4. பிரசங்கியின் ஆகமம்.

1. இவ்வாகமத்துக்குக் கிரேக்கில் எக்கிலெசியாஸ்றெஸ் என்று பேர். அதற்குப் "பிரசங்கி" என்று அர்த்தம். எபிரெயு பாஷையில் கொஹிலெத் என்று பேர் வழங்கப்பட்டது. அத



ற்குக் கூட்டத்தைச் சேர்ப்பவன் அல்லது ஒரு கூட்டத்துக்குப் பிரசங்கிக்கிறவன் என்று அர்த்தமாம். இந்தப் பதம் பெண்பாலாக வருவதால் அந்த வார்த்தையை "ஞானம் ஞானத்தைப் பிரசங்கித்தல்" என்று நவீனகாலத்தோர் திருப்பியிருக்கிறார்கள். சாலொமோன் ஞானத்துக்குப் பேர்போனவன்; ஆனதால் அவன் அப்படிப்பட்ட ஞானத்திற்கு அவதாரப்புருஷன் என்று பிந்திய தலைமுறையார் அவனைக்குறித்து எண்ணங்கொண்டும் பாவனையாக இப்படிச் சொல்லப்படுகிறது.

2. சாலொமோன் தன் அஞ்ஞான மனைவிகளால் இழுப்புண்டு, அஞ்ஞானக் கிரியைகளைச் செய்ததின் நிமித்தம் தான் வயதுசென்ற காலத்தில் துக்கப்பட்டு மனந்திரும்பினபோது இவ்வாகமத்தை எழுதினான் என்று பூர்வ சபையார் ஏகமாய் நம்பினார்கள். 2 நாளா. 11. 17ல் யூதராஜ்யத்தார் "தாவீதும் சாலொமோனும் நடந்த வழியிலே மூன்றுவருஷமட்டும் நடந்தார்கள்" என்று சொல்லியதைப் பார்க்கையில் சாலொமோன் முதுமைப்பிராயத்தில் தாவீதின் வழிகளில் நடந்திருக்கவேண்டும் என்று அறியலாம். சாலொமோன் இவ்வாகமத்துக்கு ஆக்கியோன் அல்லவென்று நவீனசாஸ்திரிகளில் சிலர் எண்ணுவதுண்டு. இதில் சொல்லப்பட்டிருக்கிற விஷயங்கள் சாலொமோன் காலத்துக்கு உரியதல்லவென்றும், சாலொமோனால் எழுதப்பட்ட நீதிமொழிகள் உன்னதப்பாட்டு என்கிற ஆகமங்களின் வாசகநடைக்கும் இவ்வாகம வாசகநடைக்கும் வித்தியாசம் இருக்கிறதென்றும், 1. 12ல் நான் ராஜாவாய் "இருந்தேன்" என்று சொல்வதில் இவ்வாகமம் எழுதப்பட்டபோது சாலொமோன் ராஜாவாய் இருக்கவில்லை என்றும் காணப்படுவதால் இப்படிச் சாதிக்கிறார்கள். அப்படிச் சாதிக்கிறவர்கள் முதலாம் அதிகாரம் முதல் வாக்கியத்தைக்கொண்டு சாலொமோன் இவ்வாகமத்துக்கு ஆக்கியோன் அல்லவென்றும் இதை எழுதினவன்தான் சாலொமோன் என்று காட்ட நோக்கம் இல்லாமல் சாலொமோன் பேரால் இதை எழுதினான் என்றும் விஸ்தரிக்கிறார்கள். இதின் ஆக்கியோன் யாராய் இருந்தாலும் அது தேவன் புஸ்தகம் என்பதைப்பற்றி ஆட்சேபிப்பார் இல்லை.

3. "மெய்ப்பாக்கியத்தை ஆராய்ந்து தேடும்படியான" நோக்கமாய் இவ்வாகமம் எழுதப்பட்டிருக்கிறது. இவ்வாகமத்தில் முதல் பதினொரு வாக்கியங்களிலும் பிரசங்கி தான் தெளிவிக்கப்போகிற தாட்டாந்த காரியத்தை எடுத்துஉரைக்கிறார். i. 12–ii. 26ல் மெய்ப்பாக்கியத்தை ஞானத்திலும் இன்பத்திலும் கண்டுபிடிக்கக்கூடாது என்றும், iii–v. 20ல் வியாபாரவிஷயத்திலும்

உத்தியோகத்திலும் கண்டுபிடிக்கக்கூடாது என்றும், vi–viii. 15ல் ஐசுவரியத்தில் கண்டுபிடிக்கக்கூடாது என்றும், viii. 16–xii. 7ல் காட்டி தேவனைப்பற்றிய உத்தம விசுவாசத்தோடும் இனி வரும் ஜீவனைப்பற்றிய நம்பிக்கையோடும் இந்த ஜீவகாலத்தைச் சமாதானத்தோடே களிப்பாய் அநுபவிப்பதே மெய்ப் பாக்கியம் என்றும், முடிவுரையாக xii. 8–14ல். இவ்வாகமத்தில் தாம் தெளிவித்திருக்கிற தாட்டாந்த காரியத்தை மறுபடியும் சிறந்த விதமாய் எடுத்துக் காட்டியும் முடிக்கிறார்.

4. யூதர்கள் இதைச் செய்யுள் ஆகமமாக ஒப்புக்கொள்ளவில்லை. 3. 2–8; 7. 1–14; 11. 17; 12. 7. தவிர மற்றப்பாகம் எல்லாம் வாசக நடையாய் எழுதப்பட்டிருக்கிறது. "எல்லாம் மாய்கை." தேவன் தம்முடைய கிரியையை முடித்தபின்பு எல்லாம் "மிகவும் நல்லது" என்று கண்டார். தேவனுடைய கிரியைகள் வியர்த்தமாகப் படைக்கப்படவில்லை. மனிதர் உலகப்பொருளை உபயோகிக்கிற வகையாலும் அவைகளை அவர்கள் மிதமின்றி என்னுவதினாலும் அவர்களுக்கு அவைகள் மாயையாய் இருக்கின்றன.

## 5. சாலோமோனின் உன்னதப்பாட்டு.

1. இந்தப் புஸ்தகம் எபிரெயு பாஷையில் ஷிர் ஹஷிரிம் என்று அழைக்கப்பட்டது. அதின் அர்த்தம் "பாட்டுகளின் பாட்டு" அல்லது "மகா சிறந்த பாட்டு." சாலொமோன் இதை எழுதினான் என்று பொதுப்படச் சொல்லப்படும். 1 இரா. 4. 32ல் அவன் ஆயிரத்தைந்து பாட்டுகளைப் பாடினதாகச் சொல்லியிருக்கிறது. இது அவைகளில் ஒன்றாய் இருக்கலாம். இது எக்காலத்திலும் கனோன் அட்டவணையில் சேர்க்கப்பட்டு வந்திருக்கிறது. கிரேக்கு மொழிபெயர்ப்பிலும் இருக்கிறது. யோசேப்புஸ் சரித்திரக்காரன் எழுதிய வேதாகம அட்டவணையிலும் இது காட்டப்பட்டிருக்கிறது. பூர்வ கிறிஸ்தவர்கள் யாதொரு சந்தேகம் இன்றி இதை ஒப்புக்கொண்டார்கள். நவீனகாலத்தில் சிலர் இது மோககீதம் என்று சொல்லி அது திவ்விய அதிகாரம் உள்ளதல்லவென்று சாதிக்கிறார்கள். மறுஜென்மம் அடையாதவர்களுக்கு இது விளங்காவிட்டாலும் கிறிஸ்து இரட்சகர் "என் நேசர்" என்று சொல்லுகிற விசுவாசிக்கு இது நன்றாய் விளங்கும்.

2. உள்ளபடி சொல்லுகையில் இதிலே விவாக சம்பந்த நேசத்தைப்பற்றிக் காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் லௌகிக



நேச உபமானத்தைக்கொண்டு யெகோவாவுக்கும் யூத ஜனங்களுக்கும் உள்ள உடன்படிக்கையைக் காட்டுகிறதாக எண்ணி யூதர்கள் அதை வாசித்துவந்தார்கள். கிறிஸ்தவர்கள் இவ்வாகமம் கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் உள்ள ஐக்கியத்தைக் காட்டுகிறதாக நினைக்கிறார்கள்.

3. யூதர்கள் தங்களுடைய பிள்ளைகள் நிர்க்க அறிவடைகிறவரையும் அல்லது முப்பது வயதாகிறவரையும் இவ்வாகமத்தை வாசிக்கவொட்டாதிருந்தார்கள்.

## தீர்க்கதரிசன ஆகமங்கள்.

1. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன ஆகமங்கள் பதினாறு. எரேமியாவின் புலம்பல் அவன் தீர்க்கதரிசன ஆகமத்துக்கு அநுபந்தமாய் எண்ணப்படும். தீர்க்கதரிசன ஆகமங்கள் இரண்டு வகுப்பாகப் பிரிக்கப்படும். (1.) பெரிய தீர்க்கதரிசிகள்: ஏசாயா, எரேமியா, எசேக்கியேல், தானியேல். (2.) சின்ன தீர்க்கதரிசிகள்: ஓசியா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீகா, நாகூம், ஆபகூக், செப்பனியா, ஆகாய், சகரியா, மல்கியா. அவர்கள் பெரிய தீர்க்கதரிசிகள் சின்ன தீர்க்கதரிசிகள் என்று அழைக்கப்படுவது அவர்களுடைய சுயசரித்திரத்தினால் அல்ல, அவர்கள் எழுதின ஆகமங்களின் விஸ்தாரத்துக்குத் தக்கதாக அப்படி அழைக்கப்பட்டு இருக்கிறார்கள். எபிரெயுவிலாவது கிரேக்கிலாவது தமிழிலாவது அந்தத் தீர்க்கதரிசன ஆகமங்கள் காலக்கிரமப்படி வைக்கப்படவில்லை.

2. தீர்க்கதரிசன ஆகமங்களை நாம் சற்று ஆராயத் துவக்கு முன் தீர்க்கதரிசி, தீர்க்கதரிசனம் என்ற பதங்களுக்கு அர்த்தம் இன்னதென்பதை நாம் பார்க்கவேண்டும். சாதாரணமாய் அவ்வார்த்தைகள் மனிதருடைய புத்திக்கெட்டாத எதிர்கால காரியங்களை அறிவிப்பதைக் காட்டிய கருத்தாய் வழங்கப்படும். ஆனால், வேதாகமத்தில் இந்த அர்த்தத்தோடே மாத்திரம் வரும் என்று சொல்லக்கூடாது. தீர்க்கதரிசி என்பது சரியான கருத்தின்படி தேவனுடைய சித்தத்தை மனிதருக்கு வெளிப்படுத்தும்படி அவரால் அருளும் அதிகாரமும் பெற்று அனுப்பப்படுகிற அவருடைய தாசனைக் குறிக்கும். இந்த அர்த்தப்படி ஆபிரகாம் தீர்க்கதரிசி என்று அழைக்கப்படுகி

ருன். ஆதி. 20. 7. இந்த வார்த்தை முதலாவதாக அந்த இடத்தில் வருகிறது. ஆரோனும் அப்படியே அழைக்கப்படுகிறான். யாத். 7.1. ஆபிரகாமாவது ஆரோனாவது வரும் காரியங்களைத் தீர்க்கதரிசனமாக உரைத்திருப்பதில்லை. தானியேல் நேபுகாத்நேச்சாரின் சொப்பனத்தைச் சொல்லி அதின் அர்த்தத்தையும் அறிவித்துத் தன்னைத் தீர்க்கதரிசி எனக் காட்டினான். சமாரிய ஸ்திரீ தான் நடப்பித்திருந்த எல்லாக் காரியங்களையும் அவருக்குத் தெரியப்படுத்தினதினாலே கிறிஸ்துவைத் தீர்க்கதரிசி என்று சொன்னாள். இதினால் தீர்க்கதரிசிகள் வருங்காரியத்தை அறிவிக்கிறவர்களாக மாத்திரம் அல்ல; இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் உள்ள காரியங்களை அறிவிக்கிறவர்களாயும் இருந்தார்கள். தீர்க்கதரிசனம் என்ற பதம் சமஸ்கிருதத்தில் தூரத்துப்பார்வை நீண்டபார்வை என அர்த்தமாம்.

3. எதிர்கால காரியங்களைப்பற்றி தீர்க்கதரிசனம் உரைப்பது தீர்க்கதரிசிக்குரிய ஒரு விசேஷித்த இலட்சணம். அவைகள் படிப்படியே நிறைவேறிவருவதில் அவைகளை உரைத்தவர்கள் திவ்விய அதிகாரம் பெற்றவர்கள் என்று ரூபிக்கிறதாய் இருக்கிறது. திவ்விய அருளால் எழுதப்பட்ட மற்றச் செய்திகளைவிட தீர்க்கதரிசனங்களை மனிதர் இயற்கையாகக் கனமாய் எண்ணுவார்கள். தீர்க்கதரிசனம் அற்புதத் தன்மையுள்ளது. அவைகள் யாருக்கு உரைக்கப்பட்டதோ அவர்கள் அதைப் பிரியமாய் அங்கீகரிப்பார்கள்.

4. தேவன் தம்முடைய சித்தத்தைத் தீர்க்கதரிசிகளுக்குப் பலவிதமாய் வெளிப்படுத்தினார். சிலவேளைகளில் சொப்பனங்களினாலும் இரவில் தரிசனங்களினாலும் சிலவேளைகளில் தேவதூதனைக்கொண்டும் சிலவேளைகளில் அசரீரவாக்காயும் சிலவேளைகளில் மனிதரூபமாய்க் காணப்பட்டும் வெளிப்படுத்தினார். தேவன் பொதுப்பட தூரத்துக்காரியங்களை காட்சி அடையாளங்களின் மூலமாய்த் தீர்க்கதரிசிகளுக்குத் தெளிவாய்க் காட்டி அவர்கள் அந்தகரணங்களில் அதை உணர்த்தி தமது சித்தத்தை அவர்களுக்கு வெளிப்படுத்தினது உண்டு. ஆகவே தீர்க்கதரிசிகள் ஞானதிருஷ்டிக்காரர் என்றும், அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டது தரிசனம் அல்லது காட்சி என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

5. தீர்க்கதரிசன ஆகமங்களை எழுதினவர்களைப்பற்றி இப்போது பார்க்கப்போகிறோம். யூதர்கள் சீர்கெட்டுப்போய் இருந்தகாலங்களில் அந்தத் தீர்க்கதரிசிகள் எழும்பினார்கள். அவர்களில் முந்தினவன் தீர்க்கதரிசி உத்தியோகத்துக்கு வந்த



போது தாவீது சாலொமோனுடைய ராஜ்யம் பிரிக்கப்பட்டு நூறுவருஷங்களுக்கு மேலாகி இருந்தது. பத்துக்கோத்திரத்தார் பிரிந்து இஸ்ரவேல் ராஜ்யத்தாராய் இருந்தார்கள். யூதா பென்யமீன் கோத்திரத்தார்மாத்திரம் தாவீதின் குடும்பத்தாருக்கு கீழ் அமைந்திருந்தார்கள். தீர்க்கதரிசிகள் ஜனங்களை இன்மேலும் எச்சரித்தும் அவர்கள் "அந்நிய தேவர்களைப் பின்பற்றிவந்தார்கள்." இஸ்ரவேலின் ராஜாக்கள் ஒவ்வொருவரைப் பற்றியும் அவன் "கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்" என்று சொல்லியிருக்கிறது. யூதாராஜ்யத்தில் 388 வருஷங்களாக எழும்பின இருபது ராஜாக்களில் ஆசா, யோசபாத்து, உசியா, யோதாம், எசேக்கியா, யோசியா என்கிற ஆறுபேர்களைப்பற்றி மிகவும் புகழ்ச்சியாயும் மற்றவர்களைப்பற்றி மெச்சியும் சொல்லியிருக்கிறது. என்றாலும் சிலர் மிகவும் பொல்லாதவர்களாய் இருந்தார்கள். யோராம், ஆகாஸ், மனாசே, ஆமோன் என்றவர்கள் தேவாலயத்திலேயும் விக்கிரகத்தை ஏற்படுத்தி எருசலேமை இரத்தத்தால் நிரப்பினார்கள்; ஆதலால் தேவன் எபிரெயர்மேல் கோபங்கொண்டார். பத்துக் கோத்திரத்தாரும் அசீரியா ராஜாவாகிய சல்மனேசரால் சிறைகளாகக் கொண்டுபோகப்பட்டார்கள். யூத ராஜ்யத்தார் எழுபது வருஷம் சிறைகளாகப் பாபிலோனுக்கு நேபுகாத்நேச்சாரால் கொண்டுபோகப்பட்டார்கள். அவர்கள் பட்டணம் சுட்டெரிக்கப்பட்டு அவர்கள் ஆலயம் அழிக்கப்பட்டது.

6. இவ்வித ஆபத்துக்கள் எபிரெயர்மேல் விழ ஏதுவாய் இருக்கையில் முந்தின தீர்க்கதரிசிகள் எழும்பினார்கள். பத்துக் கோத்திரத்தார் சிறைகளாக்கப்படுமுன் யோனா, யோவேல், ஆமோஸ், ஏசாயா, மீகா என்கிற தீர்க்கதரிசிகள் அவர்கள்மேல் வரும் ஆக்கினையைக் கூறி மனந்திரும்பும்படி ஏவினார்கள். அதற்கும் யூத ராஜ்யத்தாருடைய சிறையிருப்புக்கும் இடையில் நாகூம், செப்பனியா, எரேமியா, ஆபகூக் எழும்பினார்கள். சிறையிருப்பின் காலத்தில் தானியேல், ஒபதியா, எசேக்கியேலும், சிறையிருப்புக்குப் பிந்தி ஆகாய், சகரியா, மல்கியாவும் தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். எச்சரிப்பின் மத்தியிலும் ஆறுதலான நம்பிக்கையின் வசனங்களையும் அவர்கள் உரைத்த தீர்க்கதரிசனங்களில் பார்க்கலாம். பாவிகளுக்கு வரும் தண்டனையைக் கூறுவதில் பக்தருக்கு ஆறுதலைக் கூறுவதும் தீர்க்கதரிசிகளுடைய முறைமையாய் இருந்தது. ஆகவே மேசியாவைப்பற்றிய அருமையான வாக்குத்தத்தங்களை அவர்களுக்கு எடுத்துக்காட்டி அவர்களைப் பலப்படுத்தினார்கள்

என்று பார்க்கிறோம். இப்படியாக இருள் உள்ள காலத்திலும் வெளிச்சம் காட்டப்பட்டது. தீர்க்கதரிசிகள் சடங்குப்பிரமாணத்தின் நோக்கத்தை எடுத்துக்காட்டியும் சன்மார்க்கப் பிரமாணத்தை முக்கியப்படுத்தியும் உணர்த்தியும் வரவர கிறிஸ்துவினால் உண்டாகிய இரட்சிப்பை அதிகமாய் மேன்மைப்படுத்தியும் பேசி இருக்கிறார்கள்.

7. கிறிஸ்துவின் பாடுகளையும் அதற்குப் பின் அவருக்கு வரும் மகிமையையும் தீர்க்கதரிசிகள் உரைத்திருக்கிறார்கள் என்பதை அறியாதவர்கள் தீர்க்கதரிசனங்களைச் சரியானபடி அறிந்துகொள்ளார்கள். தீர்க்கதரிசிகள் தாங்கள் முன்னுரைத்த எல்லாவற்றையும் தெளிவாய் அறிந்தார்கள் என்று சொல்வதற்கு ஏதுவில்லை. அவர்கள் அவைகளை அறியாதவர்களாயும் இருந்தார்கள். 2 பேது. 1. 19—21. தீர்க்கதரிசிகள் அவைகளை அறிந்தாலும் அறியாதிருந்தாலும் அவர்கள் வரப்போகிற மகிமையைப்பற்றி உரைத்தார்கள். அவர்கள் சொன்னவைகள் கிறிஸ்துவுக்குள் நிறைவேறிவருகிறது. கிறிஸ்துவையன்றியில் அந்தத் தீர்க்கதரிசனங்கள் வீணும் வியர்த்தமுமாய் இருக்கும். ஏற்றகாலத்தில் அவைகள் எல்லாம் கிறிஸ்துவில் பூரணமாய் நிறைவேறும்.

## 1. ஏசாயாவின் தீர்க்கதரிசன ஆகமம்.

1. எபிரெயுவில் வரிசைப் படுத்தப்பட்டிருக்கிறபடி ஏசாயாவின் ஆகமம் பெரிய தீர்க்கதரிசன ஆகமங்களுக்கும் மற்றெல்லாத் தீர்க்கதரிசன புஸ்தகங்களுக்கும் முதலில் வைக்கப்பட்டிருக்கிறது. யோனா, யோவேல், ஆமோஸ், ஓசியா, என்பவர்கள் ஏசாயாவுக்கு முந்தி தீர்க்கதரிசி உத்தியோகத்துக்கு வந்திருக்கவேண்டும். மீகா ஏசாயாவின் காலத்திலே தீர்க்கதரிசனம் உரைத்தான். ஏசாயாவின் சரித்திரத்தைப்பற்றி நமக்குத் தெரிவது கொஞ்சம். அவன் ஆமோத்சின்[1] குமாரன்; அவன் விவாகம் செய்திருந்தான்; அவனுக்குக் குமாரர் இருந்தார்கள்;[2] அவன் மனாசேயினால் வாளால் அறுப்புண்டதாக யூதரின் பாரம்பரியம் சொல்லுகிறது. இதை எபிரெயர்[3] நிருபத்தில் குறிப்பிட்டிருக்கிறதாகத் தோன்றுகிறது.

2. உசியா, யோதாம், ஆகாஸ், எசேக்கியா என்கிற யூத ராஜாக்களின்[4] காலத்தில் ஏசாயா தீர்க்கதரிசனம் உரைத்தான்.

[1] ஏசா. 1. 1. [2] ஏசா. 8. 1–4. [3] எபி. 11. 37. [4] ஏசா. 1. 1.



அவன் உசியாவின் கடைசி வருஷத்தில் உத்தியோகத்துக்கு வந்தவன் என்று வைத்துக்கொண்டாலும் எசேக்கியாவின் ஆளுகையின் முடிவுமட்டும் அறுபத்திரண்டு வருஷம் இடையே இருக்கிறது. அவ்வளவு காலமும் அவன் தீர்க்கதரிசனம் உரைத்ததாக எண்ணலாம். அவன் மனாசேயின் காலத்தில் தீர்க்கதரிசனம் சொன்னதாகக் காட்டப்படாததால் அவன் யூதருடைய பாரம்பரியம் சொல்லியபடி அவனால் கொல்லப்பட்டிருக்கலாம்.[1]

3. இவ்வாகமம் அறுபத்தாறு அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இதை ஏழு பங்காக வகுக்கலாம்.

I. i—vi. அதி. உசியா, யோதாம், என்கிற ராஜாக்களின் காலங்களில் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம். அந்தக் காலங்களில் யூதராஜ்யத்தார் செல்வமும் சேமமுமாய் வாழ்ந்திருந்தார்கள். இதில் ஜனங்களுடைய பாவங்களைத் தூண்டிக்காட்டி தேவஇரக்கங்களைப்பற்றி குறிப்பிட்டுப் பேசுகிறார். ஆறும் அதிகாரம் ஒருவகையான ஒழிபியல், அதில் தீர்க்கதரிசி உத்தியோகத்துக்கு அழைக்கப்பட்டதும் அப்போது நடந்த மாட்சிமையான காரியங்களும் காட்டப்பட்டிருக்கிறது.

II. vii—xii. அதி. இஸ்ரவேலரும் சீரியரும் ஒன்றுசேர்ந்து யூதராஜ்யத்துக்கு விரோதமாய் படையெடுப்பதையும் பிந்திய காலத்தில் அசீரியர் படையெடுத்து வருவதையும் பற்றிய தீர்க்கதரிசனம். ஆகாஸ் அசீரியருடன் உறவுகொண்டாடாதிருக்க எச்சரித்து, அசீரியருடைய சேனை கவிழ்க்கப்படுவதைப் பற்றி முன்னுரைத்து, விசேஷித்த இரட்சிப்பைப் பற்றிய வாக்குத்தத்தங்களை எடுத்துக் காட்டுகிறான்.

III. xiii—xxiii. அதி. தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்கும் விரோதிகளான பாபிலோனியர் அசீரி

[1] ஏசாயா என்பதற்கு "யேகோவாவின் இரட்சணியம்" என்று அர்த்தம். 8. 18ல் தீர்க்கதரிசி தன் பேரையும் தன் குமாரரின் பேர்களையும் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறான். அவன் ராஜவம்சத்தைச் சேர்ந்தவன் என்றும் அவன் அமத்சியா ராஜாவின் சகோதரன் மகன் என்றும் மனாசேயின் மாமன் என்றும் தன் மருமகனாலே அவன் கொல்லப்பட்டான் என்றும் யூதர்களின் பாரம்பரியத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

யர் முதலான ஜாதியாருக்கு விரோதமான தீர்க்கதரிசனம். இதிலே எருசலேமியரும் ராஜ அரமனையில் உயர்ந்த உத்தியோகம் பார்த்த ஒருவனும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். (xxii. அதி.) இவர்கள் அஞ்ஞானிகளுடைய பாவங்களினால் கறைப்பட்டிருந்தார்கள்.

IV. xxiv—xxvii. அதி. தேவன் ஆக்கினையைச் செலுத்துவதிலும் இரக்கத்தைப் பாராட்டுவதிலும் அவருடைய தயவுள்ள நோக்கங்கள் பயன்களைப்பற்றி பொதுவாகச் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம்.

V. xxviii—xxxv. அதி. எசேக்கியாவின் காலத்தில் யூதா இஸ்ரவேல் ராஜ்யத்தாருடைய பாவங்களை எடுத்துக் காட்டி, இரக்கமான வாக்குத்தத்தங்களைக் கூறி, அவர்களை உபத்திரவப்படுத்துகிறவர்களுக்கு வரும் தண்டனையை எடுத்துக் காட்டியிருக்கிறது.

VI. xxxvi—xxxix. அதி. சனகெரிப்பு படைஎடுத்து வந்ததையும், அவன் மடிவதையும் எசேக்கியாவின் பெருமையையும் எடுத்துரைத்து, இனிவரும் ஆக்கினையையும் எடுத்து விளக்கிக் காட்டியிருக்கிறது.

VII. xl—lxvi. அதி. மெய்இஸ்ரவேலருக்கு தேவன் காட்டும் இரக்கங்களைப்பற்றிய தீர்க்கதரிசனம். இதை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். (1.) xl—l. அதி. தேவன் தமது ஜனங்களுக்கு நீதியுள்ள இரட்சகராக வெளிப்படுவதைப்பற்றி தீர்க்கதரிசி எடுத்துக் காட்டும் நியாயங்கள். (2.) அதி. li—lvi. 8. மேசியாவில் இந்த இரட்சண்ணிய வெளிப்படுத்தல் உண்டாவதைக் கூறி, அவருடைய கிரியையின் மகிமையான பயனை எடுத்துச் சொல்லுகிறான். (3.) அதி. lvi. 9—lxvi. பூர்வ இஸ்ரவேல் சபையைவிட இலட்சணம் சலாக்கியம் முதலியவைகளில் கிறிஸ்து சபை மேன்மைபொருந்தியது எனக் காட்டுகிறான்.

4. கடைசியாக வருகிற 27 அதிகாரங்களைப்பற்றி அவைகள் பிந்தியகாலத்தில் அல்லது பாபிலோன் சிறையிருப்பு முடிவதற்குச் சற்று முந்தி பேர் தெரியாத ஒருவரால் அல்லது பலரால் எழுதப்பட்டிருக்கவேண்டும் என்று நவீன விரோதிகள் எண்ணுகிறார்கள். எசாயாவினால் எழுதப்பட்டது என்று சொல்லப்படுகிற பாகத்தின் நடைக்கும் ஆட்சேபிக்கப்படுகிற பாகத்



தின் நடைக்கும் வித்தியாசம் இருக்கிறது என்றும் ஆட்சேபனை பாகத்தில் கல்தேய வார்த்தைகள் உபயோகிக்கப்பட்டிருக்கிறது என்றும் அந்த விரோதிகள் சொல்லுகிறார்கள். ஆனால் தேறின நுட்பசாஸ்திரிகள் இந்த ஆட்சேபனைகளுக்கு தகுந்த ஆதாரம் இல்லை என்றும் அந்தப் புஸ்தகம் முழுவதும் எசாயாவினால் எழுதப்பட்டது என்பதற்கு சிறந்த அத்தாட்சிகள் உண்டென்றும் சொல்லுகிறார்கள். கோரேசுடைய கட்டளையில் (எஸ்றா. 1. அதி.) சொல்லப்பட்டிருக்கிற வார்த்தைகளில் அநேகம் எசாயாவின் ஆகமம் கடைசி அதிகாரங்களில் வருகிறது. யோசேப்புஸ் சரித்திரக்காரன் கோரேஸ் தன்னைப்பற்றி முன் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனத்தை அறிந்து, யூதர்கள் தங்கள் சொந்த தேசத்துக்குத் திரும்பிப்போகும்படியாக உத்தரவுகொடுத்தான் என்று சொல்லியிருக்கிறான். இந்தத் தீர்க்கதரிசனம் எசாயாவினால் எழுதப்படவில்லை என்றால், கோரேசை வஞ்சிக்கும்படியாக ஒருவன் அந்த ராஜனின் பேரை சுட்டிக்காட்டி எழுத, அந்த ராயன் அதால் வஞ்சிக்கப்பட்டுப்போனான் என்று சொல்லவேண்டியதாய் வரும். இது கூடிய காரியமாய் இருக்குமா? மத். 3. 3; 12. 17. யோவா. 12. 38. ரோ. 10. 20ல் எசாயாவின் பின்பங்கிலிருந்து வாக்கியங்கள் எடுத்து உரைக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய ஆண்டவரும் அவருடைய அப்போஸ்தலரும் அவைகள் எசாயாவினால் உரைக்கப்பட்டதாகச் சொல்லியிருப்பதாலும் நாசரேத்தூர் ஜெபாலயத்தில் நம்முடைய இரட்சகர் கையில் எசாயாவின் ஆகமம் கொடுக்கப்பட்டது என்றும் அவர் அதைத் திறந்து 40. 1—3 வாசித்தார் என்றும் சொல்லியிருப்பதாலும் பின்பங்கும் எசாயாவினால் எழுதப்பட்டதாக விளங்குகிறது. லூக். 4. 17—19.

5. இந்தக் கடைசிப்பாகத்தை எசாயா வயதுசென்ற காலத்தில் வீட்டோட்டாய் இருக்கையில் எழுதியிருக்கலாம். அவன் உசியாவின் சரித்திரத்தையும் (2 நாளா. 26. 22.) எசேக்கியாவின் சரித்திரத்தையும் (2 நாளா. 32. 32.) எழுதினதாக வாசிக்கிறோம். அவன் பேரால் விளங்கிய தள்ளுபடி ஆகமங்களும் உண்டு, அவைகள் "எசாயாவினுடைய பரமேறுதல்" "எசாயாவின் அறிவிப்பு." இவ்விரண்டையும் ஒருவன் எழுதி அவன் பேரைக் கொடுத்திருக்கலாம்.

6. எசாயா "சுவிசேஷ தீர்க்கதரிசி" என்று அழைக்கப்படுகிறான். இவ்வாகமத்தில் மேசியாவின் வருகையைப்பற்றியும் அவர் ஸ்தாபிக்கும் ராஜ்யத்தின் வினையும் ஆசீர்வாதங்களைப்பற்றியும் விஸ்தாரமாய்ப் பேசியிருக்கிறான். கிறிஸ்துவானவ

தின் தெய்வீகதன்மை, ஏசா. 7. 14; 9. 6. அவர் ஈசாயில் தோன்றுவது, 11. 1. அவர் தீர்க்கதரிசி, 42. 1, 6, 7; 49. 1; 55. 4, 5. ஆசாரியர், 53. 12. ராஜா, 9. 6, 7; 32. 1, 2. அவருடைய முன் தூதன், 40. 3, 4. அவருடைய பிரசங்கம், 61. 1, 2. அவருடைய அற்புதங்கள், 35. 5. அவர் புறக்கணிக்கப்படுதல், 53. 3. பாவங்களுக்காகப் படும் பாடுகள், 50. 6; 53. 4—11. அவருடைய மரணம், அடக்கம், 53. 9—12. மரணத்தின்மேல் ஜெயம், 25. 8; 53. 10—12. அவருடைய ராஜ்யத்தின் பெருக்கம், 9. 7; 11. 4–10; 59. 19 ஆகிய இவைகளைப்பற்றி முன் உரைத்திருக்கிறான்.

### ஏசாயாவின் ஆகமத்திலிருந்து புதிய ஏற்பாட்டில் குறிப்பிக்கப்பட்டிருக்கிற வாக்கியங்கள்.

| | | | |
|---|---|---|---|
| அதி. | 1. | 9. | ரோ. 9. 29. |
| ,, | 5. | 1, 2. | மத். 21. 33. |
| ,, | 6. | 9, 10. | மத். 13. 14, 15. மாற். 4. 11, 12. லூக். 8. 10. யோவா. 12. 40, 41. அப். 28. 26, 27. |
| ,, | 7. | 14. | மத். 1. 23. லூக். 1. 31, 35. |
| ,, | 8. | 12, 13. | 1 பேது. 3. 14, 15. |
| ,, | ,, | 14. | ரோ. 9. 33. 1 பேது. 2. 8. |
| ,, | ,, | 18. | எபி. 2. 13. |
| ,, | 9. | 1, 2. | மத். 4. 14—16. |
| ,, | ,, | 7. | லூக். 1. 32, 33. |
| ,, | 10. | 22, 23. | ரோ. 9. 27, 28. |
| ,, | 11. | 10. | ரோ. 15. 10—12. |
| ,, | 13. | 10. | மத். 24. 29. மாற். 13. 24. |
| ,, | 21. | 9. | வெளி. 18. 2. |
| ,, | 22. | 13. | 1 கொரி. 15. 32. |
| ,, | ,, | 22. | வெளி. 3. 7. |
| ,, | 25. | 8. | 1 கொரி. 15. 54. |
| ,, | 28. | 11, 12. | 1 கொரி. 14. 21. |
| ,, | ,, | 16. | ரோ. 9. 33; 10. 11. 1 பேது. 2. 6—8. |
| ,, | 29. | 10. | ரோ. 11. 8. |
| ,, | ,, | 13. | மத். 15. 7, 9. மாற். 7. 6, 7. |
| ,, | ,, | 14. | 1 கொரி. 1. 19. |
| ,, | 35. | 5, 6. | மத். 11. 5. |
| ,, | 40. | 3. | மத். 3. 3. மாற். 1. 2, 3. லூக். 3. 3, 4. யோவா. 1. 23. |



| | | | |
|---|---|---|---|
| அதி. | 40. | 6. | 1 பேது. 1. 24. |
| ,, | ,, | 13. | ரோ. 11. 34. |
| ,, | 42. | 1—4. | மத். 12. 18—21. |
| ,, | 44. | 3. | யோவா. 7. 38, 39. |
| ,, | 45. | 9. | ரோ. 9. 20. |
| ,, | ,, | 23. | ரோ. 14. 11. |
| ,, | 49. | 6. | அப். 13. 47. |
| ,, | ,, | 8. | 2 கொரி. 6. 2. |
| ,, | 51. | 6. | 2 பேது. 3. 10—13. |
| ,, | 52. | 5. | ரோ. 2. 24. |
| ,, | ,, | 7. | ரோ. 10 15. |
| ,, | ,, | 11, 12. | 2 கொரி. 6. 17, 18. |
| ,, | ,, | 15. | ரோ. 15. 21. |
| ,, | 53. | 1. | யோவா. 12. 38. ரோ. 10. 16. |
| ,, | ,, | 4. | மத். 8. 17. |
| ,, | ,, | 5. | 1 பேது. 2. 24. |
| ,, | ,, | 7, 8. | அப். 8. 32, 33. |
| ,, | ,, | 9. | மத். 27. 57. |
| ,, | ,, | 12. | மாற். 15. 28. எபி. 7. 25. |
| ,, | 54. | 1. | கலா. 4. 27. |
| ,, | ,, | 13. | யோவா. 6. 45. |
| ,, | 55. | 3. | அப். 13. 34. |
| ,, | 56. | 7. | மத். 21. 13. மாற். 11. 17. லூக். 19. 46. |
| ,, | 59. | 7, 8. | ரோ. 3. 15. |
| ,, | ,, | 20. | ரோ. 11. 26. |
| ,, | 60. | 19. | வெளி. 21. 22, 23. |
| ,, | 61. | 1, 2. | லூக். 4. 18, 19. |
| ,, | 63. | 1, 2. | வெளி. 19. 13. |
| ,, | 64. | 4. | 1 கொரி. 2. 9. |
| ,, | 65. | 1. | ரோ. 10. 20. |
| ,, | 66. | 1, 2. | அப். 7. 49, 50. |
| ,, | ,, | 24. | மாற். 9. 44. |

## 2. எரேமியாவின் ஆகமம்.

1. ஏசாயா தன் ஜனத்தாரை சீர்திருத்தும்படியாகப் பார்த்தான். எரேமியா இருதயத்தைக் கடினப்படுத்தி இருந்த அவர்களுக்குச் சீக்கிரமாய் வரப்போகிற தீங்கை அதாவது அவர்கள் தேச அழிவைப்பற்றி வெளிப்படுத்தி, சஞ்சலத்தோடும் பெருமூச்சோடும் அங்கலாய்ப்போடும் அவர்களுக்குப் புத்திசொல்லுகிறான். அதினால் அவன் "அழுகிற தீர்க்கதரிசி" என்று

அழைக்கப்படுவது உண்டு. அவன் பேருக்கு அர்த்தம் "எகோவாவை உயர்த்துகிறவன்."

2. அவன் இல்க்கியாவின் குமாரன்; ஆனதோத் ஊரில் இருந்த ஆசாரியர்களில் ஒருவன். ஆனதோத் ஊர் எருசலேமுக்குச் சமீபமாய்ப் பென்யமீன் கோத்திரத்தில் இருந்தது. யோசியா அரசாண்ட பதின்மூன்றாம் வருஷத்தில் வாலிபப் பிராயத்தில் (1. 6.) தீர்க்கதரிசி உத்தியோகத்துக்கு அழைக்கப்பட்டான் (1. 2; 25. 3.). அவன் யோசியா, யோவாகாசு, யோயாக்கீம், யோயாக்கீன் சிதேக்கியா ராஜாக்களின் காலத்தில் தீர்க்கதரிசனம் உரைத்தான். சிலர் தேவாலயத்தில் நியாயப்பிரமாணப் புஸ்தகத்தைக் கண்டுபிடித்த (2 ராஜா. 22. 2 நாளா. 34.) பிரதான ஆசாரியனாகிய இல்க்கியா அவன் தகப்பன் என்பார்கள்; ஆனால் தேறின நுட்பசாஸ்திரிகள் இதை அநுசரிக்கிறதில்லை. அவன் ஆனதோத்தில் சில வருஷங்களைப் பின்னிட்டு யூதாவின் பட்டணங்களுக்குப் போய் ஆலயத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புஸ்தகத்தின் பொருளை ஜனங்களுக்குப் போதித்துவந்தான். ஊராருடைய உபத்திரவத்தின் நிமித்தமும் தன் இனத்தாரில் சிலருடைய துன்பத்தின் நிமித்தமும் தேவ உத்தரவின் பேரில் அவன் ஆனதோத்தை விட்டு எருசலேமுக்கு வந்தான். யோசியாவின் காலத்தில் மார்க்க சீர்திருத்தத்துக்கு அவன் வெகு உதவியாய் இருந்திருப்பான் என்பதற்குச் சந்தேகம் இல்லை. அவன் சல்லூம் அல்லது யோவாகாசைப்[1] பற்றிச் சொல்லியிருப்பதைக் கவனிக்கையில் அந்த ராஜாவின் சுருக்கமான ஆளுகையிலே யாதொரு தடையில்லாமல் தீர்க்கதரிசனம் உரைத்ததாகத் தோன்றுகிறது. எரே. 22. 10—12. ஆனால் யோயாக்கீம் பட்டத்துக்கு வந்தபோது எரேமியாவுக்குத் தடைகள் நேரிட்டது. "தீர்க்கதரிசிகளும் ஆசாரியரும் ஜனங்களும் அவன்மேல் குற்றஞ்சாட்டி அவன் பட்டணத்துக்கு விரோதமாய்த் தீர்க்கதரிசனம் உரைத்ததால் அவனைக் கொலைசெய்யவேண்டும்"[2] என்று சொன்னார்கள். 26. 8, 9. பிரபுக்களோ அவனை மரண ஆக்கினைக்குட்படுத்தப் பிரியப்படாமல் கட்டுக்காவலுக்குள்ளாய் வைத்தார்கள். அப்போது, அவன் தேவஉத்தரவு பெற்று தான் உரைத்தவைகளைப் புஸ்தகத்தில் எழுதினான். அவன் அப்படிச் செய்து, தன் சிநேகிதனும் விகிதனுமாகிய பாருக்கை அனுப்பி, ஆலயத்தில் ஒரு உபவாசநாளில் ஜனங்களுக்கு அதை வாசிக்கச் சொன்னான். பிரபுக்கள்

[1] எரே. 22. 10—12. [2] 26. அதி.



எரேமியாவையும் பாருக்கையும் ஒழித்துக்கொள்ளச் சொல்லி, சுருளை எடுத்து ராஜாவண்டைக்குக் கொண்டுபோய் வாசித்தார்கள். ராஜா மூன்று நாலு பத்திகளை வாசிக்கக் கேட்டவுடனே, சுருளைத் துண்டு துண்டாக அறுத்து நெருப்பில் போட்டுவிட்டு, எரேமியாவையும் பாருக்கையும் பிடிக்கும்படி உத்தரவு கொடுத்தான்; ஆனால், தேவன் அவர்கள் அகப்படாதபடி அவர்களை மறைத்தார். சுட்டெரிக்கப்பட்ட புஸ்தகத்தின் வார்த்தைகளை எல்லாம் எரேமியா தேவஉத்தரவின்படி சொல்ல, பாருக் அவைகளைத் திரும்ப ஒரு சுருளில் எழுதினான். அவைகளோடேகூட இன்னும் அநேக வார்த்தைகளும் சேர்க்கப்பட்டன.[1]

3. யோயாக்கீன் ராஜாவின் சுருக்கமான ஆளுகையின் காலத்தில் தீர்க்கதரிசி எச்சரிப்பைக் கூறிவந்தான்; அதினால் பலிதம் உண்டாகவில்லை.[2] 22. 24—30. இந்த ராஜனின் காலத்திலே ஆலயத்தின் பிரதான விசாரணைத்தலைவனாகிய பஸ்கூர் அவனைப் பிடித்துக் காவலறையிலே போட்டு, அடுத்தநாளில் அவனை விடுதலைசெய்தான் என்று தோன்றுகிறது.[3]

4. சிதேக்கியாவின் காலத்தில் எரேமியா அடிக்கடி சிறைச்சாலையில் போடப்பட்டான். முப்பத்தெட்டாம் அதிகாரத்தில் சொல்லியபடி எரேமியா பிரபுக்களால் உளையான துரவிலே இறக்கிவிடப்பட்டான்; ஆனால் ராஜாவின் உத்தரவுப்படி அதிலிருந்து அவன் எடுத்துவிடப்பட்டு நேபுகாத்நேச்சார் பட்டணத்தைப் பிடிக்கும்மட்டும் சிறைச்சாலையில் வைக்கப்பட்டான். நேபுகாத்நேச்சார் எருசலேமைப் பிடித்தபின்பு அவனை விடுதலையாக்கி அவனுக்கு மனமானால் பாபிலோனுக்குப் போகவும் அல்லவென்றால் தேசத்தில் இருக்கவும்[4] உத்தரவுகொடுத்தான். அவனோ மிஸ்பாவில் கெதலியாவோடே இருக்க விருப்பங்கொண்டான். கெதலியா கொன்றுபோடப்பட்டபோது அவன் எகிப்துக்கு ஓடிப்போகும்படி பலவந்தம் பண்ணப்பட்டான்.[5] அங்கே இருந்தபோது எகிப்து சீக்கிரமாய் நேபுகாத்நேச்சாரால் அழிக்கப்படும் என்பதை உரைத்து,[6] யூதரைக் கர்த்

[1] 36. அதி. சுருள் சுட்டெரிக்கப்பட்டதைப்பற்றி யூதர்கள் இந்நாள்வரையும் வருஷாந்த உற்சவங்கொண்டாடிவருகிறார்கள்.
[2] எரே. 22. 24—30ஐ 2 ராஜா. 24. 12முதல் ஒத்துப்பார்க்க. எரே. 13. 18. பார்க்க.
[3] எரே. 20. 1. அ.
[4] எரே. 38, 39. அதி.
[5] 40—43. அதி.
[6] 43. 3—13.

தரண்டைக்குத் திருப்பும்படி முயற்சித்தான்.[1] அவன் எருசலேம் பிடிபட்டதற்கு ஐந்து வருஷங்களுக்குப் பின்பு கி. மு. 583 மரித்ததாகத் தோன்றுகிறது. அந்த வருஷத்தில்தானே நேபுகாத்நேச்சார் எகிப்தையும் கட்டிக்கொண்டான். எரேமியா அதைத் தன் கண்களால் பார்க்கவில்லை. அவன் தன் ஜென்ம தேசத்தாரால் தக்பானேசில் கல்லெறிந்து கொல்லப்பட்டான் என்று ஒரு பாரம்பரியத்தில் சொல்லப்படுகிறதும் உண்டு. அவன் கல்லறை பிந்தியகாலத்தில் காய்ரோ பட்டணத்தில் காட்டப்பட்டதும் உண்டு. தள்ளுபடி ஆகமங்களில் ஒன்றாகிய மக்கபேர் ஆகமத்தில் அவனைப்பற்றி வேறே பாரம்பரியமும் சொல்லப்பட்டு இருக்கிறது; ஆனால் அதற்கு ஆதாரம் இல்லை.

5. எரேமியா என்பவன் செப்பனியா, ஆபகூக், எசேக்கியேல், தானியேல் என்ற தீர்க்கதரிசிகளுடைய காலத்தில் இருந்தான். அவன் ஆகமம் எபிரெயு பாஷையில் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் பத்தாம் அதிகாரம் பதினோராம் வாக்கியம் கல்தேய பாஷையில் எழுதப்பட்டிருக்கிறது. எழுபது வருஷச் சிறையிருப்பைப்பற்றி அவன் ஆகமத்தில் சொல்லப்பட்டிருப்பது தானியேலுக்குத் தெரிந்திருந்ததாக[2] வாசிக்கிறோம்.

6. இவ்வாகமத்தில் எழுதப்பட்டிருக்கிற தீர்க்கதரிசனங்கள் காலக்கிரமப்படி எழுதப்படவில்லை. அவைகளைக் காலக்கிரமப்படி வைப்பது வருத்தம். இப்படி எப்போது வைக்கப்பட்டதென்பதும் நமக்குத் தெரியாது. செப்துவஜெண்டில் அந்நிய ஜாதியாரைப்பற்றிய தீர்க்கதரிசனங்கள் 46—51. அதிகாரங்கள், 25ம் அதிகாரத்துக்குப் பின்பு வைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாகமத்தைப் பின்வருகிற பிரகாரமாய் வரிசைப்படுத்தலாம்.

I. நல்ல ராஜாவாகிய யோசியாவின் காலத்தில் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம். i—xii.

II. யோசியாவின் மூத்தகுமாரனாகிய யோயாக்கீம் காலத்தில் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம். xiii—xx, xxii, xxiii, xxv, xxvi, xxxv, xxxvi, xlv xlviii, xlix, 1—33.

III. யோசியாவின் இளையகுமாரனாகிய எகோனியாவின் பெரிய தகப்பனாகிய சிதேக்கியாவின் காலத்தில்

[1] 44. அதி. [2] தானி. 9. 2.



உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம். xxi, xxiv, xxvii xxxiv, xxxvii—xxxix, xlix. 34—39, l; li.

IV. எருசலேம் பிடிபட்டதுமுதல் யூதர் எகிப்துக்கு ஓடினதுவரையும் கெதலியாவின் காலத்தில் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம். இந்தத் தீர்க்கதரிசனம் யூதர்களுக்கு எகிப்தில் சொல்லப்பட்டது. xl-xliv.

ஐம்பத்திரண்டாம் அதிகாரம் எரேமியாவின் மரணத்துக்குப் பின்பு சேர்க்கப்பட்டது. அதில் எருசலேம் பிடிபட்டதைப் பற்றிச் சுருக்கமாய்க் காட்டியிருக்கிறது. அது புலம்பலின் ஆகமத்தின் முகவுரைபோல் இருக்கிறது.

7. எரேமியா ஆகமத்தின் பொருள் அவன் தன்மைக்குத் தக்கதாக இருக்கிறது. அதில் உருக்க இரக்கங்களான வார்த்தைகளும் ஜனங்களுடைய நிர்ப்பந்தங்களைப்பற்றிய பரிதாபமான வாசகங்களும் அடங்கியிருக்கின்றன.

8. எரேமியாவின் காலத்தில் யூதஜாதியார் தங்களுடைய அக்கிரம அளவை நிறைவாக்கி இருந்தபடியால் தீர்க்கதரிசி எவ்வளவும் ஜனங்களுடைய கொடிய பாவங்களையும் ஆண்டிக் காட்டி அவர்களுக்கு வரும்படி ஆயத்தமாய் இருந்த ஆக்கினையையும் முக்கியமாய்க் கூறிக்கொண்டுவந்தான். இவ்வாகமத்தின் மிச்சமான பங்கில் இவ்வித காரியங்களை எடுத்துரைத்தாலும் தேவனுடைய இரக்கங்களையும் அவர் சிறையிருப்பிலிருந்து மறுபடியும் அவர்களைத் திருப்பிக்கொண்டு வருவதையும் அவர்களுக்குப் பின்காலத்தில் கிடைக்கும் நன்மைகளையும் பற்றியும் ஊடே ஊடே உரைத்திருக்கிறது. மேசியாவின் காலத்தைப்பற்றி இதிலே சில விசேஷித்த காரியங்கள் சொல்லப்பட்டிருக்கிறது; "கிளை" என்று அழைக்கப்படுகிற அவருடைய இரட்சணிய ஊழியத்தையும் (23. 5, 6ல்) அவரால் உண்டாகும் புதிய உடம்படிக்கையையும் (31. 31-34.) அவருடைய நித்திய ஆசாரிய ஊழியத்தையும் ஆளுகையையும் (33. 14-26.) அவருடைய பிறப்பையும் (31. 22.) பற்றி இதில் காட்டப்பட்டிருக்கிறது.

9. எரேமியா தீர்க்கதரிசனத்தின் சில பாகங்களைப்பற்றிய ஆக்கியோன் நிச்சயத்தைக் குறித்து ஆட்சேபிக்கப்படுவதுண்டு. யூதர்கள் பாபிலோன் சிறையிருப்பிலிருந்து திரும்பிவருவார்கள் என்று ஏசாயா முன் அறிவித்திருக்கிறார். அப்படியானால் அந்தச் சிறையிருப்பு எழுபதுவருஷம் இருக்கும் என்று எரேமியா ஏன் முன் அறியக்கூடாது? பரிசுத்தமனிதர் பரிசுத்தஆவியா

னவரால் ஏவப்பட்டுப் பேசினார்கள் என்று நம்புகிறவர்கள் இவ்வாகமத்தைப்பற்றிச் சொல்லிய ஆட்சேபனைகளை அங்கீகரியார்கள். மற்ற ஜாதியாரைப்பற்றி எரேமியா தீர்க்கதரிசனம் உரைத்தபோது ஏசாயா ஒபதியா என்பவர்களுடைய தீர்க்கதரிசனங்களை உபயோகித்திருக்கிறதைப் பார்க்கிறோம்.[1]

### எரேமியாவின் ஆகமத்திலிருந்து புதிய ஏற்பாட்டில் குறிப்பிட்டிருக்கிற வாக்கியங்கள்.

| | | | |
|---|---|---|---|
| ஆதி. | 6. | 16. | மத். 11. 29. |
| ,, | 7. | 11. | மத். 21. 13, மாற். 11. 17. லூக். 19. 46. |
| ,, | 9. | 23, 24, | 1 கொரி. 1. 29—31. |
| ,, | 31. | 15. | மத். 2. 17, 18. |
| ,, | ,, | 31—34. | எபி. 8. 8—10: 10. 16, 17. |

### 3. எரேமியாவின் புலம்பல்.

1. இவ்வாகமம் தீர்க்கதரிசன ஆகமத்துக்கு ஒழிபியலாய் இருக்கிறது. எபிரெயில் இது முந்தின ஆகமத்தோடே ஒரே புஸ்தகமாகச் சேர்க்கப்பட்டிருந்தது. இது ஐந்து அதிகாரங்களாக அல்லது ஒப்பாரிகளாக வகுக்கப்பட்டிருக்கிறது. இவைகள் ஒவ்வொன்றிலும் இருபத்திரண்டு கவிகள் உண்டு. அவைகள் ஒவ்வொன்றும் அட்சரவரிசையாய்த் துவக்கப்பட்டிருக்கின்றன. மூன்றும் அதிகாரத்தில் அறுபத்தாறு கவிகள் இருக்கின்றன. அவைகள் மும்மூன்று கவிகளாய்ச் சேர்ந்து வருகின்றன. ஒவ்வொன்றும் அட்சர ஒழுங்குப்படி தொடங்குகிறது.

2. இவ்வாகமத்தில் மனம் உருகத்தக்கதான ஒப்பாரிகள் அடங்கியிருக்கிறது. அதின் பாவனை மெத்த நேர்த்தியானது. இதில் காட்டப்பட்டிருக்கிற உபமானங்கள் மெச்சிக்கொள்ளப்படத்தக்கது. கடைசி ஒப்பாரியை எரேமியாவின் ஜெபம் என்று சிலர் சொல்லுவார்கள். இந்த ஒப்பாரிகளில் காட்டப்பட்டிருக்கிற காரியங்கள்:

I. சீயோனானது தேவனுடைய நீதியுள்ள தண்டனையைக் காட்டி அவரிடத்தில் மன்றாடும் பாவனை.

[1] ஏசா. 15, 16. அதிகாரங்களை எரே. 48. அதிகாரத்தோடு ஒத்துப் பார்க்க. ஒபதியாவின் ஆகமத்தை எரே. 49. 7—22ஓடு ஒத்துப் பார்க்க.



II. சீயோன் தனக்குண்டான உபத்திரவத்தையும் நிந்தையையும் நினைத்துப் புலம்புகிற பாவனை.

III. துன்பத்தைப் பொறுமையாய்ச் சகிக்கவும் சத்துருக்களிடத்தில் பழிவாங்கவும் செய்கிற ஒப்பாரி.

IV. சீயோன் முந்தின சலாக்கியமான நிலைமையை நினைத்து தற்கால பரிதாப நிலைமையைக் குறித்துப் புலம்பல்.

V. சீயோன் தன் நிர்ப்பந்த நிலைமையைப்பற்றிப் புலம்பி தேவனை நோக்கி மன்றாடும் ஜெபம்.

### 4. எசேக்கியேல் தீர்க்கதரிசியின் ஆகமம்.

1. எசேக்கியேல் என்பதற்கு "தேவன் பலப்படுத்துவார்" என்று அர்த்தம். அவன் சிறையிருப்பின் காலத்தில் இருந்தான். அப்போது தானியேல் தீர்க்கதரிசி பாபிலோனில் தேவனுடைய ராஜ்யத்தின் எதிர்கால சரித்திரத்தைப்பற்றி மாட்சிமையான வெளிப்படுத்தல்களைப் பெற்றுவந்தான். ஆனால் அவன் மந்திரியாய் இருந்து சுயசம்பவமாய்த் தாவீதைப்போல தீர்க்கதரிசன உத்தியோகத்தை நிறைவேற்றிவந்தான். ஆனால் எசேக்கியேல், ஏசாயா, எரேமியா என்பவர்களைப்போல தீர்க்கதரிசி உத்தியோகத்துக்கு அழைக்கப்பட்டு பிரத்தியேகமாய்ப் பிரித்துவைக்கப்பட்டான். அவன் தன் சரித்திரத்தைப்பற்றி நமக்குத் தெரியப்படுத்தி இருப்பது மிகவும் சுருக்கம். அவன் பூசியின் குமாரன்; ஆசாரிய வகுப்பைச் சேர்ந்தவன்.[1] பாபிலோன் ராஜா சிதேக்கியாவை ராஜாவாக ஏற்படுத்தி யோயாக்கீனையும் அவனோடேகூட தேசத்து ஜனங்களில் விசேஷித்தவர்களையும் சிறைகளாக்கிக்கொண்டு போனபோது எசேக்கியேலும் கொண்டுபோகப்பட்டான்.[2] அவன் ஐபிராத்தின் உபநதியாகிய கேபார் ஆற்றண்டையில் கட்டப்பட்டிருந்த தெலாபீபிலே சிறைப்பட்டிருந்த மற்றவர்களோடே குடியிருந்தான். அங்கே அவனுக்கு ஒரு வீடு இருந்தது. அவன் விவாகம் பண்ணியும் இருந்தான்.[3] அங்கே அவன் சிறைப்பட்டவர்களாலே தேவனுடைய தீர்க்கதரிசியாகக் கண்ணியமாய் எண்ணப்பட்டான். அவர்கள் அவன் வீட்டுக்குக் கர்த்தருடைய வாக்

[1] எசே. 1. 3. [2] 2 ராஜா. 24. 8—16.
[3] எசே. 1. 1—3; 3. 15; 8. 1; 24. 15—18.

கைக் கேட்க வருவார்கள்.[1] அவன் தீர்க்கதரிசி உத்தியோகத்துக்கு யோயாக்கீனுடைய சிறையிருப்பின் ஐந்தாம் வருஷத்திலே அழைக்கப்பட்டான்.[2] அந்த வருஷம் முதல் அவன் அடிக்கடி காலக்கணக்கை உபயோகிப்பதுண்டு. அவன் ஆகமத்தில் கடைசியாக காட்டப்பட்டிருக்கிற தீர்க்கதரிசனம் யோயாக்கீனுடைய சிறையிருப்பின் இருபத்தேழாம் வருஷத்தை ஒட்டினது.[3] இன்னம் எவ்வளவு காலம் தீர்க்கதரிசனம் சொன்னானோ அது நமக்குத் தெரியாது. ஜனங்களின் தலைவனொருவனை விக்கிரகாராதனையின் பொருட்டு கண்டித்ததினிமித்தம் அவன் அந்தத் தலைவனால் சிறையிருப்பின்காலத்திலே கொல்லப்பட்டான் என்றும் மார் என்ற வயல்வெளியில் சேம் அர்ப்க்சாத்து என்பவர்களுடைய கல்லறையில் அடக்கம்பண்ணப்பட்டான் என்றும் பாரம்பரியம் சொல்லுகிறது. பிந்தியகாலத்தில் அவன் கல்லறை கேபார் நதிக்கும் ஐபிராத்து நதிக்கும் இடையில் காட்டப்பட்டதாகவும் சொல்லப்படுகிறதுண்டு. ஆயிரம் நூற்றாண்டில் பாக்டாட் நகரத்துக்குச் சமீபமாய் அவன் கல்லறை என்று ஒரு கட்டிடம் காட்டப்பட்டதும் உண்டு.

2. எசேக்கியேல் என்பவன் எரேமியா தானியேல் என்ற தீர்க்கதரிசிகளின் காலத்தில் இருந்தான். அவன் ஒபதியாவின் காலத்திலும் இருந்திருக்கலாம். எரேமியா எசேக்கியேலுக்கு முப்பத்துநாலு வருஷங்களுக்கு முன்பு தீர்க்கதரிசி உத்தியோகம் செய்தான். எசேக்கியேலின் காலத்திலும் அவன் ஆறு ஏழு வருஷம் தன் உத்தியோகத்தை நிறைவேற்றவும் செய்தான். தானியேல் என்பவன் எசேக்கியேல் தீர்க்கதரிசியாக அழைக்கப்படும்முன்னே சொப்பனங்களை வியார்த்திசெய்கிறவனாகவும் பரிசுத்த நடக்கைக்கும் ஞானத்துக்கும் பேர்போனவனாகவும் பிரபல்லியப்பட்டிருந்தான். அதற்குப் பிந்தியகாலத்தில் தானியேல் அதிகமாய்த் தீர்க்கதரிசனம் உரைத்தான் என்று அறிவோம்.

3. எசேக்கியேல் எருசலேமின் அழிவுக்கு முந்தியும் பிந்தியும் தீர்க்கதரிசனம் உரைத்தான். எருசலேமின் அழிவுக்கு முந்தி யூதர்கள் எகிப்தை நம்பி பாபிலோனியருடைய நுகத்தடியைத் தள்ளிவிடுவது வியர்த்தமாகும் என்றும் பட்டணமும் ஆலயமும் சீக்கிரமாய் அழிக்கப்பட்டுப்போகும் என்றும் அவர்களைக் கண்டித்து அவர்கள் குணப்பட்டுச் சீரடையும்படி எவினான். எருசலேம் அழிக்கப்பட்டபின்பு அவன்

[1] எசே. 14. 1; 20. 1. [2] எசே. 1. 2. [3] எசே. 29. 17.



சிறைப்பட்டவர்கள் மறுபடியும் விடுதலையடைந்து செழித்தோங்குவார்கள் என்று ஆறுதலான தீர்க்கதரிசனங்களைச் சொல்லிவந்தான். இவ்விரண்டு காரியங்களுக்கும் இடையில் அதாவது எருசலேம் பிடிபடுவதைப்பற்றி தேவன் சொன்னதற்கும் அது பிடிபட்டதற்கும் ஊடே அவன் மற்ற ஜாதியாரைப்பற்றி தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறான். (24. 2; 33. 21.)

4. இவ்வாகமத்தை நாலுபங்காகப் பிரிக்கலாம்.

I. எசேக்கியேல் தீர்க்கதரிசி உத்தியோகத்துக்கு அழைக்கப்பட்டதும் அதை நிறைவேற்றுவதற்கு அவனுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டதும் அவன் தைரியப்படுத்தப்பட்டதும். (i—iii. 21.)

II. யூதஜனங்களுக்கு விரோதமாகக் கூறப்பட்ட ஆக்கினைகள். (iii. 22—xxiv.)

III. யூதர்களுடைய சத்துருக்களாகிய அடுத்த ஜாதியாருக்கு விரோதமாய்ச் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்கள். (xxv—xxxii.)

IV. யூதர்கள் விடுதலைபெற்று திரும்ப சேர்க்கப்படுவதைப் பற்றிச் சொல்லிய ஆறுதலான புத்திமதிகள். (xxxiii—xlviii.) இதில் மேசியாவுடைய ராஜ்யத்திலே கிடைக்கும் பாக்கியமும் வாழ்வும் உவமானித்துக் காட்டப்பட்டிருக்கிறது.

5. எசேக்கியேல் தன் தீர்க்கதரிசனங்களை இப்போதிருக்கிறபடி ஒன்றாகச் சேர்த்ததாய்த் தோன்றுகிறது. இவன் தீர்க்கதரிசனங்களைக் கவனிக்கையில் அவன் மனப்பலமும் வேகமும் உக்கிரமும் உடையவன் என்று அறியலாம். ஒப்பனைகள் உவமைகள் அடையாளங்கள் இவ்வாகமத்தில் அதிகமாய்க் காட்டப்பட்டிருக்கின்றன. 40—48. அதிகாரங்களின் கருத்தை அறியவேண்டுமானால் எசேக்கியேலின் தன்மை இலட்சணங்களை மனதில் வைத்துக்கொள்ளவேண்டும்.

6. ஏசாயா தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்டிருப்பதுபோல எசேக்கியேலும் யூதர்கள் தங்கள் சொந்த தேசத்துக்குத் திரும்புவார்கள் என்ற வாக்குத்தத்தத்தைக்கொண்டு மேசியாவையும் அவருடைய ராஜ்யத்தையும்பற்றி குறிப்பிட்டிருக்கிறான். இதை அவன் உவமானித்து விபரமாய்க் காட்டியிருக்கிறான். கடைசி ஒன்பது அதிகாரங்களில் இது விளக்கப்பட்டிருக்கிறது. புதிய ஆலயம் அதின் தட்டுமுட்டுகள் அதின் ஆராத

னைகள். முந்தின பட்டணத்தைவிட புதிய பட்டணம் பெரிதாய் இருப்பது; கானானைவிட புதியதேசம் விஸ்தாரமாய் இருக்கும்; அது இஸ்ரவேலரின் கோத்திரத்தாருக்குள்ளே சரியாய்ப் பங்கிடப்படும் என்ற இந்தச் சங்கதிகளைக்கொண்டு மெய்யான தாவீதின் ராஜ்யத்தில் திருச்சபையார் அவருக்குள் ஐக்கியப்பட்டு விருத்தியடைந்து சுகம்பெற்று வாழ்வார்கள் என்று காட்டுகிறான்.[1]

### எசேக்கியேலின் ஆகமத்திலிருந்து புதிய ஏற்பாட்டில் குறிப்பிட்டிருக்கிற வாக்கியங்கள்.

| | |
|---|---|
| அதி. 1. 5. | வெளி. 4. 6. |
| ,, ,, 10. | ,, 4. 7. |
| ,, ,, 13. | ,, 4. 5. |
| ,, ,, 24—27. | ,, 1. 13—15. |
| ,, ,, 28. | ,, 4. 3. |
| ,, 9. 4. | ,, 7. 1—3. |
| ,, 34. 23. | யோவா. 10. 11. |
| ,, 38. 2. | வெளி. 20. 8. |
| ,, 47. 2—8. | ,, 22. 1, 2. |

## 5. தானியேல் தீர்க்கதரிசியின் ஆகமம்.

1. பெரிய தீர்க்கதரிசிகளில் நாலாவதான தானியேல் உயர்குலத்தை அல்லது ராஜகுலத்தைச் சேர்ந்தவன் என்று விளங்குகிறது. யோயாக்கீம் காலத்தில் சில விசேஷித்த வாலிபரோடே அவனும் பாபிலோனுக்குச் சிறையாகக் கொண்டு போகப்பட்டான். இவன் பாபிலோன் ராஜ அரமனையில் பெல்ஷாத்சார் என்ற பேரால் அழைக்கப்பட்டான். அவன் கல்தேயருடைய சகல எழுத்திலும் ஞானத்திலும் போதிக்கப்பட்டிருந்தான். தன் பிதாக்களுடைய மார்க்கத்தில் உறுதியாக இருந்து மட்டாகப் புசித்து சுறுசுறுப்பும் தேவபக்தியும் உள்ளவனாக விளங்கினான். அக்காலத்து சாஸ்திரங்களில் அவன் நிபுணனாயும் இருந்தான். அவன் நேபுகாத்நேச்சார்[2] கண்ட இரண்டு சொப்பனங்களை வியார்த்திசெய்து பாபிலோனிலுள்ள ஞானிகளுக்குத் தலைவன் ஆனான்.[3] நேபுகாத்நேச்சாருக்குப் பின்வந்த கல்தேய ராஜாக்கள் காலத்திலும் அவன்

[1] எசே. 34. 23. [2] தானி. 2. 4. [3] தானி. 2. 48.



மிகவும் தயவுகளையும் பரிசுகளையும் பெற்று ஞானத்துக்கும் தேவபக்திக்கும் பேர்போனவனாய் இருந்தான்.[1] என்றாலும் பிந்தியகாலத்தில் அவன் தாழ்ந்த உத்தியோகம் செய்துவந்தான் என்றும் பின்பு தனமட்டாய் இருந்தான் என்றும் தோன்றுகிறது. பெல்ஷாத்சாருடைய ஆளுகையின் கடைசி இரவிலே ராஜா கொலைபுரியப்பட மேதியனாகிய தரியு ராஜ்யத்தைக் கட்டிக்கொண்டான். இந்தத் தரியு இரண்டாம் சையக்சேரசாய் இருக்கவேண்டும் என்று காணப்படுகிறது. அவன் தனக்கு இருந்த மூன்று பிரதான மந்திரிகளில் தானியேலை முதல்வனாக்கினான். தானியேல் அவ்வளவாய் உயர்த்தப்பட்டதால் மற்ற உத்தியோகஸ்தர் அவன்பேரில் பொறாமைகொண்டு எரிச்சலடைந்து அவன் நடத்தையில் குற்றம் கண்டுபிடித்து அவனைத் தள்ளிப்போடும்படியாக வகை பார்த்தார்கள். அவன் உத்தமனாய் நடந்துகொண்டதால் அவனிடத்தில் அவர்கள் குற்றம் கண்டுபிடிக்க ஏதுவில்லாமல்போயிற்று. கடைசியாக அவன் தேவனாகிய கர்த்தரை வணங்கும் விஷயத்தை வைத்துக்கொண்டு அவனைக் கெடுத்துப்போட யோசித்து முயற்சி செய்தார்கள். அது காரியத்தில் தேவனுடைய விசேஷித்த பராமரிப்பினால் அவன் உயிர் தப்பிப் பிழைத்தான். அதைக் குறித்து ஆறாம் அதிகாரத்தில் சொல்லியிருக்கிறது. தரியு அவனை மிகவும் அதிகமாய் நேசித்துவந்தான். கோரேசின் ஆளுகையின் ஆரம்பத்திலும் தானியேல் செல்வாக்கு உள்ளவனாய் இருந்தான். கோரேஸ் யூதருக்கு விடுதலையைக் கூறி தங்கள் சொந்ததேசத்துக்குப் போகும்படியாக உத்தரவுகொடுத்தபோது தானியேல் அவர்களோடேகூடப் போனதாகத் தோன்றுகிறதில்லை. இதைப்பற்றி யூதரில் சிலர் அவன் திரும்பிப் போனான் என்றும் சிலர் அவன் திரும்பாமல் பாபிலோனிலே மரித்து அடக்கம்பண்ணப்பட்டான் என்றும் சொல்லுகிறார்கள். அவன் மரிக்கும்போது தொண்ணூறு வயது நிறைவாய் இருந்திருக்கவேண்டும்.

2. தானியேலின் ஆகமம் பன்னிரண்டு அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இதை இரண்டு பங்காக வகுக்கலாம்.

I. சரித்திரபாகம். அதில் தானியேலும் அவன் சிநேகிதரும் கல்வி கற்று உயர்ந்த உத்தியோகத்துக்கு வந்தது, அவர்களுக்கு நேரிட்ட உபத்திரவங்கள், அதால் அவர்களுக்கு உண்டான பெரிய கனம்,

[1] தானி. 5. 11.

நேபுகாத்நேச்சாருடைய சொப்பனத்தை வியாக்கி செய்தது, நேபுகாத்நேச்சாருக்கு நேரிட்ட தண்டனை, பாபிலோன் பிடிபட்டது ஆகிய இவைகள் அடங்கியிருக்கிறது. (i—vi. அதி.)

II. *தீர்க்கதரிசனபாகம்.* அசீரியா, பாரசியா, கிரேக்கை, ரோமை என்ற நாலு பெரிய ராஜ்யங்களைப்பற்றிய பலவித தீர்க்கதரிசனங்கள், யூதர்கள் தங்[illegible] தெரிந்த தேசத்துக்குத் திரும்பி தற்காலத்துக்[illegible] இருப்பது, மக்கபேயர் காலத்தில் அவர்களுக்கு உண்டாகும் உபத்திரவங்கள், மேசியாவின் [illegible], அவருடைய மரணம், கடைசியாக யூதரும் புறஜாதியாரும் குணப்பட்டு சுவிசேஷத்தை அங்கீகரித்துக் கொள்ளுதல் ஆகிய இவ்வகள் அடங்கியிருக்கின்றன. (vii—xii. அதி.)

ii. அதி. 4 வா. முதல் ஏழாம் அதிகாரம் 28-ம் வாக்கியம் வரை கல்தேயப் பாஷையிலும் மற்றப் பாகங்கள் எபிரெயுவிலும் எழுதப்பட்டிருக்கின்றன.

**3.** தானியேலின் பேர் அவன் ஆகமத்தின் முகப்பில் காட்டப்படவில்லை. அவன் ஆகமத்தின் கடைசிப் பங்கும் அவனாலேயே எழுதப்பட்டது. முதல் பாகத்தில் அவன் பேர் படர்க்கையிடமாகக் காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் அவனே இவ்வாகமம் முழுமைக்கும் ஆக்கியோன் என்று பொதுப்படச் சொல்லப்படுகிறான். எசேக்கியேல் தீர்க்கதரிசி உத்தியோகத்தைத் துவக்குமுன்னே தானியேல் பேர் பிரஸ்தாபமுள்ளவனாய் இருந்தான். எசேக்கியேல் அவனைப் பரிசுத்தத்துக்கும் ஞானத்துக்கும் கீர்த்திப்பிரதாபம் உள்ளவனாகக் காட்டியிருக்கிறான்.[1] இவ்வாகமத்தில் காட்டப்பட்டிருக்கிற சங்கதிகளைப் பார்க்கும்போதும் அவன் எவ்வளவோ பிரபல்லியமானவனாய் இருந்தான் என்று அறியலாம். எகோவா தாமே மோசமான காலத்தில் அவனை அற்புதமாய்ப் பாதுகாத்து விசேஷித்த வரங்களையும் அருளி அவன்பேரில் வைத்த பிரியத்தை விளக்கினார். அவன் மகா பிரியமானவன் என்று அழைக்கப்படுகிறான். அவனுடைய ஜெபத்துக்கு மாறுத்தரமாக எருசலேம் திரும்பக் கட்டப்படுவது, உலகத்தில் உண்டாகும் மாறுதல்கள், மேசியாவின் தன்மை, அவருடைய உத்தியோகம்

[1] எசே. 14. 14, 20; 28. 3.



கிரியை ஆகுதை, அவர் உலகத்தில் அவதரிக்கும் சரியான காலம், அவருடைய பாடுகளின் தன்மை நோக்கம், திருச்சபைக்கு உண்டாகும் வருத்தங்கள் உபத்திரவங்கள், யூதர்கள் குணப்படுதல், மரித்தோர் உயிர்த்தெழுதல், சகலத்துக்கும் உண்டாகும் முடிவு ஆகிய இவைகள் அவனுக்கு வெளிப்படுத்தப்பட்டது.

**4.** தானியேலின் ஆகமம் திவ்விய அதிகாரம் உள்ளதென்று [illegible] ஒப்புக்கொள்ளப்பட்டு வந்தது. ஆனால் நவீன காலத்[illegible] சில விரோதிகள் அதைப்பற்றி ஆட்சேபிப்ப[illegible]. இதில் காட்டப்பட்டிருக்கிற அற்புதங்களையிட்டும் இதில் காட்டப்பட்டிருக்கிற தீர்க்கதரிசனங்களின் தெளிவான திட்ட சங்கதிகளையிட்டும் அது ஆட்சேபிக்கப்படுகிறது. இவ்வித ஆட்சேபனைகள் வேதாகமத்திலுள்ள மற்றச் சரித்திரங்களையும் தீர்க்கதரிசனங்களையும் பற்றியதாயும் இருக்கிறது. இதைக்குறித்து உள்ள மாறுத்தரங்களைப் பூரணமாய் அறியவேண்டுமானால் அதைப்பற்றி எழுதப்பட்டிருக்கிற புஸ்தகங்களில் பார்க்கவேண்டியது. தானியேலின் ஆகமம் கானனைச் சேர்ந்தது என்பதற்கு அநேக அத்தாட்சி உண்டு. மக்கபேயர் காலத்தில் இதைத் திவ்விய அதிகாரமுள்ளதாக ஒப்புக்கொண்டார்கள். நம்முடைய இரட்சகருடைய காலத்திலும்[1] யோசேப்புஸ் சரித்திரக்காரன் காலத்திலும் அப்படியே ஒப்புக்கொள்ளப்பட்டுவந்தன. இது செப்துவஜெந்த் திருப்புதலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இது [illegible]படி ஆகமங்களைப்போல கிரேக்கைப் பாஷையில் எழுதப்படாமல் எஸ்றாவின் ஆகமத்தைப்போல ஒரு பாகம் எபிரெயு பாஷையிலும் ஒரு பாகம் கல்தேயபாஷையிலும் எழுதப்பட்டிருக்கிறது. இந்த விஷயம் தானியேலின் காலத்துக்கும் அந்தக் காலத்தின் காரியத்துக்கும் ஒத்திருக்கிறது. பூர்வீக சரித்திரத்தைப்பற்றிய திட்டமான அறிவும் கல்தேயருடைய நடை உடை பாவனைகள் வழக்கங்களைப்பற்றிய அறிவும் இவ்வாகமத்தை எழுதினவனுக்குத் திட்டமாய்த் தெரிந்திருக்கவேண்டும் என்று இவ்வாகமத்தில் நாம் பார்க்கிறதால் இது எல்லாம் அவனுக்கு ஒத்துவருகிறதாய் இருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக நம்முடைய இரட்சகர் பழைய ஏற்பாட்டை உண்மையுள்ளதாக ஒப்புக்கொண்டதுடன் தானியேலின் ஆகமத்திலிருந்தும் வாக்கியங்களை எடுத்துரைத்திருக்கிறார்.

[1] மத். 24. 15.

5. இவ்வாகமத்துக்கும் யோவான் எழுதின வெளிப்படுத்தின விசேஷத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டென்பது அவைகளை வாசிப்பவர் யாவருக்கும் தெளிவாய்த் தெரியும். அவை இரண்டும் ஒன்றையொன்று விஸ்தரித்து வியாக்கியானமாய் இருக்கிறது. அவைகள் ஒரே கண்ட தீர்க்கதரிசன முறையால் கடைசி முடிவுபரியந்தம் நிலைநிற்கிறவைகளாய் இருக்கின்றன. அவைகளில் அடங்கிய தீர்க்கதரிசனங்களை விஸ்தரிப்பது மிகவும் வருத்தமாய் இருக்கிறது. தேவனுடைய [illegible]யம் நிறைவேறித் தீரும்பரியந்தம் அவைகளை விஸ்தரிப்பது கூடாதகாரியமாயும் இருக்கலாம்.

6. லத்தின் திருப்புதலில் தள்ளுபடி ஆகமங்களைச் சேர்ந்த "மூன்று பிள்ளைகளின் ஜெபமும்" "பாட்டுகளும்" "சூசன்னாளின் சரித்திரமும்" "பெல்லையும் வல்லசர்ப்பத்தையும் பற்றிய கதையும்" தானியேலின் ஆகமத்தோடே சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்தப் பாகங்கள் எப்போது எழுதப்பட்டதோ அது தெரியாது. "ஜெபமும்" "பாட்டும்" வேறொருவனால் எழுதப்பட்டிருக்கவேண்டும். மற்றப் பாகங்கள் கிரேக்கில் எழுதப்பட்டிருக்கின்றன. "சூசன்னாளின் சரித்திரம்" ஒருவேளை நடந்த சங்கதியாய் இருக்கலாம். "பெல்லையும் வல்லசர்ப்பத்தையும் பற்றியது" சுத்தக் கட்டுக்கதையாய் இருக்கிறது.

௫

## தானியேலின் ஆகமத்திலிருந்து புதிய ஏற்பாட்டில் குறிப்பிக்கப்பட்டிருக்கிற வாக்கியங்கள்.

| | | | |
|---|---|---|---|
| அதி. | 6. | 22. | எபி. 11. 33. |
| ,, | 7. | 10. | வெளி. 5. 11; 20. 12. |
| ,, | ,, | 13. | மத். 24. 30. |
| ,, | 9. | 26. | மத். 24. 2, 15. |
| ,, | 12. | 2. | மத். 25. 46. யோவா. 5. 28, 29. |

## 6. ஓசியா தீர்க்கதரிசியின் ஆகமம்.

1. ஓசியாவின் ஆகமமும் அதற்குப் பின்வருகிற பதினொரு ஆகமங்களும் பூர்வத்தில் ஒன்றாகத் திரட்டப்பட்டு "பன்னிரண்டு தீர்க்கதரிசிகளின் ஆகமம்" என்று அழைக்கப்பட்டன. இவர்கள் எழுதின ஆகமங்கள் மற்ற நாலுபேர்களுடையவைகளைவிட சிறியவைகளாய் இருந்தபடியால் சின்ன



தீர்க்கதரிசிகள் என்னப்பட்டார்கள். இவர்கள் எழுதின ஆகமங்கள் காலக்கிரமப்படி வைக்கப்படவில்லை. சிறையிருப்புக்கு முந்தி எழுதப்பட்டவைகளில் ஓசியா எழுதினது சற்று பெரிதாய் இருப்பதால் அந்த ஆகமம் இவைகளுக்குள் முதலில் வைக்கப்பட்டிருக்கிறது. சின்ன தீர்க்கதரிசிகளில் ஒன்பதுபேர் சிறையிருப்புக்கு முந்தி இருந்தார்கள். மூன்றுபேர் யூதர்கள் பாபிலோனிலிருந்து திரும்பினபின்பு இருந்தார்கள். முன் சொல்லப்பட்ட ஒன்பது பேரில் ஓசியாவைச் சேர்ந்து நாலுபேர் ஏசாயாவுக்கு முந்தி இருந்தார்கள்.

2. ஓசியா பெயேரியின் குமாரன். அவன் யூத ராஜ்யத்தை ஆண்ட உசியா, யோதாம், ஆகாஸ், எசேக்கியா என்ற ராஜாக்களின் காலத்திலும் இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாசின் மகன் எரொபெயாமின் காலத்திலும் தீர்க்கதரிசனம் உரைத்தான்.[1] அவன் ஏசாயா, யோனா, ஆமோஸ், மீகா என்ற தீர்க்கதரிசிகளின் காலத்தில் இருந்தான். அவன் மீகாவைப்போல முக்கியமாய்ப் பத்துக்கோத்திரத்தாரைப்பற்றி தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறான். "இஸ்ரவேல்" "எப்பிராயீம்" "யோசேப்பு" என்ற பேர்களால் பத்துக்கோத்திரத்தார் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அவன் அறுபது வருஷம் தீர்க்கதரிசி உத்தியோகத்தைப் பார்த்துவந்தான்.

3. ஓசியா தன் உத்தியோகத்தைத் துவக்கினபோது இஸ்ரவேல் ராஜ்யத்தார் இரண்டாம் எரொபெயாமின் காலத்தில் சொற்பகாலமாய்ச் செழித்தோங்கிவந்தார்கள். பின்பு சீக்கிரத்துக்குள்ளாக அவர்கள் அரசனை இழந்து சீர்கெட்டுப்போனார்கள். முதலாம் எரொபெயாமின் காலத்தில் ஆரம்பித்த கன்றுக்குட்டி விக்கிரகாராதனையை இஸ்ரவேலர் நூற்றைம்பது வருஷங்களாய் செய்துவந்தார்கள். அதனாலே அவர்களுக்குள் எவ்வகையான துன்மார்க்கமும் விளைந்திருந்தது. ராஜாக்களும் பிரபுக்களும் கொலைபாதகரும் விபசாரக்காரருமாய் இருந்தார்கள்.[2] விக்கிரக பூசாரிகள் தேசமெங்கும் வெட்கமான உற்சவங்களை ஏற்படுத்தி கள்ளச் சன்னதம் சொல்லிவந்தார்கள்.[3] ராஜாங்கக் கட்சிக்காரர் சிலவேளைகளில் அசீரியரிடத்திலும் சிலவேளைகளில் எகிப்தியரிடத்திலும் சகாயம்பெறத் தேடினார்கள்.[4] இப்படியாக இஸ்ரவேலர் எல்லாரும் மனித

---

[1] ஓசி. 1. 1.
[2] ஓசி. 7. 3–7.
[3] ஓசி. 4. 12–14.
[4] 2 இரா. 15. 19; 17. 4.

I. வெட்டுக்கிளி வாதையைக்கொண்டு தீர்க்கதரிசி ஜனங்களைக் குணப்படும்படி ஏவுகிறான். (i, ii. 17.)

II. ஜனங்களுக்கு வரும் ஆக்கினை நீங்கும் என்று தேவ வாக்குத்தத்தத்தை எடுத்துக் காட்டுகிறான். (ii. 18–iii. 21.) தேவாதிபத்தியத்துக்கு விரோதிகளான ஜாதியாருக்கு வரும் அழிவும் எல்லா ஜாதியாருக்கும் இயற்கையான பூரண ஆசீர்வாதங்களும் பரிசுத்த ஆவியானவரின் வரப்பிரசாதங்களும் ஊற்றப்பட்டு தேவாதிபத்தியம் மாட்சிமைப்படுவதும் இங்கே காட்டப்பட்டிருக்கிறது.

3. முதலாம் அதிகாரமுதல் இரண்டாம் அதிகாரம் முப்பத்திரண்டாம் வசனம் வரையுமுள்ள தீர்க்கதரிசனம் நிச்சயமாய் நடந்ததாக சிலரால் எண்ணப்படுகிறது. மற்றவர்கள் அதை உவமானம் என்று நினைக்கிறார்கள். இரண்டாம் அதிகாரம் 28–31 சொல்லப்பட்டிருக்கிற பரிசுத்த ஆவியானவரைக்குறித்த விசேஷித்த தீர்க்கதரிசனம் பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறினதாக பேதுரு அப்போஸ்தலன் தெளிவாய் உரைத்திருக்கிறார்.[1]

## யோவேலின் ஆகமத்திலிருந்து புதிய ஏற்பாட்டில் குறிப்பிக்கப்பட்டிருக்கிற வாக்கியங்கள்.

| | |
|---|---|
| அதி. 2. 28–31. | அப். 2. 16–21. |
| ,, 2. 32. | ரோ. 10. 13–15. |

## 8. ஆமோஸ் தீர்க்கதரிசியின் ஆகமம்.

1. ஆமோஸ் யூதாவின் ராஜாவாகிய உசியாவின் நாட்களிலும் இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாசுடைய குமாரனாகிய யெரொபெயாமின் நாட்களிலும் பூமி அதிர்ச்சி உண்டாக இரண்டு வருஷத்துக்கு முன்னே இஸ்ரவேலைக்குறித்துத் தீர்க்கதரிசனம் சொன்னான்.[2] இந்த பூமி அதிர்ச்சி உசியாவின் காலத்தில் சம்பவித்ததாக சகரியா சொல்லியிருக்கிறான்.[3] ஆனால் இன்ன வருஷத்தில் நடந்தது என்பது திட்டமாய் நமக்குத் தெரியாது. யெரொபெயாமுடைய அரசாட்சியின் கடைசியில் ஆமோஸ் தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கவேண்டும்

[1] அப். 2. 16–21. [2] ஆமோ. 1. 1. [3] சக. 14. 5.



என்று நினைக்கவேண்டியதாய் இருக்கிறது. ஆமோஸ் உசியாவின் காலத்தில் இருந்தான். "பூமி அதிர்ச்சி உண்டாக இரண்டு வருஷத்துக்கு முன்னே" என்று ஒரு காலத்தைக் குறிப்பிட்டுச் சொல்லியதைக் கவனிக்கையில் ஆமோஸ் இஸ்ரவேலைப் பற்றி ஒரு வருஷம் அல்லது சில மாதங்கள்மாத்திரம் தீர்க்கதரிசனம் உரைத்திருக்கவேண்டும் என்று எண்ணத்தக்கதாய் இருக்கிறது. அவன் இரண்டு வருஷம் கடந்து யூதாவுக்கு வந்தபோது, தன்னுடைய தீர்க்கதரிசனங்களை இப்போதிருக்கிறபடி திரட்டிச் சேர்த்திருக்கலாம்.

2. ஆமோஸ் யூதா வனாந்தரத்தின் எல்லையில் இருக்கிற[1] பெத்லெகேமுக்குத் தென்கிழக்கேயுள்ள தெக்கோவாவில்[2] ஒரு மேய்ப்பனாய் இருந்தான். அவன் தன்னை "தீர்க்கதரிசியும் அல்ல, தீர்க்கதரிசியின் புத்திரனும் அல்ல"[3] என்று சொல்லி இருப்பதைப் பார்க்கில் அவன் தீர்க்கதரிசிகளுடைய பள்ளிக்கூடத்தில் பயிற்சிக்கப்படவில்லை என்றும் இஸ்ரவேலருக்கு தீர்க்கதரிசனம் சொல்லும்படி தேவனுடைய எதிர்க்கப்படாத ஏவுதலால் இந்த உத்தியோகத்துக்கு வரவழைக்கப்பட்டான்[4] என்றும் அறியலாம். ஆமோஸின் நடை யோவேலுடையதைப் போல பூரண செம்மொழி நடையாய் இராதிருந்தும் புதுமையும் கலப்பற்றதுமாய் இருக்கிறது. இவனுடைய ஆகமம் தேசவம்ச சம்பந்தமான கருத்துள்ள உவமானங்களால் நிறைந்திருக்கிறது. அவைகளில் சிலவை மனதில் படத்தக்கவைகளாய் இருக்கின்றன.

3. இவ்வாகமத்தை மூன்று பங்காகப் பிரிக்கலாம்.

I. அந்நிய ஜாதியாருக்கு விரோதமாய் கூறப்படும் தேவதண்டனை. (i, ii. 3.)

II. இஸ்ரவேலருக்கும் யூதாவுக்கும் விரோதமாய்ச் சொல்லப்படும் தேவதண்டனை. (ii. 4–ix. 10.)

III. இனிவரும் ஆசீர்வாதங்களுக்கு உரிய வாக்குத்தத்தங்கள். மேசியாவால் ராஜ்யம் திரும்ப ஸ்தாபிக்கப்படல். (ix. 11–15.)

4. இனி வரப்போகிற ஆசீர்வாதங்களைப்பற்றி ஆமோஸ்[5] சொன்னவைகளை யாக்கோபு அப்போஸ்தலன் உதாரணவாக்கியமாக எடுத்துரைத்திருக்கிறான்.[6] இதில் அடங்கிய இன்னொரு

[1] 2 நாளா. 20. 20. [2] ஆமோ. 1. 1.
[3] ஆமோ. 7. 14. [4] ஆமோ. 7. 15.
[5] ஆமோ. 9. 11, 12. [6] அப். 15. 16, 17.

வசனத்தை முதலாம் இரத்தச்சாட்சியாகிய ஸ்தேவான் எடுத்துக்காட்டியிருக்கிறான்.[1] இவ்வாகமத்தில் காட்டப்பட்டிருக்கிற தீர்க்கதரிசனங்களை அவன் காலத்தில் நடந்ததாக ராஜாக்களின் ஆகமங்கள் நாளாகமப் புஸ்தகங்களில் சொல்லப்பட்டிருப்பவைகளோடே ஒத்திட்டுப் பார்ப்பதினால் பிரயோஜனம் அடையலாம்.

### ஆமோசின் ஆகமத்திலிருந்து புதிய ஏற்பாட்டில் குறிப்பிட்டிருக்கிற வாக்கியங்கள்.

அதி. 5. 25. அப். 7. 42, 43.
,, 9. 11. ,, 15. 16–17.

## 9. ஒபதியா தீர்க்கதரிசியின் ஆகமம்.

1. ஒபதியாவின் தீர்க்கதரிசனம் எதோமியருக்கு விரோதமாய் உரைக்கப்பட்டது. எதோமியர் உடன்படிக்கையின் ஜனங்களுக்கு விரோதமாக அதிகமான பகை சாதித்துவந்தார்கள். எக்காலத்திலும் சீயோனுக்குச் சத்துருக்களானவர்களுக்குக் குறிப்படையாளமாக அவர்கள் பாவிக்கப்பட்டு அவர்கள் மேல் ஆக்கினை கூறப்பட்டிருக்கிறது. அப்படியே கடைசி நாட்களில் வானராஜ்யம் ஜெயம்பெறுவதை சத்துருக்கள்மேல் தேவனுடைய ஜனங்கள் அடையும் வெற்றியைக் குறிப்படையாளமாக பாவித்துக் காட்டியிருக்கிறது.

2. ஒபதியா எப்போது பணிவிடையை நடப்பித்தான் என்பதும் அவன் சரித்திரம் இன்னது என்பதும் நமக்குத் தெரியாது. கல்தேயர் எருசலேமை கி. மு. 588. அழித்த வருஷத்துக்கும் அதற்கு ஐந்து வருஷங்களுக்குப்பின்பு அவர்கள் நேபுகாத்நேச்சாரைக்கொண்டு இதுமேயாவைப் பிடித்ததற்கும் இடையே இவன் தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கவேண்டியது என்று நினைக்கத்தகும். இவ்வாகமம் ஒரு அதிகாரமாய் இருந்தபோதிலும் அதை இரண்டு பங்காகப் பிரிக்கலாம்.

I. எதோமியருடைய பெருமைக்காகவும் சுகபத்திரமாய் இருக்கிறோம் என்ற பெரும்படியான எண்ணத்துக்காகவும் எருசலேம் அழிக்கப்பட்டதற்காக அவர்கள் சந்தோஷப்பட்டதற்காகவும் தேவதண்டனை கூறப்பட்டது. (1–16.)

[1] ஆமோ. 5. 25–27.



II. யூதர்கள் திரும்பச் சேர்க்கப்பட்டு எதோமையும் பெலிஸ்தியாவையும் கட்டிக்கொள்வதைப்பற்றிய ஆறுதலான தீர்க்கதரிசனங்களும் மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதைப்பற்றிய குறிப்புகளும் சொல்லப்பட்டிருக்கிறது. (17–21.)

### ஒபதியாவிலிருந்து புதிய ஏற்பாட்டில் குறிப்பிக்கப்பட்டிருக்கிற வாக்கியங்கள்.

வா. 3. வெளி. 18. 7.
,, 21. ,, 11. 15.

## 10. யோனா தீர்க்கதரிசியின் ஆகமம்.

1. யோனாவின் ஆகமம் மற்ற தீர்க்கதரிசிகளின் ஆகமங்களுக்குள் ஒன்றாக வைக்கப்பட்டிருந்தபோதிலும் நம்மிடமும் வந்தெட்டி இருக்கிற தீர்க்கதரிசன ஆகமங்களுக்குள் இதுவே பூர்வம் உள்ளது என்பதற்குச் சந்தேகம் இல்லை. யோனா அமித்தாயின் குமாரன்; காத்தேப்பேர் ஊரான்.[1] இந்த ஊர் பலஸ்தீனாவின் வடபாகத்தில் இருக்கிற செபுலோன் கோத்திரத்திலுள்ள கித்தாவேபோராய் இருக்கலாம்.[2] அவன் 2 இரா. 14. 25. சொல்லியபடி இஸ்ரவேலர் ராஜ்யம் பூர்வ எல்லைமட்டும் விஸ்தாரம் ஆகும் என்பதைப்பற்றி தீர்க்கதரிசனம் உரைத்தான். அந்தப்படிக்கு இரண்டாம் எரொபெயாமின் காலத்தில் அது நிறைவேறுதலடைந்தது. அந்த ராஜன் காலத்திலே அவன் இருந்ததாகவும் தோன்றுகிறது.

2. இவ்வாகமத்தில் இரண்டாம் அதிகாரத்திலே காட்டப்பட்டிருக்கிற ஜெபத்தைத் தவிர மற்றவைகள் எல்லாம் வேறொரு புஸ்தகத்தில் இருந்து சுருக்கி எழுதப்பட்ட சங்கதி என்று பிரத்தியட்சமாய் விளங்குகிறது. ஏனென்றால் இவ்வாகமம் ஒரு இடைச்சொல்லைக்கொண்டு துவக்கப்பட்டு தடுதியாய் முடிகிறது. யோனா என்பவன் அக்காலத்திலே புறஜாதியாருக்குள் தலைநகரியுமாய் கெட்டுப்போகும் அக்கிரமத்துக்கும் பேர்போனதுமாய் இருந்த நினிவேக்கு அனுப்பப்பட்டபோது தர்சீசுக்கு[3] ஓடிப்போனான். அவன் ஏறிப்போன கப்பல்

[1] 2 இரா. 14. 25. [2] யோசு. 19. 13.
[3] தர்சீசு எங்கே இருந்தது என்பதைப்பற்றி அநேகமான தர்க்கங்கள் நடந்திருப்பது உண்டு; ஆனால் அந்தப் பேர் காட்டப்பட்டிருக்கிற வாக்கியங்களை எல்லாம் ஒத்துப்பார்க்கும்போது அது

பெருங்காற்றில் அகப்பட்டபோது அவன் கேட்டுக்கொண்டபடியே அவனை எடுத்துக் கடலில் போட்டார்கள். அவனை விழுங்கும்படி கர்த்தர் ஒரு பெரிய மீனை ஆயத்தப்படுத்தியிருந்தார். அந்த மீன்வயிற்றுக்குள் அவன் மூன்று நாள் இருந்து ஜெபம் செய்தான். கர்த்தர் அவன் விண்ணப்பத்தைக் கேட்டு மீனுக்குக் கட்டளையிட, அது அவனைக் கரையிலே கக்கிவிட்டது. அவன் மறுபடியும் தேவ கட்டளைபெற்று நினிவேக்குப் போய்ப் பிரசங்கித்தான். நினிவேயர் அவன் சொன்னதை விசுவாசித்து உபவாசம்பண்ணி குணப்பட்டு ஜெபம்பண்ணினதின்பேரில் கிருபையாய்த் தீங்கினின்று இரட்சிக்கப்பட்டார்கள். தேவன் நினிவேயருக்கு இரக்கங் காட்டினதையிட்டு அவன் எரிச்சல் அடைந்தான். தீர்க்கதரிசி என்ற கீர்த்திக்குக் குறைவு நேரிடும் என்று பயந்ததினால் எரிச்சல் அடைந்தான் என்று பலர் அபிப்பிராயப்படுவது உண்டு. அவன் எரிச்சல் அடைந்ததற்கு வேறே நோக்கமும் இருக்கலாம். நினிவேயர் தேவனுடைய ஜனங்களுக்குச் சத்துருக்கள் ஆனதால் தெய்வீக இரக்கங்களுக்குப் பாத்திரர் அல்லாத அவர்கள் குணப்பட்டு தண்டனைக்கு விலகிக்கொள்வார்கள் என்று எண்ணி விசனப்பட்டான் என்று தோன்றுகிறது. காரியம் எப்படி இருந்தாலும் அவன் நகரத்திலிருந்து புறப்பட்டு வெளியே போய்ச் சாவை விரும்பினான். தேவன் தாம் நகரத்துக்குச் செய்தது நியாயம் என்பதை அவனுடைய மனதில் பதிய, ஒரு ஆமணக்குச் செடியின் அடையாளத்தினால் காட்டினார்.

3. சில வேதவிரோதிகள் யோனாவின் சரித்திரம் கட்டுக்கதை என்று சொல்வார்கள். அல்லது நடந்தது கொஞ்சம் அந்தக் கொஞ்சத்தையும் அஞ்ஞானக் காவியங்களில் இருந்து எடுத்த கதைகளால் அலங்கரித்திருக்கிறது என்கிறார்கள். இதில் சொல்லப்பட்டிருக்கிற அற்புத சங்கதியையிட்டு இப்படிச் சொல்லுகிறவர்கள் மற்றப் புஸ்தகங்களையும்பற்றி அப்படியே சொல்லுகிறவர்களாயும் இருக்கிறார்கள். ஆனால் இவ்வாகமத்தில் சங்கதிகள் நடந்தவைகையாய்த் தெளிவாகச் சொல்லப்பட்டிருப்பதாலும் அதை உவமானக் கருத்தாய் வாசிக்கவேண்டியதைப்பற்றி யாதொரு குறிப்பும் இதில் காட்டப்படாததாலும் இதில் சொல்லப்பட்டிருக்கிற காரியங்கள் எல்லாம் அக்காலத்தின் வழக்கத்துக்கும் சம்பந்தத்துக்கும் ஏற்றதாய் இருப்பதாலும் இதில் காட்டப்பட்டிருக்கிற சங்கதிகளை நம்முடைய ஆண்டவர் தெளிவாய் எடுத்து உரைத்திருப்பதாலும் அது நிச்சயமாய் நடந்த சரித்திரம் என்று அறியலாம். யோனாவைப்பற்றி புதிய ஏற்பாட்டில் (மத். 12. 39–41.) சொல்லப்பட்டிருப்பதோடே இவ்வாகமத்தில் காட்டப்பட்டிருக்கிற இரண்டு முக்கியமான சங்கதிகள்: அதாவது, யோனா இரவும் பகலும் மூன்று நாள் மீன்வயிற்றில் இருந்ததும் அவன் பிரசங்கத்தினால் நினிவே பட்டணத்தார் குணப்பட்டதும் எடுத்து உரைக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சங்கதிகள் நடந்தவைகள் என்று நம்முடைய ஆண்டவர் சொன்னதுடன் தாம் "யோனாவைப் பார்க்கிலும் பெரியவர்" என்று சொல்லியிருக்கிறார். கட்டுக்கதையாகச் சொல்லப்பட்ட ஒரு மனிதனுக்குத் தம்மை ஒப்பிடுவார் என்று நம்முடைய இரட்சகரைப்பற்றிச் சொல்லத்துணியலாமா? கூடாதே. ஆதலால் யோனாவின் சரித்திரம் நடந்த சங்கதி என்று அறியலாம்.[1]

மெடித்திரானியாக் கடலின் மேற்பக்கத்தில் இருக்கிறதென்று சொல்லலாம். அது அத்லாந்திக் சமுத்திரக் கரையோரமாய் ஸ்பானியாவில் இருக்கிற கேடிஸ் நகரத்துக்குச் சமீபமாய் இருந்த பெனிக்கேயருடைய பேர்போன குடியேற்றமான தர்ஷீஸ்ஸை சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது. பெனிக்கேயரால் வெட்டப்பட்ட விஸ்தாரமான ஒரு கேணி இந்நாள்வரையும் தர்ஷிசு என்ற பேரால் அழைக்கப்படுகிறது. அதற்குச் சமீபமான குன்றுக்குச் சாலொமோனின் மலை என்று பேர். பிந்திய காலத்தில் தொலைதூரமான இடங்களுக்குப் பிரயாணம் போகும்படி செய்யப்பட்ட பெரிய கப்பல்களுக்கு அவைகள் தர்ஷீசில் உண்டாக்கப்பட்டாலும் படாவிட்டாலும் "தர்ஷீசின் கப்பல்கள்" என்ற பேர்வழங்கப்பட்டது.



4. இவ்வாகமத்தை இரண்டு பங்காகப் பிரிக்கலாம்.

I. யோனா நினிவேக்குப் போகும்படியாக முதலாவதாய்க் கொடுக்கப்பட்ட தேவகட்டளை, அவனுக்கு உண்டான மோசம், அவன் அடைந்த இரட்சிப்பு. (i, ii. அதி.)

II. அவனுக்கு இரண்டாவதாகக் கொடுக்கப்பட்ட தேவ கட்டளை, அதினால் உண்டான பயன். (iii, iv. அதி.)

[1] மனிதனை முழுவதுமாய் ஒருமிக்க மீன் விழுங்கிக்கொள்ளமாட்டாது என்று சிலர் ஆட்சேபிப்பது வியர்த்தமானது. ஏனென்றால் வாக்கியத்தில் "பெரிய மீனை கர்த்தர் ஆயத்தப்படுத்தினார்" என்று சொல்லியிருக்கிறது. மனிதனை முழுவதுமாய் மீன் விழுங்குவதற்கு அத்தாட்சிகள் உண்டு. சுறுவகை மீன்களின் அநேகம் பெரியவைகள் பிடிபட்டு அவைகளைத் தேடிப் பார்த்ததில் மனிதருடைய உடல் முழுமையும் காணப்பட்டது உண்டு. மீன்வயிற்றில் யோனா ஜீவனோடே பாதுகாக்கப்பட்டது அற்புதசெயல் என்று அறியவும்.

5. யோனாவின் ஜெபம் அடங்கிய இரண்டாம் அதிகாரம் செய்யுளாகவும் மற்றது எல்லாம் வாசக நடையாகவும் எழுதப்பட்டிருக்கிறது. யோனாவே இவ்வாகமத்தை எழுதினான் என்று பொதுப்பட ஒப்புக்கொள்ளப்படுகிறது. தீர்க்கதரிசி தன் பாவத்தையும் எடுத்துக் காட்டுவதில் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு எழுதினவர்கள் உண்மையையே எழுதினார்கள் என்பதற்கு இதுவும் ஒரு அத்தாட்சியாய் இருக்கிறது.

6. யோனாவின் ஆகமத்துக்கும் மற்றத் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களுக்கும் பின் சொல்லப்படுகிறவகையில் வித்தியாசம் உண்டு; மற்ற ஆகமங்களில் தீர்க்கதரிசிகள் செய்த பிரசங்கங்கள் காட்டப்பட்டிருக்கிறது; இதிலோ தீர்க்கதரிசியின் சரித்திரத்தில் ஒரு காரியம்மாத்திரம் சொல்லப்பட்டிருக்கிறது. தேவ தயவு, அவருடைய நீடிய பொறுமை, குணப்படுகிறவர்களுக்குக் கிடைக்கும் கிருபை, அவர் எந்த ஜாதியார்பேரிலும் வைக்கும் அன்பு இரக்கம் என்பவைகளுக்கு இவ்வாகமத்தில் போந்த திருஷ்டாந்தங்கள் உண்டு.

### யோனாவின் ஆகமத்திலிருந்து புதிய ஏற்பாட்டில் குறிப்பிட்டிருக்கிற வாக்கியங்கள்.

| | | |
|---|---|---|
| அதி. 1. 17. | மத். 12. 39–41. | லூக். 11. 30–32. |
| ,, 3. 5, 6. | மத். 12. 41. | லூக். 11. 32. |

## 11. மீகா தீர்க்கதரிசியின் ஆகமம்.

1. மீகா மொரேசா ஊரான். அது யூதாக்கோத்திரத்தில காத்பட்டணத்துக்குச் சமீபமாய் இருந்தது. அவன் யோதாம், ஆகாஸ், எசேக்கியா என்னும் ராஜாக்களின் காலத்தில் தீர்க்கதரிசனம் சொன்னான். எரேமியா தீர்க்கதரிசனத்தில் மீகா பணிவிடைசெய்த காலத்தைப்பற்றித் தெளிவாய்க் காட்டியிருக்கிறது.[1] எரேமியா தேவாலயத்தின் அழிவையும் எருசலேமின் அழிவையும் பற்றி கூறினபோது ஜனங்கள் அவனைக் கொலைசெய்ய வகைபார்த்தார்கள். அப்போது சில பிரபுக்கள் நூறுவருஷத்துக்குமுன்னே மீகா எசேக்கியாவின் காலத்தில் எருசலேம் அழிக்கப்படுவதைப்பற்றித் தீர்க்கதரிசனம் சொன்னபோது அவனைக் கொன்றுபோட்டார்களோ என்று ஜனங்களைக் கண்டித்தார்கள். அவன் ஓசியா, ஆமோஸ், ஏசாயா

[1] எரே. 26. 18–24.



என்பவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லத்துவக்கின சற்றுப்பின்பு கி. மு. 750. தன் பணிவிடையை நிறைவேற்ற ஏற்பட்டான் என்று காணப்படுகிறது. இவ்வாகமத்தை அந்தத் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களோடே ஒத்துப்பார்த்து வாசிப்பது நலம்.

2. இந்தப் புஸ்தகத்தை மூன்று பங்காகப் பிரிக்கலாம். ஒவ்வொன்றும் "கேளுங்கள்" என்று துவக்கி கண்டிப்புகளைச் சரிப்புகளைக் கூறி வாக்குத்தத்தங்களோடே முடிகிறது.

I. இஸ்ரவேல் யூதா ராஜ்யங்களுக்கு வரப்போகிற அழிவையும் சிறையிருப்பையும் பற்றிய தீர்க்கதரிசனங்கள். இதில் சில பட்டணங்களை விசேஷித்துக் காட்டியிருக்கிறது. (i, ii. அதி.)

II. [illegible] லௌகிக அதிகாரிகளைக் கடிந்துகொண்டு மேசியாவின் ராஜ்யத்தில் ஜனங்களுக்குக் கிடைக்கும் விடுதலையையும் ஆறுதலையும் பற்றிய தீர்க்கதரிசனங்கள். (iii–v. அதி.)

III. தேவனுடைய இரக்கங்களையும் உண்மையையும் ஜனங்களுக்கு எடுத்துக்காட்டி குணப்படும்படி அவர்களை ஏவினது. (vi, vii. அதி.)

மீகா, சல்மனேசர்[1] சனகரிப்[2] படையெடுத்து வருவதையும் இஸ்ரவேலர் சிதறடிக்கப்படுவதையும்[3] தீர்க்கதரிசனவரம் ஒய்வதையும்[4] எருசலேம் முழுவதுமாய் அழிக்கப்படுவதையும்[5] இஸ்ரவேலர் மீட்கப்படுவதையும்[6] ஆசீரியாவும் ஆசீரியாவினால் குறிக்கப்படுகிற சத்துருக்களும் அழிக்கப்படுவதையும்[7] தெளிவாய்ச் சொல்லியிருக்கிறான். அவன் பாஷைநடை வீரமும் அழகும் விடவருமுள்ளது. தாம் சொல்லும் பொருளை முடிவுபெறச் சொல்லாமல், திடீரென இன்னொரு விஷயத்தைப்பற்றிக் காட்டுவதால்,[8] அவன் தீர்க்கதரிசனத்தை வியாக்கியானம் செய்வது வருத்தமாகக் காணப்படும். ஆமோஸைப்போல தேச வம்ச சம்பந்தமான உவமானங்களை அதிகமாய் அவன் பிரயோகித்திருக்கிறான். இவன் ஆகமத்தில் வருகிற ஒரு தீர்க்கதரிசனம் ஏசாயாவிலும் வருகிறதைக் காணலாம்.[9] இந்தத் தீர்க்கதரிசனத்தை மீகாவே முதலாவதாக எழுதியிருக்க

[1] மீகா, 1. 6–8.
[2] மீகா, 1. 9–16.
[3] மீகா, 5. 7, 8.
[4] மீகா, 3. 6, 7.
[5] மீகா, 3. 12.
[6] மீகா, 2. 12; 4. 10; 5. 3.
[7] மீகா, 5. 5, 6; 7. 8, 10.
[8] மீகா, 5. 2.
[9] மீகா, 4. 1–3. ஏசா. 2. 2–4.

வேண்டும் என்று சொல்லலாம். மீகா இவ்வாகமத்தை எழுதினான் என்று 3. 1, 8ஐக்கொண்டு ரூபிக்கலாம்.

3. மீகா மேசியாவின் பிறப்பையும் அவருடைய தெய்வீக தன்மையையும்[1] அவருடைய சுவிசேஷம் சீயோனிலிருந்து பிரபல்லியப்படுவதையும்[2] அவருடைய ராஜரீகம் சகல ஜாதியார்மேலும் செல்லும்[3] என்பதையும் தெளிவாய்க் காட்டியிருக்கிறான். கிறிஸ்து எங்கே பிறப்பார் என்று ஏரோது கேட்ட கேள்விக்கு யூதசாஸ்திரிகள் இவ்வாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற தீர்க்கதரிசனத்தை எடுத்துக்காட்டி உத்தரவு சொன்னார்கள்.

### மீகாவின் ஆகமத்திலிருந்து புதிய ஏற்பாட்டில் குறிப்பிக்கப்பட்டிருக்கிற வாக்கியங்கள்.

அதி. 5. 2. — மத். 2. 6. யோவா. 7. 42.
,, 7. 6. — மத். 10. 21, 35, 36.
,, 20. — லூக். 1. 72, 73.

## 12. நாகூம் தீர்க்கதரிசியின் ஆகமம்.

1. நாகூமுடைய சரித்திரத்தைப் பற்றி தெரிந்திருப்பது மிகவும் சொற்பம். அவன் எல்கோசா ஊரான். அது கலிலேயாவிலுள்ள ஒரு ஊராய் இருக்கலாம். அவன் தீர்க்கதரிசனம் உரைத்தகாலம் இன்னதென்பதைத் திட்டமாய் அறியோம். அவன் பத்துக்கோத்திரத்தார் சிறைப்பட்டுப் போனபின்பும் சனகெரிப் என்பவன் யூதாவுக்கு விரோதமாய் எடுத்த இரண்டு படையெடுப்புகளுக்கு இடையிலும் பணிவிடையை நிறைவேற்றினான் என்று எண்ணத்தக்கதாய் இருக்கிறது. சமாரியா கவிழ்க்கப்பட்டதினால் யூத ராஜ்யத்தார் பயந்து அதிர்ந்துகொண்டிருக்கும் வேளையில் "தேற்றரவாளன்" என்று அர்த்தங்கொள்ளும் நாகூம் தேவனுடைய உருக்க இரக்கங்களைப் பற்றியும் வல்லமையைப்பற்றியும்[4] வெளிப்படுத்த எழும்பப்பட்டான். அந்தக் காலத்தில் சனகெரிப்பின் கோபத்தைத் தணிக்கும்படி எசேக்கியா தன் பொக்கிஷத்தை எல்லாம் எடுத்து அவனுக்கு அனுப்பியிருந்தான். அப்படி இருந்தும் அது வீணாய்ப் போயிற்று. தேவன் தம்முடைய ஜனங்களைத் தைரி

[1] மீகா, 5. 2. [2] மீகா, 4. 1–8.
[3] மீகா, 4. 1–7. [4] நாகூம், 1. 1–8.



யப்படுத்தும்படி அசீரிய ராஜ்யம் அழிக்கப்படும்[1] என்றும் சனகெரிப் கொல்லப்படுவான் என்றும் எசேக்கியா இரட்சிக்கப்படுவான் என்றும்[2] தீர்க்கதரிசனம் சொன்னான். நினிவேயின் அழிவைப்பற்றி சிறந்தவிதமாயும் நுட்பமாயும் முன்னுரைத்திருக்கிறான். அது எல்லாம் அந்தப்படியே நிறைவேறினதாக புறச்சரித்திரங்களினால் அறியலாம்.

2. நாகூம் நினிவேயைப்பற்றி தீர்க்கதரிசனம் உரைத்தபோது அது மிகவும் செழித்தோங்கிய மகா பெரிய ராஜ்யத்துக்குத் தலைநகரியாய் இருந்தது. அது நாம் முன்பார்த்தபடி மிகவும் விஸ்தாரமும் ஜனத்திரட்சியுள்ளதும் நாகரீகத்துக்கும் வியாபாரத்துக்கும் பேர்போனதுமாய் இருந்தது. அதின் ஐசுவரியம் முழுமையும் வியாபாரத்தினால் வந்ததல்ல. "அது இரத்தப்பழிகளின் நகரம்." அது வஞ்சகத்தினாலும் கொடுமையினாலும் நிறைந்திருந்தது.[3] அது சுற்றுப்புறத்தாரான ஜாதியாரை சூறையாடினது. தீர்க்கதரிசி அதை தன் கெபிகளை இரையினாலும் தன் தாபரங்களை பீறிப்போட்டவைகளினாலும் நிரப்புகிற சிங்கத்துக்கு ஒப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்.[4] அந்தக் காலத்தில் அது பலத்த அரணாய் இருந்தது. அதின் பிரமாண்டமான அலங்கங்கள் அதின் 1500 கோபுரங்கள் முதலியவை எந்தச் சத்துருவுக்குமுன்பாக வெற்றிகூறினதுபோல் இருந்தது. அது எல்லாம் சமூலமாய் நிர்மூலமாக்கப்பட்டு கிறிஸ்துவுக்குப் பின் இரண்டாம் நூற்றாண்டில் அணுவளவேனும் இராதபடிக்கு நாசமாய்ப் போயிற்று. அது இருந்த இடமும் அநேக நூற்றாண்டுகளாகத் தெரியாமல் போயிற்று. சில வருஷங்களுக்கு முந்தி பாட்டா லேயார்ட் என்ற இருவர் மேடாய்க்கிடந்த மண்ணை வெட்டி மிகவும் அருமையான ஞாபகசின்னங்களைக் கண்டுபிடித்தார்கள். அவைகள் தீர்க்கதரிசனத்தின் உண்மைக்கும் வேத சரித்திரத்துக்கும் ஆச்சரியமான வகையாய் ஒத்திருக்கின்றன.

3. இவ்வாகமத்தை மூன்று பங்காக வகுக்கலாம்.

I. தேவனுடைய மகத்தான இலட்சணங்கள், செய்கைகளை தீர்க்கதரிசி எடுத்துக்காட்டி அசீரியர் கவிழ்க்கப்படுவதையும் எடுத்து உரைக்கிறான். (i. அதி.)

II. நினிவே முற்றிகைபோடப்படுவதையும் அதின் குடி

[1] நாகூம், 1. 9. 12. [2] நாகூம், 1. 13–15.
[3] நாகூம், 3. 1. [4] நாகூம், 2. 11, 12.

கள் தொல்லையடைவதையும்பற்றிய தீர்க்கதரிசனம். (ii. அதி.)

III. நினிவே அழிவைப்பற்றியும் அது அழிக்கப்படுவதற்கு [illegible]களைப்பற்றியுமான தீர்க்கதரிசனம். (iii. அதி.)

4. நாகூம் தீர்க்கதரிசனத்தின் கருத்தை அறியவேண்டுமானால் அதை யோனாவின் தீர்க்கதரிசனத்தோடே சேர்த்துப்பார்க்கவேண்டும். இரண்டு தீர்க்கதரிசிகளின் ஆகமங்களும் ஒரே சரித்திரத்தொடர்ச்சியாய் இருக்கிறது. யோனாவில் தேவதண்டனையினின்று மன்னிப்புப் பெற்றதும் நாகூமில் தேவதண்டனை சுமத்தப்பட்டதும் காட்டப்பட்டிருக்கிறது. நாகூமுக்குச் சில வருஷங்களுக்குப்பின் வந்த செப்பனியா தீர்க்கதரிசியாலும் நினிவேக்கு எச்சரிப்பு கூறப்பட்டது. சில காலத்துக்குப் பின்பு கி. மு. 606. இந்தத் தீர்க்கதரிசனங்கள் எல்லாம் நிறைவேறி முடிந்தது.

### நாகூமிலிருந்து புதிய ஏற்பாட்டில் குறிப்பிட்டிருக்கிற வாக்கியங்கள்.

அதி. 1. 15. ரோ. 10. 15.
,, 3. 4. வெளி. 18. 2, 3.
,, 3. 12. வெளி. 6. 13.

## 13. ஆபகூக் தீர்க்கதரிசியின் ஆகமம்.

1. ஆபகூக்கின் சரித்திர வரலாறு நமக்குத் தெரியாது. முதலாம் அதிகாரம் ஐந்தாம் ஆறும் வாக்கியங்களைப் பார்க்கையில் அவன் கல்தேயர் யூத ராஜ்யத்துக்கு விரோதமாய்ப் படையெடுத்து வந்ததற்குச் சற்றுக் காலத்துக்குமுந்தி தீர்க்கதரிசனம் உரைத்தான் என்று தோன்றுகிறது. அப்படியானால் அவன் எரேமியா செப்பனியா என்ற தீர்க்கதரிசிகளின் காலத்தில் இருந்தான் என்று அறியலாம். அவன் தீர்க்கதரிசனத்தில் முதலாவது யூதேயா கல்தேயரால் கவிழ்க்கப்படுவதையும் இரண்டாவது கல்தேயா கவிழ்க்கப்படுவதையும் குறித்துச் சொல்லியிருக்கிறது. இந்தத் தீர்க்கதரிசனங்கள் முதலாம் இரண்டாம் அதிகாரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. மூன்றும் அதிகாரத்தில் அவன் தன் தேசத்தாரைச் சீக்கிரமாய் இரட்சிக்கவேண்டும் என்று விண்ணப்பம்பண்ணி பூர்வீகத்திலே அவர்களுக்குக்



கர்த்தர் செய்த அதிசயமான கிரியைகளை நினைத்து அவர்மேல் நம்பிக்கையாய் இருக்கும்படி அவர்களை எழுப்பிவிடுகிறான். இந்த அதிகாரம் ஒரு ஜெபமாயும் தேவன் தம்முடைய கிரியையைத் திரும்பப் புதுப்பிப்ப[illegible]தீர்க்கதரிசனமாயும் இருக்கிறது. பவுல் அப்போஸ்தலன் "விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்" என்ற வசனத்தை இவ்வாகமத்திலிருந்து எடுத்து உரைத்து அது விசுவாசிகள் எல்லாரையும் பற்றினதாக சாதித்திருக்கிறார். தேவனுடைய சபையைத் துன்பப்படுத்தினவர்களில் அசீரியர், கல்தேயர், ஏதோமியர் என்ற ஜாதியார் முக்கியமானவர்கள். அந்த மூன்று ஜாதியாருக்கு விரோதமாய் மூன்று தீர்க்கதரிசிகள் தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறார்கள். நாகூம் அசீரியருடைய அழிவையும் ஆபகூக் கல்தேயருடைய நாசத்தையும் ஒபதியா ஏதோமியருடைய பாழ்க்கடிப்பையும்பற்றி முன் உரைத்திருக்கிறார்கள்.

2. ஆபகூக்கின் பாட்டு சங்கீதங்களில் அடிக்கடி நாம் பார்க்கிறபடி கின்னரங்களில் வாசிக்க இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்டது என்று 3. 19. சொல்லியிருப்பதைக் கவனிக்கையில் அது தேவாராதனையில் வழங்கும் நோக்கமாய் எழுதப்பட்டது என்று அறியலாம்.

### ஆபகூக் ஆகமத்திலிருந்து புதிய ஏற்பாட்டில் குறிப்பிக்கப்பட்டிருக்கிற வாக்கியங்கள்.

அதி. 1. 5. அப். 13. 41.
,, 2. 4. ரோ. 1. 17. கலா. 3. 11. எபி. 10. 38.

## 14. செப்பனியா தீர்க்கதரிசியின் ஆகமம்.

1. செப்பனியாவைப்பற்றி இவ்வாகமத்தின் முகவுரையில் சொல்லப்பட்டிருப்பதற்கு மிஞ்சி நமக்குத் தெரியாது. அவன் எஸ்கியாவின் குமாரனாகிய ஆமரியாவுக்குக் குமாரனான கெதலியா என்பவனுடைய மகனாகிய கூஷின் குமாரனாய் இருந்தான். யூதர்களில் சிலரும் நவீன நூட்பசாஸ்திரிகளில் சிலரும் எஸ்கியா என்பவன் யூத ராஜாவாகிய எசேக்கியாவைக்குறிக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். எபிரெயு பாஷையில் இரண்டு பேரும் ஒரேவகையாய் எழுத்துக் கூட்டப்பட்டிருக்கிறது. ஆனால் இது சந்தேகத்துக்குரியது. செப்பனியா யோசியாவின்

காலத்தில் அதாவது அவன் ஆளுகையின் துவக்கத்தில் தீர்க்க தரிசனம் உரைத்தான் என்று காணப்படுகிறது.

2. இவ்வாகமத்தில் வரும் என்று காட்டப்பட்டிருக்கிற அழிவு கல்தேயரால் உண்டாகும் அழிவே. இந்தப் புஸ்தகத்தை மூன்று பங்காக வகுக்கலாம்.

I. யூதாவின் பாவங்களைத் தூண்டிக் காட்டி அவர்களைக் குணப்படும்படி தீர்க்கதரிசி வருகிறான். (i, ii. 1–3.)

II. பெலிஸ்தியர், மோவாபியர், அம்மோனியர், எத்தியோப்பியர், நினிவேயர்மேல் வரும் ஆக்கினையைப் பற்றிய தீர்க்கதரிசனம். (ii. 4–15.)

III. எருசலேமுக்கு விரோதமாய்ச் சொல்லப்பட்ட கொடிய கண்டிப்பும் பயமுறுத்தலும், மீந்த யூதர்கள் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள் என்ற வாக்குத்தத்தங்களும் அடங்கிய தீர்க்கதரிசனம். (iii. அதி.)

3. தீர்க்கதரிசனங்கள் திட்டமாய் நிறைவேறினதற்குத் திருஷ்டாந்தங்களாக பெலிஸ்தியரின் நாலு பட்டணங்களாகிய காத்சா, அஸ்கலோன், அஸ்தோத், எக்ரோன் என்பவைகளைப் பற்றி செப்பனியாவும், ஆமோசும், சகரியாவும் சொன்னவைகள் நிறைவேறினதைப் பார்ப்போமாக. ஆமோஸ் 1. 6–8ஐயும் சகரியா 9. 5ஐயும், செப்பனியா 2. 4–6 ஓடே ஒத்துப் பார்த்தால் காத்சா குடியற்று அதின் அரமனைகள் தீக்கொளுத்தப்படும் என்று சொல்லப்பட்டிருப்பது நிறைவேறியிருப்பதைப் பார்க்கலாம். அது இப்போது அழிந்து பாழாய்க் கிடக்கிறது. அதற்குச் சமீபமாய் மண்ணால் கட்டப்பட்ட சில ஊர்மாத்திரம் இருக்கிறது. அஸ்கலோனையும் அஸ்தோத்தையும் குறித்து அவைகள் "குடியற்றிருக்கும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவைகள் அழிந்து பாழாய்க் கிடக்கின்றன. அங்கே வாசம்பண்ணுவார் இல்லை. அவைகள் தேள்களின் குடியிருப்பாய் இருக்கின்றன. எக்ரோனைக்குறித்து "வேரோடே பிடுங்கப்படும்" என்று சொல்லியிருக்கிறது. அது இருந்த இடமும் தடம் தெரியாமல் இருக்கிறது.

## 15. ஆகாய் தீர்க்கதரிசியின் ஆகமம்.

1. ஆகாய், சகரியா, மல்கி என்றவர்கள் யூதர்கள் சிறையிருப்புக்குப் பின்பு தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். இவர்களில் முதலாவது எழும்பினது ஆகாய். அவன் சிறையிருப்பின்



காலத்தில் பிறந்து பாபிலோனில் இருந்து செருபாபேலோடே திரும்பிவந்தான் என்று தோன்றுகிறது.[1] அவன் சொல்லிய நாலு சுருக்கமான சங்கதிகள் நாலு மாதங்களுள் நடந்தவைகள். அவைகள் தேவாலயத்தைத் திரும்பக் கட்டுவதைப்பற்றியவைகளாய் இருக்கின்றன. எஸ்றாவின் நாலாம் அதிகாரத்தில் நாம் பார்க்கிறபடி அந்த வேலை பதினாறு வருஷங்களாய்த் தடைப்பட்டிருந்தன. அந்தத் தடை இப்போது நீங்கியிருந்த போதிலும், யூதர்கள் தேவகாரியத்தில் வைராக்கியத்தை இழந்து குளிர்ந்துபோய் இருந்தார்கள். இதற்காக ஆகாய் தீர்க்கதரிசியும் சகரியா தீர்க்கதரிசியும் அவர்களைக் கண்டிக்கும்படியாயும் தேவாலய வேலையைத் திரும்பத் தொடங்கத் தைரியப்படுத்தும்படியாயும் அனுப்பப்பட்டார்கள். இப்படி அவர்கள் எழுப்பிவிடப்பட்டதால் காரியம் சித்தியாய் முடிந்தது.[2]

2. இவ்வாகமத்தை நாலு பங்காக வகுக்கலாம்.

I. யூதர்கள் தேவாலயத்தைக் கட்டுவதில் அசட்டையைக் காண்பித்ததின் நிமித்தம் ஆகாய் அவர்களைக் கண்டித்து ஆலயத்தைக் கட்டுவதில் தேவதயவு அவர்களோடேகூட இருக்கும் என்று வாக்குத்தத்தம் செய்கிறான். இதற்கு இருபத்துநாலு நாட்களுக்குப் பின்பு, செருபாபேலும் யோசுவாவும் ஜனங்களும் வேலையை மறுபடியும் தொடங்கினார்கள். (i. அதி.)

II. ஏறக்குறைய நாலு வாரங்களுக்குப் பின்பு ஜனங்களுடைய வைராக்கியம் குறைந்துபோக, அவர்கள் மனதில் அதிகமான சந்தேகங்கள் எழும்பின. இவைகளை அகற்றும்படி ஆகாய் அவர்களைப் பார்த்துச் சேனைகளின் தேவன் அவர்களோடே இருக்கிறார் என்றும் முந்தின ஆலயத்தின் மகிமையைவிட பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாய் இருக்கும் என்றும் எடுத்துக் காண்பித்தான். (ii. 1–9.)

III. இரண்டு மாதங்களுக்குப் பின்பு ஆகாய் மூன்றும் தடவையாக ஜனங்களை அவர்கள் சோர்பின் நிமித்தம் கண்டித்து தேவாலயம் முடிவதுமுதல் தேவாசீர்வாதம் அவர்களோடே இருக்கும் என்று வாக்கு உரைக்கிறான். (ii. 10–19.)

IV. அந்த நாளில்தானே இன்னொரு தீர்க்கதரிசனம் செருபாபேலுக்கு உரைக்கப்பட்டது. மற்ற ராஜ்யங்கள்

[1] எஸ்றா, 2. 2. [2] எஸ்றா, 5. 1, 2.

கவிழ்க்கப்பட்டுப் போனபோதிலும் தேவனுடைய ஜனங்கள் சுகமாய்ப் பாதுகாக்கப்படுவார்கள் என்பதே அதின் பொருள். (ii. 20–23.)

3. பிந்தின ஆலயத்தில் உடன்படிக்கைப் பெட்டியும் செக்கினா என்னப்பட்ட மேகமும் ஊரிம் தும்மீமும் திரு அக்கினியும் தீர்க்கதரிசன ஆவியும் குறைவாய் இருந்தபோதிலும் தேவ மகத்துவத்தின் நிறைவெல்லாம் வாசமாய் இருந்த கிறிஸ்து இந்த ஆலயத்தில் பிரவேசித்துப் பிரசங்கித்து அதை மகிமைப்படுத்தினார்.

### ஆகாயின் ஆகமத்திலிருந்து புதிய ஏற்பாட்டில் குறிப்பிக்கப்பட்டிருக்கிற வாக்கியங்கள்.

அதி. 2. 6, 7. எபி. 12. 26.

## 16. சகரியா தீர்க்கதரிசியின் ஆகமம்.

1. சகரியா என்பவன் ஆகாய் தீர்க்கதரிசனம் சொல்லித் துவக்கின இரண்டு மாதத்துக்குப்பின்பு தரியு இஸ்தாஸ்பிஸ் என்பவன் ஆளுகையின் இரண்டாம் வருஷத்தில் தீர்க்கதரிசனம் சொன்னான். அவன் இத்தோவின் மகனான பெரகியாவின் குமாரன். ஆனால் எஸ்றாவின் புஸ்தகத்தில் அவன் தகப்பன் பேர் விடப்பட்டு அவனை இத்தோவின் குமாரன் என்று சொல்லியிருக்கிறது. "குமாரன்" என்கிற வார்த்தை பின்சந்ததியாரைக் குறிக்கிறதாக அடிக்கடி வேதத்தில் வழங்கப்படுவது உண்டு. இந்த இத்தோ[1] என்பவன் பாபிலோனில் இருந்து செருபாபேல் யோசுவா என்பவர்களோடே திரும்பிவந்த ஆசாரியன் என்று காணப்படுகிறது. அப்படியானால் சகரியா என்பவன் எரேமியா எசேக்கியேல் என்பவர்களைப்போல ஆசாரிய வம்சத்தானாய் இருக்கவேண்டும். இவ்வாகமத்தின் நோக்கமும் ஆகாய் தீர்க்கதரிசனம் எழுதப்பட்ட நோக்கமும் ஒன்றுதான். ஆனால் சகரியாவின் தீர்க்கதரிசனம் விஸ்தாரமாயும் நுட்பமாயும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகாய் சகரியா என்பவர்களுடைய பணிவிடையினாலே ஆசீர்வாதம் உண்டானதாகப் பார்க்கிறோம்.[2] தேவாலயம் நாலு வருஷங்களுக்குள்ளாகக் கட்டப்பட்டு முடிந்தது.

2. இவ்வாகமத்தை இரண்டு பங்காக வகுக்கலாம்.

1 நெகே. 12. 4. 2 எஸ்று, 7. 14.



I. யூதர்கள் தேவாலயத்தைத் திரும்பக் கட்டவும் திவ்விய பணிவிடையைப் புதுப்பிக்கவும் அவர்களைத் தைரியப்படுத்தச் சொல்லப்பட்ட பல தீர்க்கதரிசனங்கள், தரிசனைகள். (i–vi. அதி.)

II. கிறிஸ்துவின் வருகையைப்பற்றியும் அவருடைய ராஜ்யத்தின் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப்பற்றியும் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்கள். (vii–xiv. அதி.)

3. இந்த ஆகமத்தில் உலகமுடிவுபரியந்தம் தேவனுடைய ஜனங்களின் சங்கதிகளைப்பற்றி அநேக விஷயங்கள் காட்டி இருக்கிறது. அவைகளில் அநேகம் இன்னமும் நிறைவேற வேண்டியதாய் இருக்கிறது. ஆதலால் இதை வியாக்கியானம் செய்வதில் அதிகமான வருத்தம் உண்டு. ஆனால் ஒன்றுமாத்திரம் அதில் தெளிவாய் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது "தேவனுடைய ராஜ்யம் இனிமேல் வெற்றிசிறப்புள்ளதாய் விளங்கும். பற்பல ராஜ்யத்தார் செய்துவருவது எதிரிடையாகக் காணப்பட்டாலும் அவர்கள் செய்கிறவைகள் எல்லாம் "இவ்வுலக ராஜ்யம் நம்முடைய கர்த்தருடையதும் அவருடைய கிறிஸ்துவுடையதுமான ராஜ்யம் ஆகும்" என்ற தேவதீர்மானத்தை நிறைவேற்றுகிறவைகளாய் இருக்கும்.

4. எசாயாவுக்குப் பின்பு சகரியா மேசியாவின் தன்மை வருகை முதலியவைகளைப்பற்றி அதிகமாய்ச் சொல்லியிருக்கிறான். கிறிஸ்துவின் தேவத்தன்மை,[1] ஆவியின் கிரியை,[2] கிறிஸ்து பவனி போகுதல்,[3] அவர் முப்பது வெள்ளிக்காசுக்கு விலைப்படுவது,[4] அவருடைய காயங்கள்,[5] அவர் சுவிசேஷம் பிரபலியமாகுதல்,[6] அவரால் உண்டாகும் பாவநிவாரணம்,[7] சீஷர்கள் அவரைவிட்டு ஓடிப்போகுதல்,[8] யூதர் புறஜாதியார் ஒரே சபையாகச் சேர்க்கப்படுதல்[9] இவைகளைப்பற்றி தெளிவாய் முன் உரைத்திருக்கிறான்.

1 சகரி. 2. 10, 11. யோவா. 1. 14.
2 சகரி. 4. 6, 7.
3 சகரி. 9. 9. மத். 21. 2–9.
4 சகரி. 11. 12, 13. மத். 26. 15; 27. 3–10.
5 சகரி. 12. 10. யோவா. 19. 34–37.
6 சகரி. 9. 10.
7 சகரி. 13. 7. யோவா. 10. 11.
8 சகரி. 13. 7. மத். 26. 31.
9 சகரி. 6. 10, 15; 14. 8, 9.

### சகரியாவின் ஆகமத்திலிருந்து புதிய ஏற்பாட்டில் குறிப்பிக்கப்பட்டிருக்கிற வாக்கியங்கள்.

| | |
|---|---|
| அதி. 2. 11. | 2 கொரி. 6. 16. |
| ,, 9. 9. | மத். 21. 4, 5. யோவா. 12. 14, 15. |
| ,, 11. 13. | மத். 27. 9, 10. |
| ,, 12. 10. | யோவா. 19. 34–37. வெளி. 1. 7. |
| ,, 13. 7. | மத். 26. 31. மாற். 14. 27. |

## 17. மல்கியா தீர்க்கதரிசியின் ஆகமம்.

1. மல்கியாவின் ஆகமம் பழைய ஏற்பாட்டில் கடைசியானது. அவன் சரித்திரத்தைக்குறித்து ஒன்றும் தெரியாது. மல்கியா என்பது இடுகுறி சிறப்புப்பெயரோ அல்லது "என் தூதன்" என்று அர்த்தங்கொள்ளும் காரணப் பொதுப்பெயரோ என்று சிலர் சமுசயப்படுவது உண்டு. அந்த எண்ணம் சரி என்று தோன்றுகிறதில்லை. ஏனென்றால் தீர்க்கதரிசன ஆகமங்களில் அவைகளை எழுதினவர்களின் நாமங்களும் காட்டப்பட்டிருப்பது வழக்கமாய் இருக்கிறது. மல்கியா தான் தீர்க்கதரிசனம் சொன்ன காலத்தைக் காட்டாவிட்டாலும் அவன் சொல்லிய சங்கதிகளைக்கொண்டு காலத்தைக் கூடியமட்டும் திட்டமாய் அறியலாம். அவன் காலத்தில் ஜனங்கள் தேசத்தில் மறுபடியும் நிலைநிறுத்தப்பட்டிருந்தார்கள்; தேவாலயத்தைக் கட்டி முடித்திருந்தார்கள்; தேவாராதனை அதில் நடத்தப்பட்டு வந்தது; தேவாதிபத்தியம் பூர்வீகத்தில் இருந்ததுபோல மகிமையாய் ஏற்படுத்தப்படும் என்று அவர்கள் கொண்ட எண்ணத்தில் சித்திபெறாதவர்களாய் இருந்தார்கள். யோசுவாவின் காலத்தில் செய்ததுபோல தங்கள் சத்துருக்களை தேசத்திலிருந்து துரத்திவிடவும் இல்லை; சாலொமோன் காலத்தில் இருந்ததுபோல சமாதானத்தோடே குடியிருக்கவில்லை; அந்நியருடைய அரசாட்சிக்குள் இருந்தார்கள். இது எல்லாம் அவர்களுடைய பெருமையைத் தாழ்த்துகிறதாயும் அவர்களுடைய லௌகீக எண்ணத்திற்கும் நம்பிக்கைக்கும் விரோதமாயும் இருந்தது. ஆகவே அவர்கள் மனத்தளர்ச்சிக்கு இடங்கொடுத்து, முறுமுறுப்பான சிந்தையுள்ளவர்கள் ஆனார்கள். தேவனுக்கு ஆராதனை செய்வதை இளைப்பும் அலுப்புமாய் எண்ணி, நியாயப்பிரமாணம் கற்பிக்கிறபடி தசமபாகம் செலுத்தாமல் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமான பலிகளைச் செலுத்தி, தேவன் தங்களைக்



கவனிக்கிறதில்லை; தாங்கள் செய்யும் ஆராதனைக்குப் பதில் செய்கிறதில்லை; அகங்காரிகளுக்கும் பொல்லாதவர்களுக்கும் அவர் தயவுபாராட்டுகிறார் என்று பிதற்றுகிறவர்களாய் இருந்தார்கள்.[1] இவைகளோடே அந்நிய பெண்களை விவாகம் செய்யும்படி எபிரெய மனைவிகளைத் தள்ளிவிட்ட பாவத்தையும் கூட்டினார்கள்.[2] இந்தச் செய்கைகள் எல்லாம் நெகேமியாவின் கடைசிக் காலத்தில் சம்பவித்தவைகளுக்கு ஒத்ததாய் இருக்கிறது. நெகேமியா பாபிலோனுக்குப் போய் அர்தசஷ்டா ராஜாவின் ஆளுகையின் முப்பத்திரண்டாம் வருஷத்திலே[3] திரும்ப எருசலேமுக்கு வந்தபோது அவன் ஆகமத்தின் கடைசி அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற காரியங்களைக் கண்டுபிடித்தான்.

2. மல்கியாவின் ஆகமத்தை மூன்று பங்காக வகுக்கலாம்.

I. ஜனங்களுடைய நன்றியறியாமையைக் கண்டித்து ஆசாரியருக்கு விரோதமாய் வரும் தண்டனை இன்னதென்று கூறப்பட்டிருக்கிறது. (i, ii. 9.)

II. விவாக விஷயத்தில் உண்டான ஒழுங்கீனங்கள் கண்டிக்கப்பட்டிருக்கிறது. (ii. 10–16.)

III. மேசியா வருகையைப்பற்றியும், அவருக்கு முன்தூதனாக வருபவனுடைய தொழிலைப்பற்றியும் உரைக்கப்பட்டிருக்கிறது. (ii. 17–iv.)

3. இந்த ஆகமம் முழுமையும் வாசகநடையாய் எழுதப்பட்டிருந்தாலும் சிறப்பாயும் பலமாயும் எழுதப்பட்டிருக்கிறது. இவ்வாகமம் புதிய ஏற்பாட்டில் துவக்கப்படுகிற யோவான் ஸ்நானனுடைய பணிவிடையைக் காட்டி முடிகிறது.[4]

### மல்கியாவின் ஆகமத்திலிருந்து புதிய ஏற்பாட்டில் குறிப்பிக்கப்பட்டிருக்கிற வாக்கியங்கள்.

| | |
|---|---|
| அதி. 1. 2–4. | ரோ. 9. 13. |
| ,, 3. 1. | மத். 11. 10. மாற். 1. 2, 3. லூக். 7. 27. |
| ,, 4. 5. | மத். 11. 14; 17. 11, 12. லூக். 1. 17. |

---

[1] மல்கி. 3. 14, 15. [2] மல்கி. 2. 10–16. [3] நெகே. 13. 6.
[4] பழைய ஏற்பாட்டு ஆகமங்கள் காலக்கிரமப்படி வரிசைப்படுத்தப்பட்டிருப்பதைக் குறித்த H அநுபந்தம் பார்க்க.

# மூன்றாம் பங்கு

## புதிய ஏற்பாடு.

1. நாம் இப்போது புதிய ஏற்பாட்டைப்பற்றிப் பார்ப்போமாக. இதில் தேவனுடைய சித்தம் மானுடருக்குப் பூரணமாயும் நிறைவாயும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஏற்பாடு என்பதற்கு உடன்படிக்கை என்று அர்த்தம். அது முதலாவது தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்குமுள்ள சம்பந்தத்தைக் குறிக்கிறது; பின்பு அந்த சம்பந்தம் அடங்கிய சாதனங்களுக்கும் பெயராக வழங்கப்பட்டது. பழைய ஏற்பாடானது முந்திய காலத்தில் இருந்த தமது ஜனங்களோடே தேவன் திருவுளமிரங்கிக்கொண்டு பண்ணின உடன்படிக்கைக்குச் சாதனமாயும், புதிய ஏற்பாடானது நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவின் மூலமாய்க் கிறிஸ்தவர்களுடைய மோக்ஷ சுதந்தரம் முத்திரிக்கப்பட்டிருக்கிற உடன்படிக்கைக்குச் சாதனமாயும் இருக்கிறது.

2. புதிய ஏற்பாட்டின் பிரிவையிட்டு பல காலங்களிலும் பல வகையாய்ச் சொல்லப்பட்டதுண்டு. பூர்வீக காலத்தில் அல்லது இரண்டாம் நூற்றாண்டில் புதிய ஏற்பாட்டாகமங்கள் சுவிசேஷங்கள் என்றும் நிருபங்கள் என்றும் அல்லது சுவிசேஷங்கள் என்றும் அப்போஸ்தலர்கள் என்றும் பிரிக்கப்பட்டன. ஆனால் நவீன காலத்தோர் அதை சரித்திர உபதேச தீர்க்கதரிசன ஆகமங்கள் என மூன்று பிரிவாகப் பிரித்திருக்கிறார்கள்.

(1.) சரித்திர ஆகமங்களில் நாலு சுவிசேஷங்களும் அப்போஸ்தலர் நடபடியும் அடக்கம்.

(2.) உபதேச ஆகமங்களில் பவுல் எழுதின பதின்மூன்று நிருபங்களும், ஏழு பொதுவான நிருபங்களும் அடக்கம். பொதுவான நிருபங்கள் ஒரு விசேஷித்த சபைக்கு அல்லது ஆளுக்கு எழுதப்படாமல் கிறிஸ்துமார்க்கத்தை அங்கீகரித்து ரோம ராஜ்யத்தில் சிதறியிருந்த யூதர்களுக்குப் பொதுவாக எழுதப்பட்டவைகளாம்.



(3.) தீர்க்கதரிசன ஆகமத்தில் வெளிப்படுத்தின விசேஷம் அடக்கம். ஆனால் புதிய ஏற்பாட்டு மற்றப் புஸ்தகங்களிலும் ஊடே ஊடே தீர்க்கதரிசனங்கள் வருவதுண்டு.

3. புதிய ஏற்பாட்டாகமங்களில் சில புஸ்தகங்களை காலக்கிரமத்தின்படி வரிசைப்படுத்துவதையிட்டு பற்பல அபிப்பிராயங்கள் சொல்லப்படுவதுண்டு. நாம் இப்போது அங்கீகரிக்கிற வரிசை மிகப் பூர்வமுள்ளது. நாலாம் நூற்றாண்டில் ஐசேபியுஸ் என்பவன் நமக்குள் வழங்குகிறபடியே வரிசையாய் எழுதிவைத்திருக்கிறான்.

## 1. புதிய ஏற்பாடு எழுதப்பட்ட பாஷை.

1. பழைய ஏற்பாடு எபிரெய பாஷையில் எழுதப்பட்டது. புதிய ஏற்பாடோ கிரேக்கு பாஷையில் எழுதப்பட்டது. புதிய ஏற்பாட்டு பாஷைநடை சுத்தமானதாய் இராமல் எலனிஸ்டர் நடையாய் இருக்கிறது. அது கிரேக்கு பாஷையைப் பேசின யூதரால் எழுதப்பட்டது. பல பாஷைக்குரிய வார்த்தைகளும் அதில் வழங்கப்பட்டிருக்கிறது. ஆகலால் புதிய ஏற்பாட்டைக் கற்றறியவேண்டுமானால் கிரேக்கு பாஷையை அறிவதுமாத்திரம் போதாது; புதிய ஏற்பாட்டில் அடங்கிய கிரேக்கைக் கற்றுக்கொள்ளவேண்டும்.

2. நம்முடைய இரட்சகருடைய காலத்தில் கிரேக்கு பாஷையானது வேறெந்த பாஷையைவிட மிகவும் விஸ்தாரமாய்ப் பேசப்பட்டது. அது அப்போது அறியப்பட்ட ரோமராஜ்யம் எங்கும் வழங்கப்பட்டது. யூதர்களும் கிரேக்கு பாஷையை நன்றாய்க் கற்றறிந்திருந்தார்கள். கிறிஸ்துவுக்கு இருநூறு வருஷங்களுக்கு முந்தியே செய்யப்பட்டிருந்த செப்துவஜிந்த் திருப்புதல் யூதருக்குள் தாராளமாய் வழங்கியும் வந்தது. நம்முடைய கர்த்தரும் அவருடைய அப்போஸ்தலரும் அந்தத் திருப்புதலின் உள்ள வசனங்கள் ஜனங்களுக்குத் தாராளமாய்த் தெரிந்திருக்கின்றதென்று அறிந்து அதிலிருந்து வேதவாக்கியங்களை எடுத்து உரைத்தார்கள். மேலும் கிரேக்கு மிகவும் திருத்திய பாஷையாயும் கருத்தைத் தாராளமாய் எடுத்துக்காட்டத்தக்க பதங்களையுடையதுமாய் இருக்கிறது. ஆகவே மனிதஜாதியார் யாவருக்கும் பொதுவாக அருளப்பட்ட

வெளிப்படுத்தல் அந்த பாஷையில் எழுதப்படும்படி தேவன் சித்தம் கொண்டருளினார்.

3. புதிய ஏற்பாட்டை எழுதினவர்கள் எபிரேய கிரேக்கில் எழுதினாலும் அவர்களுடைய நடை வித்தியாசமாய் இருக்கிறது. மத்தேயும் மாற்கும் லூக்காவையும் யோவானையும் விட எபிரேய பதங்களை அதிகமாய் உபயோகித்திருக்கிறார்கள். லூக்கா சில வேளைகளில் கிரந்தநடையாய் வாக்கியங்களை எழுதியிருக்கிறான். பவுலுடைய நடையில் எபிரேய பதங்கள் அதிகமாக வருகிறதும் உண்டு. புதிய ஏற்பாடு எழுதப்பட்டிருக்கிற பாஷைநடையைக் கவனித்தால் அது அதின் கர்த்தாநிச்சயத்தையும் காரியநிச்சயத்தையும் பலமாய் ரூபிக்கிற ஒரு அத்தாட்சியாய் இருக்கிறதென்று அறியலாம்.

4. மத்தேயு தன் சுவிசேஷத்தை யூதருக்கு உபயோகமாக எபிரேய பாஷையில் எழுதினான் என்று சிலர் சொல்வதினால் முன் காட்டப்பட்டிருக்கிற நியாயங்களுக்கு இதால் பின்னம் நேரிடுகிறதில்லை. சிலர் அப்படிச் சொல்வது ஒருவேளை சரியாய் இருந்தாலும் அந்தச் சுவிசேஷம் பிந்தி கிரேக்கில் திருப்பப்பட்டது. ஒருவேளை மத்தேயு அதைத் திருப்பி இருக்கலாம்.

## II. புதிய ஏற்பாட்டுப் பூமிசாஸ்திரம்.

1. புதிய ஏற்பாட்டுப் பூமிசாஸ்திரம் மெதித்திராணியாக் கடலோரத்தில் இருக்கிற தேசங்களுக்கு அப்பால் செல்லுகிறது அபூர்வம். புதிய ஏற்பாட்டு இடங்களைப்பற்றி கவனிக்கையில் அந்தந்த இடத்தில் சம்பவித்த சங்கதிகளையுங்குறித்துச் சொல்லிவருவோம். முதலாவது பெத்லகேம். இது தாவீது பிறந்த இடம்; சரித்திர ஆகமங்களில் நம்முடைய இரட்சகர் மனிதவதாரம்செய்த பரிசுத்த இடமாக மதிக்கப்படுகிறது. பெத்லகேம் (அப்பத்தின் வீடு) இப்போது சிற்றூராய் இருந்தபோதிலும் ஒரு காலத்தில் அது சற்று பேர்போன பட்டணமாய் இருந்தது. அது பலஸ்தீனாவிலுள்ள பூர்வீக பட்டணங்களில் ஒன்று; அது எருசலேமுக்கு ஆறு மைலுக்குத் தெற்கே இருக்கிறது. அதன் பூர்வப் பேர் எப்பிராத்தா[1] (செழிப்புள்ளது). இஸ்ரவேலர் கானா

[1] ஆதி. 35. 16; 48. 7. 1 நாளா. 4. 4.



னைச் சுதந்தரித்துக்கொண்ட அநேக வருஷங்களுக்குப் பின்பு பெத்லகேம் என்ற புதிய பேர் அதற்கு வழங்கப்பட்டது. அதின் பழைய பேர் அதின் குடிகளின் வாயில் வழக்கச்சொல் போல வழங்கிவந்தது.[1] சங்கீதக்கவிகளிலும் தீர்க்கதரிசன செய்யுள்களிலும் இந்தப் பேரே வழங்கப்பட்டிருக்கிறது.[2] இஸ்ரவேலர் தேசத்தைக் கட்டிக்கொண்டபின்பு அது பெத்லகேம் யூதா[3] என்று அழைக்கப்பட்டது. செபுலோன் கோத்திரத்தில் இருந்த பெத்லகேமுக்கு வித்தியாசப்படுத்த நோக்கமாய் அப்படி அழைக்கப்பட்டது. தற்காலத்தில் அது பெத்லேம் என்று சொல்லப்படுகிறது.

2. தேவ உத்தரவின்பேரில் பிள்ளையும் அதின் தாயும் பெத்லகேமை விட்டு எகிப்துக்குப் போனார்கள். அவர்கள் அங்கே சஞ்சரித்த ஊர் எலியாப்போலி நகரத்திற்குச் சமீபமாய் காயரோப் பட்டணத்திற்குப் போகிற வழியிலே இருக்கிற மெத்தரியா என்று பாரம்பரியமாய்ச் சொல்லப்படுகிறது.[4] அவர்கள் அங்கே சிலகாலம் இருந்து பின்பு கலிலேயாவுக்குத் திரும்பி நாசரேத்தில் குடியிருந்தார்கள். அந்த ஊரில் யோசேப்பும் மரியாளும் முன் வாசம்பண்ணியிருந்தார்கள். அங்கே நம்முடைய ஆண்டவர் தமது ஜீவகாலத்தில் மிகுதியான பங்கைப் பின்னிட்டார். அப்படி அவர் அங்கே பின்னிட்ட முகாந்தரத்தின் நிமித்தம் அந்த ஊர் விசேஷித்ததாக மதிக்கப்படுகிறது. ஆனால் மற்ற விஷயங்களுக்கு அது பேர்போனதல்ல. அதின் பேர் பழைய ஏற்பாட்டில் காட்டப்படவும் இல்லை; யோசேப்புஸ் அதைப்பற்றி ஒருவார்த்தையும் சொல்லியிருப்பதும் இல்லை. அது விசேஷித்த அழகுபொருந்திய ஊர் என்று பிரயாணிகள் யாவரும் சாக்ஷியிட்டிருக்கிறார்கள். அங்கே மங்களவாக்குக் கெபியும் மரியாளின் அடுக்களையும் யோசேப்பின் வேலைசாலையும் நம்முடைய ஆண்டவருடைய தீனி மேசையும் அவர் ஏசாயா தீர்க்கதரிசனம் வாசித்த ஜெப ஆலயமும் பாரம்பரியமாய்க் காட்டப்பட்டு வருவதுண்டு. அங்கே பட்டணத்தின் தென்மேற்கில் நம்முடைய ஆண்டவரைத் தலைகிழாகத் தள்ளும்படியாகக் கொண்டுபோன செங்குத்

[1] ரூத். 1. 2; 4. 11. 1 சாமு. 17. 12.
[2] சங். 132. 6. மீகா. 5. 2.
[3] நியா. 17. 7. 1 சாமு. 17. 12. ரூத். 1. 1, 2.
[4] பிரயாணத்தில் அவர்கள் நிழலுக்கு உட்கார்ந்த இடம் என்று ஒரு பழைய காட்டத்திமரம் இந்நாள்வரையும் காட்டப்படுகிறதுண்டு.

இருந்தது" என்று சொல்லி இருப்பதால் அப்படித் தோன்றுகிறது.

8. யூதேயாவை விட்டு இரட்சகர் சீகார் வழியாய் சமாரியாவைக்[1] கடந்து கலிலேயாவுக்குப் போனார். சீகாருக்கு வேறே பேர் சிகேம்.[2] அது இப்போதிருக்கிற நெயாப்போலிப் பட்டணத்திற்குச் சமீபமாய் இருந்தது. யாக்கோபுடைய கிணறு அங்கே இருக்கிறது. கலிலேயாவுக்கு வந்தபின்பு அவர் ஒரு அற்புதத்தைச் செய்தார்; இது கலிலேயாவில் நடந்த இரண்டாம் அற்புதம். அந்த அற்புதம் கானாவில் செய்யப்பட்டாலும் சுகமடைந்த மனிதன் கப்பர்நகூமில்[3] இருந்தான். பின்பு சற்றுக்காலம் பொறுத்து எருசலேமுக்கு[4] ஒரு பண்டிகையை ஆசரிக்கச் சென்றார்.

9. எருசலேமில் பெதஸ்தா குளத்தில்[5] முப்பத்தெட்டுவருஷம் வியாதியாய் இருந்தவனைக் குணமாக்கினார். அங்கே அவருக்குத் துன்பம் உண்டானதால் சில நாட்களுக்கு அப்பால் அவர் கலிலேயாவில் காணப்பட்டார். நாசரேத்தூரார்[6] அவரைப் புறக்கணித்ததால் கப்பர்நகூமுக்குப் போனார். இதுமுதல் அவருடைய இரண்டாம் பயணம் துவக்கிற்று. என்ன முகாந்தரத்தினால் அவர் கப்பர்நகூமை தமது பணிவிடைக்கு மத்தியமான இடமாகத் தெரிந்துகொண்டாரோ அது நமக்குத் தெரியாது. சிலர் அங்கே யோசேப்புக்கு நிலம் கரை இருந்ததாகவும் அவருடைய தாயார் சகோதரியின் இனத்தார் அங்கே வாசம் பண்ணி வந்ததாகவும்[7] நினைக்கிறார்கள். அது வசதியான பட்டணமாய் இருந்தாலும், இனத்தார் அங்கே இருந்தாலும் அதைத் தெரிந்திருக்கலாம்; என்றாலும் எகிப்திலிருந்து சீரியாவுக்குப் போகும் பெரும்பாதையும் எருசலேமிலிருந்து தமஸ்குவுக்குச் செல்லும் வழியும் அந்தக் கடல் ஓரமாய் அந்தப் பட்டணத்து வழியாய்ப் போனதால் அதைத் தெரிந்திருக்கலாம் என்று சொல்லலாம். அவர் அந்த இடத்தில் இருந்துகொண்டு மேற்கே கலிலேயாவிலும், வடக்கே திராக்கோனித்தியிலும், கிழக்கேயும் தெற்கேயும் தெக்கப்போலியிலும் பெரியாவிலும் பிரசங்கம் செய்து வருவாய்ச் சுற்றிவரலாம். இதோடேகூட அது அந்திரேயா பேதுரு என்பவர்களுடைய குடியிருப்பாய்

[1] யோ. 4. 4. [2] அப். 7. 16. [3] யோ. 4. 46–54. [4] யோ. 5. 1. [5] யோ. 5. 2–9. [6] லூக். 4. 16–32. [7] யோ. 2. 12.



இருந்தது. அதற்குச் சற்றுத் தொலையில் பிலிப்புவின் பட்டணம் பெத்சாயிதாவும் இருந்தது.

10. கலிலேயாக்கடல். யோர்தான் நதி வடக்கேயிருந்து ஓடி மேற்படி கடலில் விழுந்து பின்பு அந்தக் கடலின் தென்பக்கத்திலிருந்து புறப்பட்டுப்போகிறது. அந்தக் கடல் ஒழுங்கின முட்டைவடிவாய் இருக்கிறது, வடக்கே விரிவாயும் தெற்கே சுருங்கியும் இருக்கிறது; அது பதினாலு மைல் நீளமும் ஆறு ஏழு மைல் அகலமுமுள்ளது. அதின் மேல்கரை கீழ்கரையைவிட செங்குத்தானது. அது மலைகளால் சூழப்பட்டிருக்கிறது; அந்த மலைகளில் பள்ளத்தாவான கணவாய்கள் இருப்பதால் திடீரென அதில் புசல் எழும்புவதுண்டு.

11. கடல் நீளத்தின் பாதிவரையும் அதின் மேல்பக்கத்தில் கெனேசரேத்து நாடு இருக்கிறது. அது நாலு மைல் நீளமும் மூன்று மைல் அகலமுமுள்ளது. தெற்கே மகதலாமுதல் வடக்கே கான்மின்னாக்கடல் முனைவரையும் அந்த நாடு எட்டுகிறது.

12. கெனேசரேத்து நாட்டில் அல்லது அதற்குச் சமீபத்தில் கப்பர்நகூம் இருந்தது. அந்த இடத்தில் நம்முடைய ஆண்டவர் தம்முடைய பணிவிடை நாட்களில் அதிகமான காலத்தைப் பின்னிட்டதாலும் அதை அவர் தமது வேலைக்கு மத்தியான இடமாக வைத்துக்கொண்டதாலும் அது இருந்த இடத்தைப்பற்றி விசாரிப்பது நமக்குப் பிரியமாய் இருக்கும். அது இருந்த இடத்தைப்பற்றி சுவிசேஷகராவது யோசேப்புஸ் சரித்திரக்காரனாவது திருச்சபைப் பிதாக்களாவது சொல்வதை வைத்துக்கொண்டு திட்டமாய் நிதானிக்க ஏதுவில்லை. அந்தக் கடலின் கரையோரங்களைப் பரிசோதித்த நவீனபிரயாணிகளும் அது இருந்த திட்டமான இடத்தைப்பற்றி ஒன்றுபடச் சொல்லுகிறதும் இல்லை. அந்தப் பட்டணம் கடலின் கீழ்கரையில் இருக்கிற தெல்ஹூம் என்று பலபேர் சொல்லுகிறார்கள்; ஆனால் இதை ரூபிக்க ஏதுவில்லை. சிலர் அது கான்மின்னாவாய் இருக்கலாம் என்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். அது இருந்த இடம் இன்னதென்று தெரியாததே நம்முடைய கர்த்தர் அதற்கு விரோதமாய்க் கூறின ஆக்கினை ஆச்சரியமானவிதமாய் நிறைவேறி இருக்கிறதென்று அறியலாம். "வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாளபரியந்தம் தாழ்த்தப்படுவாய்; உன்னில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் சோதோமிலே செய்யப்பட்டிருந்ததானால், அது இந்நாள்வரைக்கும் நிலைத்திருக்கும். நியாயத்தீர்ப்பு நாளிலே உனக்கு நேரிடு

வதைப்பார்க்கிலும், சோதோம் நாட்டிற்கு நேரிடுவது லகுவாய் இருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்."[1]

13. கப்பர்நகூம் எங்கே இருந்தாலும் சரி, நம்முடைய கர்த்தர் அந்த இடத்தில் வாசம்பண்ணிவந்தார். "மனுஷகுமாரனுக்குத் தலைசாய்க்க இடம் இல்லை"[2] என்று அவர் சொல்லியிருப்பதைப் பார்க்கும்போது அவருக்கு அங்கே சொந்தமான இடம் இல்லை என்றும் இளைப்பாறும்படி அவர் மற்றவர்கள் வீட்டில் தங்கவேண்டியதாய் இருந்ததென்றும் அறியலாம். அவர் அதிலிருந்து பட்டணங்கள்தோறும் கிராமங்கள்தோறும் போய் ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துவந்தார்.[3]

14. அவர் "அடுத்த ஊர்களிலும்"[4] பிரசங்கித்தார் என்று சொல்லியதைக் கவனிக்கையில் அவர் பெத்சாயிதா கோராசீன் பட்டணங்களில் உபதேசித்திருக்கலாம் என்று எண்ணவேண்டியதாய் இருக்கிறது. அப்புறம் அவர் ஒரு மலையண்டைக்கு வந்தார்; அதை "பாக்கியமலை" என்று லத்தீனர் அழைக்கிறார்கள். அங்கே அவர் தமக்கு அப்போஸ்தலர்களைத் தெரிந்துகொண்டு மலைப்பிரசங்கத்தைச் செய்தார். அப்பால் கப்பர்நகூமுக்கு இருபது மைலுக்குத் தென்மேற்காய் இருக்கிற நாயீனுக்கு வந்தார். அங்கே அவர் ஒரு விதவையின் மகனை உயிரோடே எழுப்பினார்.[5] யோவான்ஸ்நானகன் காவற்கூடத்தில் அடைபட்ட செய்தியை அங்கே கேள்விப்பட்டு[6] அவர் கடலைக் கடந்து அதன் கிழக்கரையில் இருக்கிற கெர்கெசேனர் நாட்டிற்கு வந்தார். அங்கே தமக்கு எதிராக வந்த பிசாசு பிடித்திருந்த இரண்டு பேரை சுகமாக்கி பிசாசுகள் பன்றிக்கூட்டத்தில் பிரவேசிக்கவும் அதால் அவைகள் கடலில் மாளவும் இடங்கொடுத்தார்.[7] மறுபடியும் அவர் நாசரேத்தூருக்குப் போனார். இரண்டாந்தரமும் ஜனங்கள் அங்கே அவரைப் புறக்கணித்ததால் அந்தத் திசையிலுள்ள பட்டணங்கள் கிராமங்கள்தோறும் போய் உபதேசம் பண்ணிவந்தார்.[8] அப்பால் யோவான்ஸ்நானகன் சிரச்சேதம் பண்ணப்பட்டான் என்று கேள்விப்பட்டு வனாந்தரமான ஒரு இடத்திற்குப் போனார். ஜனங்கள் அவரைப் பின்சென்றுபோனார்கள். அங்கே அவர் ஸ்திரீ

[1] மத். 11. 23, 24. [2] மத். 8. 20.
[3] மாற். 6. 6. [4] மாற். 1. 38.
[5] லூக். 7. 11–17. நாயீன் இன்னும் எர்மோன் மலையின் வடமேற்கு சார்பில் இருக்கிறது.
[6] லூக். 7. 18–23. [7] மத். 8. 23–33. [8] மாற். 6. 1–6.



சிகள் பிள்ளைகள்தவிர ஐயாயிரம் புருஷருக்கு அற்புதமாய்ப் போஜனங்கொடுத்தார்.[1] இது முடிந்தபின்பு அவர் இன்னொருதரம் கடலைக் கடந்து கெனேசரேத்து நாட்டிக்கு வந்தார்.[2] அங்கே அநேக பிணியாளிகள் அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டு சொஸ்தமானார்கள்.[3] கெனேசரேத்தை விட்டு பலஸ்தீனாவின் வடமேற்காய் பெரிய கடலோரமாய் இருக்கிற தீரு சீதோன் பட்டணங்களின் எல்லைகளுக்கு வந்தார். அங்கே சீரோபேனிக்கியா தேசத்தாளாகிய கிரேக்க ஸ்திரீயின் மகளைக் குணமாக்கி[4] அப்புறம் தெக்கப்போலிக்குப் போனார்.[5] பின்பு மத்தேயு சொல்லியபடி மகதலாவுக்கு அல்லது மாற்கு சொல்லியபடி தல்மனூத்தாவுக்குச் சென்றார்.[6] சற்று பின்பு அவர் பெத்சாயிதாவில் காணப்பட்டார்; அங்கே ஒரு குருடனைச் சுகப்படுத்தி இரகசியமாய் அவனை வீட்டுக்கு அனுப்பிவிட்டார்.[7] அங்கேயிருந்து செசரியா பிலிப்பிப் பட்டணத்துக்கு வந்து அதற்குச் சமீபத்திலுள்ள ஒரு பெரிய மலையில் பேதுரு யோவான் யாக்கோபு என்பவர்களோடேகூட ஏறி அங்கே மறுரூபமானார்.[8] அப்பால் அவர் இரகசியமாய் எருசலேமுக்குக் கூடாரப்பண்டிகைக்குப் போனார்.[9]

[1] மத். 14. 13–21. மாற். 6. 34–44. [2] மத். 14. 22–31.
[3] மாற். 6. 53–56. [4] மத். 15. 21–28. மாற். 7. 24–30.
[5] மாற். 7. 31–37. தெக்கப்போலியில் எந்த இடத்திற்கு வந்தார் என்பதைப்பற்றி சுவிசேஷகர் ஒருவராவது சொல்லவில்லை. இந்தப் பெயரால் பத்துப் பட்டணங்கள் உண்டு. எட்டு அல்லது ஒன்பது பட்டணங்கள் யோர்தானுக்குக் கீழ்பக்கத்தில் கலிலேயாக் கடலுக்குத் தென்கிழக்கும் தென்மேற்குமாக இருந்தன.
[6] மத். 15. 39. மாற். 8. 10. மகதலா கெனேசரேத்துக் கடலோரத்தில் கெனேசரேத்து சமபூமியின் தெற்கிலுள்ள ஒரு அற்பமான ஊர்; தல்மனூத்தா மகதலாவுக்குச் சமீபமான ஒரு சிறு பட்டணம்.
[7] மாற். 8. 22–26.
[8] மத். 17. 1-9. மாற். 9. 1—8. லூக். 9. 28-36. பிலிப்பி செசரியா நம்முடைய ஆண்டவருடைய பிரயாணத்தில் வடக்கே இருந்தது. அது யோர்தான் உற்பத்தியாகிற பானியம் என்கிற இடத்திற்குச் சமீபமாய் இருக்கிறது. மறுரூபம் எந்த மலையில் நடந்ததென்பதைப்பற்றி நாம் திட்டமாய்ச் சொல்ல ஏலவில்லை. நாலாம் நூற்றாண்டுமுதல் தாபோர் மலையில் அந்தப் பெரிய காரியம் நடந்ததாக ஒரு பாரம்பரியம் சொல்லிவருகிறது. மறுரூபம் பிலிப்பி செசரியாவுக்குச் சமீபமாய் நடந்திருந்தால் அது எர்மோன் மலையில் நடந்திருக்கவேண்டும் எனலாம்.
[9] யோ. 7. 2–10.

15. நம்முடைய இரட்சகருடைய பணிவிடையின் இரண்டாம் பயணத்தில் பதினெட்டு மாதங்களாய்ச் சம்பவித்த காரியங்களை இப்படிச் சுருக்கிச் சொல்லியிருக்கிறோம். கூடாரப் பண்டிகைக்குப் பின்பு அவர் யோர்தானுக்கு அக்கரையில் சென்று அங்கே போதகம்பண்ணிவந்தார்.[1] மார்த்தாள் மரியாள் கேட்டுக்கொண்டபடி அவர் எருசலேமுக்குச் சமீபமான பெத்தானியாவுக்கு வந்து லாசருவை உயிரோடே எழுப்பினார்.[2] சத்துருக்களுக்கு அஞ்சி பெத்தானியாவை விட்டு எப்பிராயீம் என்னப்பட்ட ஊருக்குப் போய் அங்கே தமது சீஷரோடேகூடத் தங்கியிருந்தார்.[3] எப்பிராயீமை விட்டு பஸ்காவுக்கு ஆறுநாட்களுக்குமுன் மறுபடியும் பெத்தானியாவுக்கு வந்தார்.[4] இதற்கு இடையில் மறுபடியும் அவர் கலிலேயாவுக்குப் போனாரோ போகவில்லையோ என்பது திட்டமாய்த் தெரியாது. ஆனால் அவர் யோர்தானுக்கு அப்புறத்தில் இருந்தது நிச்சயம்.

16. அவர் எருசலேமுக்கு நேராகத் தமது முகத்தைத் திருப்பி[5] பெத்தானியா வழியாய் ஏகினார். அவர் போகவேண்டிய பாதை ஒலிவமலை உச்சிவழியாய் இருந்தது. அங்கே தீர்க்கதரிசிகளுடைய கல்லறைகளும் இடறலின் மலையும் இருந்தது. அந்த வழியில் ஏற்றமும் இறக்கமும் உண்டு. இந்த மலையிலிருந்து அவர் பட்டணத்தைப் பார்த்துக் கண்ணீர் விட்டார்.

17. கல்வாரி எருசலேமுக்கு வடமேற்கே மதிலுக்குப் பின்புறமாய் இருந்தது. அங்கே எக்காலத்திலும் எவ்விடத்திலுமுள்ள உலகத்தார் யாவருக்காகவும் பாவப் பிராயச்சித்தம் செய்யப்பட்டது. ஆண்டவர் அடக்கம்பண்ணப்பட்ட கல்லறை இருந்த இடத்தில் ஒரு ஆலயம் கட்டப்பட்டிருக்கிறது. அவர் பரமேறினது ஒலிவமலை சிகரங்களில் ஒன்று.

நமது ஆண்டவருடைய காலத்தில் கானான் தேசம் இருந்த விதத்தைப்பற்றி இங்ஙனம் சுருக்கமாய்ப் பார்ப்போம்.

சாலொமோனுக்குப் பின்பு எபிரெய ராஜ்யம் யூதராஜ்யமாகவும் இஸ்ரவேல் ராஜ்யமாகவும் பிரிந்தது. நம்முடைய

1 யோ. 10. 40–42.

2 யோ. 11. 1–45. பெத்தானியா ஒலிவமலைக்குச் சமீபமாய் எருசலேமிலிருந்து ஏறக்குறைய ஒரு மைல் தூரத்தில் இருந்தது. அங்கே லாசருவின் வீடு இருந்த இடமும் அவன் கல்லறையும் குஷ்டரோகியாகிய சீமோன் வீடும் காட்டப்படுவதுண்டு.

3 யோ. 11. 54  4 யோ. 12. 1.  5 லூக். 9. 51.



ஆண்டவருடைய காலத்தில் அது யூதேயா, சமாரியா, கலிலேயா, பெரியா என நாலு நாடுகளாகப் பிரிக்கப்பட்டது. முதல் மூன்று நாடுகளும் யோர்தானுக்கு மேல்பக்கத்திலும் மற்றது கீழ்ப்பக்கத்திலும் இருந்தன. இதுமேயா என்ற ஐந்தாம் நாடும் இருந்தது.

யூதேயா நாடு[1] தெற்கே இருந்தது. அது தெற்கே அராபியாவின் எல்லையாய் இருந்த யோர்தான் ஊர்முதல் வடக்கே அன்றூதீ என்று அழைக்கப்பட்ட பார்சியாஸ் ஊர்வரையும் எட்டினது. கிழமேலாய் அதின் அகலம் யோர்தான் நதிமுதல் பெரிய கடலோரமாய் இருக்கிற யோப்பா பட்டணம்வரையும் உள்ளது. அந்த நாட்டின் மத்தியில் எருசலேம் இருந்தது. அதன் கீழ்பாகம் வேதத்தில் யூதேயா வனாந்தரம் என்று அழைக்கப்படுகிறது. யூதேயாவில் அரிமத்தியா, ஆசோத்து, பெத்தானீ, பெத்லெகேம், பெத்பகே, எம்மா, எப்பிராயீம், காசா, எரிகோ, யோப்பா, லித்தா, ராமா என்ற பட்டணங்கள் உண்டு.

சமாரியா யூதேயாவுக்கு வடக்கே இருக்கிறது. அது எல்லாவற்றிலும் சிறியநாடு. எப்பிராயீம் கோத்திரம் மனாசேயின் பாதிக்கோத்திரம் அதில் அடங்கியிருந்தது. அது கலிலேயாவுக்கும் யூதாவுக்கும் நடுவில் இருந்தது. கலிலேயாவிலிருந்து யூதேயாவுக்கு சீக்கிரம் போகவேண்டுமானால் அதின் வழியாய்ப் போகவேண்டும். யோவா. 4. 4; யூதருக்கும் சமாரியருக்கும் சம்பந்த உறவு இல்லை. யோவா. 4. 9. சமாரியாவின் முக்கியமான பட்டணங்கள் சமாரியா, சீகார், சீலோ.

கலிலேயா பலஸ்தீனாவுக்கு வடக்கே இருந்தது. இசக்கார், செபுலோன், நப்தலி, ஆசேர், தாண் கோத்திரத்தில் ஒரு பாகம் அதைச் சேர்ந்திருந்தது. பரிசுத்த தேசத்தில் அதுதான் பெரிய நாடு. அதின் மேல் எல்லை பித்தொலோமாய் பட்டணமும் கர்மேல் மலையும்; தென் எல்லை சமாரியாநாடு; கீழ் எல்லை இப்போஸ், கதரு, காலன் என்ற மாகாணங்கள்; வட எல்லை தீரியருடைய பூமி.[2] அது வடகலிலேயா தென்கலி

1 யூதர் சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்தபின்பு, யூதா, பென்யமீன், தாண் கோத்திர நாடுகளில் பரவிக் குடியிருந்து தங்கள் தேசத்துக்கு யூதேயா என்று பேரிட்டார்கள். அவர்கள் அதுமுதல் எபிரெயர் அல்லது இஸ்ரவேலர் என்று அழைக்கப்படாமல் யூதர் என்று அழைக்கப்பட்டார்கள்.

2 யூதர் சிறையிருப்புக்குப் [illegible]பின்பு பற்பல புறஜாதியார் கலிலேயாவில் வந்து குடியிருந்து யூதரோடே சம்பந்தம் கலந்துகொண்டார்கள். தீரியரும் தங்கள் எல்லையை விஸ்தாரப்படுத்திக்கொண்

லேயா என்ற இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருந்தது. வடகலிலேயா தீரு சிதோன் எல்லைகள் என்றும் சொல்லப்படும். தென்கலிலேயாவில் இசக்கார் கோத்திரம் இருந்தது. மற்ற நாடுகளைவிட கலிலேயாநாட்டில் நம்முடைய ஆண்டவர் அதிகமான கிரியைகளை நடப்பித்து உபதேசம்பண்ணிவந்தார். ஆகையினாலே அவர் கலிலேயன் என்று அழைக்கப்பட்டார். அதின் முக்கிய பட்டணங்கள் செசரியா, பலஸ்தீனு, திபேரியு, கப்பர்நகூம், கோராசின், பெத்சாயிதா, கானா, நாசரேத்து, நாயீன்.

**பெரியா** என்பதற்கு "அந்தப் பக்கத்துத் தேசம்" என்று அர்த்தம். பூர்வத்தில் அம்மோனியர் குடியிருந்த கிலேயாத்தும் பாசான் நாடுகளும் அதைச் சேர்ந்தவைகளாய் இருந்தன. அதற்கு முக்கியமான பட்டணம் கதரு.

**இதுமேயா.** பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிற இதுமேயா இதுவல்ல. அது கல் அராபியாவில் இருந்தது. இது யூதர்கள் சிறையிருப்பில் இருக்கையில் எதோமியர் யுத்தத்தின் கொடுமைக்குத் தப்பிவந்து சிமியோன் கோத்திரப்பூமியில் குடியிருந்த இடத்துக்குப் பேராய் இருந்தது. யூதர்கள் திரும்பிவந்த பின்பு அவர்களைத் துரத்திவிடக் கூடாமல் போயிற்று. ஆனால் கிறிஸ்துவுக்கு நூறுவருஷங்களுக்கு முந்தி யோவான் இர்க்கானு என்ற யூதசேனாபதி அவர்களை முழுவதுமாய் ஜெயித்துத் தேசத்தை விட்டுப்போக அல்லது யூதமார்க்கத்தைச் சேர்ந்துகொள்ள கட்டாயம்பண்ணினதின்பேரில் அவர்கள் யூதமார்க்கத்தைச் சேர்ந்துகொண்டு அவர்களோடே கலந்துபோனார்கள். அவர்கள் குடியிருந்த இடம் கிறிஸ்துவுக்குப் பின்பும் பல நூற்றாண்டுகளாக இதுமேயா[1] என்று அழைக்கப்பட்டது.

18. புதிய ஏற்பாட்டின் பூமிசாஸ்திரம் இனிமேல் அப்போஸ்தலர் நடபடிகளைப்பற்றினதாய் வருகிறது. நமது ஆண்ட

டார்கள். அதினால் அது புறஜாதியாரின் நாடு என்று அர்த்தம் கொள்ளும் கலிலேயா என்று அழைக்கப்பட்டது. இந்தச் சங்கதியினால் யூதர் கலிலேயாவிலிருந்து யாதொரு நன்மையும் தோன்றமாட்டாது என்று எண்ணினார்கள். யோவா. 1. 46; 7. 52. அங்கே குடியிருந்த யூதர்கள் மற்றவர்களோடு கலந்ததினாலே அவர்கள் பாஷையும் கெடுதலடைந்ததால் அவர்கள் பேச்சு அவர்களைக் கலிலேயர் என்று உடனே காட்டிக்கொடுத்தது. மத். 26. 73. மாற். 14. 70.

[1] மாற். 3. 8.



வர் பரமேறினபின்பு அப்போஸ்தலர் எருசலேமில் சுவிசேஷ பணிவிடையை நடத்திக்கொண்டுவந்தார்கள். சில வருஷங்களுக்குப்பின்பு ஸ்தேவான் இரத்தச்சாட்சியாக மரித்தான். சீஷர்கள் அப்போது பல திசைகளிலும் பிரிந்துபோனார்கள். சிலர் பெனிக்கேயா நாட்டைக் கடந்து சீரியாவுக்கும் சிப்புரு தீவுக்கும் போனார்கள்.[1] ஸ்தேவானைச் சேர்ந்தவனாகிய பிலிப்பு என்பவன் சமாரியாவுக்குப்[2] போய் அங்கே கிறிஸ்துவைப் பிரசங்கித்தான். பேதுருவும் யோவானும் அங்கே போய் சபையைத் திடப்படுத்தினார்கள்.[3] பிலிப்பு சமாரியாவை விட்டுக் காசாவுக்குப் போகும்படி தேவதூதனால் உத்தரவுபெற்று அங்கே நடந்துபோகையில் எத்தியோப்பிய மந்திரியைக் கண்டு அவனுக்கு இரட்சிப்பின் விசேஷத்தை அறிவித்தான். மந்திரி ஞானஸ்நானம் பெற்றபின்பு[4] ஆவியானவர் பிலிப்புவை எடுத்துக்கொண்டுபோக, அவன் (அஸ்தோத்து) ஆசோத்தில் காணப்பட்டான். அவன் பட்டணங்கள் கிராமங்கள்தோறும் பிரசங்கித்து யூதேயாவில் ரோமருக்குப் பிரதான நகரியாய் இருந்த செசரியாவுக்கு வந்தான்.[5]

19. கர்த்தர் பரலோகத்துக்கு எழுந்தருளி ஏழுவருஷம் ஆன பின்பு அப்போஸ்தலனாகிய பவுலின் சரித்திரம் தொடங்குகிறது. அவன் தர்சுபட்டணத்து சவுல்[6] என்று முதலாவதாக அழைக்கப்பட்டான். அவன் ஸ்தேவானைக் கொலைசெய்வதற்குச் சம்மதி கொடுத்தவர்களில் ஒருவனாய் இருந்தான். அவன் தமஸ்குவுக்குப்[7] பிரயாணமாய்ப் போனபோது தேவதரிசனை அடைந்து கிறிஸ்தவன் ஆனான். அவன் குணப்பட்டபின்பு

[1] அப். 11. 19, 20. [2] அப். 8. 5.
[3] அப். 8. 14. [4] அப். 8. 26—39. [5] அப். 8. 40.

[6] அப். 9. 11. தர்சுபட்டணம் சின்ன ஆசியாவுக்குத் தென்கரையில் இருந்த சிலிசியாவுக்குப் பிரதான பட்டணம். அது கீர்த்தி பெற்ற நகரமாய் இருந்தது. அப். 21. 39. சிலிசியா, வெள்ளாட்டு மயிர் புடவைக்கும் பேர்போனதாய் இருந்தது. சவுல் கூடாரம் செய்யும் தொழிலைக் கற்றிருந்தான்.

[7] அப். 9. 3. தமஸ்கு மிகப் பூர்வீக பட்டணங்களில் ஒன்று. அது எக்காலத்திலும் சீரியாவின் பட்டணங்களில் பேர்போனதாய் இருந்தது. அது அந்திலிபனோனுக்குக் கிழக்கே வனாந்தர ஓரத்தில் மிகச் செழிப்புள்ள சமபூமியில் இருக்கிறது. அப்னா என்று வேதத்தில் சொல்லப்படுகிற பரடாநதியினால் அது செழிப்பாக்கப்படுகிறது. தமஸ்கு சேமின் பேரனும் ஆராமின் மகனுமாகிய [illegible] என்பவ

அராபியாவுக்குப் போனான். என்ன காரணத்தைவிட்டு அங்கே போனான் என்பது நமக்குத் தெரியாது. ஒருவேளை தனித்திருந்து ஜெபத்தியானம் செய்ய இருக்கலாம்.

அவன் மறுபடியும் தமஸ்குவுக்கு[1] வந்து "கிறிஸ்துவே தேவனுடைய குமாரன் என்று ஜெபஆலயங்களில் பிரசங்கித்தான்."[2] மூன்று வருஷத்துக்குப் பின்பு பேதுருவைச் சந்திக்கும்படி எருசலேமுக்கு வந்தான்.[3]

20. பவுல் குணப்பட்டதினால் சபையில் உண்டான துன்பம் நீங்க அது சமாதானம் பெற்றது.[4] இந்தச் சங்கதி திபேரியு ராயன் ஆளுகையின் கடைசி வருஷத்திலாவது கலிகுலா ராயன் ஆளுகையின் முதல் வருஷத்திலாவது சம்பவித்து இருக்கலாம். பேதுரு தனக்கு ஒப்புவிக்கப்பட்ட வேலையில் அசதியாய் இராமல் அக்காலத்தில் *ஸ்தாபிக்கப்பட்டிருந்த சபைகள்தோறும் போய் விசாரித்துவந்தான். முதலாவது, அவன் சாரோனுக்குச் சமீபமாய் இருந்த லித்தாவுக்குச் சென்று ஐனேயாவின் திமிர்வாத வியாதியைக் குணமாக்கினான். அங்கே அவன் பண்ணின பிரசங்கத்தினால் லித்தாவிலும் சாரோனிலும் குடி இருந்தவர்கள் எல்லாரும் கர்த்தரிடத்தில் மனம் திரும்பினார்கள்.[5] பின்பு அவன் யோப்பா பட்டணத்துக்குப் போய் அங்கே தொற்காள் என்று மறுபேர்கொண்ட தபீத்தாளை உயிரோடே எழுப்பினான்.[6] அதை விட்டு ஒன்றனாள்

னால் கட்டப்பட்டதாக யோசேப்புஸ் சரித்திரக்காரன் சொல்லுகிறான். தமஸ்குவின் குடிகள் நேர் தெருவை கடைத் தெரு என்று இப்போது அழைக்கிறார்கள். யூதாவின் வீடு காட்டப்படுவது உண்டு. ஆனால் அது நேர்தெருவில் அல்ல. அனனியாவின் வீடும் காட்டப்படுவது உண்டு. பவுல் குணப்பட்ட இடம் பசும்புல் உள்ள வெளி என்று காட்டுகிறார்கள். கிறிஸ்தவர்கள் அந்த இடத்தைத் தங்களுடைய சமாதியாக வைத்திருக்கிறார்கள். ஆனால் அவன் பரமதரிசனை அடைந்த ஸ்தலமாக நாலு இடங்கள் காட்டப்படுவதால் எது நிச்சயம் என்று சொல்ல ஏதுவில்லை. பவுல் கூடையில் வைக்கப்பட்டு இறக்கப்பட்ட இடமும் காட்டப்படுவது உண்டு. அப். 9. 25. 2 கொரி. 11. 33.

[1] கலா. 1. 17. [2] அப். 9. 20. [3] கலா. 1. 18.

[4] அப். 9. 31. [5] அப். 9. 32–35. [6] அப். 9. 36–43. யோப்பா பலஸ்தீனாவின் தென்மேற்கில் சாலொமோன் காலமுதல் இந்நாள் வரையும் கடல்துறைப் பட்டணமாய் இருந்து வருகிறது. யோனா தேவனுடைய சமுகத்தை விட்டு ஓடிப்போக இந்த இடத்தில் கப்பல் [illegible] யோனா. 1. 3.



பிரயாணத்துக்கு அப்பால் இருந்த செசரியாவுக்கு வந்து அங்கே கொர்நேலியுவுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து அவனைச் சபையில் சேர்த்து[1] மறுபடியும் யோப்பாவுக்குத் திரும்பிப் போய் அங்கிருந்து எருசலேமுக்கு வந்தான்.

21. பேதுரு எருசலேமுக்குத் திரும்புமுன்னே பவுல் தன் பணிவிடையைத் துவக்கி இருந்தான். எருசலேமில் சத்துருக்கள் பவுலைக் கொலைசெய்ய வகைதேடினதால் சகோதரர் அவனைக் கடல்மார்க்கமாய் செசரியாவுக்குக் கொண்டுபோய் அங்கே இருந்து தர்சுவுக்கு அனுப்பிவிட்டார்கள்.[2] அவன் கலாத்தியருக்கு எழுதின நிருபத்தில் தான் சீரியா சிலிசியா நாடுகளின் புறங்களுக்குப் போனதாகச் சொல்லுவதால்[3] தர்சுவிலிருந்து அந்தத் திசைகளுக்குப் போய் திவ்விய பணிவிடையை நடப்பித்திருக்கவேண்டும். ஆகவே, அவன் தர்சுபட்டணத்தில் வாசிப்பிலும் போதிப்பிலும் பின்னிட்டதோடு அந்தியோகியா, சிரியா, சிலிசியா என்ற இடங்களில் சபைகளை ஸ்தாபிப்பதிலும் நாட்களை செலவிட்டான் என்று அறியலாம்.

இதைப்பற்றி அப்போஸ்தலர் 15. 23, 41. காணலாம்.

22. கிறிஸ்துமார்க்க பிரபல்லியத்தில் எருசலேமைவிட அந்தியோகியா[4] கீர்த்திபெற்றதாய் இருந்தது. பர்னபா கேட்டுக்கொண்டபடி பவுல் அந்தியோகியாவுக்குப் போய் அங்கே ஒரு வருஷமுழுவதும் இருந்தான்.[5] அங்கே இருந்து பர்னபாவும் சவுலும் எருசலேமுக்குத் தர்மசகாயத்தைக் கொண்டுபோகும்படி அனுப்பப்பட்டார்கள்.[6] மறுபடியும் அவர்கள் அந்தியோகியாவுக்குத்[7] திரும்பவே சபையார் அவர்களைச் சுவிசேஷ ஊழியத்திற்காகப் பிரதிஷ்டை ஆக்கினார்கள்.

23. பவுல் அப்போஸ்தலன் தன் முதல் பிரயாணத்தை பர்னபா மாற்கு என்பவர்களோடே கி. பி. 45–ஆம் துவக்கி

[1] அப். 10. [2] அப். 9. 30. [3] கலா. 1. 21.

[4] அந்தியோகியாவை கி. மு. 300–ஆம் செலுக்கஸ் நிக்கதோர் என்பவன் கட்டி அவன் தகப்பன் அந்தியோகுவின் பேரை அதற்குத் தரிப்பித்தான். அது சீரியாவில் இருந்த கிரேக்க ராஜாக்களுக்குத் தலைநகரியாய் இருந்தது. பிற்பிய காலத்தில் ரோமதேசாதிபதிகள் அங்கே வாசம்பண்ணிவந்தார்கள். அது லீபனோன் மலையின் வடக்குத் தொடர்ச்சியும் தாரஸ்மலையின் கிழக்குத்தொடர்ச்சியும் கூடுகிற இடத்தில் கட்டப்பட்டிருக்கிறது.

[5] அப். 11. 26. [6] அப். 11. 27–30. [7] அப். 13. 1–3.

னான். பவுல் அந்தியோகியாவுக்குத் துறைமுகமாய் இருந்த செலூக்கியாவில் கப்பல் ஏறி பர்னபா பிறந்த இடமாகிய[1] சிப்புரு தீவுக்கு வந்து அங்கே உள்ள சாலமிபட்டணத்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து[2] அப்புறம் பாப்போ பட்டணத்தில் சேர்ந்தான். அங்கே செர்கியு பவுல் என்ற அதிபதியைக் கர்த்தரண்டைக்குத் திருப்பி எலிமா என்ற மாயவித்தைக் காரனைக் குருட்டாட்டம் பிடிக்கப்பண்ணினான்.[3] இந்தக் காலமுதல் சவுல், பவுல் என்ற பெயரால் அழைக்கப்பட்டான்.[4] சிப்புருதீவை விட்டு பம்பிலியாவில் உள்ள பெர்கே பட்டணத்துக்கு வரவே அதிலிருந்து மாற்கு அவர்களை விட்டுப் பிரிந்து போய்விட்டான்.[5] பின்பு பிசிதியாவில் உள்ள அந்தியோகிக்குப் போனார்கள். அங்கே அஞ்ஞானிகளுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து அநேகரைக் குணப்படுத்தினார்கள். யூதர்களுடைய வெதவினால் அவர்கள் அந்த இடத்தை விட்டுத் துரத்தப்பட்டு[6] உள் நாட்டுக்குள் நூறு மைலுக்கு அப்பால் இருந்த இக்கோனியாவுக்கு வந்தார்கள். அங்கேயும் யூதர்கள் விரோதம் சாதித்தார்கள்.[7] அதைவிட்டு லீஸ்திராவுக்குப் போனார்கள். அங்கே ஒரு பிறவிச் சப்பாணியை அற்புதமாய்ச் சுகப்படுத்தினார்கள்.[8] பின்பு தெர்பைக்குச் சென்றார்கள்.[9] அங்கே சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, லீஸ்திரா இக்கோனியா வழியாய், பிசிதியா, பம்லியா, அத்தாலியா என்ற இடங்களுக்கு வந்து, அங்கிருந்து சீரியாவில் உள்ள அந்தியோகியாவுக்குக் கப்பல் பிரயாணம் செய்தார்கள்.[10] இந்தப் பிரயாணத்தில் ஆயிரத்து நானூறு மைல் சுற்றிவந்தார்கள். இதற்கு ஒருவருஷம் சென்றது.

24. இந்தப் பிரயாணத்துக்குப் பின்பு பவுல் மூன்று வருஷம் அந்தியோகியாவில் இருந்தான். இதற்கு இடையில் அவன் எருசலேமுக்குப் போனான்.[11] அப்பால் அவன் பர்ன

[1] அப். 4. 36. [2] அப். 13. 4. 5. [3] அப். 13. 6–12.
[4] பவுல் அப்போஸ்தலனால் குணப்படுத்தப்பட்ட செர்கியு பவுல் என்பவன் பேரால் சவுலுக்குப் பவுல் என்று பேர் வந்ததென்று சிலர் சொல்வதுண்டு. வேறு சிலர் பவுல் என்கிற பேர் ரோமருடைய பேராக வழங்கப்பட்டதென்றும் புறஜாதியாருக்கு அவன் பிரசங்கியானதால் அந்தப் பேரை ஆக்கா வழங்கியிருக்கிறான் என்றும் சொல்வார்கள்.
[5] அப். 13. 13. [6] அப். 13. 14–50.
[7] அப். 14. 1–7. [8] அப். 14. 8–19.
[9] அப். 14. 20. [10] அப். 14. 21–28. [11] அப். 15. 2.



பாவிடத்தில் தாங்கள் முதல் பிரயாணத்தில் ஸ்தாபித்த சபைகளைப் பார்க்கும்படி இரண்டாம் பிரயாணம் செய்யும்படியாகக் கேட்டான்.[1] தங்களோடே யாரைக் கூட்டிக்கொண்டு போகவேண்டும் என்பதைப்பற்றி அவர்களுக்குள் ஒத்து வராதிருந்தது. ஏனென்றால் பர்னபா மாற்குவைக் கூட்டிக்கொண்டுபோக விரும்பினான். பவுலோ மாற்கு பம்பிலியாவிலிருந்து அவர்களை விட்டுப் பிரிந்துபோனதால் அவனை அழைத்துக்கொண்டு போகக்கூடாதென்று சொன்னான். ஆதலால் பவுல், பர்னபாவை விட்டுப் பிரிந்து சீலாவைக் கூட்டிக்கொண்டு இரண்டாம் பிரயாணம் செய்தான்.[2] முந்தின பிரயாணத்தைவிட இந்தப் பிரயாணத்தில் அநேக இடங்களைச் சந்தித்தான். சிலிசியாவின் வழியாய் தெர்பைக்கும் லீஸ்திராவுக்கும் போய், அங்கே தீமோத்தேயுவைக் கூட்டிக்கொண்டு,[3] பிரிகியாவுக்குப் போனான். கொலோசே அதின் பிரதான பட்டணமாய் இருந்தது.[4] பின்பு கலாத்தியாவுக்குப் போனான். அங்கே அவன் 2 கொரி. 12. 1—10ல் சொல்லப்பட்டிருக்கிற விசேஷித்த தரிசனையைக் கண்டதாக சிலர் எண்ணுகிறார்கள். அப்புறம் அவன் ஆசியாவை விட்டு, விலகி சுற்றுப்பாதை மார்க்கமாய், பிலதெல்பியா, சர்தை, தியத்திரா என்ற பட்டணங்களுக்குச் சென்று துரோவாவுக்கு வந்தான். அங்கே லூக்கா அவனைச் சேர்ந்துகொண்டான். அவ்விடத்தில் ஒரு தரிசனை கண்டு மக்கெதோனியாவுக்குப் போனான்.[5] நேயாப்போலியில் இறங்கி அத்திசைகளில் பிரதான நகரியாய் இருந்த பிலிப்பி பட்டணத்துக்கு வந்து சேர்ந்தான். அங்கே லீதியாளும் சிறைச்சாலைக்காரனும் குணப்பட்டார்கள். அந்தப் பட்டணத்தில் ஸ்தாபிக்கப்பட்ட சபையானது அப்போஸ்தலரால் ஸ்தாபிக்கப்பட்ட சபைகளில் சுத்தாங்கமானதாய் இருந்தது.[6] பின்பு அவன் அம்பிபோலி அப்பொலோனியா பட்டணங்களைக் கடந்து தெசலோனிக்கே பட்டணத்துக்கு வர, அவ்விடத்திலும் யூதரால் துரத்தப்பட பெரோயா பட்டணத்துக்குப் போனான்.[7] அங்கே அவன் யூதர்களால் சிலகாலம் பிரியமாய் அங்கீகரிக்கப்பட்டான். பின்பு தெசலோனிக்கேயில் இருந்து யூதர்கள் வந்து ஜனங்களுக்குள் அவனுக்கு விரோதமாய்க் கலகத்தை மூட்டிவிட்டபோது[8] அவன் அத்தேனே

[1] அப். 15. 36. [2] அப். 15. 37–41. [3] அப். 16. 1.
[4] அப். 16. 6. [5] அப். 16. 10. [6] அப். 16. 11–40.
[7] அப். 17. 1–10. [8] அப். 17. 13.

பட்டணத்துக்குப் புறப்பட்டுப் போனான். அந்தப் பட்டணம் முழுவதும் விக்கிரகத்தால் நிறைந்திருப்பதைக் கண்டு ஆவியில் மிகுந்த வைராக்கியம் அடைந்து மார்ஸ்மேடையில் நின்று ஞானிகளுக்குப் பிரசங்கித்து அவர்களுடைய வீண் பக்தியையும் ஒன்றான மெய்த்தேவனுடைய தன்மையையும் எடுத்துக் காண்பித்தான்.[1] அத்தேனேயை விட்டுக் கொரிந்துவுக்குப் போய் அங்கே ஒன்றரை வருஷம் இருந்து, கூடார வேலைசெய்து தன்னை ஆதரித்துக்கொண்டு[2] பிரசங்கித்துவந்தான். யூதர்கள் பகைசாதித்ததையிட்டு அவன் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு எபேசுவுக்கும் செசரியாவுக்கும் வந்து அப்பால் எருசலேமுக்கும் போய் சிலகாலம் அங்கே தரித்திருந்து பின்பு சீரியாவிலுள்ள அந்தியோகியாவுக்குப் போய் அங்கே பர்னபாவோடும் மற்ற தேவஊழியக்காரரோடும் சேர்ந்துகொண்டான்.[3]

25. பவுல் அப்போஸ்தலனுடைய மூன்றாம் பிரயாணம். அவன் கலாத்தியா, பிரிகியா, எபேசு என்ற இடங்களைச் சந்தித்து[4] எபேசுவில் மூன்று வருஷம் தங்கி சுவிசேஷத்தைப் பிரசங்கித்து அநேகரை கிறிஸ்தவர்களாக்கினான். இதினால் தியானாள் விக்கிரகத்தை ஆராதித்துவந்தவர்கள் எரிச்சல் அடைந்து பெரிய கலாபனை செய்தார்கள். இவர்களுக்குத் தலைவன் தெமேத்திரியு என்பவன். அவன் தியானாளின் கோவிலைப் போல வெள்ளியினால் சிறிய கோவில்களைச் செய்து தொழிலாளிகளுக்கு மிகுந்த ஆதாயத்தை வருவித்துக்கொண்டிருந்தவன்.[5] பவுல் எபேசைவிட்டு பிலிப்பி பட்டணத்துக்கு இரண்டாம்விசை வந்தான்.[6] அங்கிருந்து இல்லிரிக்கம் வழியாய்ப் போய் அந்த இடங்களில் பிரசங்கித்து கொரிந்துவுக்கு வந்தான். அங்கிருந்து சீரியாவுக்குத் திரும்பவேண்டும் என்று இருக்கையில் யூதர்கள் அவனுக்கு வழியில் தீமைசெய்யும் யோசனையாய் இருந்ததை அறிந்து வேறுவழியாய் மக்கெதோனியாவுக்கு வந்து துரோவாவுக்குப் போய், அங்கே ஐத்திகுவை உயிரோடே எழுப்பி,[7] மெலித்தாவுக்கு வந்து எபேசுவின் மூப்பரை வரவழைத்து அவர்களோடே மிகுந்த உருக்கமாய்ப் பேசி வழி அனுப்பிக்கொண்டு,[8] சீரியாவுக்குப் போகும்படி கப்பல் ஏறினான். அவன் எருசலேமுக்கு வந்தபோது பரி

[1] அப். 17. 15–34 [2] அப். 18. 1–11. [3] அப். 18. 12–21.
[4] அப். 18. 23–19. அதி. 1. [5] அப். 19. 23–20. அதி. 1.
[6] அப். 20. 5, 6. [7] அப். 20. 7–12. [8] அப். 20. 17–38.



சுத்த பிராகாரத்துக்குள் புறஜாதியாரைக் கொண்டுவந்து அதைத் தீட்டுப்படுத்தினான்[1] என்று பொய்யாகக் குற்றஞ்சாட்டப்பட்டு கைதியாக செசரியாவுக்குக் கொண்டுபோகப்பட்டான்.[2] அங்கே இரண்டு வருஷம் இருந்தான். பேலிக்ஸ்[3] என்றவன் அவனை விசாரணைசெய்து குற்றம் கண்டுபிடியாதிருந்தும் யூதர்களுக்குத் தயவுசெய்ய மனதாய்ப் பின்னும் அவனைக் காவலில் வைத்துவிட்டுப் போனான். பெஸ்து அவனுக்குப் பதிலாக துரையாக வந்தபோது பவுல் ராயனுக்கு அப்பீல்பண்ணினதால் ரோமாபுரிக்கு அனுப்பப்பட்டான்.[4]

26. பவுல் மற்ற கைதிகளோடேகூட ரோமாபுரிக்கு யூலியு என்ற நூற்றுக்கு அதிபதியால் கொண்டுபோகப்பட்டான்.[5] அவர்கள் சீதோனுக்கு வந்து எதிர்காற்றினால் அலைசடிப்பட்டு சீப்புருதீவின் ஒதுக்கிலே போய்[6] அதை விட்டு லீசியாநாட்டு மீறாபட்டணத்தில் சேர்ந்தார்கள்.[7] அது அந்தக் காலத்திலே ஒரு விசேஷித்த துறைமுகமாய் இருந்தது; இப்போது பாழாய்க் கிடக்கிறது. நூற்றுக்கு அதிபதி அங்கே இத்தாலியாவுக்கு கோதுமையேற்றிக்கொண்டுபோகிற அலெக்சந்திரியா பட்டணத்துக் கப்பலைக் கண்டு கைதிகளை அதில் ஏற்றி பிரயாணஞ்செய்தான்.[8] காற்று எதிராய் இருந்தபடியால் வெகு வருத்தத்தோடே கினீது பட்டணத்துக்கு வந்து கிரேத்தாத் தீவின் ஒதுக்கில் ஓடி லசேயாபட்டணத்துக்குச் சமீபமான நல்ல துறைமுகம்[9] என்னப்பட்ட இடத்துக்கு வந்தார்கள். இது அக்டோபர் மாதத்தில் நடந்தது. அந்தக் காலத்தில் கப்பல் பிரயாணஞ்செய்வது மோசமானதென்று பூர்வீகத்திலுள்ள யாத்திரைக்காரர் சொல்லியிருக்கிறார்கள். பவுல் அப்போஸ்தலன் சொன்ன ஆலோசனையைக் கேளாமல் பினிக்ஸ் என்ற இடத்துக்குப் போகும்படி பிரயத்தனஞ்செய்தார்கள்.[10] காற்று மெதுவாய் அடித்ததால் தாங்கள் கோரினது கைகூடி வந்ததென்று எண்ணி அந்தத் துறைமுகத்துக்குப் பிரயாணப்பட்ட கொஞ்சநேரத்துக்குள்ளாக யூரோக்கிளிதோன் என்னும் கடுங்காற்று எழும்பிற்று. இப்படிப்பட்ட காற்று அந்தக் கடல்களில் உண்டாவது வழக்கமாய் இருந்தது. கப்பலை

[1] அப். 21. 27–23. அதி. 11. [2] அப். 23. 12–35.
[3] அப். 24. [4] அப். 25, 26. அதி. [5] அப். 27. 1, 2.
[6] அப். 27. 3, 4. [7] அப். 27. 5. [8] அப். 27. 6.
[9] அப். 27. 7, 8. [10] அப். 27. 12.

கிறது. பூர்வகாலங்களில் அது வியாபாரத்துக்குப் பேர்போன பட்டணமாய் இருந்தது. ஏழு பட்டணங்களில் இதுமாத்திரம் இந்நாள்பரியந்தம் முந்தின செழிப்போடே இருந்துவருகிறது. அது இருக்கிற இடம் வியாபார முயற்சிக்கு ஏற்றது. துர்க்கிய ராஜ்யத்திலுள்ள பெரும்பட்டணங்களில் அது ஒன்றாய் இருக்கிறது. அதில் 1,34,000 பேர் குடியிருக்கிறார்கள். அவர்களில் 25,000 பேர் கிரேக்கசபையையும் மற்றக் கிழ் சபைகளையும் சேர்ந்தவர்களாய் இருக்கிறார்கள். சிமிர்னாவில் யோவான் அப்போஸ்தலனுடைய சீஷனாகிய போலிகார்ப் என்ற கண்காணி இருந்தான். அவன் கி. பி. 166—௵ இரத்தச் சாட்சியாகச் சுட்டெரிக்கப்பட்டான். கிறிஸ்து இரட்சகரைத் தூஷிக்கும்படி நியாயாதிபதி சொன்னபோது அவன் "நான் கிறிஸ்துவை எண்பத்தாறு வருஷங்களாய்ச் சேவித்திருக்கிறேன். அவர் ஒருக்காலும் எனக்கு அற்பமான அன்பும் காட்டவே இல்லை. அப்படியிருக்க நான் என் ராஜாவும் என் இரட்சகருமாகிய அவரை எப்படித் தூஷிப்பேன்" என்றான்.

பேர்காமு (வெளி. 2. 12-17.) மிசியா நாட்டுக்குத் தலைநகரி. அது கடலுக்கு இருபதுமைலுக்கு அப்பால் காய்க்கஸ் நதியோரத்தில் இருந்தது. அது பூர்வத்தில் பேர்போனதாய் இருந்தது. அங்கே 2,00,000 புஸ்தகங்கள் அடங்கிய ஒரு புஸ்தகசாலை இருந்தது. அவைகளை அந்தோணி என்பவன் எகிப்துக்குக் கொண்டுபோய்க் கிளியோபத்திராளுக்கு பரிசாகக் கொடுத்தான். அங்கே உள்ளவர்கள் சர்ப்பத்தை அல்லது பிசாசை வணங்கிவந்தார்கள். "உன் கிரியைகளையும் சாத்தானுடைய சிங்காசனம் இருக்கிற இடத்தில் நீ குடியிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன்" என்று அந்தச் சபையைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. தற்காலத்தில் அது பூர்வீகத்தில் இருந்ததுபோல முக்கியமானதாய் இராவிட்டாலும் ஒருவாறு விசேஷித்ததாய் இருக்கிறது.

சர்தை (வெளி. 3. 1—6.) திரண்ட ஐசுவரிய சம்பன்னனான குரோசியு என்பவனுடைய தலைநகரியாயும் கீழ்த்திசைகளில் உள்ள பேர்போன பட்டணங்களில் ஒன்றாயும் இருந்தது. இப்போது அது மிகவும் நிர்ப்பந்தமானதாய் இருக்கிறது. அது எபேசுவுக்கு அறுபது மைலுக்கு அப்பால் திமோலு என்ற மலையடிவாரத்தில் பாக்த்தோலு என்ற நதியோரத்தில் இருக்கிறது. இந்த நதி பொன்மணலுக்குப் பேர்போனது. அந்தப் பட்டணத்தின் மகிமை எல்லாம் அற்றுப்போயிற்று. பரதேசிகளாகத் திரிகிற துர்க்கமானருடைய கரியகூடாரங்கள்



பள்ளத்தாக்குகளில் அடிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். பாழாய்க் கிடக்கிற குரோசியுவின் அரண்மனையில் ஒட்டகங்களை ஓட்டுகிறவர்களின் பயிலைக் கேட்கலாம். பூர்வீகக் கிறிஸ்தவ ஆலயத்தில் குருவி கூப்பிட்டுக்கொண்டிருப்பதையும் கவனிக்கலாம். 1836—௵ ஒரு பிரயாணி இரண்டு கிறிஸ்தவர்களைமாத்திரம் அங்கே கண்டதாகச் சொல்லி இருக்கிறான்.

பிலதெல்பியா (வெளி. 3. 7-13.) சர்தைக்குத் தென்கிழக்காய் இருபத்தைந்து மைலுக்கு அப்பால் திமோலு மலைத் தொடர்ச்சியில் இருக்கிறது. அதின் காட்சி மிகவும் சிறந்தது. அதை "அலங்காரமான பட்டணம்" அல்லது "தேவனுடைய பட்டணம்" என்று அர்த்தங்கொள்ளுகிற அல்லாஷெகர் என்ற பெயரால் துர்க்கியர் அழைத்தார்கள். பாழாய்க் கிடக்கிற அந்த இடத்திலே ஒரு காலத்தில் கிறிஸ்தவ கோவிலைத் தாங்கின நாலு வெள்ளைக்கல் தூண்களைப் பார்க்கலாம். அங்கே மிகப் பூர்வீகமாயுள்ள ஒரு விசேஷித்த ஸ்தம்பத்தைப் பார்க்கலாம். "ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூண் ஆக்குவேன்" என்று சொல்லப்பட்டிருப்பது அந்த ஸ்தம்பத்தைச் சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கலாம். தற்காலத்தில் ஏறக்குறைய 1,000 கிரேக்க கிறிஸ்தவர்களும் ஆர்மீனிய கிறிஸ்தவர்களும் அங்கே நிர்ப்பந்தமாய்க் கட்டப்பட்டிருக்கிற வீடுகளில் குடியிருக்கிறார்கள்.

லவோதிக்கேயா (வெளி. 3. 14-22.) என்ற பெயரால் நாலு பட்டணங்கள் உண்டு. இரண்டு சின்ன ஆசியாவிலும் இரண்டு சீரியாவிலும் இருந்தன. வெளிப்படுத்தலில் சொல்லப்பட்ட நகரம் லீதியா பிரிகியா நாடுகளின் எல்லைகளில் இருந்தது. அது எபேசுவுக்கு நாற்பது மைலுக்குக் கிழக்கே இருந்தது. ஏழு பட்டணங்களில் இந்தப் பட்டணம் சமூலமாய் அழிக்கப்பட்டுக் கிடக்கிறது. அங்கே ஆந்தையும் நரியும் குடியிருக்கின்றன. இந்தச் சபைகளின் முந்தின செழிப்பான நிலைமையையும் தற்கால நிர்ப்பந்த நிலைமையையும் கவனிக்கையில் அது துக்கத்தையும் அநுதாபத்தையும் கொடுக்கத்தக்கதாய் இருக்கிறது. அவைகள் ஒருகாலத்தில் சுவிசேஷ வெளிச்சத்தை அநுபவித்தன. இப்போது அந்தகாரத்தால் மூடப்பட்டிருக்கின்றன. அழிவும் நாசமும் அவைகளைப் பிடித்திருக்கின்றன. அவைகள் சந்திப்பின் நாளை அசட்டைசெய்தவர்களுக்கு வந்த தேவகோபாக்கினைக்கு விசேஷித்த திருஷ்டாந்தங்களாய் இருக்கின்றன.

# III. புதிய ஏற்பாட்டின் காலக்கணிதம்.

1. புதிய ஏற்பாட்டின் காலக்கணிதம் பழைய ஏற்பாட்டின் காலக்கணிதத்தைப்போல மனதுக்குப் பிரியத்தைக் கொடுக்கத்தக்கதாய் இருந்தபோதிலும் அது தெற்றுள்ளதாய் இருக்கிறது. ஆனாலும் நெடுங்கால ஆராய்ச்சியின்பேரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற கணிதத்தை இங்ஙனம் சுருக்கி எடுத்துக் காட்டுகிறோம்.

2. நம்முடைய ஆண்டவர் பிறந்த வருஷம் ரோமாபுரி கட்டப்பட்ட 749-ம் வருஷம் என்று நிச்சயமாய்த் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இப்போது நமக்குள் வழங்கிவருகிற சதாப்தம் கி. பி. முதலாம் வருஷம் ரோமாபுரி கட்டப்பட்ட 754 [illegible]ருக்கிறது. அப்படியாகில் கிறிஸ்து சதாப்தம் நாலு வருஷம் தப்பிதமாய் இருக்கிறது. இந்தப்படியே எல்லாக் கணிதக்காரரும் சொல்லுகிறார்கள்.[1] கிறிஸ்துவானவர் பிறந்த நாள் அபிப்பிராயத்துக்குரியதே அல்லாது வேறல்ல. ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு தேதியைக்குறித்து அதில் அவர் பிறந்தார் என்று சொல்வார் உண்டு. மூன்றாம் நான்காம் நூற்றாண்டுகள்முதல் மேல்சபை கீழ்ச்சபைகள் டிசம்பர் மாதம் இருபத்தைந்தாம் தேதியை அவர் பிறப்பின் நாளாகக் கொண்டாடி வருகிறார்கள்.

3. கிறிஸ்துவானவர் முப்பதாம் வயதாய் இருக்கையில் ஞானஸ்நானம் பெற்று[2] சீக்கிரத்துக்குள்ளாக திவ்விய பணிவிடையைச் செய்யத் துவக்கினார். அந்தப் பணிவிடை எவ்வளவு காலம் சென்றது என்பதைப்பற்றி பல அபிப்பிராயங்கள் உண்டு. எத்தனைப் பஸ்காபண்டிகைகளை அவர் ஆசரித்தார் என்பதின்பேரில் இந்தக் காரியம் ஸ்தாபிக்கப்படவேண்டியதாய் இருக்கிறது. முதல் மூன்று சுவிசேஷகரும் ஒரு பஸ்காவைப் பற்றிய விஷயங்களைக்குறித்துமாத்திரம் சொல்வதாய்த் தோன்று

[1] கிறிஸ்து சதாப்தம் ஆறாம் நூற்றாண்டில் வழங்கத் துவக்கப்பட்டது. பிரான்சுதேசத்தில் ஏழாம் நூற்றாண்டின் முதலாவதாக ஸ்தாபிக்கப்பட்டது. எட்டாம் நூற்றாண்டில் அது பொதுப்பட வழங்கப்பட்டது. பதினைந்தாம் நூற்றாண்டில் கிறிஸ்தவ ராஜ்யம் எங்கும் ஒப்புக்கொள்ளப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

[2] லூக். 3. 23.



கிறது. யோவான் சுவிசேஷகன் மூன்று[1] அல்லது நாலு[2] பஸ்காவைப்பற்றிச் சொல்லியிருக்கிறான். அஷர் என்பவர் மூன்று பஸ்காமாத்திரம் சொல்லப்பட்டிருக்கிறதென்று எண்ணி கிறிஸ்துவின் பணிவிடை இரண்டரை வருஷம் இருந்தது என்கிறார். ஆனால் கிரஸ்வெல் ராபின்சன் என்பவர்கள் நாலு பஸ்கா சொல்லப்பட்டிருப்பதாக எண்ணி, கர்த்தருடைய பணிவிடையின் காலம் மூன்றரை வருஷம் என்று சொல்லுகிறார்கள். அவர் ரோமாபுரி கட்டப்பட்ட 783 வருஷத்தில் மரணம் அடைந்தார். பெரிய வெள்ளிக்கிழமை என்று நாம் சொல்லுகிற நாள் அவர் மரணம் அடைந்த வருஷாந்த உற்சவமாய் இருக்கிறது. ஈஸ்தர் ஓய்வுநாள் அவர் உயிர்த்தெழுந்த உற்சவதினம்.

4. நம்முடைய இரட்சகருடைய பணிவிடை மூன்றரை வருஷங்கள் இருந்ததென்று வைத்துக்கொண்டு அவருடைய சரித்திரம் பிரிக்கப்பட்டிருக்கிற காலக்கணிதத்தைச் சுருக்கிச் சொல்லுகிறோம்.

(1.) நம்முடைய ஆண்டவருடைய பிறப்பு அவருடைய இளம்பிராயச் சரித்திரம்:—இதில் சகரியாவுக்கும் மரியாளுக்கும் தேவதூதன் காணப்பட்டதும், யோவான்ஸ்நானகன் பிறந்ததும், இயேசுவானவர் பிறந்து விருத்தசேதனம் பண்ணப்பட்டதும், அவர் எகிப்துக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கே இருந்து திரும்பக் கொண்டுவரப்பட்டதும், அவர் பன்னிரண்டு வயதாய் இருந்தபோது எருசலேமுக்குப் பஸ்காப் பண்டிகையை ஆசரிக்கப் போனதும் அடங்கியிருக்கிறது. இதில் ஏறக்குறைய பதின்மூன்றரை வருஷக்காலச் சரித்திரம் அடக்கம்.

(2.) அடுத்த காலத்தைப்பற்றிய சரித்திரம் சுவிசேஷத்தில் சொல்லப்படவில்லை. கிறிஸ்துவானவர் ஏறக்குறைய முப்பது வயதுள்ளவராக வெளிப்பட்டார் என்று சொல்லப்பட்டிருப்பதில் அது முடிகிறது.

(3.) நம்முடைய ஆண்டவர் திவ்விய பணிவிடையைத் துவக்கப்போவதைப்பற்றிய அறிவிப்பும் அவர் அந்தப் பணிவிடையைத் துவக்கினதுமான சங்கதிகள்:—இதில் யோவான்ஸ்நானகனுடைய பணிவிடையும், கிறிஸ்துவின் ஞானஸ்நானமும் சோதனையும், சோதனை முடிந்தபின்பு இயேசுவைப்பற்றி யோவான் சொன்ன சாட்சியும், அவர் கலிலேயாவிலுள்ள கானாவூர் கலியாணத்துக்குப் போனதுமான ஒரு வருஷக்காலச் சரித்திரம் அடங்கியிருக்கிறது.

[1] யோவா. 2. 13; 6. 4; 13. 1. [2] யோவா. 5. 1.

(4.) முதல் பஸ்காவை நம்முடைய ஆண்டவர் ஆசரித்தது முதல் இரண்டாம் பஸ்காவரைக்கும் உள்ள சங்கதிகள் அடங்கிய சரித்திரம்:—இதில் அவர் யூதேயாவில் துவக்கத்திலே செய்த பணிவிடையும், சமாரிய ஸ்திரீயோடே செய்த சம்பாஷணையும், துவக்கத்திலே அவர் கலிலேயாவில் செய்த பணிவிடையும் அடங்கியிருக்கிறது. இதில் சென்ற காலம் ஒரு வருஷம்.

(5.) இரண்டாம் பஸ்காவை ஆண்டவர் ஆசரித்தது முதல் மூன்றாம் பஸ்காவரையும் உள்ள சங்கதிகள் அடங்கியதுமான சரித்திரம்:—இந்தக் காலத்தை அவர் கப்பர்நகூமைச் சுற்றி இடங்களில் பின்னிட்டார். ஒரு வருஷம் சென்றது.

(6.) மூன்றாம் பஸ்காமுதல் கூடாரப்பண்டிகையை ஆசரிக்கும்படி எருசலேமுக்குப் போக கடைசியாக கலிலேயாவை விட்டதுவரையும் உள்ள சரித்திரம்; ஆறு மாதங்கள் சென்றது.

(7.) கூடாரப்பண்டிகை முதல் பஸ்காப் பண்டிகைக்கு ஆறு நாளுக்குமுன் அவர் பெத்தானியாவுக்கு வந்ததுவரையும் உள்ள [illegible]; ஒருவாரம் குறைய ஆறுமாதம் சென்றது.

(8.) அவர் எருசலேமுக்குப் பவனிபோனதும் அதற்குப் பின் நாலாம் பஸ்காவுக்கு முன்னுள்ளதுமான சரித்திரம்; ஐந்து நாள் சென்றது.

(9.) நாலாம் பஸ்கா. நம்முடைய ஆண்டவருடைய பாடுகள், அதற்குப்பின் யூதருடைய ஓய்வுநாள்வரைக்கும் உள்ள சரித்திரம்; இரண்டு நாள் சென்றது.

(10.) நமது ஆண்டவர் உயிர்த்தெழும்பினதும் காட்சி அருளினதும் பரலோகம் சென்றதுமான சரித்திரம்; நாற்பது நாள் சென்றது. இப்படியாக சுவிசேஷத்தில் அடங்கிய சங்கதிகள் முப்பத்துநாலு முப்பத்தைந்து வருஷக்கால சரித்திரம் உள்ளது.

5. அப்போஸ்தலர் நடபடியில் அடங்கிய காலக்கணிதம் முப்பத்து மூன்று வருஷம் உள்ளது. கிறிஸ்துநாதர் பரமேறின ஆறு வருஷங்களுக்குப்பின்பு ஸ்தேவான் இரத்தச் சாட்சியாய் மரித்தான். பவுல் அப்போஸ்தலன் ஸ்தேவான் மரித்த ஒரு வருஷத்துக்குப்பின்பு குணப்பட்டான். பவுல் குணப்பட்டதற்கும் அவன் முதலாவதாக எருசலேமுக்கு வந்ததற்கும் இடையில் மூன்று வருஷம் சென்றது.[1] அதற்குப் பதினாலு வருஷத்துக்குப்[2] பின்பு பவுல் மூன்றாவதாக எருசலேமுக்குப் போனான். இரண்டாவதாக ஏரோது அகிரிப்பா மரணத்துக்கு முந்தி எருசலேமுக்குப் போய் இருந்-

1 கலா. 1. 18. 2 அப். 15. 2. கலா. 2. 1.



தான்.[1] இன்னமும் வேறே இரண்டு தருணங்களில் அவன் எருசலேமுக்குப் போனது உண்டு.[2] அவைகளுக்கு இடையில் எபேசுவில் மூன்று வருஷமும்[3] கொரிந்தில் ஒன்றரை வருஷமும்[4] கிரேக்க தேசத்தில் மூன்று மாதங்களும்[5] செலவிட்டான். இரண்டுதரம் சின்ன ஆசியாவின் அநேக பாகங்களுக்கும் மக்கெதோனியாவுக்கும் கிரேக்கை தேசத்துக்கும் போயிருந்தான். அவன் எருசலேமுக்கு ஐந்தாம் தரம் வந்தபோது கைதியாக்கப்பட்டு செசரியாவில் இரண்டு வருஷம் காவலறையில் இருந்தான். அப்போது பேலிக்ஸ் உத்தியோகத்தினின்று நீக்கப்பட்டான். பவுல் ரோமாபுரிக்கு அனுப்பப்பட்டான். அங்கே அவன் வாடகை வீட்டில் இரண்டு வருஷம் தங்கி தன்னிடத்தில் வந்த யாவரையும் ஏற்றுக்கொண்டு சுவிசேஷத்தைப் பிரசங்கித்துவந்தான்.[6] இந்தச் சங்கதிகளும் மற்றும் அற்பமாய் உள்ள சங்கதிகளும் அப்போஸ்தலர் நடபடியில் அடங்கிய காலத்தைக் காட்டுகிறதாய் இருக்கிறது. ஜோசேப்பஸ் சொல்லுகிறபடி ஏரோது அகிரிப்பா கி. பி. 44 மரித்தான். பேலிக்ஸ் என்பவன் கி. பி. 60 தன் உத்தியோகத்தை இழந்தான். ஆதலால் பவுல் ரோமாபுரிக்கு கி. பி. 61 கொண்டுபோகப்பட்டிருக்க வேண்டும். கி. பி. 64 நேரோ ராயனால் கிறிஸ்தவர்கள் துன்பப்படுத்தப்பட்டார்கள், பவுல் கி. பி. 66 அல்லது 67 இரத்தச்சாட்சியாய் மரித்தான்.

பேதுரு அப்போஸ்தலன் அதற்குச் சற்றுமுந்தி இரத்தச்சாட்சியாய் மரித்ததாகப் பாரம்பரியம் சொல்லுகிறது.[7]

# IV. புதிய ஏற்பாட்டின் கனோன்.

புதிய ஏற்பாட்டு ஆகமங்களைப்பற்றிய பிரிவைக்குறித்து முன்னமே சொல்லியிருக்கிறோம். இப்போது அந்த ஆகமங்

1 அப். 11. 30; 12. 23. 2 அப். 18. 18, 21; 20. 16.
3 அப். 20. 31. 4 அப். 18. 11.
5 அப். 20. 3. 6 அப். 28. 30, 31.
7 புதிய ஏற்பாட்டுக் காலக்கணித அட்டவணை அநுபந்தம் 1 பார்க்க.

கள் காலக்கிரமப்படி எழுதப்பட்டதைக்குறித்துப் பார்ப்போமாக.[1]

| | |
|---|---|
| மத்தேயு. (எபிரேயுவில்) | எபிரெயர். |
| 1 தெசலோனிக்கேயர். | லூக்கா. |
| 2 தெசலோனிக்கேயர். | அப்போஸ்தலர் நடபடிகள். |
| கலாத்தியர். | 1 பேதுரு. |
| 1 கொரிந்தியர். | 2 பேதுரு. |
| 2 கொரிந்தியர். | 1 தீமோத்தேயு. |
| ரோமர். | தீத்து. |
| மத்தேயு. (கிரேக்கில்) | 2 தீமோத்தேயு. |
| யாக்கோபு. | யூதா. |
| மாற்கு. | 1 யோவான். |
| எபேசியர். | 2 யோவான். |
| கொலோசெயர். | 3 யோவான். |
| பிலேமோன். | வெளிப்படுத்தின விசேஷம். |
| பிலிப்பியர். | யோவான் சுவிசேஷம். |

குறிப்பு.

கிறிஸ்த சபை ஆரம்பமான காலத்தில் இந்தப் புஸ்தகங்களாவது அல்லது அவைகளில் ஒன்றாவது இருந்ததாக நாம் எண்ணக்கூடாது.

மத்தேயு சுவிசேஷம் முந்தி எழுதப்பட்டதென்று நாம் வைத்துக்கொண்டாலும் அது கி. பி. 38 வருஷத்தில் அதாவது இரட்சகர் பரமேறின எட்டு வருஷத்துக்குப்பின்பு எழுதப்பட்டதென்று சொல்லவேண்டும். அது எபிரெயு பாஷையில் எழுதப்பட்டதை அங்கீகரியாத விஷயத்தில் கி. பி. 60 வருஷத்தில் அதாவது நம்முடைய ஆண்டவர் பூலோகத்தை விட்டுவிட்ட முப்பது வருஷங்களுக்குப்பின்பு எழுதப்பட்டிருக்கவேண்டும். அப்போஸ்தலர் திவ்விய ஊழியத்தை நிறைவேற்றிவந்த துவக்கத்தில் புஸ்தகங்களை எழுதுவது தங்களு

[1] இந்த வரிசை பொதுப்பட சரியாய் இருக்கும். ஆனால் ஒவ்வொரு விஷயத்திலும் சரி என்று நிச்சயமாய்ச் சொல்லக்கூடாது. திருஷ்டாந்தமாக எபிரெய நிருபத்தை பவுல் எழுதவில்லை என்றும் அவன் மரணத்துக்குப்பின்பு அது எழுதப்பட்டது என்றும் சொல்வாருண்டு. அப்படியானால் அந்த நிருபத்தை இப்போது காட்டப்பட்டிருக்கிற வரிசைக்கு சில நிருபங்களுக்குப் பிந்தி வைக்கவேண்டியதாகும். பவுல் அப்போஸ்தலன் கைதியாக இருந்தபோது எழுதின நிருபங்களின் கால ஒழுங்கும் பேதுருவின் நிருபங்களின் காலமும் திட்டமாய்த் தெரியாது. சிலர் மத்தேயு அல்ல, லூக்கா, அல்லது மாற்கு சுவிசேஷத்தை முதலாவதாக எழுதியிருக்கவேண்டும் என்பார்கள். இவைகளைப்பற்றி பிந்திப் பார்த்துக்கொள்ளுவோம்.



டைய வேலையில் ஒரு பாகமாக எண்ணவில்லை. அவர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க உத்தரவு கொடுக்கப்பட்டிருந்தது. இந்த உத்தரவை அவர்கள் வாய்மொழியாய் நிறைவேற்றிக்கொண்டு வந்தார்கள். எழுத்தின் மூலமாய் இரட்சகருடைய சரித்திரத்தையும் போதனையையும் ஜனங்களுக்குக் கொடுக்குமுன்னமே வாய் மொழியாய் தேவ ஆவியின் ஏவுதலால் அவர்களுக்குச் சுவிசேஷம் தெரியக் காட்டப்பட்டது.

3. காலம் கடந்துபோகவே பற்பல அவசியங்கள் நேரிட்டன. அப்போஸ்தலமார் வயதாளிகள் ஆனார்கள். இரட்சகருடைய நடபடிகளைக் கண்டவர்கள் சீக்கிரத்துக்குள்ளாக மரணத்தில் இறக்கவேண்டியதாய் இருந்தது. மத்தேயு குணப்பட்ட போது ஆயக்காரனாக ரோமருக்குள் உத்தியோகம் செய்து பிராயமுள்ளவனாக இருந்தான். ஆண்டவர் பரமேறின முப்பதாம் வருஷத்தில் அவன் வயதுசென்றவனாய் இருந்திருக்கவேண்டும். அப்படியே பேதுருவும் முதிர்வயதுள்ளவனாய் இருந்தான். அவனுடைய அநுமதியின்பேரில் மாற்கு தன் சுவிசேஷத்தை எழுதினான். எழுத்தின் மூலமாய்ச் சுவிசேஷ சரித்திரங்கள் பிந்திய தலைமுறையாருக்கு உபயோகமாகப் பாதுகாக்கப்படவேண்டுவதால் சுவிசேஷ ஆகமங்கள் எழுதப்படவேண்டியது அவசியமாயிற்று. சபை பெருகவே அதிலே கேடுகள் நேரிடவும் ஏதுவாய் இருந்தது. இது முகாந்தரமாக எருசலேம் சபையார் அந்தியோகியா சபையாருக்கு முதலாவதாக ஒரு நிருபத்தை எழுதி, பவுல் பர்னபா என்பவர்களின் கைகளில் கொடுத்தனுப்பினார்கள். இதற்கு இரண்டு மூன்று வருஷங்களுக்குப்பின்பு பவுல் தெசலோனிக்கே சபைக்குத் தன் முதலாம் நிருபத்தை எழுதும்படி ஏதுவுண்டாயிற்று. அதுமுதல் நிருபங்கள் ஒன்றின்பின் ஒன்றாய் எழுதப்பட்டது. அப்போஸ்தலர் அக்காலத்தில் நிருபங்களை எழுதுவது தங்களுடைய முக்கிய வேலைகளில் ஒன்றென்று எண்ணி அப்படிச் செய்துவந்தார்கள். பவுல் தன் நிருபங்களை எழுதிக்கொண்டிருக்கையில் மத்தேயு மாற்கு லூக்கா என்பவர்கள் தங்கள் சுவிசேஷங்களையும் அக்காலத்திலேதானே யாக்கோபு யூதா, பேதுரு என்பவர்கள் தங்கள் நிருபங்களையும் லூக்கா அப்போஸ்தலர் நடபடியையும் எழுதினார்கள்.

4. பவுல் அப்போஸ்தலன் மரணகாலத்தில் திருச்சபையிலே எழுதப்பட்ட அநேக ஆகமங்கள் இருந்தன. அவ்வாகமங்களை எழுதினவர்கள் மரித்தபின்பு அவைகள் நகல்பண்

ணப்பட்டு பிரசித்தப்படுத்தப்பட்டது என்பதற்குச் சந்தேகம் இல்லை. பவுல் பேதுரு என்பவர்கள் இரத்தசாட்சிகளாய் மரித்தபின்பு அவர்கள் எழுதின ஆகமங்கள் முன்னைவிட வெகு பிரியத்தோடே வாசிக்கப்பட்டு வந்திருக்கவேண்டும். இந்த இரண்டு அப்போஸ்தலரும் மரித்தபின்பு யோவான் அப்போஸ்தலனுடைய மூன்று நிருபங்களும் வெளிப்படுத்தின விசேஷமும் சுவிசேஷமும்மாத்திரம் எழுதப்பட்டன.

5. முதலாம் நூற்றாண்டில் நமது ஆண்டவருடைய ஜீவிய சரித்திரத்தைக் காட்டும் மற்ற அநேக புஸ்தகங்களும் உபதேசங்கள் அடங்கிய புஸ்தகங்களும் இருந்தன என்பதற்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் கனோன் அட்டவணையில் காட்டப்பட்டிருக்கிற புஸ்தகங்கள்மாத்திரம் திவ்விய அதிகாரம் உடையவைகளாக அங்கீகரிக்கப்பட்டன. நமது சுவிசேஷங்களும் அவைகளை எழுதினவர்களாகச் சொல்லப்பட்டவர்களாலேயே எழுதப்பட்டன என்று எக்காலத்திலும் ஆட்சேபனையில்லாமல் ஒப்புக்கொள்ளப்பட்டு வந்தன. மாற்கு லூக்கா என்பவர்கள் எழுதின சுவிசேஷங்கள் பேதுரு பவுல் அப்போஸ்தலருடைய அநுமதிபெற்று எழுதப்பட்டன. அப்போஸ்தலர் நடபடியும் பவுலின் அநுமதிப்படி எழுதப்பட்டு பின்பு யோவான் அப்போஸ்தலனால் அங்கீகரிக்கப்பட்டது. நிருபங்களில் பவுல் அப்போஸ்தலன் பேர் காட்டப்பட்டிருக்கிற பதிமூன்று நிருபங்கள் அவனாலே எழுதப்பட்டன என்று யாதொரு ஆட்சேபனையின்றி யாவராலும் அங்கீகரிக்கப்பட்டன. பேதுரு அப்போஸ்தலனும் அவனுக்குப் பிந்திய காலத்தில் இக்னேசியு, போலிகார்ப், கிளெமெந்து என்பவர்களும் சொல்லியபடி அவைகள் ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்ட "வேதவாக்கியங்களாக" சபையில்[1] ஒப்புக்கொள்ளப்பட்டு அவைகள் நியாயப்பிரமாணத்தோடும் தீர்க்கதரிசன ஆகமங்களோடும் சுவிசேஷங்களோடும் ஆராதனையில் வாசிக்கப்பட்டு வந்தன. மேற்சொல்லப்பட்ட ஆகமங்களும் பேதுரு எழுதின முதலாம் நிருபமும் யோவானுடைய முதலாம் நிருபமும் அப்போஸ்தலருடைய அதிகாரம் பெற்றவைகளாக ஒப்புக்கொள்ளப்பட்டு வந்தன. எபிரெயர் நிருபம், பேதுருவின் இரண்டாம் நிருபம், யோவானின் இரண்டாம் மூன்றும் நிருபங்கள், யாக்கோபின் நிருபம், யூதாவின் நிருபம், வெளிப்படுத்தின விசேஷமாகிய இவைகளைக்குறித்து

[1] 2 பே. 3. 15, 16.



அந்தந்த புஸ்தகத்தைக்குறித்துக் கவனிக்கையில் பார்த்துக்கொள்ளுவோம்.[1]

6. இந்த ஆகமங்கள் பழைய ஏற்பாட்டுக்கு ஒப்பான அதிகாரம் உடையவைகள் என்று எப்போது எப்படி ஒன்றாகத் திரட்டிச் சேர்க்கப்பட்டதென்பதை இப்போது பார்ப்போமாக. புதிய ஏற்பாட்டு ஆகமங்கள் முதலாவதாக எழுதப்பட்டபோது அவைகளை ஒன்றாகத் திரட்டிச் சேர்க்கும்படி வகைசெய்யப்படவில்லை. இதை எழுதினவர்கள் அவைகள் ஒன்றாகச் சேர்க்கப்படும் என்று எண்ணினதாகத் தோன்றவும் இல்லை. சுவிசேஷங்கள் சில முக்கியமான முகாந்தரங்களையிட்டு விசேஷித்தவர்களுக்கு எழுதப்பட்டன. நிருபங்கள் சபையில் நுழைந்த தப்பறைகளை அல்லது தீமைகளை அகற்ற எழுதப்பட்டன. அவைகள் யாருக்கு எழுதப்பட்டனவோ அவர்கள் வசமாய் சிறிதுகாலம் இருந்து வந்தன. சில சபைகள் இரண்டு புஸ்தகங்களையும் சிலவை ஒரு புஸ்தகத்தையும் உடைத்தாய் இருந்தது. அநேகம் சபைகள் புஸ்தகம் இல்லாமலும் இருந்தது. நாலு சுவிசேஷங்களில் ஒன்று ரோமாபுரியிலும், ஒன்று தென் இத்தாலியாவிலும், ஒன்று பலஸ்தீனாவிலும், ஒன்று சின்ன ஆசியாவிலும் இருந்தது. அப்போஸ்தலர் நடபடி லூக்கா சுவிசேஷத்தை வைத்துக்கொண்டிருந்த தேயோப்பிலு வசம் இருந்தது. இருபத்தொரு நிருபங்களில் ஐந்து கிரேக்கதேசத்திலும் மக்கெதோனியாவிலும், ஐந்து சின்ன ஆசியாவிலும், ஒன்று ரோமாபுரியிலும், மற்றவைகள் தனிமையான பேர்களிடத்திலும் இருந்தன. வெளிப்படுத்தின விசேஷம் சின்ன ஆசியாவின் ஏழு சபைகளுக்கும் அனுப்பப்பட்டது. அநேக காலமாய்ச் சபை வளர்ந்து பரிசுத்த விசுவாசத்தில் கட்டப்பட்டு பரிசுத்த ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்ட அப்போஸ்தலருடைய ஆகமமின்றி கள்ளப் போதகர்களுக்கு விரோதமாய் ஜெயபலத்தோடே போராடிக்கொண்டிருந்தது. அப்போஸ்தலர் ஒருவன்பின் ஒருவன் மரித்துப்போக, இரட்சகருடைய செய்கைகளைக் கண்டவர்கள் குறைந்து வந்ததால்

[1] இந்த ஏழு புஸ்தகங்களும் வியாஜ்ய ஆகமங்கள் என்று அர்த்தம் கொள்ளும் அந்திலெகோமினா என்று அழைக்கப்படும். மற்ற இருபது புஸ்தகங்களும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஆகமங்கள் என்று அர்த்தம் கொள்ளும் ஹொமொலொகூமினா என்று அழைக்கப்படும். இவைகள் முதல் தடவையில் அங்கீகரிக்கப்படாமல் இரண்டாம் தடவையில் அங்கீகரிக்கப்பட்டதால் டியுத்ரொரோ கனோன் ஆகமங்கள் என்று அழைக்கப்படுவதும் உண்டு.

தேவ ஆவியின் ஏவுதலால் எழுதப்படும் ஆகமங்களின் அவசியம் தேவை ஆயிற்று. சில சபைகளில் தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட சுத்தாங்க உபதேசத்தைக் கெடுக்கும்படியாக கள்ளப் போதகன்மார் எழும்பினபோது இவ்வாகமங்கள் மிகவும் அவசியமாக வேண்டியதாய் இருந்தது.

7. அப்போஸ்தலர் காலத்தில் புதிய ஏற்பாட்டு ஆகமங்களை ஒன்றாகத் திரட்டிச் சேர்க்க பிரயத்தனங்கள் நடந்ததென்பதற்கு நிச்சயமான அத்தாட்சி இல்லை. அப்போஸ்தலர் காலத்தில் இவ்வாகமங்கள் நகல்பண்ணப்பட்டதென்பதற்குச் சந்தேகம் இல்லை. சில நிருபங்கள் ஒரு சபைக்கென்று எழுதப்படாமல் பல சபைகளுக்குச் சேர்த்து எழுதப்பட்டதால் அந்தச் சபைகள் ஒவ்வொன்றுக்கும் நகல்கள் அனுப்பப்பட்டிருக்கவேண்டும். அப்போஸ்தலருடைய மரணத்துக்குப் பின் அவர்களுடைய பணிவிடையின் பிரயோஜனம் அதிகமாய் மதிக்கப்படும் என்பதற்கு ஐயம் இல்லை. பவுல் அப்போஸ்தலனுடைய நிருபங்கள் அவன் மரித்தஉடனே அல்லது அவன் நிருபங்களில் அநேகம் அவன் மரணத்துக்குச் சற்று முன்னே திரட்டப்பட்டிருந்தது. அவன் ஸ்தாபித்த சபைகளின் இடங்களைப் பார்க்கும்போது அவைகள் போக்குவரத்துக்கு உரியவைகளாய் இருந்தனவென்று அறிகிறோம். ஆதலால், அவனுடைய நிருபங்கள் லகுவாய் நகல்செய்யப்பட்டு சபைகளுக்கு அனுப்பப்பட்டலாம். மேலும் பேதுரு அப்போஸ்தலன் அவைகளைப்பற்றித் தன் இரண்டாம் நிருபம் மூன்றாம் அதிகாரம் பதினைந்தாம் பதினாறாம் வாக்கியங்களில் சொல்லியிருப்பதைப் பார்க்கையில் அவைகள் நன்றாய் அறியப்பட்டவைகளாய் இருந்ததுடன் "மற்ற வேதவாக்கியங்களுக்கு" ஒப்பந்தமாக எண்ணப்பட்டுவந்ததென்றும் அறிவோம். அப்படிப்போல முந்தி எழுதப்பட்ட சுவிசேஷங்களும் திரட்டப்பட்டிருக்கலாம். லூக்கா தன் சுவிசேஷத்தை எழுதினபோது மத்தேயு மாற்குச் சுவிசேஷங்களைத் தன்முன் வைத்துக்கொண்டிருக்கலாம். யோவான் மூன்று சுவிசேஷங்களையும் வாசித்திருப்பான் என்றும் தோன்றுகிறது. இரண்டாம் நூற்றாண்டின் மத்தியில் அவைகள் ஒன்றாகச் சேர்க்கப்படும்படி ஏதுக்கள் உண்டாயிற்று. "விசுவாசத்துக்கும் நடக்கைக்கும் அதிகாரச் சட்டமாக" அவைகளைச் சேர்க்கவேண்டிய அவசியம் நேரிட்டன. பதிதர்கள் எழும்பி திருச்சபையில் நோஸ்திகருடைய வித்தை விதைத்தார்கள். இவர்களில் மார்சியோன் என்பவன் அப்போஸ்தலருடைய ஆகமங்களில்



தன் கோட்பாட்டுக்கு ஒத்துவராத சிலவற்றைத் தள்ளி தன் வகையாய் ஒப்புக்கொண்டவைகளிலும் சிலவற்றைக் குறைக்கும்படிப் பார்த்தான். வாலந்தியனைப்போல் உள்ளவர்கள் தங்கள் மனத்தோற்றத்தின்படி அவைகளை விஸ்தரித்துத் தங்கள் கள்ள உபதேசங்களை ஸ்தாபிக்கத் துணிந்தார்கள்; ஆதலால் அப்பேர்ப்பட்டவர்களை உடனே எதிர்க்கவேண்டியது அவசியமாய் இருந்தது. இதினால் அப்போஸ்தலருடைய ஆகமங்கள் இன்னின்னவைகள் என்று காட்டி ரூபிக்கவேண்டியது தீராத அவசியமாகக் காணப்பட்டது. புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டுக்கொப்பந்தமான அதிகாரமுடையதென்று ஒப்புக்கொள்ளவேண்டிய காலம் அப்போது வந்தது. அதுமுதல் திருச்சபை பிதாக்களின் ஆகமங்களில் புதிய ஏற்பாட்டின் கனோன் தெளிவாகக் காட்டப்பட்டு முற்றுப்பெற்றதாக அறிகிறோம். இதற்கு அனுகூலமாக பூர்வீக லத்தீனிலும் சீரிய பாஷையிலும் புதிய ஏற்பாட்டுப் புஸ்தகங்கள் மொழிபெயர்க்கப்படவும் ஏதுவுண்டாயிற்று. அவைகளை மொழிபெயர்த்தவர்கள் அப்போஸ்தலராலும் அவர்கள் கூட்டாளிகளாலும் எழுதப்பட்டவைகள் என்று தாங்கள் அறிந்த ஆகமங்களையே திருப்பியிருக்கவேண்டும் என்று [illegible].

8. புதிய ஏற்பாட்டு ஆகமங்கள் எல்லாம் சீக்கிரத்துக்குள்ளாக எல்லாச் சபைகளிலும் ஒன்றுபோலவே ஒப்புக்கொள்ளப்பட்டன என்று நாம் எண்ணக்கூடாது. மிச்சமான ஆகமங்களை துவக்கமுதல் எல்லாச் சபைகளும் ஆட்சேபனை எவ்வளவேனும் இல்லாமல் பூரணமாய் ஒப்புக்கொண்டுவந்தன; ஆனால் ஆறு அல்லது ஏழு ஆகமங்களைப்பற்றித் தர்க்கம் உண்டாயிருந்தது. இப்போது அங்கீகரிக்கப்பட்டிருக்கிற ஆகமங்களைத் தவிர வேறே சுவிசேஷங்களும் நடபடிகளும் நிருபங்களும் சபைகளில் இருந்தன. இவைகளில் சிலவைகள் உண்மையுள்ளவைகள்; சிலவை கள்ளத்தனமாய் உண்டுபண்ணப்பட்டவைகள். சிலவைகளில் கட்டுக்கதைகள் அடங்கியிருந்ததுடன் பெருமோசமான தப்பறைகளை சுத்தாங்க உபதேசங்களாகக் காட்டியும் இருந்தன. இப்படிப்பட்ட தப்பறைகளைப் போதித்த ஆகமங்கள் யாதொரு வருத்தம் இல்லாமல் லகுவாய்த் தள்ளப்பட்டுப் போயின. ஆனால் ரோமாபுரி கிளெமெந்து பர்னபா என்பவர்களின் நிருபங்களும் எர்மாவின் மேய்ப்பன் என்ற புஸ்தகமும் அநேகரால் அங்கீகரிக்கப்பட்டு, யாக்கோபு யூதா என்பவர்களுடைய ஆகமங்களுக்கு ஒப்பாக எண்ணப்பட்டதுண்டு. ஆதலால் பிந்திய காலத்தில் திவ்விய அதிகாரம்

இல்லாததாக எண்ணப்பட்ட இவ்வாகமங்கள் மூன்றாம் நூற்றாண்டில் விகற்பமின்றி சில சபைகளில் அப்போஸ்தலருடைய ஆகமங்களோடே சேர்க்கப்பட்டிருந்ததாய்ப் பார்க்கிறோம்.[1] தற்காலத்தில் கனோன் ஆகமங்களாக எண்ணப்பட்ட ஆகமங்களில் சிலவை அக்காலத்தில் பல சபைகளில் சந்தேகத்துக்கு உரியவைகளாக எண்ணப்பட்டதும் உண்டு. வெளிப்படுத்தின விசேஷம் பூரணமாய் அங்கீகரிக்கப்படவில்லை. எபிரெயர் நிருபம் அலெக்சந்தரியா சபையில் பவுலால் எழுதப்பட்டதென்று ஒப்புக்கொள்ளப்பட்டாலும் மேல் சபைகள் அதை அப்படி ஒப்புக்கொள்ளவில்லை. யாக்கோபின் நிருபம் சீரியா சபையைத்தவிர மற்றச் சபைகளில் அங்கீகரிக்கப்படவில்லை. யூதா நிருபம் யோவான் இரண்டாம் மூன்றும் நிருபங்கள் பேதுருவின் இரண்டாம் நிருபமாகிய இவைகள் விஸ்தாரமாக பிரபல்லியம் ஆகாதிருந்ததால் பல அட்டவணைகளில் காட்டப்படவில்லை.

9. சபைகளுக்குள் இவ்வாகமங்களைப்பற்றி உண்டாயிருந்த வித்தியாசமான எண்ணங்களைத் தீர்த்துக்கொள்ளும்படிக்கு மேலான அதிகாரமும் அக்காலத்தில் இல்லாதிருந்தது. பொதுவான சங்கம் கூட்டப்படும் காலம் இன்னமும் வரவில்லை. நாலாம் நூற்றாண்டின் கடைசிக்குள்ளாக வெளிப்படுத்தின விசேஷம் தவிர மற்றப் புதிய ஏற்பாட்டு ஆகமங்கள் எல்லாம் கீழ்சபையில் அங்கீகரிக்கப்பட்டன. வெளிப்படுத்தின விசேஷத்தைப்பற்றிய சந்தேகமும் வரவர நீங்கிப்போயிற்று. ஏறக்குறைய அந்தக் காலத்தில் மேல்சபையாரும் அப்படியே ஒப்புக்கொண்டார்கள். கடைசியாக மேல்சபையும் கீழ்சபையும் அவைகளிலிருந்து உண்டான சபைகளும் புதிய ஏற்பாட்டு ஆகமங்கள் எல்லாவற்றையும் தேவனுடைய கலப்பற்ற சத்தாங்க வசனம் என்று ஒப்புக்கொண்டன.

10. இவ்வாகமங்களில் சிலவைகளின் ஆக்கியோன் நிச்சயத்தைப்பற்றி விகற்பமான எண்ணங்கள் உண்டு. அதினால் அவ்வாகமங்களின் கனோன் நிச்சயத்துக்குப் பழுது உண்டாகிறதில்லை.

கனோன் முடிவாகி இருக்கிறது. திருஷ்டாந்தமாக எபிரெயர் நிருபம் யாரால் எழுதப்பட்டிருந்தாலும் சரி அதைச் சபையிலிருந்து எடுத்துப்போட எந்த மனிதனாலும் கூடாது

[1] புதிய ஏற்பாட்டு கனோன்படி ஆகமங்களைப்பற்றி அநுபந்தம் K பார்க்க.



தாய் இருக்கிறது. அதை யார் எழுதினாலும் சரி. "அது தேவனுடைய வசனமாய் இருக்கிறது." கர்த்தாநிச்சயத்தைப்பற்றி அறியப்படாத மற்றப் புஸ்தகங்களைக்குறித்தும் இப்படியே சொல்லவேண்டியதாய் இருக்கிறது. இவ்வாகமங்களை எழுதினவர்கள் தற்செயலாய் அவைகளை எழுதினாலும் அவைகள் எல்லாம் படிப்படியாய் ஒன்றாகத் திரட்டிச் சேர்க்கப்பட புதிய ஏற்பாடு பூரணப்பட்டிருக்கிறது. இது கர்த்தருடைய செயல், அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாய் இருக்கிறது.

# V. தனித்தனியான ஆகமங்கள்.

## சரித்திர ஆகமங்கள்.

1. புதிய ஏற்பாட்டு சரித்திர ஆகமங்களில் நாலு சுவிசேஷங்களும்[1] அப்போஸ்தலர் நடபடியும் அடங்கும்.

2. நாலு சுவிசேஷங்களைப்பற்றிக் கவனிக்கையில் அவைகள் ஒன்றுக்கொன்று இருக்கிற சம்பந்தத்தையும் பார்க்கவேண்டும். நம்முடைய ஆண்டவருடைய ஜீவிய விருத்தாந்தத்தைக் காட்டுகிற நாலு சுவிசேஷங்கள் நோக்கம் இல்லாமல் நமக்கு அருளப்படவில்லை. இரட்சகர் சொன்ன வசனங்கள் செய்கைகளை கிரமமாய்க் காட்டிய ஒரு புஸ்தகம் இருந்தால் அது போதுமானதாய் இருக்கும் என்று நாம் இயற்கையாய் எண்ணலாம். அப்படி இருந்தால் வேதாகமம் ஒன்றுக்கொன்று இசைவும் ஐக்கியமுமாக இருக்கும்படி வைப்பட்டும் நடத்தப்பட்டும் இருக்கிற நோக்கத்துக்கு ஒவ்வாமையாய் இருக்கலாம். நாம் இனிமேல் பார்ப்பதின்படி விசேஷித்த முகாந்தரங்களையிட்டு நிருபங்கள் எழுதப்பட்டதென்று அறியலாம்.

இதிலே பிரயோஜனம் இல்லையா? சுவிசேஷங்கள் ஆவிக்குரிய நோக்கமாய் எழுதப்பட்டன. தேவனும் மனிதனுமான

[1] சுவிசேஷம் என்பதற்கு "நல்ல செய்தி" என்று அர்த்தம். அந்த வார்த்தை தேவன் கிறிஸ்துவுக்குள் பாராட்டும் இரட்சணிய தயவைக் காட்டுகிறதாய் வேதத்தில் வழங்குகிறது. பின்பு அந்தச் செய்தி அடங்கிய புஸ்தகங்களுக்கும் பேராக வழங்கப்பட்டிருக்கிறது.

வரை வெளிப்படுத்தும் நோக்கத்தோடே அவைகள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு சுவிசேஷமும் ஒவ்வொரு நோக்கத்துடன் எழுதப்பட்டது உண்டு.

3. ஒவ்வொரு சுவிசேஷத்தையும் தனித்தனியே கவனிக்கையில் அதினதின் நோக்கத்தைத் தெளிவாய் அறியலாம். திருஷ்டாந்தமாக மத்தேயு தன் சுவிசேஷத்தை யூதருக்குப் பிரயோஜனமாக எழுதினான். ஆதலால் அவ்வாகமத்திலே நம்முடைய ஆண்டவரை "யூதனாகவும்" "யூதருக்கு ராஜாவாகவும்" காட்டியிருக்கிறான். அந்தச் சுவிசேஷத்தில் யூதவழக்கங்கள் இடங்களைப்பற்றி விஸ்தரிக்கப்படவில்லை. அந்த வழக்கங்கள் இடங்களை யூதர்கள் நன்றாய் அறிந்திருந்தார்கள். மேலும் அந்தச் சுவிசேஷத்தில் மேசியாவைப்பற்றி பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனங்களாக உரைக்கப்பட்ட வசனங்களை எடுத்துக்காட்டி அவைகள் இயேசுவில் நிறைவேறியிருக்கிறதென்று மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது. மாற்கு என்பவன் ரோம தேசத்தவர்களுக்குப் பிரயோஜனமாக தன் சுவிசேஷத்தை எழுதினான். அதிலே கர்த்தரை மேசியா என்று காட்டாமல் "தேவமனிதன்" என்று காட்டுகிறான். அதிலே யூத வழக்கங்கள் இடங்களைப்பற்றி விஸ்தரிக்கிறான். கர்த்தருடைய சம்பாஷணைகளைவிட சரித்திரங்களை எடுத்துக் காண்பித்திருக்கிறான். லூக்கா சுவிசேஷம் பொதுப்பட புறஜாதியாருக்கு எழுதப்பட்டது. கர்த்தரைப்பற்றி இவன் வேறே நோக்கமாய் எழுதியிருக்கிறான். மத்தேயு சொல்லியபடி விருத்தசேதனத்தின் ஊழியக்காரராகவும் அல்ல, மாற்கு சொல்லுகிறபடி யூதாக் கோத்திரச் சிங்கமாகவும் அல்ல, சருவவல்லமையுள்ள கர்த்தராகவும் அல்ல, "உலகத்தின் இரட்சகராக" எடுத்துக் காட்டுகிறான். ஆகவே மத்தேயுவைப்போல யூதகுலத்துக்குத் தலைவனான ஆபிரகாமிலிருந்து கர்த்தருடைய அட்டவணையைக் காட்டாமல் மனிதஜாதிக்குத் தலைவனான ஆதாமிலிருந்து அவருடைய அட்டவணையை எடுத்துக் காண்பித்திருக்கிறான். மத்தேயு யூதருக்கு அனுப்பப்பட்ட பன்னிரண்டு அப்போஸ்தலரைப்பற்றிச் சொல்லுகையில் லூக்கா பூமியின் கோத்திரத்தாருக்கு அனுப்பப்பட்டதுபோல எழுபது சீஷர்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறான். முதல் மூன்று சுவிசேஷங்களும் "பொழிப்புரை சுவிசேஷங்கள்" என்று அழைக்கப்படுவதும் உண்டு. யோவான் சுவிசேஷத்தின் தன்மை வேறாய் இருக்கிறது. அதின் ஆரம்ப வாக்கியங்கள் உன்னதத்தைத் தழுவுகிறது. மற்ற அப்போஸ்தலர் நமது ஆண்ட-



வரின் பூமிக்குரிய சரித்திரத்தைக் காட்டுகையில் யோவான் கழுகைப்போல் செட்டையின்மேல் ஏறி பறக்கிறவனாக தேவனுடைய [illegible]சிய இருப்பிடங்களையும் சென்று நித்தியத்தின் [illegible]யான காரியங்களை எடுத்து உரைக்கிறான். முதல் மூன்றுபேரும் தேவனுடைய மனிதத்தன்மையைக் காட்டுகிறார்கள். யோவான் மனிதனானவருடைய தெய்வீக தன்மையைக் காட்டுகிறான்.

4. முதல் மூன்று சுவிசேஷங்களுக்கும் உரிய ஒற்றுமையையும் வித்தியாசத்தையும் இப்போது பார்ப்போமாக. அவைகள் கலிலேயாவில் நமது ஆண்டவர் செய்த பணிவிடையை [illegible]பிக்கிறதே அன்றி அவர் எருசலேமுக்குப்போய் அங்கே நடப்பித்த காரியங்களைக் காட்டுகிறதில்லை. மாற்கு இரட்சகருடைய இளம்பிராயச் சரித்திரத்தைக் காட்டாது விட்டிருக்கிறான். மற்றவைகளை எல்லாம் மத்தேயு லூக்கா என்பவர்களைப்போலவே எழுதியிருக்கிறான். மூவரும் இயேசு ஞானஸ்நானம் பெற்றபின்பு சோதிக்கப்பட்டார் என்றும் அதன்பின்பு கலிலேயாவுக்குப்போய் அங்கே தம்முடைய பணிவிடையை நடப்பித்து அற்புதங்களைச் செய்து கடைசியாக எருசலேமுக்குப் போய் அங்கே சிலுவையில் அறையப்பட்டார் என்றும் உரைத்திருக்கிறார்கள். மூவருடைய சுவிசேஷங்களிலும் ஐம்பத்தெட்டுப் பகுதிகள் ஒன்றுபோலவே காட்டப்பட்டிருக்கிறது. மத்தேயுக்கும் மாற்குக்கும் இருபத்தேழு பகுதிகளும் மாற்குக்கும் லூக்காவுக்கும் பதினேழு பகுதிகளும் மத்தேயுக்கும் லூக்காவுக்கும் முப்பத்திரண்டு பகுதிகளும் ஒற்றுமையாய் இருக்கின்றன. இந்தப் பகுதிகளில் ஏறக்குறைய ஒரேவிதமான வார்த்தைகள் உபயோகிக்கப்பட்டும் இருக்கின்றன.

5. இப்படி ஒற்றுமை இருப்பதோடே வித்தியாசம் இருப்பதும் உண்டு. சுவிசேஷகருடைய பாஷை நடையில் வித்தியாசம் உண்டு. இந்த வித்தியாசம் சரித்திர பாகத்தில் முக்கியமாய்க் காணப்படுகிறது. கர்த்தர் சொன்ன வார்த்தைகளை எடுத்து உரைக்கையில் இந்த வித்தியாசம் தோன்றுகிறதில்லை. ஒவ்வொருவரும் அவனவன் ஜாடை தன்மைக்கு ஏற்றபடி எழுதியிருக்கிற சரித்திரங்களில் வித்தியாசம் காணப்படுகிறதுண்டு. இவைகளைச் சம்பந்தப்படுத்திப் பார்க்கையில் கொடிய கருத்துக்கள் தோன்றுவதுண்டு.

6. வார்த்தை சம்பந்தங்களும் வார்த்தை வித்தியாசங்களும் நேரிட்டிருப்பதற்கு பல நியாயங்கள் சொல்லப்படுவதும்

உண்டு. நுட்ப சாஸ்திரிகள் மூன்று சுவிசேஷங்களில் ஒவ்வொன்றும் மற்ற இரண்டுக்கும் ஆதாரமாய் இருக்கவேண்டும் என்று தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த விகற்பங்களைப் பார்க்கில் அவர்கள் சொல்லியது பிசகு என்று அறியலாம். வேறு சிலர் மூவரும் பொதுவாய் இருந்த ஒரு புஸ்தகத்தை மேற்கோளாக வைத்துக்கொண்டு தன் தன் சுவிசேஷத்தை எழுதியிருக்கவேண்டும் என்று அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட ஒரு புஸ்தகம் இருந்ததற்கு யாதொரு குறிப்பும் இல்லை. வேறு சிலர் மூவரும் ஒருவர் எழுதினதை மற்றவர்கள் பாராமல் தனித்தனியே தன் தன் சுவிசேஷத்தை எழுதினார்கள் என்றும் அல்லது ஒருவன் எழுதினதை மற்றவர்கள் பார்த்திருந்தாலும் (பார்த்தும் இருக்கலாம்) அவரவர் சுயாதீனமாய்த் தன் தன் சுவிசேஷத்தை எழுதினார்கள் என்றும், அப்படி எழுதினதில் அப்போஸ்தலமார் சரித்திர சங்கதிகளை வாய்மொழியாய்ப் போதித்துவந்ததில் இயற்கையாய்ச் சில வார்த்தைகள் வித்தியாசம் வரும் ஆகில் அந்தப்படி அவைகளை எழுதினார்கள் என்றும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

7. முதல் மூன்று சுவிசேஷங்களையும் ஒன்றோடொன்று ஒத்துப்பார்க்கையிலும் அவைகளை யோவான் சுவிசேஷத்தோடே ஒத்துப்பார்க்கையிலும் அவைகளை எழுதினவர்கள் நம்முடைய இரட்சகருடைய ஜீவிய விருத்தாந்தத்தைப் பூரணமாய்த் தெரிவித்திருக்கிறதாய் ஆவது அல்லது காலக்கிரமப்படி சங்கதிகளை எழுதியிருப்பதாய் ஆவது சாதிக்கிறதில்லை. அவனவன் தன்தன் போக்கின்படி எழுதவும் ஒருவன் விட்டதை இன்னொருவன் எழுதவும் ஒருவன் எழுதினதை இன்னொருவன் எழுதாமல் விட்டுவிடவுமாக ஆவியானவர் நடத்திக்கொண்டுவந்தார். நம்முடைய இரட்சகருடைய ஜீவிய சரித்திரம் எல்லாம் எழுதப்படாமல் விசேஷித்த காரியங்கள் உபதேசங்கள் மாத்திரம் எழுதப்படுவது தேவஞானத்தில் சரியாகக் காணப்பட்டது. இரட்சகருடைய சரித்திரம் எல்லாம் எழுதப்படவில்லை என்பதை யோவான் சுவிசேஷகன் சொல்லியிருக்கிறான்.[1] காலத்தின் முடிவுவரைக்கும் நம்முடைய பிரயோஜனத்துக்கும் எழுப்புதலுக்கும் அவசியமாக பரிசுத்த ஆவியானவருக்குக் காணப்பட்ட காரியங்கள் மாத்திரம் எழுதப்பட்டிருக்கின்றன.

---

யோவா. 20. 30; 21. 25.



## 1. மத்தேயு எழுதின சுவிசேஷம்.

1. இந்தச் சுவிசேஷத்தை எழுதினவன் மத்தேயு என்று எக்காலத்திலும் ஒப்புக்கொள்ளப்பட்டு வந்திருக்கிறது. சுவிசேஷத்தில் இது நேராய்ச் சொல்லப்படாவிட்டாலும் இதின் பொருளையும் தன்மையையும் கவனிக்கையில் பூர்வீகத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டு வந்த எண்ணத்துக்கு இசைவாய் இருக்கிறது என்று பார்க்கிறோம்.

2. மத்தேயு அப்போஸ்தலனைப்பற்றி நமக்குத் தெளிவாய்த் தெரிந்திருப்பது மிகவும் அற்பம். மத். 9. 2–9. மாற். 2. 1–14. லூக். 5. 17–28. இந்த வாக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கிற சங்கதிகளின் இசைவை கவனிக்கையில் அவன் அல்பேயுவின் குமாரனாகிய லேவி என வெளிப்படுகிறது. அவன் ஆயக்காரனும் ஸ்திதிமானும் இருந்தான்.[1] கர்த்தர் அவனை அழைத்தபோது அவன் சுப்பார்கூடயில் இருந்தான். சவுல், பவுல் என்ற பேரை பிந்திய காலத்தில் எடுத்துக்கொண்டதுபோல மத்தேயும் தான் குணப்பட்டபோது இந்தப் பேரை எடுத்துக்கொண்டான் என்று எண்ணத்தகும். அவன் ஆயத்துறையில் உத்தியோகமாய் இருக்கையில் இயேசு அவனைத் தம்முடைய பின்னே செல்ல அழைத்தார்.[2] பின்பு அவன் பன்னிரு அப்போஸ்தலரில் ஒருவனாகத் தெரிந்துகொள்ளப்பட்டான்.[3] அப்போஸ்தலனாக அவனைப்பற்றி விசேஷித்த காரியங்கள் சுவிசேஷங்களில் சொல்லப்படவில்லை. அவன் அழைக்கப்பட்டதையும் அவன் பேர் அப்போஸ்தலர் அட்டவணையில் காட்டப்பட்டிருப்பதையும் தவிர வேறு விசேஷங்கள் அவனைக்குறித்து எழுதப்படவில்லை.[4]

3. இந்தச் சுவிசேஷம் எப்போது எழுதப்பட்டதென்பதைப்பற்றி பற்பல அபிப்பிராயங்கள் சொல்லப்பட்டதுண்டு. சுவிசேஷகரில் மத்தேயு முதலாவதாக தன் சுவிசேஷத்தை

---

[1] லூக். 5. 29. [2] மத். 9. 9. [3] மத். 10. 3.

[4] ஐந்தாம் நூற்றாண்டில் இருந்த திருச்சபை சரித்திரக்காரனாகிய சோக்கிறத்தேஸ் என்பவன் மத்தேயு யூதஜாதியாருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தான் என்றும், எத்தியோப்பியாவுக்குப் போய் அங்கே நதப்பார் என்ற இடத்திலே இரத்தச்சாட்சியாக மரித்தான் என்றும் சொல்லுகிறான். ஆனால் இதற்கு எதிரிடையாக அலெக்சந்திரியா பட்டணத்து கிளெமெந்து என்பவன் மத்தேயு இரத்தச்சாட்சியாய் மரிக்கவில்லை என்றும் ஹெரக்கிலியோன் சொல்லியிருப்பதாக எடுத்துக் காட்டியிருக்கிறான்.

எழுதினதாக பூர்வீக சபையார் ஏகமாய் சாட்சியிட்டிருக்கிறார்கள். இதைச் சிலர் ஆட்சேபித்து மாற்கு அல்லது லூக்கா முந்தி எழுதினான் என்று சொல்லுகிறார்கள். மத்தேயு தன் சுவிசேஷத்தை முதலாவது எபிரெயு பாஷையில் எழுதியிருப்பான் என்றால் கி. பி. 38 முதல் 42 வருஷத்துக்குள்ளாக அது எழுதப்பட்டிருக்கலாம். கிரேக்க பாஷையில் எழுதினான் என்றால் கி. பி. 61 முதல் 64 வருஷத்துக்குள்ளாக எழுதியிருக்கவேண்டும் என்று சொல்லவேண்டும். நமது ஆண்டவருடைய ஜீவிய சரித்திரத்தை அவன் தன் சுயபாஷையில் ஒருவேளை குறிப்புப்பண்ணி இருக்கலாம். கிரேக்கு சுவிசேஷத்தின் பாஷைநடையையும் அதின் உண்மையையும் கவனிக்கையில் அவன் கிரேக்கில் எழுதினான் என்பதற்குப் பலத்த அத்தாட்சி உண்டு. எபிரெய சுவிசேஷம் இருந்ததற்கு யாதொரு குறிப்பும் காணப்படுகிறதில்லை. பலஸ்தீனாவில் புஸ்தகங்கள் கிரேக்க பாஷையில் அக்காலத்தில் எழுதப்பட்டது. ராஜாங்கத்துக்குரிய காரியங்களும் அந்தப் பாஷையில் நடத்தப்பட்டது. அந்தப் பாஷை சாதாரணமாயும் அங்கே வழங்கப்பட்டு வந்தது.

4. இந்தச் சுவிசேஷம் எப்போது எழுதப்பட்டாலும் அது கிறிஸ்தவனான ஒரு எபிரெயனால் எழுதப்பட்டது என்பதற்கு இவ்வாகமத்தில் குறிப்புகளைக் காணலாம். இதை எழுதினவன் எபிரெய ஜாதியாரின் ஆகமங்களை நன்றாய் அறிந்தவனாயும் அவர்களுடைய காரியங்களில் பழகினவனாயும் காணப்படுகிறான். புறக்கணிக்கப்பட்ட நாசரேத்தூர் இயேசு நெடுங்காலமாய் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவரும் ஆசையாய் எதிர்நோக்கப்பட்டவருமான யூதருடைய ராஜா என்று காட்ட நோக்கமாய் மத்தேயு தன் சுவிசேஷத்தை எழுதினான். அப்படி எழுதுகையில் கலிலேயாவிலே தச்சவேலை செய்தவரும் யோசேப்பின் குமாரன் என்று அழைக்கப்பட்டவருமானவர் தாவீதின் சிங்காசனத்துக்குச் சுதந்தரவாளி என்றும் ஏசாயா சொல்லுகிற இம்மானுவேல் என்றும் எடுத்துக் காண்பிக்கிறான். அவன் இளம்பிராயத்தில் இயேசுவுக்கு உண்டான மோசங்களையும் அவைகளினின்று அவர் விடுவிக்கப்பட்டதையும் அதிலே அவரைப்பற்றி முன்னுரைக்கப்பட்ட தீர்க்கதரிசனங்கள் நிறைவேறி இருப்பதையும் திருஷ்டாந்தப்படுத்தியிருக்கிறான். அவருடைய போதனைகள், அற்புதங்கள், பாடுகள், மரணம் முதலியவைகள் தாவீதின் குமாரனைப்பற்றிச் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலாய் இருக்



கிறதென்று காண்பித்திருக்கிறான். நம்முடைய இரட்சகர் சொல்லிய தீர்க்கதரிசனங்களில் யூதர்களால் அவருடைய சீஷர்களுடையும் உபத்திரவங்களையும் யூதராஜ்யம் கவிழ்க்கப்படுவதையும் ஆவிக்குரிய இஸ்ரவேல் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதைப் பற்றியவைகள் முந்திய தீர்க்கதரிசிகள் உரைத்திருப்பதற்குச் சம்பந்தமுள்ளவைகளாய் இருக்கிறது.[1] இந்தச் சுவிசேஷம் முந்தி எழுதப்பட்டாலும் எழுதப்படாவிட்டாலும் இது பழைய ஏற்பாட்டுக்கும் புதிய ஏற்பாட்டுக்கும் இருக்கிற சம்பந்தத்தைப் பூரணமாய்க் காட்டுகிற ஆகமமாய் இருக்கிறபடியால் புதிய ஏற்பாட்டில் முதலாவது வைக்கப்படுவதற்கு ஏற்றதாய் இருக்கிறது.

5. இந்தச் சுவிசேஷத்தை நாலு பங்காக வகுக்கலாம்.

I. இயேசுவின் தலைமுறை அட்டவணையும் அவருடைய இளம்பிராயச் சரித்திரமும். (i, ii.)[2]

II. யோவான்ஸ்நானகனுடைய பிரசங்கமும் செய்கைகளும் நம்முடைய இரட்சகர் திவ்விய பணிவிடையைத் துவக்குமுன் அவர் செய்த சம்பாஷணைகளும் கிரியைகளும். (iii, iv. 11.)

III. இயேசு கலிலேயாவில் செய்த பிரசங்கங்களும் கிரியைகளும். (iv. 12–xx. 16.)

IV. இரட்சகருடைய பாடுகளும் அவர் உயிர்த்தெழுதலும். (xx. 17–xxviii.)

6. இவ்வாகமத்தின் உண்மைக்கு அணுவளவும் சந்தேகம் இல்லை. தற்காலத்தில் முதல் இரண்டு அதிகாரங்களையும்பற்றி ஆட்சேபிப்பார் உண்டு. அந்த ஆட்சேபனை நிராதாரமுள்ளது. அந்த அதிகாரங்கள் எல்லாக் கிரேக்கு நகல்களிலும் எல்லா பூர்வ மொழிபெயர்ப்புகளிலும் இருக்கின்றன. பூர்வ பிதாக்கள் அவைகளைச் சுவிசேஷத்தின் பாகமாக அங்கீகரித்திருக்கி

---

1 மத். 24. அதி. ஏசா. 66. அதி.

2 மத்தேயும் லூக்காவும் சொல்லிய தலைமுறை அட்டவணைகளைப் பற்றிய விகற்பங்களுக்குச் சமாதானம். மத்தேயு, யோசேப்பின் அட்டவணையையும் லூக்கா மரியாளின் அட்டவணையையும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். லூக்கா, யோசேப்பு ஏலியின் குமாரன் என்று சொல்லுகிறான். யூதருக்குள் மருமகன் மகன் என்றும் அழைக்கப்படுவது உண்டு. ஒருவேளை ஏலிக்குச் சகோதரர் இருந்திருக்கமாட்டார்கள்; அப்படியானால் யோசேப்பு அவனுக்குச் சுதந்தர முறையான மகனாய் இருக்கலாம்.

றார்கள். பூர்வ விரோதிகளும் அவைகளை நன்றாய் அறிந்தும் இருக்கிறார்கள். அவைகளின் வாசகப்போக்கும் மற்றப் பாகத்துக்கு ஒத்தும் இருக்கிறது.

7. இந்தச் சுவிசேஷத்தில் மாத்திரம் சொல்லப்பட்டிருக்கிற சங்கதிகள்:—கிழக்கத்திய சாஸ்திரிகள் வந்தது, இயேசு எகிப்துக்குக் கொண்டுபோகப்பட்டது, பாலகர் கொலையுண்டது, திராட்சத்தோட்டத்தில் வெவ்வேறு மணிநேரத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களின் உவமை, பத்துக் கன்னியாஸ்திரிகள் உவமை, யூதாஸ் நான்றுகொண்டு இறந்தது, பிலாத்துவின் மனைவி கண்ட சொப்பனம், அநேக பரிசுத்தவான்கள் உயிர்த்தது, கல்லறையைக் காத்த சேவகருக்கு லஞ்சங்கொடுத்தது.

### பழைய ஏற்பாட்டிலிருந்து மத்தேயு சுவிசேஷத்தில் குறிப்பிக்கப்பட்டிருக்கிற வாக்கியங்கள்.

| | | | |
|---|---|---|---|
| அதி. 1, 23. | ஏசா. 7. 14. | அதி. 15. 4. | யாத். 20. 12. 21. 17. |
| ,, 2. 2. | எண். 24. 17. | ,, ,, 7, 8. | ஏசா. 29. 13. |
| ,, ,, 6. | மீகா. 5. 2. | ,, ,, 30. | ,, 35. 5, 6. |
| ,, ,, 15. | ஓசி. 11. 1. | ,, 19. 5. | ஆதி. 2. 24. |
| ,, ,, 17, 18. | எரே. 31. 15. | ,, ,, 7. | உபா. 24. 1. |
| ,, 3. 3. | ஏசா. 40. 3. | ,, ,, 18. | யாத். 20. 13. |
| ,, 4. 4. | உபா. 8. 3. | ,, ,, 19. | லேவி. 19. 18. |
| ,, ,, 6. | சங். 91. 11, 12. | ,, 21. 4, 5. | சகரி. 9. 9. |
| ,, ,, 7. | உபா. 6. 16. | ,, ,, 13. | ஏசா. 56. 7. எரே. 7. 11. |
| ,, ,, 10. | ,, 6. 13. | ,, ,, 16. | சங். 8. 2. |
| ,, ,, 14, 16. | ஏசா. 9. 1, 2. | ,, ,, 42. | சங். 118. 22, 23. |
| ,, 8. 17. | ,, 53. 4. | ,, 22. 24. | உபா. 25. 5. |
| ,, 9. 13. | ஓசி. 6. 6. | ,, ,, 31. | யாத். 3. 6. |
| ,, 10. 35, 36. | மீகா. 7. 6. | ,, ,, 37. | உபா. 6. 5. |
| ,, 11. 10. | மல்கி. 3. 1. | ,, ,, 39. | லேவி. 19. 18. |
| ,, 12. 3. | 1 சாமு. 21. 6. | ,, ,, 44. | சங். 110. 1. |
| ,, ,, 5. | எண். 28. 9, 10. | ,, 24. 15. | தானி. 9. 27. |
| ,, ,, 7. | ஓசி. 6. 6. | ,, 26. 31. | சகரி. 13. 7. |
| ,, ,, 18. | ஏசா. 42. 1. | ,, 27. 9, 10. | ,, 11. 12, 13. |
| ,, ,, 40. | யோனா. 1. 17. | ,, ,, 34. | சங். 69. 21. |
| ,, ,, 41. | ,, 3. 5. | ,, ,, 35. | ,, 22. 18. |
| ,, ,, 42. | 1 இரா. 10. 1. 2 நாளா. 9. 1. | ,, ,, 38. | ஏசா. 53. 12. |
| ,, 13. 14. | ஏசா. 6. 9. | ,, ,, 60. | ,, 53. 9. |
| ,, ,, 35. | சங். 78. 2. | | |



## 2. மாற்கு எழுதின சுவிசேஷம்.

1. இந்த ஆகமத்தை மாற்கு எழுதினான் என்று பூர்வ ஆசிரியருடைய ஆகமங்களினாலே அறிகிறோம். அப். 13. 5, 13. அவன் பேர் யோவான் என்றும் 15. 39. மாற்கு என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அப். 12. 12, 25; 15. 37யில் காட்டப்பட்டிருக்கிறவனும் அவன்தான் என்று அறியலாம். அவன் பேர் கொலோசெயர் 4. 10. 2 தீமொ. 4. 11. பிலே. 24யிலும் எழுதப்பட்டிருக்கிறது. அவன் பர்னபாவுக்கு இனத்தானாய் இருந்தான். அவன் தாய் மரியாள், தேவபக்தியுள்ளவள், எருசலேமில் குடியிருந்தாள். அவள் வீட்டில் சபை கூடிவருவது வழக்கமாய் இருந்தது. பேதுரு அப்போஸ்தலன் சிறைச்சாலையிலிருந்து தேவதூதனால் விடுவிக்கப்பட்டபோது அவனைச் சந்தோஷத்தோடே ஏற்றுக்கொண்டாள்.[1] பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவிலிருந்து எருசலேமுக்கு வந்தபோது மாற்கு தன் தாயுடன் இருந்தான். அந்த அப்போஸ்தலமார்கள் அந்தியோகியாவுக்குத் திரும்புகையில் அவனையும் கூட்டிக்கொண்டு போனார்கள்.[2] அவன் அவ்விடத்திலிருந்து பம்பிலியாவிலுள்ள பெர்கேலனாக்கும் அவர்களுடன் போய் அங்கிருந்து எருசலேமுக்குத் திரும்பிவிட்டான்.[3] அவன் மறுபடியும் அந்தியோகியாவுக்கு வந்து பர்னபாவோடும் பவுலோடும் இரண்டாம் பிரயாணத்தில் கூடப்போகப் பிரியங்கொண்டான். பவுல் அந்த வேலைக்கு அவன் உதவாதவன் என்று ஆட்சேபித்தான். பவுல் அப்போது கடினமான மனத்தைக் காட்டினது மாற்குவின் இருதயத்தில் மிகுந்த பலன்செய்தது. அதுமுதல் மாற்கு திவ்விய பணிவிடையை விட்டுவிடாமல் அதிக உறுதியோடே நிறைவேற்றும்படி பர்னபாவோடேகூட சீப்புரு தீவுக்குப் போனான். பின்பு அவன் பவுலை சேர்ந்துகொண்டு அவனிடத்தில் மிகுந்த அன்பு பாராட்டினான். பவுல் ரோமாபுரியில் கைதியாக இருந்தபோதும் அவனுடன்கூட இருந்தான்.[4] கடைசியாக அவன் பேதுருவோடேகூட இருந்ததாகப் பார்க்கிறோம். பேதுரு அவனை "குமாரன்" என்று அழைக்கிறதால் அவன் பேதுருவால் ஞானப்பிரதிஷ்டை பண்ணப்பட்டவன் என்று தோன்றுகிறது.[5] வேதத்தில் அவனைப்பற்றி வேறொன்றும் சொல்லப்படவில்லை. ஆனால் பூர்வ ஆசிரியர்

[1] அப். 12. 12. [2] அப். 12. 25. [3] அப். 13. 5, 13.
[4] கொலொ. 4. 10. [5] 1 பேது. 5. 13.

5598

கள் அவன் பேதுருவுக்கு "துப்பாஷிகன்" என்று எழுதியிருக்கிறார்கள். இதைப் பார்க்கையில் அவன் பேதுரு வாய்மொழியாய்ச் சொல்வதை எழுதுகிறவனாய் இருந்தான் என்று தோன்றுகிறது. அவன் பேதுருவோடே ரோமாபுரிக்குப் போனான் என்றும் அப்புறம் அலெக்சந்திரியா பட்டணத்துக்குச் சென்று அங்குள்ள சபைக்கு முதல் கண்காணியாய் இருந்து அங்கே இரத்தச்சாட்சியாக மரித்தான் என்றும் சொல்லப்படுகிறதுண்டு; ஆனால் எரோம் என்பவன் அவன் நேரோ ராயன் ஆளுகையின் எட்டாம் வருஷத்தில் அலெக்சந்திரியாவில் இயல்பான மரணமாய் மரித்ததாகச் சொல்லியிருக்கிறான்.

2. நம்முடைய இரட்சகருடைய ஜீவியகாலத்தில் இவருக்கும் மாற்குக்கும் இருந்த சம்பந்தம் இன்னது என்று நாம் அறியோம். ஆனால் சிலர் மாற்கு 14. 51, 52யில் சொல்லப்பட்டிருக்கிற வாலிபன் இவன்தான் என்பார்கள். காரியம் எப்படி இருந்தாலும் மேற்சொல்லியபடி மாற்கு என்பவன் பிற்காலத்தில் அப்போஸ்தலருக்குப் பிரியமானவனாய் இருந்தான் என்று துலங்குகிறது. அவன் பேதுருவின் விசாரணையின்கீழ் அவன் அநுமதிப்படி தன் சுவிசேஷத்தை எழுதினான் என்று பொதுப்படச் சொல்லப்பட்டிருக்கிறது. யுஸ்தின் என்பவன் மாற்குவின் சுவிசேஷத்தை பேதுருவின் சுவிசேஷம் என்று அழைக்கிறான். சில வியாக்கியானிகள் இந்தக் காரியம் 2 பே. 1. 15, 16யில் குறிப்பிட்டிருக்கிறதாக எண்ணுகிறார்கள். இந்தச் சுவிசேஷத்தின் அக அத்தாட்சியைக் கவனிக்கையில் பேதுருவின் மேல்விசாரணை அதற்கு இருந்தது என்று அறியலாம்.[1]

3. மாற்கு இந்தச் சுவிசேஷத்தை எப்போது எழுதினான் என்பதைப்பற்றி பற்பல அபிப்பிராயங்கள் சொல்லப்படுகிறது உண்டு. பேதுருவின் விசாரணைக்குள் அதை எழுதினான் என்றால் கி. பி. 64. அல்லது 65க்கு முன்னே அதை எழுதியிருக்கவேண்டும். ஏனென்றால் பேதுரு ஏறக்குறைய அந்தக் காலத்தில் மரித்தான்.

[1] இந்தச் சுவிசேஷத்தில் பேதுரு கிறிஸ்துவோடேகூட இராத போது சொல்லப்பட்ட ஒரு வசனமாவது அல்லது செய்கையாவது காட்டப்படவில்லை. பேதுருவைப்பற்றிக் கனமாக மற்ற சுவிசேஷங்களில் காட்டப்பட்டிருக்கிறவைகள் இதில் விடப்பட்டிருக்கின்றன. பேதுருவுடைய பெலவீனங்கள் பூரணமாய் எழுதப்பட்டிருக்கின்றன. மாற். 8. 29ஐ மத். 16. 17வோடே ஒத்துப்பார்க்க. மாற். 8. 33; 14. 31–72.



4. மத்தேயு எபிரெயருக்கும் மாற்கு புறஜாதியாருக்கும் தங்கள் சுவிசேஷங்களை எழுதினார்கள். மாற்கு புறஜாதியாருக்கு எழுதினதால் நமது ஆண்டவருடைய தலைமுறை அட்டவணையையும் பழைய ஏற்பாட்டு வாக்கியங்களை பொதுப்பட எடுத்து உரைப்பதையும் விட்டிருக்கிறான். எபிரெய பதங்களுக்கும்[1] எபிரெய வழக்கங்களுக்கும்[2] விஸ்தாரிப்புச் செய்திருக்கிறான். அவன் புறஜாதியார் நடுவிலிருந்து புறஜாதியாருக்கு எழுதினதால் இயேசு தேவகுமாரன் என்பதை அவருடைய தன்மையைக்கொண்டும் நடக்கையைக்கொண்டும் காண்பித்திருக்கிறான்.

5. இவ்வாகமத்தைப் பின்வருகிறபடி வகுக்கலாம்.

I. நமது இரட்சகருடைய முன்னோடியுடைய பிரசங்கம், இரட்சகருடைய ஞானஸ்நானம், சோதனை. (i. 1–13.)

II. கர்த்தர் வெளியரங்கமாய்க் கலிலேயாவில் திவ்விய பணிவிடையை நடப்பித்த விசேஷங்கள். (i. 14–ix. 50.)

III. கர்த்தர் எருசலேமுக்குப் பிரயாணம் போனதும், பட்டணத்துக்குள் பவனிபோனதும், அங்கே அவர் அடைந்த பாடுகள், மரணம், உயிர்த்தெழுதலும். (x–xvi. 14.)

IV. கர்த்தர் கடைசியாக தமது சீஷருக்குக் கொடுத்த கட்டளை. (xvi. 15–20.)

6. மாற்கு சுவிசேஷத்தின் கர்த்தாநிச்சயம் காரியநிச்சயம் பூர்வ ஆசாரியருடைய அத்தாட்சியினால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. 16. அதி. 9–20. மாற்குவினால் எழுதப்பட்டதோ என்பதைப்பற்றி சமுசயம் உண்டு. அந்த வசனங்கள் பிந்தி எழுதப்பட்டதாக வைத்துக்கொண்டாலும் திவ்விய அதிகாரம் இன்றி பிற்காலத்தில் கூட்டப்படவில்லை என்று சொல்லவேண்டியதாய் இருக்கிறது. மாற்கு தானே பிந்திய காலத்தில் அவைகளைச் சேர்த்தான் என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

7. மாற்கு சுவிசேஷத்தில் நூதனமான காரியங்கள் மிகச் சொற்பமாகக் காட்டப்பட்டிருந்தாலும் அவன் சுயமாய் காரி

[1] மாற். 5. 41; 7. 11, 34.
[2] மாற். 7. 3, 4; 12. 18; 14. 12; 15. 42.

யங்களை எழுதியிருக்கிறான். அவன் ஆகமத்தில் இயற்கையாய் அநேகம் சிறிய காரியங்களை எடுத்துக் காண்பித்திருக்கிறான். அவன் தன் சரித்திராகமத்தை அலங்காரமாயும் தான் சொல்லிய சங்கதிகளைப் பூரணமாயும் எழுதியிருக்கிறான். யோவான் சுவிசேஷத்தை நீக்கி மற்றச் சுவிசேஷங்களில் காட்டப்பட்டிருப்பதைவிட இதில் கர்த்தருடைய தன்மையும் காரியங்களும் அவருடைய தத்துவத்துக்கேற்றபடி சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய கிரியைகளையும் வார்த்தைகளையும் மாத்திரம் அல்ல அவருடைய பார்வையையும் ஜாடையையும் ஒரு படம்போல காண்பித்திருக்கிறது. அவர் அவிசுவாசிகளான ஜனங்களையும் பேதுருவையும் கோபத்தோடே சுற்றிப் பார்த்தார் என்றும்[1] தமது சீஷர்களைச் சந்தோஷத்தோடே பார்த்தார் என்றும்[2] தமது வஸ்திரத்தைத் தொட்ட ஸ்திரீயைக் காணும்படி சுற்றிலும் பார்த்தார் என்றும்[3] செவிடனும் தெத்துவாயனுமானவனைச் சுகப்படுத்தினபோது வானத்தை அண்ணாந்து பார்த்தார் என்றும்[4] பரிசேயருடைய மாறுபாடுகளின் நிமித்தம் ஆவியில் பெருமூச்சுவிட்டார் என்றும்[5] காட்டியிருக்கிறான். மேலும் சில தருணங்களில் இரட்சகர் உபயோகித்த வார்த்தைகளையும் எடுத்து உரைக்கிறான். திருஷ்டாந்தமாக தலித்தாகூமி[6] எப்பத்தா.[7] பின்னும் அவன் தன் சுவிசேஷத்தை எழுதுகையில் நேராய் அவது மற்றவகையாய் அவதை கண்கண்டவன் போல சங்கதிகளை எடுத்துக்காட்டுகிறான். கடலில் புசல் எழும்பினபோது இயேசு தலையணையை வைத்து நித்திரையாய் இருந்தார் என்றும்,[8] யவீரின் மகள் உடனே எழுந்து நடந்தாள் என்றும், அவள் பன்னிரண்டு வயதாய் இருந்தாள் என்றும்,[9] வனாந்தரத்தில் போஷிக்கப்பட்டவர்கள் பசும்புல்லின்மேல் நூறுநூறு பேராகவும் ஐம்பது ஐம்பது பேராகவும் பந்தியிருந்தார்கள் என்றும்,[10] இயேசு தச்சன் என்றும்,[11] நித்திய ஜீவனைக்குறித்து விசாரிக்கும்படி வந்த மனிதனிடத்தில் அவர் அன்புகூர்ந்தார் என்றும்,[12] தீருசீதோன் எல்லைகளில் குணமாக்கப்பட்ட பிள்ளையின் தாய் சீரோபேனிக்கியாள் என்றும்,[13] தனக்கு இரங்க வேண்டும் என்று கேட்டவன் பேர் பர்த்திமேயு என்றும்[14] காட்டியிருக்கிறான். எல்லாவற்றிலும் முக்கியமாக கர்த்தருடைய

[1] மாற். 3. 5; 8. 33. [2] மாற். 3. 34. [3] மாற். 5. 32.
[4] மாற். 7. 34. [5] மாற். 8. 12. [6] மாற். 5. 41.
[7] மாற். 7. 34. [8] மாற். 4. 38. [9] மாற். 5. 42.
[10] மாற். 6. 40. [11] மாற். 6. 3. [12] மாற். 10. 21.
[13] மாற். 7. 26. [14] மாற். 10. 46.



நாட்டில் சொஸ்தமாக்கப்பட்ட மனிதனைப்பற்றி[1] சொல்லியதைப் பார்க்கில் மேற்சொல்லிய காரியத்துக்கு பலத்த திருஷ்டாந்தமாய் இருக்கிறது.

8. இந்தச் சுவிசேஷத்தில்மாத்திரம் காட்டப்பட்டிருக்கிற காரியங்கள்:—மறைவாய் வளர்ந்த வித்தின் உவமை (4. 26–29.), செவிடும் தெத்துவாயனுமான மனிதன் குணமாக்கப்பட்டது (7. 31–37.), பெத்சாயிதாவில் ஒரு குருடன் சுகப்படுத்தப்பட்டது (8. 22–26.), துப்பட்டியை விட்டு ஓடிப்போன வாலிபனைப்பற்றியது. (14. 51, 52.)

பழைய ஏற்பாட்டிலிருந்து மாற்கு சுவிசேஷத்தில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிற வாக்கியங்கள்.

| | | | |
|---|---|---|---|
| அதி. 1. 2. | மல்கி. 3. 1. | அதி. 11. 9. | சங். 118. 26. |
| ,, ,, 3. | ஏசா 40. 3. | ,, ,, 17. | ஏசா. 56. 7. எரே. 7. 11 |
| ,, 2. 25, 26. | 1 சாமு. 21. 6. யாத். 29. 32, 33. | ,, 12. 10, 11. | சங். 118. 22, 23. |
| ,, 4. 12. | ஏசா. 6. 9. | ,, ,, 19. | உபா. 25. 5. |
| ,, 7. 6, 7. | ,, 29. 13. | ,, ,, 26. | யாத். 3. 6. |
| ,, ,, 10. | யாத். 20. 12; 21. 17. | ,, ,, 29, 30. | உபா. 6. 4, 5. |
| ,, 9. 3 | தானி. 7. 9. | ,, ,, 31. | லேவி. 19. 18. |
| ,, ,, 11. | மல்கி. 4. 5. | ,, ,, 36. | சங். 110. 1. |
| ,, 10. 6. | ஆதி. 1. 27. | ,, 13. 26. | தானி. 7. 13, 14. |
| ,, ,, 7. | ,, 2. 24. | ,, 14. 27. | சகரி. 13. 7. |
| ,, ,, 19. | யாத். 20. 12. ஐ. | ,, 15. 28. | ஏசா. 53. 12. |
| | | ,, ,, 34. | சங். 22. 1. |

## 3. லூக்கா எழுதின சுவிசேஷம்.

1. இந்தச் சுவிசேஷத்தை எழுதினவன் தன்னைப்பற்றி முகவுரையிலும் அப்போஸ்தலர் நடபடி ஆரம்பத்திலும் சொல்லியிருக்கிறபோதிலும் அவன் பேர் இன்னது என்பதைப்பற்றி பூர்வ சபை ஆசாரியருடைய ஆகமங்களின் மூலமாய் அறிய வேண்டியதாய் இருக்கிறது. இவ்வாகமம் லூக்காவினால் எழுதப்பட்டது என்று எல்லாராலும் சாட்சியிடப்பட்டிருக்கிறது. அவனைப்பற்றி கொலோ. 4. 14. பிலே. 24. வச. 2 தீமோ. 4. 11. சொல்லப்பட்டிருக்கிறது.

[1] மாற். 5. 1.

2. லூக்கா துரோவாவில் பவுலு அப்போஸ்தலனைச் சேர்ந்து கொண்டு அங்கே இருந்து அப்போஸ்தலனோடே மக்கெதோனியாவுக்குப் போனான். அது எப்படி என்றால், அதற்கு முன்னின சங்கதிகளைப் படர்க்கை இடத்தில் காட்டி அது முதல் தன்மை பன்மை வழங்கப்பட்டிருக்கிறதால் அது துலங்குகிறது. அப். 16. 10. அவன் சிலகாலம் பிலிப்பிபட்டணத்துப் புதுச் சபைக்குப் போதனை செய்ததாகத் தோன்றுகிறது. இதற்கு எழு வருஷத்துக்குப் பின்பும் அவன் அந்த இடத்திலே இருந்ததாகப் பார்க்கிறோம். அங்கே இருந்து பவுலோடே ஆசியாவுக்கும் பலஸ்தினாவுக்கும் போனான். பவுல் செசரியாவில் சிறையாக இருந்தபோது அவனும் அந்தப் பட்டணத்தில் இருந்தான். பவுல் ரோமாபுரிக்கு அனுப்பப்பட்டபோது அவனும் கூடவே கப்பல் ஏறி கடலில் உண்டான வருத்தங்களை அனுபவித்தான். கடைசியாக அப்போஸ்தலன் இரத்தச்சாட்சியாக மரிக்குமுன்னும் அவனோடே கூட இருந்தான். 2 தீமோ. 4. 11. அவன் பிரியமான வைத்தியன் என்று கொலோ. 4. 14. சொல்லப்படுகிறான். கொலோ. 4. 11, 14ல் விருத்தசேதனம் உள்ளவர்களினின்று லூக்கா என்பவன் பிரித்துக் காட்டப்பட்டிருப்பதால் அவன் புறஜாதியானாய் இருக்க வேண்டும் என்று சொல்லலாம். ஆனால் யூதமார்க்கத்தைப் பற்றிய திட்டமான அறிவு அவனுக்கு இருந்ததைப் பார்க்கில் அவன் சுவிசேஷத்தை அங்கீகரிக்குமுன் யூதமார்க்கத்தில் அமைந்திருக்கவேண்டும் என்று சொல்லலாம். நம்முடைய இரட்சகராலும் அப்போஸ்தலராலும் சுகப்படுத்தப்பட்ட வியாதிகளின் தன்மையை அவன் திட்டமாய் எடுத்துக் காட்டுகிறதைக் கவனிக்கையில் வைத்திய அறிவு அவனுக்கு இருந்தது என்பதை அறியலாம். அவனுடைய பாஷை நடையைப் பார்க்கில் அவன் கல்வித்திறமை உடையவனாய் இருந்தான் என்பது பிரத்தியட்சமாய் இருக்கிறது.

3. இந்தச் சுவிசேஷமும் அப்போஸ்தலர் நடபடியும் தெயோப்பிலுவுக்கு எழுதப்பட்டன. தெயோப்பிலுவைப் பற்றி புதிய ஏற்பாட்டில் வேறெங்கும் சொல்லப்படவில்லை. அவனுக்கும் சபைக்கும் என்ன சம்பந்தம் இருந்ததென்பதை நாம் அறியோம். அவன் வீடு வாசல் எங்கே இருந்தது என்பதும் தெரியாது. அவன் இத்தாலியா தேசத்தான் என்றும் ரோமாபுரியில் வாசம்பண்ணினான் என்றும் இதிகாசங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. பேலிக்ஸ் பெஸ்து என்பவர்களுக்குச் சொல்லப்பட்டிருப்பதுபோல தெயோப்பிலுவுக்கும்



…கா கனம் பொருந்திய" என்று சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கில் அவன் உயர்ந்த ஸ்திதிமானாய் அல்லது உயர்ந்த உத்தியோகஸ்தனாய் இருக்கவேண்டும் என்று அறியலாம்.

4. இந்தச் சுவிசேஷம் "தெயோப்பிலுவுக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை அவன் அறியும்படியான நோக்கமாய் எழுதப்பட்டது. இந்த ஒரே நோக்கம்மாத்திரம் லூக்காவுக்கு இருந்ததாக நாம் எண்ணக்கூடாது. தெயோப்பிலுவைப்போலுள்ள மற்றவர்களும் அதாவது புறஜாதியார் யாவரும் இதை வாசிக்கவும் அல்லது ஜாதிபேதம் இன்றி யாவரும் வாசிக்கவும் நோக்கமாய் எழுதியிருக்கலாம். லூக்கா கர்த்தருடைய தலைமுறை அட்டவணையை எடுத்துக் காட்டுவதிலே இது விளங்குகிறது. மத்தேயு ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட வித்தானவர் என்றும் இஸ்ரவேலரின் ராஜா என்றும் காட்டும்படி தாவீதின் மூலமாய் ஆபிரகாம்வரையும் இரட்சகரின் அட்டவணையை எழுதியிருக்கிறான். லூக்கா தாவீது ஆபிரகாம் என்பவர்களின் மூலமாய் தேவனுடைய குமாரனாகிய ஆதாம்வரைக்கும் அட்டவணையைக் கொண்டுபோய் முடிக்கிறான். அவன் நாசரேத்தூர் இயேசுவை மனுஷகுல மனிதருடன் சம்பந்தப்படுத்திக் காட்டுகிறான். அவர் இரண்டாம் ஆதாமானவர். இரண்டாம் ஆதாமாக மனிதஜாதியாரின் இரட்சகராகக் காட்டப்பட்டிருக்கிறார். அவர் ஒரு ஜாதியாருக்கு இரட்சகராக அல்ல, சகல உலகத்தாருக்கும் இரட்சகராக எல்லாச் சுவிசேஷங்களிலும் சொல்லப்படுகிறார். இதை லூக்கா சில உவமைகளாலும் மெய்ப்பிக்கிறான். திருஷ்டாந்தமாக நல்ல சமாரியன், காணாமல்போன ஆடு, காணாமல்போன வெள்ளிக்காசு, கெட்ட குமாரன் இந்த உவமைகளில் இயேசு மனிதஜாதியாரின் இரட்சகராகத் துலங்குகிறார்.

5. இந்தச் சுவிசேஷம் கி. பி. 50லுக்கும் 58க்கும் இடையில் எழுதப்பட்டதாக சிலர் சொல்லுகிறார்கள். சிலர் இன்னம் சில வருஷங்களுக்குப் பிந்தி எழுதப்பட்டது என்று அபிப்பிராயப்படுகிறதும் உண்டு. லூக்கா தன் சுவிசேஷத்தைப் பவுலின் மேல்விசாரணைக்குள் இருந்து எழுதினதாக பெரும்பாலும் சொல்லப்படும்.

6. இந்தச் சுவிசேஷத்தை ஆறு பங்காக வகுக்கலாம்.

I. இயேசுவின் பிறப்பும் அவர் இளம்பிராயச் சரித்திரமும். (i, ii.)

II. அவருடைய ஞானஸ்நானம், தலைமுறை அட்டவணை, சோதனை. (iii, iv. 1-13.)

III. அவர் கலிலேயாவில் நடப்பித்த திவ்விய பணிவிடை. (iv. 14. ix–50.)

IV. அவர் கடைசியாக கலிலேயாவில் இருந்து பிரயாணம் செய்து எருசலேமுக்கு வந்ததுவரையும் உள்ள சங்கதிகள். (ix. 51–xix. 27.)

V. அவர் எருசலேமுக்கு வந்ததுமுதல் அவர் சிலுவையில் அறையப்பட்டதுவரையும் உள்ள சங்கதிகள். (xix. 28–xxiii.)

VI. அவர் உயிர்த்தெழுந்ததும் அதனால் உண்டான பயன்களும் (xxiv.)

7. லூக்கா சுவிசேஷத்தின் கர்த்தாநிச்சயம் காரியநிச்சயம் ஆகிய இவைகள் பூர்வ நூலாசிரியர் ஒன்றுபடக் கூறியதுத்திட்டமயினால் ரூபிக்கப்பட்டிருக்கிறது. முதல் இரண்டு அதிகாரங்களின் காரியநிச்சயத்தைக்குறித்து நம்முடைய இரட்சகர் அற்புதமாய் ஜெனிக்கப்பட்டதை அங்கீகரியாதவர்கள் ஆட்சேபிப்பது உண்டு, ஆனால் அது அணுவளவேனும் கவனிக்கப்படத்தக்கதல்ல. இந்த அதிகாரங்களில் சொல்லப்பட்டிருக்கிற சங்கதிகள் சுவிசேஷகராலேயே எழுதப்பட்டது. அவைகளை நம்முடைய இரட்சகரின் தாயார் அறிவித்திருக்கலாம்.

8. இந்தச் சுவிசேஷத்தில்மாத்திரம் சொல்லப்பட்டிருக்கிற சங்கதிகள். யோவான்ஸ்நானகன் பிறப்பு, முன்னறிவிப்பு எழுதப்பட்டது, கிறிஸ்துவின் பிறப்பைப்பற்றிய சங்கதிகள், தேவதூதன் மேய்ப்பருக்குக் காணப்பட்டது, மரியாளின் சுத்திகரிப்பு, சிமியோனும் அன்னாளும் இயேசுவைப்பற்றிச் சொன்ன சாட்சி, இயேசு சாஸ்திரிகளோடே சம்பாஷித்தது, சமாரியரை அழிக்கும்படி கேட்ட சீஷரைக் கடிந்துகொண்டது, எழுபது சீஷர்கள் அனுப்பப்பட்டது, கலிலேயர் கொல்லப்பட்டதைக்கொண்டு மற்றவர்களுக்குப் போதனை செய்யப்பட்டது, சகேயுவைப்பற்றிய வரலாறு, எருசலேமுக்காகக் கண்ணீர்விட்டது, இயேசு ஏரோதண்டை அனுப்பப்பட்டது, தமக்காக புலம்பின ஸ்திரீகளுக்கு இயேசு சொன்ன விசேஷம், சத்துருக்களுக்காக மன்றாடினது, கள்ளன் குணப்பட்டது, பேதுருவுக்குக் காட்சி அளித்தது.

இதில்மாத்திரம் காட்டப்பட்டிருக்கிற அற்புதங்கள்:—

நாயீனூர் விதவையின் மகனை உயிரோடெழுப்பினது, பதினெட்டு வருஷம் கூனியாய் இருந்த ஸ்திரீயைக் குணமாக்கினது, நீர்க்கோவை மனிதனைக் குணமாக்கினது, பத்துக் குஷ்டரோகிகளுக்கு சுகம் அளித்தது.



இதில் மாத்திரம் காட்டப்பட்டிருக்கிற சம்பாஷணை:—

நாசரேத்தூர் ஜெபஆலயத்தில் செய்த சம்பாஷணை, மார்த்தாளைக் கடிந்து மரியாளைப் புகழ்ந்தது, எம்மாவூருக்குப் போன சீஷருடன் பண்ணின சம்பாஷணை.

இதில்மாத்திரம் காட்டப்பட்டிருக்கிற உவமைகள்:—

கடன்பட்ட இருவர், நல்ல சமாரித்தன், மதியற்ற ஐசுவரியவான், கனிகொடாத அத்திமரம், காணாமல்போன வெள்ளிக்காசு, கெட்டகுமாரன், அநீதியுள்ள உக்கிராணக்காரன், ஐசுவரியவானும் ஏழை லாசருவும், பரிசேயன் ஆயக்காரன், பத்து ராத்தல்.

## பழைய ஏற்பாட்டிலிருந்து லூக்கா சுவிசேஷத்தில் குறிப்பிட்டிருக்கிற வாக்கியங்கள்.

| | | | |
|---|---|---|---|
| அதி. 1. 17. | மல்கி. 4. 5, 6. | அதி. 9. 54. | 2 இரா. 1. 10–12. |
| ,, ,, 78. | ஏசா. 9. 2. | ,, 10. 27. | உபா. 6. 5. லேவி. 19. 18. |
| ,, 2. 23. | யாத். 12. 2. | ,, 11. 31. | 1 இரா. 10. 1. |
| ,, ,, 24. | லேவி. 12. 8. | ,, 17. 26. | ஆதி. 7. 7–14. |
| ,, 3. 4. | ஏசா. 40. 3. | ,, 19. 38. | சங். 118. 26. |
| ,, ,, 5. | ,, 52. 10. | ,, ,, 46. | ஏசா. 66. 7. எரே. 7. 11. |
| ,, 4. 4. | உபா. 8. 3. | ,, 20. 17. | சங். 118. 22. |
| ,, ,, 8. | ,, 6. 13. | ,, ,, 28. | உபா. 25. 5. |
| ,, ,, 10, 11. | சங். 91. 11, 12. | ,, ,, 42, 43. | சங். 110. 1. |
| ,, ,, 12. | உபா. 6. 16. | ,, 22. 37. | ஏசா. 53. 12. |
| ,, ,, 18, 19. | ஏசா. 61. 1, 2. | ,, 23. 46. | சங். 31. 5. |
| ,, ,, 25, 26. | 1 இரா. 17. 9. | | |
| ,, ,, 27. | 2 இரா. 5. 1, 14. | | |
| ,, 7. 27. | மல்கி. 3. 1. | | |
| ,, 8. 10. | ஏசா. 6. 9. | | |

## 4. யோவான் எழுதின சுவிசேஷம்.

1. இந்தச் சுவிசேஷத்தை எழுதினவன் தன்னுடைய பேரைக் காட்டாவிட்டாலும் தான் இன்னான் என்பதை தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறான். இயேசுவுக்குப் பின்சென்ற இரண்டு சீஷரைப்பற்றி சொல்லுகையில் அவ்விரண்டுபேரில் ஒருவன் சீமோன் பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயா என்றும் இன்னொரு தருணத்தில் "இயேசுவுக்கு அன்பாய் இருந்த அவருடைய சீஷரில் ஒருவன்" என்றும் காட்டி இருப்பதைக் கவனிக்கையில் இதை எழுதினவன் தன்னைக்

குறித்து பக்கவழியாய் இப்படிச் சொல்லியிருக்கிறான் என்று இயல்பாய் அறிந்துகொள்ளலாம். சிலர் நினைக்கிறபடி இவ்வாகமத்தின் கடைசி இரண்டு வாக்கியங்களும் வேறே ஒருவனால் எழுதப்பட்டிருந்தாலும் அதால் இவ்வாகமத்தின் உண்மைக்குப் பின்னம் உண்டாகிறதில்லை. பூர்வ நூலாசிரியர் எல்லாருடைய ஏக அத்தாட்சியினாலும் இவ்வாகமத்தின் அக அத்தாட்சியினாலும் அது ரூபிக்கப்பட்டிருக்கிறது.

2. யோவானைப்பற்றி வேதத்தில் சொல்லப்பட்டிருப்பது சொற்பம்; அவன் செபதேயு சாலோமி என்பவர்களுடைய குமாரனும் யாக்கோபுடைய இளைய சகோதரனுமாய் இருந்தான். அவன் தகப்பன் கலிலேயன், கலிலேயாக்கடலில் மீன்பிடித்த செம்படவன். அவன் கூலியாளை வைத்து வேலைவாங்கினதைப் பார்க்கில் அவன் ஆஸ்திமானாய் இருந்திருக்கவேண்டும். சாலோமி என்பவள் கலிலேயாவில் இயேசுவுக்குப் பின்சென்று அவருக்கு ஊழியம்செய்தவர்களில் ஒருத்தி. இயேசு போதகத்தொழிலை துவக்கின காலத்தில் யோவான் அவருடைய சீஷனாக அழைக்கப்பட்டான். இயேசு விசேஷித்த அன்பு பாராட்டின மூவரில் இவன் ஒருவன். மூவரும் யவீரு மகளை உயிரோடெழுப்பினபோதும் மறுரூபமடைந்தபோதும் கெத்செமெனேயில் பாடுபட்டபோதும் இயேசுவோடேகூட இருந்தார்கள். இயேசு அவனிடத்தில் விசேஷித்த அன்பு பாராட்டினார்.

இராப்போசனத்தில் அவன் அவர் மார்பில் சாய்ந்துகொண்டான். இயேசு சிலுவையில் மரிக்கும்போதும் தமது தாயாரை அவன் வசமாய் ஒப்புவித்தார். ஆண்டவர் பரமேறினபின்பு யோவான் எருசலேமிலே குடியிருந்தான். சமாரியர் வேதவசனத்தை ஏற்றுக்கொண்டார்கள் என்று அப்போஸ்தலர் கேள்விப்பட்டபோது அவன் பேதுருவோடேகூட அவ்விடத்துக்கு அனுப்பப்பட்டான். அவன் மறுபடியும் எருசலேமுக்குத் திரும்பி அங்கே சஞ்சரித்தான். பவுல் அப்போஸ்தலன் குணப்பட்ட பதினேழு வருஷத்துக்குப்பின்பு அந்தியோகியாவிலிருந்து எருசலேமுக்குப் போனபோது யோவானையும் அங்கே கண்டு சந்தித்தான்.

ரோமருடைய யுத்தம் உண்டானதுவரையும் அவன் எருசலேமிலேதான் இருந்ததாகத் தோன்றுகிறது. ஆனால் சிலரும் மரியாள் மரித்ததுவரையும் எருசலேமில் அவன் இருந்தான் என்றும் மரியாள் யோவானுடன் எபேசுக்குப்போய் அங்கே மரித்தாள் என்று மற்ற அநேகரும் சொல்லுகிறார்கள். பவுல் அப்



போஸ்தலன் சின்ன ஆசியாவை முழுவதுமாய் விட்டபின்பு யோவான் அங்கே போய் எபேசில் குடியிருந்து சபைகளை ஸ்தாபித்தான். சில வருஷங்களுக்குப்பின்பு தோமிஷியன் ராயன்காலத்தில் அல்லது வேறு சிலர் சொல்லுகிறபடி நேரோ ராயன் ஆளுகையின் கடைசிக்காலத்தில் பத்மு தீவுக்குச் சிறையாக அனுப்பப்பட்டான். அங்கே வெளிப்படுத்தின விசேஷம் அவனுக்கு அருளப்பட்டது. நெர்வா ராயன் சிங்காசனம் ஏறினபோது அவன் விடுவிக்கப்பட்டு மறுபடியும் எபேசுவுக்குப்போய் மீதியான ஜீவகாலம் எல்லாம் திவ்விய ஊழியத்தை நடப்பித்து நூறுவயதாய் இருக்கையில் கி. பி. 100 வருஷம் மரித்தான்.[1]

3. பூர்வீக ஆசிரியமார் எல்லாரும் யோவான் தன் சுவிசேஷத்தை எருசலேமின் அழிவுக்குச் சிலகாலத்துக்குப்பின்பு கி. பி. 97 அல்லது 98 எபேசுவிலிருந்து எழுதினான் என்று சொல்லி இருக்கிறார்கள். நம்முடைய ஆண்டவர் எருசலேமின் அழிவையும் யூதர்கள் சிதறடிக்கப்படுவதையும் குறித்துச் சொன்ன தீர்க்கதரிசனங்கள் அதற்கு முன்னமே நிறைவேறி முடிந்ததால் அவைகளைப்பற்றி அவன் ஒன்றும் எழுதவில்லை.

4. இவ்வாகமத்தை எழுதின நோக்கம் 1. 1–18; 20. 31ல் தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. மீட்பருடைய சரியான தன்மை உத்தியோகம் வசனம் முதலியவைகளைக்குறித்து உலகத்தாருக்குத் திட்டமான அறிவைக் கொடுக்கும்படியான நோக்கமாய் இது எழுதப்பட்டது. ஆகவே அவருடைய தெய்வீக வல்லமை அதிகாரம் முதலியவற்றைக் காட்டிய காரி

[1] யோவானைப்பற்றிச் சொல்லப்படுகிற பாரம்பரியங்களில் சில விசேஷித்தவைகள் உண்டு. தோமிஷியன் ராயன் சபையைத் துன்பப்படுத்தினபோது யோவான் அப்போஸ்தலன் ரோமாபுரிக்குக் கொண்டுபோகப்பட்டு கொதிக்கிற எண்ணெய் கொப்பரையில் போடப்பட்டபோது சேதமில்லாதபடிக்குத் தப்பினானாம். செரிந்து என்ற பதிதன் ஒரு மண்டபத்தில் இருந்தபோது யோவான் அது இடிந்து மேலே விழுந்துவிடும் என்று சொல்லி அதை விட்டு வெளியே போய்விட்டானாம். ஞானஸ்நானம் பெற்றபின்பு கள்ளர்கூட்டத்தோடே சேர்ந்து அவர்களுக்குத் தலைவனாய் இருந்த ஒருவனைச் சீர்ப்படுத்தும்படி குதிரைச்சவாரி செய்து கள்ளர் குகைக்குப்போய் அவனை வசப்படுத்திக்கொண்டானாம். அவனுடைய கடைசிநாட்களில் சபையாலயத்துக்குச் சுமந்துகொண்டுபோகப்பட்டு அங்கே கூடிவந்தவர்களைப் பார்த்து "சிறுபிள்ளைகளே! ஒருவரில் ஒருவர் அன்பாய் இருங்கள்" என்பானாம்.

யங்களையும் வசனங்களையும் அவருடைய தன்மையை விவரிக்கிற சம்பாஷணைகளையும் பிதா அவருக்குக் கொடுத்த வேலையையும் உலகத்தின் பாவங்களுக்காக அவர் செய்யும் பிராயச்சித்தத்தின் புண்ணிய பலிதத்தையும் சுவிசேஷகன் ரூடுத்துவாக்கிறான். நம்முடைய ஆண்டவருடைய தெய்வீக தன்மையை ரூபிக்கிற அநேக உறுதியான திருஷ்டாந்தங்கள் இவ்வாகமத்தில் உண்டு. இதில் நமது மார்க்கத்தின் மிகப் பெரிதான ரகசியங்களையும் போதகன்மார் எல்லாருக்கும் தலைவரானவர் சொன்ன ஆழ்ந்த உபதேசங்களையும் காட்டி இருப்பதுடன் நமது இரட்சகருடைய மனித தன்மையையும் அவருடைய உள்ளான அன்பையும் மிகவும் தெளிவாய்க் காட்டியிருக்கிறது.

5. அப்போஸ்தலன் இவ்வாகமத்தில் காட்டி இருக்கிற காரியங்களைக் காலக்கிரமப்படி எழுதியிருக்கிறான். இதை மூன்று பங்காக வகுக்கலாம்.

I. முகவுரை. இதில் தேவகுமாரனுடைய தெய்வீகதன்மையிலும் கிரியையிலும் அவருக்கிருக்கிற மகிமையையும் அவர் மனுடவதாரம் செய்ததையும் அதின் நோக்கத்தையும் விளக்கிய சங்கதிகள் காட்டியிருக்கிறது. (i. 1–18.)

II. அவருடைய வெளியரங்கமான ஜீவியகாலத்தில் அவருடைய மகிமையை விளக்கிய சில சங்கதிகள். (i. 19–xii. 50.)

III. அவருடைய மகிமையை விளக்கியதாக அவரின் மரணத்துக்கு முன்னும் அதை ஒட்டியும் நடந்த சங்கதிகள். (xiii–xxi.)

6. இந்தச் சுவிசேஷத்திலே காட்டப்பட்டிருக்கிறவைகளில் மூன்றில் இருபங்கு மற்றச் சுவிசேஷங்களில் காட்டப்படாத நூதன சங்கதிகள். யோவான் அப்போஸ்தலன் முந்தின சுவிசேஷங்களைப் பார்வையிட்டிருப்பான் என்பதற்கும் அவைகளை அறிந்திருந்த ஜனங்களுக்குப் பிரயோஜனமாக தன் சுவிசேஷத்தை எழுதினான் என்பதற்கும் சந்தேகம் இல்லை. மற்றச் சுவிசேஷகர் சொல்லிய காரியங்களை யோவான் குறிப்பிட்டுக் காட்டினாலும் அந்தச் சங்கதிகளைப் பொதுப்பட விபரமாய் எழுதவில்லை. சுவிசேஷத்தின் பொதுவான நோக்கத்துக்குப் பொருந்திய சங்கதிகளைமாத்திரம் அவன் சற்று விபரமாய் எழுதியிருக்கிறான். கர்த்தர் செய்த திரளான அற்புதங்களில் ஆறு அற்புதங்களைக்குறித்து மாத்திரம் சொல்லியிருக்கிறான்; அவை



களில் ஐந்து இந்தச் சுவிசேஷத்துக்கு விசேஷித்த வகையாய்ப் பொருந்தியவைகள். நாலு அற்புதங்கள் அவருடைய சம்பாஷணைகளை விளக்குவதற்காகமாத்திரம் காட்டப்பட்டிருக்கின்றன. மற்றச் சுவிசேஷகர் அநேக உவமைகளை எழுதியிருக்கிறார்கள். இவன் ஒன்றை முதலாய்க் காட்டுவது அபூர்வமாயிருக்கிறது. வனாந்தரத்தில் உண்டான சோதனை மலைப்பிரசங்கம் மறுரூபமானது கெட்டகுமாரன் உவமை முதலியவைகள் மற்றச் சுவிசேஷங்களில் சொல்லப்பட்டிருப்பதால் இதில் விடப்பட்டிருக்கிறது. மற்றச் சுவிசேஷகர் கலிலேயாவில் நடப்பிக்கப்பட்ட கிரியைகளைக்குறித்து முக்கியமாய் உரைத்திருக்க, யோவான் யூதேயாவில் நடப்பிக்கப்பட்டவைகளைப் பற்றி முக்கியமாய் எழுதியிருக்கிறான். முதல் மூன்று சுவிசேஷங்களுக்கும் யோவான் சுவிசேஷம் அநுபந்தம் என்று சொல்வது சரி அல்ல. இவ்வாகமம் தன்னிலேதானே பூரணமுள்ளது. நம்முடைய கர்த்தருடைய திவ்விய பணிவிடை முழுமையும் அநேக வருஷங்களுக்குப்பின்பு யோவானுடைய மனதுக்குக் காணப்பட்ட வண்ணமாகவும் கிறிஸ்துவானவருடைய தன்மையைக் குறித்து உண்டான தப்பறைகளைத் தவிர்க்கும்படியான ஜாடையாகவும் இது எழுதப்பட்டிருக்கிறது.

7. வேதாகமத்திலுள்ள எல்லாப் புஸ்தகங்களிலும் இதுவே கடைசியாக எழுதப்பட்டது. அநேக விரோதிகள் கொடிய விதமாய் ஆட்சேபித்தபோதிலும் இதின் கர்த்தாநிச்சயமும் காரியநிச்சயமும் பூரணமாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.[1]

8. இவ்வாகமத்தில்மாத்திரம் காட்டப்பட்டிருக்கிற விசேஷங்கள்:—யோவான்ஸ்நானகன் கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டினது, பிலிப்புவுக்கும் நாத்தான்வேலுக்கும் உண்டான சம்பாஷணை, இயேசு கானாவூரில் செய்த அற்புதம், முதல் பஸ்காவில் அவர் தேவாலயத்தைச் சுத்திகரித்தது, அவர் நிக்கொதேமுடன் செய்த சம்பாஷணை, சமாரிய ஸ்திரீயோடே

[1] 8. அதி. 1—11 வசனங்கள் மிகப்பூர்வ நகல் பிரதிகளில் காணப்படுகிறதில்லை. அந்தச் சங்கதி உண்மையுள்ளது என்றாலும் அது யோவானால் எழுதப்பட்டதாகத் தோன்றுகிறதில்லை என்று நுட்பசாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். இவ்வாகமத்தின் கடைசி அதிகாரத்தை முக்கியமாய் அந்த அதிகாரத்தின் கடைசி இரண்டு வாக்கியங்களைக் குறித்து மிகுந்த தர்க்கங்கள் நேரிட்டிருப்பது உண்டு. பலர் எபேசு சபையார் அதைக் கூட்டியிருக்கவேண்டும் என்று நினைக்கிறார்கள். சிலர் அப்போஸ்தலனே பிந்தியகாலத்தில் அதை எழுதியிருக்கவேண்டும் என்று அபிப்பிராயப்படுகிறார்கள்.

செய்த சம்பாஷணை, ராஜாவின் மனிதனுடைய மகனைக் குணமாக்கினது, பெதஸ்தா குளத்தில் ஒரு வியாதியஸ்தனைக் குணமாக்கினது, விபசார ஸ்திரீயை விடுதலையாக்கினது, பிறவிக்குருடனைக் குணமாக்கினது, லாசருவை உயிரோடே எழுப்பினது, கிரேக்கர் கிறிஸ்துவைப் பார்க்க விரும்பினது, சீஷரின் கால்களைக் கழுவினது, கிரேக்கரோடே பரிசுத்த ஆவியைக்குறித்துச் செய்த சம்பாஷணை, அவர்களுக்காகக் கடைசியாகப் பண்ணின அருமையான ஜெபம், அவருடைய விலாக் குத்துண்டது, மகதலேனாளுக்குத் தம்மைக் காட்டி அளித்தது, திபேரியாக்கடலில் அவர் தமது சீஷருக்குக் காட்டி அளித்தது, பேதுருவோடு சம்பாஷித்தது.

## பழைய ஏற்பாட்டிலிருந்து யோவான் சுவிசேஷத்தில் குறிப்பிட்டிருக்கிற வாக்கியங்கள்.

| | | | |
|---|---|---|---|
| அதி. 1. 21. | மல்கி. 4. 5. உபா. 18. 15–18. | அதி. 12. 13. | சங். 118. 25, 26. |
| ,, ,, 23. | ஏசா. 40. 3. | ,, ,, 14. | சகரி. 9. 9. |
| ,, ,, 45. | உபா. 18. 18. | ,, ,, 31. | சங். 89. 36, 37; எசேக். 37. 25. தானி. 7. 13, 14. |
| ,, 2. 17. | சங். 69. 9. | ,, ,, 38. | ஏசா. 53. 1. |
| ,, 4. 5. | ஆதி. 33. 19. யோசு. 24. 32. | ,, ,, 41. | ,, 6. 1–10. |
| ,, 6. 14. | உபா. 18. 18. | ,, 13. 18. | சங். 41. 9. |
| ,, ,, 31. | யாத். 16. 15. சங். 78. 24. | ,, 15. 25. | ,, 35. 19. |
| ,, ,, 45. | ஏசா. 54. 13. | ,, 19. 24. | ,, 22. 18. |
| ,, 7. 37. | ,, 55. 1. | ,, ,, 28. | ,, 69. 21. |
| ,, 8. 17. | உபா. 19. 15. | ,, ,, 31. | உபா. 21. 23. |
| ,, 10. 11. | ஏசா. 40. 11. | ,, ,, 36. | யாத். 12. 46. |
| ,, ,, 34. | சங். 82. 6. | ,, ,, 37. | சகரி. 12. 10. |

## 5. அப்போஸ்தலர் நடபடிகள்.

1. புதிய ஏற்பாட்டு சரித்திர ஆகமங்களில் நடபடி ஆகமம் கடைசியானது. அது லூக்காவினால் எழுதப்பட்ட சுவிசேஷத்துக்குத் தொடர்ச்சியாய் இருக்கிறது. இந்த ஆகமத்தின் துவக்கத்தில் காட்டப்பட்டிருக்கிற சங்கதிகளை மற்றவர்களால் அறிந்தும் மற்றவைகளைக் கண்ணாரக் கண்டும் எழுதியிருக்கிறான். இது எப்போது எந்த இடத்தில் எழுதப்பட்டதென்பது அபிப்பிராயத்துக்கு உரியது. பவுல் அப்போஸ்தலனு



டைய நியாய விசாரணையைக் காட்டாமல் அவன் இரண்டு வருஷம் சிறையாக இருந்ததைக் காட்டி முடிக்கப்பட்டிருப்பதால் இது ஏறக்குறைய கி. பி. 63ல் எழுதப்பட்டிருக்கலாம்.

2. நம்முடைய இரட்சகர் பரலோகத்துக்கு ஏறினதின் பின்னுள்ள திருச்சபையின் சரித்திரத்தையும் பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாய்ச் சொன்ன வாக்குத்தத்தம் நிறைவேறினதையும் யூதரும் புறஜாதியாரும் குணப்படும்படி பரிசுத்த ஆவியானவர் செய்த கிரியைகளையும் காட்ட நோக்கமாய் இவ்வாகமம் எழுதப்பட்டது. இது அப்போஸ்தலருடைய கிரமமான பூரண கிரியைகளைக் காட்டிய சரித்திரம் என்று எண்ணக்கூடாது. ஏனென்றால் அப்போஸ்தலருடைய அநேக கிரியைகள் அதில் காட்டப்படாமல் விட்டுவிடப்பட்டிருக்கின்றன. பேதுரு சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்டதற்குப் பின்புள்ள எருசலேம் சபைச் சரித்திரமும் ரோமாபுரிக்குச் சுவிசேஷம் முதலில் பிரசங்கிக்கப்பட்ட சரித்திரமும் பவுல் அப்போஸ்தலனுடைய பிரயாசங்கள் பாடுகளில் அநேகமும் இதில் எழுதப்படவில்லை. அப்போஸ்தலமார் எல்லாருடைய கிரியைகளும் இதில் எடுத்து உரைக்கப்படவும் இல்லை. ஆதலால் இவ்வாகமத்துக்கு அப்போஸ்தலர் நடபடி என்று கொடுக்கப்பட்டிருக்கிற பெயர் பொருந்தாத பெயராய் இருக்கிறது. லூக்கா சுவிசேஷம் கர்த்தர் பரலோகத்துக்கு ஏறினதற்கு முன்னுள்ளதும் அப்போஸ்தலர் நடபடிகள் பின்னுள்ளதுமான சுவிசேஷங்கள் என்று சொல்லலாம். இரண்டு புஸ்தகங்களும் கிறிஸ்துவின் கிரியைகளையும் அவருடைய நாமத்தின் மகிமையையும் காட்ட நோக்கமாய் எழுதப்பட்டன. முதலாம் பிரபந்தத்தில் இயேசு எடுத்துக்கொள்ளப்பட்ட நாள் வரைக்கும் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கினவைகள் எல்லாம் எழுதப்பட்டிருந்தது. சுவிசேஷத்தில் ஆரம்பிக்கப்பட்ட காரியம் நடபடியில் தொடர்ச்சியாய்க் காண்பிக்கப்பட்டிருக்கிறது. இரண்டு ஆகமங்களிலும் கிறிஸ்துவே பெரிதான கிரியைகளைச் செய்கிறவராகக் காண்பிக்கப்பட்டிருக்கிறார்.[1]

[1] கிறிஸ்துவே இவ்வாகமத்தில் காண்பிக்கப்பட்டிருக்கிற காரியங்களைத் தொடர்ச்சியாய் நிறைவேற்றிக்கொண்டு வந்திருக்கிறார் என்பதற்குச் சிறந்த திருஷ்டாந்தங்கள் உண்டு. பரலோகத்துக்கு ஏறின அவரே சீஷர்கள்மேல் பரிசுத்தஆவியை ஊற்றினார் (அப். 2. 33.). அலங்காரவாசலில் உட்கார்ந்திருந்த சப்பாணி அவருடைய நாமத்தினாலேயே குணமாக்கப்பட்டான். (3. 6.) ஸ்தேவான் மரிக்கிற சமயத்தில் அவர் அவனைச் சந்தோஷிப்பித்து மோட்ச வீட்டுக்குச்

3. இவ்வாகமத்தை இரண்டு பங்காக வகுக்கலாம்.

I. பேதுரு அப்போஸ்தலனால் யூதர்களுக்குள் கிறிஸ்து சபை ஸ்தாபிக்கப்பட்டு விர்த்தியடைந்தது. (i–xii அதி.)

II. பவுல் அப்போஸ்தலனால் புறஜாதியாருக்குள் கிறிஸ்து சபை ஸ்தாபிக்கப்பட்டு விர்த்தியடைந்தது. (xiii–xxviii அதி.)

4. இவ்வாகமத்தை நிருபங்களோடே ஒத்திட்டு வாசித்தால் அதிகப் பிரயோஜனம் இருக்கும். இது பல நிருபங்களுக்கு முகவுரையாயும் அவைகளை விளக்கிவிக்கிறதாயும் இருக்கிறது. இதின் கர்த்தாநிச்சயம் காரியநிச்சயத்தைப்பற்றி ஏராளமான அத்தாட்சி உண்டு. இதில் சொல்லப்பட்டிருக்கிற சங்கதிகள் உண்மையான தன்மையுள்ளதென்று சொல்லலாம். அப்போ

கொண்டுபோனார். (7. 55–60.) சவுல் சபையைத் துன்பப்படுத்தும்படியாகப் போனபோது அவனை இடைவழியில் குணப்படுத்தி அவனிடத்துக்கு அனனியாவை அனுப்பி ஞானஸ்நானம் கொடுத்துத் தமது பணிவிடைக்கு ஆயத்தப்படுத்தி தாமே அவனைப் போதித்து அந்தக் கிரியைக்கு அனுப்பினார். (9. 10, 16.) பேதுருவை அழைப்பிக்கும்படி கொர்னேலியுவுக்கு உத்தரவு கொடுத்து பேதுரு ஆட்சேபனையின்றி அவனண்டைக்குப் போகும்படி தரிசனம் அருளினார். (10. அதி.) சில விசுவாசிகள் அந்தியோகியாவில் முதலாவது புறஜாதியாருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபோது கர்த்தருடைய கரம் அவர்களோடிருக்க அநேகர் சபையில் சேர்க்கப்பட்டார்கள். (11. 21.) பவுலும் பர்னபாவும் திவ்விய ஊழியத்துக்கென்று அனுப்பப்பட்டபோது அவர் தமது கிருபையுள்ள வசனத்துக்குச் சாட்சியாக அடையாளங்களும் அற்புதங்களும் அவர்கள் கைகளால் செய்யப்படும்படி அநுக்கிரகம் பண்ணினார். (14. 3.) அவர் பவுல் அப்போஸ்தலனை தரிசனத்தின் மூலமாய் துரோவாவில் இருந்து ஐரோப்பாவுக்கு வரவழைத்து அங்கே பிலிப்பி பட்டணத்தில் லீதியாளின் இருதயத்தைத் திறந்தார். (16. 14.) அவர் கொரிந்து பட்டணத்தில் பவுலுக்குத் தரிசனமாகி அவன் தன் கிரியையை ஊக்கமாய் நடப்பிக்க ஏவினார். (18. 9, 10.) எருசலேம் கோட்டையில் அவனுக்கு அவர் தரிசனம் கொடுத்து தம்மைப்பற்றி ரோமாபுரியிலும் சாட்சிகொடுக்க உத்தரவு அருளினார். (23. 11.) அவர் ஒரு தூதனை அனுப்பி கப்பல் சேதமே அல்லாமல் உயிர்ச்சேதம் இராதென்று பவுலைத் திடப்படுத்தினார். (27. 23, 24.) ரோமாபுரியில் இரண்டு வருஷம் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி தைரியம் அருளினார். (28. 30, 31.) முதலிலிருந்து கடைசிவரையும் கிறிஸ்து தமது சபையின் கருவியைக்கொண்டு நடப்பித்த கிரியைகளையே இவ்வாகமத்தில் பார்க்கிறோம்.



ஸ்தலர் காலத்தின் தன்மையையும் கிறிஸ்துவின் காரியம் எக்காலத்திலும் நடத்தப்படவேண்டிய விதத்தையும் விஸ்தரித்துக் காட்டுகிறதாய் இருக்கிறது.

## அப்போஸ்தலர் நடபடியில் குறிப்பிட்டிருக்கிற வாக்கியங்கள்.[1]

| | | | |
|---|---|---|---|
| அதி. 1. 4. | மத். 3. 11. அப். 2. 4. | அதி. 7. 33, 34. | ,, 3. 5–10. |
| ,, ,, 9. | லூக். 24. 51. | ,, ,, 37. | உபா. 18. 15. |
| ,, ,, 16. | சங். 41. 9. | ,, ,, 40. | யாத். 32. 1. |
| ,, ,, 20. | ,, 109. 8. | ,, ,, 42, 43. | ஆமோ. 5. 25, 26. |
| ,, 2. 4. | மாற். 16. 17. | ,, ,, 49, 50. | ஏசா. 66. 1, 2. |
| ,, ,, 17-19. | யோவே. 2. 28, 32. | ,, ,, 52. | 2 நாளா. 36. 16. |
| ,, ,, 25-28. | சங். 16. 8–11. | ,, 8. 32, 33. | ஏசா. 53. 7, 8. |
| ,, ,, 30. | 2 சாமு. 7. 12, 13. | ,, 13. 22. | 1 சாமு. 13. 14. சங். 89. 20. |
| ,, ,, 34, 35. | சங். 110. 1. | ,, ,, 32. | சங். 2. 7. |
| ,, 3. 22, 23. | உபா. 18. 15–19. | ,, ,, 34. | ஏசா. 55. 3. |
| ,, ,, 25. | ஆதி. 22. 18. | ,, ,, 35. | சங். 16. 10. |
| ,, 4. 11. | சங். 118. 22, 23. | ,, ,, 41. | ஆப. 1. 5. |
| ,, ,, 25, 26. | ,, 2. 1, 2. | ,, ,, 47. | ஏசா. 49. 6. |
| ,, 7. 3. | ஆதி. 12. 1. | ,, 15. 16, 17. | ஆமோ. 9. 11, 12. |
| ,, ,, 6, 7. | ,, 15. 13, 14. | ,, 21. 11. | அப். 21. 33. |
| ,, ,, 14. | ,, 46. 27. | ,, 23. 5. | யாத். 22. 28. |
| ,, ,, 26, 35. | யாத். 2. 13, 14. | ,, 28. 25, 27. | ஏசா. 6. 9, 10. |
| ,, ,, 32. | யாத். 3. 6. | | |

## உபதேச ஆகமங்கள் அதாவது நிருபங்கள்.

1. புதிய ஏற்பாட்டின் உபதேச ஆகமங்கள் எல்லாம் நிருபங்கள் அல்லது காகிதங்களாக எழுதப்பட்டிருக்கின்றன. அவைகள் நிருபங்களே அல்லாமல் தாட்டாந்த சித்தாந்த மெனமையாக எழுதப்பட்ட கல்விநூல்கள் அல்ல என்றும் அவைகளை எழுதினவர்களுடைய காலத்தில் நடந்த சம்பவங்களுக்

[1] இவைமுதல் பழைய புதிய ஏற்பாடுகளில் இருந்து ஒத்தவாக்கியங்கள் எடுத்துக் காட்டப்படும்.

குரிய நோக்கமாய் அவைகள் எழுதப்பட்டதே ஒழிய பின் சந்ததியாருக்குப் பிரயோஜனமாய் இருக்கவேண்டும் என்ற நோக்கத்தோடே எழுதப்படவில்லை என்றும் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். தப்பறையான உபதேசங்களில் அகப்பட்ட சில சபைகளைச் சீர்திருத்தவும் தகாத காரியங்களை நடப்பிப்பது குற்றம் என்று காட்டவும் வருத்தங்களைச் சகித்து மிதமிஞ்சியவைகளை அடக்கி துன்பப்படுகிற சகோதரரை ஆறுதல் படுத்தி உண்மையாய் மார்க்கத்தில் நிலைத்திருக்கும்படி போதனை செய்யவும் நோக்கமாய் நிருபங்கள் எழுதப்பட்டன. ஆதலால் அவைகளின் கருத்தை அறியவேண்டுமானால் அவைகள் யாருக்கு, யாரால் எழுதப்பட்டன என்றும், என்ன முகாந்தரத்தையிட்டு அவைகள் எழுதப்பட்டன என்றும், விசுவாசத்துக்கு அல்லது சன்மார்க்க ஒழுக்கங்களுக்கு விரோதமாய்ச் செய்த எந்தத் தவறுகளை நிவிர்த்திக்க நோக்கமாய் எழுதப்பட்டதென்று பார்த்து அறியவேண்டும். நிருபங்களுக்கும் சுவிசேஷங்களுக்கும், நிருபங்களுக்கும் அப்போஸ்தலர் நடபடிக்கும் இருக்கிற சம்பந்தத்தைக் கவனிப்பதும் முக்கியமான காரியம். இருபத்தொரு நிருபங்களில் பதினாலு பவுல் அப்போஸ்தலனாலும் மற்ற ஏழும் பேதுரு, யூதா, யாக்கோபு, யோவானாலும் எழுதப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

2. நிருபங்களில் விளங்குவதற்கு அரிதான காரியங்களும் உண்டென்பதை அவைகளை வாசிப்பவருக்குப் பிரத்தியட்சமாய்த் தெரியும். நிருபங்கள் யாருக்கு எழுதப்பட்டனவோ அவர்களுக்குத் தெரிந்த அநேக காரியங்கள் விட்டுவிடப்பட்டும் சில காரியங்கள் அற்பமாய்மாத்திரம் சொல்லப்பட்டும் இருக்கின்றன. இப்படி விட்டுவிடப்பட்டவைகளும் குறிப்பாய்ச் சொல்லப்பட்டவைகளும் இன்னதென்று தெரியாததால் நிருபங்களை வாசிக்கையில் அவைகள் விளங்குவது அரிதாய் இருக்கிறது. மேலும் நிருபங்களை எழுதினவர்கள் தங்களுக்கு அனுப்பப்பட்ட காகிதங்களுக்குப் பதில் எழுதியிருப்பதாலும் கேட்கப்பட்ட சில கேள்விகளுக்கு உத்தரம் சொல்லியிருப்பதாலும் அந்தக் காகிதங்களும் கேள்விகளும் பாதுகாக்கப்படாததாலும் அவைகள் நமக்கு விளங்குவது வருத்தமாய் இருக்கிறது. பொதுப்பட நிருபங்களைப்பற்றிச் சொல்லப்படும் இந்த முகாந்தரங்கள் அன்னியில் பவுல் அப்போஸ்தலன் நிருபங்களைப்பற்றிச் சில காரியங்களைப் பார்க்கவேண்டும். பவுல் மிகுந்த சுறுசுறுப்பும் வைராக்கியமும் தேறின கல்வியாளுமாய் இருந்தமையால் அவன் காரியங்களை பிரமாண



ஒழுங்காய் எழுதாமல் விரைவாய் எழுதிக்கொண்டு போயிருக்கிறான். ஆதலால் இடைப்பிரவான வாக்கியங்கள் அதிகமாய் அவன் நிருபங்களில் வருவதுண்டு. அவன் சொல்லிக்கொண்டுபோகிற நியாயங்களைத் திடீர் என விட்டுவிட்டு நூதன சங்கதிகளை எழுதி அதை முடித்துப் பின்பு முன் சொன்ன நியாயங்களைத் தொடர்வதுண்டு: இவைகளை நாம் கவனித்து வாசித்தால் இவ்வித வருத்தங்கள் வெகுவாய் நீங்கிப்போம்.

3. பவுல் அப்போஸ்தலனுடைய நிருபங்கள் எழுதப்பட்ட காலக்கிரமப்படி வரிசையாக வைக்கப்படாமல் அந்தந்த நிருபத்தின் விஸ்தாரத்தையும் அந்தந்த சபை அல்லது ஆளுடைய முக்கியத்தையும் கவனித்து வைக்கப்பட்டதாகத் தோன்றுகிறது. ரோமாபுரி ராஜ்யத்தின் தலைநகரியாய் இருந்தது. ஆதலால் அதற்கு எழுதப்பட்ட நிருபம் முதலாவதாகவும் கொரிந்து பெரிதும் சீர்த்திபெற்றதுமான பட்டணமாய் இருந்ததால் அதற்கு எழுதப்பட்ட இரண்டு நிருபங்களும் ரோம நிருபத்துக்கு அடுத்தும் வைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரகாரமாக மற்ற நிருபங்களையும்பற்றிச் சொல்லலாம். ஆனால் அந்த நிருபங்கள் எழுதப்பட்ட காலக்கிரமத்தின்படி அவைகள் வாசிக்கப்படுகிறதாய் இருந்தால் ஒன்று மற்றொன்று விளங்குவதற்கு அநுகூலமாய் இருப்பதைக் காண்பதோடே கிறிஸ்தமார்க்கச் சத்தியம் வரவர விர்த்தியடைந்ததையும் நிருபங்களுக்கு ஒன்றுக்கொன்று இருக்கிற சம்பந்தத்தையும் நிருபங்களுக்கும் அப்போஸ்தலர் நடபடிக்கும் இருக்கிற ஐக்கியத்தையும் அறியலாம். ஆதலால் இங்ஙனம் நிருபங்கள் எழுதப்பட்ட காலக்கிரமப்படி பார்ப்போமாக.

## 1. தெசலோனிக்கேயருக்கு எழுதப்பட்ட முதலாம் நிருபம்.

1. நம்முடைய வசம் இருக்கிற பவுல் அப்போஸ்தலன் நிருபங்களில் தெசலோனிக்கேயருக்கு எழுதப்பட்ட முதலாம் நிருபம் முதலாவதாக எழுதப்பட்டது. பவுல் அப்போஸ்தலன் குணப்பட்ட சில வருஷங்களுக்குப்பின்பு அவனுடைய இரண்டாம் பிரயாணத்தில் இது எழுதப்பட்டது. அவன் இரண்டாம் பிரயாணத்தில் முதல்தடவையாக தெசலோனிக்கே பட்டணத்துக்குப்போய் அங்கே சுவிசேஷத்தைப் பிரசங்கித்தான்.[1] எனென்றால் இந்தப் பிரயாணத்தில்

[1] அப். 17. 1–10.

சீலா என்பவன்மாத்திரம் அவனோடே கூடப்போய் அவனோடே இருந்ததாக வாசிக்கிறோம்.[1] பின்பு சீலாவும் தீமோத்தேயும் மக்கெதோனியாவிலிருந்து அத்தேனே பட்டணத்துக்கு[2] வந்து பவுலைச் சேர்ந்துகொண்டு தெசலோனிக்கே சபையின் காரியங்களை அவனுக்கு அறிவித்தார்கள். பவுல் அந்தப் பட்டணத்தைவிட்டு கொரிந்துவுக்கு வந்தான். அங்கேயிருந்து இந்த நிருபத்தை ஏறக்குறைய கி. பி. 53 எழுதினான்.[3]

2. இந்நிருபம் எழுதப்பட்ட நோக்கம் இதிலேயே காட்டப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலன் தன்னுடைய இரண்டாம் பிரயாணத்தில் பிலிப்பி பட்டணத்தைவிட்டுத் துரத்தப்பட்டபோது அம்பிப்போலி அப்பலோனியா பட்டணங்கள் வழியாய் தெசலோனிக்கே பட்டணத்துக்குச் சென்றுதன் வழக்கத்தின்படியே யூதருடைய ஜெபஆலயத்துக்குப்போய் மூன்று ஓய்வுநாட்களில் வேதவாக்கியங்களின் நியாயங்களை எடுத்துக் காட்டி அவர்களோடே சம்பாஷித்தான். அவன் ஓய்வுநாளில் மாத்திரம் அல்ல, மற்ற நாட்களிலும், ஜெபஆலயத்தில்மாத்திரம் அல்ல, மற்ற இடங்களிலும் பிரசங்கித்துவந்தான். அவன் புறஜாதியாருக்குச் சுவிசேஷத்தை அறிவித்து அவர்களில் அநேகரைக் குணப்படுத்தினான்.[4] அப்பால் அவிசுவாசிகளான யூதர்களால் கலகம் மூட்டப்பட்டதால் ராத்திரியிலே பெரேயா ஊருக்கு அனுப்பப்பட்டான்.[5] ஆதலால் அவன் தெசலோனிக்கேயில் சொற்பக் காலம் மாத்திரம் இருக்கும்படி நேரிட்டது. மறுபடியும் அந்தச் சபையைச் சந்திக்கும்படி இரண்டொருதரம் விரும்பினாலும் அவனுக்குத் தடை உண்டாயிற்று. இதைவிட்டு அவன் தீமோத்தேயுவையும் சீலாவையும் தெசலோனிக்கேக்கு அனுப்பி சபையின் நிலைமையை விசாரித்துத் தனக்குச் செய்திகொண்டுவரும்படி திட்டம்செய்தான். அவர்

[1] 1 தெச. 1. 1. அப். 15. 40; 16. 19, 25, 29; 17. 4, 10, 14, 15; 18. 5.

[2] 1 தெச. 3. 1௨. அப். 17. 15, 16. ஒத்துப்பார்க்க.

[3] 1 தெச. 3. 1–6௨. அப். 18. 1–5யோடு ஒத்துப்பார்க்க. தெசலோனிக்கே பட்டணத்தின் பூர்வபேர் தெர்மி; தற்காலப்பேர் சலொனிக்கி. அது அப்போஸ்தலருடைய காலத்தில் ஐசுவரியம் உள்ள பெரிய பட்டணமாயும் மக்கெதோனியா தேசத்தின் இரண்டாம் நாட்டிற்குப் பிரதான நகரியாயும் இருந்தது. தற்காலத்தில் ஐரோப்பா துருக்கி தேசத்தில் கொன்ஸ்தாந்திநோப்பில் பட்டணத்துக்கு அடுத்த பெரிய பட்டணமாய் இருக்கிறது.

[4] 1 தெச. 1. 9; 2. 14, 16. [5] அப். 17. 10.



கள் அந்தச் சபையின் செய்தியை அவன் கொரிந்துவில் இருக்கையில் வந்து அறிவித்தார்கள்.[1]

3. அந்தச் சபையைப்பற்றி அவர்கள் அறிவித்த செய்தி முழுவதும் க்ஷேமமாய் இருக்கவில்லை. தெசலோனிக்கே கிறிஸ்தவர்கள் சபையில் உறுதியாய் நிலைத்திருந்ததற்காக பவுல் மனசந்தோஷமுள்ளவனாய் இருந்தபோதிலும் அவர்களுக்குள் உண்டாயிருந்த இரண்டொரு குற்றங்களைவிட்டு மனஸ்தாபப்பட்டான். அப்போஸ்தலன் அவர்கள் நடுவில் இருந்த காலத்தில் கிறிஸ்துவின் வருகையைப்பற்றி ஊக்கத்தோடே பிரசங்கித்ததால், அவர்கள் அவர் உடனே வருவார் என்று எண்ணி அந்தக் காலத்துக்குமுன்னே மரிப்பவர்கள் அதின் மகிமையையும் சந்தோஷத்தையும் அநுபவியாமல்போவார்களே என்று அச்சமுற்றுக் கலங்கி இருந்தார்கள்.[2] சிலர் கர்த்தருடைய நாள் சீக்கிரமாய் வருகிறது என்ற எண்ணத்தினாலே நாடோடிய வேலைகளையும் செய்யாதபடிக்கு விட்டுவிட்டார்கள்.[3] சிலர் பிந்தியகாலத்தில் கொரிந்துசபையார் செய்தது போல தீர்க்கதரிசன (போதிக்கிற) வரங்களை அசட்டைசெய்து வெளியரங்கமாய்ப் பாராட்டுவதற்கேற்ற வரங்களை நாடினார்கள். இந்தக் குற்றங்களை அவர்களைவிட்டு அகற்றும்படியாக அப்போஸ்தலன் இந்த நிருபத்தை எழுதினான். அது அந்தச் சபைக்குமாத்திரம் அல்ல, உலகத்திலுள்ள சபை எல்லாவற்றிற்கும் எக்காலத்துக்கும் பிரயோஜனமுள்ளதாய் இருக்கிறது.

4. இந்த நிருபத்தை ஐந்து பங்காக வகுக்கலாம்.

I. அப்போஸ்தலன் தேவன் தெசலோனிக்கே சபைக்குப் பாராட்டின கிருபையை எடுத்துக்காட்டி ஆரம்பத்தில் சுவிசேஷம் அவர்களுக்குப் போதிக்கப்பட்ட வகையைக்குறித்துப் பேசியிருக்கிறான். (i, ii. 16.)

II. தான் அவர்களைப் பார்க்க விரும்பினதையும் அவர்கள்மேல் தனக்கு இருந்த அவாவையும்பற்றிச் சொல்லுகிறான். (ii. 17–iii.)

III. அவர்கள் பரிசுத்தத்திலும் சகோதர சிநேகத்திலும் சுறுசுறுப்பிலும் செழித்தோங்கும்படி புத்திசொல்லுகிறான். (iv. 1–12.)

[1] 1 தெச. 2. 17; 3. 5, 6. [2] 1 தெச. 4. 13–18.

[3] 1 தெச. 4. 11, 12.

IV. விசுவாசிகளாய் மரித்துப்போனவர்களுக்காக மிதமிஞ்சி துக்கப்படாதபடி எச்சரித்து கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப்பற்றி எடுத்துக் காட்டுகிறான். (iv. 13–v. 11.)

V. மற்பல புத்திமதிகளும் போதனைகளும் சொல்லி நிருபத்தை முடிக்கிறான். (v. 12–28.)

### தெசலோனிக்கேயர் முதல் நிருபத்தில் குறிப்பிக்கப்பட்டிருக்கிற வாக்கியங்கள்.

அதி. 4. 15, 16. 1 கொரி. 15. 51, 52. | அதி. 5. 8. ஏசா. 59. 17.

## 2. தெசலோனிக்கேயருக்கு எழுதப்பட்ட இரண்டாம் நிருபம்.

1. முதலாம் நிருபம் எழுதப்பட்ட சில மாதங்களுக்குப் பின்பு இரண்டாம் நிருபத்தை எழுதும்படியான அவசியம் நேரிட்டது. அப்போஸ்தலன் அப்போது கொரிந்துவிலேயே சீலா தீமோத்தேயு என்பவர்களோடேகூட இருந்தான் என்று தோன்றுகிறது. தெசலோனிக்கேயாவில் சிலர் கர்த்தருடைய வருகை உடனே சம்பவிக்கும் என்று மிகவும் பாராட்டிப் பேசினதால் சபையிலே உலைவினான எண்ணங்கள் உண்டாகி நாடோடிய வேலைகளைச் செய்யாமல் ஒழுங்கற்றுத் திரிந்தார்கள். இந்தச் செய்தியை அப்போஸ்தலன் கேள்விப்பட்டு அந்தச் சபையின்மேல் கவலைகொண்டதோடே விசனமாயும் இருந்து, தான் அவர்கள் நடுவில் இருந்தபோது கர்த்தருடைய நாள் வருமுன்னே சில காரியங்கள் சம்பவிக்கும் என்று அவர்களுக்குச் சொன்னதை நினைப்பூட்டி[1] தன்னுடைய போதனைக்குச் செவிகொடாதவர்களைக் குறித்துக்கொண்டு அவர்களோடே கலவாதிருக்கும்படி கட்டளையிட்டு, அமைதலோடே வேலைசெய்து தங்கள் சொந்த போஜனத்தைச் சாப்பிடவும் நன்மை செய்வதில் இளைப்படையாதிருக்கவும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை முன்னிட்டு புத்தி சொல்லுகிறான்.[2]

2. இந்த நிருபத்தை முகவுரை முடிவுரை நீக்கி மூன்று பங்காக வகுக்கலாம்.

I. தெசலோனிக்கேயருக்காக அப்போஸ்தலன் செய்த ஸ்தோத்திரமும் ஜெபமும். (i. 3–12.)

[1] 2 தெச. 3. 10, 11. [2] 2 தெச. 3. 6–15.



II. நியாயத்தீர்ப்பு நாளைப்பற்றி அவர்களுக்கு இருந்த தப்பான கொள்கையை நீக்கி பாவ மனிதனைப்பற்றி போதனைசெய்தது. (ii.)

III. கிறிஸ்தவர்களுக்குரிய உறுதி, ஜெபம் முதலிய சன்மார்க்க ஒழுக்கங்களைப்பற்றிய போதனை. (iii. 1–15.)

3. இந்த நிருபத்தில் காட்டப்பட்டிருக்கிற மிக விசேஷித்த காரியம் "பாவமனிதன்" "கேட்டின் மகன்" "அக்கிரமத்தின் ரகசியம்", என்பதைப்பற்றிய தீர்க்கதரிசனமே. இது பாப்பு மார்க்கத்தைக் குறிக்கும் என்று அநேகர் எண்ணுகிறார்கள். இந்தத் தீர்க்கதரிசனத்துக்கும் தானியேலில் சொல்லப்பட்டிருக்கிற "சிறிய கொம்பைப்" பற்றிய தீர்க்கதரிசனத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கிறது.[1]

### தெசலோனிக்கேயர் இரண்டாம் நிருபத்தில் வருகிற ஒத்தவாக்கியங்கள்.

| | | | |
|---|---|---|---|
| அதி. 2. 3. | தானி. 7. 25. | அதி. 2. 9. | உபா. 13. 2. வெளி. 19. 20. |
| ,, ,, 4. | தானி. 11. 36. எசே. 28. 2. | ,, ,, 12. | 1 இரா. 22. 22. |
| ,, ,, 8. | தானி. 7. 10, 11. | | |

[1] தானியேலில் காட்டியபடி, "சிறிய கொம்பு" ரோமராஜ்யம் பிரிபடுமுன் எழும்பவில்லை. பவுல் சொன்னபடி "அதைத் தடைசெய்கிற" ரோமராஜ்யம் நீக்கப்படுமுன் அது வெளிப்படுகிறதில்லை. (2. 7.) தானியேலில் அவன் பரிசுத்தவான்களை ஒடுக்குவான் என்றும் இங்கே எதிர்ப்பான் என்றும், தானியேலில் "எந்த தேவனிலும் தன்னைப் பெரியவனாக்குவான்" என்றும் இங்கே தேவன் என்னப்படுவது எதுவோ, அது அவை எல்லாவற்றிற்கும் தன்னை மேலாக உயர்த்துகிறவன் என்றும், தானியேலில் அவன் "காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்" என்றும், இங்கே அக்கிரமக்காரன் அதாவது கிரேக்கில் சொல்லியிருக்கிறபடி நீதிமுறை இல்லாதவன் என்றும், தானியேலில் அவன் தன் உபாயத்தினால் வஞ்சகத்தைக் கைகூடிவரப்பண்ணுவான் என்றும், இங்கே அவன் வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும் இருக்கும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. தானியேல் அநேக வருஷங்களுக்குமுன்னே இந்த அக்கிரமக்காரன் எழும்புவான் என்று முன் உரைத்ததைப்பற்றி பவுல் சில காரியங்களைமாத்திரம் கூட்டிக்கூட்டி அறிவித்திருக்கிறான். யோவான் அவனைப்பற்றி சற்று விஸ்தாரமாய்ச் சொல்லியிருக்கிறான். சிலர் இந்தத் தீர்க்கதரிசனம் இனிமேல் நிறைவேறும் என்று அபிப்பிராயப்படுகிறார்கள்.

## 3. கலாத்தியருக்கு எழுதப்பட்ட நிருபம்.

1. இந்த நிருபம் கி. பி. 56. எபேசிலாவது அல்லது கி. பி. 57. கொரிந்துவிலாவது இருந்து எழுதப்பட்டிருக்கவேண்டும். அப்போஸ்தலன் கொரிந்துவில் ஒன்றரை வருஷம் இருந்தான். பின்பு ஐரோப்பாவில் இருந்து பிரயாணஞ்செய்து எருசலேமுக்கும் அந்தியோகியாவுக்கும் போனான். அப்பால் சீக்கிரத்துக்குள்ளாக கலாத்தியா[1] வழியாய் எபேசுவுக்கு வந்தான். கலாத்தியாவை இதற்கு முந்தியும் சந்தித்திருந்தான்.[2] அப்போது அவன் சரீரப் பெலவீனத்தினால் வருத்தப்பட்டபோதிலும் கலாத்தியர் அவனை தேவதூதனைப்போலவும் கிறிஸ்து இயேசுவைப்போலவும் மிகவும் பிரியமாய் அங்கீகரித்துக்கொண்டார்கள். அவ்வளவு ஆனந்தத்தோடே அவனை ஏற்றுக்கொண்டதற்கு அத்தாட்சியாக, "உங்கள் கண்களைப் பிடுங்கி எனக்குக் கொடுக்கக்கூடுமானால் அப்படியும் செய்திருப்பீர்கள்" என்று அப்போஸ்தலன் அவர்களைக்குறித்துச் சொல்லியிருக்கிறான்.[3] ஆனால் அவர்களுடைய அன்பு சீக்கிரத்துக்குள்ளாகக் குறைந்து போயிற்று. யூதர்களான சில கள்ளப்போதகமார் வந்து, அப்போஸ்தலர் நடபடியில் சொல்லிய தப்பறைக்கு இசைவாக கலாத்தியரைப் பார்த்து: "நீங்கள் மோசேயினுடைய முறைமையின்படியே விருத்தசேதனம் அடையாவிட்டால் இரட்சிக்கப்படமாட்டீர்கள்" என்று போதித்தார்கள். இந்தப் போதகத்தி

[1] அப். 18. 23. கலாத்தியா சின்ன ஆசியாவின் மத்தியிலுள்ள ஒரு நாடு. கி. மு. 280. காலியர் என்ற ஜாதியார் அங்கே போய்க் குடியேறி தங்கள் ஜாதிப்பேரை அதற்கு இட்டார்கள். பிந்திய காலத்தில் கிரேக்கர் அங்கே போய் வாசம்பண்ணி அந்த ஜனங்களோடே கலந்து போனதைவிட்டு அந்நாட்டுக்கு காலோகிரேக்கை என்ற பேர் உண்டாயிற்று. கி. மு. 189. அது ரோமருடைய அதிகாரத்துக்குட்பட்டது. கி. மு. 26. அது ரோமருடைய நாடாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டது. அதின் குடிகள் அவ்வளவாய் நாகரீகத்தில் தேறினவர்கள் அல்ல. அவர்கள் செய்துவந்த விக்கிரகஆராதனை மெத்த இளமுன்னதாய் இருக்கிறது.

[2] அப். 16. 6.

[3] கலா. 4. 13–15. இதினால் பவுல் அப்போஸ்தலன் கண் வியாதியுள்ளவனாய் இருந்தான் என்று தோன்றுகிறது. 2 கொரி. 12. 7. "மாம்சத்தில் ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று சொல்லியிருப்பது இந்த வியாதியைக்குறிக்கும் என்கலாம். மேலும் பவுல் நிருபங்களைத் தன் கையினால் எழுதாமல் தான் சொல்ல மற்றவர்களைக் கொண்டு எழுதினதும் இது முகாந்தரத்தினால் இருக்கலாம்.



னாலே கலாத்தியருக்கு அப்போஸ்தலன்மேல் இருந்த பாசம் குறைவடைந்தது. மேலும் அந்தக் கள்ளப்போதகமாரில் சிலர் பவுலின் அப்போஸ்தல பட்டத்தைப்பற்றி ஆட்சேபித்து அவன் எருசலேமிலுள்ள பேதுரு முதலான அப்போஸ்தலருக்குத் தாழ்ந்தவன் என்றும் தாங்கள் அந்த அப்போஸ்தலமாரால் அதிகாரம் பெற்றுக்கொண்டவர்கள் என்றும் பாராட்டினார்கள். ஆதலால் அப்போஸ்தலன் கலாத்தியரை இரண்டாந்தரம் சந்தித்தபோது, தான் "கிறிஸ்துவினால் நேராய்த் தெரிந்துகொள்ளப்பட்ட அப்போஸ்தலன்" என்ற சத்தியத்தை அவர்களுக்கு உணர்த்தினான். அவன் அவர்கள் நடுவில் இருந்தவரையும் அது பலிதப்பட, அவர்கள் சிக்குண்டிருந்த சிறுமையான வழிப்பாடுகளைத் தள்ளினார்கள். ஆனால் அவன் அவர்களை விட்டுப்போன உடனே அந்தக் கள்ளப்போதகமார் மறுபடியும் மும்முரம்கொண்டு கலாத்தியரை வசப்படுத்திக்கொண்டார்கள். அப்போஸ்தலன் இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டபோது மறுபடியும் அவர்களிடத்துக்குப் போகவிரும்பினான். ஆனால் அது கூடாதிருந்ததால் இந்நிருபத்தை அவர்களுக்கு எழுதினான். இதிலே கள்ளப்போதகமார்பேரில் கொடிய சாபத்தைக் கூறி நிலையற்ற கலாத்தியருக்கு மிகுந்த உருக்கத்தோடும் பட்சத்தோடும் புத்திசொல்லுகிறான். அவன் தன்னுடைய அப்போஸ்தலப் பட்டத்தைக்குறித்து மிகவும் பலமாய் ரூபித்து, கள்ளப்போதகருடைய போதனை சுவிசேஷத்துக்கு விரோதம் என்று காட்டி சபையாரைப் பார்த்து கிறிஸ்து உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருக்கும்படி புத்தி சொல்லுகிறான்.[1]

2. இந்நிருபத்தை மூன்று பங்காக வகுக்கலாம்.

I. பவுல் தான் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாக தேவனால் அழைக்கப்பட்டு அதிகாரம் பெற்றுக்கொண்டதை ரூபிக்கிறான். (i, ii.)

II. "நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் அல்ல, விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படலாம்" என்ற தன்னுடைய தாட்டாந்தத்தை உறுதிப்படுத்துகிறான். (iii, iv.)

III. கலாத்தியர் நடந்துகொள்ளவேண்டியதற்கு ஆலோசனைகளான புத்திமதிகளைச் சொல்லி தான் முன் சொல்லியிருக்கிறவைகளைத் தொகுத்துரைக்கிறான். (v, vi.)

[1] கலா. 5. 1.

3. இந்நிருபத்தின் காரியநிச்சயத்தைப்பற்றி ஒருகாலத்திலும் ஆட்சேபனை சொல்லப்படவில்லை. இதில் கலாத்தியாச் சபைகளுக்கு என்று பன்மையாகச் சொல்லப்பட்டிருப்பதால் அந்த நாட்டிலுள்ள சபைகள் எல்லாராலும் வெளியரங்கமாய் வாசிக்கப்படுவதற்கென்று எழுதப்பட்டது என்றறியலாம். இந்நிருபம் அதிக விசேஷித்ததென்று காட்டும்படி அப்போஸ்தலன் தன் வழக்கத்துக்கு விரோதமாய்த் தன் சொந்தக் கையினாலே இதை எழுதி அனுப்பினான்.[1]

### கலாத்திய நிருபத்தில் வருகிற ஒத்தவாக்கியங்கள்.

| | | | |
|---|---|---|---|
| அதி. 3. 6 | ஆதி. 15. 6. | அதி. 3. 16. | ஆதி. 12. 3-7; 17. 7; 22. 18. |
| ,, ,, 8. | ,, 12. 3; 18. 17. | ,, 4. 24. | உபா. 33. 2. |
| ,, ,, 10. | உபா. 27. 26. | ,, ,, 27. | ஏசா. 54. 1. |
| ,, ,, 11, 12. | ஆப. 2. 4. லேவி. 18. 5. | ,, ,, 30. | ஆதி. 21. 10–12. |
| ,, ,, 13. | உபா. 21. 23. | ,, 5. 14. | லேவி. 19. 18. |

## 4. கொரிந்தியருக்கு எழுதப்பட்ட முதலாம் நிருபம்.

1. அப்போஸ்தலன் கலாத்தியாவில் உள்ள சபைகளின் நிலைமையைப்பற்றி கவலையுள்ளவனாய் இருந்தபோது கொரிந்து[2] சபையைக்குறித்து வந்த சமாசாரத்தினால் அவன் மனதின் துக்கம் மிகவும் அதிகரித்தது. பவுல் தன் இரண்டாம் பிரயாணத்தில் கொரிந்துவுக்குப்போய்ச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து அதிகமான பலனைப் பெற்றிருந்தான். பின்பு சீலா தீமோத்தேயு என்பவர்களுடைய உதவியைக்கொண்டு அங்கே முந்தி யூதருக்குள்ளும் பிந்தி புறஜாதியாருக்குள்ளும் ஒன்றரை வருஷமாய் உழைத்தான். துவக்கத்தில் அவ்வளவாய்ச் சித்தி பெறாததால் அதைரியப்பட்டான். ஆனால் தேவன் அவனுக்குத் தரிசனம் அருளி அவனைப் பலப்படுத்தவே அவன் வெகு பலத்தோடே சுவிசேஷத்தை அறிவித்துவந்தான். அவன் அப்பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டபின்பு அப்பொல்லோஸ் என்பவன் அங்கே போய் வெகு சிரத்தையோடே திவ்விய ஊழியத்தை நடப்பித்தான். சபை செழித்தோங்கவே அங்கே போதகமார் ஏற்படுத்தப்பட்டார்கள். கிருபையின் எத்தனங்களும் ஒழுங்காய் ஆசரிக்கப்பட்டு வந்தன.

2. மேன் மேலும் கீர்த்தியாய்ச் செழித்து ஓங்கிவந்த சபையைப்பற்றி பவுல் அப்போது கேள்விப்பட்ட சங்கதிகள் அவன் மனதுக்கு நோவை உண்டுபண்ணிற்று. குலோவேயாளின் வீட்டார் அந்தச் சபையில் "வாக்குவாதங்கள்" உண்டாய் இருந்ததாக அப்போஸ்தலனுக்கு அறிவித்தார்கள். பவுல் கொரிந்துவைவிட்டுப் புறப்பட்ட உடனே கள்ளப்போதகர் அந்தச் சபையில் நுழைந்து சபையின் சமாதானத்துக்குக் கெடுதல் உண்டுபண்ணினார்கள். அவர்கள் தங்களை மகா சாதுரியவான்கள்போலக் காட்டி அப்போஸ்தலனுடைய பணிவிடையின் மேன்மையைக் கெடுத்து அவன் அதிகாரத்துக்குக் குறை உண்டாக்கப் பார்த்தார்கள். அதால் இருகட்சி உண்டாயிற்று. ஒரு பட்சத்தார் யூதருடைய சடங்கு ஆசாரங்களைக் கைக்கொள்ள வேண்டும் என்றும் பலமாய்ப் போராடினார்கள். மறுபட்சத்தார் கிறிஸ்தவ சுயாதீனத்தின் சரியான தன்மையைச் சரியானபடி அறியாமல் சுவிசேஷத்தின் தன்மைக்கும் நோக்கத்துக்கும் விரோதமாய் மிதமிஞ்சிய வகையாய் நடந்தார்கள். ஒரு கட்சிக்காரர் தாங்கள் பவுலைச் சேர்ந்தவர்கள் என்றும், இன்னொரு வகையார், தாங்கள் அப்பொல்லோவைச் சேர்ந்தவர்கள் என்றும், இன்னொரு வகையார், தாங்கள் கேபாவைச் சேர்ந்தவர்கள் என்றும், வேறொரு வகையார், தாங்கள் கிறிஸ்துவைச் சேர்ந்தவர்கள் என்றும் மேன்மை பாராட்டினார்கள்.[1] இதுவும் அல்லாமல் கிறிஸ்தவர்களான யூதர்கள் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைப் புசிப்பது நியாயம் அல்ல என்று சொல்லியும்

[1] கலா. 6. 11.

[2] கொரிந்து கிரேக்க தேசத்தின் தென்பாகத்தில் இருந்த ஒரு பெரிய பட்டணம். அது பெலப்பொனிசைக்கும் வடகிரேக்கக்குக்கும் இடையே இருக்கிற பூசந்தியில் இருந்ததால் அயோனியன் கடலோரத்திலும் எகியோன் கடலோரத்திலும் இருந்த அதின் இரண்டு கடல் துறைப்பட்டணங்களிலிருந்தும் ஆசியாவின் வியாபாரங்களும் இத்தாலி முதலிய மேற்குத் தேசவியாபாரங்களும் அதற்கு வந்துகொண்டிருந்தன. அதின் கட்டிடங்கள் மிகுந்த அலங்காரமுள்ளவைகளாயும் இருந்தன. 9. அதி. 24–27. சொல்லப்பட்டிருக்கிற விளையாட்டுகள் இந்தப் பட்டணத்திற்குச் சமீபமாய் பிரபல்லியமாய் நடந்து வந்தன. இந்தப் பட்டணம் ஐசுவரியத்துக்கும் செல்வத்துக்கும் பேர்போனதாய் இருந்ததுபோல துன்மார்க்கத்துக்கும் வெறித்தனத்துக்கும் பேர்போனதாய் இருந்தது. இந்தப் பட்டணத்தின் வீனஸ் (வெள்ளி) என்ற விக்கிரகம் வணங்கப்பட்டு வந்தது.



[1] 1 கொரி. 1. 12.

கிறிஸ்தவர்களான புறஜாதியார் அப்படிப்பட்டவைகளைப் புசித்துவந்தார்கள்.[1] இவர்களில் சிலர் தாங்கள் அஞ்ஞானிகளாய் இருந்தபோது நடப்பித்துவந்த காமவிகாரங்களையும் செய்து வந்தார்கள். ஒருவன் தன் தகப்பனுடைய மனைவியையுங் கூட வைத்துக்கொண்டிருந்தான்.[2] சிலர் கலைஞானத்துக்குரிய எண்ணங்கள் அபிப்பிராயங்களைக்கொண்டு மரித்தோரின் உயிர்த்தெழுதல் இருக்கமாட்டாதென்று சாதித்தார்கள்.[3] சிலர் கர்த்தருடைய இராப்போசனத்தைத் தகாதவிதமாய் ஆசரித்து வந்தார்கள்.[4] ஆவிக்குரிய வரங்களைப் பெற்றவர்கள் சரியானபடி அவைகளைப் பிரயோகியாமல் பெருமைத்தனமாய் நடந்துகொண்டார்கள்.[5] ஸ்திரீகள் தங்கள் குலத்துக்குரிய நாணத்தை மறந்து பழக்கத்துக்கும் யோக்கியத்துக்கும் எதிரிடையாக சபையில் முன்னிற்கும்படியாக அபேட்சித்தார்கள்[6]. சிலர் சபையைச்சேர்ந்த தங்கள் சகோதரரைக் குற்றவிசாரணைக்காக சபைக்குமுன்பாகக் கொண்டுபோவதற்குப் பதிலாக அஞ்ஞான அதிகாரிகளுக்கு முன்பாக இழுத்துக்கொண்டுபோனார்கள்.[7] விரத்துவத்தையும் விவாகத்தையும்பற்றி பலத்த விவாதங்களும் அவர்களுக்கு எழும்பி இருந்தன.[8]

3. அப்போஸ்தலன் இந்தக் காரியங்களைப்பற்றி குலோவேயா வீட்டாராலும் கொரிந்துசபையில் உள்ள சிலராலும் கேள்விப்பட்டிருந்தான். பவுல் எபேசுவில் இருக்கையில்தானே கொரிந்துசபையிலிருந்து ஒரு நிருபமும் அவனுக்கு வந்தது. அதிலே அவர்கள் அவனுடைய கட்டளைகளுக்குக்கீழ் அமைந்து நடந்துவருவதாய்க் காட்டி[9] தங்களுக்குள்ளே தர்க்கமாய் இருக்கப்பட்ட அநேக காரியங்களுக்கு ஆலோசனை கேட்டு இருந்தார்கள். அதற்குள்ளாக அப்போஸ்தலன் தீமோத்தேயுவை மக்கெதோனியாவிலிருந்து கொரிந்துவுக்குப் போகும்படி செய்து, தன்னுடைய போதனைகளையும் நடக்கையையும் சபையாருக்கு நினைப்பூட்டும்படிக்கும்[10] தான் மக்கெதோனியாவுக்குப் போகிற வழியில் சீக்கிரத்துக்குள்ளாக அவர்களைக் கண்டு சந்திப்பதைத் தெரிவிக்கும்படிக்கும் திட்டம்பண்ணி இருந்தான். ஆனால் அவன் கேள்விப்பட்ட துக்கமான சமாசாரங்களி

[1] 1 கொரி. 8. 4-13; 10. 14-23.
[2] 1 கொரி. 5. 1.
[3] 1 கொரி. 15. 12.
[4] 1 கொரி. 11. 20, 21.
[5] 1 கொரி. 14. 26.
[6] 1 கொரி. 14. 34.
[7] 1 கொரி. 6. 1–8.
[8] 1 கொரி. 7. 1, ௳.
[9] 1 கொரி. 11. 2.
[10] 1 கொரி. 4. 17.



னால் கொரிந்துவுக்குப் போகத் தடைப்பட்டு[1] இந்த நிருபத்தை எழுதலானான்.

4. இவ்விஷயங்களைப்பற்றி அவன் எழுதின நிருபம் பெரிய நிருபங்களில் ஒன்றாய் இருக்கிறது. அதை மூன்று பங்காக வகுக்கலாம்.

I. முகவுரை. இதில் சபையாரை வாழ்த்தி அவர்களுக்கு அருளப்பட்ட வரங்களுக்காகச் சந்தோஷத்தைக் காட்டுகிறான். (i. 1–9.)

II. சபையின் காரியாதிகளுக்குத் தக்கதாகப் பற்பல விஷயங்களைப்பற்றி நியாயம் சொல்லுகிறான். இதிலே சபைக்குள் இருந்த தாறுமாறுகளையும் குற்றங்களையும் கண்டித்து அவர்கள் கேட்டிருந்த கேள்விகளுக்கு மாறுத்தரம் காட்டியிருக்கிறான். (i. 10–xv.)

III. முடிவுரை. இதிலே எருசலேமில் உள்ள பரிசுத்தவான்களுக்காகச் சேகரிக்கவேண்டிய தர்மத்தைக்குறித்து சில காரியங்களைச் சொல்லி, சபையில் உள்ள பற்பல பேருக்கு வாழ்த்துதல் எழுதியிருக்கிறான். (xvi.)

5. இந்நிருபத்தின் உண்மை ஒருகாலத்திலும் ஆட்சேபிக்கப்படவில்லை. ஆனால் பவுல் கொரிந்துசபைக்கு இன்னொரு நிருபம் எழுதினானோ என்று ஒரு விசேஷித்த கேள்வி கேட்கப்படவேண்டும். 1 கொரி. 5. 9. காட்டியதை வைத்துக்கொண்டு, சிலர் அவன் முன் ஒரு நிருபத்தை எழுதியிருக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அந்த எண்ணம் சரியாய் இருந்தாலும் அதைப்பற்றி நாம் ஆச்சரியப்படவேண்டியது இல்லை. தேவனுடைய சபைக்கு என்றென்றைக்கும் வழிகாட்டியாய் இருக்கத்தக்கதான சாதனங்களில் சேர்க்கப்படக்கூடாத வேறே புஸ்தகங்கள் எழுதப்பட்டும் இருக்கலாமே. அப்படிப்பட்ட ஆகமங்களை வேதபுஸ்தகத்தோடே சேர்க்க கர்த்தர் சித்தம்கொள்ளவில்லை.

## கொரிந்தியர் முதலாம் நிருபத்தில் குறிக்கப்பட்டிருக்கிற ஒத்தவாக்கியங்கள்.

| | | | |
|---|---|---|---|
| அதி. 1. 19. | ஏசா. 2[illegible] | அதி. 2. 9. | ஏசா. 64. 4. |
| ,, ,, 20. | ,, 44. 25. | ,, ,, 16. | ,, [illegible] |
| ,, ,, 30. | எரே. 9. 23, 24. | ,, 3. 11. | ,, 28. 16. |

[1] 1 கொரி. 16. 5, 7.

| | | | |
|---|---|---|---|
| அதி. 3. 19. | யோபு, 5. 13. | அதி. 10. 9. | எண். 21. 6, 9. |
| ,, ,, 20. | சங். 94. 11. | ,, ,, 10. | ,, 14. 2–29; 16. 49. |
| ,, 6. 2. | தானி. 7. 22. | ,, ,, 18. | லேவி. 2. 3; 7. 14. |
| ,, ,, 16. | ஆதி. 2. 24. | ,, ,, 20. | உபா. 32. 17. |
| ,, 9. 7. | உபா. 20. 6. | ,, ,, 26. | சங். 24. 1. |
| ,, ,, 9. | ,, 25. 4. | ,, 14. 21. | ஏசா. 28. 11, 12. |
| ,, 10. 1. | யாத். 13. 21; 14. 22. சங். 105. 39. | ,, 15. 25. | சங். 110. 1. |
| ,, ,, 3. | யாத். 16. 15–35. | ,, ,, 27. | ,, 8. 6. |
| ,, ,, 4. | ,, 17. 6. | ,, ,, 32. | ஏசா. 22. 13. |
| ,, ,, 5. | எண். 14. 29, 32. | ,, ,, 45. | ஆதி. 2. 7. |
| ,, ,, 6. | ,, 11. 4–34. | ,, ,, 54. | ஏசா. 25. 8. |
| ,, ,, 7. | யாத். 32. 6. | ,, ,, 55. | ஓசி. 13. 14. |
| ,, ,, 8. | எண். 25. 1–9. | | |

## 5. கொரிந்தியருக்கு எழுதப்பட்ட இரண்டாம் நிருபம்.

1. கொரிந்து சபையார் எழுதின நிருபத்தை அப்போஸ்தலனுக்குக் கொண்டுவந்த ஸ்தேவான் முதலியவர்களுடைய கையில் கொரிந்தியருக்கு எழுதப்பட்ட முதல் நிருபம் கொடுத்து அனுப்பப்பட்டது. அந்த நிருபத்திலே சபையார் கேட்டிருந்த கேள்விகளுக்கு பவுல் உத்தரவு எழுதியிருந்தான். அவர்கள் போன சற்றுக் காலத்துக்குப்பின்பு தன்னுடைய நிருபத்தினால் விளைந்த பயன் இன்னதென்பதை அறியும்படி அப்போஸ்தலன் தீத்துவை அனுப்பி தான் இன்னும் சிலகாலம் எபேசுவில் பின்னிட மனதாய் இருந்தான்.[1] அங்கே அவனுடைய போதகத்தினால் திரளானபேர் சபையில் சேர்ந்துகொண்டார்கள்.[2] அதினால் விக்கிரகத் தொழிலாளிகளுடைய ஆதாயம் அற்றுப்போக ஏதுவாய் இருந்ததால் பெரிய கலகம் உண்டாயிற்று. ஆதலால் அப்போஸ்தலன் எபேசுவைவிட்டு துரோவாவுக்குப் போகும்படி ஏதுவாயிற்று. அங்கே தீத்துவைச் சந்திக்கலாம் என்று எண்ணியிருந்தான். ஆனால் அந்த நம்பிக்கை அவமாய்ப்போயிற்று. அவன் துரோவாவிலே இருந்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வந்தபோது கொரிந்துசபையை இட்டு அதிகமான கவ[illegible]ல் மக்கெதோனியாவுக்கு அதாவது பிலிப்பிபட்டணத்துக்குப் போனான். தீத்து அந்த வழியாகவே பவுலினிடத்துக்கு வரவேண்டியதாய் இருந்தது.

[1] 1 கொரி. 16. 8. [2] அப். 19. ; அதி. 22–20. அதி. 4.



2. பவுல் மக்கெதோனியாவிலே தன் ஆவியில் அமைதல் இல்லாதிருக்கையில் தான் தேடினாய் விரும்பின செய்தியை அறிந்து[1] சந்தோஷப்பட்டான். சபையில் உள்ள மிக்கமான[illegible]பேர்கள் தங்கள் பாவங்களுக்காக மிகவும் துக்கப்பட்டு அப்போஸ்தலனுடைய கட்டளைகளுக்குக் கீழ் அமைந்து அவன் [illegible]க்கு அதிகமான பாசத்தைக் காட்டி அவனை இன்னொரு தரம் பார்க்கும்படி ஆசைப்பட்டுக்கொண்டார்கள்.[2] இப்படிப்பட்ட காரியங்கள் மெத்த சந்தோஷகரமாய் இருந்தன. ஆனால் தாங்கள் சுத்த எபிரெயர் என்றும்,[3] கிறிஸ்துவுக்கு விசேஷித்தவகையாய்ச் சம்பந்தப்பட்டவர்கள் என்றும்,[4] உபகார நிருபங்கள் தங்களுக்கு [illegible]ருந்து அனுப்பப்பட்டிருக்கிறது என்றும்,[5] தங்களுக்கு அப்போஸ்தல அதிகாரம் உண்டென்றும்[6] சாதித்த கள்ளப் போதகமாருடைய வஞ்சகத்திலே கொஞ்சம்பேர் சிக்குண்டிருந்தார்கள். இந்தக் கள்ளப் போதகமார் அப்போஸ்தலன் உண்மை இல்லாதவன் என்றும், நிலை அற்றவன் என்றும், பயமுறுத்துகிறதில் தைரியமும் செய்கையில் பலவீனமும் பயங்காளியும் என்றும், வாக்கு உடனே கொடுப்பான். ஆனால் அதைத் தாமதமாய் நிறைவேற்றுவான் என்று[illegible], அப்போஸ்தல அதிகாரத்தில் தங்களைவிடக் குறைவுள்ளவன் என்றும்[7] சாதித்தார்கள். இதனாலே சபை இன்னமும் சீர்கேட்டினின்றும் துன்மார்க்கத்திலின்றும் முழுவதுமாய் நீங்கவில்லை.[8]

3. இவ்விதக் குறைவுகளைக் கேள்விப்பட்டு, அப்போஸ்தலன் கொரிந்துவுக்குப் போகும்படி தீர்மானித்தார். ஆனால் அதற்கு முன்பு இந்த இரண்டாம் நிருபத்தை எழுதி தீத்துவின்மூலமாய் அனுப்பினான்.[9] இந்த நிருபத்திலே அவன் சபையாரைப் புகழ்ந்தும் அவர்கள்பேரில் அன்புபாராட்டியும் அவர்களைக் கண்டித்தும் அவர்களிடத்தில் விசனம் பாராட்டியும் இருக்கிறான். சபையிலே கிரமம் நடக்கிறவர்களைத் தைரியப்படுத்தி அவர்களுக்குள் சமாதானத்தை நிலைப்படுத்தவும் அவர்கள் தங்களுக்குள்ளே சீர்திருத்தத்தை நடத்தி முன்னுக்கு வரவும் கா

[1] 2 கொரி. 2. 12, 13; 7. [illegible] [2] 2 கொரி. 7. 9–16; 8. 7.
[3] 2 கொரி. 11. 22. [4] 2 கொரி. 5. 16; 10. 7.
[5] 2 கொரி. 3. 1; 5. 12; 10. 12. [6] 2 கொரி. 11. 13, 23.
[7] 2 கொரி. 1. 17; 7. 2; 10. 1, 2, 9, 10; 11. 16; 12. 11, 16, 17; 13. 3, 6.
[8] 2 கொரி. 6. 14–18; 12. [9] 2 கொரி. 8. 6, 16–24. 20, 21.

ள்ளப்போதகமாருடைய மாய்மாலங்களை தாறுமாறாக்கவும் தன் வருகைக்காகச் சபையை ஆயத்தமாய் இருக்கச்செய்யவும் நோக்கமாய் இத்திருபத்தை எழுதலானான்.[1]

4. இந்த திருபம் கொரிந்து சபையாருக்குமாத்திரம் எழுதப்படாமல், "அகாயாவிலுள்ள பரிசுத்தவான்கள் எல்லாருக்கும்" எழுதப்பட்டது. இதில் அத்தேனே, கெங்கிரேயா, இவைகளை தேசத்தில் உள்ள மற்றச் சபைகளையும் சேர்த்திருக்கிறது. அவைகள் அல்லது அவைகளில் சிலவை கொரிந்துசபையில் உண்டான குழப்பத்திலே சிக்குண்டிருந்ததாகத் தோன்றுகிறது.

5. இந்த திருபத்தை மூன்று பங்காய்ப் பிரிக்கலாம்.

I. முகவுரை. (i. 1, 2.)

II. நியாயத்தோரணை, இதிலே தம்முடைய ஊழியத்தை உத்தமத்தோடே நடப்பித்து வருவதாய் நியாயம் காட்டி யூதேயாவில் உள்ள கிறிஸ்தவர்களுக்கு உதாரமாய்த் தருமஞ்செய்ய புத்திசொல்லி, கள்ளப்போதகமார் தன்பேரில் சாட்டிய குற்றங்களுக்கு மறுபடியும் உத்தரம் சொல்லத்தொடங்கி தனது அதிகாரத்தைத் திரும்பவும் கொரிந்தியருக்குள் ஸ்தாபித்து வற்புறுத்திப் பேசுகிறார். (i. 3–xiii. 10.)

III. முடிவுரை. (xiii. 11–14.)

6. இந்த இரண்டாம் திருபத்தினால் உண்டான பலிதம் இன்னதென்று நமக்கு விபரம் தெரியாது. இந்த திருபத்தைப் பவுல் அனுப்பினபின்பு அவன் கொரிந்துவுக்குப் போனதாக மாத்திரம் லூக்கா சொல்லியிருக்கிறான்.[2] பவுல் அங்கே இருந்தபோது சபையார் யூதேயாவில் உள்ள சகோதரருக்குத் தருமங்களைச் சேகரித்து அவன் கையில் ஒப்புக்கொடுத்தார்கள். அவன் அங்கே சில மாதங்கள் தங்கியிருந்து அங்குள்ள சபையின் முக்கியமானவர்கள் ரோமாபுரியிலுள்ள சில சகோதரருக்கு மினவுதல் சொல்லியதாக எழுதி அனுப்பியிருக்கிறான்.[3] இதுமுதல் அந்தக் கள்ளப்போதகமாரைப்பற்றியாவது அவர்களுடைய கட்சிக்காரரைப்பற்றியாவது ஒரு செய்தியும் நாம் கேள்விப்படுகிறதில்லை. ரோமாபுரி திருமுகத்து தன்

[1] 2 கொரி. 9. 3, 5; 10. 2, 11; 12. 1, 2. 10.
[2] அப். 20. 2, 3. [3] ரோ. 15. 26; 16. 22, 23.



திருபத்தை கி. பி. 68. கொரிந்துசபைக்கு எழுதினபோது, பவுல் கொரிந்துசபையாரின் அப்போஸ்தலனாக அங்கீகரிக்கப் பட்டிருந்ததாகக் காட்டியிருக்கிறான். கள்ளப்போதகமாருடைய காரியங்களை பவுல் தனக்குக் கொடுக்கப்பட்ட அப்போஸ்தல அதிகாரத்தைக்கொண்டு தான் பயமுறுத்தி இருந்தபடி கண்டிப்புச்செய்து அவமாக்கி இருக்கலாம்,[1] அல்லது அவர்கள் அந்த இடத்தைவிட்டு நீங்கிப்போய் இருக்கலாம். இந்த திருபத்தின் உண்மை ஒருக்காலும் ஆட்சேபிக்கப் பட்டதில்லை.

### கொரிந்தியருக்கு இரண்டாம் திருபத்தில் வருகிற ஒத்தவாக்கியங்கள்.

| | | | |
|---|---|---|---|
| அதி. 3. 3. | எரே. 31. 33. எசே. 11. 19; 36. 26. | அதி. 6. 16. | யாத். 29. 45. லேவி. 26. 11, 12. எசே. 37. 26, 27. |
| ,, ,, 7. | யாத். 34. 1, 28, 29, 35. | ,, ,, 17, 18. | ஏசா. 52. 11, 12. |
| ,, ,, 16. | ஏசா. 25. 7. | ,, 8. 14. | யாத். 16. 18. |
| ,, 4. 13. | சங். 116. 10. | ,, 9. 9. | சங். 112. 9. |
| ,, 6. 2. | ஏசா. 49. 8. | ,, 13. 1. | உபா. 19. 15. |

### 6. ரோமாபுரிக்கு எழுதப்பட்ட திருபம்.

1. கி. பி. 57, 58. பவுல் அப்போஸ்தலன் தன் பணிவிடையில் மிகவும் சுறுசுறுப்பாய் இருக்கவேண்டும் என்று சரித்திரங்களினால் அறியலாம். அவன் கொரிந்துவில் பின்னிட்ட மூன்றுமாதத்தில் இந்த திருபத்தை எழுதினான். அவன் எழுதின விசேஷித்ததும் அருமையுமான திருபங்களிலே இது ஒன்றாய் இருக்கிறது. அப்போஸ்தலன் ரோமாபுரிக்குப் போகும்படி அடிக்கடி விரும்பினது உண்டு. அங்கே அவனுடைய பந்துக்களும் இஷ்டர்களும் இருந்தார்கள்.[2] பிரயாணத்துக்கு தடைகள் நேரிட்டபோதிலும்[3] அதைச் சந்திக்கும்படியான திர்மானத்தை அவன் விட்டுவிடவில்லை. புறஜாதியாருக்கு அப்போஸ்தலனான அவன் ரோமாபுரியில் உள்ளவர்களுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத்[4] கொண்டிருந்த ஆசையை

[1] 2 கொரி. 13. 2, 3. [2] ரோ. 16. 3–15.
[3] ரோ. 1. 13. [4] ரோ. 1. 15.

வருவில் தடுப்பது கூடாதகாரியம்.[1] சின்ன ஆசியாவிலும் கிரேக்கை தேசத்திலும் போதக ஊழியத்தை நிறைவேற்றி முடித்ததால் மக்கெதோனியாவிலும் அகாயாவிலும் சேகரிக்கப்பட்ட தர்ம பணத்தை வாங்கிக்கொண்டு யூதேயாவுக்குப் போய்[2] அங்கே செய்யவேண்டிய பணிவிடையை முடித்து ஸ்பானியாவுக்குப் போகிற வழியில்[3] ரோமாபுரியைச் சந்திக்கும்படிப் பிரியங்கொண்டான். இந்த நிருபம் எழுதப்பட்ட ஒரு நோக்கம் தான் கொண்டிருந்த எண்ணத்தை ரோமாபுரி சபைக்குத் தெரியப்படுத்தவே. கெங்கிரேயா ஊர் சபைக்கு ஊழியக்காரியாகிய பெபேயாள்[4] ரோமாபுரிக்குப் போக எத்தனமாய் இருந்ததால் இந்த நிருபத்தை எடுத்துப்போம்படியாக ஏவப்பட்டாள்.

2. இந்த நிருபத்துக்கும் பவுலின் மற்ற நிருபங்களுக்கும் பின் சொல்லப்படுகிற வித்தியாசம் உண்டு. மற்ற அநேக நிருபங்கள் சபையில் சம்பவித்திருந்த காரியங்களையிட்டு எழுதப்பட்டன. இதுவோ அப்படிப்பட்டதாய் எழுதப்படவில்லை. ஆதலால் சபையின் உள்ள ஸ்திதியைப்பற்றி அற்பமாயும் கிறிஸ்துமார்க்கப் பொதுவான சத்தியங்களையும் கிறிஸ்தவர்களுடைய ஒழுக்கங்களையும்பற்றி விஸ்தாரமாயும் எழுதப்பட்டிருக்கிறது. யூத கிறிஸ்தவர்களுக்குள்ளும் புறஜாதிகளான கிறிஸ்தவர்களுக்குள்ளும் அந்தஸ்தையும் சடங்கு ஆசாரங்களையும் குறித்து வாக்குவாதங்களும் எரிச்சல்களும் இருந்தன. இவ்விஷயங்களைப்பற்றி அப்போஸ்தலன் இந்த நிருபத்தின் கடைசியில் காட்டியிருக்கிறார். பொதுப்பட சொல்லவேண்டுமானால் இது உபதேச போக்கான நிருபம். அப்போஸ்தலனுடைய ஆகமங்களுக்குள் (எபிரெயர் நிருபம்தவிர) இதுவே கிரமமாயும் பூரணமாயும் நூலின் தன்மையாய் எழுதப்பட்டிருக்கிறது. ஒரு சபையின் தன்மையைப் பரீட்சிக்கும் விசேஷித்த உபதேசமாகிய "விசுவாசத்தினாலே நீதிமான் ஆக்கப்படும் உபதேசம்" இதிலே பலமாய் ரூபிக்கப்பட்டிருக்கிறது.

3. யூதர் புறஜாதியாரான யாவருக்கும் சம்பாதிக்கப்பட்ட இரட்சண்ணிய உபதேசங்களைக் காட்டும் நோக்கமாய் இந்த நிருபம் எழுதப்பட்டது. அப்போஸ்தலன் முதலாவதாக புறஜாதியா-

[1] ரோ. 15. 19, 23. [2] ரோ. 15. 25, 26. [3] ரோ. 15. 28.
[4] ரோ. 16. 1. கெங்கிரேயா கொரிந்துவுக்கு ஏழுமைலுக்குக் கிழக்கே அதற்குக் கடல்துறை பட்டணமாய் இருந்தது.



ரும்[1] யூதரும்[2] பாவிகள் என்றும் இருவகையாரும் கிருபையினாலே இரட்சிக்கப்படுவார்கள்[3] என்றும் சுவிசேஷத்தில் காட்டப்பட்டிருக்கிற இரட்சண்ணியமானது பழைய ஏற்பாட்டுக்குச் சம்பந்தமுள்ளதாய் இருக்கிறதென்றும் சொல்லி அந்த இரட்சண்ணிய வகையை ஆபிரகாமின் திருஷ்டாந்தத்தைக்கொண்டு விளக்குகிறார். ஆபிரகாம் நியாயப்பிரமாணத்துக்கு ஏற்ற கிரியைகளாலும் புறம்பான சடங்குகளாலும் அல்ல, விசுவாசத்தினாலேயே நீதிமான் ஆக்கப்பட்டான். விசுவாசமார்க்கத்தில் நடக்கிறவர்கள் எவர்களோ அவர்கள் யூதராய் இருந்தாலும் புறஜாதியாராய் இருந்தாலும்[4] அவர்களுக்கு அவன் தகப்பனாய் இருக்கிறான் என்று ரூபித்திருக்கிறான். பின்பு முதலாம் ஆதாமின்[5] பாவத்தினால் உண்டான அழிவினின்று மனிதனை மீட்கும்படி இரண்டாம் ஆதாமை அனுப்பின தேவஅன்பைக் காட்டி, அப்பால் நியாயப்பிரமாணமானது கெட்டுப்போன பாவிகளான மனிதனை ஆக்கினையில் நின்றாவது பாவத்தின் அதிகாரத்தில் நின்றாவது விடுவிக்க வலியதன்று திருஷ்டாந்தப்படுத்தி கிறிஸ்துவைப்பற்றிய விசுவாசத்தின்மூலமாய் தேவன் அருளுகிற நீதியானது மனிதனை நியாயப்பிரமாணத்தின் சாபத்தினின்றும் பாவத்தின் அதிகாரத்தினின்றும் விடுதலையாக்கி, அவர்களை நீதிமான்கள் ஆக்கி, பரிசுத்தவான்கள் ஆக்கி, தேவனுடன் ஐக்கியப்படுத்தி அவர்களுக்கு நித்தியஜீவனுக்குரிய[6] நம்பிக்கையைக் கொடுக்கிறதாகக் காட்டியிருக்கிறார். புறஜாதியார் யூதரைப்போலவே இரட்சண்ணிய சலாக்கியங்களுக்குச் சரிசமமாக எண்ணப்பட்டிருக்கிறார்கள் என்ற உபதேசமும் அவிசுவாசிகளான யூதர்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்ற உபதேசமும் யூதருக்கு அருவருப்பாய் இருந்தமையால் இந்த விசேஷித்த காரியத்தையிட்டு மூன்று அதிகாரங்களில் நியாயம் காட்டி இருக்கிறான்.[7] பின்பு முன் ரூபித்திருக்கிற உபதேசங்களைக்கொண்டு நாடோறும் நடக்கைக்கு அநுகூலமாக புத்தி போதனைகளைச் சொல்லுகிறான். இதில் சரீரத்தையும் ஆத்துமாவையும் தேவனுக்கு ஜீவனுள்ள பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்றும்,[8] அதிகாரிகளுக்குக் கீழ் அடங்கி இருக்க வேண்டும் என்றும்,[9] அன்பும் பரிசுத்தமும் உள்ளவர்களாய்

[1] ரோ. 1. 18–32. [2] ரோ. 2 அதி. [3] ரோ. 3. அதி.
[4] ரோ. 4. அதி. [5] ரோ. 5. அதி. [6] ரோ. 6. 7, 8. அதி.
[7] ரோ. 9–11. அதி. [8] ரோ. 12. அதி. [9] ரோ. 13. 1–7.

இருக்கவேண்டும் என்றும்,[1] ஒருவரை ஒருவர் கனம்பண்ணி ஒருவருக்கு ஒருவர் பொறுமையைக் காட்டவேண்டும் என்றும்,[2] கிறிஸ்து யூதருக்கும் புறஜாதியாருக்கும் பொதுவான இரட்சகர் என்றும் காட்டி, பின்பு சில காரியங்களைப்பற்றி அவர்களுக்கு அறிவித்து, வாழ்த்துதல் சொல்லி முடிக்கிறான்.[3]

4. இந்த நிருபத்தை நாலு பங்காக வகுக்கலாம்.

I. முகவுரை. (i. 1–15.)

II. நீதிமான் ஆக்கப்படும் உபதேசத்தைக்குறித்த போதனை. (i. 16–xi.)

III. புத்திமதிகள். (xii–xv. 13.)

IV. முடிவுரை. (xv. 14–xvi.)

5. காலக்கிரமப்படி ரோமர் நிருபம் ஆறாவதாக எழுதப்பட்டபோதிலும் ரோமாபுரி அக்காலத்தில் உலகத்துக்கு ராஜநகரியாய் இருந்ததினாலோ அல்லது பவுல் எழுதின நிருபங்களில் இந்த நிருபம் நீண்டதாய் இருப்பதினாலோ இது நிருபங்களுக்கு முதலில் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த நிருபத்தின் 15, 16 அதிகாரங்களைப்பற்றிச் சிலர் ஆட்சேபிப்பது உண்டு. என்றாலும் இவ்வாகமத்தின் உண்மைப் பலமாய் ரூபிக்கப்பட்டிருக்கிறது.

6. ரோமாபுரியில் சபை எப்போது யாரால் ஸ்தாபிக்கப்பட்டது என்ற கேள்வி விசேஷித்தது. சபையின் பிதாக்களில் சிலர் பேதுரு அந்தச் சபையை ஸ்தாபித்தான் என்று சொல்லி இருப்பது தவறாய் இருக்கிறது. பேதுரு இத்தாலியாவில் இருந்ததாக அவர்கள் சொல்லிய காலத்தில் அவன் பலஸ்தீனாவில் இருந்ததாக அப்போஸ்தலர் நடபடியில் காட்டியிருக்கிறது. இந்த நிருபத்தில் விளங்கும் அத்தாட்சிக்கும் அவர்கள் சொல்லி இருப்பது ஒவ்வாததாய் இருக்கிறது. பேதுரு அந்தச் சபையை ஸ்தாபித்து அல்லது அதை மேல் விசாரித்து வந்திருந்தால் மற்றொருவனுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டாதபடிக்கு நாடின பவுல்[4] ரோமாபுரிக்குப் போய் அங்கே ஊழியத்தை நடப்பிக்கும்படி அடிக்கடி விரும்பி இருப்பானோ?[5] மாட்டானே. இந்த நிருபத்தில் பேதுரு அப்போஸ்தலன் அந்

[1] ரோ. 13. 8–14. [2] ரோ. xiv. 1–xv. 7.
[3] ரோ. xv. 22–xvi. 27.
[4] ரோ. 15. 21. 2 கொரி. 10. 15, 16.
[5] ரோ. 1. 13; 15. 22–24. அப். 19. 21.



தப் பட்டணத்தில் நடப்பித்த ஊழியத்தைப்பற்றிக் குறிப்புக் காட்டப்படாததாலும் அநேகம் பேரை வாழ்த்துவதில் அந்த அப்போஸ்தலன் பேர் வராததாலும் பேதுரு அந்தச் சபையை ஸ்தாபித்திருக்கமாட்டான் என்று எண்ணத்தக்கது. ரோமாபுரி அந்நியரும் யூதரும் யூதமார்க்கத்தில் அமைந்தவர்களும் பெந்தெகொஸ்தே பண்டிகையில் எருசலேமில்[1] சுவிசேஷத்தைக் கேட்டு அதை அங்கீகரித்து ரோமாபுரிக்கு வந்து அதைப் பிரசங்கித்து சபையை ஸ்தாபித்திருக்கலாம் எனத் தோன்றுகிறது. இப்படித் துவக்கப்பட்ட கிரியை ரோமாபுரியில் உள்ள யூதருக்கும் பலஸ்தீனா, கிரேக்கை, சின்ன ஆசியாவிலும் உள்ள யூதருக்கும் உண்டான போக்கு வரத்துச் சம்பவங்களினால் வளர்ந்தேறி வந்தன. யூதர்கள் ரோமாபுரியிலிருந்து தற்காலத்துக்கு என்று[2] துரத்தப்பட்டபோது அவர்கள் கிறிஸ்துமார்க்கம் பிரபல்லியமாகி இருந்த இடங்களுக்குப் போய் அங்கே அதைக் கற்றும் இருக்கலாம். அந்தச் சபையை யார் ஸ்தாபித்தாலும் சரி, பவுல் இந்த நிருபத்தை எழுதினபோது "அவர்கள் விசுவாசம் உலகம் எங்கும் பிரசித்தமாகி" கீர்த்தி பெற்றிருந்தது.[3]

## ரோமர்நிருபத்தில் காட்டப்பட்டிருக்கிற ஒத்தவாக்கியங்கள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| அதி. | 1. | 17. | ஆபகூக். 2. 4. | அதி. | 7. | 15. | கலா. 5. 17. |
| ,, | 2. | 24. | எசே. 36. 23. | ,, | 8. | 15. | ஏசா. 56. 5. |
| ,, | 3. | 2. | உபா. 4. 7, 8. | ,, | ,, | 26. | சகரி. 12. 10. |
| ,, | ,, | 4. | சங். 51. 4. | ,, | ,, | 35. | சங். 44. 22. |
| ,, | ,, | 10. | ,, 14. 1—3. | ,, | 9. | 7. | ஆதி. 21. 12. |
| ,, | ,, | 13. | ,, 5. 9; 140. 3. | ,, | ,, | 9. | ,, 18. 10. |
| ,, | ,, | 14. | ,, 10. 7. | ,, | ,, | 12. | ,, 25. 23. |
| ,, | ,, | 15,17. | ஏசா. 59. 7, 8. | ,, | ,, | 13. | மல். 1. 2, 3. |
| ,, | ,, | 18. | சங். 36. 1. | ,, | ,, | 15. | யாத். 33. 19. |
| ,, | 4. | 3. | ஆதி. 15. 6. | ,, | ,, | 17. | ,, 9. 16. |
| ,, | ,, | 7,8. | சங். 32. 1, 2. | ,, | ,, | 25. | ஓசி. 1. 10. |
| ,, | ,, | 13,14. | ஆதி. 17. 4, 5. | ,, | ,, | 27,28. | ஏசா. 10. 22, 23. |
| ,, | ,, | 18. | ,, 15. 5. | ,, | ,, | 29. | ,, 1. 9. |
| ,, | 7. | 7. | யாத். 20. 17. | ,, | ,, | 33. | ,, 8. 14; 28. 16. |

[1] அப். 2. 10. [2] அப். 18. 2. [3] ரோ. 1. 8.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| அதி. | 10. | 5. | லேவி. 18. 5. | அதி. | 11. | 34. | ஏசா. 40. 13. |
| ,, | ,, | 6–8. | உபா. 30. 12–14. | ,, | 12. | 19. | உபா. 32. 35. |
| ,, | ,, | 11. | ஏசா. 28. 16. | ,, | ,, | 20. | நீதி. 25. 21, 22. |
| ,, | ,, | 13. | யோவே. 2. 32. | ,, | 13. | 9. | யாத். 20. 13–17; லேவி. 19. 18. |
| ,, | ,, | 15. | ஏசா. 52. 7. | ,, | 14. | 6. | 1 கொரி. 10. 31. |
| ,, | ,, | 16. | ,, 53. 1. | ,, | ,, | 11. | ஏசா. 45. 23. |
| ,, | ,, | 18. | சங். 19. 4. | ,, | 15. | 3. | சங். 69. 9. |
| ,, | ,, | 19. | உபா. 32. 21. | ,, | ,, | 9. | ,, 18. 49. |
| ,, | ,, | 20. | ஏசா. 65. 2. | ,, | ,, | 10. | உபா. 32. 43. |
| ,, | 11. | 3. | 1 இரா. 19. 10–18. | ,, | ,, | 11. | சங். 117. 1. |
| ,, | ,, | 7, 8. | ஏசா. 29. 10. | ,, | ,, | 12. | ஏசா. 11. 10. |
| ,, | ,, | 9, 10. | சங். 69. 22, 23. | ,, | ,, | 20. | ,, 52. 15. |
| ,, | ,, | 26. | ஏசா. 59. 20. | | | | |

## 7. யாக்கோபு எழுதின நிருபம்.

1. காலக்கிரமப்படி யாக்கோபின் நிருபம் ரோம நிருபத்துக்கு அடுத்து வருகிறது. புதிய ஏற்பாட்டில் யாக்கோபு என்ற பெயரால் இரண்டு அப்போஸ்தலமார் சொல்லப்பட்டிருக்கிறார்கள். ஒருவன் செபதேயுவின் குமாரனும் யோவான் அப்போஸ்தலனின் மூத்த சகோதரனும் ஆனவன். இவன் ஏரோது அகிரிப்பா ராஜாவால் கி. பி. 44ல் கொலை புரியப்பட்டான்.[1] இவன் இந்த நிருபத்தை எழுதினான் என்று தோன்றுகிறது இல்லை; ஏனென்றால், இதில் இவன் மரணத்துக்குச் சில வருஷங்களுக்குப் பின்னுள்ள சங்கதிகள் காட்டப்பட்டிருக்கின்றன. இன்னொரு யாக்கோபு, அல்பேயு அல்லது கிலெயோப்பாவின் மகன். அவன் நம்முடைய கர்த்தரின் சகோதரன் என்றும்[2] ஒரு வேளை வளர்த்தியில் சற்று குட்டையாய் இருந்ததின் நிமித்தம் மற்ற யாக்கோபுக்கு வித்தியாசப்படுத்தும்படி சின்ன யாக்கோபு என்றும்[3] சொல்லப்பட்டிருக்கிறான். அவன் அப்போஸ்தல ஊழியத்துக்கு அழைக்கப்பட்டதைக்குறித்து நாம் புதிய ஏற்பாட்டில் வாசிக்கிறதில்லை. ஆனால், அவன் பெயர் அப்போஸ்தலர் அட்டவணையில் வருகிறது.[4] நம்முடைய கர்த்தர் உயிர்த்தெழுந்தபின்பு அவர் பிரத்தியேகமாய்

[1] அப். 12. 2. [2] கலா. 1. 18, 19. [3] மாற். 15. 40.
[4] மத். 10. 3. மாற். 3. 18. லூக். 6. 15.



அவனுக்குக் காட்சி அருளினார்.[1] விருத்தசேதனம் உள்ளவர்களுக்குப் பிரசங்கிக்கும்படி தெரிந்துகொள்ளப்பட்ட அப்போஸ்தலமாரில் அவனும் ஒருவன்.[2] ஸ்தேவானுடைய மரணத்துக்குப்பின்பு, கி. பி. 34ல் அவன் எருசலேம் சபைக்குக் கண்காணியாக நியமிக்கப்பட்டான் என்று தோன்றுகிறது. கி. பி. 47ல் கூடின சங்கத்துக்கு அவன் முதலாளியாய் இருந்தான்.[3] மிகவும் பரிசுத்தம் உள்ளவனாக நடந்துகொண்டதால் அவன் எருசலேமிலும் அதைச் சூழ்ந்த இடங்களிலுமுள்ள அவிசுவாசிகளான யூதர்களாலுங்கூட "நீதிமான்" என்று அழைக்கப்பட்டான். அவ்வளவும் பரிசுத்தவானாக எண்ணப்பட்டபோதிலும் அவன் இரத்தச்சாட்சியாக மரியாதைபடி காக்கப்பட ஏதுவில்லாமல் போயிற்று. அவன் தேவாலயத்தின் உப்பரிகையின்மேல் நிறுத்தப்பட்டபோது அங்கே இருந்து, கிறிஸ்துவின்மேல் உள்ள விசுவாசத்தை மூர்க்கவெறியாய் நின்ற ஜனங்களுக்கு முன்பாக அறிக்கையிடவே, உப்பரிகையிலிருந்து கீழே தள்ளப்பட்டான். அதால் அவன் ஜீவனுக்கு முடிவு உண்டாகாததால் கல் எறியப்பட்டான்; அவன் தன் கொலைபாதகருக்காக ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கையில் ஒரு தடியால் அடித்துக் கொல்லப்பட்டான். இது கி. பி. 62ல் நடந்தது. இந்த நிருபம் கி. பி. 61ல் எழுதப்பட்டது என்று வழக்கமாய்ச் சொல்லப்படுவது உண்டு; அந்தக் காலத்தில் இருந்த சபையின் நிலைமைக்கு ஏற்றதாக இந்த நிருபம் எழுதப்பட்டிருக்கிறதைப் பார்க்கில் அது சரியாய் இருக்கலாம்.[4]

2. இது புத்தி போதனை நிறைந்த நிருபமாய் இருக்கிறது. கிரியை இல்லாத விசுவாசம் செத்ததாய் இருக்கிறது என்று காட்டுகிற பாகம் மாத்திரம் நியாயத்தோரணை உள்ளது. ஆனால் இந்த நிருபத்தின் முக்கியமான பங்கில் அக்காலத்தில் யூதருக்குள் பிரபல்லியமாய் இருந்த பாவங்களைப் பலமாயும் வைராக்கியமாயும் கண்டிக்கிற கண்டனங்கள் அடங்கியிருக்கிறது. திவ்விய வசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதிருக்கிறதும், கிரியை இல்லாத விசுவாசத்தின்பேரில் நம்பிக்கை வைப்பதும், உலக சம்பாத்தியத்தின்பேரில் அதிக ஆவல்கொண்டு அதைச் சம்பாதிப்பதில் சுயநம்பிக்கை காட்டுவதும், உலக இன்பங்களைத் தகாதபடி அநுபவிப்பதும், ஐசுவரியவான்களு

[1] 1 கொரி. 15. 7. [2] கலா. 2. 9.
[3] அப். 12. 17; 15. 13–29; 21. 18–24. [4] யாக். 5. 8.

க்குப் பட்சபாதம் காட்டித் தரித்திரரை நிந்திப்பதும், வேலைக்காரருக்கு சம்பளங்களைச் சரியானபடி கொடாமல் அவர்களை வஞ்சிப்பதும், போதகத்தொழிலை அபகரிக்கும்படி பெருமை கொள்வதும், மற்றவர்களைப் பழிப்பதும், நியாய[illegible] அவர்களை அவதூறுபடுத்துவதும், பகை சாதித்துக் கலகஞ்செய்வதும், ஒருவர்மேல் ஒருவர் எரிச்சல் அடைந்து முறுமுறுப்பதும், யுத்தங்கள் சண்டைகள் செய்வதும், இவைகளோடே அவிசுவாசமுள்ள சிந்தையுடன் தேவனிடத்தில் மன்றாடுவதுமான பாவங்களைக்குறித்து யாக்கோபு நிராகரித்துக் கண்டிக்கிறான். இவைகள் யூதருடைய பாவங்கள் என்று மாத்திரம் சொல்லக்கூடாது; சீர்கெட்ட மனுஷர் எல்லாருடைய தன்மையிலும் ஆழமாய் அவைகள் வேர்பற்றி இருக்கிறதென்று சொல்லலாம். பேர்க்கிறிஸ்தவர்கள் எல்லாரும் கண்ணாடிபோன்ற இந்த நிருபத்தில் தங்களை ஒப்பிட்டுப் பார்த்தால் இது உண்மை என்று காண்பார்கள்.

3. இந்த நிருபத்தை மூன்று பங்காக வகுக்கலாம்.

I. முகவுரைக்குப் பின்பு பொறுமையும் மனத்தாழ்மையுமாய் இருக்கவும் தேவனுடைய வசனத்துக்கு ஏற்ற சிந்தையோடு செவி கொடுக்கவும் தக்கதான போதனைகள். (i.)

II. மேற்சொன்ன விஷயங்களையிட்டு யூதருக்குள் இருக்கிற பற்பல தகாத வழக்கங்கள் எண்ணங்களைப் பற்றிய கண்டிப்புகள். ஆபிரகாம் ராகாப் என்பவர்களுடைய திருஷ்டாந்தங்களைக் கொண்டு நீதிமான்களாக்கப்படும் உபதேசத்தைப் பற்றிக்கொண்டிருந்த தகாத எண்ணங்களைக் கண்டித்தல். (ii–v. 6.)

III. புத்திபோதனைகளும் எச்சரிப்புகளும். (v. 7–20.)

4. இந்த நிருபத்தில் காட்டப்பட்டிருக்கிற போதனை பவுல் அப்போஸ்தலனுடைய போதனைக்கு விகற்பமாய் இருக்கிறதென்று சொல்லி இதை ஆட்சேபிப்பார் உண்டு. ஆனால் அந்தக் கோட்பாடு நிராதாரமுள்ளது. யாக்கோபு அப்போஸ்தலனுடைய போதனை பவுல் அப்போஸ்தலனுடைய போதனைக்கு அநுபந்தமாய் இருக்கிறது. பவுல் அப்போஸ்தலனுடைய நிருபங்களிலும் யாக்கோபு சொல்லிய சத்தியமே மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது. கலா. 5. 6. நீதிமானாக்கப்படுகிற உபதேசத்



தின் ஒரு பங்கைப்பற்றி பவுலும் இன்னொரு பங்கைக் குறித்து யாக்கோபும் பேசியிருக்கிறார்கள். பவுல் கிறிஸ்துவைப்பற்றிய விசுவாசத்தினாலே மனிதன் நீதிமானாக்கப்படுகி[illegible] யாக்கோபு மனிதனை நீதிமானாக்குகிற அந்த விசுவாசம் ஜீவனுள்ளது கிரியை செய்யத்தக்கது செத்ததல்ல என்றும், பவுல் தேவனுக்கு முன்பாக மனிதனை நீதிமானாக்குகிற உபதேசத்தைக்குறித்தும் யாக்கோபு தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்பட்டவன் மனிதருக்கு முன்பாக அதை மெய்ப்பிக்குதலைக் குறித்தும், பவுல் செத்த கிரியைகளுக்கு விரோதமாயும் யாக்கோபு செத்த விசுவாசத்துக்கு விரோதமாயும் நியாயங்களை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். இருவரும் ஒரே சத்தியத்தின் வெவ்வேறு காரியத்தை எடுத்துக் காட்டுவதாலும் மெய்த்தேவ பக்திக்கு இரண்டு காரியங்களும் அவசியம் வேண்டியதாலும் அவர்கள் சொல்லியிருப்பது ஒன்றுக்கொன்று விரோதமாய் இராமல் பொருந்தின ஐக்கியமுடையதாய் இருக்கின்றன.

5. இந்த நிருபம் கனோனைச் சேர்ந்ததாகத் துவக்கத்தில் திருச்சபையார் எல்லாராலும் அங்கீகரிக்கப்படவில்லை என்று முன் காட்டியிருக்கிறோம். கீழ் சபைகளில் இது ஆரம்பத்தில் பிரசித்தப்பட்டிருந்ததால் பூர்வீக சீரிய பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இதினால் அந்தச் சபைகளில் இது திவ்விய அதிகாரமுள்ளதாக ஒப்புக்கொள்ளப்பட்டது என்பதற்கு விசேஷித்த அத்தாட்சியாய் இருக்கிறது. நாலாம் நூற்றாண்டில் இது திவ்விய அதிகாரமுள்ளதாக அநேக சபைகளில் அங்கிகரிக்கப்பட்டது. ஐந்தாம் நூற்றாண்டில் இது கீழ் சபைகளாலும் மேல்சபைகளாலும் ஏகமாய் ஒப்புக்கொள்ளப்பட்டது. தற்காலத்தில் இதின் அதிகாரம் திரும்பவும் ஆட்சேபிக்கப்படுவது உண்டு; ஆனால் அதற்குப் போந்த ஆதாரம் இல்லை. இந்த நிருபத்தின் முகவுரையையும் இதன் பொருளையும் பார்க்கையில் இது யூதர்களுக்கு அதாவது ஒருவேளை பெந்தெகொஸ்தே நாளில் குணப்பட்ட யூதர்களுக்கும் அவர்களால் குணப்படுத்தப்பட்ட மற்ற யூதர்களுக்கும் எழுதப்பட்டதென்று அறியலாம். இவர்களுடைய நிலைமையைப்பற்றி இவர்கள் எருசலேமுக்குப் பெரிய பண்டிகைகளை ஆசரிக்கும்படியாக வந்திருக்கும்போது அப்போஸ்தலன் அறிந்தும் உண்மையுள்ளவர்களால் கேள்விப்பட்டும் இருக்கலாம்.

## யாக்கோபு நிருபத்தில் காட்டப்பட்டிருக்கிற ஒத்தவாக்கியங்கள்.

| | | | |
|---|---|---|---|
| அதி. 1. 17. | மல்கி. 3. 6. எண். 23. 19. | அதி. 4. 6. | நீதி. 3. 34. |
| ,, 2. 8. | லேவி. 19. 18. | ,, 5. 11. | சங். 94. 12. யோபு. 1. 21, 22; 42. 10, 17. |
| ,, ,, 11. | யாத். 20. 13, 14. | ,, ,, 17, 18. | 1 இரா. 17. 1; 18. 42–45. |
| ,, ,, 21-23. | ஆதி. 15. 6; 22. 9-12. ஏசா. 41. 8. | | |
| ,, ,, 25. | யோசு. 2. 1, 22. | | |

## 8. எபேசியருக்கு எழுதப்பட்ட நிருபம்.

1. இந்த நிருபத்தைப் பவுல் எழுதினபோது அவன் ரோமாபுரியில் இருந்தான். அவன் ராஜதானியைப் பார்க்கும்படி காட்டின ஆசை அந்தப் பட்டணத்திலுள்ள விசுவாசிகளுக்கு எழுதின நிருபத்தில் காட்டப்பட்டிருக்கிறது. அந்த ஆசை அவன் எண்ணினபடி நிறைவேறாதிருந்தாலும் வேறே வகையாய் நிறைவேறினது. எப்படி எனில் அவன் கொரிந்தை விட்டு மிலேத்து தீரு பித்தோலோமாய் பட்டணங்களைச் சந்தித்து செசரியாவுக்குப் போனான். செசரியாவில் அதிகக் காலம் பின்னிட்டு அவனும் அவன் கூட்டாளிகளுமாக எருசலேமுக்குப் போனார்கள்; அங்கே அவன் கைதியாகப்பட்டு சில வருஷம் சென்றபின் ரோமாபுரிக்குச் சிறையாக அனுப்பப்பட்டான்.

2. ரோமாபுரியில் அவன் கைதியாக[1] ஒரு வாடகை வீட்டில் இரண்டு வருஷம் தங்கியிருந்தான். அந்தக் காலத்தில் அவன் இரவும் பகலும் புயத்தோடே புயமாய் ஒரு சேவகனோடே கட்டப்பட்டிருந்ததால் அப்போஸ்தல ஊழியத்துக்கு அது அதிகத் தடையாய் இருந்திருக்கவேண்டும் என்பதற்குச் சந்தேகம் இல்லை. என்றாலும் தன்னிடத்துக்கு வந்தவர்கள் எல்லாரையும் அவன் ஏற்றுக்கொண்டு, அவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துவந்தான்.[2] அவனுடைய பிரசங்கம் பயனற்றதாய் இருக்கவில்லை; கர்த்தரைக்குறித்து எருசலேமில் சாட்சி கொடுத்தது போல ரோமாவிலும் அவன் சாட்சி கொடுக்க[3] இடம் பெற்றதால் அநேகர் நித்திய மோட்ச ராஜ்யத்தில் மகிழும்படியான

[1] எபே. 3. 1. [2] அப். 28. 30, 31. [3] அப். 23. 11.



சலாக்கியம் பெற்றிருப்பார்கள் என்பதற்குச் சந்தேகம் இல்லை. இதற்கு இடையில் சபைகளைப்பற்றிய கவலை அவனை அதிகமாய் நெருக்கினது. நாகரீகத்தில் தேர்ச்சி அடைந்த ராஜதானியில் அவன் இருந்ததால் காலத்துக்குக் காலம் அங்கே போக்குவரத்தாய் இருந்தவர்கள்மூலமாய்ச் சபைகள் செழிப்பாய் இருப்பதையும் அல்லது பழுதுபட்டுப்போய் இருப்பதையும் ஆசைகள் தப்பறைகள் சோதனைகளுக்கு இடம் கொடுத்திருப்பதையும் அல்லது இரட்சகராகிய கிறிஸ்து இயேசுவின் கிருபையிலும் அறிவிலும் தேறிவருவதையுங்குறித்து கேள்விப்பட்டு, அவன் சிறையிருந்த காலத்தில் ரோமாபுரியிலிருந்து நிருபங்களைப் பற்பல [illegible]ங்களுக்கு எழுதினான்.

3. இந்த நிருபங்களில் முதலாவதாக எபேசியர்[1] நிருபம் எழுதப்பட்டது. அப்போஸ்தலன் அநேக காலமாய் எபேசில் திவ்விய ஊழியத்தை நடப்பித்ததால் தாம் சிறையாய் இருக்கும் போது அந்தப் பட்டணத்துச் சபையைப்பற்றி அக்கறை கொள்வது இயற்கை. அவன் கடைசியாக அங்கே மூன்று வருஷம் உழைத்தான், அவ்விடத்தில் அவனுக்கு அநேக இஷ்டர்கள் இருந்திருக்கலாம், ஆனதால் அவன் எபேசியருக்கு எழுதின நிருபத்தில் ஆளாளுக்கு வாழ்த்துதல் சொல்லாதிருப்பது கவனிக்கப்படத்தக்கதாய் இருக்கிறது. இதையும் மிகப் பூர்வீகக் கையெழுத்துப் பிரதிகளில் "எபேசுவில் இருக்கிற" என்ற வார்த்தை விடப்பட்டிருப்பதையும் பார்க்கும் போது, இந்த நிருபம் எபேசியருக்குமாத்திரம் எழுதப்படாமல் சபைகளுக்குப் பொதுவாக எழுதப்பட்டது என்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் இந்த அபிப்பிராயத்துக்கு ஆட்சேபனைகள் உண்டு. எபேசில் அப்போஸ்தலனுக்கு அநேக இஷ்டர்கள் இருந்ததால் அவர்கள் எல்லாருக்கும் இந்த நிருபத்தில் வந்தனம் சொன்னால் இடம் அதிகமாய்ப் பிடிக்கும்; ஆதலால் இந்த நிருபத்தைக் கொண்டுபோன தீகிக்கு மூலமாய் அவர்களுக்கு

[1] பவுல் ரோமாபுரியிலிருந்து முதலாவதாக லவோதிக்கேயருக்கு நிருபம் எழுதினான் என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். அந்தச் சபையைப்பற்றிப் பிந்தியகாலத்தில் யோவான் வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லி இருக்கிறான். கொலோசெயர் 4. 16ல் சொல்லப்பட்டிருப்பதை வேறே வகையாய் விஸ்தரிக்கலாம். எபேசியர் நிருபம் மற்றச் சபைகளிலும் வாசிக்கப்பட்டுவந்ததால் அதை லவோதிக்கேயாவிலிருந்து கொலோசெ சபைக்கு அனுப்பும்படி சொல்லி இருக்கலாம்.

வாழ்த்துதல் சொல்லி அனுப்பியிருக்கலாம்.[1] காரியம் எப்படி இருந்தாலும் பூர்வீகச் சபையார் இந்த நிருபம் முதலாவது எபேசியருக்கே எழுதப்பட்டதென்று ஏகமாய்ச் சாட்சியிட்டிருக்கிறார்கள். ஆனாலும் மற்றச் சபைகளிலும் இது பிரசித்தப்படும்படியான நோக்கமாய் எழுதப்பட்டும் இருக்கலாம். ஆதலால்தான் இந்த வடிவாக இந்த நிருபம் எழுதப்பட்டிருக்கிறது.

4. இந்த நிருபம் மற்றச் சில நிருபங்களைப்போல பொதுவான விஷயமாய் எழுதப்பட்டிருக்கிறது. எபேசு கிறிஸ்தவர்களைத் தைரியப்படுத்தவும் அவர்களை விசுவாசத்தில் பலப்படுத்தவும் இது எழுதப்பட்டது. கண்டனம் செய்வதற்குரிய தப்பறைகள் பாவங்கள் இதில் காட்டப்படவில்லை. புறஜாதியார் சுவிசேஷ நன்மைக்கு அழைக்கப்பட்டதிலும் பிரிவினை ஆகிய நடுச்சுவர் தகர்க்கப்பட்டதிலும் மரித்தவர்களை உயிர்ப்பிப்பதிலும் கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குச் சபையைக் கொண்டுவரவேண்டிய எல்லாவித உபகரணங்களைக் கொடுப்பதிலும் கிறிஸ்துவின் கிரியையில் வெளிப்பட்டிருக்கிற தேவனுடைய ஒப்பில்லாத அன்பின் உயரம் ஆழம் நீளம் அகலம் என்பவைகளை இதில் பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதால் இது "களிகூரும் நிருபம்" என்று சொல்லப்படுவதுண்டு. இந்நிருபத்துக்கும் கொலோசெயர் நிருபத்துக்கும் ஒத்துமை உண்டு. இரண்டிலும் ஒரேவிதப் போக்கும் வாசகங்களும் அடிக்கடிக் காணப்படுவதுண்டு.

5. இந்த நிருபத்தை இரண்டு பிரிவாக பிரிக்கலாம்.

I. உபதேசம். வாழ்த்துதல் சொல்லியபின்பு அப்போஸ்தலன் மீட்பின் நன்மைகளுக்காக தேவனுக்கு நன்றியறிதலான ஸ்தோத்திரம் செலுத்தி பின்பு கிறிஸ்துவை மகிமைப்படுத்துவதிலும் மறுபடியும் பிறந்தவர்களை முன்னுக்குக் கொண்டுவருவதிலும் வெளிப்பட்டிருக்கிற பலத்த கிருபையை எடுத்துக்காட்டி (i, ii. 1–10.) எபேசியர் அஞ்ஞானிகளாய் இருந்தபோது அவர்களுடைய நிலைமையையும் தேவனுடைய ராஜரீகத்தினாலே பரிசுத்தவான்களுடைய ஐக்கியத்துக்கு உள்ளாக அவர்கள் சேர்க்கப்பட்டதையும் (ii. 11, 12.) அவர்களின் நிமித்தம் தனக்கு அளிக்கப்பட்ட வெளிப்படுத்தலையும் எடுத்துக் காட்டி (ii. 13–22.) அவர்கள் ஸ்திரப்படுவதற்காக மன்றாடுகிறான். (iii.)

II. புத்திமதிகள். எபேசியர் தங்களுக்குக் கிடைத்திருக்கிற உன்னத சலாக்கியத்துக்குப் பாத்திரவான்களாக நடந்து அவர்களுக்கு ஆவிக்குரிய வரங்கள் அருளப்பட்ட நோக்கத்தை நினைப்பூட்டி அஞ்ஞானிகளுடைய வீணான நடத்தைகளுக்கும் தங்களுடைய முந்தின நடக்கைகளுக்கும் நேர் எதிரிடையாய் நடக்கும்படி புத்திசொல்லிப் பின்பு விசேஷமாய் ஒருமைப்பாட்டிலும் உண்மையிலும் சாந்தத்திலும் சுறுசுறுப்பிலும் வாக்குநாணயத்திலும் தயவிலும் உதாரத்திலும் கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றி நடக்கவும் (iv, v. 1–20.), அப்பால் புருஷனும் மனைவியும் பெற்றோரும் பிள்ளைகளும் எஜமானும் வேலைக்காரரும் ஒருவருக்கொருவர் செய்யவேண்டிய கடமைகளை எடுத்து உரைத்து ஆத்தும சத்துருக்களுக்கு விரோதமாகத் தைரியமாய் விழிப்புள்ளவர்களாய் ஜெபசிந்தையோடே எதிர்த்துப் போராடும்படி புத்திசொல்லி (v. 21–vi. 9.) ஆசீர்வாதத்தோடே முடிக்கிறான். (vi. 10–24.)

6. இந்நிருபத்தின் உண்மை ஆட்சேபிக்கப்பட்டிருப்பது இல்லை. பவுல் கைதியான துவக்கத்தில் இது எழுதப்பட்டதால் கி. பி. 61 அல்லது 62ல் அதாவது ரோமர் நிருபம் எழுதப்பட்ட மூன்று வருஷத்திற்குப்பின்பு இது எழுதப்பட்டிருக்கவேண்டியது.

## எபேசியர் நிருபத்தில் வருகிற ஒத்தவாக்கியங்கள்.

| | | |
|---|---|---|
| அதி. 2. 20. | ஏசா. 28. 16. | அதி. 6. 3. யாத். 20. 12. உபா. 5. 16. |
| ,, 4. 8. | சங். 68. 18. | |
| ,, 5. 31. | ஆதி. 2. 24. | |

[1] இதைப்பற்றி 6. அதி. 21. 22ல் குறிப்புக் காணப்படுகிறது. தீகிக்குவைப்பற்றி புதிய ஏற்பாட்டில் ஐந்துதரம் பவுல் அப்போஸ்தலனுடைய வேலையாள் என்று சொல்லி இருக்கிறது. யூதேயாவில் உள்ள ஏழைக் கிறிஸ்தவர்களுக்குத் தர்மசகாயம் வாங்கும்படி தீத்துவுக்கு உதவியாய் இருந்தவர்களில் துரோப்பீமு ஒருவனும் மற்றவன் தீகிக்குவாயும் இருக்கலாம். 2 கொரி. 8. 16–24.

## 9. கோலோசெயருக்கு எழுதப்பட்ட நிருபம்.

1. தீகிக்கு ரோமாபுரியில் இருந்து புறப்பட்டபோது அவன் கையில் எபேசியர் நிருபம்மாத்திரம் கொடுத்து அனுப்பப்படவில்லை. அவன் எபேசியர் நிருபத்தையும் பிலேமோன் நிருபத்தையும் கொலோசெயர் நிருபத்தையும் கொண்டுபோனான். கொலோசெபட்டணத்துச் சபையின்பேரில் அப்போஸ்தலன் பிரீதி உள்ளவனாய் இருந்தான். அவன் அந்தப் பட்டணத்துக்குப் போகாதிருந்தாலும்[1] அந்தச் சபையில் உள்ளபலரை அவன் நன்றாய் அறிந்திருந்தான். திருஷ்டாந்தமாக அந்தச் சபையின் போதகனாகிய அர்க்கிப்புவின் பெயரையும் பிலேமோன் பெயரையும் எடுத்துக் காட்டி இருக்கிறான். கிறிஸ்துமார்க்கம் எப்பாப்பிராவினால் கொலோசெபட்டணத்தில் முதலாவதாக அறிவிக்கப்பட்டிருக்கலாம்.[2] இந்த எப்பாப்பிராவைச் சிலர் எப்பாப்பிராத்தீத்து என்பார்கள். கொலோசெயர் எப்பாப்பிராவை அப்போஸ்தலனிடத்துக்கு ஆலோசனைக்காக அனுப்பினார்கள் என்பது பிரத்தியட்சமாய் இருக்கிறது. எப்படியும் எப்பாப்பிராமூலமாய் அப்போஸ்தலன் அந்தச் சபையின் நிலைமையைப்பற்றிக் கேள்விப்பட்டான்.[3]

2. எப்பாப்பிராமூலமாய் அறிந்துகொண்ட விஷயங்களை யிட்டு அப்போஸ்தலன் இந்நிருபத்தைக் கொலோசெ சபைக்கு எழுதினான். இந்தச் சபை கொரிந்துசபையைப்போல கள்ளப்போதகமாரால் வாதிக்கப்பட்டது. இந்தக் கள்ளப்போதகமார் இன்னார் என்பதைக் குறித்துச் சரியானபடி தீர்மானிக்க ஏதுவில்லை. அவர்கள் கிழ்த்தேசச் சாஸ்திரங்களையும் யூதருடைய சடங்கு ஆசாரங்களையும் ஒன்றாய் இசைத்துக் காட்டிய கள்ள ஞானத்தைக் கட்டி "ஞானம் அறிவு" என்றவைகளின் ரகசியங்களைத் தெரிவிக்கிறவர்களாயும் யூதருடைய சடங்குப்பிரமாணத்தையும் துறவறவாழ்வையும் கைக்கொள்ளவேண்டும் என்று போதிக்கிறவர்களாயும் தங்களைப் பாராட்டினார்கள்.[4] இந்தத் தப்பறைகளுக்கு விரோதமாய் அப்போஸ்தலன் இந்நிருபத்தை எழுதும்படி ஏவப்பட்டான். கொலோசெ

[1] கொலோ. 2. 1. [2] கொலோ. 1. 7.
[3] எப்பாப்பிரா ரோமாபுரியில் சேர்ந்தபின்பு கைதியாக்கப்பட்டுச் சிறைச்சாலையில் அடைபட்டான். (பிலே: 23. வச.)
[4] கொலோ. 2. 8–23.



சபையாரைப்பற்றிப் புகழ்ச்சியாய்ச் சொல்லத்தக்க அநேக காரியங்கள் உண்டு; அவர்களுக்குள்ளே விசுவாசம் அன்பு நம்பிக்கை அதிகமாய் பெருகி இருந்தது. இந்தக் கிருபைகளுக்காகப் பவுல் மிகுந்த நன்றியறிதலோடே தேவனுக்கு ஸ்துதிசெலுத்தி இருக்கிறான். ஆனால் அவர்களில் சிலர் தப்பறைகளுக்குள் அகப்பட்டதற்காக அவர்களை உருக்கமான அன்போடும் விசனத்தோடும் கடிந்துகொண்டு கள்ளப்போதகமாருக்கு எவ்வளவும் செவிகொடாதபடிக்கு எச்சரிக்கிறான்.[1] கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளவும் கள்ள உபதேசங்களால் அவர்கள் தவறவிட்ட கடமைகளை நிறைவேற்றவும் புத்திசொல்லுகிறான்.[2] இந்நிருபத்தின் துவக்கத்தில் சுவிசேஷத்தின் சத்தியங்களை எடுத்துக் காட்டி[3] அதின் கடைசியில் அவர்கள் தனக்காக ஜெபம்பண்ணவும் முடிவிலே தான் "கட்டப்பட்டிருப்பதை நினைத்துக்கொள்ளவும்" ஏவுகிறான்.

3. இந்த நிருபத்தை இரண்டு பங்காக வகுக்கலாம்.

I. உபதேசம். அப்போஸ்தலன் கிறிஸ்துவானவருடைய மகத்துவத்தையும் அவருடைய கிரியைகளையும் எடுத்து விஸ்தரித்து வஞ்சனையான அபிப்பிராயங்களுக்கும் நியாயப்பிரமாணத்தின் சடங்கு ஆசாரங்களைக் கைக்கொள்ளும் வீண்பக்திக்கும் விலகும்படி சபையாரை எச்சரிக்கிறான். (i, ii.)

II. புத்திபோதனைகள். பொதுவான போதனைகளையும் ஒருவருக்கொருவர் செய்யவேண்டிய கடமைகளையும் எடுத்துக்காட்டி பின்பு வாழ்த்துதலும் ஆசீர்வாதமும் சொல்லி முடிக்கிறான். (iii, iv.)

4. பொருளிலும் நடையிலும் இந்த நிருபத்துக்கும் எபேசியர் நிருபத்துக்கும் சம்பந்தம் உண்டு. இரண்டும் ஏறக்குறைய ஒரே சமயத்திலே எழுதப்பட்டதாலும் இருசபைகளின் காரியாதிகள் பொதுப்பட ஒன்றுபோல் இருந்தாலும் இந்தச் சம்பந்தம் உண்டாய் இருக்கலாம். இவ்விரண்டு நிருபங்களையும் ஒத்துவாசித்தால் நன்மையாய் இருக்கும்.

5. இந்நிருபம் எக்காலத்திலும் உண்மையுள்ளதாக அங்கீகரிக்கப்பட்டு வந்தது.

[1] கொலோ. 2. 8–23; அதி. 4. [2] கொலோ. 3. 5—4. 6.
[3] கொலோ. 1. அதி.

## கொலோசெயர் நிருபத்தில் வருகிற ஒத்தவாக்கியங்கள்.

அதி. 1. 16. யோவா. 1. 1–3. | அதி. 2. 11. உபாக. ௰. 6, 15
1 கொரி. 8. 6. | சங். 58. 18.
எபி. 1. 2.

## 10. பிலேமோனுக்கு எழுதப்பட்ட நிருபம்.

1. எபேசியர் நிருபத்தையும் கொலோசெயர் நிருபத்தையும் கொண்டுபோனவன் இந்த நிருபத்தையும் கொண்டுபோனான். கொலோசெயர் நிருபத்தில் ஒநேசிமு அந்தச் சபையைச் சேர்ந்தவன் என்று சொல்லி இருக்கிறதாலும்[1] கொலோசெ சபைப் போதகன் அர்க்கிப்புவுக்கு இந்த நிருபத்தில் வாழ்த்துதல் சொல்லி இருக்கிறதாலும்[2] ஒநேசிமுவுக்கு எஜமானாகிய பிலேமோனும் கொலோசெ பட்டணத்தானாய் இருக்கவேண்டும் என்று அறியலாம். பிலேமோன் பெரிய மனுஷனும் ஐசுவரியவானுமாய் இருந்தான். அவன் புறஜாதியானுமாய் பவுல் அப்போஸ்தலனால் குணப்படுத்தப்பட்டவனுமாய் இருக்கவேண்டும்.[3] அவன் சகோதரருடைய விஷயத்தில் பக்ஷமோடே வைராக்கியம் உள்ள உடன்வேலையாளாய் இருந்தான்.[4]

2. ஒநேசிமுக்காக பவுல் இந்த நிருபத்தை எழுதினான். ஒநேசிமு பிலேமோனுடைய அடிமையாய் இருந்தான். ஒருவேளை அவன் தன் எஜமானுடைய பொருளைக் களவுசெய்து அடைக்கலத்துக்காக ரோமாபுரிக்கு ஓடிப்போய் இருக்கலாம். அங்கே முன் தான் அறிந்திருந்த பவுலைக் கண்டு சந்திக்கவே அந்த அப்போஸ்தலனுடைய போதகத்தினாலே குணப்பட்டான். குணப்பட்டபின்பு அவன் பவுலோடே கூடவே இருந்தான். பவுல் அவனைத் தன்னிடத்தில் வைத்துக்கொள்ளவேண்டும் என்று விரும்பினான். ஆனால் ஒநேசிமு தன் எஜமானுக்குச் செய்த நஷ்டத்துக்குத் தன்னால் கூடியமட்டும் உத்தரவாதம் செய்வது நியாயம் என்று இருவருக்கும் செம்மையாகக் காணப்பட்டதால் அவனை அப்போஸ்தலன் கொலோசெயுக்கு அனுப்பத் தீர்மானித்தான். அப்படி அனுப்புவதில் ஒநேசிமுக்கு மோசமும் நேரிடலாம். அவனை வதைசெய்து தண்டிக்க

[1] கொலோ. 4. 9. [2] கொலோ. 4. 17. பிலே. 2. வச. [3] பிலே. 19. வச. [4] பிலே. 1. வச.



அல்லது கொன்றுபோட பிலேமோனுக்கு அதிகாரம் இருந்தது. பிலேமோனுக்கு இன்னமும் அநேகம் அடிமைகள் இருந்திருப்பார்கள் ஆகையால் மற்றவர்களுக்கு எச்சரிப்பாக ஏதாவது ஒருவகை தண்டனையை ஒநேசிமுக்குச் செலுத்துவது அவசியமாகக் காணப்படலாம். ஆகையால் இவ்வகை மோசம் அவனுக்குச் சம்பவியாதபடிக்கு பவுல் இந்நிருபத்தை எழுதலானான். ஒநேசிமுக்கு மன்னிப்புக் கொடுத்து அவனை அன்பாய் ஏற்றுக்கொள்ளும்படி பவுல் பிலேமோனுக்குச் சாதுரியமாயும் மரியாதையாயும் உபசாரமாயும் எழுதி இருப்பதைக் கவனிக்கையில் எக்காலத்தோரும் புகழுகிறபடி அப்போஸ்தலனுடைய சிறந்த குணம் விளங்குகிறது. பவுல் முதலாவது பிலேமோனுடைய நற்கீர்த்திக்காகச் சந்தோஷப்பட்டு அவனுக்காக ஜெபம்பண்ணிவருவதாய்த் தெரிவித்து[1] பின்பு இந்த நிருபத்தில் காட்டப்படுகிற விசேஷித்த காரியத்தைத் துவக்குகிறான். அவன் அப்போஸ்தலனுடைய அதிகாரத்தைச் செலுத்துவதை விட்டுவிட்டு, முதிர்வயது உள்ளவனாகவும் பொதுவான விசுவாசத்தின்பொருட்டு கட்டப்பட்டவனாகவும் மிகுந்த தைரியமாய்த் தன் சிநேகிதனுக்காகப் பாசத்தோடே மன்றாடுகிறான்.[2] ஒநேசிமுடைய குற்றத்தை அவன் ஒப்புக்கொண்டு[3] அவனில் தேவகிருபையானது செய்த மாறுதலைச் சொல்லி அவன் ஓடிப்போனது அவனுக்கும் அவன் எஜமானுக்கும் நன்மையாக நடத்தப்பட்டிருக்கிறது என்று குறித்துக் காட்டி மறுபடியும் அவனை அடிமையானவனாக அல்ல, பிரியமுள்ள சகோதரனாக அங்கீகரித்துக்கொள்ளும்படிக் கேட்டுக்கொண்டு,[4] ஒநேசிமு பிலேமோனை விட்டு ஓடிப்போனதால் உண்டான நஷ்டத்தைப் பவுல் தான் பூரணமாய்ச் செலுத்தித் தீர்ப்பதாக வாக்குக் கொடுக்கிறான்.[5] அப்பால் பிலேமோனைப்பற்றிய நம்பிக்கையை எடுத்து உரைத்து அன்பான வாழ்த்துதல் சொல்லி நிருபத்தை முடிக்கிறான்.

3. இந்த நிருபம் அடிமைத்தனம் தப்பென்று தீர்க்கிறதில்லை என்று ஆட்சேபிப்பார் உண்டு. அதற்கு உத்தரவாக (1.) இந்த நிருபத்தில் அப்படித் தீர்ப்பது தகுதியாய் இராது; அது அப்போஸ்தலனுடைய நோக்கத்தை அபத்தமாக்குவதாய் இருக்கும். (2.) பவுல் இந்த நிருபத்திலும் பொதுவாய் மற்ற நிருபங்களி

[1] பிலே. 6. வச. [2] பிலே. [illegible] வச. [3] பிலே. 11–18. வச. [4] பிலே. 10–1[illegible] வச. [5] பிலே. 18–20. வச.

னும் நேராய் அடிமைத்தனம் தீதென்று கண்டியாதிருந்தும் இரண்டு நிருபங்களில் இந்தச் சங்கதியைப்பற்றி விசேஷித்து எழுதியிருக்கிறான். எஜமான்களுக்கும் அடிமைகளுக்கும் அவன் சொல்லி இருக்கிற புத்திமதிகள் அடிமைத்தனத்தின் நிஷ்டூரங்களைச் சாந்தப்படுத்துகிறதாய் இருக்கிறது. (3.) ஜனங்களுடைய க்ஷேமலாபங்களால் பின்னலாகத் தெற்றியிருந்த இந்த முறைமையை தகாதென்று வெளியரங்கமாய்ப் போதிப்பதாய் இருந்தால் முழுக் கட்டமைனத்துக்கும் நஷ்டத்தை உண்டுபண்ணுவதாய் இருக்கும். மேலும் திருச்சபையில் அநேக அடிமைகள் இருந்தால் அவர்கள் அப்போஸ்தலனுடைய போதனையால் ஏவப்பட்டுச் சுயாதீனத்துக்காக யுத்தம்செய்யும்படி துணிகரங்கொண்டாலும் கொள்வார்கள். (4.) சுவிசேஷமானது வெளியாசாரமாய் அடிமைத்தனத்தை நிராகரியாதிருந்தாலும் அதின் தன்மை அதை நிராகரிக்கிறது. அடிமை என்றும் சுயாதீனன் என்றும் வித்தியாசம் இருக்கக்கூடாத சபைகள் பூமியில் நாட்டப்படுகையில், அடிமைத்தனம் அதற்குமுன்பாக அசைந்து கடைசியாக நாசமாய்ப்போம் என்பதற்கு ஐயம் இல்லை. காரியம் படிப்படியாகப் பலமாய் அநுகூலமாக நடந்தேறி வருகிறது. வையகத்தில் உள்ள கிறிஸ்தமான தேசங்களில் மார்க்கம் உள்ளத்தில் கிரியை செய்யவே அடிமைத்தனம் முற்றும் அற்றுப்போகிறதாய் இருக்கிறது.

ஒநேசிமுக்காக அப்போஸ்தலன் கேட்டுக்கொண்ட காரியம் என்ன சித்திபெற்றது என்பதை நாம் அறியோம். அப்போஸ்தலன் "நான் சொல்லுகிறதிலும் அதிகமாய்ச் செய்வீர் என்று அறிந்திருக்கிறேன்" என்று சொல்வதைக் கவனிக்கையில் பிலேமோன் அப்போஸ்தலனுடைய விருப்பத்தின்படி ஒநேசிமுக்கு மன்னிப்பை அளித்துச் சுயாதீனனாக்கி இருக்கலாம் என்று எண்ணத்தக்கதாய் இருக்கிறது. ஒநேசிமு என்ற ஒருவன் பெரோயாவின் கண்காணியாய் இருந்தான் என்று ஒரு பூர்வ நூலில் சொல்லப்பட்டிருக்கிறது. கி. பி. 107ல் இக்நேசிய எபேசியருக்குத் தன் நிருபத்தை எழுதினபோது அவர்களுக்கு ஒநேசிமு என்ற பெயருடைய ஒருவன் கண்காணியாய் இருந்தான். சிலர் இவன்தான் பவுல் சொல்லிய ஒநேசிமு என்று எண்ணுகிறார்கள். இன்னொரு பூர்வீகநூலில் ஒநேசிமு ரோமாபுரியில் இரத்தச்சாட்சியாக மரித்தான் என்று சொல்லி இருக்கிறது. ஆதிச்சபையின் [illegible] இந்த நிருபத்துக்கு

[illegible] லா. 4. [illegible]

3 பிலே. 19. வச, 4 பிலே [illegible] ர்கள்.



## [illegible] பிலிப்பியருக்கு எழுதப்பட்ட நிருபம்.

1. இதற்குமுன் சொல்லப்பட்டிருக்கிற மூன்று நிருபங்களை அனுப்பின சில மாதங்களுக்குப்பின்பு பவுல் பிலிப்பியர் நிருபத்தை எழுதினான். இதற்குள்ளாக அவன் நிலைமையில் மாறுதல் உண்டாயிற்று. பர்ஹஸ் என்ற ரோமப் பிரதான நியாயாதிபதி மரித்துப்போனான். அவன் உத்தியோகத்தில் இருந்தவரையும் பவுல் சாந்தமாய் நடத்தப்பட்டான். அவனுக்குப்பின்பு பெனியுருபு என்பவனும் சோபேனியு திக்கிலீனு என்பவனும் அவன் ஸ்தானத்தில் வந்தார்கள். இவர்களில் பின்னினவன் துன்மார்க்கத்துக்குப் பேர்போனவனாய் இருந்தான். கைதியாய் இருந்த அப்போஸ்தலனுக்குத் தயவு கிடைக்கும் என்ற நம்பிக்கை முழுவதும் அற்றுப்போயிற்று. நேரோ ராயன் யூதமார்க்கத்தில் அமைந்த பாப்பியா என்ற ஒரு ஸ்திரீயை விவாகம் செய்தான். அவள்மூலமாய் யூதர்கள் தங்கள் பிராணப்பகைஞனுக்குத் தீங்குசெய்ய அநுகூலம் இருந்தது. ஆதலால் அப்போஸ்தலன் அந்தக் காலத்தில் ஆவியில் கலக்கம் உள்ளவனாய் இருந்தான். அவனுக்கு மரணம் அல்லது விடுதலை மிகவும் கிட்டி இருந்தது. அப்போது அவன் தனிமையாய் விடப்பட்டிருந்தான். அவன் இஷ்டர்கள் ஒருவர்பின் ஒருவராய்ப் பற்பல சபைகளுக்குப் போய்விட்டார்கள். இந்த ஆபத்தான தருணத்தில் மனித ஆறுதலும் தேறுதலும் அவனுக்குக் கிடையாமல் போய்விட்டது.

2. காரியம் இப்படி இருக்கையில் எப்பாப்பிரோதித்து[1] வந்து சேர்ந்ததால் அப்போஸ்தலன் மனத்தேறுதல் அடைந்தான். பிலிப்பியர் எப்பாப்பிரோதித்துமூலமாய் அப்போஸ்தலனுக்குச் செய்தியும் காணிக்கையும் அனுப்பினார்கள். பிலிப்பிச்சபையார் பவுலுக்கு மிகவும் பிரியம் உள்ளவர்களாய் இருந்தார்கள். பிலிப்பிபட்டணம் மக்கெதோனியாவில் இருந்தது; மக்கெதோனியாவின் ராஜாவாகிய பிலிப்பு என்பவன் அதைச் சிறப்பித்துக் கட்டித் தன் பெயரை அதற்குத் தரிப்பித்தான். ஐரோப்

1 இந்த எப்பாப்பிரோதித்து சிலர் நினைக்கிறபடி எப்பாப்பிராவாய் இருந்தால் அவன் சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்டு கொலோசெக்குத் திரும்பிப்போய் [illegible] இருக்கையில் பிலிப்பியரிடத்தில் இருந்து அப்போஸ்தல[illegible] [illegible] ன்றுபோகும்படி தெரிந்துகொள்ளப்பட்டிருக்க [illegible] ணடும்.

பாலிலே பவுல் முதலாவதாகச் சுவிசேஷத்தை இந்தப் பிலிப்பி பட்டணத்தில் பிரசங்கித்தான்.[1] அங்கே அவனுடைய பிரயாசம் சித்திபெற்றதால் அநேக சத்துருக்கள் கூட்டமாய் அவனுக்கு விரோதமாய் எழும்பினார்கள். அதிகாரிகளும் ஜனங்களும் பட்சமாய் நின்றார்கள். என்றாலும் அந்தப் பட்டணத்தில் விதைக்கப்பட்ட வித்தானது முளைத்து பூரணபலனைக் கொடுத்தது. அங்கே ஸ்தாபிக்கப்பட்ட சபையை அப்போஸ்தலன் பிந்தியகாலத்தில் இரண்டொருதரம் சந்தித்தது உண்டு.[2] பவுலால் ஸ்தாபிக்கப்பட்ட சபைகளில் பிலிப்பி சபையார்மாத்திரம் அவனுக்கு மிகுந்த பட்சத்தைக் காட்டினார்கள். அவன் மக்கெதோனியாவில் சுவிசேஷத்தை முதலாவது அறிவித்தபோது அவனுடைய ஆதரவுக்கு வேறொரு சபையும் உதவிசெய்ய இல்லை. அவன் தெசலோனிக்கேயில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கையில் பிலிப்பியர் இரண்டுதரம் அவனுக்குக் காணிக்கை அனுப்பினார்கள்.[3] கொரிந்துவில் அவன் பிரசங்கித்தபோது அப்படியே செய்தார்கள்.[4] பிலிப்பி சபையாரிடத்தில் இருந்து உபகாரத்தைப் பெற்றுக்கொண்டது அப்போஸ்தலனுக்கு இப்போது நூதனம் அல்ல.

3. இப்படி பாசத்தால் தன்னோடே கட்டுண்டிருந்த சபையாருக்கு அவர்கள் அனுப்பின ஆள்மூலமாய் இத்திருபத்தை எழுதி அனுப்புகிறான். இதிலே அன்பும் நன்றியறிதலும் நம்பிக்கையும் பொங்கி வடிவதுபோல் இருக்கிறது. இந்தச் சபையிலே அப்போஸ்தலன் யாதொரு விசேஷித்த குறையைக் கண்டுபிடித்ததாகத் தோன்றுகிறதில்லை. ஆனாலும் சபையிலே விசேஷித்தவர்களாய் இருந்த இரண்டு ஸ்திரீகள் எயோதியாளுக்கும் சிந்திகேயாளுக்கும் ஐக்கியபேதம் இருந்ததாகவும்,[5] சபையில் சிலருக்குள்ளே மனஸ்தாபங்களும் வீண்பெருமையும்[6] இருந்ததாகவும் எப்பாப்பிரோதீத்துமூலமாய்க் கேள்விப்பட்டான். பவுல் தன் நிலைமையைப்பற்றி ஆறுதலான செய்தியை அறிவிக்கவும் பிலிப்பி சபையார் தங்களுக்கு நேரிடும் பலத்த துன்பங்களிலும் உபத்திரவங்களிலும் சோதனைகளிலும் அவர்கள் தைரியம் அடைந்து பலப்படவும் அவர்களுக்குப் பிரயோசனமான ஆலோசனைகளும் எச்சரிப்புகளும் சொல்லவும் கிறிஸ்துமார்க்கத்துக்குரிய சன்மார்க்க ஒழுக்கங்களில் அவர்

---

[1] அப். 16. 9–40. [2] அப். ... கொ. 4. ... [3] பிலி. 4. 15. 16.
[3] பிலே. 19. வச. [4] பிலே ... [6] பிலி. 2. அதி.



ன் மிகவும் தேறும்படி முயற்சிசெய்யவுமாக இந்த நிருபத்தை எழுதுகிறான்.

4. இந்த நிருபத்தை நாலு பங்காக வகுக்கலாம்.

I. முகவுரை. (i. 1–11.)

II. புத்திமதிகள் கலந்த சுயகாரியங்கள். (i. 12–ii. 30.)

III. எச்சரிப்புகளும் போதனைகளும். (iii. 1–iv. 9.)

IV. உபகாரத்துக்காக நன்றியறிதல் பாராட்டி வாழ்த்துதல் சொல்லி முடிக்கிறான். (iv. 10–23.)

5. இந்த நிருபம் கி. பி. 62 கடைசியில் அல்லது 63 துவக்கத்தில் எழுதப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

## 12. பேதுரு எழுதின முதலாம் நிருபம்.

1. காலக்கிரமத்தின்படி பேதுரு எழுதின முதல் நிருபம் அடுத்துவருகிறது. எருசலேமில் கி. பி. 50ல் கூடின சங்கத்துக்குப்பின்பு பேதுரு அப்போஸ்தலனுடைய சரித்திரம் புதிய ஏற்பாட்டுச் சரித்திர ஆகமத்தில் சொல்லப்படவில்லை.[1] இந்த நிருபம் கி. பி. 63 அல்லது 64ல் எழுதப்பட்டது என்று எண்ணப்படுவதால் அவனைப்பற்றி அப்போஸ்தலர் நடபடியில் கடைசியாகச் சொல்லப்பட்டு இருப்பதற்கும் இந்த நிருபம் எழுதப்பட்டதற்கும் இடையே பதின்மூன்று அல்லது பதினாலு வருஷங்கள் கடந்துபோயிற்று என்று அறியலாம். இந்தக் காலத்தை அப்போஸ்தலன் எப்படிச் செலவிட்டான் என்பதைக் குறித்து இந்த நிருபத்தில் அவன் சொல்லிய ஒரு குறிப்பினால் அறிந்துகொள்ளலாம். கலா. 2; 11ல் காட்டியிருக்கிறபடி அவன் எருசலேமை விட்டபின்பு அந்தியோகியாவில் பிரசங்கித்துவந்தான். அந்தப் பட்டணத்தில் அவன் பவுலால் கடிந்துகொள்ளப்பட்டான். பேதுரு அந்தியோகியாவை விட்டு கொரிந்துவுக்கு வந்து அங்கே ஒரு சபையை ஸ்தாபித்தான் என்று பொதுப்படச் சொல்லப்படுகிறது உண்டு. இதற்குப்பின் அவன் இடங்கள்தோறும் போய் விருத்தசேதனம் உள்ளவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துத் தன் ஜீவகாலத்தைப் பின்னிட்டான். இந்த நிருபத்தின் கடைசியில் இது பாபிலோனிலிருந்து எழுதப்பட்டதாகச் சொல்லி இருக்கிறது.[2] அந்தப் பட்டணம் இந்த நிருபம் எழுதப்பட்ட சபைகளுக்குக்

---

[1] அப். 15. அதி. [2] 1 பேது. 5. 13.

னமாய் இருந்தபோதிலும் அக்காலத்தில் அது யூதருடைய கல்விக்கு ஒரு முக்கியமான இடமாய் இருந்ததோடே யூதர்களுக்குள் திவ்விய பணிவிடையை நடப்பிப்பதற்குத் தகுந்த மத்தியான இடமாயும் இருந்தது.[1]

2. இது எங்கே இருந்து எழுதப்பட்டாலும் அது எழுதப்பட்ட நோக்கம் பிரத்தியட்சமாய் இருக்கிறது. இந்த நிருபம் பொந்து, கலாத்தியா, கப்பத்தோக்கியா, ஆசியா, பித்தினியா[2] தேசங்களில் சிதறி இருக்கிற பரதேசிகளுக்கு எழுதப்பட்டது. "பரதேசிகள்" என்பது யூதேயாவில் உண்டான உபத்திரவங்களின் நிமித்தம் மற்றத் தேசங்களுக்குச் சிதறிப்போய் இருந்த யூதக்கிறிஸ்தவர்களைக் குறிக்கும். இந்தப் பரதேசிகள் வீட்டை விட்டு அலைந்துதிரிந்ததோடே சீக்கிரத்துக்குள்ளாக அவர்களைச் சோதிக்கும்படி அவர்கள் நடுவில் பற்றி எரியும் அக்கினியாகிய துன்பங்கள் வரும் என்ற எண்ணம் உடையவர்களாயும் இருந்தார்கள். அந்தக் காலத்துச் சரித்திரத்தைப் பார்க்கையில் யூதர்கள் ரோமருடைய ஆளுகைக்குக் கீழ்ப்படிந்திருக்க எவ்வளவும் மனதைக் காட்டாதவர்களாய் இருந்தார்கள் என்றும் அவர்கள் ராஜ்யம் அழிவுக்கு ஏதுவாய் இருந்தது என்றும் அறியலாம். இப்படி வரப்போகிற உபத்திரவங்களுக்கு அவர்களை ஆயத்தப்படுத்தும்படியாக இந்த நிருபம் எழுதப்பட்டது. துன்பகாலத்தில் அவர்களை ஆறுதல்படுத்தவும் துன்பத்தில் நல்லவண்ணமாய் நடந்துகொள்ளவேண்டும் என்று போதிக்கவும் நோக்கமாய் இது எழுதப்பட்டது. அவர்கள் ராஜாக்களையும் தேசாதிபதிகளையும் கனம்பண்ணவும் கலகக்குணத்தை விட்டுவிடவும் இதில் போதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் நடக்கையும் தன்மையும் விபரீதமாய்ச் சொல்லப்பட ஏது

[1] இங்கே காட்டப்பட்டிருக்கிற பாபிலோன் வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிற பாபிலோன் அதாவது ரோமாபுரி என்று சொல்லுவார் உண்டு. இந்த அபிப்பிராயம் சரியானதல்ல. பேதுரு ரோமாபுரிக்குள் ஒருகாலும் இருந்தான் என்று சொல்லிய பாரம்பரியமும் நம்பப்படத்தக்கதல்ல.

[2] 1 பேது. 1. 1. இந்த நிருபம் பாபிலோனில் இருந்து எழுதப்பட்டதே அல்லாமல் ரோமாபுரியில் இருந்து எழுதப்படவில்லை. பாபிலோனில் இருந்து எழுதுகிறவன் இயற்கையாய் சின்ன ஆசியாவில் உள்ள நாடுகளைக் கிரமமாய் எழுதுவதுபோல முதலாவது பாபிலோனுக்கு மிகவும் சமீபமாய் இருந்த பொந்துவையும் பின்பு தொலைவில் இருந்த ஆசியாவையும் பித்தினியாவையும் காட்டி இருக்கிறான்.



வாய் இராதபடி அவதூறு பேசுகிறவர்களின் வாய்களை அடைக்கவும் சத்துருக்களுக்கு வெட்கம் உண்டாகவும் மற்றவர்களைத் தங்கள் நடக்கையினாலே வசப்படுத்தவும் பரிசுத்தராய் ஜீவனம் பண்ணும்படி போதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

3. இந்த நிருபத்தை முகவுரை முடிவுரை அன்னியில் நாலு பங்காக வகுக்கலாம்.

I. துன்பத்தில் தளராமல் உறுதியாய் நிலைநின்று நல் நடக்கையைக் காட்ட புத்திபோதனைகள் சொல்லப்படுகிறது. (i, ii. 10.)

II. பரிசுத்த நடக்கை உள்ளவர்களாய் இருந்து சில விசேஷித்த கடமைகளை நிறைவேற்றும்படி போதனைகள் காட்டப்பட்டிருக்கின்றன. (ii. 11–iii. 13.)

III. கிறிஸ்துவின் மாதிரியையும் மற்றும் காரியங்களையும் எடுத்துக்காட்டி பொறுமை உள்ளவர்களாயும் பரிசுத்தம் உள்ளவர்களாயும் கடமைகளை நிறைவேற்றும்படி போதனை செய்யப்பட்டிருக்கிறது. (iii. 14–iv. 19.)

IV. போதகமாரும் சபையாரும் நடந்துகொள்ளவேண்டியதற்கு ஆலோசனைகளும் பின்பு வாழ்த்துதல்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. (v.)

## பேதுருவின் முதலாம் நிருபத்தில் வருகிற ஒத்தவாக்கியங்கள்.

| | | | |
|---|---|---|---|
| அதி. 1. 7. | சக. 13. 9. | அதி. 2. 6. | ஏசா. 28. 16. |
| ,, ,, 10, 11. | ஏசா. 53. அதி. தானி. 2. 44; 7. 27; 8. 13; 9. 26–27; 10. ஆதி. ஆகா. 2. 7–9. | ,, ,, 7. | சங். 118. 22, 23. |
| | | ,, ,, 9. | யாத். 19. 5, 6. உபா. 7. 6. |
| | | ,, ,, 10. | ஓசி. 1. 9, 10. |
| | | ,, ,, 23, 24. | ஏசா. 53. 4–12. |
| | | ,, 3. 6. | ஆதி. 18. 12. |
| ,, ,, 12. | ஏசா. 2. 2, 3. தானி. 12. 8, 9, 13. | ,, ,, 10–12. | சங். 34. 12–16. |
| | | ,, ,, 14, 15. | ஏசா. 8. 12, 13. |
| | | ,, ,, 20. | ஆதி. 6. 5–22. |
| ,, ,, 16. | லேவி. 11. 44. | ,, 4. 8. | நீதி. 10. 12. |
| ,, ,, 24, 25. | ஏசா. 40. 6–8. | ,, ,, 17. | ஏசா. 10. 12. |
| ,, 2. 5. | ஏசா. 61. 6; 62. 12. | ,, 5. 3. | எசே. 34. 2–10. |
| | | ,, ,, 6. | ஏசா. 57. 15. |

## 13. பேதுரு எழுதின இரண்டாம் நிருபம்.

1. பேதுருவின் இரண்டாம் நிருபம் அவனுடைய முந்தின நிருபம் அனுப்பப்பட்டவர்களுக்கே ஏறக்குறைய ஒரு வருஷத்துக்குப் பின்பு எழுதப்பட்டது.[1] அப்போஸ்தலன் இரத்தச்சாட்சியாய் மரிப்பது சீக்கிரத்துக்குள்ளாக நேரிடும் என்ற எண்ணத்தோடே இது எழுதப்பட்டது.[2] அப்போஸ்தலன் ராஜாங்கத்திலே குழப்பங்களை உண்டுபண்ணுகிறான் என்று அவன்பேரில் சாட்டப்பட்ட குற்றங்களுக்கு உத்தரவு சொல்லும்படியாக ரோமாபுரிக்கு வரவழைக்கப்பட்டிருந்தான் என்றும் அவ்விடத்தில் இருந்து இந்த நிருபத்தை எழுதினான் என்றும் சிலர் சொல்லுகிறார்கள். பேதுரு ராஜதானியிலே இரத்தச்சாட்சியாகத் தலைகீழாகச் சிலுவையில் அறையப்பட்டு மரித்தான்.

2. முந்தின நிருபத்துக்கும் இந்த நிருபத்துக்கும் நோக்கத்தில் வித்தியாசம் உண்டு. முந்தின நிருபம் வெளியே இருந்து உண்டாகும் உபத்திரவங்கள் துன்பங்களை எதிர்நோக்கி இருந்த சபைகளுடைய விசுவாசத்தையும் பொறுமையையும் ஸ்திரப்படுத்தும் நோக்கமாய் எழுதப்பட்டது. இந்த நிருபம் உள்ளே இருந்து கள்ளப்போதகராலும் மாறுபாடான சிற்றின்பப் பிரியராலும் அவபக்தரான பரியாசக்காரராலும் உண்டாகும் மிகக்கொடிய மோசங்களுக்கு எச்சரிக்கையாய் இருக்கும்படிக்கான நோக்கமாய் எழுதப்பட்டது. இரு நிருபங்களிலும் காணப்படுகிற பாஷைநடை வித்தியாசத்துக்கு இரு நிருபங்களும் எழுதப்பட்ட வெவ்வேறான நோக்கமே காரணமாய் இருக்கலாம். முதல் நிருபம் துன்பத்தில் அகப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு உற்சாகமாயும், இரண்டாம் நிருபம் சத்தியத்துக்குச் சத்துருக்களும் பாவத்தில் புரளுகிறவர்களும் என்று அப்போஸ்தலன் எண்ணினவர்களுக்குக் கண்டிப்பாயும் எழுதப்பட்டிருக்கிறது. எப்பேர்ப்பட்ட பதிதர்கள் இங்கே கண்டிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது திட்டமாய்த் தெரியாது. ஆனாலும் அவர்கள் சிற்றின்ப நடபடிகள்[3] கர்த்தரை மறுதலிப்பது[4] நியாயதினத்தைப்பற்றி கள்ளவாக்குத்தத்தம் செய்வது[5] ஆகிய இவைகளைக்குறித்துத் தெளிவாய்க் காட்டப்பட்டிருக்கிறது.

[1] 2 பேது. 3. 1. [2] 2 பேது. 1. 14.
[3] 2 பேது. 2. 10-15. [4] 2 பேது. 2. 1. [5] 2 பேது. 2. 13.



இங்கே சொல்லப்பட்டவர்களுடைய லட்சணம் யூதா நிருபத்திலும் வெளிப்படுத்தின விசேஷத்திலும் காட்டப்பட்டவர்களுடைய லட்சணத்துக்கு ஒத்திருக்கிறது.[1]

3. இந்த நிருபத்தை மூன்று பங்காக வகுக்கலாம்.

I. முகவுரை. (i. 1, 2.)
II. புத்திபோதனைகள். (i. 3-iii. 14.)
III. முடிவுரை. (iii. 15-18.)

4. இந்த நிருபத்தில் பவுல் அப்போஸ்தலனுடைய நிருபங்களைப்பற்றிக் குறிப்பு வருவதைப்பார்க்கில்[2] அந்த நிருபங்கள் சபைகளில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட சில வருஷங்களுக்குப்பின் இது எழுதப்பட்டிருக்கவேண்டும் என்றும் பவுலின் நிருபங்கள் மற்ற வேதாகமங்களுக்கு ஒப்பாகக் கிறிஸ்தவர்களின் வேதாகமங்களாக ஒப்புக்கொள்ளப்பட்டன என்றும் அறியலாம்.

5. இந்த நிருபத்தின் கர்த்தாவினிச்சயத்தைப்பற்றி ஆட்சேபிக்கப்பட்டது உண்டு. ஆனால் தேறின நுட்பசாஸ்திரிகள் இது அப்போஸ்தலன் இரத்தச்சாட்சியாக மரிப்பதற்கு சற்றுக் காலத்துக்குமுன்னே கி. பி. 64 அல்லது 65ல்[3] எழுதப்பட்டது என்று எண்ணுகிறார்கள்.

### பேதுருவின் இரண்டாம் நிருபத்தில் வருகிற உத்தவாக்கியங்கள்.

| | | | |
|---|---|---|---|
| அதி. 1. 16, 17. | மத். 17. 1-5. | அதி. 2. 22. | நீதி. 26. 11. |
| ,, ,, 21. | 2 சாமு. 23. 2. | ,, 3. 5, 6. | ஆதி. 1. 6-9; 7. 11-23. |
| ,, | 2 தீமோ. 3. 16. | | |
| ,, 2. 5. | ஆதி. 7. 1-23. | ,, ,, 10. | சங். 102. 26, 27. |
| ,, ,, 6, 7. | ,, 19. 15-25. | ,, ,, 13. | ஏசா. 65. 17-19. |
| ,, ,, 15, 16. | எண். 22. 5-28. | | வெளி. 21. 1. |

[1] யூதா. 8-16. வச. வெளி 2. 14-20.
[2] 2 பேது. 3. 15, 16. வேதவாக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கிற காரியம் 1 தெச. 4. 13-5. அதி. 11 வரையும் குறிக்கும் என்று ஒருவர் சொல்லுகிறார்.
[3] பேதுரு தலைகீழாகச் சிலுவையில் அறையப்பட்டான் என்றும் அவன் மனைவி அவன் மரணத்துக்குச் சற்று முந்திக் கொல்லப்பட்டாள் என்றும் சொல்லப்படுவது உண்டு.

## 14. தீமோத்தேயுவுக்கு எழுதின முதலாம் நிருபம்.

1. பவுல் அப்போஸ்தலன் எழுதின கடைசியான நிருபங்களைக்குறித்துப் பார்ப்போமாக. அவன் அந்தியகால சரித்திரம் தெளிவாகக் காட்டப்படவில்லை. சிலர் அவன் ரோமாபுரியில் இரண்டு வருஷமாய்க் கைதியாய் இருந்தபோது அவனுக்கு மரணம் நேரிட்டது என்பார்கள். வேறு சிலர் அவன் அப்போது மரணத்தீர்ப்புப் பெறாமல் விடுவிக்கப்பட்டான் என்றும் (பூர்வீகச் சபையின் பிதாக்கள் இந்தப் பிந்தின அபிப்பிராயம் உடையவர்களாய் இருந்தார்கள்) அவன் விடுதலை பெற்றபின்பு ஸ்பானியாவுக்கும் மேல்திசைக்கும் போய், பின்பு தீமோத்தேயு தீத்து என்பவர்களோடே கீழ்த்திசைக்கு வந்து கடைசியாக இரண்டாந்தரமாக ரோமாபுரிக்குக் கைதியாகக் கொண்டுபோகப்பட்டு, அங்கே இரத்தச்சாட்சியாக மரித்தான் என்றும் சொல்லுகிறார்கள். இது சரியாய் இருக்கலாம்; சரியாய் இருந்தால் இந்த நிருபம் மக்கெதோனியாவிலிருந்து எழுதப்பட்டிருக்கவேண்டும். பவுல் தீமோத்தேயுவை எபேசுவிலும்[1] தீத்துவை கிரேத்தாவிலும்[2] நிறுத்திவிட்டு, தான் மக்கெதோனியாவுக்குப் போயிருந்தான். ஆகவே, தீமோத்தேயு எபேசுவில் இருக்கையில் இந்நிருபம் அவனுக்கு எழுதப்பட்டது. இது அவனுக்குப் போதனையைக் கொடுக்கவும் அவனைத் தைரியப்படுத்தவும் சபையை ஆளும் விஷயத்தில் அவனுக்கு ஆலோசனை கொடுக்கவுமான விசேஷித்த நோக்கமாய் எழுதப்பட்டாலும் அவன் கள்ளப்போதகமாருடன் போராடுவதில் அவனுடைய அதிகாரத்துக்கு அத்தாட்சி சாதனமாகவும் இருக்கும்படிக்கும் எழுதப்பட்டது. இந்த நிருபம் எழுதப்பட்ட நோக்கம் 1. 3, 4; 3. 15; 6. 20, 21ல் சொல்லப்பட்டிருக்கிறது.

2. தீமோத்தேயுவைப்பற்றிச் சில காரியங்களைப் பார்ப்போமாக. அவனைக்குறித்து அப்போஸ்தலர் நடபடி 16. 1ல் முதலாவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவன் தாய் யூதஸ்திரீயும் தகப்பன் கிரேக்கனுமாய் இருந்தார்கள். அவன் இளம்பிராயமுதல் தன் தாயாராலும் பாட்டியாராலும் வேத அறிவில் நன்றாய்ப் போதிக்கப்பட்டிருந்தான்.[3] பவுல் முதல் பிரயாணத்தில் லீஸ்திராவுக்கு வந்தபோது தீமோத்தேயு சுவிசேஷ வசனத்தைக் கேட்டு அதை அங்கீகரித்திருக்கலாம்.[4] ஆதலால்

[1] 2 தீமோ. 1. 3.
[2] தீத். 1. 5.
[3] 2 தீமோ. 1. 5; 3. 14, 15.
[4] அப். 14. 6–20.



அப்போஸ்தலன் அவனை "உத்தம குமாரன்"[1] என்று அழைத்திருக்கிறான். பரிசுத்த பவுல் இரண்டாம் பிரயாணத்தில் அவ்விடத்துக்கு வந்தபோது தீமோத்தேயு சீஷனாக அத்திசைகளில் உள்ள யாவராலும் நற்சாட்சி பெற்றிருந்தான்;[2] அவன் வாலிபனாய் இருந்தபோதிலும்[3] திவ்விய ஊழியத்தில் தனக்கு உதவியாய் இருக்கும்படி அவனைத் தெரிந்துகொண்டான். அதுமுதல் தீமோத்தேயுவைப்பற்றி அடிக்கடி புதிய ஏற்பாட்டில் சொல்லியிருக்கிறது. பவுல் தெசலோனிக்கேயாவிலிருந்து துன்பத்தினால் துரத்தப்பட்டபோது, அந்தச் சபையை ஸ்திரப்படுத்தும்படி தீமோத்தேயுவையும் சீலாவையும் பின்நிறுத்தினான்.[4] சில காலம் சென்றபின்பு அவர்கள் இருவரும் அந்தப் பட்டணத்தை விட்டு கொரிந்துவுக்கு அப்போஸ்தலனண்டைக்கு வந்தார்கள்.[5] அப்போஸ்தலன் எபேசுவில் இருந்தபோது மக்கெதோனியா சபைக்கு நேரிட்ட துன்பத்தில் அவர்களைப் பலப்படுத்த மறுபடியும் தீமோத்தேயுவை அவ்விடத்துக்கு அனுப்பினான்.[6] அப்புறம் அவன் அப்போஸ்தலனோடே ஆசியாவுக்குப் போனான்.[7] பின்பு ரோமாபுரிக்கு வந்து அப்போஸ்தலன் கொலோசெயருக்கும் பிலேமோனுக்கும் பிலிப்பியருக்கும் நிருபங்களை எழுதினபோது அவன் கூடவே இருந்தான்.[8] பவுல் விடுதலை அடைந்து ரோமாபுரியை விட்டபோது அவன் தீமோத்தேயுவை எபேசுச் சபையைக் கண்காணிக்க வைத்தான். எவ்வளவு காலம் தீமோத்தேயு அந்தச் சபையை மேல்விசாரித்தானோ அது தெரியாது. ஆனால் பிந்திய காலத்தில் அப்போஸ்தலன் இரண்டாவதாக ரோமாபுரியில் சிறையாக்கப்பட்டபோது அவ்விடத்துக்கு வரும்படி கட்டளை பெற்றான்.[9] தீமோத்தேயு எப்போது எவ்வகையாய் மரித்தான் என்று சொல்லப்படவில்லை. சிலர் எபிரெயர், 13. 23ல் சொல்லியதை வைத்துக்கொண்டு அவன் பவுலோடே சிறைச்சாலையில் அடைபட்டான் என்றும் நேரோ ராயனின் மரணகாலத்திலே அவன் விடுவிக்கப்பட்டான் என்றும் சொல்லுகிறார்கள்; வேறு சிலர் அவன் பவுலின் மரணத்துக்குப்பின்பு எபேசுச் சபையை மேல்விசாரித்து தொமிஷியன் அல்லது நேரோவின் காலத்தில் இரத்தச்சாட்சியாய் மரித்தான் என்கிறார்கள்.

[1] 1 தீமோ. 1, 2.
[2] அப். 16. 1, 2.
[3] 1 தீமோ. 4. 12.
[4] அப். 17. 13, 14.
[5] அப். 18. 5.
[6] அப். 19. 22.
[7] அப். 20. 4.
[8] பிலி. 1. 1. கொலோ. 1. 1. பிலே. 1, வச.
[9] 2 தீமோ. 4. 9.

3. இந்த நிருபத்தை மூன்று பங்காக வகுக்கலாம்.

I. முகவுரை. (i. 1, 2.)

II. எபேசுவில் தேவனுடைய சபையிலே தீமோத்தேயு நடந்துகொள்ளவேண்டிய விதத்துக்குப் போதனை. (i. 3–vi. 19.).

இதிலே யூதபோதகமாருடைய கள்ள உபதேசங்களுக்கு எதிராகச் சுத்த உபதேசத்தைக் காத்துக்கொள்ளவும் தேவாராதனையில் நடக்கவேண்டியவகையைக்குறித்தும் கிறிஸ்தவரான பெண்பிள்ளைகள் நடக்கவேண்டிய விதத்தைக்குறித்தும் திருச்சபை உத்தியோகஸ்தரைக்குறித்தும் தீமோத்தேயுவின் போதகத்தையும் அவன் பரிசுத்தனாய் நடக்கவேண்டியதையுங்குறித்தும் குற்றவாளிகளையும் விதவைகளையும் மூப்பர்களையும் ஐசுவரியவான்களையும் நடத்தவேண்டிய விதத்தைப்பற்றியும் பல புத்திமதிகளைச் சொல்லி அடிமைகள் செய்யவேண்டிய கடமைகளையும் எடுத்துக் காட்டியிருக்கிறான்.

III. முடிவுரை. (vi. 20, 21.)

4. தீமோத்தேயுவுக்கும் தீத்துவுக்கும் எழுதப்பட்ட நிருபங்கள் "போதகர் நிருபங்கள்" எனப்படும்; அவைகளிலே போதகமாருடைய தன்மை இலட்சணம் கடமைகள் தெளிவாகக் காட்டப்பட்டு இருக்கின்றன.

### தீமோத்தேயுவின் முதல் நிருபத்தில் வருகிற ஒத்தவாக்கியங்கள்.

| | | | |
|---|---|---|---|
| அதி. 5. 18. | உபா. 25. 4. | அதி. 6. 14. | உபா. 32. 39. |
| ,, ,, 19. | ,, 19. 15. | | |

## 15. தீத்துவுக்கு எழுதின நிருபம்.

1. தீத்துவின் நிருபம் தீமோத்தேயுவுக்கு நிருபம் எழுதப்பட்ட காலத்தில் எழுதப்பட்டதாகத் தோன்றுகிறது. தீத்து பவுல் அப்போஸ்தலனுடைய கூட்டாளிகளில் ஒருவன்.[1] அவன் கிரேக்கனாய் இருந்தான்;[2] அவன் பவுல் அப்போஸ்தலனால் குணப்படுத்தப்பட்டவன், "பொதுவான விசுவாசத்தின்படி உத்தம குமாரன்" என்று அவனை அப்போஸ்தலன் அழைத்திருக்கிறான்.[3] பவுல் குணப்பட்ட பதினாலு வருஷங்களுக்குப்பின்பு அவன் அந்த அப்போஸ்தலனோடே எருசலேமுக்குப் போனான்.[1] பின்பு மறுபடி பவுலோடே திரும்பி திவ்விய ஊழியத்திற்காக அவனோடே பிரயாணம் செய்துவந்தான். பவுல் எபேசுவில் இருந்தபோது அவனோடேகூடவே இருந்தான். கொரிந்தியருக்கு எழுதின முதல் நிருபத்தைக் கொண்டுபோகவும் அந்தச் சபையில் கேட்ட பிரிவினைகளை நிவிர்த்தி செய்யவும் யூதேயாவில் உள்ளவர்களுக்குத் தர்மசகாயம் சேகரிக்கவும் அனுப்பப்பட்டான்.[2] பின்பு மக்கெதோனியாவுக்குப் போய் அங்கே பவுலைச் சேர்ந்துகொண்டான்.[3] பின்பு கிரேத்தாதீவில் ஒழுங்கீனமாய் இருந்தவைகளை ஒழுங்குப்படுத்தும்படி அப்போஸ்தலனால் அனுப்பப்பட்டான்.[4] பின்பு நிக்கொப்போலிக்கு வரும்படி கட்டளைபெற்றான்.[5] பவுல் இரண்டாந்தரம் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டபோது ரோமாபுரியில் இருந்தான். ஆனால் பவுலின் விசாரணை முடியுமட்டும் அங்கே இருக்கவில்லை. தல்மாத்தியாநாட்டுக்கு அனுப்பப்பட்டான்.[6] அவன் மறுபடியும் கிரேத்தாவுக்குத் திரும்பி 94 வயதாய் இருக்கும்போது மரித்தான் என்று பாரம்பரியம் சொல்லுகிறது.

[1] 2 கொரி. 8. 23. [2] கலா. 2. 3. [3] தீத்து. 1. 4.



2. இந்த நிருபம் என்ன நோக்கத்துக்காக எழுதப்பட்டது என்பது பிரத்தியட்சமாய் இருக்கிறது. தீத்து திவ்விய பணிவிடையை நடப்பிக்கவேண்டிய விதத்தைக்குறித்து அவனுக்குப் போதனை அருளும் நோக்கமாகவே இது எழுதப்பட்டது. அவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட வேலை மிகுந்த வருத்தமுள்ளதாய் இருந்தது. கிரேத்தாவில் அநேக வருஷங்களாகக் கிறிஸ்தவர்கள் இருந்தார்கள்.[7] அவர்கள் யூதக் கள்ளப்போதகமாரால் எத்தப்பட்டு இருந்தார்கள்.[8] அந்தக் கள்ளப்போதகமார் பவுல் கிரேத்தாவுக்குப் போய்ப் பிரசங்கித்ததால் எரிச்சல் அடைந்து ஜாக்கிரதையாய்த் தங்கள் கள்ளப்போதகங்களைப் பிரசித்தப்படுத்தினதாகத் தோன்றுகிறது. மேலும் கிரேத்தாவினருடைய தன்மையும் சுவிசேஷத்துக்கு எதிரிடையாய் இருந்தது. அவர்கள் பொருளாசை சற்பனை சண்டை கபடமுள்ளவர்களாயும் விபசாரம் வெறித்தனம் பெருந்தீனி முதலிய அகாமியங்களுக்குப் பேர்போனவர்களாய் இருந்தார்கள். இப்படிச்

[1] கலா. 2. 1. அப். 15. அதி.
[2] 2 கொரி. 2. 13; 7. 5; 8. 6.
[3] 2 கொரி 7. 5, 6.
[4] தீத். 1. 5.
[5] தீத். 3. 12.
[6] 2 தீமோ. 4. 10.
[7] அப். 2. 11.
[8] தீத். 1. 10-11; 3. 9.

காரியங்கள் இருந்தமையால் தீத்து வெகு எச்சரிக்கையோடும் விவேகத்தோடும் தன் முயற்சிகளை நடப்பிக்கவேண்டியதாய் இருந்தது. விசேஷமாய்ச் சபையை விசாரிப்பதற்கு ஆட்களைத் தெரிந்து ஏற்படுத்துவதில் வெகு சாவதானமாய் இருக்கவேண்டியதாய் இருந்தது. அந்தச் சபையின் நிலைமையைப் பற்றி அப்போஸ்தலன் தான் அந்தத் தீவில் இருந்த சொற்பக் காலத்துக்குள்ளாக அறிந்துகொண்டானோ அல்லது பிந்திய காலத்தில் அதைக்குறித்துக் கேள்விப்பட்டானோ என்பது தெரியாது. கிரேத்தாவில் குறைவாய் இருக்கிறவைகளைத் தீத்து ஒழுங்குப்படுத்தும்படிக்கும்[1] அவனுடைய அரிதான வேலையில் அவனைத் தகுதியுள்ளவன் ஆக்கவும் நோக்கமாய் இந்த நிருபம் எழுதப்பட்டதோடே தீத்து தன் அதிகாரத்தைச் செலுத்துவதில் அப்போஸ்தலனாலே அதிகாரம் பெற்றிருக்கிறான் என்று காட்டவும் எழுதப்பட்டு இருக்கலாம்.

3. இந்த நிருபத்தை மூன்று பங்காக வகுக்கலாம்.

I. முகவுரை. (i. 1–4.)

II. தீத்துவுக்குப் போதனை. இதில் எப்படிப்பட்டவர்களைப் போதகமாராய் நியமிக்கவேண்டும் என்றும், அவர்கள் நடப்பிக்கவேண்டிய கடமைகள் இன்னவைகள் என்றும், அவர் அவர் வயதுக்கும் ஸ்திதிக்கும் தக்கதாய்ப் போதிக்கவேண்டியது என்றும், தீத்து தன்னுடைய உபதேசம் பலிதப்படும்படிதானே அவர்களுக்கு நன்மாதிரியைக் காட்டவேண்டும் என்றும், துரைத்தனத்துக்குக் கீழ்ப்படியவும் யாவருக்கும் முன்பாகச் சாந்தம் உள்ளவர்களாய் இருக்கவும் நற்கிரியைகளில் ஐசுவரியம் உள்ளவர்களாய் இருக்கவும் வீண் தர்க்கங்களுக்கும் சவிசேஷத்தைப் புரட்டுகிறவர்களுக்கும் விலகவும் வேண்டும் என்றும் சொல்லப்பட்டு இருக்கிறது. (i. 5–iii. 11.)

III. முடிவுரை. (iii. 12–15.)

4. இந்த நிருபத்துக்கும் தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்ட முதல் நிருபத்துக்கும் விசேஷித்த ஒற்றுமை இருக்கிறது. இந்த இரண்டு நிருபங்களும் ஒரே சமயத்தில் ஒரே நோக்கமாக எழுதப்பட்டதால் இந்த ஐக்கியம் இருக்கிறது.

[1] தீத். 1. 5.



## தீத்துவின் நிருபத்தில் வருகிற ஒத்தவாக்கியங்கள்.

அதி. 1. 6, 7. 1 தீமோ. 3. 1–7.
„ 13. ஏசா. 29. 13. மத். 15. 1–10.
„ 2. 14. எபே. 5. 2. எபி. 9. 14. 1 பேது. 2. 9.

அதி. 3. 5. எசே. 36. 25. அப். 10. 46; 15. 7–9. ரோ. 3. 20, 28. 2 தீமோ. 1. 9.

## 16. தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்ட இரண்டாம் நிருபம்.

1. இந்த நிருபம் பவுலால் கடைசியாக எழுதப்பட்டது. அவன் இரண்டாம்தரம் ரோமாபுரிக்குக் கைதியாக வந்தபோது இது எழுதப்பட்டிருக்கவேண்டும். தீமோத்தேயு அப்போது எபேசுவில் இருந்ததாகத் தோன்றுகிறது. இந்த நிருபத்தைப் பவுல் எழுதினபோது பவுல் இரத்தச்சாட்சியாய் மரிக்கப்போவதை எதிர்நோக்கி இருந்தான். 1. 8, 16; 4. 6. அப்போஸ்தலர் நடபடி 28–ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி அப்போஸ்தலன் சிறைச்சாலையில் இருந்தபோது அவனுக்கு மரணம் நேரிட்டது என்று சொல்லுகிறவர்கள் இந்த நிருபம் அவன் கைதியாய் இருந்தபோது எழுதப்பட்டது என்பார்கள். ஆனால் காரியங்களை நன்றாய்ச் சீர்தூக்கிப்பார்க்கையில் பவுல் இரண்டாம்தரம் சிறைச்சாலையில் அடைபட்டபோது இதை எழுதினான் என்று எண்ணவேண்டியதாய் இருக்கிறது. 4. 13ல் துரோவாபட்டணத்தில் அப்போஸ்தலன் வைத்து வந்த மேல் அங்கியையும் புஸ்தகங்களையும் எடுத்துக்கொண்டுவா என்றும், 20–ம் வசனத்தில் எரஸ்து கொரிந்துபட்டணத்தில் இருந்துவிட்டான், துரோப்பீமுவை மிலேத்துவில் வியாதிப்பட்டவனாக விட்டுவந்தேன் என்றும், சொல்லியிருப்பதைக் கவனிக்கையில் அப்போஸ்தலர் நடபடி 28–ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற காலத்தில் இவைகள் எழுதப்பட்டு இருக்கவேண்டும் என்று சொல்ல ஏதுவில்லை. ஏனென்றால் அப்போஸ்தலன் கொரிந்து துரோவா மிலேத்து[1] என்னும் பட்டணங்களுக்குப் போய் அப்போது ஆறுவருஷம் ஆகிறது. இந்த இடங்களுக்கு அப்போஸ்தலன் போனபோது தீமோத்

[1] அப். 20. 5, 17.

தேயுவும் கூடவே இருந்தான். அந்தத் தருணத்தில் துரோப்பீமு மிலேத்துவில் இல்லை. பவுல் எருசலேமில் கைதிசெய்யப்பட்டபோது அவனோடே துரோப்பீமு இருந்ததாக வாசிக்கிறோம்.[1] ஆகையினால் மேற்சொல்லிய சங்கதிகள் அப்போஸ்தலனுடைய முதலாம் சிறையிருப்புக்குப்பின்பு நடந்ததாகப் பிரத்தியட்சமாய் இருக்கிறது.

2. மேலும் முதலாவதாய்ச் சிறைச்சாலையிலிருந்து அப்போஸ்தலன் நிருபங்களை எழுதினபோது அவனோடேகூட இருந்த சிநேகிதர் இப்போது அவனோடே இருந்ததாகத் தோன்றுகிறதில்லை.[2] அதோடே முந்தின சிறையிருப்பைவிட மிகவும் கண்டிப்பான சிறையிருப்பில் இப்போது இருந்ததாகத் தோன்றுகிறது.[3] பின்னும் அவனுடைய விசாரணையின் முடிவைக்குறித்து முந்தினதைவிட வேறே அபிப்பிராயம் உடையவனாய் இருந்தான்.[4] இது விஷயங்களால் இந்த நிருபம் பவுல் இரண்டாவதாகக் கைதியாக்கப்பட்டு இரத்தச்சாட்சியாக மரிக்கிறதற்குச் சற்றுமுந்தி எழுதப்பட்டு இருக்கவேண்டும் என்று நிர்மாணிக்கவேண்டியதாய் இருக்கிறது.

3. அப்போஸ்தலனுக்கு ஒரே சிறையிருப்புமாத்திரம் இருந்தது என்று சொல்லுகிறவர்களும், இந்த நிருபம் அவர் மரணத்துக்குச் சற்று முந்தி எழுதப்பட்டதாக ஒப்புக்கொள்ளுகிறார்கள். அப்படியானால், எவ்வளவு மனம் இளகத்தக்க காரியங்கள் இதில் காட்டப்பட்டிருக்கிறது. விருத்தாப்பியனான அப்போஸ்தலன் உழைப்பினாலும் பிரயாசத்தினாலும் இளைப்புற்றவனாய் நீசரான கைதிகள் அடைபட்டிருக்கும் இருளான ஈரமுள்ள சிறைச்சாலையில் கை கால் கட்டுண்டவனாய்ப் போடப்பட்டு இருந்தான். அவன் வாடகைவீட்டில் குடியிராமல் சாதாரண குற்றவாளியைப்போல நடத்தப்பட்டான். ரோமாபுரியைத் தீக்கொளுத்தினவர்களில் பவுல் ஒருவன் என்று குற்றம் சாட்டப்பட்டு இருக்கலாம் என்கிற அபிப்பிராயம் நிச்சயமாய் இருந்தால் அந்தக் குற்றத்துக்காக அவன் அதிகக் குரூர

[1] அப். 21. 29.

[2] 2 தீமோ. 4. 10, 11ஐ கொலோ. 4. 10, 14டு ஒத்துப்பார்க்க.

[3] 2 தீமோ. 1. 17, 18ஐ அப். 28. 30, 31. பிலி. 1. 13டே ஒத்துப்பார்க்க.

[4] 2 தீமோ. 4. 6ஐ பிலி. 1. 25; 2. 24. பிலே. 22டே ஒத்துப்பார்க்க.



மாய் நடத்தப்பட்டு இருக்கலாமே. மேல் அங்கியைக்[1] கொண்டுவரும்படி அப்போஸ்தலன் அனுப்பவும் செய்தி எவ்வளவாய் மனதை இளக்கத்தக்கதாய் இருக்கிறது. அவன் "குளிரிலும் நிர்வாணத்திலும்" அடிக்கடி அகப்பட்டாலும் இப்போது அனுபவித்ததுபோல முன் கொடியவிதமாய் அனுபவித்து இருக்கமாட்டான் எனத் தோன்றுகிறது. மாரிகாலத்து நெடுநாள் இரவின் குளிரை இருட்டு அறையில் போக்கவேண்டியதாய் இருந்ததால் மேல் அங்கி அவனுக்கு அவசியமாய் இருந்தது. அவன் அக்காலத்தில் தனிமையாய் விடப்பட்டது அவனுக்கு அதிகத் துக்கமாய் இருந்தது. அவனுடைய உத்தம சிநேகிதர் பற்பல இடங்களுக்குப் போய் இருந்தார்கள். கிரெஸ்கே கலாத்தியா நாட்டுக்கும் தீத்து தல்மாத்தியா நாட்டுக்கும் போய்விட்டார்கள். தீமோத்தேயு எபேசுவில் இருந்தான். தீகிக்குச் சற்றுமுந்தி எபேசுக்கு அனுப்பப்பட்டு இருந்தான். அப்போஸ்தலன் சாட்டப்பட்ட குற்றத்துக்குள் தாங்களும் அகப்பட்டுக்கொள்ளாதபடிக்கு ரோமக் கிறிஸ்தவர்கள் முதலில் பிரத்தியேகமாய் இருந்துகொண்டார்கள். அவன் நேரோ ராயன் முன்புக்கு விசாரணைக்காக நிற்கையில் ஒருவனாகிலும் அவனோடே இருக்கவில்லை, எல்லாரும் அவனைக் கைவிட்டார்கள்.[2] அவனுக்காகக் கவலைப்பட்ட ஆசியாநாட்டுக் கிறிஸ்தவர்களும் அவனை மறந்துபோனதாக அல்லது அவனுக்கு உதவிசெய்ய மிகவும் பயந்ததாகக் காணப்படுகிறார்கள். ஒநேசிப்போரு மாத்திரம் பவுலின் விலங்கைக்குறித்து வெட்கப்படாமல் அநேகந்தரம் அவனைச் சந்தித்து இளைப்பாற்றினான்.[3] அப்போஸ்தலனுக்கு இருந்த மனக்கசப்பு உண்டாக தேமா என்பவன் அவனை விட்டுப் பிரிந்துபோய்விட்டான்.[4] அவன் துக்கத்தில் அவனை ஆறுதல்படுத்தவும் தைரியப்படுத்தவும் லூக்காமாத்திரம் இருந்தான்.[5]

[1] 2 தீமோ. 4. 13. [2] 2 தீமோ. 4. 16. [3] 2 தீமோ. 1. 16.

[4] 2 தீமோ. 4. 9, 10.

[5] 2 தீமோ. 4. 11. ஐபூலும் புதேந்சும் லீனுவும் கலவுதியாளும் மற்றெல்லாச் சகோதரரும் 4. 21ல் தீமோத்தேயுவுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள் என்று போட்டிருப்பதைப் பார்க்கையில் பவுல் முதல்விசை உத்தரவு சொல்ல நிற்கையில் அவனைவிட்டு நீங்கிப்போனபின் அவனிடத்தில் வந்திருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. பவுலின் விசேஷித்த சிநேகிதரில் லூக்காவைத்தவிர மற்றவர்கள் ஒருவரும் அவனோடே இருக்கவில்லை.

வார்; அவருக்குச் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக ஆமென்" என்று அவன் கடைசியாக எழுதிவைத்திருக்கிறதைப் பார்க்கில் அவன் கடைசிமுடிவை அறியலாம்.

6. தீமோத்தேயுவை தன்னண்டைக்கு வரவழைக்கவும் இனிமேல் அவனுக்குப் போதனைகளை அருள்புரிவதற்கும் தான் பிழைத்திருப்பது நிச்சயம் அல்லாததால் திவ்விய ஊழியத்தில் அவன் நடந்துகொள்ளவேண்டிய விதத்துக்கு முகாந்தரவில் ஆலோசனை பெற்றுக்கொள்ளவும் வேண்டும்படி இந்த நிருபம் பவுலால் எழுதப்பட்டது. இதை மூன்று பங்காக வகுக்கலாம்.

I. முகவுரை. (i. 1–5.)

II. போதனை. தேவனைப்பற்றிச் சாட்சிகொடுக்கவும், தன்னுடைய பாடுகளைக்குறித்து வெட்கப்படாதிருக்கவும், சுவிசேஷத்தின் ஆரோக்கியமான உபதேசத்தை உறுதியாய்ப் பிடித்திருக்கவும், சுவிசேஷத்தின் நிமித்தம் வரும் சகல வருத்தங்களையும் பொறுமையாய்ச் சகிக்கவும், பரிசுத்தமாய் நடக்கவும், வீணான வாக்குவாதங்களுக்கு விலகவும், உண்மை உள்ள திவ்விய ஊழியக்காரனாக நடந்துகொள்ளவும், கள்ளப் போதகருக்கு எச்சரிக்கையாய் இருக்கவும் போதனை செய்திருக்கிறான். (i. 6–iv. 8.)

III. முடிவுரை. (iv. 9–22.)

7. இத்திருபத்தின் வசனங்களை அப்போஸ்தலன் சொல்ல லூக்கா எழுதி இருக்கவேண்டும். கையெழுத்துமாத்திரம் பவுல் வைத்து "கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உன் ஆவியோடேகூட இருப்பாராக, கிருபை உங்களோடு இருப்பதாக" என்ற ஆசீர்வாதத்தோடே முடித்திருக்கிறான். இது கடைசியாக எழுதப்பட்டது. இதற்குச் சில காலங்களுக்குள்ளாக போர்ச்சேவகர் ராஜதானியின் ஒஸ்டிகவாசலைவிட்டுப் புறஜாதியாரின் அப்போஸ்தலனை நடுவில் நடத்திக்கொண்டுபோய்ச் சிரச்சேதம் செய்தார்கள். அவன் கைதியாக இருந்த இடத்தை எக்காலத்தோரும் கனபத்தியாக எண்ணிவந்தார்கள். உலகத்தில் எழும்பின மிக விசேஷித்த மனிதன் இப்படியாகத் தன் இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்துப் பலனை அநுபவிக்க மறைந்தான்.

8. பவுல் கேட்டுக்கொண்டபடி தீமோத்தேயு போனானோ? அப்போஸ்தலன் மரிக்குமுன் அவனைக் கண்டுகொண்டானோ? இதைப்பற்றி சரித்திரங்களில் ஒன்றும் சொல்லப்படாதிருந்தாலும் அவன் போய் இருப்பான் என்று எண்ணத்தக்கதாய் இரு



க்கிறது. அவன் போனாலும் போகாவிட்டாலும் அப்போஸ்தலன் வெகுகாலம் தனித்து இருக்கவில்லை. சீக்கிரத்துக்குள்ளாக மகிமைபொருந்திய சங்கத்தாரிடம் போய்ச் சேர்ந்துகொண்டான்.

## தீமோத்தேயு இரண்டாம் நிருபத்தில் வருகிற ஒத்தவாக்கியங்கள்.

| | |
|---|---|
| அதி. 2. 13. எண். 23. 19. | அதி. 3. 12. மத். 16. 21–24. |
| ,, ,, 19. எண். 16. 5. | அப். 14. 22. |
| ,, 3. 8. யாத். 7. 11. | ,, ,, 16. 2 பேது. 1. 20, 21. |
| ,, ,, 9. யாத். 7. 22; 8. 18; 9. 11. | |

## 17. எபிரெயருக்கு எழுதப்பட்ட நிருபம்.

1. இந்த நிருபத்தைப் பவுல் அப்போஸ்தலன் எழுதின நிருபங்களுக்குக் கடைசியில் இங்கே வைத்திருக்கிறது. ஏனென்றால் அது அவனால் எழுதப்பட்டது என்பதைப்பற்றிப் பூர்வீகச் சபையிலும் சந்தேகம் இருந்தது. புதிய ஏற்பாட்டில் வேறெந்த ஆகமத்தைவிட இந்த ஆகமத்தின் கர்த்தாநிச்சயத்தைப்பற்றி மிகுந்த சந்தேகம் உண்டாய் இருக்கிறது. பூர்வீகச் சபையார் இதை எழுதினது பவுலோ, பர்னபாவோ, லூக்காவோ, கிலெமெந்தோ என்பதைக்குறித்து நிர்மாணிக்கக்கூடாதவர்களாய் இருந்தார்கள். கிழ்ச்சபையாகிய கிரேக்கச் சபையில் இது பவுலால் எழுதப்பட்டது என்று ஒப்புக்கொள்ளப்பட்டுவந்தது. மேல்சபையாகிய லத்தீன் சபையில் இந்த நிருபம் நாலாம் நூற்றாண்டுவரையிலும் அங்கீகரிக்கப்படவில்லை. இது அந்தச் சபையால் அங்கீகரிக்கப்பட்டபோது இதைப் பவுலின் ஆகமமாக எண்ணினார்கள். சீர்திருத்தலுக்குப் பின்பு இதின் கர்த்தாநிச்சயத்தைப்பற்றி பற்பல அபிப்பிராயங்கள் உண்டாயிற்று. லுத்தர் அப்பொல்லோ இதை எழுதினான் என்றும் கல்வின் அப்போஸ்தலருடைய சீஷர்களில் ஒருவன் எழுதினான் என்றும் சொன்னார்கள். இதைக்குறித்து இவ்வளவு சந்தேகம் இருந்தும் இதின் திவ்விய அதிகாரத்தைப்பற்றி யாதொரு ஆட்சேபனையும் சொல்லப்படவில்லை. இதை லூக்காவாவது பர்னபாவாவது பவுலாவது எழுதினாலும் எழுதாவிட்டாலும் சரி, இது அப்போஸ்தலருடைய காலத்தில் எழுதப்பட்டு ஆதிகாலமுதல் சபையின் வெளியரங்கமான ஆரா

தனையில் வாசிக்கப்பட்டும் வந்தது. ஆதலால் இதைப் பவுல் எழுதவில்லை என்று கல்வீன் சொல்வதுபோல சொல்லுகிறவர்கள் அவனைப்போலவே இவ்வாகமத்தின் கர்த்தாநிச்சயத்தைப்பற்றிய காரியம் பெரிதல்ல, இதை ஆட்சேபனை இன்றி அப்போஸ்தலரின் நிருபங்களில் ஒன்றாக அங்கீகரிக்கவேண்டியது என்று சொல்லவேண்டியவர்களாய் இருக்கிறார்கள்.

2. இது பவுலால் எழுதப்பட்டது என்று சொல்வதற்கு விரோதமாய் உள்ள ஆட்சேபனைகள் மிகவும் அற்பம் என்பதை இந்த நிருபத்தை ஆராய்பவர்கள் அறிந்துகொள்வார்கள். ஆனால் மற்றெல்லா நிருபங்களிலும் பவுலின் பேர் காட்டப்பட்டிருக்க இந்த நிருபத்தின் முகப்பில் அது காட்டப்படவில்லை; மற்ற நிருபங்களின் பாஷைநடைக்கும் இதின் பாஷைநடைக்கும் வித்தியாசமாய் இருக்கிறது; வாசகப்போக்கும் வித்தியாசமாய் இருக்கிறது; பழைய ஏற்பாட்டில் இருந்து மேற்கோள் வாக்கியங்களாக எடுத்து உரைக்கப்பட்டிருக்கிற வாக்கியங்களும் பவுல் எடுத்துக் காட்டுவதுபோலக் காட்டப்படவில்லை; இதின் ஆக்கியோன் தன்னையும் கர்த்தராகிய இயேசுவின் சீஷரிடத்தில் சுவிசேஷத்தைக் கேட்டு அறிந்தவர்களில் ஒருவனாகச் சொல்லுகிறான்.[1] பவுலோ தான் சுவிசேஷத்தை மனிதனால் கற்றுக்கொள்ளாமல் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே கற்றுக்கொண்டதாகச் சொல்லி இருக்கிறான்[2] என்று விபட்சத்தார் சொல்லுகிறார்கள். சுபட்சத்தார் பவுல் யூதர்மேல் வாஞ்சை உள்ளவனாய் இருந்தபடியால் அவர்களுக்குப் போதனையாக இதை எழுதினான் என்றும், இந்த நிருபத்தின் நியாயத்தோரணை பவுலின் மற்ற நிருபங்களுக்கு ஒத்து இருக்கிறது என்றும், பவுல் அவன் ஜனத்தாரில் அவன் வயதுள்ள அநேகரைப்பார்க்கிலும் யூதமார்க்கத்திலே தேறினவனாய் இருந்ததால் இந்நிருபத்தில் காட்டிய பொருளை எழுதுவதற்குத் தகுந்தவனாய் இருந்தான் என்றும், இயேசுவின்மூலமாய் அன்றி நியாயப்பிரமாணத்தினாலே இரட்சிக்கப்படக்கூடாது என்று பவுல் மற்ற நிருபங்களில் காட்டி இருக்கிறதுபோல இதிலே காட்டி இருப்பதால் அவன் எழுதினான் என்றும், வார்த்தைகளின் சம்பந்தம் பழைய ஏற்பாட்டு வாக்கியங்களை வியாக்கியானப்படுத்துகிற வகை சொல்லப்பட்டிருக்கிற புத்திமதிகள் இந்நிருபத்தின் முடிவுரைக்கும் பவுலின் மற்ற நிருபங்களின் முடிவுரைக்கும் உள்ள ஐக்கியம் இவை

[1] எபி. 2. 3. [2] கலா. 1. 11, 12.



போன்றவை பவுலின் ஜாடையாய் இருப்பதால் அவனே அதை எழுதினான் என்றும், தீமோத்தேயுவைப்பற்றி இதிலே சொல்லியதைப் பார்க்கையிலும் பவுலே இதை எழுதினான் என்றும் சொல்லுகிறார்கள். பவுல் இந்த நிருபத்தில் தன் பேரைக் காட்டி இருந்தால் யூதர் அவன்பேரில் மிகவும் வெறுப்பு உடையவர்களாய் இருந்தபடியினாலே அதை வாசியாதபடிக்கு விட்டுவிடுவார்கள், அல்லது அதைக் கொண்டுபோனவனுக்கு மோசம்செய்வார்கள். இது முகாந்தரமாய் பவுல் தன் பெயரைக் கூறாதபடிக்கு விட்டிருக்கலாம். இந்த நிருபம் பவுல் அப்போஸ்தலனுடையதாக முற்காலத்தோர் இதை நமக்குத் தந்திருக்கிறார்கள், இதை யார் எழுதினார்களோ தேவனே அதை அறிவார் என்று ஒரிஜென் சொல்லி இருக்கிறான்.

3. இந்த நிருபம் எழுதப்பட்ட காலமும் திட்டமாய்த் தெரியாது. இது எருசலேமின் அழிவுக்கு முந்தி எழுதப்பட்டது என்பது பிரத்தியட்சமாய் இருக்கிறது. இது யூதக்கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டது. பலஸ்தீனாவில் உள்ளவர்களுக்கோ வேறு சிலர் சொல்லுகிறபடி மற்ற இடங்களில் உள்ள யூதக்கிறிஸ்தவர்களுக்கோ யாருக்கு என்று தெளிவாய்ச் சொல்ல ஏதுவில்லை. இதைத் தீமோத்தேயு கொண்டுபோகவில்லை என்பதும் நிச்சயம்.[1]

4. இந்த நிருபம் எழுதப்பட்ட யூதக்கிறிஸ்தவர்கள் துன்பத்தினாலும் தங்கள் பூர்வீக மார்க்கத்தின் ஆடம்பரத்தினாலும் இழுப்புண்டு கிறிஸ்துமார்க்கத்தைவிட்டு மருளவிழுந்து யூதமார்க்கத்தைச் சேரும்படிக்கு ஏற்ற சோதனை நிலைமையில் இருந்தார்கள். அவர்கள் அப்படி மருளவிழாதபடி தடுக்கும் நோக்கமாய் இது எழுதப்பட்டது. இப்படிச் செய்வதற்கு அப்போஸ்தலன் மோசேயின் முறைமையின் சரியான கருத்தையும் முடிவையும் அதின் நிலையாமையையும் எடுத்துக் காட்டவேண்டியதாய் இருந்தது. யூதவிசுவாசிகள் கிறிஸ்துவின் ராஜ்யம் மோசேயின் முறைமையை ஒழுங்குப்படுத்த வந்தது என்று எண்ணினார்களே அன்றி அதை அழித்து அதற்கு மேலாக நிற்கும்படி வந்தது என்று அறியாதிருந்தார்கள். நியாயப்பிரமாணத்தின் சடங்கு ஆசாரங்களை அநுசரித்து வரும்படி அவர்களுக்கு இடங்கொடுக்கப்பட்டு இருந்ததால்[2] அவர்கள் மிதமிஞ்சி நியாயப்பிரமாணத்தைக் குறித்து எண்ணி கிறிஸ்துமார்க்க அறி

[1] எபி. 13. 23. [2] அப். 15. அதி. 21. அதி. 20, 21.

வில் தேறுதபடிக்கும் கிறிஸ்துவின் ஊக்கியத்தை விட்டு மறுள விழுந்து மறுபடி யூதமார்க்கத்துக்குத் திரும்பும்படிக்கும் ஏதுவாய் இருந்தார்கள். இதை அப்போஸ்தலன் அறிந்து கிறிஸ்து மார்க்கத்தின் மேலான அதிகாரத்தையும் விசேஷித்த சட்டங்களையும் உன்னத மகிமையையும் எடுத்துக் காட்டி அவர்கள் அவிசுவாசத்துக்கு இடங்கொடுப்பதும் யூதமார்க்கத்திற்குத் திரும்புவதும் பயங்கரப்படத்தக்கது என்றும் காட்டுகிறார். கிறிஸ்துவின் தெய்வீக தன்மையை எடுத்துக் காட்டி அவர் தேவதூதருக்கு மேலானவராய் இருந்து அவர்களால் தொழுது கொள்ளப்படுகிறார். அவர் மோசேக்கு மேலானவர் அந்த மோசே ஊழியக்காரனு மாத்திரம் இருந்தான், கிறிஸ்துவானவர் தேவனாய் இருக்கிறார்; ஆரோன் முதலான பிரதான ஆசாரியருக்கும் கிறிஸ்து மேலானவர். அவர் மெய்யான பிரதான ஆசாரியர்; அவர்கள் அவருக்கு முன் அடையாளமாய் இருந்தார்கள். யூதர்களுக்குள் இருந்த தெய்வீக வாசஸ்தலமும் அதின் பணிமுட்டுகளும் அதில் செய்யப்பட்ட சடங்குகளும் கிறிஸ்துமார்க்கத்தின் பொருளுக்கு அடையாளங்களாய் இருந்தன; கிறிஸ்துநாதர் மனிதருடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற மெய்யான பலியாய் இருக்கிறார்; லேவியருடைய மிருகப்பலிகள் நீக்கப்பட்டன என்று இவைகளுக்கு நியாயங்களை எடுத்துக் காட்டி அவர்கள் விசுவாசமும் உறுதியும் உள்ளவர்களாய்ச் சுவிசேஷத்தில் நிலைத்திருந்து ஜெயம்பண்ணும் படிக்கும், முற்காலத்து விசுவாசிகளையும் விசேஷமாய் இயேசுவையும் நோக்கி விசுவாசமார்க்கத்திலே பொறுமையாயும் ஜாக்கிரதையாயும் கர்த்தருடைய தண்டனைகளை நல்ல மனதோடே சகிக்கிறவர்களாயும் இருக்கும்படிக்கும், சமாதானமும் பரிசுத்தமுமாய் நடந்து விழிப்புள்ளவர்களாய் இருக்கும் படிக்கும், கீழ்ப்படிதலான மனதோடே சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டு தேவனை பயபக்தியோடே தொழுதுகொள்ளும்படிக்கும், அந்நியரை உபசரித்து தேவன்பேரில் நம்பிக்கை உள்ளவர்களாய் இருக்கவும் சென்றுபோன போதகமாருடைய விசுவாசமுள்ள நடக்கையைத் தங்களுக்குத் திருஷ்டாந்தமாக வைக்கும்படிக்கும், கிறிஸ்துவினுடைய பலியின் தன்மையை அறியாமல் கள்ளப் போதகர்களுக்கு இடங்கொடுப்பதைக் குறித்து எச்சரிக்கையாய் இருந்து கிறிஸ்துவின்நிமித்தம் நிந்தைகளைச் சகிக்கும்படிக்கும், தங்கள் போதகமாருக்குக் கீழ்ப் படிந்து நடக்கும்படிக்கும், அன்பாக புத்திபோதனைகளைச் சொல்லி இருக்கிறார்.



இவ்வாகமம் பூர்வீக உடம்படிக்கையின் நோக்கத்தையும் யூதருடைய வேதாகமங்களை வியாக்கியானம் செய்யவேண்டிய விதத்துக்குத் தெளிவையும் நமக்குக் காட்டுகிறதாய் இருக்கிறது.

5. இதை இரண்டு பங்காக வகுக்கலாம்.

I. உபதேசம். (i–x. 18.)

II. புத்திபோதனைகள். (x. 19–xiii.)

முதல் பங்கில் சுவிசேஷமானது நியாயப்பிரமாணத்தை விடச் சிறந்தது என்று நியாயம் காட்டப்பட்டு இருக்கிறது. இரண்டாம் பங்கில் உபத்திரவத்தில் எபிரெயர் சோர்ந்து போகாதிருக்கும்படி போதிக்கப்பட்டிருக்கிறார்கள். இது நிருபம் என்று அழைக்கப்பட்டாலும் இதை ஒரு பிரபந்தம் அல்லது நியாயத்தோரணையான நூல் என்று சொல்லலாம். நாம் இதை எப்படி வைத்துக்கொண்டாலும் இது ரோமநிருபத்துக்கும் கலாத்தியா நிருபத்துக்கும் அநுபந்தமாயும் அவைகளுக்கு ஒருவகை வியாக்கியானமாயும் இருக்கிறது. இதை லேவியர் ஆகமத்தோடும் யாத்திராகமத்தில் ஆலயக்கூடாரத்தையும் சடங்கு ஆசாரங்களையும்பற்றிச் சொல்லியதோடும் எண்ணாகமத்தில் இவைகளுக்கு அடுத்ததாய் வருவதோடும் சேர்த்து வாசித்தால் நன்மையாய் இருக்கும்.

## எபிரெயர் நிருபத்தில் வருகிற ஒத்தவாக்கியங்கள்.

| | | | |
|---|---|---|---|
| அதி. 1. 4, 5. | சங். 2. 1, 7. | அதி. 4. 3. | சங். 95. 11. |
| ,, ,, 6. | சங். 97. 7. | ,, ,, 4. | ஆதி. 2. 3. |
| ,, ,, 7. | சங். 104. 4. | ,, ,, 7. | சங். 95. 7. 8. |
| ,, ,, 8, 9. | சங். 45. 6, 7. | ,, 5. 2, 3. | லேவி. 9. 7, 22. |
| ,, ,, 10–12. | சங். 102. 25, 27. ஏசா. 51. 6. சங். 90. 2. | ,, ,, 5. | சங். 2. 7. |
| ,, 2. 6, 9. | சங். 8. 4–6; 144. 3. 1கொரி. 15. 27. | ,, ,, 6. | சங். 110. 4. |
| ,, ,, 12. | சங். 22. 22. | ,, 6. 13, 14. | ஆதி. 22. 16, 17. |
| ,, ,, 13. | ஏசா. 8. 18. | ,, 7. 1, 2. | ஆதி. 14. 18. மு |
| ,, 3. 2. | எண். 12. 7, 8. | ,, ,, 17, 21. | சங். 110. 4. |
| ,, ,, 7, 11. | சங். 95. 7–11. | ,, ,, 27. | லேவி. 16. 6–11. |
| ,, ,, 15, 16. | சங். 95. 7–11. எண். 14. 22, 23, 29, 30. | ,, 8. 5. | யாத். 25. 40. |
| | | ,, ,, 8–12. | எரே. 31. 31–34. சக. 8. 8. |
| | | ,, 9. 1, 2. | யாத். 25, 26, 40. அதி. |
| | | ,, ,, 7. | லேவி. 16. 2, 11, 12. |

| | | | |
|---|---|---|---|
| ஆதி. 9. 19, 20. | யாத். 24. 6–8. | ஆதி. 12. 21. | உபா. 9. 9–19. |
| ,, 10. 4. | மீகா. 6. 6, 8. | ,, ,, 24. | ஆதி. 4. 10, 11. |
| ,, ,, 5, 7. | சங். 40. 6–8. | ,, ,, 26. | ஆகா. 2. 6, 7. |
| ,, ,, 16, 17. | எரே. 31. 33, 34. | ,, ,, 5, 6. | நீதி. 3. 11, 12. |
| ,, ,, 28, 29. | உபா. 17. 2–6. | ,, ,, 12. | ஏசா. 35. 3, 4. |
| ,, ,, 30. | உபா. 32. 35, 36. | ,, 13. 5. | உபா. 31. 8. யோசு. 1. 5. |
| ,, ,, 37, 38. | ஆப. 2. 3, 4. | ,, ,, 6. | சங். 118. 6. |
| ,, 11. | ஆதியாகமம் யாத்திராகமம் நியாயாதிபதி, ஞ. | ,, ,, 11. | யாத். 29. 14. லேவி. 16. 27. |
| ,, 12. 16. | ஆதி. 25. 33, 34. | ,, ,, 20. | ஏசே. 34. 23. தானி. 9. 24, 27; சக. 9. 11. |
| ,, ,, 17. | ஆதி. 27. 34–38. | | |
| ,, ,, 18. | யாத். 19. 12–18. | | |
| ,, ,, 20. | யாத். 19. 12, 13. | | |

## 18. யூதா எழுதின பொதுவான நிருபம்.

1. இந்த நிருபத்தின் ஆக்கியோனாகிய யூதா, ததேயு என்றும் லெபேயு என்றும் அழைக்கப்பட்டிருக்கிறான்.[1] அவன் யாக்கோபின் சகோதரன். ஆதலால் யாக்கோபைப்போலவே யூதாவும் நம்முடைய இரட்சகருக்கு இனத்தானாய் இருந்தான். யூதா எப்போது எப்படி சீஷனாக அழைக்கப்பட்டான் என்பது நமக்குத் தெரியாது. அப்போஸ்தலருடைய நாம அட்டவணையில் அவன் பேர் புதிய ஏற்பாட்டில் காட்டப்பட்டு இருப்பதோடே யோவா. 14. 21–23ல் அவனைப்பற்றி ஒரு குறிப்பும் சொல்லப்பட்டிருக்கிறது. இதைத்தவிர அவனைக் குறித்து வேறொன்றும் நாம் வாசிக்கிறதில்லை.

2. நம்முடைய ரட்சகர் உயிர்த்தெழுந்து பரமேறினபின்பு அவன் பெந்தெகொஸ்தே நாள்வரைக்கும் மற்ற அப்போஸ்தலரோடேகூடவே எருசலேமில் இருந்தான். பரிசுத்த ஆவியின் விசேஷித்த வரங்களைப் பெற்றபின்பு, அவன் யூதேயாவில் சில காலம் தரித்திருந்து அங்கே பிரசங்கித்து அற்புதங்களைச் செய்து இருப்பான் என்று இயற்கையாக எண்ணவேண்டியவர்களாய் இருக்கிறோம். அவனுடைய ஆயுசு நீடித்து இருந்தால் அவன் யூதேயாவை விட்டு மற்றத் தேசங்களில் இருந்த யூதருக்கும் புறஜாதியாருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வந்தான். அவன் அராபியா, சீரியா, மெசொப்பொத்தாமியா,

[1] மத். 10. 3. ததேயு என்பது யூதாவுக்குப் பேர்.



பார்சியா என்ற தேசங்களில் உழைத்து, பார்சியாவில் இரத்தச் சாட்சியாய் மரித்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறான். சீரியர் யூதாவை தங்களுடைய அப்போஸ்தலன் என்று இந்நாள் பரியந்தம் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அவனுடைய பிரயாணங்களைப்பற்றி நமக்கு அறிவிக்கத்தக்க நூல்கள் இல்லாததினால் நாம் அவனைக்குறித்து இன்னது நிச்சயமான காரியம் என்று சொல்ல ஏது அற்றவர்களாய் இருக்கிறோம். அவன் இரத்தச்சாட்சியாய் மரித்தான் என்பதும் சந்தேகமாய் இருக்கிறது.[1]

3. இந்த நிருபம் யாருக்கு முதலாவதாக எழுதப்பட்டது என்பதைப்பற்றியும் அது எழுதப்பட்ட காலத்தைக்குறித்தும் பற்பல அபிப்பிராயங்கள் உண்டு. அப்போஸ்தலன் மேற்சொல்லப்பட்ட தேசங்களில் திவ்விய ஊழியத்தை நடப்பித்து இருந்தால் அங்கே கிறிஸ்துமார்க்கத்தில் சேர்க்கப்பட்ட ஜனங்களுக்கு இதை முதலாவதாக எழுதி இருக்கவேண்டியது. என்றாலும், அவர்களுக்கே எழுதப்பட்டது என்று நாம் சாதிக்கக்கூடாது. இந்த நிருபத்தில் கண்டிக்கப்பட்டிருக்கிற பதிதர்களின் தன்மையையும் பொல்லாத செய்கைகளையும் அப்போஸ்தலமாருடைய பிரசங்கம் கடந்த காலத்தில் முந்தியே நடப்பிக்கப்பட்டிருந்ததாகக் காட்டி இருப்பதையும் கவனிக்கையில் இது எழுதப்பட்ட காலத்தை ஒருவாறு அநுமானிக்கலாம். இது அப்போஸ்தலருடைய கடைசிக்காலத்தில் எருசலேமின் அழிவுக்குச் சில வருஷங்களுக்கு முந்தி கி. பி. 63–65ம் இடையில் எழுதப்பட்டிருக்கலாம். சிலர் இது கி. பி. 70 அல்லது 75ல் எழுதப்பட்டதாகச் சொல்லுகிறார்கள். "இது யூதா அப்போஸ்தலனால் எழுதப்படவில்லை; அப்போஸ்தலன் அல்லாத ஒரு யூதாவினால் எழுதப்பட்டது"

[1] ஐசேபியு யூதாவின் பேரப்பிள்ளைகளைப் பற்றிச் சொல்வதால் அந்த அப்போஸ்தலன் விவாகம்பண்ணியிருந்தான் என்று அறியலாம். தொமிஷியன் இராயன் ஒரு வைராக்கியத்தில் தாவீதின் சந்ததியாரைக் கொன்றுபோடும்படியாக உத்தரவு கொடுத்தபோது சில பதிதர் யூதா மாம்சத்தின்படி நம்முடைய இரட்சகருடைய சகோதரன் என்று சொல்லி, அவன் சந்ததியாரின்பேரில் குற்றஞ்சாட்டி அவர்களும் தாவீதின் வம்சத்தார் என்று சொன்னார்கள் என்றும், அவர்கள் சத்துருக்களுக்கு முன்பாக நல்ல அறிக்கை செய்தார்கள் என்றும், அவர்கள் கொல்லப்படாமல் விடுவிக்கப்பட்டு சபைகளுக்குப் போதகரானார்கள் என்றும், மேற்படி ஐசேபியு சரித்திரக்காரன் எழுதியிருக்கிறான்.

என்று சாதிக்கிறவர்கள் மேற்காட்டிய காலத்துக்குப் பின்பு எழுதப்பட்டது என்றும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

4. கள்ளப் போதகமாருடைய தப்பறைகளுக்குள் அகப்படாதபடி கிறிஸ்தவர்களை எச்சரிக்கவும் விசுவாசத்துக்காக திவ்விய அனல் உள்ளவர்களாய் நல்ல போராட்டம் செய்து சத்துருக்களுக்கு எதிர்த்துநிற்க ஏவிவிடவும் நோக்கமாய் இந்த நிருபம் எழுதப்பட்டது. அந்த சத்துருக்கள் கிறிஸ்துமார்க்கத்தை அநுசரிப்பதும் அந்த மார்க்கத்துக்குரிய பொதுவான விசுவாசமும் ரட்சிப்புக்குப் போதும், பரிசுத்த நடக்கை வேண்டுவது இல்லை என்று போதித்துக் கிறிஸ்தவர்களைக் கீழ்ப்படியாமைக்கும் துன்மார்க்கத்துக்கும் ஏவினார்கள். இவர்களுடைய துர்நடக்கையை அப்போஸ்தலன் பலமாய்க் கண்டித்து அவர்கள் மேல் ஆக்கினையைக் கூறி, கடைசியாகக் கிறிஸ்தவர்கள் தேவபத்தியைப் பாதுகாக்கவும் மற்றவர்களை அந்த சத்துருக்களுடைய கண்ணிகளில் இருந்து விடுவிக்கவும் தக்கதாக அவர்களுக்கு எச்சரிப்புகளும் கண்டிப்புகளும் ஆலோசனைகளும் சொல்லி முடிக்கிறான்.

5. இந்நிருபத்தை மூன்று பங்காக வகுக்கலாம்.

I. முகவுரை. (1, 2.)

II. கள்ளப் போதகமாருக்கு வரும் உக்கிரமான தண்டனை. (3–19.)

III. புத்திமதிகள். (20–23.)

6. யூதாவின் நிருபத்துக்கும் பேதுருவின் இரண்டாம் நிருபத்தின் இரண்டாம் அதிகாரத்துக்கும் மிகுந்த ஒற்றுமை இருக்கிறது. இந்த இரண்டு அப்போஸ்தலமாரில் ஒருவன் மற்றவனுடைய நிருபத்தை வாசித்திருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. இந்த நிருபம் கி. பி. 63ல் எழுதப்பட்டதென்று சொல்லுகிறவர்கள் பேதுரு அப்போஸ்தலன் யூதாவின் நிருபத்தை வாசித்துப்பார்த்து இருக்கலாம் என்றும், அவன் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு தான் முந்தின நிருபத்தை அனுப்பின ஜனங்களுக்குப் பிரயோஜனமாக இந்நிருபத்தில் காட்டப்பட்டிருக்கிற காரியங்களைக்குறித்து விஸ்தாரமாய் எழுதி இருக்கலாம் என்றும் சாதிக்கிறார்கள்.

7. இந்நிருபம் புதிய ஏற்பாட்டில் அடங்கிய மேன்மையான தேவஸ்துதிகளில் ஒன்றோடே முடிகிறது. பிரதான தூதனாகிய மிகாவேலையும் ஏனோக்குடைய தீர்க்கதரிசனத்தையும் குறித்தவைகளை அப்போஸ்தலன் யூதர்களுக்குள் நன்றாய் அறியப்பட்ட பாரம்பரியங்களில் இருந்து எடுத்திருக்கலாம்.



### யூதா நிருபத்தில் வருகிற ஒத்தவாக்கியங்கள்.

| | |
|---|---|
| வா. 5. எண். 14. 29; 26. 64, 65. | வா. 13. ஏசா. 57. 20. |
| „ 7. ஆதி. [illegible] 24. உபா. 29. 23. | „ 14, 15. ஆதி. 5. 18. சகரி. 14. 5. |
| „ 9. சகரி. 3. 2. | |
| „ 11. ஆதி. 4. 5, 8. எண். 16. 1, 3; 22. 7–21. | |

## 19. யோவான் எழுதின பொதுவான முதலாம் நிருபம்.

1. இந்த நிருபம் யோவான் அப்போஸ்தலனாலே எழுதப்பட்டது என்பதற்குச் சந்தேகமே இல்லை. இதின் முதலில் அப்போஸ்தலன் தன் பேரைக் காட்டாவிட்டாலும், யோவான் சுவிசேஷத்தில் காண்கிற கருத்துகளையும் வாசக நடையையும் இதிலும் காணலாம். எப்போது, எங்கே இருந்து, யாருக்கு இதை எழுதினான் என்பதற்கு நமக்குத் தகுந்த அத்தாட்சி இல்லை. சிலர் இது எபேசுவில் இருந்து எழுதப்பட்டது என்றும், வேறு சிலர் பத்முதீவில் இருந்து எபேசியருக்கு அனுப்பப்பட்டது என்றும் சொல்லுகிறார்கள். அப்போஸ்தலனுடைய உபத்திரவங்களைப்பற்றியும் அவர் பத்முதீவுக்குக் கைதியாக அனுப்பப்பட்டதைப்பற்றியும் இதில் சொல்லப்படாததால், இது பத்முவிலிருந்து அனுப்பப்பட்டிருக்கமாட்டாது என்று எண்ணவேண்டியதாய் இருக்கிறது. சில நூட்பசாஸ்திரிகள் சுவிசேஷம் எழுதப்பட்டபோது இதுவும் எழுதப்பட்டு அதோடேகூட அனுப்பப்பட்டதென்று நினைக்கிறார்கள்.

2. நம்முடைய இரட்சகர் திவ்விய பணிவிடையை நடப்பித்த மூன்றரை வருஷக்காலத்திலும் எருசலேமில் சபை ஸ்தாபிக்கப்பட்ட முதல்வருஷத்திலும் யோவானுக்கு இருந்த மேன்மையான நிலைமையைக் கவனிக்கையில் அவனைப்பற்றி அப்போஸ்தல நடபடியாகிய சரித்திர ஆகமத்தில் அதிகமாய்ச் சொல்லப்படாதது ஆச்சரியமாய் இருக்கிறது. கலாத்தியா நிருபத்தை[1] நாம் வாசிக்கையில் பவுலும் பர்னபாவும் கி. பி. 50 வருஷத்தில் எருசலேமுக்குப் போனபோது யோவான் அங்கே இருந்ததாகக் காண்கிறோம். அதற்குப்பின்பு அவனைக் குறித்து வேறொன்றும் சொல்லப்படவில்லை. கடைசியாக கி. பி. 95 அல்லது 96ல் பத்முதீவுக்குச் சிறையாக[2] அனுப்பப்பட்டான் என்று வாசிக்கிறோம். அவன் எருசலேமின் அழி

[1] கலா. 2. 9. [2] வெளி. 1. 9.

வுக்கு முந்தி யூதேயாவைவிட்டு சின்ன ஆசியாவில் முக்கியமாய் எபேசுவில் உழைத்ததாகப் பாரம்பரியம் சொல்லுகிறது. பெர்கமு, தியத்திரா, பிலதெல்பியா, லவோதிக்கேயா சபைகள் அவனால் ஸ்தாபிக்கப்பட்டதாக எண்ணப்படுகிறது. அவன் விடுதலை அடைந்தபின்பு எபேசுவுக்குத் திரும்பிவந்து அங்கே நூறுவயது உள்ளவனாக கி. பி. 100ல் மரித்ததாகச் சொல்லப்பட்டு இருக்கிறான்.

3. அப்போஸ்தலனுடைய காலத்தில் இருந்தவர்களில் சிலர் நமது ஆண்டவருடைய தெய்வீக தன்மையையும்[1] சிலர் அவர் மனித தன்மையையும்பற்றி[2] தகாத கொள்கைகளைக் கொண்டார்கள். சிலர் தேவனை ஆவியினால் தொழுதுகொள்வதுபோதும், சரீரத்தில் எவ்வகையான சிற்றின்பங்களையும் அனுபவிக்கலாம் என்றார்கள்.[3] இந்தத் தப்பறைகளை பலமாய்க் கண்டிக்கிற நோக்கமாய் இந்த நிருபம் எழுதப்பட்டது. அதோடே மற்றநேக விசேஷித்த காரியங்களும் எடுத்து உரைக்கப்பட்டு இருக்கிறது. இவ்வித காரியங்கள் நியாயதோரணையாய் எழுதப்படாமல் ஊடுகலந்து எழுதப்பட்டிருக்கிறது. இரண்டு விசேஷித்த காரியம் இந்நிருபத்தில் காட்டிய சங்கதிகளை இசைக்கிறதாய் இருக்கிறது. "அதாவது தேவன் ஒளியாய் இருக்கிறார், ஒளியிலே நடவுங்கள்." "தேவன் அன்பாய் இருக்கிறார், அன்பிலே நடவுங்கள்" என்பதே. இந்த இரண்டு மூலாதார காரியங்களை அப்போஸ்தலன் விளக்குவதில் தேவனோடே ஐக்கியமாய் இருப்பதின் மெய்யான தன்மையையும் அந்த ஐக்கியம் மெய்விசுவாசியின் நடக்கையிலும் ஜீவியத்திலும் அது செய்கிற பலனையும் எடுத்து உரைக்கிறான். மேலும் விசுவாசிகளும் மாயக்காரரும் தங்களை லேசாய் அறிந்துகொள்ளும்படிக்கு மெய்த்தேவபக்தியின் உத்தம இலட்சணங்களையும் எடுத்துக்காட்டி இருக்கிறான். விசேஷமாய்க் கிறிஸ்துவானவருடைய நடக்கையிலும் கிரியையிலும் விளங்கிய தேவ அன்பைப்பற்றியும் விசுவாசிகளுக்கு அநுக்கிரகிக்கப்பட்டிருக்கிற புத்திரசுவிகார சலாக்கியங்களைப்பற்றியும் எடுத்து உரைத்து இந்நிருபத்தை வாசிக்கிறவர்கள் தேவனிடத்திலும் ஒருவருக்கொருவரிடத்திலும் அன்புகூரவேண்டும் என்று ஏவுகிறான்.

4. இந்நிருபத்தை வகுப்பது மிகவும் வருத்தமாய் இருக்கி

[1] 1 யோவா. 2. 22; 4. 15; 5. 1. [2] 1 யோவா. 4. 3.
[3] 1 யோவா. 2. 3–6; 3. 4, 8–10; 5. 4, 18.



றது. மேற்சொல்லிய காரியத்துக்கு இசைவாக இதை மூன்று பங்காகப் பிரிக்கலாம்.

I. தேவன் ஒளியாய் இருக்கிறார்; ஒளியில் நடக்கிறவர் மாத்திரம் அவரோடே ஐக்கியமாகலாம். (i. 5–ii. 28.)

II. தேவன் நீதியுள்ளவராய் இருக்கிறார். அன்புள்ளவராய் இருக்கிறார். அவர் நீதியுள்ளவராய் இருப்பதுபோல சுவிகாரபுத்திரர் நீதியுள்ளவர்களாயும் அவர் அன்புள்ளவராய் இருப்பதுபோல, அன்புள்ளவர்களாயும் இருக்கவேண்டும். தேவனுடைய அன்பும் நீதியும் கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கிறபடியால் கிறிஸ்துவை மறுதலித்து அவரை விட்டுச் சோரம்போகிறவன் பிதாவோடே ஐக்கியமாய் இருக்கக்கூடாது. (ii. 29–v. 5.)

III. தொகுப்பாக, இயேசு தேவகுமாரன், குமாரனை உடையவன் ஜீவனை உடையவனாய் இருக்கிறான். "உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று நீங்கள் அறிய தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாய் இருக்கிற உங்களுக்கு எழுதுகிறேன்" என்று முடிக்கிறான். (v. 6–21.)

5. இந்த நிருபத்திலும் சுவிசேஷத்திலும் யோவான் அப்போஸ்தலன் கிறிஸ்தவர்களுடைய அன்பின் கடமையை முக்கியப்படுத்திக் காட்டி இருப்பதால் அவனை விசேஷித்த வகையாய் "அன்பன்" என்று சொல்லுவார்கள். அது நியாயமாகவும் இருக்கிறது. என்றாலும், அவன் மாயக்காரரையும் கள்ளப்போதகமாரையும் உக்கிரமாய்க் கண்டிப்பதைப் பார்க்கையில் மிகுந்த தயை தாட்சண்யம் உள்ள கிறிஸ்தவனும் இடிமுழக்கத்தின் மகனாய் இருக்கலாம் என்று அறியலாம். கிறிஸ்துவின் கனத்துக்குக் குறைச்சல் உண்டாகையில் அன்பு பாவத்தைக் கண்டிப்பதில் முயற்சிசெய்யாமல் போகாது.[1]

[1] 1 யோவா. 5. 7, 8. "பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்தஆவி என்பவர்களே. இம்மூவரும் ஒன்றாய் இருக்கிறார்கள்." "பூலோகத்திலே" என்ற வாக்கியம் பிற்காலத்தில் பாய்ச்சப்பட்ட வாக்கியமாய் இருக்கிறது. பூர்வ கையெழுத்துப் பிரதிகளில் ஒன்றிலாவது அது எழுதப்பட்டிருக்கவில்லை. பதினாறும் நூற்றாண்டுக்குமுன் நகல்செய்யப்பட்ட சரியான கிரேக்க பிரதிகளிலும் இல்லை.

**யோவான் முதல் நிருபத்தில் வருகிற ஒத்தவாக்கியங்கள்.**

| | |
|---|---|
| அதி. 1. 9, எசா. 55. 7. | அதி. 3. 22. அதி. 4. 3–6. |
| ,, 2. 2. யோவா. 1. 29. ரோ. 3. 25, 1 தீமோ. 2. 6. | |

## 20. யோவான் எழுதின இரண்டாம் நிருபம்.

1. யோவான் எழுதின இரண்டாம் நிருபமானது அவனுடைய மூன்றும் நிருபத்தையும் பவுல் பிலேமோனுக்கு எழுதின நிருபத்தையும்போல விசேஷித்த சுபகாரியத்தைப்பற்றி "தனியான ஆளுக்கு எழுதப்பட்ட கூாகிதமாய்" இருக்கிறது. அப்போஸ்தலன் எழுதின இரண்டாம் மூன்றும் நிருபங்கள் வெகுகாலத்துக்குப்பின் சுவிசேஷனில் சேர்க்கப்பட்டது. இரண்டாம் நிருபம் கிறிஸ்தவளான ஒரு அம்மாளுக்கு எழுதப்பட்டது. அவள் பேர் "கைரியா"[1] எனத் தோன்றுகிறது. இந்த அம்மாளைப்பற்றி இந்நிருபத்தில் சொல்லப்பட்டிருப்பதற்கு மிஞ்சி நமக்கு ஒன்றும் தெரியாது. அவள் ஆசியா சபைகளில் உள்ள ஒரு கிறிஸ்தவள். அவள் உயர்ந்த ஸ்திதி உள்ளவள். தர்மசிந்தை உள்ள உபகாரி. யோவான் அப்போஸ்தலனுக்கு உத்தம சிநேகிதி. அவளுக்குச் "சத்தியத்திலே நடந்து வந்த" சில பிள்ளைகள் இருந்தார்கள். அவளுக்கு ஒரு சகோதரி இருந்தாள். அந்தச் சகோதரியின் பிள்ளைகள் இந்நிருபத்தின்மூலமாய் அவளுக்கு வாழ்த்துதல் சொல்லி அனுப்பினார்கள். கிறிஸ்து மாம்சத்தில் வந்தவர் என்று அறிக்கைபண்ணாத சில "வஞ்சகர்" சபைகள்தோறும் திரிந்து அலைந்ததால் அவர்கள் அவளுடைய தர்மசிந்தையை அறிந்து அவள் வீட்டில் தங்கும்படி விரும்புவார்கள்; ஆதலால் அவர்களை அங்கீகரியாதபடிக்கு இந்நிருபம் எழுதப்பட்டது. அப்போஸ்தலன் கைரியாளைச் சீக்கிரமாய்ச் சந்திக்க எண்ணங்கொண்டிருந்தபோதிலும் இந்நிருபத்தில் எழுதி இருக்கிற சங்கதி அதிக அவசரமாய் இருந்ததால் காலதாமதம் பண்ணாமல் சுருக்கமாய் எழுதி உடனே அனுப்பினான்.

[1] "கைரியா" என்னப்பட்ட கிரேக்கைப்பதம் "அம்மாள்" என்று திருப்பப்பட்டிருக்கிறது. இலக்கண வித்துவான்களில் அநேகர் அந்த வார்த்தை இடுகுறிப் பெயர்ப்பேர் என்று சொல்லுகிறார்கள்.



2. இந்நிருபத்தில் கைரியாளுக்கு நேராய்ச் சம்பந்தப்படாத வாக்கியங்கள் முதலாம் நிருபத்தில் காட்டப்பட்டிருக்கிற போதனைகளுக்கு மெத்த இசைவாய் இருக்கிறது. இதில் உள்ள பதிமூன்று வாக்கியங்களில் எட்டு வாக்கியங்களின் பொருளை முதல் நிருபத்தில் காணலாம். இது எழுதப்பட்ட காலத்தைத் தீர்மானிக்க ஏதுவில்லை. அப்போஸ்தலன் பத்மு தீவிலிருந்து எபேசுவுக்குத் திரும்பினபிற்பாடு அடுத்த சபைகளுக்குப்போய் அவைகளைச் சந்தித்தான் என்று பூர்வீக நூலாசிரியரில் ஒருவன் சொல்லுகிறான். இந்நிருபத்தின் கடைசியிலும் மூன்றும் நிருபத்திலும் காட்டப்பட்டிருக்கிற பிரயாணம் மேற்கொள்ளப்பட்டிருப்பதைக் குறிக்கலாம். அப்படியானால் இந்நிருபம் அப்போஸ்தலனுடைய அந்தியகாலத்துக்குச் சற்று முந்தி எபேசுவில் இருந்து எழுதப்பட்டிருக்கலாம்.

## 21. யோவான் எழுதின மூன்றும் நிருபம்.

1. எல்லா நிருபங்களிலும் கடைசியாக எழுதப்பட்ட இந்நிருபம் காயுவுக்கு எழுதப்பட்டது. இந்தக் காயு பவுல் அப்போஸ்தலன் ரோமர், 16. 23, 1 கொரி. 1. 15ல் சொல்லிய மனிதனாய் இருக்கலாம். இந்நிருபத்தில் காட்டப்பட்டிருக்கிற காயு என்பவன் பவுல் சொல்லிய மனிதனைப்போல உத்தம கிறிஸ்தவனாயும் போதகமாரை உபசரிப்பதில் பேர் பிரஸ்தாபம் உள்ளவனாயும் இருந்தான். காயு என்பவன் தியோத்திரேப்புக்கு எச்சரிக்கையாய் இருக்கவும் தேமேத்திரியுவை அங்கீகரிக்கவும் நோக்கமாய் இந்நிருபம் எழுதப்பட்டிருக்கிறது. தியோத்திரேப்பு என்பவனைப்பற்றி இந்நிருபத்தில் காட்டப்பட்டிருப்பதைவிட வேறே யாதொன்றும் நமக்குத் தெரியாது. தேமேத்திரியு இந்நிருபத்தைக் காயுவுக்குக் கொண்டுபோனவனாய் இருக்கலாம்.

2. இந்த நிருபத்தையும் இதற்கு முந்தின நிருபத்தையும் எழுதின ஆக்கியோன் "மூப்பன்" என்னப்படுகிறான். மற்ற எல்லா அப்போஸ்தலரும் மரித்தபின்பு இவனுக்குக் கனமாக இந்தப் பெயர் சொல்லப்பட்டிருக்கலாம். இயேசு செய்த வேறு அநேக காரியங்கள் உண்டென்று சுவிசேஷத்தை முடிப்பதுபோல எழுதவேண்டிய காரியங்கள் அநேகம் உண்டென்று இந்நிருபத்தை அப்போஸ்தலன் முடிக்கிறான். என்னென்ன காரியங்கள் விட்டுவிடப்பட்டன என்பதைப்பற்றி நாம் அறிய விருப்பங்கொள்ளுவோம். ஆனால் அப்போஸ்தல

ரும் திவ்விய அருள்பெற்ற மற்ற ஆக்கியோன்களும் தாங்கள் எழுதினவைகளிலும் எழுதாமல் விட்டுவிட்டவைகளிலும் தங்களுடைய ஞானத்தைவிட மேலான ஞானத்தால் நடத்தப்பட்டார்கள் என்று நாம் மனதில் வைத்துக்கொள்ளவேண்டியவர்களாய் இருக்கிறோம்.

3. புதிய ஏற்பாட்டு நிருபங்கள் ஒன்றுக்கொன்று சம்பந்தமாக, எப்படியும் ஒன்றுக்கொன்று சம்பந்தமாய் இருக்கவேண்டும் என்ற நோக்கத்தோடே எழுதப்படவில்லை. அந்தந்த சபையின் நிலைமைக்கு ஏற்றபடி அவைகள் எழுதப்பட்டன. ஆனால் அவைகள் எக்காலத்திலும் உள்ள எவ்வகை ஜாதியாருக்கும் எவ்வகைப் படிப்பர்களுக்கும் ஏற்றபடி எழுதப்பட்டிருக்கின்றன. நிருபங்களில் ஒன்றையாவது இது நமக்கு வேண்டியது இல்லை என்று சொல்ல ஏது இல்லை. அல்லது இன்னொன்று தேவை என்று யார்தான் சொல்லக்கூடும்? மறுமையில் நமக்கு வேறே வெளிப்படுத்தல் கொடுக்கப்படக்கூடியதாய் இருக்கலாம், கொடுக்கப்படவும் செய்யலாம். நமக்குக் கொடுக்கப்பட்டிருப்பது இம்மைக்குப் போதுமானதாய் இருப்பதுடன் பூரணமானதாயும் இருக்கிறது. நாம் அதை உபயோகிப்பதற்குத் தக்கதாய் ஆசீர்வாதம் தனித்தனியாய் நமக்குக் கிடைக்கும். அவைகளை ஏற்றபடி கருத்தோடும் ஜெபசிந்தையோடும் வாசிக்கவேண்டும். அவைகள் உபதேசத்துக்கும் கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும் நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனம் உள்ளவைகளாய் இருக்கின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக, அவைகள் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே நம்மை இரட்சிப்புக்கு ஏற்ற ஞானம் உள்ளவர்கள் ஆக்கத்தக்கதாய் இருக்கின்றன.

## தீர்க்கதரிசன ஆகமம்.

### வெளிப்படுத்தின விசேஷம்.

1. சுவிசேஷங்களிலும் நிருபங்களிலும் தீர்க்கதரிசனங்கள் ஊடே ஊடே வந்தாலும் புதிய ஏற்பாட்டு ஆகமங்களில் வெளிப்படுத்தின விசேஷம் மாத்திரம் தீர்க்கதரிசன ஆகமமாய் இருக்கிறது. இதன் ஆக்கியோன் யோவான் அப்போஸ்தலன்



என்று பூர்வ பிதாக்கள் எல்லாரும் சாட்சியிட்டிருக்கிறார்கள். ஆனால், யோவான் அப்போஸ்தலன் இதை எழுதவில்லை, யோவான் என்ற ஒருகுரு எழுதினான் என்று சிலர் சொல்வதும் உண்டு. இந்த அபிப்பிராயம் இரண்டாம் நூற்றாண்டின் கடைசியில் அல்லது மூன்றாம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஆரம்பித்தது. ஆனால் முந்தின அபிப்பிராயம் சரி என வைத்துக்கொண்டாலும் இது எப்போது எழுதப்பட்டது என்பதைக் குறித்து பலபேர் பலவகையாய்ச் சொல்லி இருக்கிறார்கள். இது தொமிஷியன் அரசாட்சியின் காலத்தில் அதாவது முதல் நூற்றாண்டின் கடைசியில் எழுதப்பட்டதென்று பொதுப்படச் சொல்லப்படும். ஆனால் இது நேரோ மரணம் அடைந்தவுடனே கி. பி. 67ல் எழுதப்பட்டது என்பதற்குப் பலத்த நியாயங்கள் உண்டு.

2. வெளிப்படுத்தல் இன்னதால் எப்போது எழுதப்பட்டது என்பதைப்பற்றிச் சந்தேகம் இருந்தபோதிலும் அது இன்ன சந்தர்ப்பத்தில் எழுதப்பட்டது என்பது பிரத்தியட்சமாய் இருக்கிறது. யோவான் பத்முதீவில் கைதியாய் இருக்கையில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அவனுக்குத் தரிசனமாகி அவன் கண்ட தரிசனங்களை எழுதும்படி உத்தரவு அருளினார். அப்போஸ்தலன் இருந்த காலத்துக்கு உரியவைகளும் அதற்குப் பின்பு வரும் காலத்துக்கு உரியவைகளுமாகிய இரண்டு காரியங்கள் அவனுக்கு வெளிப்படுத்தப்பட்டன.

I. அக்காலத்தில் இருந்த சபையின் நிலைமை. முகவுரைக்குப்பின்பு யோவான் திவ்விய ஊழியத்தை நடப்பித்த ஏழு சபைகளாகிய எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்திரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா[1] ஆகிய இவைகளுக்கு நிருபங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இந்த நிருபங்களில் கட்டளைகளும் ஆலோசனைகளும் மெச்சுதல்களும் கண்டிப்புகளும் வாக்குத்தத்தங்களும் காட்டப்பட்டிருக்கின்றன. இவைகள் அந்தச் சபைக்கு ஏற்றவைகளாய் இருந்தபோதிலும் எல்லாக் காலத்திலுமுள்ள சபைகளுக்கும் உரித்தானதாய் இருக்கிறது.

II. பிற்காலத்தில் நடப்பவைகள். இதில் தேவனுடைய ஜனங்களின் போராட்டங்கள் உபத்திரவங்கள் சத்துருக்களின்பேரில் வரும் தேவனுடைய ஆக்கினைகள் முதலியவை

[1] இந்த ஏழு சபைகளைப்பற்றி இந்தப் புத்தகத்தில் காட்டப்பட்டிருக்கிற புதிய ஏற்பாட்டு பூமிசாஸ்திரம் பார்க்க.

பற்பல தரிசனங்களின் மூலமாய்க் காட்டப்பட்டிருக்கிறது. முடிவில் கடைசி நியாயத்தீர்ப்புக்குப் பின்பு கிறிஸ்துவின் சபையை புதிய எருசலேமாகப் பாவித்துக் காட்டியிருக்கிறது.

3. இவ்வாகமம் செய்யுள் நடையாக எழுதப்படாதிருந்தும் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசன ஆகமங்களைப்போல இதுவும் உள்ளபடி செய்யுளாய் இருக்கிறதென்று சொல்லலாம். இது ஒழுங்குமுறைமையாய் எழுதப்பட்டிருக்கிறது. இது அலங்காரமும் மாட்சிமையும் பயங்கரமுமான காட்சிகளால் நிறைந்திருக்கிறது. அலங்கார வாசகத்தில் இது எசேக்கியேலின் ஆகமத்துக்கு எவ்வளவும் தாழ்ந்ததல்ல. இதில் சொல்லப்பட்டிருக்கிற சில உவமானங்கள் சுயமாய் உள்ளது. உவமானங்கள் பாவனைகளை உபயோகிப்பதில் இவ்வாகமம் எசேக்கியேல் தானியேலின் ஆகமங்களுக்கு ஒப்பாய் இருக்கிறது. இவ்வாகமம் அந்த ஆகமங்களின் தொடர்ச்சியாய் இருக்கிறதென்று சொல்லலாம். ஆகவே இந்த மூன்று ஆகமங்களைச் சேர்த்து வாசிக்கிறது மெத்த நன்மையாய் இருக்கும்.

4. இவ்வாகமத்துக்குத் தெளிவான வியாக்கியானம் செய்வது மிகவும் வருத்தமாய் இருக்கிறது. இவ்வாகமத்தின்பேரில் அநேக வியாக்கியானங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. பற்பல வகையாயும் வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கின்றன. பிரபலமான எண்பது வியாக்கியானங்கள் இவ்வாகமத்தின் பேரில் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. சொற்ப வியாக்கியானங்களுக்குத் தொகை இல்லை. இவ்வாகமத்தின் சரியான கருத்தைப்பற்றி விசாரிப்பது நம்முடைய கடமை அல்ல. ஆனால் அந்த வியாக்கியானிகளின் வகுப்பைப்பற்றி இங்ஙனம் சொல்வது போதும். மிச்சமானபேர் இவ்வாகமம் திருச்சபையின் சரித்திரத்தைப்பற்றியது என்பார்கள். இவர்களுடைய கருத்தின்படி வெளிப்படுத்தலானது முடிவுகாலம்வரைக்கும் உள்ள சபையின் சரித்திரம் தொடர்ச்சியாய்ச் சொல்லப்பட்டுவருகிற ஆகமம் என்கலாம். சிலர் இந்த ஆகமத்தில் அடங்கிய காரியங்கள் வெகு காலத்துக்குமுன் சம்பவித்து ஆயிற்று என்பார்கள். இவர்கள் இந்தப் புத்தகம் நாம் காட்டிய காலத்துக்குமுன் எழுதப்பட்டது என்றும் அதில் அடங்கியவைகள் விசேஷித்த சங்கதியாகிய எருசலேமின் அழிவுவரைக்கும் சென்றது என்றும் சொல்லுகிறார்கள். சிலர் இவ்வாகமத்தில் அடங்கிய சங்கதிகள் இனிமேல் நடக்கப்போகிறது என்பார்கள். அவர்கள் கருத்தின்படி ஏழு சபைகளுக்கு எழுதப்பட்ட நிருபங்களும் அல்லது அவர்களில் சில வியாக்கியானி



கள் சொல்லியபடி நிருபங்கள் அடங்கிய அதிகாரங்கள்தவிர மற்றவைகள் எல்லாம் இனிமேல் நடக்கப்போகிறவைகள் என்று சொல்லலாம். இவ்வகை வியாக்கியானங்களில் நாம் எதையாவது ஒப்புக்கொண்டாலும் அல்லது ஒன்றையாவது ஒப்புக்கொள்ளாவிட்டாலும் நம்முடைய மீட்பருடைய மகிமையைப்பற்றி இவ்வாகமம் நமக்குச் சிறந்த போதனையைக் காட்டுகிறதென்பது நமக்குப் பிரத்தியட்சமாய்த் தெரிந்த காரியமாய் இருக்கிறது. மேலும், பேதுரு தெளிவாய் அறிவிக்கிறபடி[1] தீர்க்கதரிசனமானது அது நிறைவேறித் தீருமுன் பூரணமாய் விளங்காது. அதை உரைத்த தீர்க்கதரிசிகள் முதலாய் அதைச் சரியானபடி அறிந்திருக்கவும் மாட்டார்கள். பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசன ஆகமங்கள் யூதர்களுக்கு எப்படி இருந்ததோ அப்படியே இவ்வாகமமும் நமக்கு இருக்கிறது. ஒரு கன்னி ஒரு குமாரனைப் பெறுவாள், சாவுக்குரிய மனிதன் அழிவைக் காணமாட்டான், குற்றவாளிகளோடே எண்ணப்பட்டுப் புறக்கணிக்கப்பட்ட மனிதன் தாவீதின் ஆசனத்தில் என்றைக்கும் வீற்றிருப்பான் என்ற இவ்வகைத் தீர்க்கதரிசனங்கள் யூதர்களுக்குத் தெளிவாய் இராமல் மங்கலாகவே இருக்கும். அப்படி இருந்தும், விசுவாசியான யூதன் ஒன்றுக்கொன்று எதிரிடையாகத் தோன்றின ஆச்சரியமான காரியங்களை நம்பி தன் விசுவாசத்தைக் காத்துக்கொண்டான். அவன் அந்தப் பரிசுத்த ஆகமங்களைக் கனபக்தியோடே மதித்துப் பொறுமையோடே இஸ்ரவேலின் ஆறுதலுக்காகக் காத்துக்கொண்டிருந்தான். அப்படியே நாமும் அறிவிப்பின் ஆகமத்தில் காட்டப்பட்டிருக்கிற சுவிசேஷத்தின் பூரண முறைமை நிறைவேறும் என்று எதிர்நோக்கிக்கொண்டிருக்கவேண்டியவர்களாய் இருக்கிறோம். கிறிஸ்துவுக்கும் பிசாசுக்கும், சத்தியத்துக்கும் பொய்க்கும், ஒளிக்கும் இருளுக்கும் கடைசிநாள்வரைக்கும் போராட்டம் இருந்துவரும். கடைசியாக ஆட்டுக்குட்டியானவர் ஜெயித்து வெற்றிசிறப்பார். தேவனுடைய இரண்டு சாட்சிகளும் கொல்லப்பட்டும் மறுபடியும் உயிர் அடைந்தவர்களாய் இரட்டு உடுத்தி எப்போதும் தீர்க்கதரிசனம் உரைத்து வருகிறார்கள். உலக சரித்திரத்தில் உண்டாகும் மாறுதல்கள் புதிய முத்திரையை உடைக்கிறதாயும் உன்னதமானவருடைய இரகசியங்களை வெளிப்படுத்துகிறதாயும் இருக்கிறது. உலகத்தில் பெரும் இடுக்கண்கள் நேரிடும்போது ஆபத்து என்ற எங்

---

[1] 1 பேது. 1. 11, 12. 2 பேது. 1. 20, 21.

காளம் ஊதப்பட்டு கோபக்கலசம் ஊற்றப்படுகிறது. சாத்தான் கட்டுண்டிருக்கிறான். கிறிஸ்து ராஜாவாய் இருக்கிறார். இவ்வண்ணமாய்ப் பார்க்கில் இவ்வாகமத்தில் காட்டப்பட்டிருக்கிற உபமானங்கள் நடந்தவைகளாயும் நடப்பவைகளாயும் இருக்கிறது என்று அறியலாம். சுவிசேஷம் விருத்தி அடைய அடைய புதிய எருசலேம் பரலோகத்திலிருந்து பூலோகத்துக்கு அதரிசனமாய் இறங்கிவருகிறது. ஆனால் சபை கடைசியாக வெற்றிசிறக்கும்போது இவ்வுலகராஜ்யம் நம்முடைய கர்த்தருடையதும் அவருடைய கிறிஸ்துவுடையதுமான ராஜ்யமும் ஆகும்.

### வெளிப்படுத்தல் ஆகமத்தில் வருகிற ஒத்தவாக்கியங்கள்.

| | |
|---|---|
| அதி. 1. 8. | ஏசா. 44. 6. |
| ,, ,, 12–20. | சகரி. 4. 2-14. |
| ,, ,, 14,15. | தானி. 7. 9–13. |
| ,, 2. 7. | ஆதி. 2. 9; 3. 24. |
| ,, ,, 14. | எண். 25. 1; 31. 16. |
| ,, ,, 20. | 1 இரா. 16. 31; 21.25. |
| ,, 3. 7. | ஏசா. 22. 22. |
| ,, 4. 2, 3. | எசே. 1. 26–28. |
| ,, ,, 6. | எசே. 1.5,மு. |
| ,, 5. 11. | தானி. 7. 10. |
| ,, 6. 2, 4, 5, 8. | சகரி. 6.2–8. |
| ,, ,, 15. | ஏசா. 2, 19–21. |
| ,, 7. 1. | தானி. 7. 2. |
| ,, ,, 14. | சகரி. 13. 1. |
| ,, 10. 6. | தானி. 12. 6,7. |
| ,, ,, 9. | எசே. 3. 3. |
| ,, 11. 1, 2. | எசே. 40. 3, மு. |
| அதி. 11. 4. | சகரி. 4. 11–14. |
| ,, ,, 11. | எசே. 37. 5, 9, 10, 14. |
| ,, 12. 7. | தானி. 12. 1–10. |
| ,, 13. 1. | தானி. 7. 3, மு. |
| ,, 14. 8. | ஏசா. 21. 9. எரே. 51. 7. |
| ,, ,, 11. | ஏசா. 34. 10. |
| ,, ,, 14. | தானி. 7. 13. |
| ,, ,, 20. | ஏசா. 63. 3. |
| ,, 17. 4. | எரே. 51. 7. |
| ,, ,, 12. | தானி. 7. 20. |
| ,, 19. 20. | தானி. 7. 11, 12. |
| ,, 20. 8. | எசே. 38. 2. மு. |
| ,, ,, 11, 12. | தானி. 7. 9, 10. |
| ,, 21. 1. | ஏசா. 65. 17, 18; 66. 22, 23. |
| ,, 22. 1. | எசே. 47. 1–12. |
| ,, ,, 17. | ஏசா. 55. 1–7. |

# நாலாம் பங்கு.

## பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் இணைத்தல்.

பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் இணைக்கிற இணைத்தல் இருவகை உள்ளது. முதலாவது சரித்திர இணைப்பு. இரண்டாவது உபதேச இணைப்பு.

### 1. சரித்திர இணைப்பு.

1. நெகேமியாவுக்குப் பின்பு (கி. மு. 420.) யூதேயா பார்சியா ராஜாக்களுடைய அரசாட்சிக்குள் கொஞ்சங்குறைய நூறுவருஷம் இருந்தது. அது பிரத்தியேகமான அரசாட்சியாய் இராமல் சீரியாவோடே சேர்க்கப்பட்டு அந்தத் தேசத்து மேலான அதிபதியின்கீழ் பிரதான ஆசாரியனால் ஆளப்பட்டுவந்தது. வைதிக லௌகிக அதிகாரம் ஒருவன் கையில் சேர்ந்ததால் ஆரோன் வமிசத்தாருக்குள் பலத்த போராட்டங்கள் நேரிட்டது உண்டு.

2. அலெக்சந்தர் ராஜா பார்சியா ராஜ்யத்தைக் கவிழ்த்துப் போட்டபோது சீரியா அவன் அதிகாரத்துக்கு உள்ளானது. அவன் தீருவைக் கட்டிக்கொண்டபின்பு யூதரைத் தண்டிக்கும்படி யூதேயாவுக்குத் தன் சேனையை நடத்திக்கொண்டு போனான். ஏனென்றால் யூதர்கள் பார்சியா ராஜனுக்கு உடன்பட்டையாய் இருந்து அலெக்சந்தருடைய சேனைகளுக்குப் போஜனங்கள் கொடாதபடி தடைசெய்திருந்தார்கள். அவன் எருசலேமுக்குச் சமீபமாய் வந்தபோது ஜனங்களோடே யதுவா என்ற பிரதான ஆசாரியனும் மற்ற ஆசாரியர்களும் தங்கள் அங்கிகளோடு வரிசையாக அவனைச் சந்திக்கப் போனபோது தேவன் அவன் இருதயத்தை மாற்றி அவர்களுக்குத் தயைசெய்யும்படி பண்ணினார். ஆதலால் யூதர்கள் தங்கள் பிரமாணங்களின்படியும் மார்க்கத்தின்படியும் நடத்தப்படும்படியான சுயா

தினம் அருளினான். ஒய்வு வருஷங்களில் தீர்வையையும் ரத்து செய்தான். அவன் அலெக்சந்திரியாபட்டணத்தைக் கட்டின போது யூதர்களில் அநேகரை அங்கே குடியேற்றி கிரேக்கருக்கொப்பந்தம் அவர்களுக்குச் சுயாதீனம் அருளினான்.

3. அலெக்சந்தருடைய ராஜ்யம் பிரிக்கப்பட்டபோது யூதேயா பித்தோலோமி கலேஸ் என்பவனுக்கு விழுந்ததால் அது எகிப்து ராஜ்யத்தோடே சேர்க்கப்பட்டது. இந்த ராஜன் யூதரில் இன்னம் அநேகரை அலெக்சந்திரியாவுக்குக் கொண்டு போய்க் குடியேற்றி அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த சலாக்கியங்களை உறுதிப்படுத்தினான்.

4. பித்தோலோமி கலேசுடைய காலத்தில் நீதிமானாகிய சீமோன் என்ற பிரதான ஆசாரியன் யூதர்களுக்கு அதிகமான நன்மையைச் செய்தான். அவன் எருசலேமையும் தேவாலயத்தையும் செப்பனிட்டு அரணாக்கினான். அவன் வேதாகமத்தோடே எஸ்றா, ஆகாய், சகரியா, நெகேமியா, எஸ்தர், மல்கியா என்ற ஆகமங்களைச் சேர்த்துப் பழைய ஏற்பாட்டுக் கணக்கை முடித்தான். யூதர்கள் பெரிய சுனகோகைச் சேர்ந்தவர்கள் நூற்றிருபதுபேர் என்றும் அவர்களில் சீமோன் கடைசியானவன் என்றும் சொல்லுகிறார்கள். அவன் கி. மு. 291ல் மரித்தான்.

5. யூதர்கள் ஏறக்குறைய நூறுவருஷம் எகிப்து ராஜாக்களுக்குக் கீழ்ப்பட்டிருந்து சமாதானத்தோடே வாழ்ந்துகொண்டிருந்தபின்பு மகா அந்தியோகுவின் காலத்தில் கி. மு. 198ல் சீரியாவின் ராஜாக்களின் ஆளுகைக்கு உட்பட்டார்கள். சீரியர் பலஸ்தீனாவை ஐந்து நாடுகளாகப் பிரித்து யோர்தானுக்கு மேற்கே உள்ள நாடுகளுக்குக் கலிலேயா, சமாரியா, யூதேயா என்றும், கிழக்கேயுள்ள நாடுகளுக்குத் திராகொனித்தி பெரீயா என்றும் அவைகளுக்குப் பேரிட்டார்கள். யூதர்கள் அப்போதும் தங்களுடைய பிரமாணங்களின்படி பிரதான ஆசாரியனாலும் சங்கத்தாராலும் ஆளப்படும்படி இடம் பெற்றார்கள்.

6. யூதேயா எகிப்துக்கும் சீரியாவுக்கும் இடையில் இருந்ததால் அந்த இரண்டு ராஜ்யத்தாருக்கும் அடிக்கடி உண்டான யுத்தத்தினால் அதிகமாய்ச் சங்கடப்பட்டது. யூதருடைய பிரதான ஆசாரியரும் அதிகாரிகளும் ஜனங்களும் துன்மார்க்கத்தில் வளர்ந்தார்கள். ஆதலால் தேவன் அவர்களை சீரியாவின் ராஜாவாகிய அந்தியோகு எப்பிப்பானே என்ற ராஜனைக்கொண்டு தண்டிக்கச் சித்தமானார். அவன் கி. மு. 170ல்



எருசலேமுக்கு வந்து பட்டணத்தையும் ஆலயத்தையும் கொள்ளையிட்டு அநேகம்பேரைக் கொன்று பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தினான். மூன்றரைவருஷகாலமாய் யூதர்கள் வைதீக லௌகிக சுயாதீனம் அற்றவர்களாய் இருந்தார்கள். அந்தியோகு அன்றாடகப் பலியை நிறுத்திப்போட்டு தேவாலயத்தை யூபித்தருக்குப் பிரதிஷ்டை ஆக்கினான். அதின் விக்கிரகம் தகனப்பலிபீடத்தின்மேல் நிறுத்தப்பட்டது. கண்டுபிடிக்கப்பட்ட நியாயப்பிரமாணப் பிரதிகள் எல்லாம் சுட்டெரிக்கப்பட்டது. ஜனங்கள் விக்கிரகங்களுக்குப் பலியிட பலவந்தம் பண்ணப்பட்டார்கள். இப்படிப்பட்ட உபத்திரவங்களை யூதர்கள் இதற்குமுன் அநுபவித்திருந்ததில்லை. அநேகர் மருளாவிழுந்தபோதிலும் மீதியான சிலர் உண்மை உள்ளவர்களாய் இருந்தார்கள்.

7. கடைசியாக தேவன் அஸ்மோனிய குடும்பத்தில் ஒரு இரட்சகனை எழுப்பினார். மத்தியா என்ற ஒரு ஆசாரியன் இருந்தான். அவன் ஸ்திரமான சித்தமும் தேவபக்தியும் உடையவன். அவனுக்கு ஐந்து குமாரர் இருந்தார்கள். அவன் நியாயப்பிரமாணத்துக்காக வைராக்கியமாய் நிற்கும்படி மாதிரி காட்டி ஜனங்களுக்குப் போதனைசெய்தான். அவன் உண்மையுள்ள திரளான மனுஷரைத் திரட்டி யூதரை சீரியருடைய உபத்திரவத்தினின்று விடுவிக்கவும் தெய்வீக வணக்கத்தைப் புதுப்பிக்கவும் ஏற்பட்டான். அவன் மெத்த வயதுசென்றவனாய் இருந்ததால் தன் பிரயத்தனத்தின் முடிவைப் பார்க்க ஏது இல்லாமல்போயிற்று. அவன் மரணத்தில் அவனுடைய மூத்த குமாரன் யூதா என்பவன், கி. மு. 163ல் சேனையை நடத்தி யுத்தஞ்செய்தான். அவனுடைய கொடியின் குறிப்புமொழி "கர்த்தாவே, தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்" என்பதே (யாத். 15. 11.). மூலபாஷையில் வரும் இவ்வாக்கியத்துப் பதங்களின் முதல் எழுத்துக்களினால் மக்கப்பேர் என்ற பேர் பிறந்தது. மத்தியாவின் குடும்பத்தாரும் அவர்களைச் சேர்ந்தவர்களும் இந்த நாமத்தால் அழைக்கப்பட்டு வந்தார்கள்.

8. யூதா பற்பல யுத்தஞ்செய்தபின்பு அந்தியோகுவின் சேனையை ஜெயித்து எருசலேமையும் தேவாலயத்தையும் கட்டிக்கொண்டான். முதலாவது அவன் விக்கிரக ஆராதனையை முழுவதுமாய் விலக்கிப்போட்டு தேவாலயத்தைத் திரும்பவும் கர்த்தருக்கென்று பிரதிஷ்டை ஆக்கினான். இந்தக் காரியம் பிற்காலத்தில் வருஷந்தோறும் எட்டுநாளாகக் கொண்டா

டப்பட்டுவந்தது. அந்தப் பண்டிகைக்கு தேவாலயப் பிரதிஷ்டைபண்டிகை என்று பெயர். யோவா. 10. 22.

9. மக்கப்பேருடைய காலத்தில் யூதேயா சுயாதீன நாடாகி மற்ற ராஜ்யத்தாரோடே சமாதானமாய் இருந்தது. ஆனால் இந்தச் சமாதானம் நீடித்தகாலமாய் நிலைநிற்கவில்லை. ரோமராயனாகிய பம்பி என்பவன் ரோம சேனையை நடத்திக்கொண்டு யூதேயாவுக்கு வந்து எருசலேமை முற்றுகைபோட்டு, அதைப் பிடித்து ரோமருக்குக் கப்பம் கட்டும்படி செய்தான். மக்கப்பேர் குடும்பத்தார் ரோமர்கீழ் யூதரை ஆண்டுவந்தார்கள். இந்தக் குடும்பத்தில் கடைசியானவன் மகா ஏரோது. இவன் இதுமேயன், ஆனால் யூதமார்க்கத்தை அநுசரித்து மக்கப்பேர் அல்லது அஸ்மோனிய குடும்பத்தைச் சேர்ந்த மரியம்முனையை விவாகம்பண்ணினான். ரோம ராயனின் தயவை அதிகமாய்ப் பெற்று யூதேயாவை ஆண்டு அந்த ராஜ்யத்தை விஸ்தாரம் ஆக்கினான். தனக்குக் கீர்த்தி உண்டாக மிகுந்த திரவியம் செலவிட்டு தேவாலயத்தைப் பழுதுபார்த்து அலங்கரித்தான். பிரதான ஆசாரியனுடைய அதிகாரமும் குறைத்துப்போடப்பட்டது. பிரதான ஆசாரியன் தன் உத்தியோகத்தை ஜீவகாலபரியந்தம் நடத்திக்கொண்டு வருவதற்குப் பதிலாக அதிகமான திரவியம் கொடுத்தவன் அதைச் செய்யும்படியாகக் கொடுக்கப்பட்டது. ஏரோது மிகவும் குரூரன். தன் பிள்ளைகளில் மூன்று பேரையும் தன் மனைவியையும் கொன்றுபோட்டான்.

10. அகுஸ்து ரோம ராயனாய் இருக்கையில் ஏரோதினுடைய ஆளுகையின் முப்பத்தாறாம் வருஷத்திலே உலக ரட்சகர் பிறந்தார். ஏரோதுக்குப்பின்பு அர்கெலாயு யூதேயாவை அரசாண்டான். அவன் தகப்பனைப்போலவே மிகவும் குரூரனாய் இருந்தான். அவன் ஆளுகையின் பத்தாம் வருஷத்தில் யூதர்கள் அவன்பேரில் பிரியாது செய்ததின்பேரில் அகுஸ்து ராயன் அவனை கால் தேசத்தில் உள்ள வியன்னாபட்டணத்துக்குச் சிறையாக அனுப்ப அங்கே அவன் மரித்தான். அப்பால் யூதேயா ரோம நாடாக்கப்பட்டது. ஒரு தேசாதிபதி அதை ஆண்டுவந்தான். நம்முடைய இரட்சகருடைய காலத்தில் அப்படிப்பட்ட தேசாதிபதிக்கு மரணத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது.

## 2. உபதேச இணைப்பு.

1. இக்காலத்தில் அநேகர் பழைய ஏற்பாட்டை கனபத்தியாய் மதிக்கிறதில்லை. அதில் தியானப்போங்கான ஆகமங்களைமாத்திரம் வாசித்து மற்றவைகளை வாசியாமல் விட்டுவிடுகிறார்கள்.



புதிய ஏற்பாட்டை அதிகமாய்க் கண்ணியப்படுத்த நோக்கமாய் இப்படிச் செய்துவருகிறார்கள்.

2. பழைய ஏற்பாடு புதிய ஏற்பாட்டைப்போலவே நமக்கு அருமையுள்ளதென்று சொன்னால் அது வியர்த்தமாகும். ஏனென்றால் எபிரேய நிருபத்தில் "நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாய் இராமல் அவைகளின் நிழலாய்மாத்திரம் இருக்கிறது"[1] என்றும், கலாத்தியர் நிருபத்தில் "நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாயராய் இருந்தது"[2] என்றும் சொல்லியிருக்கிறது. மேலும் நம்முடைய கர்த்தராலும் அவருடைய அப்போஸ்தலராலும் நாம் "நியாயப்பிரமாணத்தின் அடிமைத்தனத்தினின்று" விடுவிக்கப்பட்டிருக்கிறோம்; "கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருக்கும்படியாக" கற்பிக்கப்பட்டிருக்கிறோம். என்றாலும் நியாயப்பிரமாணத்தின் அடிமைத்தனத்தினின்று விடுவிக்கப்பட்டிருக்கிறோம் என்று சொல்லிய வாக்கியங்கள் அந்த நியாயப்பிரமாணத்தின் அதிகாரத்தையும் அதின் பிரயோஜனத்தையும் காட்டுகிறவைகளாய் இருக்கின்றன. அது "நிழலாயும்," "உபாத்தியாயராயும்" இருக்கிறது. அதின் சகாயத்தை அங்கீகரியாதவர்கள் நிழலை அலட்சியம்பண்ணுவதால் பொருளைக் கண்டுபிடியார்கள். உபாத்தியாயருடைய உதவியை வெறுப்பவர்கள் மகா போதகருடைய போதனையை ஏற்றுக்கொள்ள ஆயத்தமில்லாதவர்களாய் இருப்பார்கள்.

3. நம்முடைய ஆண்டவரும் அவருடைய அப்போஸ்தலரும் பூர்வீக தீர்க்கதரிசிகள் "அவரைக்குறித்துப் பேசினார்கள்" என்று தெளிவாய்ப் போதித்திருக்கிறார்கள். அவர்கள் அடையாளங்களின் மூலமாயும் தீர்க்கதரிசனமாயும் பேசினார்கள். அவர்கள் பேசினதில் சிலவை மங்கலாய்க் காணப்படுவதுண்டு. அடையாளத்தைப் பொருளோடேயும் தீர்க்கதரிசனத்தை நிறைவேறுதலோடும் ஒத்துப்பார்த்துத் தியானிக்கையில் ஒன்று இன்னொன்றைத் தெளிவாக்கும்.

4. பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் இப்படி இணைத்துக் கவனமாய் வாசிக்கிறவர்களுக்கு வருத்தமில்லாதபடிக்கு விளங்கும்.

[1] எபி. 10. 1. [2] கலா. 3. 24.

5. முதலாவது, ஆதாம் பாவத்திலே விழுந்த சரித்திரத்தில் மீட்பின்வகைக்கு ஆதாரத்தைப் பார்க்கிறோம். தேவனை விட்டுச் சோரம்போவதும் தீமைக்குச் சாய்வதும் மனிதனுடைய ஆதிநிலைமை அல்ல என்றும், மனிதன் செம்மையானவனாக உண்டாக்கப்பட்டு தேவனோடே ஐக்கியமாய் இருக்கும் நிலைமையில் வைக்கப்பட்டான் என்றும் கற்றுக்கொள்ளுகிறோம். இந்த நிலைமையிலிருந்து அவன் பழைய ஏற்பாட்டில் சொல்லியிருக்கிறபடி தவறிவிழுந்தான். அவனைக் கிறிஸ்துவின்மூலமாய் மீட்டு ரட்சிப்பது சுவிசேஷம் நிறைவேற்றும் கிரியையாய் இருக்கிறது. இப்படியாக மனிதன் மருளவிழுந்த ஆதிசரித்திரம் மீட்பின் வகைக்குத் திறவுகோலாய் இருக்கிறது என்று பார்க்கிறோம். பவுல் இதைப்பற்றித் தெளிவாகக் காட்டியிருக்கிறான். அவன் இதின்பேரில் மீட்பின் வெளிக் கிரியைகளைப்பற்றி அல்ல, அதின் உள்ளான தன்மையைப்பற்றி நியாயங்களை எடுத்து ஸ்தாபித்திருக்கிறான். மனிதர் எல்லாருடைய பாவமான நிலைமை ஆதாமின் மீறுதலினால் உண்டாயிற்றென்ற சட்டத்தின்மேல் கிறிஸ்துவின்மூலமாய் உண்டாகும் இரட்சண்ய நன்மைகளும் எல்லாருக்கும் உண்டாயிற்று என்று திருஷ்டாந்தப்படுத்தி இருக்கிறான். "ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று. அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்."[1] "மனுஷனால் மரணம் உண்டானபடியால் மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்."[2] பிசாசின் தந்திரத்தினால் உண்டான மீறுதலின் நிர்ப்பாக்கியமும் பிசாசின் கிரியைகளை அழிக்கும்படி தேவகுமாரன் வெளிப்பட்டதும் ஒரே காரியத்தின் பங்குகளாகப் பிரிக்கப்படாதபடிக்கு ஐக்கியமாய் இருக்கிறதென்பதை அப்போஸ்தலன் சொல்லிய வசனங்களால் அறிகிறோம்.

6. இரண்டாவது, ஆபிரகாமோடே பண்ணின உடம்படிக்கை; இது கிறிஸ்துவின் கிரியையை நேராய்ச் சம்பந்தப்படுத்துகிறதாய் இருக்கிறது. "உன் வித்தினால் பூமியின் வம்சங்கள்

[1] ரோம. 5. 18, 19. [2] 1 கொரி. 15. 21, 22.



எல்லாம் ஆசீர்வதிக்கப்படும்" என்பது அந்த உடம்படிக்கையின் வார்த்தைகள்.[1] இதில் சுவிசேஷத்தின் சிறந்த பொருளைப் பார்க்கிறோம். இந்த வாக்குத்தத்தத்தைப்பற்றிப் பவுல் சொல்லிய குறிப்புகள் விசேஷித்தது. எப்படியென்றால் "விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறார் என்று வேதம் முன்னாகக் கண்டு: உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாய் முன் அறிவித்தது"[2] என்பதே. ஆபிரகாமின் உடம்படிக்கைக்கும் கிறிஸ்தவ உடம்படிக்கைக்கும் உள்ள சம்பந்தம் இதைவிட சிறந்த குறிப்புகளால் காட்டப்பட்டும் இருக்கிறது. அவை யாவன; கிறிஸ்து நம்மைச் சாபத்திற்கு நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார். ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதியாருக்கு வரும்படியாக இப்படி ஆயிற்று. ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன. சந்ததிகளுக்கென்று அநேகரைக்குறித்துச் சொல்லாமல் உன் சந்ததிக்கு என்று ஒருவனைக் குறித்துச் சொல்லியிருக்கிறார். அந்தச் சந்ததி கிறிஸ்துவே[3] என்பதே. கிறிஸ்துவானவருடைய மனுஷ அவதாரமும் கிரியையும் புதிய ஏற்பாட்டில் எங்கும் சொல்லியபடி ஆபிரகாமோடே பண்ணின உடம்படிக்கையை நிறைவேற்றுகிறதாய் இருக்கிறது. இது முற்றும் ஆவிக்குரியது. அது விசுவாசத்தின்மேல் பொருந்தி நிற்கிறது. அதின் பொருள் கிறிஸ்து. அவரில் சகல ஜாதியாரும் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்.

7. ஆபிரகாமோடே பண்ணப்பட்ட உடம்படிக்கையானது மனிதஜாதியார் எல்லாரையும் தழுவினது. அது கிறிஸ்துவில் முற்றுப்பெற்றது. மோசேயின் ஏற்பாடுகளைப்பற்றியும் அப்படியே சொல்லலாம். இது ஆபிரகாமோடே செய்யப்பட்ட உடம்படிக்கையை அழிக்காமல் அதற்கு அநுபந்தமாய் இருக்கிறது என்று பவுல் அப்போஸ்தலன் தெளிவாய் எடுத்து உரைத்திருக்கிறார்.[4] இந்த காரியத்தைப்பற்றி நாம் அதிகமாய்ப் போகாமல் மோசேயினுடைய ஏற்பாட்டின் மூவகை உத்தியோகங்களைக்குறித்துப் பார்ப்போமாக.

(1.) தீர்க்கதரிசன உத்தியோகம். இது கிறிஸ்துவின் தீர்க்கதரிசன உத்தியோகத்துக்கு நிழலாட்டமாய் இருக்கிறது என்று

[1] ஆதி. 22. 18. [2] கலா. 3. 8. [3] கலா. 3. 13, 14, 16.
[4] கலா. 3. 17.

வேதவாக்கியங்களினால் அறியலாம். தேவன் இஸ்ரவேலோடே சீனாய்மலையில் பேசினபோது அவர்கள் அதைக் கேட்கத் தாங்காமல் மோசேயினிடத்தில் "நீர் எங்களோடே பேசும், நாங்கள் கேட்போம்; தேவன் எங்களோடே பேசாதிருப்பாராக, பேசினால் நாங்கள் செத்துப்போவோம் என்றார்கள்."[1] அவர்கள் அப்படிக் கேட்டுக்கொண்டதற்கு தேவன் இணங்கி, "உன்னைப்போல் ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரில் இருந்து எழும்பப்பண்ணுவேன் என்று வாக்கு அருளினார்."[2] இங்கே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பெரிய தீர்க்கதரிசி கிறிஸ்துவைக்குறிக்கும். அவரே மோசேயைப்போல அவர்கள் சகோதரரில் இருந்து எழும்பினவர். ஆனால் அவர் வருகை அநேக காலமாய்த் தாமதித்திருந்தது. அதற்கு இடையில் அவருடைய உத்தியோகம் இஸ்ரவேலில் வரிசையாய் எழும்பின தீர்க்கதரிசிகளால் முன்னடையாளமாகக் குறிக்கப்பட்டுவந்தது. அந்தத் தீர்க்கதரிசிகள் தேவனால் அனுப்பப்பட்டு அவர் நாமத்தினால் ஜனங்களுக்குப் பிரசங்கித்து வந்தார்கள். பழைய புதிய ஏற்பாடுகள் எங்கும், தேவன் மனிதனைக்கொண்டு மனிதரிடத்தில் பேச சித்தம்கொண்டார் என்ற காரியம் சேர்க்கையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் அடங்கிய தீர்க்கதரிசனங்கள் எல்லாம் கிறிஸ்துவில் நிறைவேறினதாகக் காட்டுகின்றன. ஏனென்றால் "இயேசுவைப்பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாய் இருக்கிறது."[3]

(2.) **ராஜ உத்தியோகம்.** பழைய ஏற்பாட்டில் காட்டப்பட்டிருக்கிற இந்த உத்தியோகமும் விசேஷித்த வகையாய்க் கிறிஸ்துவுக்குச் சம்பந்தப்பட்டிருக்கிறது. தாவீதுக்கும் அவன் பின்னடியாருக்கும் கொடுக்கப்பட்ட தலைமையான அதிகாரம் கிறிஸ்துவின் சிரேஷ்ட அதிகாரத்துக்கு முன்னடையாளமாய் இருக்கிறது. மேலும் தேவன் தாவீதுக்கு "உன் வீடும், உன் ராஜ்யமும், என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும்; உன் சிங்காசனம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும்"[4] என்று வாக்கு அருளினார். இந்த வாக்குத்தத்தம் மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியாரான நாசரேத்தூர் இயேசுவில்மாத்திரம் நிறைவேறி இருக்கிறது. புதிய ஏற்பாட்டில் இதைக்குறித்து தெளிவாய்ச் சொல்லி இருக்கிறது. எப்படியென்

[1] யாத். 20. 19. [2] உபா. 18. 18. [3] வெளி. 19. 10.
[4] 2 சாமு. 7. 16.



றால் "கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது"[1] என்று தேவதூதன் மரியாளிடத்தில் விளம்பினான்.

(3.) **ஆசாரிய உத்தியோகம்.** இந்த உத்தியோகமும் பலிகளின் ரத்தமும் "உலகத்தின் பாவங்களைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாகிய" கிறிஸ்துவுக்கு முன் அடையாளமாய் இருந்தது. "இரத்தம் சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது"[2] என்ற மீட்பின் பெரிய ஆதார சத்தியத்தை பலியின் ரத்தம் காட்டுகிறதாய் இருந்தது. மோசேயின் நியாயப்பிரமாணத்தில் குறிக்கப்பட்டிருக்கிற பலிகள் திரும்பத் திரும்பச் செலுத்தப்பட்டுவந்தன. ஏனென்றால் "காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தம் பாவங்களை நிவிர்த்திசெய்யமாட்டாததாய் இருந்தது."[3] கிறிஸ்து கல்வாரியில் தம்முடைய சொந்த ரத்தத்தை உலகத்தாரின் பாவங்களுக்காகச் செலுத்தினபோது முன்னடையாளமாகக் குறிக்கப்பட்டிருந்த பலிகள் எல்லாம் பொருளானவரிடத்தில் நிறைவேறித் தீர்ந்ததால் அவைகள் என்றைக்கும் ஒய்ந்துபோயின. இப்போது "கிறிஸ்துவினுடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு அவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது."[4]

8. மேற்சொல்லிய காரியங்கள் எல்லாம் நம்முடைய இரட்சகரும் அப்போஸ்தலரும் தெளிவாய்ப் போதித்தவைகளால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றன. நமது ஆண்டவர் பழைய ஏற்பாட்டில் காட்டப்பட்டிருக்கிற தீர்க்கதரிசனங்களின்படி தாம் வந்திருப்பதாக அடிக்கடி தமது சீஷர்களுக்குப் போதித்தார். நமது ஆண்டவருடைய சம்பாஷணைகளில் அந்தத் தீர்க்கதரிசனங்களைப்பற்றிய இரண்டொரு செம்மையான கருத்துக்கள்மாத்திரம் காணப்பட்டிருந்தால் யுத்திவாதிகள் சொல்லியபடி கர்த்தர் போதித்தவைகளை அவருடைய சீஷர்கள் தப்பாய் அர்த்தம்பண்ணிக்கொண்டார்கள் என்று சொல்லத்தகும். ஆனால் அவருடைய போதனைகள் இந்த விஷயத்தில் திரளாயும் தெளிவாயும் இருப்பதால் யுத்திவாதிகள் சொல்வது பிரத்தியட்ச பிரமாணத்துக்கு விரோதமாய் இருக்கிறது. சீஷர்

[1] லூக். 1. 32, 33. [2] எபி. 9. 22. [3] எபி. 10. 4.
[4] எபே. 1. 7.

டவர் இதுவிஷயத்தைக்குறித்துப் பேசினபோது அவர்களுக்குள் இருந்த அபிப்பிராயங்களைப்பற்றிச் சுவிசேஷகர்கள் எழுதிவைத்திருக்கிறார்கள்.[1] தள்ளுபடி ஆகமங்கள் மற்றக் காரியங்களில் குறைவுள்ளவைகளாய் இருந்தபோதிலும் யூதர்களுக்குள் இருந்த மார்க்க அபிப்பிராயங்களை அறிவதற்கு அநுகூலமாய் உள்ளது.[2] அவைகளில் யூதர்கள் மறுமையைப்பற்றிய உபதேசத்தைக் கைக்கொண்டதாக வாசிக்கிறோம். மேலும் இரட்சகருடைய காலத்திலும் அதற்குமுன்னும் இருந்த மற்ற ஜாதியார் வீண்பத்தியுள்ளவர்களாய் இருந்தபோதிலும் மறுமையைப் பற்றிய கொள்கையை அநுசரித்துவந்தார்கள். வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளாத ஜனங்களுக்குள் இந்தக் கொள்கை இருந்தால் வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொண்டவர்களுக்குள் இந்த அறிவு இல்லை என்று சொல்வது ஒவ்வாததாய் இருக்கிறது.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் இருந்த மகாத்துமாக்கள் அல்லது அவர்களில் சிலர் மறுமையைப்பற்றிய அறிவில்லாதவர்களாய் இருந்தார்கள் என்று சொல்வது சத்தியம் அல்ல. எபிரெய நிருபத்தை எழுதினவன் ஆபேல், ஏனோக், நோவா, ஆபிரகாம் என்பவர்களுடைய நாமங்களையும் அவர்கள் சரித்திரங்களில் சில முக்கிய காரியங்களையும் எடுத்துக்காட்டினபின்பு "இவர்கள் எல்லாரும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு நம்பி அணைத்துக்கொண்டு பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள். இப்படி அறிக்கையிடுகிறவர்கள் சுயதேசத்தை நாடிப்போகிறோம் என்று தெரியப்படுத்துகிறார்கள். தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களானால் அதற்குத் திரும்பிப்போவதற்கு

---

[1] மத். 22. 23, 33. இதின் ஒத்தவாக்கியங்களை மாற்குவிலும் லூக்காவிலும் பார்க்க. யோவா. 5. 39; 6. 68; 11. 24. அப். 23. 6–9; 24. 14. 15.

[2] 2 மக்கப்பேர் 7. 9, 14, 23; 12. 43, 44. ஞானம். 3. 1–4. மேலும், ஒன்கலா என்பவன் லேவி 18. 5. வியாக்கியானம் செய்ததில் "நீங்கள் என் பிரமாணங்களையும் கற்பனைகளையும் கைக்கொள்ளக்கடவீர்கள்; அவைகளின்படி செய்கிறவன் அவைகளால் நித்தியஜீவனை அடைவான்" என்று சொல்லியிருக்கிறான். அருண் என்பவன் சங். 21. 4. வியாக்கியானம் செய்ததில் "நித்திய ஜீவனை உம்மிடத்தில் கேட்டான், நீரோ என்றென்றைக்குமுள்ள நீடித்த நாட்களை அவனுக்கு அருளினீர்" என்று எழுதிவைத்திருக்கிறான்.



அவர்களுக்குச் சமயம் கிடைத்திருக்குமே. அதை அல்ல, அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள்; ஆகையால் தேவன் அவர்களுடைய தேவன் என்னப்பட வெட்கப்படுகிறதில்லை; அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம் பண்ணினாரே"[1] என்று சொல்லியிருக்கிறான். மேற்சொல்லிய வாக்கியங்கள் வருகிற அதிகாரம் பத்தொன்பதாம் வசனத்திலே ஆபிரகாம் தன் குமாரனாகிய ஈசாக்கை மரித்தோரிலிருந்து எழுப்ப தேவன் வல்லமையுள்ளவராய் இருக்கிறார் என்று எண்ணி "மரித்தோரில் இருந்து அவனைப் பாவனையாகத் திரும்பப் பெற்றுக்கொண்டான்" என்று வாசிக்கிறோம். முந்தி சொல்லப்பட்ட வாக்கியங்களால் அந்த மகாத்துமாக்கள் மறுமையில் இன்பம் உண்டென்ற அறிவை உடையவர்களாய் இருந்தார்கள் என்றும், பிந்தின வாக்கியத்தால் ஆபிரகாமும் (அநுத்தாபத்தியாய்) அவன் வமிசத்தாரும் மரணத்துக்குப்பின் ஜீவன்லமை உண்டென்ற உபதேசத்தை அறிந்திருந்தார்கள் என்றும் கண்டுகொள்ளலாம்.

பழைய ஏற்பாட்டிலே மறுமைக்குரிய ஜீவனைப்பற்றிய உபதேசத்தைக்குறித்து நேராகவும் குறிப்பாகவும் காட்டியிருக்கிற வாக்கியங்களை இப்போது பார்ப்பது கூடாத காரியம். ஆனால் பழைய ஏற்பாட்டில் காட்டப்பட்டிருக்கிற இந்த உபதேசம் புதிய ஏற்பாட்டில் காட்டப்பட்டிருக்கிற உபதேசத்துக்கு இசைவாய் இருக்கிறதென்றும் புதிய ஏற்பாட்டில் அது பூரணமாய்க் காட்டப்பட்டிருக்கிறதென்றும் அறியலாம்.

11. பழைய ஏற்பாட்டிலிருந்து புதிய ஏற்பாட்டில் எடுத்து உரைக்கப்பட்டிருக்கிற வாக்கியங்களைக்குறித்து இரண்டொரு குறிப்புகளைச் சொல்லுகிறோம். அப்படி நேராக பூரணமாய் எடுத்து உரைக்கப்பட்டிருக்கிற வாக்கியங்கள் 263; அபூரணமாய்க் காட்டப்பட்டிருக்கிற வாக்கியங்கள் 376; ஆக 639. இந்த மேற்கோள் வாக்கியங்களை தீர்க்கதரிசன வாக்கியங்கள், ரூபகார வாக்கியங்கள், தாற்பரிய வாக்கியங்கள், உவமான வாக்கியங்கள் என பிரித்துச் சொல்லலாம். தீர்க்கதரிசன வாக்கியங்கள். இவை கிறிஸ்துவையும் அவருடைய சுவிசேஷத்தையும்பற்றி நேராய்ச் சொல்லப்பட்டவைகள்; திருஷ்டாந்தமாக மத். 4. 14–16. அல்லது அது முன்னடையாளமாக முதலாவது ஒரு சங்கதியை அல்லது ஆளைக் குறிக்கும்; பின்பு சுவிசேஷத்தில் காட்டப்பட்டிருக்கிற சங்கதி அல்லது ஆளைக்

---

[1] எபி. 11. 13–16

311



குறிக்கும்; திருஷ். யோவா. 19. 36. நடந்தேற வாக்கியங்கள். இவை ஒரு காரியத்தை மெய்ப்பிக்கிறவைகள்; திருஷ். யோ. 6. 45. தாற்பரிய வாக்கியங்கள். இவை ஒரு சங்கதியை விஸ்தரிக்கிறவைகள்; திருஷ். எபி. 12. 20. உவமான வாக்கியங்கள். இவை பழைய ஏற்பாட்டிலிருந்து நூதன கருத்தோடே எடுத்துச் சொல்லப்பட்டவைகள்; திருஷ். ரோ. 10. 18. கடைசியாகக் காட்டப்பட்டிருக்கிற வகை வாக்கியங்கள் மிகச் சொற்பம். சில வாக்கியங்கள் ரூபகார வாக்கியங்களாயும் தாற்பரிய வாக்கியங்களாயும் வரும். அன்றியும் சில பொதுவான சத்தியத்தைத் திருஷ்டாந்தங்களினால் ரூபிக்கிறவைகளாம். கலா. 3. 11.

12. இவ்வகையான வாக்கியங்களைத் தாராளமாய்ப் புதிய ஏற்பாட்டில் எடுத்துக் காட்டும் விஷயத்தில் வார்த்தை நுட்பமாய் எடுத்துக் காட்டவேண்டும் என்று திவ்விய அருள் பெற்றவர்கள் எண்ணங்கொள்ளவில்லை. வாக்கியங்களின் சாரத்தையும் நோக்கத்தையும் எடுத்துரைக்கும் அபிப்பிராயம் முக்கியமாய் அவர்களுக்கு இருந்தது. பொதுப்பட அவர்கள் கிரேக்கத் திருப்புதலிலிருந்தும் சில தருணங்களில் எபிரேயுவிலிருந்தும் தங்கள் நோக்கத்துக்கு இசைவாக வாக்கியங்களைச் சுருக்கியும் வியாக்கியானப்படுத்தியும் எடுத்துரைத்திருக்கிறார்கள். வெளிப்படுத்தப்பட்டிருக்கிறவைகளின் கருத்தை விட அவைகளின் எழுத்தை மனிதர் மிதமிஞ்சி மதியாதபடிக்கு தேவன் தம்முடைய ஞானத்தில் திவ்விய அருள் பெற்றவர்கள் இந்தப் பிரகாரமாய் வாக்கியங்களை எடுத்துக் காட்டும்படி சித்தம் கொண்டிருக்கலாம்.

13. சிலவேளைகளில், புதிய ஏற்பாட்டு ஆக்கியோன்கள் பழைய ஏற்பாட்டிலிருந்து வாக்கியங்களை பொருளை இசைக்கிறவகையாய் எடுத்துரைத்திருக்கிறார்கள். அந்த வாக்கியங்கள் முதல் நோக்கமாக வேறே காரியங்களுக்கு அடுத்ததாய்ச் சொல்லப்பட்டவைகள். ஆனால் புதிய ஏற்பாட்டை எழுதினவர்கள் தங்கள் நோக்கத்துக்கு இசைவாக அவைகளை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இதற்கு நாம் முன் எடுத்துக் காட்டியிருக்கிற வாக்கியம் ஒரு சிறந்த திருஷ்டாந்தம்.[1] சுவிசேஷ பிரசித்தத்தைக்குறித்து அப்போஸ்தலன் பேசுகையில், "அவர்கள் கேள்விப்படவில்லையா என்று கேட்கிறேன். கேள்விப்பட்டார்கள், அவைகளின் சத்தம் பூமியெங்கும் அவை

[1] ரோ. 10. 8.



களின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசிவரைக்கும் செல்லுகிறதே" என்று சொல்லியிருக்கிறான். வானசோதிகளால்[1] விளக்கப்படும் போதனை சுவிசேஷ பிரசங்க விஷயத்திற்கு ஒத்துவருகிறது என்று இதால் அறிகிறோம். ஆதலால் ஒருவரும் தங்கள் அவிசுவாசத்துக்காகப் போக்குச்சொல்ல ஏதுவில்லை என்று இதால் தெளிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரத்திலே இன்னொரு வாக்கியமும்[2] வருகிறது. அதின் முதல் நோக்கம் நியாயப்பிரமாணத்தில்[3] காட்டப்பட்டிருக்கிற பூரணநீதிமானாக்கப்படும் வகையைத் தெரிவிக்கவே. அதை அப்போஸ்தலன் சுவிசேஷத்துக்கு இசைவாக எடுத்துக் காட்டியிருக்கிறான்.

14. இவ்வகையான பொருள் இசைவு வாக்கியங்களுக்கும் நம்முடைய இரட்சகரும் அவருடைய அப்போஸ்தலரும் உபயோகித்ததாகச் சொல்லப்படுகிற பொருள் இசைவு வாக்கியங்களுக்கும் வெகு வித்தியாசம் உண்டு. நம்முடைய ஆண்டவரும் அவருடைய அப்போஸ்தலரும் மேசியாவையும் அவருடைய ராஜ்யத்தையும் குறிக்காத வாக்கியங்கள் என்று தாங்கள் அறிந்தவைகளை மேசியாவையும் அவரது ராஜ்யத்தையும் குறிக்கும் என்று எடுத்துரைத்திருப்பதாக யுக்திவாதிகள் சொல்லுகிறார்கள். திருஷ்டாந்தமாக, நாற்பத்தாம் சங்கீதம் மேசியாவைக்[4] குறித்த தீர்க்கதரிசனமாக அக்காலத்தோர் வியாக்கியானப்படுத்தினதை வைத்துக்கொண்டு அந்தப்படிக்கு அதை உபயோகித்ததாக பாராட்டுகிறார்கள். இப்படிச் சொல்வதை அணுவளவாகிலும் நாம் அங்கிகரிக்க ஏதுவில்லை. நம்முடைய இரட்சகர் அவர் காலத்தில் இருந்த ஜனங்களுடைய எண்ணங்கள் அபிப்பிராயங்களில் வெகு ஞானமாய் நடந்துகொண்டார் என்பது யாவருக்கும் அறியப்பட்ட விஷயம். அவர் அவர்களுடைய எண்ணங்களின்பேரில் தாம் மேசியா என்பதை ஸ்தாபிக்கவே இல்லை. அவர்கள் அபிப்பிராயத்துக்கு ஏற்றபடி தீர்க்கதரிசனங்களை எடுத்துக் காட்டியிருக்கிறார் என்பது மனத்தோற்றமே அல்லாது வேறல்ல.

15. புதிய ஏற்பாட்டை எழுதினவர்கள் நியாயதோரணைக்காக பழைய ஏற்பாட்டிலிருந்து வாக்கியங்களை எடுத்துரைத்திருக்கிறார்கள். திருஷ்டாந்தமாக, புருஷனுடைய இஷ்டத்தின்படி எந்த முகாந்தரத்தையிட்டும் மனைவியைத் தள்ளிவிடு

[1] ... 10. 6–8. [3] உபா. 30. 11–14.
[illegible] –37. [illegible] 20. 41–44. அப். 2. 31, 35. எபி. 1. 13.



5578

வது சரி அல்ல என்பதைப்பற்றி ஆதிவின்றாக ஏற்பாட்டைக் கொண்டு[1] இரட்சகர் ரூபித்திருக்கிறார். பவுல் அப்போஸ்தலன் புருஷன் மனைவிக்குத் தலையாய் இருக்கிறான்; அவனுக்கு அவள் கீழ்ப்படிந்திருக்கவேண்டும் என்பதைச் சிருஷ்டிப்பின் கிரமத்தையும் அதன்பின் வருகிற சங்கதிகளைக்கொண்டும் ரூபித்திருக்கிறான்.[2] எடுத்துக் காட்டப்படுகிற சாஸ்திர உண்மைக்கும் திவ்விய அதிகாரத்துக்கும் தக்கதாய் இவ்வகை நியாயங்களின் பலம் நிற்கிறது. ஆனால் அந்த அஸ்திபாரம் மணலில் இருந்தால் அவர்கள் கட்டின வீடும் விழுந்துபோம், அவர்கள் அதிகாரமும் அதோடே ஒழிந்துபோம். அந்த அஸ்திபாரம் கன்மலையில் இருந்தால் அவர்கள் வீடு நிலைநிற்கும்; அதோடே அவர்கள் உண்மையுள்ள போதகமார் என்ற குறிப்பும் பலப்படுகிறது.

**16.** கிறிஸ்துவையும் அவருடைய ராஜ்யத்தையும் பற்றியதாய் அநேக தீர்க்கதரிசனங்கள் பலவகையாய் எடுத்துரைக்கப்பட்டிருப்பது உண்டு. “தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தர் சொன்னது நிறைவேறும்படிக்கும்,” “ஏசாயா தீர்க்கதரிசி சொன்னது நிறைவேறும்படிக்கும்,” “இன்று இந்த வேதவாக்கியம் உங்கள் காதுகளில் நிறைவேறிற்று,” “இந்த வேதவாக்கியம் நிறைவேறவேண்டியது,” “இன்னொரு வேதவாக்கியம் சொல்லுகிறது,” “எழுதியிருக்கிற இது என்னில் நிறைவேறவேண்டும்” என்று இப்படியாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

**17.** கிறிஸ்துவைக் குறித்து நேராய்ச் சொல்லப்பட்டிருக்கிற வாக்கியங்களாவன. “கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி: நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும், நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும்.”[3] “நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராய் இருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார்; மனம் மாறாமலும் இருப்பார்.”[4] “அவர் ஒரு ஆட்டைப்போல அடிக்கப்படுவதற்குக் கொண்டுபோகப்பட்டார்; மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப்போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார்.”[5] “கர்த்தர்

[1] மத். 19. 3–6.
[2] 1 கொரி. 11. 8, 9. 1 தீமோ. 2. 11–14.
[3] மத். 22. 44. சங். 110. 1.
[4] எபி. 7. 20. சங். 110. 4.
[5] அப். 8. 32. ஏசா. 53. 7, 8.



என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவருக்குச் செவிகொடுப்பீர்களாக, மு.”[1]

**18.** சில தீர்க்கதரிசனங்கள் முன்னடையாளத்தின்படி அந்தமாய்க் கிறிஸ்துவைக் குறிக்கும். “அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை.”[2] இது கிறிஸ்துவுக்கு முன்னடையாளமாய் இருந்த பஸ்கா ஆட்டுக்குட்டியை முதலாவதாகக் குறிக்கும். பின்பு அந்த அடையாளத்தின் பொருளானவரைக் குறிக்கிறது. ஓசியா தீர்க்கதரிசனத்தில் “இஸ்ரவேல் இளைஞனாய் இருந்தபோது நான் அவனை நேசித்தேன்; எகிப்தில் இருந்து என் குமாரனை வரவழைத்தேன்”[3] என்று வாசிக்கிறோம். மத்தேயு இது கிறிஸ்துவில் நிறைவேறினதாகச் சொல்லியிருக்கிறான்.[4] இது தேவனுடைய ஜேஷ்டபுத்திரரான[5] இஸ்ரவேலர், ஒரு ஜாதியாராக இளந்தையாய் இருந்த காரியம், தேவனுடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுவைக் குறிக்கும் என்பதாக விளக்குகிறது.

அப்படிப்போல பின்வருகிற வாக்கியத்தைப்பற்றியும் சொல்லலாம். “மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷனுடைய குமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்? அவனை தேவதூதரிலும் சற்றுச் சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனுக்கு முடிசூட்டி, உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் அவனை அதிகாரியாக வைத்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்.”[6] இது முதலாவதாக, இந்தத் தாழ்ந்த உலகத்தில் மனிதனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற உன்னத கனத்தையும் மேலான அதிகாரத்தையும் குறிக்கிறது. ஆனால் எபிரெய நிருபத்தை எழுதினவன் கிறிஸ்துவை நீக்கிவைத்துப்பார்த்தால் இது பூரணமாய் மனிதனில் நிறைவேறவில்லை என்றும் கிறிஸ்துவில்மாத்திரம் இது திட்டமாய் நிறைவேறி இருக்கிறது என்றும் உரைத்திருக்கிறான்.

இன்னொரு திருஷ்டாந்தம்மாத்திரம் சொல்லுகிறோம். நாத்தான் தாவீதுக்குச் சொன்ன வார்த்தைகள் கிறிஸ்துவைக் குறிக்கும் என்று எபிரெய நிருப ஆக்கியோன் எடுத்துக் காட்டியிருக்கிறான். “நான் அவருக்குப் பிதாவாய் இருப்பேன், அவர் எனக்

[1] அப். 3. 22, 23; 7. 37. உபா. 18. 15, 18, 19.
[2] யோ. 19. 36. யாத். 12. 46. எண். 9. 12.
[3] ஓசி. 11. 1. [4] மத். 2. 15.
[5] யாத். 4. 22. [6] எபி. 2. 6, 7. சங். 8. 4–6.

குக் குமாரனாய் இருப்பார்"[1] இந்த வாக்குத்தத்தம் முதலாவதாக சாலொமோனைக் குறிக்கும். பின்பு தாவீதின் வம்சத்தில் சாலொமோன் வழியாய்க் கடைசியாய் வந்த கிறிஸ்துவைக் குறிக்கிறது. ஆதலால் அவரைப்பற்றி "அவர் பெரியவராய் இருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவு இராது"[2] என்று சொல்லியிருக்கிறது.

19. மேற்சொல்லப்பட்டவைகளினாலே பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் வெளிப்படுத்தலின் பங்குகளாக ஒன்றுக்கொன்று இசைவாயிருந்து கிறிஸ்துவை முடிவாகக் காட்டுவதால் புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டுக்கு உத்தம வியாக்கியானமாய் இருக்கிறதென்று அறியலாம். கிறிஸ்துவானவரும் அவருடைய அப்போஸ்தலரும் செய்திருக்கிற வியாக்கியானத்துக்குமேல் வியாக்கியானம் இல்லவே இல்லை. ஆகவே இயேசுவுக்கும் அவருடைய அப்போஸ்தலருக்குமுரிய மேலான அதிகாரத்தை வெளியரங்கமாயாவது மூடலாயாவது தள்ளும்படி பழைய ஏற்பாட்டைக்குறித்துச் செய்யப்படும் வியாக்கியானம் தப்பறையும் விபரீதமுமுள்ளது என்று அறிந்துகொள்ள வேண்டும்.

[1] எபி. 1. 5. 2 சாமு. 7. 14. [2] லூக். 1. 32, 33.

# ஐந்தாம் பங்கு.

## வேதாகமத்தை ஆராய்ந்து விஸ்தரிப்பதற்குரிய சுருக்கக் குறிப்புகள்.

1. வேதாகமம் திவ்விய வெளிப்படுத்தலாய் இருப்பதாலும் அது மிகவும் விசேஷித்த காரியங்களைக்குறித்து அறிவிப்பதாலும் அதின் சரியான கருத்து இன்னதென்றும், பரிசுத்த ஆவியானவர் அதால் நமக்கு விளக்குவிக்கிற பொருள் இன்னதென்றும் பார்ப்பது மிகவும் முக்கியமான காரியம். ஆனால் வேதத்தைக்கொண்டு அநேக வகையானதும் எதிரிடையானதுமான உபதேசக்கொள்கைகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதால் சரியான கருத்தைக் கண்டறிவது இலேசல்ல. நாம் எல்லாரும் வேதாகமத்தை மேலான அதிகாரமுள்ளது என்றும், சகல விவாதத்துக்கும் உரைகல் என்றும் பயபக்தியுடன் அங்கீகரிக்கிறபோதிலும் நாம் எல்லாரும் "விசுவாசத்தின் ஒருமைப்பாட்டுக்கு" வந்து சேர்ந்திருக்கிறோம் என்றாவது, அல்லது சீக்கிரமாய் வந்து சேருவோம் என்றாவது சொல்ல ஏதுவில்லை. வேதாகமத்தை யதார்த்தமான கருத்தோடே வியாக்கியானம் செய்யாததினாலே அநேக பதிதங்கள் எழும்பினது என்பதற்குச் சந்தேகம் இல்லை. வேதாகமம் நமக்கு அருளப்பட்ட முகாந்தரத்தையும் நம்முடைய நிலைமையையும் ஏற்றபடி அறியாததினாலே அதை விளக்குவது அரிதாய் இருக்கிறது. ஏனென்றால் முதலாவது, சீர்கெட்ட மனிதருக்கு ஆவிக்குரிய சத்திய போதனைகளைப் புகட்டுவது எப்போதும் வருத்தமான விஷயம். இரண்டாவது, வேதாகமம் பல காலங்களில் பல இடங்களில் இருந்து எழுதப்பட்டதால் அவைகளில் அடங்கிய ஒப்பனைகள், உவமானங்கள், மொழிகள், பல ஜாதியாருடைய வழக்கங்கள், உடை நடை பாவனைகளிலிருந்து எடுத்தாளப்பட்டிருக்கின்றன. ஒரு ஜாதியாருடைய வழக்கங்கள் முதலியவை இன்னொரு ஜாதியாருக்கு முற்றும் விகற்பமாய் இருப்பதும் உண்டு. தேவன் வேற்றுமையான தாற்பரியங்கள் அடங்

சுந்தக்கதாய் வெளிப்படுத்தலை அருளி இருக்கலாம் என்பது கூடாதகாரியம். அவர் தமது சத்தியவசனத்தைத் தாட்டாந்த வகையாய் அருளினாலும் அருளலாம். ஆனால் தேவன் அந்த வகையாய் வெளிப்படுத்தாததைப் பார்க்கையில் அப்படிச் செய்வது முதல்தரமானது அல்ல என்று அறியலாம். வெளிப்படுத்தல் புத்திக்கு அறிவைக் கொடுக்கமாத்திரம் அல்ல, இருதயத்தில் பயன் செய்யும் நோக்கமாயும் கொடுக்கப்பட்டிருக்கிறது. தாட்டாந்தமேயாய் அது அருளப்பட்டால் புத்தியை வசப்படுத்துவதற்கு அது அநுகூலமாய் இருக்கலாம்; இருதயத்தையோ அது வசப்படுத்த வலாது. இப்படி மனிதருக்குள் பற்பல அபிப்பிராயங்கள் இருந்தாலும் ஒன்றுமாத்திரம் நிச்சயம். வேதாகமத்தை உண்மையாய் அங்கீகரிக்கிறவர்கள் எவ்வகை எண்ணமுள்ளவர்களாய் இருந்தாலும், அது அவர்கள் உத்தம நடக்கைக்கும் எழுப்புதலுக்கும் ஊற்றாய் இருக்கிறதென்று அதை மதித்துவருகிறார்கள்.

2. வேதாகமம் பற்பல காலங்களில் பற்பல ஸ்திதியில் இருந்தவர்களால் எழுதப்பட்டிருப்பதினாலே வேதத்தை ஆராய்கிறவர்கள் அவைகள் யாரால் என்ன காரியங்களையிட்டு எழுதப்பட்டன என்று கருத்தோடே விசாரிக்கவேண்டியவர்களாய் இருக்கிறார்கள். அவ்வாகமங்கள் மனிதரால் மனிதருக்கு (துவக்கத்தில் சில விசேஷித்த ஜனங்களுக்கு) எழுதப்பட்டபடியால் ஆக்கியோன்களுடைய காரியத்தைமாத்திரம் அல்ல, அந்த ஜனங்களுடைய காரியாதிகளையும் அறியவேண்டியது அவசியம். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் யாரால் யாருக்கு எழுதப்பட்டன என்று நாம் அறியாவிட்டால் அவை நமக்கு விளங்காது. பவுல் அப்போஸ்தலனுடைய நிருபங்களில் அவன் பேர் காட்டப்படாமலும் சரித்திர சம்பந்தம் இல்லாமலும் இருந்தாலும் அவைகள் திவ்விய சத்தியங்களை விளக்குவிப்பதால் நமக்கு அருமையாய் இருக்கும். அதோடே அப்போஸ்தலன் தன் நிருபங்களைத் தன் பிரயாணத்தில் அல்லது காவல் அறையிலிருந்து எழுதினான் என்றாவது அல்லது அவனுடைய ஆலோசனைகள் கண்டிப்புகள் எச்சரிப்புகளை முதலாவதாக வாசித்த ஜனங்களின் காரியாதிகளைக்குறித்து நமக்குத் தெளிவு இருக்கிறது என்றாவது அறிந்தால் அவன் எழுதின ஆகமங்கள் நமக்குப் பத்தத்தனை அதிக இன்பமாய் இருக்கும். அப்படியே சுவிசேஷங்களைப்பற்றியும் சொல்லலாம்; அவைகள் எல்லாம் நம்முடைய இரட்சகருடைய ஜீவியவிருத்தாந்தமாய் இருக்கின்றன. அவைகள் விசேஷித்த ஜனங்களுக்கு



விசேஷித்த நோக்கத்தோடே எழுதப்பட்டன. மத்தேயு யூதருக்கும், மாற்கு ரோமகிறிஸ்தவர்களுக்கும், லூக்கா பொதுப்பட புறஜாதியாருக்கும், யோவான் மற்றச் சுவிசேஷங்களுக்கு அநுபந்தமாயும் எழுதினார்கள் என்று அறிவது சுவிசேஷங்களை ஆராய்ந்தறிவதற்கு மெத்த அநுகூலமாய் இருக்கும்.

3. வேதாகமம் முழுமையையும் கற்றறியவேண்டியதற்கு மேற்சொல்லிய குறிப்புகள்மாத்திரம் போதாது. ஒவ்வொரு பிரிவுக்கும் அதிகாரத்துக்கும் வியாக்கியானம் இன்னதென்று பார்க்குமுன் அந்தந்தப் புஸ்தகம் எழுதப்பட்ட நோக்கம் இன்னதென்று கண்டுபிடிக்கவேண்டும். இதை அறிந்தால் வருத்தங்கள் நீங்கிப்போம். விகற்பமாய்த் தோன்றுகிறவைகளும் அப்படிக் காணப்படமாட்டாது. திருஷ்டாந்தமாக, ரோமர் நிருபம், யாக்கோபின் நிருபம் எழுதப்பட்ட நோக்கம் தெரிந்தால் அவைகளை எழுதினவர்கள் ஒன்றுக்கொன்று விகற்பமானதை எழுதவில்லை என்று அறிந்துகொள்ளலாம். அவர்கள் தாங்கள் எழுதின நோக்கத்துக்கேற்றவிதமாய் ஒரே சத்தியத்தின் வெவ்வேறு பங்கைப் பிடித்து எழுதியிருக்கிறார்கள் என்று அறியலாம். ரோமர் நிருபம் நியாயப்பிரமாணத்துக்கேற்ற கிரியைகளினாலே ஒரு மனிதனும் நீதிமானாக்கப்படமாட்டான் என்று காட்ட நோக்கமாய் எழுதப்பட்டது. யாக்கோபின் நிருபம் பரிசுத்தத்துக்கு ஏதுவாய் இராத விசுவாசத்தினால் ஒருவனும் நீதிமானாக்கப்படமாட்டான் என்று ரூபிக்கும் நோக்கமாய் எழுதப்பட்டது. அப்படியே ரோமர் நிருபத்தையும் கலாத்தியர் நிருபத்தையும் ஒத்துப்பார்க்கில், இரண்டிலும் ஒன்றுக்கொன்று விகற்பமாய்த் தோன்றுகிறவைகள் உள்ளபடி விகற்பங்கள் அல்ல என்று துலங்கும். ஒன்றில் நாட்களை விசேஷித்துக் கொள்வதைப்பற்றி[1] இடங்கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றதில், அது கண்டிக்கப்பட்டிருக்கிறது.[2] இந்த விகற்பத்தை எப்படிச் சமாதானப்படுத்தலாம்? அந்த இரண்டு நிருபங்கள் எழுதப்பட்ட நோக்கத்தை அறிவதினால் சமாதானப்படுத்தலாம். மோசேயின் பிரமாணத்தில் வளர்க்கப்பட்ட யூதர்கள் அதின் கட்டளைகளை விலக்கிவைப்பதையிட்டு மனதில் ஐயங்கொண்டதால் அவர்கள் நாட்களை விசேஷித்துக்கொள்ளும்படி ரோமர் நிருபத்தில் இடங்கொடுக்கப்பட்டிருக்கிறது. புறஜாதியார் விருத்தசேதனமின்றி சிலுவை தங்களை இரட்சிக்கமாட்டாது என்று எண்ணினார்கள். இந்த எண்ணத்தினால் நாட்களை ஆசரித்துவந்ததால் அவர்கள் அப்படிச் செய்வது தகாதென்று

[1] ரோ. 14. 6.
[2] கலா. 4. 10, 11.

கலாத்தியர் நிருபத்தில் கண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு புஸ்தகம் யாரால் என்ன காரியத்தையிட்டு என்ன நோக்கத்தோடே எழுதப்பட்டதென்று கண்டுபிடித்தால், அந்தப் புஸ்தகத்தின் கருத்தை நன்றாய் அறிவதற்கு அநுகூலமாய் இருக்கும்.

4. ஏதாவது ஒரு வாக்கியத்தின் கருத்தை அறியவேண்டுமானால், அதற்கு முன்பின்னுள்ள தொடர்வாக்கியங்களைக் கவனிப்பது முக்கியமான காரியம். இதைக் கவனியாமல் விஸ்தரிக்கிறது எழுக்கேற்றமான வியாக்கியானம் ஆகும்.

5. மேற்சொல்லியதற்குரிய திருஷ்டாந்தங்கள் திரளாய் வேதத்தில் வரும். சங். 7. 8. "கர்த்தாவே என் நீதியின்படி என்னை நியாயம் விசாரியும்" என்று தாவீது ஜெபித்தான். தொடர் வாக்கியத்தைப் பார்க்கையில், பென்யமீனனாகிய கூஷ் என்பவன் தாவீதின்பேரில் சாட்டின குற்றத்தில் தாவீது சம்பந்தப்படாமல் "உண்மையுள்ளவனாய் இருந்தான்" என்று விளங்கும். யோவா. 9. 3. "இவன் செய்த பாவமும் அல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமும் அல்ல" என்று சொல்லி இருக்கிறது. இதின் அர்த்தம் ஒரு விசேஷித்த பாவத்தின் தண்டனையாகக் குருட்டாட்டம் அவனுக்கு உண்டாகவில்லை என்பதாம். யாக். 5. 15. சபையின் மூப்பர் வியாதியஸ்தனுக்கு எண்ணெய் பூசி அவனுக்காக ஜெபம்பண்ணும்படி கட்டளை பெற்றிருக்கிறார்கள். "விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ரோம சபை இந்த வாக்கியத்தைக்கொண்டு "அவஸ்தை பூசுதல்" என்ற உபதேசத்தை ஸ்தாபித்து [illegible]தால் மரணநேரத்தில் ஆத்துமா இரட்சிக்கப்படும் என்பார்கள். 15, 16 வாக்கியங்களைக் கவனித்தால் "இரட்சிக்கும்" என்ற வார்த்தை "சொஸ்தமாகுதலை" குறிக்கும் என்று அறியலாம்.[1] 1 கொரி. 7. 1. "விவாகம்பண்ணுவது நல்லதல்ல" என்று பவுல் ஒரு பொதுவான விதியைச் சொல்லுகிறான். 26-ம் வாக்கியத்தைப் பார்த்தால் "இப்போது உண்டாய் இருக்கிற துன்பத்தின் நிமித்தம்" விவாகம்பண்ணாமல் இருக்கிறது நலம் என்று சொல்லியிருக்கிறது. சங். 118. 24. "இது கர்த்தர் உண்டுபண்ணின நாள், இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம்" என்று சொல்லியிருக்கிறது. "நாள்"

[1] யூதர்கள் சில [illegible] வியாதிகளுக்கு எண்ணெயை அநுகூலமான பரிகாரமாக உபயோகித்துவந்தார்கள். இந்த வாக்கியத்தின் அர்த்தம், மற்ற பக்குவங்களை உபயோகித்து ஜெபம் செய்தால் கர்த்தருக்குச் சித்தமாகில் அது பிரயோஜனப்படும் என்பதே.



என்பதற்கு அர்த்தம் இன்னதென்று 5–18. வாக்கியங்களைப் பார்த்தால் தேவன் இஸ்ரவேலரைக் கொடிய உபத்திரவத்தினின்று மீட்டு இரட்சித்திருந்தார்; அந்த இரட்சிப்பினால் இஸ்ரவேலருக்கு அருளப்பட்ட க்ஷேமமான காலத்தை நாள் என்பது குறிக்கும். இங்கே ஓய்வுநாளைச் சுட்டும் என்பதற்குக் குறிப்புகள் இல்லை. 1 கொரி. 2: 9. "தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவும் இல்லை, காது கேட்கவும் இல்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவும் இல்லை" என்று சொல்லியிருக்கிறது. இந்த வாக்கியம் மோட்சபாக்கியத்தைக் குறிக்கும் என்பதாய் அடிக்கடி எடுத்துரைக்கப்படுவது உண்டு. ஆனால், தொடர்வாக்கியங்களைப் பார்த்தால் இது தப்பிதம் என்று அறியலாம்; 7-ம் வாக்கியத்தில் மறைக்கப்பட்டதாய் இருந்த ரகசியமான ஞானத்தையே பேசுகிறோம் என்றும், 10-ம் வசனத்தில் தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே நமக்கு வெளிப்படுத்தினார் என்றும் சொல்லியிருக்கிறது. ஆதலால் அப்போஸ்தலன் முற்காலத்தில் ரகசியமாய் வைக்கப்பட்டு, பிற்பாடு வெளிப்படுத்தப்பட்ட காரியங்களைக்குறித்து இங்கே பேசியிருக்கிறார். அவைகள் தேறின விசுவாசிகளுக்கு ஏற்றதாய் ரோமர், எபேசியர், கொலோசெயர் நிருபங்களில் விவரிக்கப்பட்டிருக்கிற மகத்துவமான உபதேசங்களேயாம்.

6. திவ்விய வசனத்தின் கருத்தை அறியும்படி தொடர் வாக்கியங்களை ஆராய்வது நலம் என்பதற்குச் சில திருஷ்டாந்தங்கள்மாத்திரம் காட்டப்பட்டிருக்கிறது. வேதத்தில் அப்படிப்பட்ட திருஷ்டாந்தங்கள் அனந்தம் உண்டு. "தொடர் வாக்கியங்கள்" எதுவரைக்கும் சம்பந்தமாய் வரும் என்று ஒரு கேள்வி வரலாம். தொடர்வாக்கியங்கள் அடுத்து மாத்திரம் வருமோ? அல்லது தூரமாயும் வருமோ? இதற்கு ஒரு எல்லையைக்குறித்து மட்டுத்திட்டப்படுத்தக்கூடாது. ஒரு பொருளின் சம்பந்தமாய் வருகிற வாக்கியங்களை எல்லாம் கவனமாய் வாசித்து ஆராயவேண்டும். ஏனென்றால், வேதாகமத்தை எழுதினவர்கள் பிரிவுகள் உட்பிரிவுகள் வைத்துப் பொதுப்பட எழுதவில்லை. அவர்கள் நியாயம் சொல்லிக்கொண்டுபோகையில் இடைப்பிறல் வாக்கியங்களை அமைத்தும் இருக்கிறார்கள். இப்படி விலகி,[1] வேறே பொருளைப்பற்றிப் பேசினபின்பு

[1] சொல்லிக்கொண்டுவந்த காரியத்தை விட்டுவிட்டு வேறே பொருளை எடுத்துரைப்பதற்கு எபேசியர் நிருபத்தில் ஒரு விசேஷித்த

மறுபடியும் முன்சொன்ன காரியத்தை எடுத்துச் சொல்லிக் கொண்டு போவதுண்டு. பவுல் அப்போஸ்தலனுடைய நிருபங்களில் இதுவிஷயத்தை முக்கியமாய்க் காணலாம். கருத்தின் சம்பந்தத்தை அறியவேண்டுமானால் புஸ்தகம் முழுவதையும் கவனத்தோடே வாசிக்கவேண்டும்.

7. திவ்விய சத்தியத்தை அறிவதற்கு ஒத்தவாக்கியங்களும் மெத்த அநுகூலமாய் இருக்கும். இப்படிப்பட்ட வாக்கியங்களில் வார்த்தை சம்பந்தம் அல்லது பொருள் சம்பந்தம் வருவதால் பிரயோஜனமாய் இருக்கிறது. வேதமும் வேதத்துக்கு வியாக்கியானமாய் இருக்கவேண்டியது நியாயமே. இதை இரண்டு காரியங்கள்மேல் ஸ்தாபிக்கலாம். முதலாவது, ஒரு நூலாசிரியன் ஒரு காரியத்தைக்குறித்துத் திரும்பவும் எடுத்துக்காட்டும்போது ஒரேவித வார்த்தைகள் வாசகங்களை உபயோகிப்பது இயற்கை. ஆதலால் ஒரு வாக்கியத்தில் கருகலாய் இருப்பது இன்னொரு வாக்கியத்தில் தெளிவாகக் காட்டப்படலாம். இரண்டாவது, வேதாகமத்தை எழுதினவர்கள் எல்லாரும் தேவ ஆவியானவரால் மேல்நடத்தப்பட்டதால் முக்கிய காரியங்களில் அந்த ஆக்கியோன்கள் ஒருவருக்கொருவர் எதிரிடையானவைகளை எழுதக்கூடாதவர்களாய் இருந்தார்கள். விகற்பமாகத் தோன்றப்படுகிறவைகள் ஒரு சங்கதி அல்லது உபதேசத்தின் வெவ்வேறான பாகங்களைச் சேர்ந்தவைகளாய் இருக்கின்றன. அவைகளை எல்லாம் ஒன்றாகத் திரட்டுகையில் அவைகள் பூரணமானதாகக் காணப்படும்.

8. இந்த ஒத்தவாக்கியங்கள் சொல்லொத்த வாக்கியங்கள் என்றும் கருத்தொத்த வாக்கியங்கள் என்றும் இருவகைப்படும். ஒரேவித வார்த்தைகள் அல்லது வாசகங்கள் வரும்போது அது சொல்லொத்த வாக்கியம் எனப்படும். ஒரேவித கருத்து அல்லது பொருள் எடுத்துக் காட்டப்படும்போது அது கருத்தொத்த வாக்கியம் எனப்படும். ஒரு வாக்கியத்தில் கருகலாய்க் காணப்படுவது மற்றொரு வாக்கியத்தில் தெளி

திருஷ்டாந்தம் உண்டு. அப்போஸ்தலன் எடுத்துக் காட்டிக்கொண்டு போகிற நியாயங்கள் மூன்றாம் அதிகாரம் முதல் வாக்கியத்தில் நிறுத்தப்பட்டு பதினாலாம் வாக்கியத்தில் மறுபடியும் தொடர்ச்சியாய்க் கூட்டப்பட்டுவந்திருக்கிறது. சிலர் மூன்றாம் அதிகாரம் முழுமையும் இடைப்பிறவரல் வாக்கியங்கள் என்று நினைக்கிறார்கள். பிலிப்பியர் நிருபம் முதலாம் அதிகாரம் இருபத்தேழாம் வாக்கியம் முதல் இரண்டாம் அதிகாரம் பதினாறாம் வாக்கியம்வரையும் இடைப்பிறவரல் வாக்கியங்கள் என்று சொல்லலாம்.



வாய்க் காணப்படும். திருஷ்டாந்தமாக 1 சாமு. 13. 14ஐயும் அப். 13. 22ஐயும் பார்க்க. தாவீது "கர்த்தருடைய இருதயத்துக்கு ஏற்ற மனுஷன்" என்று அழைக்கப்படுகிறான். இதைக்கொண்டு தாவீது பூரணமாதிரிக்கு அத்தாட்சியாகவா காட்டப்படுகிறான் என்று கேள்வி கேட்கப்படுவது உண்டு. ஆனால் 1 சாமு. 2. 35. "என் உள்ளத்துக்கும் என் சித்தத்துக்கும் ஏற்றபடி செய்யத்தக்க உண்மையான ஒரு ஆசாரியனை எழும்பப்பண்ணுவேன்" என்று சொல்லியதைப் பார்க்கில், தாவீதைப்பற்றிச் சொல்லியிருப்பதின் கருத்து லகுவாய் விளங்குகிறது. அதால் தாவீது தேவனுடைய சித்தத்தின்படி காரியங்களை நடப்பித்து, அவர் ஏற்படுத்தின பிரமாணங்களை அநுசரித்து நடந்துவந்தான் என்று அறியலாம். 1 பேது. 2. 7. கிறிஸ்து "இடறுதற்கேதுவான கல்" என்று அழைக்கப்படுகிறார். அடுத்த வாக்கியத்தைப் பார்த்தால் திருவசனத்துக்குக் கீழ்ப்படியாமையைக் காட்டுவது இடறுதலைக் குறிக்கும் என்று அறியலாம். ஆதி. 49. 6. "என் ஆத்துமாவே, அவர்களுடைய இரகசிய ஆலோசனைக்கு உடன்படாதே; என் மேன்மையே, (அல்லது மகிமையே) அவர்கள் கூட்டத்தில் நீ சேராதே" என்பதில் "மேன்மை" என்பது ஆத்துமாவைக் குறிக்கும் என்று ஒத்தவாக்கியங்களினால்[1] அறிந்துகொள்ளலாம். மனிதனுடைய மகிமை அவன் ஆத்துமாவே.

9. சொல்லொத்த வாக்கியங்கள் பிரயோஜனமுள்ளவைகளாய் இருப்பதைவிட கருத்தொத்த வாக்கியங்கள் அதிகப் பிரயோஜனமுள்ளவைகளாய் இருக்கின்றன. பழைய ஏற்பாட்டில் எபிரெய ஜாதியாருடைய வரலாறுகளைக் காட்டிய இரண்டு ஒத்த சரித்திரங்கள் உண்டு. சாமுவேலின் ஆகமங்களும் ராஜாக்களின் ஆகமங்களும் நாளாகமங்களுக்கு ஒத்த சரித்திர ஆகமங்களாய் இருக்கின்றன. புதிய ஏற்பாட்டில் நாலு சுவிசேஷங்களும் நமது ஆண்டவருடைய ஜீவிய சரித்திரத்தையும் போதனையையும் காட்டிய ஒத்த சரித்திர ஆகமங்களாய் இருக்கின்றன. அப்படியே சரித்திர பாகங்களைப்பற்றி ஒத்திருப்பவைகளும் உண்டு. சனகெரிப் எசேக்கியாவுக்கு விரோதமாய் யுத்தம் செய்ய வந்ததும்; எசேக்கியா வியாதிப்பட்டதுமான காரியங்களைக்குறித்து ஏசாயாவிலும் ராஜாக்கள் நாளாகமங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது.[2] பவுலின் குணப்படுதல் சரித்திர

[1] சங். 7. 5; 16. 9; 30. 11; 57. 8; 108. 1.

[2] ஏசா. 36–39. அதிகாரங்களை 2 ராஜா. 18. 13–20. அதி; 20. 2 நாளா. 32. அதி. ஒத்துப்பார்க்க.

மும் மூன்று இடத்தில் வருகிறது.[1] இப்படிப்பட்ட மற்றும் சங்கதிகள் வேதத்தை வாசித்து ஆராய்பவர்களுக்கு வெகுவாய்த் தெரியவரும். சாமுவேலின் ஆகமங்களையும் ராஜாக்களின் ஆகமங்களையும் நாளாகமப் புத்தகங்களோடே ஒத்திட்டு வாசிக்கையில் காரியங்கள் நமக்குத் தெளிவாகிறது உண்டு. நாலு சுவிசேஷங்களும் ஒன்றுக்கொன்று எவ்வளவு தெளிவைக் கொடுக்கிறதாய் இருக்கிறது. பவுல் அப்போஸ்தலன் குணப்படுதலைப்பற்றிச் சொல்லிய மூன்று வரலாறுகளையும் ஒத்திட்டு வாசிக்கையில் அந்தச் சங்கதி நமக்குத் தெளிவாய் விளங்குகிறது. அப்போஸ்தல நடபடிக்கும் பவுலின் நிருபங்களுக்கும் ஒத்துவருகிற அநேக காரியங்களைப் பார்ப்பதினாலே அந்த அப்போஸ்தலனுடைய ஜீவிய சரித்திரம் அவன் பணிவிடைகளைப்பற்றிப் பூரணமாய் அறிந்துகொள்ளலாம். இரண்டும் ஒன்றையொன்று விளக்குகிறதாய் இருக்கிறது.

10. இப்படி சரித்திர சம்பந்தமாய் வருகிற விஷயங்கள் மிகுந்த தெளிவை உண்டுபண்ணுவதற்கு அநுகூலமாயிருந்த போதிலும், அவைகளாலே வருத்தங்களும் நேரிடுவதுண்டு. விசுவாச விஷயத்திலோ, வேதாகமங்களில் எங்கும் ஏக ஐக்கியமான காரியங்களைப் பார்க்கலாம். இந்த ஏக ஐக்கியமான விஷயங்களைப் பற்பலபேர் பற்பலவகையாய் தியானித்துக் கொள்வதால், அவைகள் வெவ்வேறுவகையாக எடுத்துக் காட்டப்பட்டது உண்டு. பரிசுத்த மனிதர் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டபடியே பேசினாலும் அந்த மனிதர் தம் தமக்குரிய கருத்துக்கும் பாஷைநடைக்கும் தக்கதாய் தாராளமாய் எழுதும்படி ஆவியானவர் இடங்கொடுத்தார். ஆதலால் அருள்பெற்ற அம்மனிதர் ஒரு விஷயத்தில் தம்தம் மனதில் பட்டதைத் தெரிந்துகொண்டு எழுதியிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் எழுதினதெல்லாம் உண்மையும் சத்தியமுமானவைகள். ஒரு சங்கதியைச் சேர்ந்தவைகளில் சில காரியங்கள் விடப்பட்டிருப்பதினாலும் எழுதப்பட்டவைகள் திட்டமான காலக்கிரமப்படி எழுதப்படாததினாலும் அவைகளைக் கிரமப்படுத்துவது மிகவும் வருத்தமாய் இருப்பதுண்டு. இப்படிப்பட்ட வருத்தங்கள் எல்லாவித ஒத்த சரித்திரங்களிலும் வருவது இயற்கையாய் இருக்கிறது. சுவிசேஷகர்களில் இரண்டு அல்லது அதிகமானபேர் நம்முடைய இரட்சகர் சொன்ன வார்த்தைகளை

[1] அப். 9. 1–22, 22; 1–21; 26. 1–20.



எழுதும்போது அவர்கள் அவைகளின் கருத்தைமாத்திரம் எழுத எண்ணமுடையவர்களாய் இருந்தார்கள்.[1]

11. உபதேச சம்பந்தமாய் ஒத்துவருகிறவைகள் மிகவும் விஸ்தாரமுள்ளவைகளாய் இருப்பதால் அவைகளை இங்ஙனம் காட்டுவது கூடாதகாரியம். பற்பல காலங்களில் எழும்பின உபதேச விபரீதங்கள் தப்பறைகள் எல்லாம் வேதத்தோடே வேதத்தை ஒப்பிட்டுப் பாராததால் விளைந்தவைகளாய் இருக்கின்றன. திருஷ்டாந்தமாக: ஆரியு என்பவன் கிறிஸ்துவின் மனிதத் தன்மையைக் குறித்த வாக்கியங்களின்மேல் முழுவதுமாய்ச் சாய்ந்துபோனதால், அவனுடைய பதிதங்கள் எழும்பின. தோசித்து என்பவன் கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையைப்பற்றிய வாக்கியங்களின்மேல் முழுவதுமாய்ச் சாய்ந்துபோனதால், ஆரியுவின் கொள்கைக்கு எதிரிடையான பதிதங்கள் எழும்பின. நீதிமானாக்கப்படுதலின் உபதேசத்தைப் பற்றி பவுல் சொல்லிய சில காரியங்களை விபரீதமாய் அர்த்தப்படுத்தினதால், அந்திநோமிய கொள்கை உண்டாயிற்று. சிலர் யாக்கோபு அப்போஸ்தலன் சொல்லியதைமாத்திரம் பிடித்துக் கொண்டு சாதித்ததால், வேறே வகையான தப்பறைக்கு உட்பட்டார்கள். ஆதலால் வேதவாக்கியங்களை வெகு சாவதானத்தோடும் எச்சரிக்கையோடும் விஸ்தரிக்கவேண்டியவர்களாய் இருக்கிறோம். முதலாவது, வேதவாக்கியங்களை நாம் சவிஸ்தாரமாய் ஒத்துப்பார்க்கவேண்டும். இரண்டாவது, தெளிவான வாக்கியங்கள் கருகலான வாக்கியங்களுக்கு விஸ்தரிப்பாய் இருக்கவேண்டும்.

[1] கலிலேயாக் கடலில் சம்பவித்த புசலைப்பற்றி மூன்று ஒத்த சரித்திரங்கள் இருக்கின்றன. (மத். 8. 23–27. மாற். 4. 37, 41. லூக். 8. 22–25.) சீஷர்கள் மத்தேயு எழுதியிருக்கிறபடி "ஆண்டவரே எங்களை இரட்சியும், மடிந்துபோகிறோம்" என்றும்; மாற்குவின்படி "நாங்கள் மடிந்துபோகிறது உமக்குக் கவலை இல்லையா" என்றும்; லூக்காவின்படி "ஐயரே, ஐயரே மடிந்துபோகிறோம்" என்றும் சொன்னார்கள். அதற்கு, நம்முடைய கர்த்தர், அற்பவிசுவாசிகளே, ஏன் பயப்படுகிறீர்கள் என்று சொன்னார் என்று மத்தேயும், ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள், ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமல்போயிற்று என்று சொன்னார் என்று மாற்கும்; உங்கள் விசுவாசம் எங்கே என்று சொன்னார் என்று லூக்காவும் எழுதியிருக்கிறார்கள். மூன்று சுவிசேஷகரும் காட்டியிருக்கிறபடி சீஷர்களுடைய வார்த்தைகளின் பொருளும் நமது ஆண்டவருடைய மறுமொழியின் பொருளும் விகற்பமின்றி ஒரேவகை கருத்தைக் காட்டுகிறவைகளாய் இருக்கின்றன.

12. இப்போது உருவகங்கள் அல்லது ஒப்பனைகளையும் தீர்க்கதரிசனங்களையும் வியார்த்தி செய்வதைப்பற்றிச் சிலவற்றைப் பார்ப்போமாக.

13. உருவகங்கள் கீழ்த்தேச ஆகமங்களில் மிகவும் அதிகமாய் வருவதுண்டு. எபிரெயுபாஷை கிரேக்குப்பாஷை நூல்களிலும் உருவகங்களை அதிகமாய்க் காணலாம். சங்கீதத்தில் "கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர்"[1] என்று சொல்லுவதை நாம் பார்க்கையில், அது உருவகம் என்று உடனே அறிந்துகொள்ளலாம். கர்த்தர் தமது சிருஷ்டிகளுக்கெல்லாம் ஆசீர்வாதமும் ஜீவஊற்றும் அவர்களை ஆதரிக்கிறவருமாய் இருக்கிறார் என்பதே "சூரியன், கேடகம்" என்பதின் கருத்து. கர்த்தர் "கன்மலை" என்றும், யூதா "சிங்கக்குட்டி" என்றும் சொல்லப்படும் சொற்களும்; இரட்சகர் "நானே திராட்சச்செடி" என்றும்; "மரித்தோர் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும்" என்றும் சொல்லிய வார்த்தைகளும் உருவகபதங்களாம். "முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம்"[2] என்று சவுலுக்குச் சொல்லப்பட்டது ஒப்பனை வார்த்தை என்று அறிந்துகொள்ளலாம். சவுல் கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தினது உழவுக்காளையானது காயம் உள்ளுக்கு அதிகமதிகமாய்ச் செல்லுகிறதற்கேற்றதாக, உழுகிறவன் கையில் இருக்கிற தாற்றுக்கோலில் உதைக்கிறதற்கு ஒப்பாகக் காட்டப்பட்டிருக்கிறது. சில வேளைகளில் உருவகங்கள் அவ்வளவு தெளிவுள்ளதாய் இராது. அப்போது, நாம் பொதுவிதியை அநுசரிக்கவேண்டும். காட்டப்பட்டிருக்கிற காரியத்தின் நேரான அர்த்தத்துக்கு அது ஒத்துவருகிறதோ, வேத உபதேசங்களுக்கும் முன்பின் வாக்கிய சம்பந்தத்துக்கும் இசைவாய் இருக்கிறதோ என்று பார்த்துக்கொள்வது அநுகூலமாய் இருக்கும். திருஷ்டாந்தமாக: இயற்கையின்படியும் விசுவாச விஷயத்தின்படியும் தேவன் சடத்துக்கும் அளவுக்கும் நீங்கலானவர் என்று அறிவோம். சரீர உறுப்புகள் தாபங்கள் அவருக்கில்லை. கைகால், கண் மூக்கும், கோபம், பகை, பழிவாங்குதல், மனந்திரும்புதலும் அவருக்குக் கிடையாது. இப்படிப்பட்ட வார்த்தைகள் அவருக்கு உபயோகிக்கப்படும்போது அவைகளை உருவகமாக எண்ணவேண்டும். அப்படிப்போலவே, மோட்சம், தெருக்களும், அலங்கங்களும், வாசல்களும், ஆசனங்களும் உள்ள பட்டணமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மத். 18. 8, 9ல் சொல்லியபடி, வலதுகை அல்லது காலைத் தறித்தெறிவதும் கண்ணைப் பிடுங்

[1] சங். 84. 11. [2] அப். 26. 14.



குவதும் உருவக வார்த்தைகள். மாற். 14. 22, 24ல் இது என் சரீரம், இது என் இரத்தம், என்பதும் உவமானமுள்ளது. இதை உரைத்தபோது, இயேசுவின் சரீரம் பிட்கப்படவும் இல்லை; அவர் இரத்தம் சிந்தப்படவும் இல்லை. யோ. 6. 54ல் "என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு" என்று சொல்லப்படுகிற வசனமும் உவமானக் கருத்துள்ளது. அதை எழுத்துப்படி அர்த்தப்படுத்துவது நியாயத்துக்கும் புத்திக்கும் விரோதமாய் இருக்கிறதும் அன்றி, வாக்கியசம்பந்தத்துக்கும் விகற்பமாய் இருக்கிறது. அந்தச் சம்பாஷணை முழுவதும் விசுவாசத்தைப்பற்றியதாய் இருக்கிறது. ஆவிக்குரிய விதமாய், ஆத்துமாவுக்கு அவருடைய சரீரமும் இரத்தமும் ஆகாரமாய் இருக்கிறது என்பதைக் குறிக்கும். நம்முடைய ஆண்டவரும் 63-ம் வாக்கியத்தில் எழுத்துப்படி அர்த்தம்செய்யாதபடிக்கு எச்சரிக்கிறார். "மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது" என்று காட்டியிருக்கிறார்.

14. ஒரு வாக்கியம் அல்லது ஒரு வார்த்தை உருவகம் என்று அறியும்போது அதை மேற்சொல்லிய சட்டப்படி அர்த்தப்படுத்தவேண்டும். ராஜ்யபாரத்துக்குரிய மாறுதல்கள், பூகம்பம், புசல், கிரணம், நதிகளும் கடல்களும் இரத்தமாகுதல் இவைமுதலியவைகளாலும்; எரே. 4. 23–28. ஏசா. 13. 10, 13. மத். 24. 29. அப். 2. 19. ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள், பனி, தூற்றல், நீர்க்கால்கள் முதலியவற்றாலும் குறிக்கப்படும். ஏசா. 25. 6. யோ. 4. 13, 14. மற்றவர்களை ஒடுக்குகிறவர்கள் மாம்சபட்சணிகளான மிருகங்கள் பறவைகளால் குறிக்கப்பட்டிருக்கிறார்கள். கொம்பு என்பது வல்லமையையும், கோல் என்பது தண்டனையைச் செலுத்தும் அதிகாரத்தையும், ஒளி இருள் என்பவை சுகதுக்கங்களையும், அறிவு அறிவீனம் என்பவை செழிமை வறுமையையும் பரிசுத்தம் பாவத்தையும் விவாகம் தேவனோடு செய்யும் உடம்படிக்கையையும் விபசாரம் அந்த உடம்படிக்கையை விக்கிரகாராதனையினால் மீறுவதையும் திராட்சத்தோட்டம் திருச்சபையையும் குறிக்கும்.

15. தீர்க்கதரிசன வியார்த்தியைப்பற்றிச் சில காரியங்களைப் பார்ப்போமாக. வேதாகமத்தில் தீர்க்கதரிசனபாகம் அறிவதற்கு அரிதாய் இருக்கிறது. அதிலே பற்பல ஜாதியாருடைய வழக்கங்கள் காட்டப்பட்டிருக்கிறது. வருங்காலத்துச் சம்பவங்களும் சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் மங்கலாய் உரைக்கப்பட்டிருக்கிறது.

16. தீர்க்கதரிசனங்களில் உருவகம் அதிகமாய் வருவது உண்டு. சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், லீபனோனின் கேதுருக்கள், உன்னதபருவதங்கள் உலகத்திலுள்ள முக்கிய ராஜாங்கத்தைக் குறிக்கும். தர்ஷீசின் கப்பல்கள் (ஏசா. 2. 16.) பூமியிலுள்ள ஐசுவரியவான்களான வியாபாரிகளைக் குறிக்கும். பூகம்பம், சூரிய சந்திரன் இருள் அடைதல், நட்சத்திரங்கள் விழுதல், லௌகீக வைதீக விஷயமாய் உண்டாகும் மாறுதலைக் குறிக்கும். பனி, மழை, தண்ணீர் (ஏசா. 44. 3. ஓசி. 14. 5. யோ. 4. 10; 7. 38.) பழைய புதிய ஏற்பாடுகளில் பரிசுத்த ஆவி ஊற்றப்படுதலைக் குறிக்கும். இஸ்ரவேலருடைய சத்துருக்களாகிய மோவாபியர், அம்மோனியர், ஏதோமியர், முக்கியமாய் பாபிலோனியர் மேசியாவின் ராஜ்யத்தின் ஆத்தும சத்துருக்களைக் குறிக்கும். தாவீதின் கொம்பு, ரட்சணியக் கொம்பு என்பவைகள் தாவீதின் ஆசனத்தையும் சுவிசேஷத்தில் காட்டிய பெரிய இரட்சிப்பையும் குறிக்கும். (சங். 132. 17. லூக். 1. 75.) தாவீது என்பது, மேசியா ராஜாவைக் குறிக்கும். (ஓசி. 3. 5. எரே. 30. 9. அப். 13. 34.) மேசியாவின் கிருபையின் அல்லது மகிமையின் ராஜ்யம் எருசலேம் அல்லது சீயோனால் குறிக்கப்பட்டிருக்கிறது. (ஏசா. 52. 1–9; 60. 14. கலா. 4. 26. எபி. 12. 22.) மேசியாவின் மாட்சிமையான காலம் தாவீது சாலொமோன் என்பவர்களுடைய செழிப்புள்ள காலத்தால் காட்டப்பட்டிருக்கிறது. (சகரி. 3. 10.)

17. தீர்க்கதரிசனங்களில் நாம் மனதில் வைக்கவேண்டிய சில விசேஷித்த குறிப்புகளும் உண்டு. தீர்க்கதரிசிகள் வெகு காலத்துக்குப்பின்பு நடக்கும் காரியங்களைத் தங்கள் காலத்தில் சம்பவித்திருப்பதாகக் காட்டியிருக்கிறது உண்டு. திருஷ்டாந்தமாக: "நமக்கு ஒரு குமாரன் பிறந்தார், ஶ." (ஏசா. 9. 6.) "இதோ, நான் ஆதரிக்கிற என் தாசன், நான் தெரிந்துகொண்டவரும், என் ஆத்துமாவுக்குப் பிரியமானவரும் இவரே; என் ஆவியை அவர்மேல் அமரப்பண்ணினேன்;" (ஏசா. 42. 1.) "உமது பரிசுத்த பட்டணங்கள் வனாந்தரமாயின; சீயோன் வனாந்தரமாயிற்று; எருசலேம் பாழாய்க் கிடக்கிறது." (ஏசா. 64. 10, 11. ஶ.)

18. தீர்க்கதரிசனங்களைப்பற்றி இன்னொரு குறிப்புச் சொல்லலாம். சில தீர்க்கதரிசனங்கள் ஈரர்த்தமானவைகள். முந்தி ஒரு காரியத்தைக் குறித்தும், பிந்தி இன்னொரு விசேஷித்த காரியத்தையும் குறிக்கிறதாய் இருக்கின்றன. திருஷ்டாந்தமாக: ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள், (ஆதி. 15.



அதி.) யூதாவைப்பற்றி யாக்கோபு சொன்ன தீர்க்கதரிசனம், (ஆதி. 49. அதி.) பிலேயாம் சொன்ன தீர்க்கதரிசனம், (எண். 24. 17.) நாத்தான் உரைத்த தீர்க்கதரிசனம், (2 சாமு. 7. 12–17.) சங்கீதத்தில் தாவீதைப்பற்றிச் சொல்லிய சில காரியங்கள், ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தில் அநேக பாகங்கள், ஶ ஈரர்த்தம் உள்ளவைகளாய் இருக்கின்றன. யூதர்களுடைய சரித்திரம் கிறிஸ்து சபையின் சரித்திரத்துக்கு நிழலாட்டமாய் இருப்பது போல, தீர்க்கதரிசனமும் அவ்விரண்டின் அநுபோகத்தைக் காட்டுகிறதாய் இருக்கிறது. யூதர்கள் பாபிலோனிலிருந்து திரும்பினது, (எரே. 31. அதி.) தாவீதின் கூடாரம் நிலைநிறுத்தப்படுவது முதலியவைகள் உடனே நிறைவேறினபோதிலும் சுவிசேஷத்தின் காலத்தை அவைகள் குறிக்கிறவைகளாயும் இருக்கின்றன.

19. இப்படி ஈரர்த்தம் உள்ள தீர்க்கதரிசனங்கள் முதல் விஷயத்தில் நிறைவேறுதல் அடையும்போது ஒரு பாகமாய் மாத்திரம் முற்றுப்பெறுவது உண்டு. இரண்டாம் விஷயத்திலோ அது பூரணமாய் நிறைவேறுதல் அடையும். திருஷ்டாந்தமாக, தாவீதுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம், அர்த்தாபத்தியாய் அவனில் நிறைவேறி இருக்கிறது. பூரணமாய் அவனில் நிறைவேற இல்லை. கிறிஸ்துவினிடத்தில் அர்த்தாபத்தியாய் அல்ல, பூரணமாய் நிறைவேறி இருப்பதை அறியலாம். "அவன் என் நாமத்திற்கு என்று ஒரு ஆலயத்தைக் கட்டுவான், அவன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன். நான் அவனுக்குப் பிதாவாய் இருப்பேன், அவன் எனக்குக் குமாரனாய் இருப்பான்; அவன் அக்கிரமம் செய்தால், நான் அவனை மனுஷருடைய மிலாற்றினாலும் மனுபுத்திரருடைய அடிகளாலும் தண்டிப்பேன். உனக்கு முன்பாக நான் தள்ளிவிட்ட சவுலைவிட்டு என் கிருபையை விலக்கினதுபோல அவனைவிட்டு விலக்கமாட்டேன்." தாவீதின் ஆசனம் என்றென்றைக்கும் நிலைநிற்கும் என்பதில் அது அவனில் பூரணமாய் நிறைவேற இல்லை என்பதை அறிவோம். "என்றென்றைக்கும்" என்பது ராஜ்யம் நிலைநிற்கும்வரைக்கும் என்று அர்த்தம் ஆகலாம். தாவீதின் குடும்பத்தார் யூதராஜ்யம் முடிவடையும்பரியந்தம் நானூறு வருஷங்களுக்குமேல், இருபதுபேர் அரசாண்டுவந்தார்கள். இஸ்ரவேல் ராஜ்யத்திலோ 254 வருஷங்களுக்குள் ஒன்பது வெவ்வேறு குடும்பங்களிலிருந்து பத்தொன்பதுபேர் அரசாண்டார்கள். தாவீதுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தை மேசியாவைக்குறிப்பதாக வைத்

துப் பார்த்தாலோ, அது சிறந்த வகையாய் நிறைவேறியிருக்கிறதென்று அறியலாம்.

20. தீர்க்கதரிசனங்கள் இரண்டு அர்த்தமாய் வருவதும் உண்டு. அப்படிப்பட்டவைகள் பொதுப்பட சன்மார்க்க நெறியைத் தழுவிவரும். திருஷ்டாந்தமாக: "நரரின் மேட்டிமையான கண்கள் தாழ்த்தப்படும்." அதாவது பெருமைக்காரர் தாழ்த்தப்படுவார்கள். (ஏசா. 2. 11.) "பராக்கிரமசாலி சணல் கூளமும் அவன் கிரியை அக்கினிப்பொறியுமாகி, இரண்டும் அவிப்பாரில்லாமல் ஏகமாய் வெந்துபோம்." அதாவது தேவனை விட்டு விலகிப்போகிறவர்கள் நிர்மூலமாக்கப்படுவார்கள். (ஏசா. 1. 31.) (நீதிமானுடைய) அப்பம் அவனுக்குக் கொடுக்கப்படும். அவன் தண்ணீர் அவனுக்கு நிச்சயமாய்க் கிடைக்கும். (ஏசா. 33. 15, 16.) இப்படிப்பட்ட தீர்க்கதரிசனங்கள் சாதாரணமாய் தர்மநெறியைப்பற்றினவைகள். தீர்க்கதரிசன ஆகமங்கள் இப்படிப்பட்டவைகளால் நிறைந்திருப்பது உண்டு.

21. முன் சொல்லிய காரியங்களிலிருந்து நாம் கற்றுக்கொள்ளுகிறது என்னவென்றால், தீர்க்கதரிசனங்களின் கருத்தை அறியவேண்டுமானால், முதலாவது நாம் தீர்க்கதரிசிகளுடைய சரித்திரத்தையும் வரலாறுகளையும், இரண்டாவது பொதுப்பட வேதாகமத்தில் விசேஷமாய்த் தீர்க்கதரிசனங்களிலும் வருகிற உருவகம் ஒப்பனைகளின் கருத்தையும் பிரயோஜனத்தையும், மூன்றாவது ஒத்த தீர்க்கதரிசனங்களையும் புதிய ஏற்பாட்டில் அவைகள் நிறைவேறியிருப்பதாய்க் காட்டப்பட்டிருப்பவைகளையும் கவனிக்கவேண்டும்.

22. இப்போது எபிரெய வாசகநடையைப்பற்றிச் சில காரியங்களைப் பார்ப்போமாக.

(a.) ஒரு விசேஷித்த குணத்தையுடையவன் அந்தக் குணத்தின் புத்திரன் என்று சொல்லப்படுவது உண்டு. திருஷ்டாந்தமாக, ஏலியின் குமாரர் பேலியாளின் புத்திரர் என்று சொல்லப்பட்டிருக்கிறார்கள். (1 சாமு. 2. 12.) அதாவது, அவர்கள் பொல்லாதவர்கள் என்பதாம். (லூக். 10. 6.) "சமாதான புத்திரன்" என்பது சுவிசேஷத்தைப் பிரியத்தோடே அங்கீகரிக்க மனதுடைய அமைதலான சுபாவமுடையவன். (எபே. 5. 6–8.) "கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்" என்பது கட்டளையை மீறுகிறவர்களையும், "வெளிச்சத்தின் பிள்ளைகள்" என்பது தெளிவு அடைந்தவர்களையும் குறிக்கும்.

(b.) "நேசிக்கிறது" "வெறுக்கிறது" என்ற பதங்கள் ஒன்றை இன்னொன்றைவிட நல்லதாகத் தெரிந்துகொள்ளுதலைக் குறிக்கும். திருஷ்டாந்தமாக: (மத். 10. 37. லூக். 14. 26. யோ. 12. 25. ரோ. 9. 13. ஆதி. 29. 31, 32. உபா. 21. 15.) "அல்ல" என்பது மாத்திரம் அல்ல என்று சில இடத்தில் அர்த்தமாய் வரும். (மாற். 9. 37. 1 தெச. 4. 8.)



(c.) பெற்றோர் முற்பிதாக்கள் நாமங்கள் அவர்களுடைய சந்ததியாருக்குச் சொல்லப்படுவது உண்டு. (ஆதி. 9. 25.) "கானான் சபிக்கப்பட்டவன்" என்பது அவன் சந்ததியாரைக் குறிக்கிறதாய் இருக்கிறது. ஆனால், அவன் சந்ததியில் தேவபக்தியுள்ளவர்களாய் இருந்தவர்களை இந்தச் சாபம் தழுவாது. திருஷ்டாந்தமாக: மெல்கிசேதேக் அபிமெலேக் இரட்சகரினிடத்துக்கு வந்து தன் மகளுக்காக வேண்டிக்கொண்ட ஸ்திரீ இவர்கள் கானானியராய் இருந்தாலும் அவர்கள் திவ்விய ஆசீர்வாதம் பெற்றவர்களாய் இருந்தார்கள். (ஆதி. 14. 18–20; 20. அதி. மத். 15. 22–28.) இஸ்ரவேலர், இஸ்ரவேல் யாக்கோபு என்ற பேரால் அழைக்கப்படுவதும் உண்டு. (சங். 14. 7. 1 இரா. 18. 17, 18.)

(d.) "குமாரன்" என்பது சில தலைமுறைகளுக்குப் பின் வரும் வம்சத்தானைக் குறிப்பதும் உண்டு. ஆசாரியர் லேவியின் புத்திரர் என்று சொல்லப்பட்டிருக்கிறார்கள். மேவிபோசேத்து யோனத்தானின் குமாரனாயிருந்தும் சவுலின் குமாரன் என்று சொல்லப்பட்டிருக்கிறான். (2 சாமு. 19. 24.) "தகப்பன்" என்பது முற்பிதாவைக் குறிக்கும். "சகோதரன்" என்பது இனத்தானைக் குறிக்கும். லோத்து ஆபிரகாமுக்குச் சகோதரன்மகனாய் இருந்தும் சகோதரன் என்று அழைக்கப்பட்டிருக்கிறான். சில தருணங்களில் விவாக சம்பந்தத்தால் இணைக்கப்பட்டவனுடைய சந்ததியார் மனைவியின் தகப்பனுடைய சந்ததியாராக அழைக்கப்படுவதுண்டு. (எஸ்றா. 2. 61. நெகே. 7. 63. எண். 32. 41.)

23. வேதத்தில் வருகிற இலக்கங்களைப்பற்றி இப்போது சில காரியங்களைப் பார்ப்போமாக.

(a.) சில இலக்கங்கள் திட்டமான எண்களைக் குறியாது. திருஷ்டாந்தமாக: "பத்து" என்பது பத்து என்ற இலக்கத்தைக் குறிப்பதோடே "பலவை" என்பதையும் குறிக்கும். (ஆதி. 31. 7. தானி. 1. 20.) "நாற்பது" என்பது அநேகத்தைக் குறிக்கும். பெர்சிப்பொலிஸ் என்பது நாற்பது கோபுரங்களுள்ள பட்டணம் என்று அர்த்தங்கொள்ளும். ஆனால், அந்தப் பட்டணத்தில் நாற்பதுக்கு அதிகமான கோபுரங்கள் உண்டு. "ஏழு," "எழுபது" என்ற இலக்கங்கள் பூரணத்தைக் குறிக்கும்.

(நீதி. 26. 16, 25. சங். 119. 164. லேவி. 26. 24.) எழுபதுதரம் மன்னிக்கவேண்டும் என்பது திரும்ப திரும்ப மன்னித்துக் கொண்டே இருப்பதைக் குறிக்கும். மகதலேனா மரியாள், ஏழு பிசாசுகளினின்று நீக்கப்பட்டாள் என்பது அவள் அடைந்திருந்த உபத்திரவத்தைக் குறிக்கும். சிலர் யோசியாமல் அவள் பெரும்பாவி என்று அர்த்தப்படுத்துவார்கள்.

(b.) சிலவேளைகளில் சரியான இலக்கத்துக்குப் பதிலாக மொத்தத் தொகையான இலக்கம் சொல்லப்படுவதுண்டு. சித்தீமிலே நடந்த வாதையில் கொல்லப்பட்டவர்கள் 24,000 பேர் என்று எண். 25. 9லும், 23,000 பேர் என்று 1 கொரி. 10. 8லும் சொல்லப்பட்டிருக்கிறது. நியா. 11. 26ல் 293 வருஷங்களுக்குப் பதிலாக 300 வருஷம் என்று காட்டப்பட்டிருக்கிறது.

(c.) பார்வோன் என்பது ஆபிரகாம் காலமுதல் பார்சியர் எகிப்தைக் கட்டிக்கொண்டதுவரையுமுள்ள எகிப்தின் ராஜாக்களுக்குப் பொதுப்பேராக வழங்கப்பட்டது. அலெக்சந்தர் காலத்துக்குப்பின்பு அவர்கள் பித்தொலொமி என்று அழைக்கப்பட்டார்கள். அபிமெலேக் என்பது பெலிஸ்தியருடைய ராஜாக்களுக்கும், பெனாதாத்து என்பது சீரியா ராஜாக்களுக்கும் அப்படியே பொதுப்பேராக உபயோகிக்கப்பட்டு வந்தது.

24. வேதத்தை நாம் இப்படி நுட்பமாய் ஆராய்ந்தபோதிலும் இன்னமும் அநேக வருத்தங்கள் அதில் நமக்குக் காணப்படுவதுமுண்டு. அதையிட்டு நாம் ஆச்சரியப்படவுங்கூடாது; கலங்கிவிடவுங்கூடாது. ஏனென்றால், வேதம் எழுதப்பட்டிருக்கிற பாஷைகள் வெகு காலமாய் வழங்காப் பாஷைகளாய்ப் போய்விட்டன. அந்தப் பாஷைகள் ஒன்றுக்கொன்று பிரத்தியேகமுள்ளவைகளாயும் நம்முடைய பாஷைக்குச் சம்பந்தம் இல்லாததாயும் இருக்கின்றன. வேதத்தில் வருகிற வாசகங்கள் உருவகங்கள் முதலியவை எல்லாம், பல காலத்தையும் பல தேசத்தையும் பல மனுஷரையும் தழுவியதாய் இருக்கிறது. அதில் சொல்லப்பட்டிருக்கிற வழக்கங்கள் ஆசாரங்கள் எல்லாம் மங்கிப்போயின. அது வெளிப்படுத்துகிற சத்தியங்கள் இரு உலகங்களையும் தழுவியதாயும் இருக்கிறது. அதோடே வெளிப்படுத்தல் முழுவதும் ஒரு சிறிய புஸ்தகத்தில் அடக்கமாய் எழுதப்பட்டிருக்கிறது. இவைகளை நாம் பார்க்கையில் வருத்தங்கள் அதிகமாய் இராமல் அவ்வளவு சொற்பமாய் இருப்பதற்காக, ஆச்சரியப்படவேண்டியதாய் இருக்கிறது. அந்த வருத்தங்களில் அநேகம் அரும்பிரயாசங்களினாலும் ஆராய்ச்சிகளினாலும் நிவிர்த்திக்கப்படலாம். பின்னும் அநேகம் கருகலாய் இருக்க



லாம். அவைகளை விஸ்தரிக்க இப்போது நமக்கு இருக்கிற அறிவு போதாது. வெளிப்படுத்தலில் இருப்பதுபோல இயற்கையிலும் இவ்வித வருத்தங்கள் உண்டு. இருவகையைப்பற்றியும் நமக்கு இருக்கிற அறிவு அளவுக்குள் அடங்கியது. பூரணமானது வரும்போது குறைவானது நீங்கிப்போகத் தெளிவுண்டாகும்.

25. வேதத்தை ஆராய்வதற்குப் பயபக்தியும் ஜெபசிந்தனையும் மனத்தாழ்மையும் இருக்கவேண்டியது மிகவும் அவசியம். வேதமானது தேவனுடைய வார்த்தையாய் இருக்கிறது. அதின் போதனைகள் நம்முடைய மேன்மையான சலாக்கியங்களுக்கு உரியது. அதினாலேமாத்திரம் இரட்சண்ய வழியை அறியலாம். அதிலேயே நம்முடைய நம்பிக்கை எல்லாம் தழுவியிருக்கிறது. வேதம் இல்லாவிட்டால் உலகம் எப்படி இருக்கும்? அதைப் பார்க்கும்போது நாம் ஆச்சரியத்தில் மூழ்கவேண்டியவர்களாய் இருக்கிறோம். தேவன் அதைக்கொண்டு மிலேச்சரை நாகரீகமுள்ளவர்களாக்கி இருக்கிறார். மனுஷத்துவத்தைக் கண்ணியப்படுத்தி மேன்மைக்குக் கொண்டுவந்திருக்கிறார். பெலவீனருக்குப் பெலத்தையும் துயரப்படுகிறவர்களுக்கு ஆறுதலையும் விடாய்த்தவர்களுக்குச் சகாயத்தையும் துக்கசாகரத்தில் அமிழ்ந்தின லட்சாதி லட்சம்பேர்கள் களிப்புடன் பாட [illegible] அருளியிருக்கிறார். வேதாகமம் கூறும்விஷயம் உலகத்தின் நம்பிக்கையாய் இருக்கிறது. அதின் நியாயங்கள் நம்முடைய ராஜாங்கமுறைமைக்கு ஆதாரமாய் இருப்பதாக, கலைஞானிகளுக்கு உசாவுதுணையாக இருப்பதாக; அவைகள் நமக்குத் தனித்தனியாயும் ஜனசங்கமாயும் நம்முடைய நடக்கைக்கு ஆதாரமாய் இருப்பதாக. அப்படியானால் நமது மனுஷத்துவம் இன்னமும் அதிகமாய் மாட்சிமை அடையும். வேதத்தை நாம் விக்கிரகம்போல எண்ணாமல், அது நமக்கு வெளிப்படுத்தி இருக்கிறவரை கண்ணியப்படுத்தி வணங்குவோமாக. அது முக்கியமாய்க் கிறிஸ்துவை நமக்கு வெளிப்படுத்துவதால் நமக்கு அருமையாய் இருக்கிறது. கிறிஸ்துவே அதின் பொருளும் நிறைவுமாய் இருக்கிறார். நம்முடைய தேவனும் மீட்பரும் சகோதரரும் சிநேகிதருமான இயேசுகிறிஸ்துவை வெளிப்படுத்துவதால், அதை எப்போதும் நமது இருதயத்தில் தியானித்து வருவோமாக. அதை இரவும் பகலும் தியானித்துவருகிற மனுஷன் பாக்கியவான்.

# அநுபந்தம்.

## A.

## பூர்வ கையெழுத்துப் பிரதிகள்.

(6-ம் பக்கம் பார்க்க.)

1. மிகப் பூர்வ கையெழுத்துப் பிரதிகள் புஸ்தகங்களாக இராமல் சுருள்களாய் இருந்தன. பூர்வகாலத்திலே மிருகத்தின் தோல் ஒருவகையாய்ப் பதமிடப்பட்டு எழுத்துக்கு உபயோகப்படுத்தப்பட்டது. எகிப்தில் ஓர்வகை மரப்பட்டை மிகவும் பூர்வத்தில் எழுத்துவகைக்கு கையாடப்பட்டது. அது கி. மு. 2000 வருஷத்தில் எகிப்தியருக்குள் வழங்கப்பட்டது. ஆதலால் எகிப்தின் ஞானத்தில் எல்லாம் தேறின மோசே அதை அறிந்து அதை உபயோகப்படுத்தியிருக்கலாம் என்று எண்ணத்தகும். அநேக காலமாக அந்த மரம் உலகத்தில் எழுத்துவகைக்காக வழங்கப்பட்டது. அதால் எகிப்தியருக்கு அதிக வருமானமும் வந்துகொண்டிருந்தது. சிலர் அந்த மரத்தின் இலை உபயோகிக்கப்பட்டதாக எண்ணுகிறார்கள். ஆனால் அது சரி அல்ல. அந்த மரத்தின் அடியைச் சுற்றியும் இருந்த மெல்லியபட்டைகளே உபயோகிக்கப்பட்டன. அடிமரத்துக்கு அடுத்திருந்த பட்டை முதல்தரமானதும் நெடுங்காலம் இருக்கக்கூடியதுமாய் இருந்தது. அந்தப் பட்டைகளைத் துண்டு துண்டுகளாய் நறுக்கி, ஒரு பலகையில் செம்மையாய் அடுக்கி வைத்துப் பின்பு அதின்மேல் குறுக்காய் இன்னொரு அடுக்கை வைத்து, எல்லாவற்றையும் இறுக நெருக்கி, சூரியனில் காய வைத்து, அப்பால் ஏற்ற கருவியைக்கொண்டு அவைகளுக்கு மிருதும் மினுக்கமும் கொடுத்து, எழுத்துச் சுவடிக்காக உபயோகித்தார்கள். அவைகளை ஒன்றோடொன்று சேர்ப்பதினாலே சுருளாகும்.

2. இந்த வடிவாக நம்மிடம்வரையும் வந்தெட்டிய புதிய ஏற்பாடாவது பழைய ஏற்பாடாவது எழுதப்படவில்லை. நமது வசம் இருக்கிற பழைய ஏற்பாட்டுக் கையெழுத்துப் பிரதிகள் கிறிஸ்துவுக்குப்பின்பு எழுதப்பட்டவைகள். அது பதனிட்ட தோல்கடுதாசிகளில் எழுதப்பட்டிருக்கிறது. அக்காலத்தில் பட்டைக்குப் பதிலாக தோல்கடுதாசி வழங்கப்பட்டது. சுருளாக எழுதப்படாமல் புஸ்தகமாக எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே புதிய ஏற்பாடு கையெழுத்துப் பிரதிகள் தற்காலத்தில் வழங்கிவருகிறபடி சதுர புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறதைப் பார்க்கிறோம். இப்போது வழங்கப்படுகிற கடுதாசி அதற்கு வெகுகாலத்துக்குப்பின்பு உபயோகிக்கப்பட்டது. பஞ்சினால் செய்யப்படும் கடுதாசி ஒன்பதாம் நூற்றாண்டுக்குப்பின்பும், சணலால் செய்யப்பட்ட கடுதாசி பன்னிரண்டாம் நூற்றாண்டுக்குப்பின்பும் வழங்கப்பட்டது.



3. மிகப் பூர்வ கையெழுத்துப் பிரதிகள் சிரேஷ்ட பெருக்கெழுத்துக்களால் எழுதப்பட்டிருக்கிறது. பிந்தியகாலத்தில் செய்யப்பட்ட பிரதிகளில் எழுத்துக்கள் இடையில்லாமல் தொடர்ச்சியாய் எழுதப்பட்டிருக்கிறது.

4. மிகப் பூர்வ கையெழுத்துப் பிரதிகளில் வார்த்தைகள் பிரிவு பிரிவாக எழுதப்பட்டிருப்பதில்லை. ஒலி குறிப்புகள், புள்ளிகள், நிறுத்தல் குறிப்புகள் முதலியவைகள் அநுசரிக்கப்படவில்லை. ஆனாலும், பூர்வத்திலே சில இடங்களில் இரண்டு வார்த்தைகளுக்கு இடையில் ஓரோர் புள்ளி போடப்பட்டிருப்பதைக் காணலாம். நகல் செய்தவன் அப்படிப்பட்ட இடத்தில் வாக்கியத்தைப் பிரிக்கும் வழக்கத்தை அநுசரித்து இருப்பதாக அதினால் அறியலாம். அப்படிப்பட்ட புள்ளிகள் பல பூர்வ நகல்களில் நாம் பார்க்கும்போது, கருத்துக்கு இசைவாக அவைகள் வழங்கப்பட்டிருப்பதை அறியலாம். மறு[illegible] கையில் திருப்புதல் செய்தவர்களும் அதை அநுசரித்திருக்கிறார்கள்.

5. கருத்தை அறியும்படி புள்ளிகளை வழங்குவது ஐந்தாம் நூற்றாண்டில் சாதாரணமாயிற்று. பின்பு வரிவரியாக எழுதப்படும் ஒழுங்கு ஏற்பட்டது. வரிகள் பற்பல நீளமுள்ளதாய் இருக்கும். கருத்துக்கும் வாசிக்கிறவர்களின் சகாயத்துக்கும் அநுகூலமாய் நிறுத்தல்கள் அநுசரிக்கப்பட்டது. ஐந்தாம் நூற்றாண்டின் மத்தியில் பவுலின் நிருபங்களும் அப்போஸ்தலர் நடபடியும் பொதுவான நிருபங்களும் இப்படிப்பட்ட நிறுத்தக் குறிப்புகள் போடப்பட்டு வெளிப்பட்டதுண்டு. சுவிசேஷங்கள் பிந்தியகாலத்தில் அந்தப் பிரகாரமாய் எழுதப்பட்டன. நகல்களின் கடைசியில் வரிகளின் தொகை காட்டப்பட்டிருப்பதுண்டு. பழைய ஏற்பாட்டு ஒவ்வொரு புஸ்தகத்தின் எழுத்துக்கள் வார்த்தைகளை கல்முத்தியார் எண்ணித் தொகையிட்டதற்கு ஒப்பர்தம் இந்த வரிகளும் எண்ணப்

பட்டு எழுதப்பட்டன. சில நூற்றாண்டுகளுக்குப்பின்பு வரிவரியாக எழுதப்படுவது நின்றுபோய்விட்டது. பத்தாம் நூற்றாண்டில் நகல்களில் நிறுத்தக்குறிப்புகள் சாதாரணமாய் வழங்கப்பட்டது. ஆனால், அச்சுயந்திரம் கண்டுபிடிக்கப்படுவதற்குமுந்தி நிறுத்தக் குறிப்புகளுக்கு திட்டவட்டமான ஒரு ஒழுங்கு ஏற்பட்டிருக்கவில்லை.

# B.

## புதிய ஏற்பாட்டு கையெழுத்துப் பிரதிகள்.

(9-ம் பக்கம் பார்க்க.)

புதிய ஏற்பாட்டு கையெழுத்துப் பிரதிகளில் மிகவும் முக்கியமான சிலவைகளைப்பற்றி இப்புஸ்தகத்தின் முதலாம் பங்கு நாலாம் பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளைப் பற்றிச் சில விபரங்களை இங்கே பார்ப்போமாக.

1. இந்தப் பிரதிகளில் விசேஷித்தது கோடெக்ஸ் சீனாய்டிக்கஸ். அது கி. பி. 1844 வருஷத்திலும் 1859 வருஷத்திலும் சீனாய்மலையில் பரிசுத்த கத்தரீனாள் சன்னியாச மடத்தில் டிஷென்டார்வ் சாஸ்திரியாரால் கண்டெடுக்கப்பட்டது. அது பக்கத்துக்கு நாலு பத்தியாய் எழுதப்பட்டிருக்கிறது. அதில் பழைய புதிய ஏற்பாடுகள் அடங்கியிருக்கிறது. பழைய ஏற்பாடு ஒரு இடம் குறைவின்றி முழுமையுமாய் இருக்கிறது. அவைகளோடே பர்னபாவின் நிருபமும் எர்மாவின் மேய்ப்பன் என்ற புஸ்தகத்தின் ஒரு பாகமும் சேர்க்கப்பட்டும் இருக்கிறது. இந்த இரண்டு புஸ்தகங்களும் நாலாம் நூற்றாண்டின் துவக்கம்வரையும், வேதாகமப் பங்குகளாக அநேகரால் ஒப்புக்கொள்ளப்பட்டுவந்தன. கையெழுத்துப் பிரதிகள் எழுதப்பட்ட காலத்தைத் தொனிப்பதற்கு இருக்கிற அநுகூலங்களை வைத்துக்கொண்டுச் சோதித்துப்பார்க்கில் சீனாயில் கண்டெடுக்கப்பட்ட பிரதி நாலாம் நூற்றாண்டின் மத்தியில் எழுதப்பட்டிருக்கவேண்டும் என சொல்லத்தகும். இந்தப் பிரதியைப் பற்றிய அத்தாட்சி வாத்திக்கான் பிரதியைப் பற்றியிருப்பதற்குரிய அத்தாட்சியிலும் வெகு தெளிவாய் இருக்கிறது. இந்தப் பிரதி, கி. பி. 331ல் கொன்ஸ்டான்தையின் இராயன் செசரி



யா பட்டணத்துக்குக் கண்காணியாய் இருந்த யுசேபியுவின் விசாரணையின்கீழ் பைசான்தியம் பட்டணத்துக்குப் பிரயோஜனமாய் எழுதும்படி உத்தரவுகொடுத்த ஐம்பது பிரதிகளில் ஒன்றாய் இருக்கலாம். பைசான்தியம் பட்டணத்திலிருந்து ஒரு பிரதி கத்தரீனாள் சன்னியாசமடத்தை ஸ்தாபித்த ஜஸ்டினியன் இராயனால் அவ்விடத்து சன்னியாசிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கலாம் என்று எண்ணவேண்டியதாய் இருக்கிறது. இந்தப் பிரதி 1862 வருஷத்தில் ருஷ்ய இராயன் உத்தரவின்பேரில் அதைக் கண்டெடுத்தவர் அச்சிட்டுப் பிரசுரப்படுத்தினார். புதிய ஏற்பாட்டு பகுதி 1863 வருஷத்திலும் 1865 வருஷத்திலும் பிரசித்தம் செய்யப்பட்டது.

௨. சீனாய்ப்பிரதிக்கு அடுத்துவரும் நகல், கோடெக்ஸ் வாத்திக்கானுஸ். அது ரோமாபுரியில் வாத்திக்கான் புஸ்தகசாலையில் பாதுகாக்கப்பட்டிருந்தது. அது பாப்புக்கள் கைவசம் வருமுன் அதின் சரித்திரம் தெரியாது. ஆனால், அது வாத்திக்கான் புஸ்தகசாலைக்கு பூர்வத்தில் கிடைத்த புஸ்தகங்களில் ஒன்றாய் இருக்கவேண்டியது. ஏனென்றால், பதினாறாம் நூற்றாண்டின் துவக்கத்தில் இருந்த கல்விமான்களுக்கு அது திட்டமாய்த் தெரிந்திருந்தது. மேலும், அது அந்தப் புஸ்தகசாலையின் அட்டவணையில் முதலாவதாகக் காட்டப்பட்டும் இருந்தது. அந்த அட்டவணை 1475 வருஷத்தில் எழுதப்பட்டது. இந்தப் பிரதியில் பழைய புதிய ஏற்பாடுகள் அடங்கியிருக்கிறது. ஆனால், புதிய ஏற்பாட்டில் நாலு சுவிசேஷங்களும் அப்போஸ்தலர் நடபடியும் ஏழு பொதுவான நிருபங்களும் பவுலின் நிருபங்களில் ஒன்பதும் எபிரெய நிருபத்தில் ஒன்பதாம் அதிகாரம் பதினாலாம் வசனம்வரையும் அதிலே அடங்கியிருந்தது. தீமோத்தேயு, தீத்து, பிலேமோன் என்பவர்களுக்கு எழுதப்பட்ட நிருபங்களும் வெளிப்படுத்தின விசேஷமும் அதில் எழுதப்படவில்லை. அந்தப் பிரதி பக்கத்துக்கு மூன்று பத்தியாய் எழுதப்பட்டிருக்கிறது. எழுத்தின் சாயல், வாக்கியங்களின் ஒழுங்குகள், குறிப்படையாளங்கள், முக்கியமாய்ச் சில விசேஷித்த வாசகப்போக்கு முதலியவைகளைக் கவனிக்கையில், அது நாலாம் நூற்றாண்டின் மத்தியில் நகல் செய்யப்பட்டு இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. பாப்புக்களுடைய புஸ்தகசாலையின் சட்டத்தினாலே, அந்தப் பிரதியை அநேக காலமாய் உபயோகப்படுத்தக்கூடாமல் இருந்தது. ஆனால், 1828 வருஷம் பன்னிரண்டாம் லியோ என்ற பாப்புவின் உத்தரவின்பேரில் பிந்தியகாலத்தில் கார்டினல் உத்தியோகத்துக்கு

வந்த அன்கெலா மாயி அந்தப் பிரதியை அச்சுப்பதிப்பித்தார். ஆனால் அது மாயி மரித்த மூன்று வருஷத்துக்குப்பின்பு, 1857 வருஷம் பிரசித்தமானது. அதிலே மிகுதியான தவறுதல்கள் உண்டு. அதில் காணப்பட்ட நூற்றுக் கணக்கான பிழைகளை திச்செண்டார்வ் என்ற சாஸ்திரி திருத்தி, 1869 வருஷம் வாற்றிக்கான் புதிய ஏற்பாட்டை மூலப்படி பிரசுரம் செய்தார்.

3. பிரித்தானியா மியூசியத்தில் பாதுகாக்கப்பட்டு இருக்கிற கோடக்ஸ் அலெக்சந்திரினஸ் என்ற நகல் கல்விமான்களுடைய பொதுவான அபிப்பிராயப்படி ஐந்தாம் நூற்றாண்டின் மத்தியில் எழுதப்பட்டது. அதை அலெக்சந்திரியா பட்டணத்துக்குப் பேற்றிரியார்க்காய் இருந்த சிரில் லூக்கா என்பவன் அலெக்சந்திரியாவில் இருந்து அதைக் கொண்டுபோய் 1628 வருஷம் முதலாம் சார்ல்ஸ் ராஜாவுக்குக் கொடுத்தான். அந்தப் பிரதியின் முந்திய சரித்திரத்தைப்பற்றி நமக்குத் தெரிவது மிகவும் சொற்பம். அதை இரத்தசாட்சியாகிய தெக்லா என்பவள் பிரதிசெய்ததாக அரபிப்பாஷையில் எழுதப்பட்டிருக்கிறது. அது முந்தினதைப்போல மிருதுவான தோல் கடுதாசியில் பக்கத்துக்கு இரண்டு பத்தியாக எழுதப்பட்டு இருக்கிறது. ஒலிக்குறிப்புகள் நிறுத்தக்குறிப்புகள் முதலியவைகள் அதில் காணப்படுகிறதில்லை. அது நாலு புஸ்தகங்களாகக் கட்டப்பட்டிருக்கிறது. மூன்று புஸ்தகங்களில் கிரேக்கத் திருப்புதல் பழைய ஏற்பாடும் மற்றதில் புதிய ஏற்பாட்டின் எல்லாப் புஸ்தகங்களும் அடங்கி இருக்கின்றன. புதிய ஏற்பாட்டில் பின்வருகிற வாக்கியங்கள் அதில் காணப்படவில்லை. மத். 1. 1. வாக்கியமுதல் 25 அதி. 6. வாக்கியம் வரை; யோவா. 6. 50. வாக்கியமுதல் 8 அதி. 52. வாக்கியம் வரை; 2 கொரி. 4. 13. வாக்கியமுதல் 12. அதி. 6. வாக்கியம் வரை. அதிலே வேதாகமத்தோடே கிளெமெந்து ரோமேனசுடைய நிருபமும், அதானசியுடைய சாஸ்திரமும், சங்கீதத்தின் பேரில் யுசேபியு எழுதின வியாக்கியானமும் சேர்க்கப்பட்டு இருக்கிறது. பூர்வ பிரதிகளில் இந்த ஒரே பிரதியில் மாத்திரம் வெளிப்படுத்தல் விசேஷம் முழுவதும் அடங்கி இருக்கிறது.

4. **கோடக்ஸ் எப்ரேமி**, தோல்கடுதாசியில் எழுதப்பட்ட எழுத்துக்கள் சைப்பழக்கத்தினாலும் கால நெடுமையினாலும் உருவழிந்து போகும்போது அந்தத் தோல்கடுதாசியில் மறுபடியும் எழுதுவதற்கு அதைப் பக்குவப்படுத்தி உபயோகிப்பார்கள். அப்படிப்பட்டவைகளுக்கு பாலிம்செஸ்டஸ் என்று



பேர்; சில நூற்றாண்டுகள் கழிந்துபோகவே, அதில் முதலாவது எழுதப்பட்ட எழுத்துக்கள் மறுபடியும் காணப்படும். இவ்வகையாய்ப் பூர்வத்தாருடைய அநேக நூல்கள் வெளிப்பட்டு இருப்பதுண்டு. இரசவாதமானது உருவழிந்த எழுத்துக்கள் [illegible] தெளிவாக்கப்படுவதற்கு அதிக அநுகூலமாய் இருப்பதும் உண்டு. இந்தப் பிரதியை சீரியனாகிய எப்ரேம் என்பவன் எழுதினான். அது முந்தி எழுதப்பட்ட தோல்கடுதாசியின்மேல் எழுதப்பட்டிருப்பதால், அதற்கு பாலிம்செஸ்டஸ் என்னும் பேர் விளங்குகிறது. அதில் கிரேக்குப் பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடு முழுமையும் இருந்ததாகத் தோன்றுகிறது. இப்போது அந்தப் பிரதியில் ஒரு பாகம் மாத்திரம் இருக்கிறது. அது ஐந்தாம் நூற்றாண்டில் எழுதப்பட்டு இருக்கலாம்.

5. **கோடக்ஸ் பீசா.** தியோடோர் பீசா என்பவர் 1581 வருஷம் அதை கேம்பிரிஜ் சர்வகலாசாலைக்கு பரிசாகக் கொடுத்தார். அது 1562 வருஷம் லீயோன் பட்டணத்து ஐரினியூ சன்னியாச மடத்தில் கண்டு எடுக்கப்பட்டது. அதற்கு முந்தி அதைப்பற்றிய சரித்திரம் நமக்குத் தெரியாது. அது பற்பல நீளமுள்ள வரிகளாக எழுதப்பட்டிருக்கிறது. வார்த்தைகளுக்கு இடையில் பிரிவில்லை. ஒலிக்குறிப்புகள் நிறுத்தக்குறிப்புகளும் இல்லை. அது ஆறாம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகப் பொதுப்பட அநுமானிக்கப்பட்டிருக்கிறது. யோவா. 7. 53 வாக்கியமுதல் 8. அதி. 11. வாக்கியம் வரையும் காணப்படுகிற பூர்வ கையெழுத்துப் பிரதி இதுவே.

6. கூட்ட எழுத்துக்களால் எழுதப்பட்ட பிரதிகளில் மேற்சொல்லப்பட்டவைகள் முக்கியமானவை. இன்னமும் அநேகம் இருந்தாலும் அவைகளில் சுவிசேஷங்களின் பாகங்கள் அல்லது சுவிசேஷங்கள் இல்லாமல் மற்றப் புஸ்தகங்கள் அடங்கி இருக்கின்றன. எழுத்துக்கள் தொடர்ச்சியாய் எழுதப்பட்ட பிரதிகள் பிந்திய காலத்தில் உண்டானவைகள். அவைகள் ஏராளமாய் இருக்கின்றன. சுவிசேஷங்கள் அடங்கிய பிரதிகள் ஐந்நூறுக்குமேல் இருக்கிறது. அவைகள் பத்தாம் நூற்றாண்டுமுதல் பதினாறாம் நூற்றாண்டுவரையும் எழுதப்பட்டவைகளாய் இருக்கலாம். இருநூறுக்கு அதிகமான பிரதிகளில் அப்போஸ்தலர் நடபடியும் பொதுவான நிருபங்களும் அடங்கி இருக்கின்றன. முந்நூறுக்குமேல் கணக்கானவைகளில் பவுலின் நிருபங்கள் எழுதப்பட்டிருக்கிறது. நூறு பிரதிகளில் வெளிப்படுத்தின விசேஷம் காணப்படு

றது. டபிளின் திரித்துவ சர்வகலாசாலையில் இருக்கிற கோடக்ஸ் மான்ற் பார்றின்ஸ் என்ற நகலில் 1 யோவா. 5. 7. எழுதப்பட்டிருப்பதாகக் காணலாம். இராஸ்மஸ் என்பவர் தான் இரண்டுதரம் பிரசுரம்செய்த புதிய ஏற்பாட்டில் மேற்படி வாக்கியத்தைக் காட்டவில்லை. ஏனென்றால் அவர் பார்வையிட்டிருந்த பிரதிகளில் அந்த வாக்கியம் அவருக்குத் தென்படவில்லை. ஆனால் அந்த வாக்கியம் எந்தக் கையெழுத்துப் பிரதிகளிலாவது காணப்படுகிறதாய் இருந்தால், அதைத் தம்முடைய மூன்றாம் பதிப்பில் போடுவதாய் வாக்குக் கொடுத்தார். அப்படியே மேற்படி பிரதியில் அந்த வாக்கியம் போடப்பட்டிருந்ததால், தம்முடைய வாக்குப்படி நிறைவேற்றும்படி நேரிட்டது. அதினால் நவீன திருப்புதல்களில் அந்த வாக்கியம் திருப்பப்பட்டுவந்திருக்கிறது.

---

# C.

## பழைய ஏற்பாட்டு காலக்கணிதச் சுருக்கம்.

(59-ம் பக்கம் பார்க்க.)

பின் சொல்லப்படுகிற கணிதம் இஸ்ரவேலர் எகிப்தை விட்டுப் புறப்பட்டதுமுதல் துவக்குகிறது. அதற்கு முன் னுள்ள காலக்கணிதத்தைத் திட்டமாய்க் காட்ட ஏதுவில்லை. சில கணிதம் ஹஷர் ஹெல்ஸ் என்பவர்கள் சொல்லியதற்கு விகற்பமாய் இருக்கும். ஆனால் திட்டமான கணக்கின்பேரில் அடியில் வரும் கணிதம் கணிக்கப்பட்டிருக்கிறது. தேறின கணித சாஸ்திரிகள் எழுதியிருப்பவைகளையும் அதோடே ஒத்துப்பார்த்தும் இருக்கிறோம்.



காலக்கணிதச் சுருக்கம்.

| கிறீஸ்து. மு. | இஸ்ரவேலருடைய சரித்திரங்களில் அடங்கிய சங்கதிகள். | அஞ்ஞான தேசங்களில் இதற்கொத்த காலங்களில் நடந்த சங்கதிகள். |
|---|---|---|
| 1619 | இஸ்ரவேலர் எகிப்தைவிட்டுப் புறப்பட்டது. | |
| 1579 | மோசே மரித்தது, யோசுவா அவன் ஸ்தானத்தில் வந்தது. | |
| 1557 | யோசுவாவின் மரணம், அக்காலமுதல் 1159 வரைக்கும் ஒத்னியேல், ஏகூத், தெபோராள், பாராக், கிதியோன், அபிமெலேக்கு, தோலா, யாவீர், யெப்தா, இப்சான், ஏலோன், அப்தோன், சிம்சோன் என்பவர்கள் நியாயாதிபதிகளானது. | மெசொப்பொத்தாமியாவின் ராஜாவாகிய கூசான். |
| 1159 | ஏலி. | |
| 1119 | சாமுவேல். | |
| 1099 | சவுல். ........................................ | அம்மோனின் ராஜாவாகிய நாகாஸ். |
| 1057 | தாவீது எப்ரோனிலும், இஸ்போசேத்து மகனாயீமிலும் ஆண்டது. | |
| 1050 | தாவீது எருசலேமில் சகல இஸ்ரவேலையும் ஆண்டது ........................ நாத்தான், காத் தீர்க்கதரிசிகள். | தீருவின் ராஜாவாகிய I இராம் (அபியாம்); சோபாவின் ராஜாவாகிய ஆதாதேசர்; ஆமாத்தின் ராஜாவாகிய தோயீ; அம்மோனின் ராஜாவாகிய ஆனூன். |
| | தாவீது கர்த்தருடைய பெட்டியைக் கொண்டுவந்து சீயோனில் வைத்தது; தன்னு ராஜ்யத்தை எகிப்து முதல் ஐப்பிராத்து நதிவரைக்கும் விஸ்தாரமாக்கினது. | |

| வருஷம் கி. மு. | இஸ்ரவேலருடைய சரித்திரங்களில் அடங்கிய சங்கதிகள். | | | அந்நியஜாதிகளின் அந்தந்த காலங்களில் இருந்தவர்களும் நடந்த சங்கதிகளும். |
|---|---|---|---|---|
| 1017 | சாலொமோன் பட்டத்துக்கு வந்தது ........ நாத்தான் தீர்க்கதரிசி. | | | எகிப்தில் சிறுக்கின், ஏதோமில் ஆதாத், கெனுபாத்து, தமஸ்குவில் ரேசோன். |
| 1014 | தேவாலயத்தைக் கட்டத் தொடங்கினது ........ | | | தீருவின் ராஜாவாகிய ஈராம், எகிப்தின் ராஜாவாகிய II சொஷன்னின். |
| 1007 | தேவாலயம் கட்டிமுடிந்தது, அரமனையைக் கட்டத் தொடங்கினது. அகியா தீர்க்கதரிசி. | | | |
| 977 | சாலொமோனின் மரணம், ராஜ்யம் பிரிக்கப்பட்டது ........ | | | எகிப்தின் ராஜாவாகிய சீஷாக். |
| | **யூத ராஜ்யம்.** | | **இஸ்ரவேல் ராஜ்யம்.** | |
| 977 | ரெகொபெயாம் (17 வருஷம் ஆண்டது.) | | யெரொபெயாம் (22 வருஷம் ஆண்டது.) | |
| | செமாயா தீர்க்கதரிசி. | | அகியா தீர்க்கதரிசி. | |
| 973 | எருசலேம் சீஷாக்கால் கொள்ளையிடப்பட்டது. | ... | ........ | சீஷாக். |
| 960 | அபியா (3 வருஷம்.) ........ | ... | ........ | தமஸ்குவில் தப்ரிமோன். |
| | இவருக்கும் ........ | ... | இஸ்ரவேலுக்கும் யுத்தம் நடந்தது. | |
| 958 | ஆசா (41 வருஷம்.) | | | |
| | | 956 | நாதாப் (2 வருஷம்.) ........ | எகிப்தில் சேரா (ஊசர்கான்.) |
| | | 955 | பாஷா (24 வருஷம்.) ........ யெகூ தீர்க்கதரிசி. | தமஸ்குவில் பெனாதாத். I. |



| | | | | |
|---|---|---|---|---|
| 953 | சேராவை ஜெயித்தது. | | | |
| 932 | யூதாவின் ராஜா ........ அசரியா, அனனியா தீர்க்கதரிசிகள். | ... | பாஷாவை ........ | சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத் [illegible] |
| | | 932 | ஏலா (2 வருஷம்.) | |
| | | 931 | சிம்ரி உள்நாட்டுக் கலகம். (௭ நாள்) | |
| | | 927 | உம்ரி (6 வருஷம்.) | |
| | | 926 | சமாரியா ராஜதானியாக்கப்பட்டது. | |
| | | 920 | ஆகாப் (22 வருஷம்.) | |
| | | | யேசபேலை மணம்புரிந்தது. | இவள் தீரு சீதோனின் ராஜாவாகிய எத்பாகாலின் மகள். |
| 917 | யோசபாத் (25 வருஷம்.) | | | |
| | இவன் ........ | ... | ஆகாபுக்கு உதவியாக ........ | தமஸ்கு ராஜாவாகிய 2 பெனாதாத்துக்கு விரோதமாய் யுத்தஞ்செய்து, அபஜெயப்பட்டது. |
| 900 | அம்மோனியரையும் மோவாபியரையும் ஜெயித்தது. | ... | எலியா, மிகாயா தீர்க்கதரிசிகள். | |
| | | 897 | அகசியா (2 வருஷம்.) மோவாபின் கலகம். | |
| | | 896 | யோராம் (12 வருஷம்.) | |
| | யோசபாத் ........ | ... | யோராமுக்கு உதவியாய் | மோவாபோடு போர்புரிந்தது. |

| வருஷம் கி. மு. | இஸ்ரவேலருடைய சரித்திரங்களில் அடங்கிய சங்கதிகள். | | | அந்நிய தேசங்களில் அந்தந்த காலங்களில் இருந்தவர்களும் நடந்த சங்கதிகளும். |
|---|---|---|---|---|
| | யெகூ, யசாஸியேல், எலியேசர் தீர்க்கதரிசிகள். | | | |
| 892 | யோராம் (8 வருஷம்) இதற்குமுன் அவன் அத்தாலியாளை மணம்புரிந்தது. | ... | இவன் ஆகாபின் மகன். | |
| | எதோமியரின் கலகம் .................. | ... | எலிசா தீர்க்கதரிசி. | |
| 885 | அகசியா (1 வருஷம்.) | | | |
| | இவன் ...... .................... | ... | யோராமுக்கு உதவியாக ........ | கமஸ்குவின் ராஜாவாகிய ஆசகேலுடன் போர்புரிந்து, அபஜெயப்பட்டது. |
| 884 | அகசியாவும், அவனோடே ......... | ... | யோராமும் யெகூவினால் கொல்லப்பட்டது. | |
| | அத்தாலியாள் ராஜ்யத்தை அபகரித்தது. (6 வருஷம் ஆண்டது.) | 884 | யெகூ (28 வருஷம்.) | |
| 878 | யோவாஸ் (40 வருஷம்.) ............ | ... | யோர்தானுக்கு கிழக்கான தேசம் | ஆசகேலால் பிடிபட்டது. |
| | யோவேல் தீர்க்கதரிசி. (?) | | யோனா தீர்க்கதரிசி. | |
| 856 | தேவாலயம் பழுதுபார்க்கப்பட்டது. | 856 | யோவாகாஸ் (17 வருஷம்.) | |
| | ஆசகேல் காத் பட்டணத்தைப் பிடித்ததும், அவன் எருசலேமை பயமுறுத்தினதும். | | இஸ்ரவேலரும் ஆசகேலால் அதிகமாய் நெருக்கப்பட்டது ...... | ஆசகேல். |
| 840 | சீரியர் யூதாவுக்கு விரோதமாய்ப் படையெடுத்தல். | 840 | யோவாஸ் (1[illegible] வருஷம்.) இவன் மூன்றுதடவை | [illegible] |
| 839 | அமத்சியா (29 வருஷம்.) | | | |
| | அமத்சியா எதோமை ஜெயித்தது. இவன் | | யோவாசால் அபஜெயப்பட்டது. | |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 825 | 2 யெரொபெயாம் ஆளுகை. (41 வருஷம்.) இவன் சீரியரோடே போர்புரிந்து இஸ்ரவேலின் எல்லைகளைத் திரும்பச் சேர்த்துக்கொண்டது. | | |
| 811 | அசரியா அல்லது உசியா, (52 வருஷம்.) இவன் எதோமியரின் கைக்குப்பட்டணமாகிய ஏலாத்தை அரணாக்கினது. ஆமோஸ் தீர்க்கதரிசி. | | | | |
| | | 784 | இடைவிலகாலம் (10 வருஷம்.) ஓசியா தீர்க்கதரிசி. | | |
| | | | | 776 | முதலாம் ஒலிம்பியா விளையாட்டு. |
| | | 774 | சகரியா (6 மாதம்.) | | |
| | | 773 | சல்லூம் (1 மாதம்.) | | |
| | | | மெனாகேம் (10 வருஷம்.) | | |
| | | | இஸ்ரவேலர் .... ....... | ... | சீரியா ராஜாவாகிய பூலுக்குக் கப்பம் கட்டினது. |
| | | 762 | பெக்காகியா (2 வருஷம்.) | | |
| | | 760 | பெக்கா (20 வருஷம்.) | | |
| 759 | யோத்தாம் (16 வருஷம்.) மீகா, ஏசாயா தீர்க்கதரிசிகள், | | | | |
| | | | | 753 | ரோமாபுரி கட்டப்பட்டது. |
| | | | | 747 | பாபிலோனின் ராஜாவாகிய நெபொனாசார். |
| 743 | ஆகாஸ் (16 வருஷம்.) | | | | |
| | ஆகாஸ் ... ............................ | ... | இஸ்ரவேலின் ராஜாவாகிய பெக்காவினாலும் ........ | | சீரியா ராஜாவாகிய ரேத்சீனாலும். |

| வருஷம். கி. மு. | இஸ்ரவேலருடைய சரித்திரங்களில் அடங்கிய சங்கதிகள். | | | | அந்நியதேசங்களில் நிகழ்ந்த சங்கதிகளில் இஸ்ரவேலருக்கும் சம்பந்தமுள்ளவைகளும். |
|---|---|---|---|---|---|
| | நெருக்கப்பட்டபோது, அவர்களுடன் யுத்தம்பண்ணின ... ...... | ... | ........................ | ...... | அசீரியாவின் ராஜாவாகிய திகிலாத்பிலேசருடைய உதவியைத் தேடினது. |
| | ஓதேத் தீர்க்கதரிசி ................ | ... | அநேக ஜனங்கள் சிறையாக | ...... | அசீரியாவுக்கு அனுப்பப்பட்டது. |
| | | 740 | இடைவிடுகாலம் (9 வருஷம்.) | | |
| | | 731 | ஓசெயாவின் ஆளுகை (9 வருஷம்.) இவன் .............. | 731 | சோராஜுடன் கட்டப்பட்டது. அசீரியருக்குக் கப்பங்கட்டினது. |
| | | | இவன் ........................ | ...... | எகிப்திய ராஜாவோடு உடன்படிக்கைபண்ணி அசீரியருடைய அதிகாரத்தைத் தள்ளும்படி பிரயத்தனஞ்செய்தது. |
| 727 | எசேக்கியா (29 வருஷம்.) இவன் பெலிஸ்தியரை ஜெயித்தது. | | | | |
| | | 724 | சமாரியா .................... | ...... | அசீரியா ராஜாவாகிய சல்மனாசரால் முற்றிக்கைப் போடப்பட்டது. |
| | | 722 | சமாரியா பிடிபட்டது ...... | | |
| | | | இஸ்ரவேலர் சிறையாக ...... | ...... | அசீரியாவுக்கு அனுப்பப்பட்டது. |
| | | | தேசம் அசீரியரால் குடியேறப்பட்டது. | | |



| | | | |
|---|---|---|---|
| 714 | சீரியானா யூத ராஜ்யத்திற்கு விரோதமாய் வந்த ............ | ...... | அசீரியாவின் சேனை படி. எகிப்தின் ராஜாவாகிய திராக்கா சனகெரிபுடன் யுத்தம் பண்ணினது. |
| 713 | அசீரியர் பாளயத்தின் சங்காரம். எசேக்கியாவினிடத்தில் அனுப்பப்பட்ட | ...... | பாபிலோனின் ராஜாவாகிய மெரோதாக் பலாதானின் ஸ்தானாபதிகள். |
| | | 709 | மேதியாவில் தியோசீயு. |
| 698 | மனாசேயின் ஆளுகை (55 வருஷம்.) | | |
| 698 | இன்னும் மிச்சமான அசீரியரை இஸ்ரவேல் தேசத்தில் குடியேறும்படிக்கு | ...... | எசர்த்தோன் அனுப்பினது. |
| | | 671–17 | எகிப்தில் சமெத்திக்கியு. |
| 643 | ஆமோன் (2 வருஷம்.) நாகூம் தீர்க்கதரிசி. (?) | | |
| 641 | யோசியா (31 வருஷம்.) | | |
| 629 | எரேமியா செப்பனியா, தீர்க்கதரிசிகள். | | |
| | | 625 | பாபிலோனில் நேபொபொலாசேர் சுயாதீனனாகிக்கொண்டது. |
| | | 616 | எகிப்தில் நேகோ ஆளுகை. |
| 610–9 | யோசியா நேகோவோடே யுத்தம்பண்ணிக் கொல்லப்பட்டது. | | |
| | யோவாகாஸ் (3 மாதம்); யோயாக்கீம் (11 வருஷம்.) | | |
| 606–5 | நேபுகாத்நேச்சார் யூத ராஜ்யத்தாரைத் தனக்குக் கப்பங் கட்டப்பண்ணினது. 70 வருஷ சிறையிருப்பு இந்த வருஷமுதல் தொடங்குகிறதென்று பொதுப்பட நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. | 606 | மேதியரும் பாபிலோனியரும் நினிவேயைப் பிடித்தது. |
| | ஆபகூக் தீர்க்கதரிசி ................................ | | கர்கேமீசில் நேகோ முறிய அடிக்கப்பட்டது. |

| வருஷம் கி. மு. | இஸ்ரவேலருடைய சரித்திரங்களில் அடங்கிய சம்பவங்கள். | | அந்நாளிலே சுற்றிலுமுள்ள அக்கத்தக் காலங்களில் நிருத்தங்களும் நடந்த சங்கதிகளும். |
|---|---|---|---|
| | | | நேபுகாத்நேச்சார் பாபிலோனுக்கு ராஜாவானது. |
| | | 600 | எகிப்தின் ராஜாவாகிய ஸம்மீக். |
| 599–8 | யோயாக்கீன் (3 மாதம்.) எருசலேமைக் கல்தேயர் பிடித்தது. யோயாக்கீன் சிறையாக்கப்பட்டது. சிதேக்கியா (மத்தானியா) கல்தேயருக்குக் கீழ் (11 வருஷம்) ஆண்டது. | | |
| | | 595 | எகிப்தின் ராஜாவாகிய ஒப்பிரா (ஹ்ப்ரீஸ்.) |
| 594 | பாபிலோனியாவிலுள்ள கேபார் ஆற்றண்டை எசேக்கியேல் தீர்க்கதரிசனம் சொல்லத்தொடங்கினது. | 591 | அத்தேனேயில் சோலன். |
| 589 | சிதேக்கியா பாபிலோனியருக்கு விரோதமாக ............ | ... | எகிப்தின் ராஜாவின் உதவியை நாடினது. |
| | எருசலேமின் முற்றுகை கல்தேயரால் ஆரம்பிக்கப்பட்டது. | | |
| 587 | எருசலேமின் அழிவு, ராஜா சிறையானது; அநேக ஜனங்கள் சிறையாக... | ... | பாபிலோனுக்கு அனுப்பப்பட்டது. |
| | | | நேபுகாத்நேச்சார் தீருவை 2 வருஷமாக முற்றுகை போட்டுப் பிடித்தது. |
| | நேபுகாத்நேச்சார், கெதலியாவை அதிகாரியாக ஏற்படுத்தினது. இவன் இஸ்மவேலால் கொல்லப்பட்டது. மீதியான யூதர் எகிப்துக்கு ஓடினது. ஒபதியா தீர்க்கதரிசி. (?) | | |
| 574 | யோயாக்கீனின் சிறையிருப்புக்கு 50 வருஷத்துக்குப்பின் எசேக்கியேல் கண்ட தரிசனம். | | |
| | | 570 | பித்தாகோராவின் பிறப்பு. |



| வருஷம் கி. மு. | இஸ்ரவேலருடைய சரித்திரங்களில் அடங்கிய சம்பவங்கள். | | | அந்நாளிலே சுற்றிலுமுள்ள காலங்களில் நடந்த சங்கதிகளும். |
|---|---|---|---|---|
| | | | 569 | எகிப்தின் ராஜாவாகிய அமோஸிஸ், |
| 561 | யோயாக்கீன் பாபிலோனில் சிறைச்சாலையிலிருந்து ............ | | ... | ஏவில்மெரோதாக் வெளியாக்கினது. |
| | | | | பாபிலோனில் மொகல்சத்தேச்சேர். |
| | தானியேலுடைய தரிசனங்கள். | | 555 | பெல்ஷாத்சார். |
| | | | 538 | கோரேஸ் பாபிலோனைப் பிடித்தது. |
| | பலஸ்தீனா. இது ........ | பார்சியா ராஜ்யத்தில் ஒரு நாடாகச் சேர்க்கப்பட்டது. | | தரியு பாபிலோனில் ஆண்டது. |
| 536 | சிறையிருப்பிலிருந்து முதலாவதாக செருபாபேலோடு எருசலேமுக்கு... | கோரேஸின் முதலாம் வருஷத்தில் வந்தவர்கள். | 53[illegible] | ரோமாபுரியின் தார்குவின் ஆண்டது. |
| | தேவாலயத்தைத் திரும்பவும் கட்டத் தொடங்கினது. | கம்புசே. (எஸ்ரா. 4ல் சொல்லப்பட்ட அகாஸ்வேரு.) ............ | 529 | |
| | | | 525 | கம்புசே எகிப்தை ஜெயித்தது. |
| 522 | தேவாலயத்தைக் கட்டும் வேலை .... | ஸ்மெர்தியு. (எஸ்ரா. 4ல் சொல்லப்பட்ட அர்தசஷ்டாவால் தடைபட்டது.) தரியு ஹிஸ்தாஸ்பின். (எஸ்ரா. 4. 24; 5, 6 அதி. சொல்லப்பட்ட தரியு.) | | |

| வருஷம் கி. மு. | இஸ்ரவேலருடைய சரித்திரங்களில் அடங்கிய சங்கதிகள். | | | அஞ்ஞானதேசங்களில் அந்தந்தக் காலங்களில் இருந்தவர்களும் நடந்த சங்கதிகளும். |
|---|---|---|---|---|
| 520 | தேவாலயத்தைக் கட்டும் வேலை .... | தரியுவின் இரண்டாம் வருஷத்தில் மறுபடியும் தொடங்கப்பட்டது. | | |
| | ஆகாய், சகரியா தீர்க்கதரிசிகள். | | | |
| 517 | தேவாலயம் கட்டி முடிந்தது. | | | |
| | | | 509 | ரோமர் கார்தேஜுபுரியாரோடே செய்த முதல் உடன்படிக்கை. |
| | | தரியு கிரேக்கருக்கு விரோதமாய்ப் படையெடுத்தது ..................... | 491 | மரதான் யுத்தம். |
| | | | 486 | எகிப்து பார்சியாவுக்கு விரோதமாய்க் கலகம்செய்ததும், அது மறுபடியும் ஜெயிக்கப்பட்டதும், 484. |
| | | 1 சர்க்சே (எஸ்தர் ஆகமத்திலுள்ள அகாஸ்வேரு.) ..................... | 485 | |
| | | 3-வது வருஷத்தின் பெரிய விருந்து... | 48[illegible] | |
| | | கிரேக்கதேசத்தின்மேல் படையெடுப்பு........................ | 4[illegible] | தர்மாப்போலி, சீலமீஸ் யுத்தங்கள். |
| | | 7-வது வருஷம் கிரேக்கதேசத்திலிருந்து திரும்பினது. | | |
| | | | 479 | மினாத்தியா யுத்தம், மைக்கேல் கடற்சண்டை. |
| | | எஸ்தர் ராஜஸ்திரீ ஆக்கப்பட்டது. | 478 | |
| | | 12-வது வருஷத்தில் ஆமான் செய்த சதியும், அவன் மரணமும் ......... | 473 | |
| | | 1 அர்தசஷ்டா. (எஸ்று. 7ல் சொல்லப்பட்ட அர்தசஷ்டா.) | 464 | |
| | | | 461 | அத்தேனில் பெரிக்கிளீஸ் அதிகாரக்காரனாகிய ஏகோதேரத்து. |
| 457 | எஸ்றாவிருப்பிலிருந்து யூதர் கூட்டமாய் இரண்டாவதாக எஸ்றாவோடு எருசலேமுக்கு ..................... | பார்சிய ராஜாவின் உத்தரவின்பேரில் திரும்பினது. | | |
| | | | | ஏரோதோத்து சரித்திரக்காரன். |
| 444 | நெகேமியா 432 வரைக்கும் எருசலேமில் 12 வருஷம் தேசாதிபதியாய் இருந்தது. | | | |
| | மல்கி பழைய ஏற்பாட்டின் கடைசியான ஆகமத்தை எழுதினது. | | | |
| | | | 431 | பெலொப்பொனீஷியன் யுத்தம் ஆரம்பித்தது. |
| | | 2 சர்க்சே ..................................... | 425 | |
| | | சொக்தியானு ..................................... | 424 | |
| | | 2 தரியு (நோதா.) ..................... | 423 | சொக்கிரத்தே, செனேபன், தியுசிடிய, என்பவர்கள் அத்தேனில் செழித்தோங்கினது. |
| 409 | ஆசாரியனாகிய மனாசே கெர்சிம் மலையில் ஒரு ஆலயத்தைக் கட்டினது. | | | |
| | | அர்தசஷ்டா நிமான் ..................... | 405 | ஒனிஷியல் தியோனிசியு. |
| 366 | யோசுவா பிரதான ஆசாரியனாகிய தன் சகோதரன் யோகனாலே ஆலயத்தில் கொல்லப்பட்டது. | | | |

| வருஷம் கி. மு. | இஸ்ரவேலருடைய சரித்திரத்தில் அடங்கிய சங்கதிகள். | | | அந்நியதேசங்களில் அந்தந்தக் காலங்களில் இருந்தவர்களும் நடந்த சங்கதிகளும். |
|---|---|---|---|---|
| | | ஒகு | 359 | |
| | | | 342 | முதல் சாமோதித் யுத்தம். |
| | | அர்சேயு (அல்லது ஆரோகு.) | 338 | கிரோனியா யுத்தம். |
| | | | 337 | மக்கெதோனியருகிய பிலிப்பு கிரேக்கருக்குச் சேனுபதியாக ஏற்படுத்தப்பட்டது. |
| | | தரியு கதமனு | 336 | அலெக்சந்தர், பிலிப்புக்குப் பிற்பாடு பட்டத்துக்கு வந்தது. |
| | | இவன் | 334 | கிரனிக்கியுவில், அலெக்சந்தரால் முறியடிக்கப்பட்டது. |
| | | மறுபடியும் | 333 | இஸ்ஸஸ் நதியருகில், அபஜெயப்பட்டது. |
| 332 | பிரதான ஆசாரியனுகிய யதுவா எருசலேமுக்கு விரோதமாய் வந்த அலெக்சந்தரின் கோபத்தைத் தணித்தது. | | | |
| | | மறுபடியும் | 331 | ஆர்பெலாவில் அபஜெயப்பட்டது. |
| | | | 326 | இரண்டாவது சாமோதித் யுத்தம். |
| | | அலெக்சந்தரின் மரணம். | 323 | |



351

| | பலஸ்தீனு தேசமானது. | அலெக்சந்தருக்குப் பின்னுக வந்தவர்களுக்கும் ரோமருக்கும் கீழாயிருந்தது. | | |
|---|---|---|---|---|
| 320 | பலஸ்தீனு | எகிப்தின் ராஜாவாகிய இப்தோலமியு சோத்தேர் என்பவனுல் பிடிபட்டது. | | |
| | அநேக யூதர்கள் | எகிப்துக்குக் கொண்டுபோகப்பட்டு அலெக்சந்திரியாவில் குடியேற்றப்பட்டது. | | |
| 314 | பலஸ்தீனு | சீரியாவின் ராஜாவாகிய அந்திகோனுவால் பிடிபட்டது. | | |
| 301 | பலஸ்தீனுவை | இப்தோலமியு மறுபடியும் கட்டிக்கொண்டது. | | |
| | | | 293 | மூன்றாவது சாமோதித் யுத்தம். |
| | | இப்தோலமியு பில்தெல்பியு | 284 | |
| | | ஏறக்குறைய இந்தக் காலம் எபிரேயு வேதாகமம் கிரேக்குபாஷையில் திருப்பப்பட்டது | 280 | |
| | | இப்தோலமியு ஐயர்கத்தே | 247 | முதல் பியூனிக் யுத்தம்: 264–241. |
| | | இப்தோலமியு பிலோபாத்தர் | 221 | இரண்டாவது பியூனிக் யுத்தம், 218–201. |
| 217 | சீமோன் | இப்தோலமியு பிலோபாத்தரைத் தேவாலயத்துக்குள் பிரவேசியாதபடி செய்தது. | 212 | சைரக்கூஸ் பிடிபட்டது. |

| வருஷம். கி. மு. | இஸ்ரவேலருடைய சரித்திரங்களில் அடங்கிய சங்கதிகள். | | | அஞ்ஞானதேசங்களில் அந்தந்தக் காலங்களில் இருந்தவர்களும் நடந்த சங்கதிகளும். |
|---|---|---|---|---|
| 203 | யலன்திரு ………… | இப்தோலமியு எப்பிப்பானியு ……… சிரியாவிலுள்ள அந்தியோகுவால் பிடிபட்டது. | 204 | |
| | | | 197 | சினோ செப்பாலி யுத்தம். |
| | | செலுக்கஸ் பிலோபாத்தர் ……… | 187 | |
| 176 | தேவாலயம் ………… | செலுக்கஸின் சேனாபதியின் பிரயத்தனத்தினின்று பாதுகாக்கப்பட்டது. | | |
| | | அந்தியோகு எப்பிப்பானே ……… | 175 | |
| 170 | எருசலேம் பிடிபட்டு ஆலயம் கொள்ளையிடப்பட்டு அசுசிப்படுத்தப்பட்டது. இதை நடப்பித்தவன்… | அந்தியோகு. | | |
| | அநேக யூதர்கள் கொலைசெய்யப்பட்டதும் அடிமைகளாக விற்கப்பட்டது. | | | |
| | | | 168 | [illegible]ர்சியு என்பவன் அ[illegible]யப்பட்டது. மக்கெதோனியா ராஜ்யம் முடிவடைந்தது. மூன்றாவது பியூனிக் யுத்தம். 149–146. |
| 167 | மக்கப்பேர் இரத்தச்சாட்சியாய் மரித்தது. | | | |
| 165 | யூதா மக்கப்பேர் எருசலேமை யூதர் வசம் திருப்பிக்கொண்டது. | | | |
| 161 | யோனத்தான் யூதாவுக்குப் பின் ஆண்டது. | | 146 | கார்தேஜ்புரியும் கொரிந்து பட்டணமும் அழிவுண்டது. |
| 141 | அந்நிய அரசாட்சியினின்று யூதர்களைச் சீமோன் விடுவித்தது. | | | |
| 135 | யோவான் இர்க்கானு. | | | |
| 129 | இவன் எதோமியரைக் கீழ்ப்படுத்தினது. | | | |
| 109 | சமாரியாவைப் பிடித்து, கலிலேயாவை வசப்படுத்தினது. | | | |
| 107 | அரிஸ்தோபுலு. | | | |
| 106 | அலெக்சந்தர் யன்னேயு. | | | |
| 94 | கிலெயாத்தியரையும் மோவாபியரையும் ஜெயித்தது. | | 90 | மித்ரொடேத்துவின் முதலாம் யுத்தம். |
| | | | 82 | மித்ரொடேத்துவின் இரண்டாம் யுத்தம். |
| 79 | அலெக்சாந்திரா. | | | |
| 70 | இர்க்கானுவுக்கும் அரிஸ்தோபுலுவுக்கும் ராஜ்யத்தைப்பற்றி உண்டான விவாதம். | | | |
| | | | 66 | மித்ரொடேத்துவின் மூன்றாம் யுத்தம். |
| 63 | இருவரும் ………… | ரோம இராயனுகிய பாம்பேக்குத் தங்கள் காரியத்தைத் தெரியப்படுத்தினதும், அவன் யூதேயாவை ரோமருடைய அதிகாரத்துக்கு உட்படுத்தினதும். | | |

353

தைத் தழுவினதாயும் இருக்கிறது. யூதர்கள், கிரேக்கக் கல்வியிலும் மோசேயின் பிரமாணத்தைப் பிடித்தமாய் அநுசரித்து வந்த வகையிலும், அவர்களிடத்தில் காணப்பட்ட கருத்துகள் எண்ணங்கள் இன்னவை என்று அறிவதற்குத் தள்ளுபடி ஆகமங்கள் மிகவும் அநுகூலமாய் இருக்கிறது. அவைகளை சரித்திர உபதேச தீர்க்கதரிசன ஆகமங்கள் என மூவகையாய்ப் பிரிக்கலாம். ஆனால், இப்பிரிவுகளே சரியானவைகள் என்று சாதிக்கக்கூடாது.

3. தள்ளுபடி ஆகமங்களில் இங்கிலீஷில் வரிசைப்படி முதலாவதாக வருவது, எஸ்றாவின் இரண்டு புஸ்தகங்கள். ஒன்று எஸ்றாவின் மூன்றாம் ஆகமம் என்றும்; மற்றது எஸ்றாவின் நாலாம் ஆகமம் என்றும் அழைக்கப்படும். மூன்றாம் ஆகமத்தில், யூதர் பாபிலோன் சிறையிருப்பிலிருந்து திரும்பினதையும் தேவாலயம் திரும்பக் கட்டப்பட்டதையும் தேவாராதனை மறுபடியும் ஸ்தாபிக்கப்பட்டதையும் குறித்துச் சொல்லியிருக்கிறது. இவ்வாகமத்தில் காட்டப்பட்டிருக்கிற விஷயங்களில் அநேகம், சனோன் ஆகமங்களாக ஒப்புக்கொள்ளப்படுகிற எஸ்றா நெகேமியாவின் புஸ்தகங்களில் சொல்லப்படுகிற காரியங்களுக்கு விகற்பமாய் இருக்கிறது. நாலாம் ஆகமத்தில் கல்தேயர், எருசலேமை அழித்துப்போட்ட பதின்மூன்று வருஷங்களுக்குப் பின்பு உடன்படிக்கையின் ஜனங்களுடைய நிர்ப்பந்த நிலைமையையிட்டு எஸ்றா என்பவன் துக்கித்துக் கொண்டிருந்த சமயத்தில் ஊரியேல் என்னும் தேவதூதன் அவனுக்கு அளித்த தொடர்ச்சியான தரிசனங்கள் அடங்கியிருக்கிறது. இவ்வாகமங்கள் யாரால் எப்போது எழுதப்பட்டன என்பதை அறியோம். முந்தினது கிறிஸ்துவுக்கு இருநூறு வருஷங்களுக்கு முன்னும், பிந்தினது கிறிஸ்துவுக்கு நூறு வருஷங்களுக்குப் பின்னும் எழுதப்பட்டிருக்கவேண்டும். சிலர், பிந்தினதை கிறிஸ்துவுக்கு நூறு வருஷத்துக்கு முன் எழுதப்பட்டதாயும் இடைவாக்கியங்கள் கிறிஸ்துவுக்குப் பின் அதில் பாய்ச்சப்பட்டதாயும் அநுமானிக்கிறார்கள்.

4. **தோபித்தின் ஆகமம்.** அசீரியாவின் ராஜாவாகிய எனிமேசர் (சல்மனாசர்) என்பவனால் சிறையாகக் கொண்டுபோகப்பட்ட நப்தலி கோத்திரத்தைச் சேர்ந்த தோபியா என்பவனுடைய தேவபக்தி, நிர்ப்பாக்கியம், கடைசியான வாழ்வு என்பவைகளைக் குறித்து அதில் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் இருந்து ஆதி சபை பிதாக்கள் வாக்கியங்களை எடுத்து உரைத்திருக்கிறார்கள். அதில் கபடின்றி சரித்திரம் தெளிவாகக் காட்டப்பட்டிருப்பதினாலும், நற்போதனைகள் போதிக்கப்பட்



டிருப்பதினாலும் தள்ளுபடி ஆகமங்களுக்குள்ளே அதை யாவரும் வாசிக்கத் தகுதியுள்ளது என்று சொல்லலாம்.

5. **யூதித்தின் ஆகமம்.** யூதித் என்ற ஒரு யூதவிதவையின் சௌந்தரியம் தைரியம் தேசாபிமானம் என்றவைகளைக் காட்டிய சங்கதி அதில் அடங்கியிருக்கிறது. நேபுகாத்நேச்சாருடைய சேனாபதிகளில் ஒருவனாகிய ஒலோபர்னஸ் என்பவன் யூதேயா நாட்டிலுள்ள பெத்தூலியாவை முற்றிக்கை போட்டபோது, அவள் தன் வேலைக்காரியோடே அவனுடைய பாளயத்துக்குப் போய், அவனை எருசலேமுக்கு நடத்திக்கொண்டுபோவதாய் வாக்குக் கொடுத்து, அவனுடைய நயவசனிப்பினாலும் தந்திரமான பாவனையினாலும் அவன் தயவைப் பெற்றுக்கொண்டு, ஒருநாள் இராவில் அவள் தனிமையாய் அவன் கூடாரத்தில் இருக்கையில், அவன் குடித்து வெறித்து தூங்கும் சமயத்திலே அவனுடைய வாளைக்கொண்டு, அவன் தலையைத் துண்டித்துப்போட்டாள்; அப்பால் அவனுடைய சேனை முழுவதும் சங்கரிக்கப்பட்டது. யூதித்துக்கு வெகுமதியாக ஒலோபர்னசுடைய பொருள் முழுவதும் கொடுக்கப்பட்டது. அவள் அதை வைத்துக்கொண்டு, பெத்தூலியாவில் கன்னிபத்தோடே வாசம்பண்ணி 110 வயதுள்ளவளாய் மரித்தாள். இதுதான் அந்தச் சரித்திரத்தின் அடக்கம். பூமிசாஸ்திரத்துக்கும் சரித்திரத்துக்கும் காலக்கணக்குக்கும் உரிய அநேகவிகற்பங்கள் அதில் காணப்படுவதால், அது காரியநிச்சயம் உள்ளதல்ல என்று எண்ணத்தகும். அது கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் பலஸ்தீனாவிலுள்ள ஒரு யூதனால் எழுதப்பட்டிருக்கலாம். யூதஜனங்கள், தங்கள் புறச்சத்துருக்களோடே போராடுகையில், அவர்களுக்கு விசுவாசத்தையும் தைரியத்தையும் உண்டாக்கத் தக்க நோக்கமாய் அது எழுதப்பட்டிருக்கலாம். அது நன்னெறிக்குரிய ஆகமம் அல்ல.

6. **எஸ்தர் ஆகமத்தின் பின்பாகம்.** எஸ்தரின் சனோன் ஆகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற சங்கதிக்கு விரோதமான விஷயங்கள் அதில் வருவதால் அது கள்ளப்புஸ்தகம் என்று சொல்லவேண்டியதாய் இருக்கிறது. அதிலே மொர்தெகாயின் சொப்பனம், அகாஸ்வேருவை கொன்றுபோடுவதற்கு இரண்டு பிரபுக்கள் செய்த சதிசர்ப்பனை, யூதர்களை அழிப்பதற்கு ராஜா உத்தரவு கொடுத்ததாக எழுதப்பட்ட ஒரு கட்டளைப்பிரதி, அந்தக் கட்டளையைவிட்டு மொர்தெகாயும் எஸ்தரும் பண்ணின ஜெபம், ராஜாவை எஸ்தர் சந்தித்ததில் நடந்த விபரங்கள், அர்தசஷ்டா (அகாஸ்வேரு) முந்தின கட்டளைக்கு எதிரிடையாக யூதர் பட்சத்தில் கொடுத்ததாகச் சொல்லப்பட்ட பிர

நோக்கமாய், இது எழுதப்பட்டிருக்கிறது. இந்த மூவகை ஆகமங்களும் எகிப்தில் கி. மு. இரண்டாம் நூற்றாண்டின் கடைசியில் எழுதப்பட்டதாகத் தோன்றுகிறது.

**11. மனாசேயின் ஜெபம்.** இது கிரேக்க ஆகமமாக ஒருக்காலும் ஒப்புக்கொள்ளப்படவில்லை. நாளாகமம் எழுதப்பட்ட காலத்தில் மனாசேயின் ஜெபம் ஒன்று இருந்ததாகத் தெரிகிறது (2 நாளா. 33. 18, 19.). அப்போகிரிபா புஸ்தகத்திலிருக்கிற ஜெபம் மொத்தத்தில் அருமையானதாய் இருந்தபோதிலும், அசலுக்குச் சரியான ஜெபம் என்று சொல்லக்கூடாது. காணாமல்போன ஜெபத்திற்குப் பதிலாக பக்தியுள்ள ஒரு யூதன் அதை எழுதியிருக்கவேண்டும் என்று சொல்லத்தகும்.

**12. மக்கபேயரின் ஆகமங்கள்.** இந்தப் பெயரால் நான்கு ஆகமங்கள் உண்டு. அவர்கள், யூதா மக்கபேயருடைய பராக்கிரம கிரியைகளையும் அவனுடைய குடும்பத்தாரின் வல்லமையான செய்கைகளையும் காட்டுவதால் அந்தப் பேர் உண்டாயிற்று. முதலாம் புஸ்தகம், சரித்திர சாட்சிக்கு மெத்தப் பிரயோஜனமுள்ளது. அதில் அடங்கிய சரித்திரம் உண்மையுள்ளது. யூதர்கள், தங்கள் மார்க்க சுயாதீனத்துக்காகவும் சீரியருடைய கொடுமையினின்று சுயாதீனர் ஆகும்படியாகவும் மக்கபேயர் சேனாபதிகளின்கீழ் அமைந்து செய்த பலத்த யுத்தங்களைக்குறித்து அதில் சொல்லியிருக்கிறது. அந்த ஆகமத்தில் கி. மு. 175 அந்தியோகு எப்பிப்பானே அரசாட்சியின் துவக்கமுதல் கி. மு. 135 சீமோன் மரணம் வரையும் உள்ள சரித்திரம் அடங்கியிருக்கிறது. இரண்டாம் ஆகமம் முந்தினதற்கு இதரமாயுள்ளது. அது பதினைந்து வருஷக்கால சரித்திரம் உள்ளது. தேவாலயத்திலுள்ள பொக்கிஷங்களைக் கொள்ளையிட்டுக் கொண்டுவரும்படி செலூக்கஸ் என்பவன் ஹெலியோதுருவை அனுப்பினதுமுதல், யூதா மக்கபேயர் என்பவன் கி. மு. 161ல் நிக்கனோரை ஜெயித்தது வரையுமுள்ள சங்கதி அதில் அடங்கியிருக்கிறது. இது, ஒரு பெரிய நூலிலிருந்து அலெக்சந்திரிய யூதனால் சேர்க்கப்பட்டதாய் இருக்கலாம். மேற்சொல்லிய இரண்டு ஆகமங்கள் அன்னியில், மக்கபேயர் என்ற பெயரால் இன்னும் மூன்று ஆகமங்கள் அழைக்கப்படுவது உண்டு. அவைகளில் ஒன்றாவது மேலைச் சபையில் கிரேக்க ஆகமங்களாக அங்கீகரிக்கப்படவில்லை.

**13.** அப்போகிரிபா ஆகமங்கள் சபையில் நாலாம் நூற்றாண்டுக்குப்பின்பு வாசிக்கப்பட்டு வந்தன. அவைகளைக்குறித்து ஜெரோம் என்பவன் "நன்மாதிரியைக் கண்டு நல்லொழுக்கத்தில் தேறும்படியாகத் திருச்சபை அவைகளை வாசிக்கும்படி



நியமித்திருக்கிறதே அல்லாமல் அவைகளைக்கொண்டு யாதொரு உபதேசத்தையும் ரூபிக்க அவைகளைப் பிரயோகிக்கிறதில்லை" என்று சொல்லியிருக்கிறான். இதினாலே, அவைகளைத் திவ்விய அதிகாரமுள்ளவைகள் அல்லவென்று அவன் எண்ணினதாகப் பார்க்கிறோம்.

## E.

## எபிரெயருடைய பண்டிகைகள், பருவகாலங்கள் முதலியவைகள்.

(78-ம் பக்கம் பார்க்க.)

1. எபிரெயர் இருவகையாய்க் காலத்தைக் கணித்துவந்தார்கள். ஆசாரியருடைய வைதீக வருஷம் ஆபிப் மாதத்தில் தொடங்கினது. அந்த மாதத்தில் இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்டார்கள். ஆபிப் மாதம் ஏறக்குறைய மார்ச்மாதத்திற்குச் சரியாய் இருக்கும். லௌகீக வருஷம் திஸ்ரி மாதத்தில் தொடங்கினது. திஸ்ரி, செப்டெம்பர் மாதத்துக்கு ஏறக்குறைய ஒக்கும். எபிரெயர், மாதங்களை நம்மைப்போல் கணித்துவரவில்லை. அவர்கள் மாதங்கள் சந்திர மாதங்களாய் இருந்தன. தங்கள் வருஷத்தைச் சவுரவருஷத்திற்கு ஒத்துவரும்படி மூன்று வருஷங்களுக்கு ஒருதரம், ஆதார் மாதத்தோடேகூட வீஆதார் அதாவது இரண்டாம் ஆதார் என்று ஒரு மாதத்தைக் கூட்டிக்கொள்வது, அவர்கள் வழக்கமாய் இருந்தது.

2. யூதர்கள் தினத்தை இயல் நாள் என்றும் சாதாரண நாள் என்றும் வித்தியாசப்படுத்திச் சொல்வார்கள். இயல் நாளானது சூரியோதயமுதல் அது அஸ்தமிப்புவரையும் இருக்கும். அதைச் சிறையிருப்புக்குப் பின்பு சமமற்ற பன்னிரண்டு மணிநேரமாகப் பிரித்தார்கள். சாதாரண நாள் சாயந்தரம் ஆறுமணிமுதல் மறுநாள் சாயந்தரம் ஆறுமணிவரையும் கணிக்கப்படும்.

2 இரவு மிகப் பூர்வமுதல் மூன்று ஜாமங்களாக வகுக்கப்பட்டன. முதலாவது ஜாமம் பன்னிரண்டு மணிவரையும், இரண்டாவது மூன்றுமணி வரையும், மூன்றாவது காலை ஆறுமணி வரையும் கணக்கிடப்பட்டது. நம்முடைய ஆண்டவருடைய காலத்தில், ஜாமம் ஒன்றுக்கு மூன்றுமணி நேரமாக இரவு நாலு ஜாமங்களாய்ப் பிரிக்கப்பட்டன. மூன்றாம் ஜாமம் சேவல் கூவும் நேரம் (மத். 26. 34. மாற். 13. 35.). சரியானபடி நாளானது காலை ஆறுமணிமுதல் சாயந்தரம் ஆறுமணிவரையும் பன்னிரண்டு மணிகளாக வழங்கப்பட்டுவந்தது.

4. எபிரெயருடைய காலங்கள் பண்டிகைகளை விளக்கிய அட்டவணை.

| எபிரெய மாதங்கள். | இங்கிலீஷ் மாதங்களுக்கு ஒத்தவருவது. | [illegible] வருஷம். | [illegible] வருஷம். | பருவகாலங்கள். | பண்டிகைகள். |
|---|---|---|---|---|---|
| ஆபிப் அல்லது நீசான். (30 நாள்.) யாத். 12. 2, 18; 13. 4. எஸ்தர், 3. 7. | மார்ச்சு. | 1 | 7 | [illegible] | 14. பஸ்கா கொல்லப்பட்டது. 15. பஸ்கா ஆசரிப்பு. 16. வருஷத்தின் முதற்பலன் கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டப்பட்டது. 21. பஸ்கா ஆசரிப்பு முடிவு. |
| சீவ் அல்லது சிவ். (29 நாள்.) 1 இரா. 6. 1. | ஏப்பிரல். | 2 | 8 | | 14. முதலாம் பஸ்காவை ஆசரிக்கக்கூடாதவர்கள் இரண்டாம் பஸ்காவை ஆசரித்தல். எண். 9, 10, 11. |
| சீவான் அல்லது சீவன். (30 நாள்.) எஸ்தர், 8. 9. | மே. | 3 | 9 | [illegible] | 6. பெந்தெகொஸ்தே. கோதுமை அறுப்பின் முதற்பலன் கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டப்பட்டது. |
| தம்முஸ். எசே. 8. 14. (29 நாள்.) | ஜூன். | 4 | 10 | | |
| ஆப். (30 நாள்.) | ஜூலாய். | 5 | 11 | [illegible] | |
| எலூல். (29 நாள்.) நெகே. 6. 15. | ஆகஸ்டு. | 6 | 12 | | |
| திஸ்ரி அல்லது எத்தானீம். (30 நாள்.) 1 இரா. 8. 2. | செப்டெம்பர். | 7 | 1 | [illegible] | 1. எக்காளப்பண்டிகை. 10. பாவநிவிர்த்தி செய்யும் நாள். 15. கூடாரப்பண்டிகை, திராட்சரசம் எண்ணெய் இவைகளின் முதற்பலன். 23. கூடாரப் பண்டிகையின் கடைசிநாள். |
| மார்க்கேஷ்வான் அல்லது பூல். (29 நாள்.) 1 இரா. 6. 38. | அக்டோபர். | 8 | 2 | | |
| கிஸ்லேவ். (30 நாள்.) சகரி. 8. 1. | நவம்பர். | 9 | 3 | [illegible] | 25. ஆலயப்பிரதிஷ்டை. |
| தேபேத். (29 நாள்.) எஸ்தர், 2. 16. | டிசம்பர். | 10 | 4 | | |
| சேபாத் அல்லது சேவாத். (30 நாள்.) சகரி. 1. 7. | ஜனவரி. | 11 | 5 | [illegible] | |
| ஆதார். (29 நாள்.) எஸ்தர், 3. 7. [illegible] கூட்டிக்கொள்ளுதல். | பெப்ருவரி. | 12 | 6 | | 14, 15. பூரீம் பண்டிகை. |



5. யூதர்களுடைய பண்டிகைகள் வாரந்தோறும் மாதந்தோறும் வருஷந்தோறும் கொண்டாடப்படும். ஏழாம் வருஷமும் ஐம்பதாம் வருஷமும் மிகவும் சிறப்பாய்க் கொண்டாடப்படுவதும் உண்டு.

6. யூதர்கள் கொண்டாடின வாரப்பண்டிகை ஓய்வுநாளே. அந்த நாளில் ஜனங்கள் லௌகீக வேலைசெய்யாமல் இளைப்பாறவும் ஜெபத்தியானம் செய்யவும் அது ஏற்படுத்தப்பட்டது (சங். 68. 25–27.). அந்த நாளில் நாடோடிய பலியை விட, இரண்டத்தனையாகப் பலிசெலுத்தப்பட்டது (யாத். 29. 38–42. எண். 28. 9, 10.). அந்த நாளிலே பிள்ளைகளுக்கு வேதப்பிரமாணம் கற்றுக்கொடுக்கப்படும். சமீபத்தில் இருக்கிற கிராமங்களிலிருந்தும் ஜனங்கள் ஆராதனைக்காக தேவாலயத்துக்கு வருவார்கள். ஓய்வுநாளில் ஜனங்கள் தீர்க்கதரிசிகளைக் கண்டு பேசும் வழக்கமும் இருந்தது (2 ராஜா. 4, 23.). சிறைவிருப்புக்குப் பின்பு பலஸ்தீனாவில் பற்பல நகரங்களில் ஜெபஆலயங்கள் கட்டப்படவே, அங்கே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் வாசிக்கப்பட்டு விஸ்தரிக்கப்பட்டுவந்தன (அப். 13. 15.). தேவன் சிருஷ்டிப்பின் வேலையை முடித்து ஓய்ந்தபெறது அந்தநாள் ஏற்படுத்தப்பட்டது. பிந்திய காலத்தில் எபிரெயர் அதைக் கைக்கொண்டுவரும்படி தேவனுடைய விசேஷித்த உத்தரவு பிறந்தது. தேவன் உலகத்தைச் சிருஷ்டித்த விசேஷத்தையும் இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்ட சங்கதியையும் நினைவுகூரும்பொருட்டு அது ஏற்படுத்தப்பட்டது. (ஆதி. 2. 2. யாத். 20. 8–11.)

7. மாதப்பண்டிகை. அமாவாசியில் கொண்டாடப்பட்டது. ஆசாரியர் வெள்ளி பூரிகைகளை ஊதி அந்தப் பண்டிகையை அறிவிப்பார்கள் (எண். 10. 10; 28. 11–15.). வேலை விலக்கப்படவில்லை; அதிகமான பலிகள்மாத்திரம் செலுத்தப்படும். ஏழாம்மாதமாகிய திஸ்ரியில் வரும் அமாவாசை லௌகீக வருஷத்துக்குத் துவக்கமாய் இருந்தது.

8. வருஷாந்தரப்பண்டிகைகள். நியாயப்பிரமாணத்தில் குறிக்கப்பட்ட இவ்வகைப் பண்டிகைகள் மூன்று உண்டு. அவை கொண்டாடப்படும்போது இஸ்ரவேலில் ஆண்பிள்ளைகள் எல்லாரும் தேவாலயத்தில் காணப்படவேண்டும் (யாத். 23. 14–17.). அவைகள் தேவன் இஸ்ரவேலருக்குச் செய்த தயவுகளையும் இரக்கங்களையும் நினைப்பூட்டும்படி மகிழ்ச்சியோடே தோத்திரங்களைச் செலுத்தும் காலங்களாய் இருந்தன.

அவைகளில் முதலாவது பஸ்காபண்டிகை. எகிப்தியரின் தலைச்சன்கள் அழிக்கப்பட்டதையும் இஸ்ரவேலருடைய தலைச்சன்கள் பாதுகாக்கப்பட்டதையும் இஸ்ரவேலர் எகிப்தைவிட்டுப் புறப்பட்டதையும் நினைவுகூரும்படியாக அது ஏற்படுத்தப்பட்டது. அது ஆபிப்மாதம் பதினாலாம் தேதியில் ஆசரிக்கத் துவக்கப்பட்டு, இருபத்தோராம் தேதியில் முடிவுபெறும். அந்த மாதம் யூதருடைய வைதிக வருஷத்தின் துவக்கமாய் இருந்தது (யாத். 12. 2–18; 23. 15.). இந்தப் பண்டிகையில் பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்படும் (யாத். 12. 1–16. உபா. 16. 2–6.). இந்தப் பண்டிகையில் முதல் விளைச்சலின் கதிர்க்கட்டு கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டப்படும் (லேவி. 23. 9–14.). இந்தப் பண்டிகைக்குச் சம்பந்தமாய் அதின் கடைசியில் நம்முடைய ஆண்டவர் "பரிசுத்த இராப்போஜனத்தை" ஏற்படுத்தினார் (மத். 26. மாற். 14. 1 கொரி. 11.). பஸ்கா அடிக்கப்பட்ட அன்றையத்தினம் நமது ஆண்டவர் சிலுவையில் அறையப்பட்டார். நித்திரை அடைந்தவர்களில் முதற்பலன் ஆனதற்குக் குறிப்பாக, அவர் முன்னறுப்பின் முதற்பலனி அசைவாட்டப்பட்ட அன்று உயிரோடே எழுந்தருளினார். பஸ்கா நம்முடைய இரட்சகருக்கு அடையாளமாய் இருந்தது. ஆகவே பவுல் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக அடிக்கப்பட்டிருக்கிறாரே என்று சொல்லியிருக்கிறான். (1 கொரி. 5. 7.)

பஸ்காபண்டிகையின் இரண்டாம் நாளிலிருந்து ஐம்பதாம் நாள் பெந்தெகொஸ்தே பண்டிகைநாள் வரும். பெந்தெகொஸ்தே என்ற கிரேக்க மொழிக்கு "ஐம்பதாம்" என்று அர்த்தம். இஸ்ரவேலர் எகிப்தைவிட்டுப் புறப்பட்ட ஐம்பதாம் நாளில் சீனாய் மலையில் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதை நினைவுகூரும்படியாக அது ஏற்படுத்தப்பட்டது. பஸ்காவுக்கு ஏழு வாரங்களுக்குப்பின் இந்தப் பண்டிகை கொண்டாடப்பட்டதால் சிலவேளைகளில் அதற்கு வாரங்களின் பண்டிகை என்றும் (உபா. 16. 16.), கோதுமை அறுப்பின் கடைசியில் அது ஆசரிக்கப்பட்டதால் சிலவேளைகளில் அதற்கு அறுப்பின் பண்டிகை என்றும் பேர் சொல்லப்பட்டிருக்கிறது. அதை ஆசரிக்கையில் மெல்லிய மாவில் இரண்டு அப்பங்களைச் செய்து, கர்த்தருக்கென்று முதற்பலனாகக் கொண்டுவந்து, பலிகளோடே மகிழ்ச்சியாயும் நன்றியறிதலாயும் செலுத்தவேண்டியதாய் இருந்தது (லேவி. 23. 17–20.). நம்முடைய இரட்சகர் சிலுவையில் அறையப்பட்ட வருஷத்தில் அந்தப்



பண்டிகை கர்த்தருடைய நாளில் வந்தது. அப்போது அப்போஸ்தலர் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டுச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே ஒரே தருணத்தில் மூவாயிரம்பேர் சபையிற் சேர்க்கப்பட்டார்கள்.

ஏழாம் மாதமாகிய திஸ்ரி மாதம் பதினைந்தாம் தேதிமுதல் இருபத்துமூன்றாம் தேதிவரையும் கூடாரப்பண்டிகை கொண்டாடப்பட்டது. இருபத்துமூன்றாம் தேதி மிகவும் விசேஷித்ததாய் (லேவி. 23. 34–42.). இஸ்ரவேலர் வனாந்தரத்தில் சஞ்சரித்ததை நினைப்பூட்டும்படியாக அது ஏற்படுத்தப்பட்டது. அதோடேகூட அறுப்பு முடிந்து, பூமியின் பலன் சேர்க்கப்பட்டதைக் குறித்துக் கர்த்தரை நன்றியறிதலோடே துதிக்கும்படியான நோக்கமாகவும் ஏற்படுத்தப்பட்டது. ஜனங்கள் மரத்தின் கிளைகளைக் கொண்டுவந்து, அவைகளால் குடிசைகளைச் செய்து, அவைகளில் அந்த வாரம்முழுவதும் குடியிருப்பார்கள். இந்தப் பண்டிகையை மற்றெல்லாவற்றையும்விட, மிகவும் அதிகச் சந்தோஷமாய் யூதர் கொண்டாடிவந்தார்கள். அது "மகா ஓசன்னா" என்றும் அழைக்கப்பட்டது. சபையின் பொதுச் செலவால் அதிகமான பலிகளும் செலுத்தப்பட்டன (எண். 29. 13–40, லேவி. 23. 38–40. உபா. 16. 14, 15.). அந்தப் பண்டிகையில் நியாயப்பிரமாண முறைமைப்படி வழக்கப்பிரகாரமாய் சடங்குகள் செய்யப்பட்டதுடன், பிந்திய காலத்தில் யூதர்கள் இன்னும் சிலவற்றைச் சேர்த்தார்கள். சீலோவாம் குளத்திலிருந்து மிகுந்த ஆடம்பரத்தோடே தேவாலயத்துக்கு ஜலம் மொண்டுவரப்பட்டு பலிபீடத்துக்குமுன்பாக ஊற்றப்படும் (ஏசா. 12. 3.). ஆசாரியர்கள் உள்பிராகாரத்தையும் ஸ்திரீகளின் பிராகாரத்தையும் பிரிக்கிற படிகளில் ஏறி அநேகம் சங்கீதங்களைப் பாடுவார்கள். (சங். 120–134.)

9. கூடாரப்பண்டிகைக்கு ஐந்து நாட்களுக்குமுன் வரும் திஸ்ரி மாதம் பத்தாம்தேதியில் பாவநிவிர்த்திநாளின் சிறந்த பண்டிகை கொண்டாடப்படும். இதுமாத்திரம் நியாயப்பிரமாணத்தினால் ஏற்படுத்தப்பட்ட உபவாசநாள் (லேவி. 23, 27–29; 25. 9. அப். 27, 9.). அதிலே ஜனங்கள் வருஷம் முழுமையும் செய்த தங்களுடைய பாவங்களுக்காகத் துக்கித்துப் புலம்புவார்கள். பிரதான ஆசாரியன் ஜனங்களுக்காகப் பிராயச்சித்தம் செய்வான். அவன் அந்த நாளில்மாத்திரம் மகா பரிசுத்த ஸ்தலத்தில் வெள்ளாட்டுக்கடாவின் இரத்தத்தோடே பிரவேசிப்பான். இன்னொரு வெள்ளாட்டுக்கடாவின்மேல் தன் கைகளை வைத்து, ஜனங்கள் எல்லாருடைய பாவங்களையும்

அறிக்கைபண்ணி அதை ஜீவனோடே வனாந்தரத்துக்கு அனுப்பிவிடுவான். (லேவி. 16. 6–10.)

10. பிந்திய காலத்தில் மற்றும் விரதநாட்கள் ஏற்படுத்தப்பட்டன. பத்தாம் மாதம் பத்தாந்தேதியில் எருசலேமின் முற்றிகைக்குச் சம்பந்தமாயும், நாலாம் மாதம் பதினேழாந்தேதி அந்தப் பட்டணம் பிடிபட்டதையிட்டும், ஐந்தாம் மாதம் ஒன்பதாந்தேதி தேவாலயம் சுட்டெரிக்கப்பட்டதையிட்டும், ஏழாம் மாதம் மூன்றாந்தேதி கெதலியாவின் மரணத்தையிட்டும் அவைகள் ஸ்தாபிக்கப்பட்டன. (எரே. 52. 4; ௸. சக. 7. 3, 5; 8. 19.)

11. திஸ்ரி மாதம் முதல்தேதி லௌகிக வருஷத் துவக்கமாகக் கொண்டாடப்பட்டது. அந்த நாளில் எக்காளத்தை ஊதிச் சிறப்பாய்க் கொண்டாடத் துவக்குவார்கள். இதினால் எக்காளப்பண்டிகை என்றும் பெயர் உண்டு. வழக்கமாய் அமாவாசைகளில் செலுத்தப்படும் பலிகளைவிட அதிகமான காணிக்கைகளும் பலிகளும் அந்தப் பண்டிகையில் செலுத்தப்படும். (எண். 29. 29, ௸.)

12. நியாயப்பிரமாணத்தில் ஏற்பட்டிராத வேறே இரண்டு பண்டிகைகள் யூதருடைய சரித்திரத்தில் வருவதைக் காணலாம். ஒன்று பூரீம்பண்டிகை. பூரீம் என்பதற்குச் சீட்டென்று அர்த்தம். பூரீம்பண்டிகை ஆதார் மாதம் பதினாலாம் அல்லது பதினைந்தாம் தேதியில் வரும். அது ஆமான் யூதர்களை நிர்மூலம் பண்ணும்படி செய்த சர்ப்பனை அவமாய்ப்போனதை நினைப்பூட்டும்பொருட்டு ஏற்படுத்தப்பட்டது (எஸ்தர், 3. 7; 9. 26.). அது மொர்தேகாயின் நாள் என்றும் சொல்லப்படும் (2 மக். 15. 36.). மற்றது பிரதிஷ்டைப்பண்டிகை. அந்தியோகு எப்பிப்பானே என்பவன் கி. மு. 164ல் ஜெயிக்கப்பட்டு, எருசலேமில் தேவாலயம் சுத்திகரிக்கப்பட்டு, தேவாராதனை மீளவும் ஸ்தாபிக்கப்பட்டதை நினைவுகூரும்பொருட்டு அது ஏற்படுத்தப்பட்டது (யோவா. 10. 22.). அந்தப் பண்டிகை கிஸ்லே என்ற ஒன்பதாம் மாதம் இருபத்தைந்தாம் தேதிமுதல் எட்டுநாளாய்க் கொண்டாடப்படும். அந்தக் காலத்தில் யூதர் மிகுதியான வெளிச்சங்களைக் கொளுத்துவதால் அது சில தருணங்களில் வெளிச்சங்களின் பண்டிகை என்று அழைக்கப்படுகிறது.

13. ஏழு வருஷத்துக்கு ஒருவருஷம் ஓய்வுவருஷம் என்னப்படும். அந்தக் காலத்தில் தேசம் சாகுபடி செய்யப்படமாட்டாது; பலன்கள் சேர்க்கப்படாது. ஏழைகள் மாத்திரம் பலன்களைச் சேர்ப்பார்கள்; ஆனால் ஜனங்கள் வேட்டையாடுவார்கள்; ஆடு மாடுகள் மேய்ப்பார்கள்; தங்களுடைய கட்டிடங்க



ளைப் பழுதுபார்ப்பார்கள்; வியாபாரம் செய்வார்கள். அந்த வருஷம் திஸ்ரி மாதம் முதல்தேதியில் தொடங்கும். நிலத்துக்கு ஓய்வுகொடுக்கவும் ஜனங்களுக்குக் குடும்பசவரக்ஷணை முறையையும் யூகத்தையும் கற்றுக்கொடுக்கவுமாக அது ஏற்படுத்தப்பட்டது. ஓய்வுநாளானது, ஜனங்கள் கர்த்தருடையவர்கள் ஆதலால் அவர்கள் தங்கள் சொந்தவேலையைச் செய்யாமல் கர்த்தருக்கேற்ற கிரியைகளைச் செய்யவேணும் என்று கற்பிக்கிறதுபோல, ஓய்வுவருஷமானது, ஜனங்களும் அவர்களுடைய நிலங்களும் கர்த்தருடையவைகள், அவர்கள் அவர்பேரில் சார்ந்து அவரில் நம்பிக்கை உள்ளவர்களாய் இருக்கவேண்டும் என்று போதிக்கிறது. இவ்வருஷத்தில் கூடாரப்பண்டிகையிலே தேவாலயத்தில் விசேஷித்த பணிவிடைகள் நடத்தப்படும் (உபா. 31. 10, 13. யாத். 23. 10, 11. லேவி. 25. 1–7.). இந்த ஏற்பாட்டை யூதர் மோசே முன் அறிவித்தபடி (லேவி. 26. 34, 35.) அசட்டையாய் விட்டுவிட்டார்கள் (2. நாளா. 36. 21.). ஆனால் சிறையிருப்புக்குப் பின்பு அதை எச்சரிக்கையோடே கைக்கொண்டுவந்தார்கள்.

14. ஏழு ஓய்வுவருஷங்களுக்குப்பின்பு வரும் வருஷத்துக்கு யூபிலி வருஷம் என்று பேர் (லேவி. 25. 8–11.). பாவநிவிர்த்தி செய்த நாளாகிய திஸ்ரி மாதம் பத்தாம்தேதி அன்று இது தொடங்கும். அதிலே ஓய்வுவருஷங்களுக்குரிய கற்பனைகள் கைக்கொள்ளப்பட்டதும் அல்லாமல், அதற்குரிய வேறே கற்பனைகளும் கைக்கொள்ளப்பட்டன. அடிமைகள் சுயாதீனம் அடைந்தார்கள் (லேவி. 25. 39–46. எரே. 34. 8, ௸.). கடந்த ஐம்பது வருஷங்களுக்குள்ளே விற்கப்பட்ட நிலங்கள், லேவியருடைய பட்டணங்களிலுள்ள வீடுகள் யாவும் முந்தின சொந்தக்காரருக்கு விட்டுவிடப்படும். ஆனால் தேவனுக்கென்று பிரதிஷ்டையாக்கப்பட்டு, மீட்கப்படாதவைகள் மாத்திரம் திரும்பக் கொடுக்கப்படமாட்டாது. ஒத்திவைக்கப்பட்ட நிலங்களும் ஒத்திப் பணமின்றி மீட்கப்பட்டது (லேவி. 25. 10, 13–17, 24–28; 27. 16–21.). யூபிலி பண்டிகையில் நடத்தப்பட்ட காரியங்கள் சுவிசேஷத்துக்கு அடையாளமாய் இருந்தன. (ஏசா. 61. 2. லூக். 4. 19.)

15. இந்தப் பண்டிகைகளின் நோக்கம் இன்னதென்பது பிரத்தியட்சமாய் இருக்கிறது. ஜனங்களை சகோதர அந்நியோந்நியத்தில் ஐக்கியப்படுத்தவும், அஞ்ஞானிகளினின்று பிரத்தியேகப்படுத்தவும், கடந்த காலங்களில் பாராட்டப்பட்ட இரக்கங்களை நினைவுகூரச் செய்யவும் பிரயோஜனமுள்ளதாய் இருந்தது. அவை

கள் தேவனுடைய பரிசுத்த இலட்சணத்தை விளக்குகிறவைகளாய் இருந்தன. அவைகள் தரித்திரத்தை நிவிர்த்திக்கவும், கொடுமையையும் பொருளாசையையும் தடுக்கவும் அநுகூலமாய் இருந்தன. அவைகள் எல்லாம் சுவிசேஷ நன்மைகளுக்கு அடையாளங்களாய் அல்லது ஆவிக்குரிய சிந்தை உள்ளவர்களுக்குச் சுவிசேஷ சத்தியங்களை விளக்குவிக்கிறவைகளாய் இருந்தன.

# F.

## எபிரேய செய்யுள்.

(100-ம் பக்கம் பார்க்க.)

1. பழைய ஏற்பாட்டின் செய்யுள் ஆகமங்களின் பொருளை தெளிவாயும் திட்டமாயும் அறிந்து வியாக்கியானப்படுத்துவதற்கு எபிரேய செய்யுளைப்பற்றிச் சில காரியங்களை அறிவது அநுகூலமாய் இருக்கும். அந்தச் செய்யுள் கட்டப்பட்டிருப்பதைக் குறித்துப் பற்பல அபிப்பிராயங்கள் சொல்லப்பட்டிருப்பதுண்டு. கிரேக்கர் ரோமருடைய செய்யுளுக்குச் சம்பந்தமாய், எபிரேய செய்யுளும் கட்டப்பட்டிருப்பதாகச் சிலர் சொல்வார்கள். இதற்கு இசைவாய்ப் பஞ்சாகமங்களிலும் சங்கீதங்களிலும் உரிச்சீர் அல்லது மூவசைச்சீர் ஆறசைச்சீர் காணப்படுவது உண்டென்று யோசேப்புஸ் என்பவனும் பைலோவும் சொல்லியிருக்கிறார்கள். சங்கீதங்களில் முதலசை குறிலும் இறுதியசை நெடிலுமுள்ள இயற்சீர் அல்லது ஈரசைச்சீரும் (Iambic) முதலாம், நாலாம், ஐந்தாம் சீர் நேரசை நிரையசையும்; இரண்டாம் சீர் நேரசையும்; மூன்றாம் சீர், முதலோசை நெடிலும் இறுதியசை இரண்டும் குறிலுமாயுள்ள ஐந்து சீரும் (Sapphic) நேரசை, குறில் நெடில் உள்ள ஈரசை, நெடிலிணை, நெடில் குறிலுள்ள அசை பொருந்திய ஐந்து சீரும் (Alcaic) வரும் என்று எரோம் சொல்லியிருக்கிறான். நவீன காலத்தோருக்குள், சர் உவ்லியம் ஜோன்சும், மிக்கேலிசும், எரோம் சொல்லியதை அநுசரித்திருக்கிறார்கள். மற்றப்பேர், லௌத் அத்தியட்சரைப்போல, எபிரேய செய்யுள் யாப்பலங்காரமாய்ச் செய்யப்பட்டிருக்கிறது என்று ஒத்துக்கொண்டாலும், எபிரேய பூர்வ உச்சரிப்பு இப்போது தெரியாததால், யாப்பசைகள் இன்னவை என்று திட்டமாய் அறியக்கூடாததாய் இருக்கிறது என்கிறார்கள். வேறுசிலர், எபிரேய செய்யுளில், எதுகை மோனை அல்லது அவைகளைப் போன்றவை காணப்படுகிறது என்கிறார்கள். காரியத்தின் இயல்பையும் யூதருக்குள் கல்விமான்கள் சொல்வதையும் கவனிக்கையில், எபிரேய செய்யுள், யாப்பசைகளாகக் கட்டப்படவில்லை எனக் காணப்படுகிறது. மேலும் அட்சரமூலம்; புறமொழி, மாண்மொழி இவைகளில் எதைக்கொண்டாவது, செய்யுளையும் வாசகத்தையும் வித்தியாசப்படுத்தக் கூடாதவர்களாய் இருக்கிறோம். அட்சரமூலமாக, பழைய ஏற்பாட்டில் பன்னிரண்டு செய்யுள் வருவதுண்டு. ஆனால் புறமொழி, மாண்மொழிகள், செய்யுள் ஆகமங்களில் வருவதுபோல, வாசக ஆகமங்களிலும் வருகின்றன. உண்மையாய்ச் சொல்லில், எபிரேய செய்யுளானது (Parallelism), பாவணி இணையாக வரும். அது கருத்திலும் பதங்களிலும், அல்லது இரண்டிலும், இசைவாயாவது எதிர்மறையாயாவது சமஅளவுள்ள அடியாக வரும்.



2. இந்தக் கட்டுப்பாடாய்ப் பழைய ஏற்பாட்டில் உள்ள செய்யுள் ஆகமங்கள் உண்டுபண்ணப்பட்டிருக்கின்றன. வேதசாஸ்திரிகள், பாவணி இணையானது மூவகையுள்ளது என்கிறார்கள்.

3. முதலாவது (Antithetic) வேற்றுமை பாவணி இணை. இது ஒன்றுக்கொன்று எதிரிடையான வார்த்தையையும் வாசகங்களையும் உடைய ஈரடிகளாம். இவைகளில் காணப்படும் வேற்றுமையானது வாசகங்கள், பொருள், பெயர், பால், இடம், காலம் முதலியவைகளில் எதிர்ப்பாடுள்ளவைகளாய் இருக்கும். நீதிமொழி ஆகமத்தில் வேற்றுமை அணியிணை மிச்சமாய்க் காணப்படுவது உண்டு.

நீதிமானுடைய பேர் (ஞாபகம்) புகழ்பெற்று விளங்கும்;
துன்மார்க்கனுடைய பேரோ அழிந்துபோகும். நீதி. 10. 7.

எபிரேய பாஷையில் ஒவ்வொரு அடியும் மும்மூன்று பதங்களையுடையதாய் இருக்கின்றன. நீதிமானுக்கு எதிர்மறையாக துன்மார்க்கன் என்றும், ஞாபகத்துக்கு எதிர்மறையாக பேர் என்றும், புகழ்பெற்று விளங்கும் என்பதற்கு எதிர்மறையாக அழிந்துபோகும் என்றும் காட்டப்பட்டிருக்கிறது. சில தருணங்களில் இரண்டு அடிகளும் ஒன்றுக்கொன்று பொருளை வருவித்துக்கொள்ளும்.

ஞானமுள்ள மகன் தகப்பனைச் சந்தோஷப்படுத்துகிறான்;
மூடத்தனமுள்ளவனோ தாய்க்குச் சஞ்சலமாய் இருக்கிறான்.
நீதி. 10. 1.

இதின் அர்த்தம், ஞானமுள்ள மகன் தன் தாய்தகப்பன்

மானைச் சந்தோஷப்படுத்துகிறவனும் இருக்கிறான். மூடத்தனமுள்ள மகன் தன் தாய்தகப்பன்மாருக்குச் சஞ்சலமாய் இருக்கிறான் என்று அறியலாம்.

4. இரண்டாவது (Synonymous or Gradational) அநேகன பாவணி இணை. இதில் முதல் அடியைப்பார்க்கிலும் பின்வருகிற அடிகள் பொருள் ஏற்றமுள்ளவைகளாய் இருக்கும். ஒரேவிதக் கருத்துத் திரும்பவும் கூறப்படும்.

பரலோகத்தில் வீற்றிருக்கிறவர் நகைப்பார்;
ஆண்டவர் அவர்களை இகழுவார். சங். 2. 4.

கர்த்தாவே, நீர் நீதிமானை ஆசீர்வதிக்கு,
காருணியம் என்னும் கேடகத்தினால் அவனைச் சூழ்ந்து கொள்ளுவீர். சங். 5. 12.

சோதோமின் அதிபதிகளே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்;
கொமோராவின் ஜனமே, நமது தேவனுடைய வசனத்துக்குச் செவிகொடுங்கள். ஏசா. 1. 10.

சில தருணங்களில் நாலு அடிகள் அநேகன பாவணி இணையாக வரும்.

அவர்களுடைய கிரியைகளுக்குத் தக்கதாகவும்
அவர்களுடைய நடத்தைகளின் பொல்லாங்குக்குத் தக்கதாகவும் அவர்களுக்குச் செய்யும்;
அவர்கள் கைகளின் செய்கைக்குத் தக்கதாக அவர்களுக்கு அளியும்,
அவர்களுக்குச் சரிக்குச் சரிக்கட்டும். சங். 28. 4.

சில தருணங்களில் மூன்று அல்லது அதிகமான அடிகள் வரும்.

நீங்கள் பயப்படும் காரியம் புசல்போல் வரும்போதும்,
ஆபத்து சூறாவளிபோல் உங்களுக்கு நேரிடும்போதும்,
நெருக்கமும் இடுக்கணும் உங்கள்மேல் வரும்போதும். நீதி. 1. 27.

உன் அக்கிரமங்களை எல்லாம் மன்னித்து,
உன் நோய்களை எல்லாம் குணமாக்கி,
உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு,
உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி,
நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார். சங். 103. 3–5.

சில தருணங்களில் அடுக்குச் சொற்கள் ஒன்றின்பின் ஒன்று வரவே, எபிரெயச் செய்யுள் வாசகக் கட்டாகக் காணப்படும்.



யாருக்கு வேதனை,
யாருக்குத் துக்கம்,
யாருக்குச் சண்டைகள்,
யாருக்குப் புலம்பல்,
யாருக்குக் காரணமில்லாத காயங்கள்,
யாருக்கு இரத்தம் கலங்கின கண்கள்? நீதி. 23. 29.

பாவமுள்ள ஜாதி,
அக்கிரமத்தால் பாரம் சுமந்த ஜனம்,
பொல்லாதவர்களின் சந்ததி,
கெடுண்டாக்குகிற புத்திரர். ஏசா. 1. 4.

சில தருணங்களில் [illegible] அடிகளுக்குப் பொதுவாயுள்ளதோர் சிற்றடியானது முதலிலாவது இறுதியிலாவது வரும்.

துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும்,
பாவிகளுடைய வழியில் நில்லாமலும்
பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும்
இருக்கிற மனுஷன் பாக்கியவான். சங். 1. 1, 2.

முதல் மூன்று அடிகளுக்கும் நாலாம் அடியானது பொதுவாயுள்ளது.

வானங்களே கேளுங்கள்,
பூமியே செவிகொடு,
கர்த்தர் பேசுகிறார். ஏசா. 1. 2.

5. மூன்றாவது (Synthetic) தொடர்பாவணி இணை. ஒரு அடியின் கருத்தைப் பூரணப்படுத்த இன்னொரு அடி பின்தொடர்ந்து வரும்.

பகையோடிருக்கும் கொழுத்த எருதின் கறியைப்பார்க்கிலும்
சிநேகத்தோடிருக்கும் இலைக்கறியே நல்லது. நீதி. 15. 17.

மனுஷனுடைய வழியெல்லாம் அவன் பார்வைக்குச் செம்மையாகத் தோன்றும்;
கர்த்தரோ இருதயங்களை நிறுத்துப்பார்க்கிறார். நீதி. 21. 2.

இரண்டு அடிகளுக்குமுள்ள இணையானது ஒப்புமை, காரணம், காரியம் முதலியவற்றைத் தழுவிவரும். சிலவேளைகளில் அவை தொக்கிநிற்கும்.

குதிரைக்குச் சவுக்கும்,
கழுதைக்குக் கடிவாளமும்,
மூடன் முதுகுக்குப் பிரம்பும் ஏற்றது. நீதி. 26. 3.

எபிரெய செய்யுள் கட்டு, பற்பல வகையுள்ளதென்றாலும், அது சிறப்பலங்காரமுள்ளது. இரண்டுவேற்றுமை பாவணி

இணையானது, ஒன்றுக்கொன்று தொடர்பாவணி இணையாயிருப்பதற்கு ஒரு திருஷ்டாந்தம்.

மாடு தன் எஜமானையும்,
கழுதை தன் ஆண்டவனின் முன்னணையையும் அறியும்;
இஸ்ரவேலோ அறிவில்லாமலும்,
என் ஜனம் உணர்வில்லாமலும் இருக்கிறது. ஏசா. 1. 3.
கர்த்தர் ஜாதிகளின் ஆலோசனையை விருதாவாக்கி,
ஜனங்களுடைய நினைவுகளை அவமாக்குகிறார்;
கர்த்தருடைய ஆலோசனை நித்தியகாலமாகவும்;
அவருடைய இருதயத்தின் நினைவுகள் தலைமுறை தலைமுறையாகவும் நிற்கும். சங். 33. 10, 11.

மூன்றுதொடர் பாவணி இணையானது, மூன்றுவேற்றுமை பாவணி இணையாவதற்கு திருஷ்டாந்தம்.

பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாய் இருக்கிறதோ,
அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவர் கிருபையும் அவ்வளவு பெரிதாய் இருக்கிறது;
மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ,
அவ்வளவு தூரமாய் நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு விலக்குகிறார்;
தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல
கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். சங். 103. 11-13.

6. எபிரெய செய்யுளைக்குறித்து இங்கே விஸ்தாரமாய்ச் சொல்ல ஏதுவில்லை. எபிரெய கவிஞர்கள் யாப்பியலுக்குள் அடங்காமல், தங்கள் கருத்துக்கு இசைவாய்த் தாராளமாய் பாவணி இணையை விட்டு, வாசகப்போக்காய் எழுதியும் வைத்திருக்கிறார்கள்.

7. எபிரெய செய்யுளை வேறே பாஷையில் திருப்பும்போது, அதின் அலங்காரம் சரியானபடி தோன்றுகிறதில்லை.

8. எபிரெய செய்யுளைப் பொருளின்படி பிரித்தால், சங்கீதத்தில் அது கீர்த்தனையாயும், யோபின் ஆகமத்தில் அது காவியமாயும், நீதிமொழியில் அது படிப்பினையாயும், உன்னதப்பாட்டில் அது போதகத்துக்குரியதாயும், தீர்க்கதரிசன ஆகமங்களில் அணியாகவும் காணப்படும்.

9. கிரேக்கு புதிய ஏற்பாட்டில் பாவணி இணையைக் காணும்படி பிரயத்தனம்பண்ணினவர்கள் உண்டு. ஆனால், அவர்கள் லூக்கா சுவிசேஷத்தில் வருகிற பாட்டுகளில்தவிர மற்ற இடங்களில் அதைக் காணக்கூடாதவர்களாய் இருக்கிறார்கள்.



# G.

## சங்கீத ஆகமம்.

(105-ம் பக்கம் பார்க்க.)

### சங்கீதங்கள் எழுதப்பட்ட சந்தர்ப்பம் காலம் முதலியவற்றைக் காட்டிய அட்டவணை.

| சங்கீதங்கள். | ஒத்தவாக்கியங்கள். | சங்கீதங்கள் எழுதப்பட்ட சந்தர்ப்பம். | எழுதப்பட்ட காலம். கி. மு. |
|---|---|---|---|
| | முதலாம் புஸ்தகம். | | |
| 1 | நெகே. 13. 3. | சங்கீத ஆகமத்துக்கு முகவுரையாக தாவீது அல்லது என்றுவால் எழுதப்பட்டது .................. | 444 |
| 2* | 1 நாளா. 17. 27. | கிறிஸ்துவின் ராஜ்யத்தைக் குறித்துத் தீர்க்கதரிசனம் அடங்கிய இது, நாத்தான், தாவீதுக்கு தேவ வாக்குத்தத்தத்தை அறிவித்ததின் பேரில் பாடப்பட்டது .... | 1044 |
| 3 | 2 சாமு. 15. 29. | தாவீது, அப்சலோமுக்குவிலகி ஓடினபோது ... ..... | 1023 |
| 4 | 2 சாமு. 17. 29. | ,, ,, ,, | |
| 5 | ,, | ,, ,, ,, | |
| 6 | 1 நாளா. 28. 21. | தாவீதின் ஜீவகால ஒடுக்கத்தில்.. | 1015 |
| 7 | 2 சாமு. 16. 14. | சீமேயி தாவீதைத் தூஷணித்ததின்பேரில் .......... | 1023 |
| 8* | 1 நாளா. 28. 21. | தாவீதின் ஜீவகால ஒடுக்கத்தில்.. | 1015 |
| 9 | 1 சாமு. 17.4. அல்லது 1நாளா.16.43. | கோலியாத்தைத் தாவீது ஜெயித்ததின்பேரில் ........ | 1063 |
| 10 | தானி. 7. 28. | பாபிலோன் சிறையிருப்பின் காலத்தில் ............. | 539 |

* இந்த அடையாளங்கள் போடப்பட்டிருக்கிற சங்கீதங்களிலிருந்து புதிய ஏற்பாட்டில் வாசகங்கள் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

| சங்கீதங்கள். | ஒத்தவாக்கியங்கள். | சங்கீதங்கள் எழுதப்பட்ட சந்தர்ப்பம். | எழுதப்பட்ட காலம். கி. மு. |
|---|---|---|---|
| 11[a] | 1 சாமு. 19. 3. | பர்வதங்களுக்கு ஓடிப்போகும்படி தாவீதுக்கு ஆலோசனை சொல்லப்பட்ட சமயத்தில் ........ | 1062 |
| 12 | 1 நாளா. 28. 1. | தாவீதின் ஜீவகால ஒடுக்கத்தில்.. | 1015 |
| 13 | தானி. 7. 28. | பாபிலோன் சிறையிருப்பின் காலத்தில் ..... ........ | 539 |
| 14 | ,, | ,, ,, | |
| 15 | ,, | ,, ,, | |
| 16* | 1 நாளா. 17. 27. அல்லது 1 சாமு. 27. | நாத்தான் தாவீதுக்கு தேவனுடைய வாக்குத்தத்தத்தை அறிவித்ததின் பேரில்.. | 1044a |
| 17 | 1 சாமு. 22. 19. | தோவேக் என்பவன் ஆசாரியரைக் கொலைசெய்ததின் பேரில் .............. | 1060 |
| 18* | 2 சாமு. 22. 51. | தாவீதின் யுத்தங்கள் ஓய்ந்தபின் ........ ....... | 1019 |
| 19 | 1 நாளா. 28. 21. | தாவீதின் ஜீவகால ஒடுக்கத்தில்.. | 1015 |
| 20, 21 | 2 சாமு. 10. 19. | அம்மோனியர் சீரியருடன் யுத்தஞ்செய்த விஷயத்தில். | 1036 |
| 22* | 1 நாளா. 17. 27. | நாத்தான் தாவீதுக்கு தேவனுடைய வாக்குத்தத்தத்தை அறிவித்ததின்பேரில், அல்லது கொடுமையான உபத்திரவத்தில் ............ | 1044 |
| 23, 24* | 1 நாளா. 28. 21. அல்லது 1 நாளா. 16. 43. | தாவீதின் ஜீவகால ஒடுக்கத்தில்.. | 1015 |
| 25, 26, 27 | தானி. 7. 28. | பாபிலோனிய சிறையிருப்பின் காலத்தில் ..... ...... | 539 |
| 28, 29 | 1 நாளா. 28. 21. | தாவீதின் ஜீவகால ஒடுக்கத்தில்.. | 1015 |
| 30 | 1 நாளா. 21. 30. | அர்னானின் களம் பிரதிஷ்டையாக்கப்பட்டதின் பேரில் .............. ... | 1017 |
| 31* | 1 சாமு. 23. 12. | சவுலினால் தாவீது துன்பப்பட்ட சமயத்தில் ........ | 1060 |

a. நம்முடைய ஆண்டவரைக்குறிக்கும் என்று பேதுருவும், அப். 2. 25–31. பவுலும், அப். 13. 35, 36. எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.



| சங்கீதங்கள். | ஒத்தவாக்கியங்கள். | சங்கீதங்கள் எழுதப்பட்ட சந்தர்ப்பம். | எழுதப்பட்ட காலம். கி. மு. |
|---|---|---|---|
| 32, 33 | 2 சாமு. 12. 15. | தாவீதின் பாவம் மன்னிக்கப்பட்டதின்பேரில் ........ | 1034 |
| 34 | 1 சாமு. 21. 15. | தாவீது ஆகீசைவிட்டு ஓடிப்போனதின்பேரில் ..... | 1060 |
| 35 | 1 சாமு. 22. 19. | தோவேக்கினால் தாவீது துன்பப்பட்டதின்பேரில் ..... | 1060 |
| 36, 37 | தானி. 7. 28. | பாபிலோனிய சிறையிருப்பின் காலத்தில் ........ | 539 |
| 38, 39, 40, 41 | 1 நாளா. 28. 21. | தாவீதின் ஜீவகால ஒடுக்கத்தில்.. | 1015 |
| 42 | 2 சாமு. 17. 29. | தாவீது அப்சலோமுக்குத் தப்பி ஓடின சமயத்தில் ... | 1023 |
| | இரண்டாம் புஸ்தகம். | | |
| 43 | 2 சாமு. 17. 19. | தாவீது அப்சலோமுக்குத் தப்பி ஓடின சமயத்தில்... | 1023 |
| 44* | 2 இரா. 19. 7. | ரப்சாக்கே தூஷித்த செய்தியின்பேரில் ...... ...... | 720 |
| 45* | 1 நாளா. 17. 27. | நாத்தான் தாவீதுக்கு தேவனுடைய வாக்குத்தத்தத்தை அறிவித்ததின்பேரில்.. | 1044a |
| 46 | 2 நாளா. 20. 26. | யோசபாத்து ஜெயமடைந்ததின்பேரில் ............ | 896 |
| 47 | 2 நாளா. 7. 10. | கர்த்தருடைய பெட்டி தேவாலயத்தில் வைக்கப்பட்டதின்பேரில் ............ | 1004 |
| 48 | எஸ்றா. 6. 22. | இரண்டாம் தேவாலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டதின்பேரில் ...... ... ... | 515 |
| 49, 50 | தானி. 7. 28. | பாபிலோனிய சிறையிருப்பின் காலத்தில் ... ....... | 539 |
| 51 | 2 சாமு. 12. 15. | தாவீது தன் பாவத்தை அறிக்கையிட்டதின்பேரில் ... | 1034 |
| 52 | 1 சாமு. 22. 19. | தாவீது தோவேக்கினால் துன்பப்பட்டதின்பேரில் ..... | 1060 |

b. எபி. 1. 8, 9. 1 பே. 3. 22. எபே. 1. 22. பிலி. 2. 9–11. நம்முடைய ஆண்டவரைக்குறிக்கும் என்று விவரிக்கப்பட்டிருக்கிறது.

| சங்கீதங்கள். | உத்தரவாக்கியங்கள். | சங்கீதங்கள் எழுதப்பட்ட சந்தர்ப்பம். | எழுதப் பட்ட காலம். கி. மு. |
|---|---|---|---|
| 53 | [illegible]ி. 7. 28. | பாபிலோனிய சிறையிருப்பின் காலத்தில் ............ | 539 |
| 54 | 1 சாமு. 2[illegible]. 23. | சிப் ஊரார் தாவீதுக்குத் துரோகம் பண்ணினதின்பேரில்.. | 1060 |
| 55 | 2 சாமு. 17. 29. | தா[illegible] அப்சலோமுக்குத் தப்பி[illegible]ஓடின சமயத்தில் ... | 1023 |
| 56 | 1 சாமு. [illegible]1. 15. | தாவீ[illegible] பெலிஸ்[illegible]ரோடு காத்[illegible] இருந்தபோது .... | 10[illegible] |
| 57 | 1 சாமு. [illegible]4. 22. | [illegible]வீது கெபியில் சவுலைக் கொலைசெய்ய மனதில்லாமையைக் காட்டினதின்பேரில். | 105[illegible] |
| 58 | ,, | 57-ம் சங்கீதத்தின் தொடர்ச்சி.. | 1058 |
| 59 | 1 சாமு. 19. 17. | சவுல் தாவீதை வளைந்துகொண்டதின்பேரில் ......... | 1061 |
| 60 | 1 இரா. 11. 20. | யோவாப் ஏதோமை ஜெயித்ததின்பேரில் ... ......... | 1040 |
| 61 | 1 நாளா. 28. 21. | தாவீதின் ஜீவகால ஒடுக்கத்தில்.. | 1015 |
| 62 | 2 சாமு. 17. 29. | தாவீது அப்சலோமினால் துன்பப்பட்டதின்பேரில் ..... | 1023 |
| 63 | 1 சாமு. 24. 22. | என்கேதி வனாந்தரத்தில் தாவீது பண்ணின ஜெயம்..... | 1058 |
| 64 | 1 சாமு. 22. 19. | தாவீது சவுலினால் துன்பப்பட்டதின்பேரில் ......... | 1060 |
| 65 | 1 நாளா. 28. 21. | தாவீதின் ஜீவகால ஒடுக்கத்தில்.. | 1015 |
| 66 | எஸ்ரு. 3. 13. | இரண்டாம் தேவாலயம் அஸ்திபாரம் போடப்பட்ட சமயத்தில் ................ | 535 |
| 67 | தானி. 7. 28. | பாபிலோனிய சிறையிருப்பின் காலத்தில் ........... | 593 |
| 68* | 2 சாமு. 6. 11. | கர்த்தருடைய பெட்டி ஓபேத்ஏதோமின் வீட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட சமயத்தில்.... | 1045 |
| 69 | 1 நாளா. 28. 21. | தாவீதின் ஜீவகால ஒடுக்கத்தில்.. | 1015 |
| 70, 71 | 2 சாமு. 17. 29. | அப்சலோம் கலகம்பண்ணின சமயத்தில் ........... | 1023 |
| 72 | 1 நாளா. 29. 19. | சாலொமோன் தன் தகப்பனால் ராஜாவாக்கப்பட்டபோது ............ .... | 1015 |



| சங்கீதங்கள். | உத்தரவாக்கியங்கள். | சங்கீதங்கள் எழுதப்பட்ட சந்தர்ப்பம். | எழுதப் பட்ட காலம். கி. மு. |
|---|---|---|---|
| | மூன்றும் புஸ்தகம். | | |
| 73 | 2 இரா. 19. 19. | சனகெரிப்பின் சே[illegible] சங்காரிக்கப்பட்ட[illegible]ன்பேரில் ..... | 710 |
| 74 | எரே. 39. 10. | எரு[illegible]மும் தேவாலயமும் [illegible]ழிக்கப்பட்டதின்பேரில். | 588 |
| 76 | 2 இரா. [illegible]. 35. | ச[illegible]கெரிப்பின் சேனை சங்காரிக்[illegible]ப்பட்டதின்[illegible]பேரில் ..... | 710 |
| 77* | தானி. 7. 28. | பாபி[illegible]னிய [illegible]றையிருப்பின் கா[illegible]தில் ........... | 539 |
| 78 | 1 நாளா. 28. 21. அல்லது 2 நாளா. 19. 56. | தாவீதின் ஜீவகால ஒடுக்கத்தில். | 1015 |
| 79 | எரே. 39. 10. | எருசலேமும் தேவாலயமும் அழிக்கப்பட்டதின்பேரில். | 588 |
| 80 | தானி. 7. 28. | பாபிலோனிய சிறையிருப்பின் காலத்தில் ........... | 539 |
| 81* | எஸ்று. 7. 22. | இரண்டாம் தேவாலயம் பிரதிஷ்டையாக்கப்பட்டபோது ...................... | 515 |
| 82 | 2 நாளா. 19. 7. | யோசபாத் ராஜா நியாயாதிபதிகளை ஏற்படுத்தினதின்பேரில் ................. | 897 |
| 83 | எரே. 39. 10. அல்லது 2 நாளா. 20. | அசீரியரால் உண்டான பாழாக்குதலின்பேரில் ....... | 588 |
| 84 | எஸ்று. 3. 13. | இரண்டாம்தேவாலயத்துக்கு அஸ்திபாரம் போடப்பட்டபோது ............... | 535 |
| 85 | எஸ்று. 1. 4. | கோரேஸ் ராஜா கொடுத்த கட்டளையின்பேரில் ...... | 536 |
| 86 | 1 நாளா. 28. 21. | தாவீதின் ஜீவகால ஒடுக்கத்தில்.. | 1015 |
| 87 | எஸ்று. 3. 7. | பாபிலோன் சிறையிருப்பிலிருந்து யூதர் திரும்பினதின்பேரில்........... ...... | 536 |
| 88 | யாத். 2. 25. | எகிப்தில் இஸ்ரவேலர் உபத்திரவப்பட்ட காலத்தில்... | 1531 |

| சங்கீதங்கள். | ஒத்தவாக்கியங்கள். | சங்கீதங்கள் எழுதப்பட்ட சந்தர்ப்பம். | எழுதப்பட்ட காலம். கி. மு. |
|---|---|---|---|
| 89 | தானி. 7. 28. | பாபிலோனிய சிறையிருப்பின் காலத்தில் ............ | 539 |
| | நான்காம் புஸ்தகம். | | |
| 90 | எண். 14. 45. | மனுஷ ஜீவனின் சுருக்கத்தின் பேரில் .... .......... | 1489 |
| 91 | 1 நாளா. 28. 10. | தாவீது சாலொமோனுக்குப் பட்டமளித்த சொன்ன பின்பு ........... .... | 1015 |
| 92, 93* | தானி. 7. 28. | பாபிலோனிய சிறையிருப்பின் காலத்தில் .......... | 539 |
| 94 | எரே. 39. 10. | எருசலேமும் தேவாலயமும் அழிக்கப்பட்டதின்பேரில். | 588 |
| 95* | 1 நாளா. 28. 21. | தாவீதின் ஜீவகால ஒடுக்கத்தில். | 1015 |
| 96 | 1 நாளா. 16. 43. | ஓபேத் ஏதோம் வீட்டிலிருந்து கர்த்தருடைய பெட்டி எடுத்துக்கொண்டுபோகப் பட்ட சமயத்தில் ...... | 1051 |
| 97, 98, 99, 100 | 2 நாளா. 7. 10. | கர்த்தருடைய பெட்டி தேவாலயத்தில் கொண்டுவரப்பட்டபொழுது ... ....... | 1004 |
| 101 | 1 நாளா. 28. 21. | தாவீதின் ஜீவகால ஒடுக்கத்தில் ..... ...... ..... | 1015 |
| 102* | தானி. 9. 27. | சிறையிருப்பு முடிய ஏதுவாயிருந்த சமயத்தில் ...... | 538 |
| 103 | 2 சாமு. 12. 15. | தாவீதின் பாவம் மன்னிக்கப்பட்டதின்பேரில் ... ... | 1034 |
| 104* | 1 நாளா. 28. 21. | தாவீதின் ஜீவகால ஒடுக்கத்தில்.. | 1015 |
| 105, 106 | 1 நாளா. 16. 43. | ஓபேத் ஏதோம் வீட்டிலிருந்து கர்த்தருடைய பெட்டி எடுத்துக்கொண்டுபோகப்பட்டபோது ... .......... | 1051 |
| | ஐந்தாம் புஸ்தகம். | | |
| 107 | எஸ்ரு. 3. 7. | சிறையிருப்பிலிருந்து யூதர் திரும்பினதின்பேரில் ...... | 536 |
| 108 | 1 இரா. 10. 20. | யோவாப் ஏதோமைப் பிடித்ததின்பேரில் ............ | 1040 |



| சங்கீதங்கள். | ஒத்தவாக்கியங்கள். | சங்கீதங்கள் எழுதப்பட்ட சந்தர்ப்பம். | எழுதப்பட்ட காலம். கி. மு. |
|---|---|---|---|
| 109 | 1 சாமு. 22. 19. | தாவீது தோவேக்கினால் அநியாயப்படுத்தப்பட்டதின்பேரில் ...... ........ ...... | 1060 |
| 110* | 1 நாளா. 17. 27. | நாத்தான் தாவீதுக்கு தேவனுடைய வாக்குத்தத்தத்தை அறிவித்ததின்பேரில் ..... | 1044*a* |
| 111, 112* 113, 114 | 1 நாளா. 28. 21. | சிறையிருப்பிலிருந்து திரும்பினதின்பேரில் ... ...... | 536 |
| 115 | 2 நாளா. 20. 26. | யோசபாத் ஜெயமடைந்ததின் பேரில் ..... ....... ...... | 896 |
| 116, 117 | எஸ்ரு. 3. 7. | சிறையிருப்பிலிருந்து திரும்பினதின்பேரில் ..... .... | 536 |
| 118* | 1 நாளா. 17. 27. | நாத்தான் தாவீதுக்குத் தேவனுடைய வாக்குத்தத்தத்தை அறிவித்ததின்பேரில்.. | 1044*b* |
| 119 | நெகே. 13. 3. | எஸ்ருவினால் செய்யப்பட்ட ஜெபத்தியானம் ........ | 444 |
| 120, 121, 122 | 1 நாளா. 28. 21. | தாவீதின் ஜீவகால ஒடுக்கத்தில்.. | 1015 |
| 123 | தானி. 7. 28. | பாபிலோனிய சிறையிருப்பின் காலத்தில் .......... | 539 |
| 124 | 1 நாளா. 28. 21. | தாவீதின் ஜீவகால ஒடுக்கத்தில்.. | 1015 |
| 125 | எஸ்ரு. 3. 7. | சிறையிருப்பிலிருந்து திரும்பினதின்பேரில் ......... | 536 |
| 126 | எஸ்ரு. 1. 4. | கோரேஸ் ராஜா கொடுத்த கட்டளையின்பேரில் ...... | 536 |
| 127, 128 | எஸ்ரு. 3. 7. | சிறையிருப்பிலிருந்து திரும்பினதின்பேரில் ......... | 536 |
| 129 | எஸ்ரு. 4. 24. | சமாரியர் செய்த விரோதத்தின்பேரில் ........... | 535 |

*a.* நம்முடைய ஆண்டவர் தமது தேவத்தன்மையை ரூபிப்பதற்காக இந்தச் சங்கீதத்திலிருந்து வாக்கியத்தை எடுத்துக்காட்டினார். மத். 22. 44. பேதுரு, அப். 2. 32–36லும், பவுல், 1 கொரி. 15. 25–28; எபி. 7. 1–28; 8. 1லும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

*b.* நம்முடைய ஆண்டவர் இதிலிருந்து வாக்கியம் எடுத்து உரைத்திருக்கிறார். மத். 22. 42. பேதுரு, அப். 4. 11. 1 பே. 2. 4. 5லும், பவுல், ரோமர். 9. 32; எபே. 2. 20, 21லும் வாக்கியங்களை எடுத்து விஸ்தரித்திருக்கிறார்கள்.

| சங்கீதங்கள். | ஒத்தவாக்கியங்கள். | சங்கீதங்கள் எழுதப்பட்ட சந்தர்ப்பம். | எழுதப்பட்ட காலம். கி. மு. |
|---|---|---|---|
| 130 | தானி. 7. 28. | பாபிலோனிய சிறையிருப்பின் காலத்தில் .... ... | 539 |
| 131 | 1 நாளா. 28. 21. | தாவீதின் ஜீவகால ஒடுக்கத்தில்.. | 1015 |
| 132 | 1 நாளா. 15. 14. | கர்த்தருடைய பெட்டி இரண்டாந்தரம் கொண்டுவரப்பட்டதின்பேரில் ....... | 1051 |
| 133 | 1 நாளா. 28. 21. | தாவீதின் ஜீவகால ஒடுக்கத்தில்.. | 1015 |
| 134 | எஸ்றா. 3. 7. | சிறையிருப்பிலிருந்து திரும்பினதின்பேரில் ........ | 536 |
| 135, 136 | 2 நாளா. 7. 10. | கர்த்தருடைய பெட்டி தேவாலயத்தில் கொண்டுவரப்பட்டபோது ........... | 1004 |
| 137 | தானி. 7. 28. | பாபிலோனிய சிறையிருப்பின் காலத்தில் ........... | 539 |
| 138 | எஸ்றா. 6. 13. | தேவாலயம் இரண்டாந்தரம் கட்டப்பட்டபோது ..... | 519 |
| 139 | 1 நாளா. 13. 4. | தாவீது இஸ்ரவேலர் எல்லாரிலும் ராஜாவாக்கப்பட்டபோது ........... | 1048 |
| 140 | 1 சாமு. 22. 19. | தோவேக்கினால் தாவீது துன்பப்பட்ட சமயத்தில் .... | 1060 |
| 141 | 1 சாமு. 27. 1. | தாவீது யூதேயாவிலிருந்து துரத்துண்டபோது செய்த ஜெபம் ...... ... ..... | 1055 |
| 142 | 1 சாமு. 22. 1. | அதுல்லாம் கெபியில் தாவீது பண்ணின ஜெபம்....... | 1060 |
| 143 | 2 சாமு. 17. 29. | அப்சலோமோடு யுத்தம்பண்ணின சமயத்தில் ........ | 1053 |
| 144 | 2 சாமு. 17. 29. | அப்சலோமை ஜெயித்ததின்பேரில் ................ | 1053 |
| 145 | 1 நாளா. 28. 10. | தாவீது தன் ஜீவகாலத்தில் நடந்த யாவையும் தன் முதிர்வயதில் நினைவுகூர்ந்து பாடின சங்கீதம் ....... | 1015 |
| 146–150 | எஸ்றா. 6. 22. | இரண்டாம் தேவாலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டதின்பேரில் ............ | 515 |



## சங்கீதங்கள் எழுதப்பட்ட காலக்கிரம அட்டவணை.

கி. மு.

1531. சங். 88. எகிப்தில் ஏமானால்.

1489. சங். 90. வனாந்தரத்தில் மோசேயினால்.

1063–1015. தாவீதின் சரித்திரமும் அநுபோகமும் அடங்கிய சங்கீதங்கள். 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 11, 12, 16, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 28, 29, 30, 31, 32, 33, 34, 35, 38, 39, 40, 41, 42, 43, 45, 51, 52, 54, 55, 56, 57, 58, 59, 60, 61, 62, 63, 64, 65, 68, 69, 70, 71, 72, 78, 86, 91, 95, 96, 101, 103, 104, 105, 106, 108, 109, 110, 118, 120, 121, 122, 124, 131, 132, 133, 139, 140, 141, 142, 143, 144, 145.

1004. கர்த்தருடைய பெட்டி தேவாலயத்தில் கொண்டுபோய் வைக்கப்பட்டபோது பாடப்பட்ட சங்கீதங்கள். 49, 97, 98, 99, 100, 135, 136.

857–710. யோசபாத்தின் காலமுதல் எசேக்கியாவின் காலம்வரையும். 44, 46, 73, 75, 76, 82, 115.

588. அசீரியர் படையெடுத்து வந்ததின்பேரில். 74, 79, 83, 94.

539. சிறையிருப்பின் காலத்தில். 10, 13, 14, 15, 25, 26, 27, 36, 37, 49, 50, 53, 67, 77, 80, 88, 89, 92, 93, 123, 130, 137.

538–536. சிறையிருப்பின் கால ஒடுக்கத்திலும், சிறையிருப்பிலிருந்து திரும்பினதின்பேரிலும். 85, 87, 102, 107, 111—114, 116, 117, 125—128, 134.

535. தேவாலயத்தைத் திரும்பவும் கட்டினதின்பேரிலும், அதைப் பிரதிஷ்டையாக்கினதின்பேரிலும். 48, 66, 81, 84, 129, 138, 146, 147—150.

444. எஸ்றா கடைசியாக முடித்து, முதலாம், நூற்றுப்பத்தொன்பதாம் சங்கீதங்களைச் சேர்த்தது.

சங்கீதங்களில் அநேகம் எழுதப்பட்ட காலமும் சமயமும் அபிப்பிராயத்துக்கு உரியதாய் இருக்கிறது.

# H.

## பழைய ஏற்பாட்டு ஆகமங்கள் எழுதப்பட்ட காலக்கிரமம்.

(157-ம் பக்கம் பார்க்க.)

| | |
|---|---|
| ஆதியாகமம். | ஆமோஸ். கி. மு. 810–785. |
| யாத்திராகமம். | ஓசியா. கி. மு. 810–725. |
| லேவியராகமம். | ஏசாயா. கி. மு. 765–698. |
| எண்ணாகமம். | மீகா. கி. மு. 758–699. |
| உபாகமம். | நாகூம். கி. மு. 720–698. |
| யோபின் ஆகமம். | செப்பனியா.. கி. மு. 640–609. |
| யோசுவா. | எரேமியா. கி. மு. 628–585. |
| நியாயாதிபதிகள். | புலம்பல். |
| ரூத். | ஆபகூக். கி. மு. 612–598. |
| 1 சாமுவேல். | தானியேல். கி. மு. 606–534. |
| 2 சாமுவேல். | எசேக்கியேல். கி. மு. 595–574. |
| சங்கீதங்களில் (தாவீதால் எழுதப்பட்டவைகள்.) | ஒபதியா. கி. மு. 588–583. |
| சாலொமோனின் உன்னதப்பாட்டு. } கி.மு.1001. | 2 இராஜாக்கள். |
| நீதிமொழி. கி. மு. 1000. | 1 நாளாகமம். |
| பிரசங்கியின் ஆகமம். கி. மு. 997. | 2 நாளாகமம். |
| 1 இராஜாக்கள். | எஸ்றா. கி. மு. 536–457. |
| யோனாவின் தீர்க்கதரிசனம். } கி.மு.840-784. | ஆகாய். கி. மு. 520–518. |
| யோவேல். கி. மு. 810–795. | சகரியா. கி. மு. 520–510. |
| | எஸ்தர். கி. மு. 462–452. |
| | நெகேமியா. கி. மு. 445–428. |
| | மல்கியா. கி. மு. 420–397. |

மேற்சொல்லிய காலக்கணிதம் ஏறக்குறைய சரியாய் இருக்கும். காலம் காட்டப்படாத ஆகமங்களைக்குறித்து அந்தந்தப் புஸ்தகங்களைப்பற்றிச் சொல்லிய இடத்தில் பார்த்துக்கொள்ளவேண்டியது. தீர்க்கதரிசிகளை மூவகையாய்ப் பிரிக்கலாம்; 1. சிறையிருப்புக்கு முந்தினவர்கள்; யோனா, யோவேல், ஆமோஸ், ஓசியா, ஏசாயா, மீகா, நாகூம், செப்பனியா. 2. சிறையிருப்பின் காலத்தில் இருந்தவர்கள்; எரேமியா, ஆபகூக், தானியேல், எசேக்கியேல், ஒபதியா. 3. சிறையிருப்புக்குப் பிந்தினவர்கள்; ஆகாய், சகரியா, மல்கியா.



# I.

## புதிய ஏற்பாட்டில் அடங்கிய சங்கதிகளைக் காட்டிய காலக்கணிதச் சுருக்கம்.

(185-ம் பக்கம் பார்க்க.)

| வருஷம். கி. மு. | வைதிக சரித்திரம். | பலஸ்தீனாவில் நடந்த சம்பவங்கள். | அந்தந்தக் காலத்தில் நடந்த புறச்சம்பவங்கள். | வருஷம். கி. பி. |
|---|---|---|---|---|
| 4 | கிறிஸ்துவின் பிறப்பு ..... | ................ ..................... | ரோமாபுரி அகுஸ்து ராயன். | |
| 5 | அவர் எகிப்தைவிட்டுத் திரும்பினது ........ | ஏரோது மரித்தது. | | |
| | | அர்கெலாயு, யூதேயா, சமாரியா, இதுமேயா நாடுகளை ஆண்டது. | | |
| | | ஏரோது அந்திப்பா, கலிலேயா, பெரியா நாடுகளை ஆண்டது. | | |
| | | ஏரோது பிலிப்பு, அராணிதஸ், திராகொனித்தி, பேனியாஸ், பத்தேனியா நாடுகளை ஆண்டது. | | |
| | | அர்கெலாயு தள்ளப்பட்டு யூதேயா ரோமராஜ்யத்தின் நாடானது ............... | ........................... | 6 |
| கி. பி. 8 | அவர் 12 வயதாயிருக்கையில் தேவாலயத்துக்கு வந்தது .............. | சீரியாவின் தேசாதிபதியாகிய கிரேனே (குரினியஸ்) என்பவன் குடிமதிப்பை முடித்தது. | | |

| வருஷம். கி. பி. | வைதிக சரித்திரம். | பலஸ்தீனுவில் நடந்த சம்பவங்கள். | அந்தக் காலத்தில் நடந்த புறச்சம்பவங்கள். | வருஷம். கி. பி. |
|---|---|---|---|---|
| | நமது ஆண்டவருடைய பிந்தியகால வர்த்தமானங்களைக் குறித்து சரித்திரக் காலக்கணித அட்டவணையைப் பார்க்க ............... | 6<br>கோபபோனியுஸ் என்பவன் யூதேயாவுக்குத் தேசாதிபதியானது. | | |
| | | மாற்கு அம்பிவியு தேசாதிபதியானது. ... | ............................ | 9 |
| | | | திபேரியு, அகுஸ்துவுடன் சேர்ந்து ஆண்டது ... .... | 12 |
| | | அன்னியுருபு தேசாதிபதியானது. (ஏறக்குறைய) ..................... | ......................... | 13 |
| | | வெலிரியு இரேத்தே தேசாதிபதியானது. | .............................. | 14 |
| | | | அகுஸ்து மரிக்க திபேரியுராயனானது ..... ... ...... | 14 |
| | | பொந்தியுபிலாத்து தேசாதிபதியானது... | .............................. | 25 |
| 31 | அவர் மரித்து உயிர்த்து பரமேறினது ............ பரிசுத்த ஆவியானவர் பெந்தெகொஸ்தே பண்டிகையில் இறங்கினது ...... | | | |
| 36 | ஸ்தேவான் இரத்தசாட்சியாய் மரித்தது ...... | மார்செல்லியு தேசாதிபதியானது ...... | ............................ | 36 |
| | | பிலாத்து சீரியாவின் அனைவிருல் ரோமாபுரிக்கு அனுப்பப்பட்டது ...... | ............................ | 36 |
| | | மாரிலிபு வழிவொருபங்குக்கு தேசாதிபதியாக ஏற்படுத்தப்பட்டது ...... | கலிகுலா ராயனானது ........ | 37 |
| 39 | சவுல் தமஸ்குவிலிருந்து தப்பினது. அவர் எருசலேமுக்கு முதல்தடவையாக வந்தது. கொர்நேலியு சபையில் சேர்க்கப்பட்டது. | | | |
| | | 1 ஏரோது அகிரிப்பா, யூதேயா, சமாரியாவுக்கு ராஜாவானது ............ | ............................ | 40 |
| | | | அவுல் பிலாதியு இலவுதியு ராயன் பிரித்தானியாவுக்கு விரோதமாய்ப் படையெடுத்தது ............... | 41 |
| | | ஏரோது அகிரிப்பா செசரியாவில் மரித்தது ............................. | ............................ | 44 |
| | | | பிரித்தானியாவில் யுத்தம். 43–51. | |
| 44 | யாக்கோபு சிரச்சேதம்பண்ணப்பட்டது. பேதுரு விடுவிக்கப்பட்டது. பவுல் இரண்டாந்தரம் எருசலேமுக்கு அந்தியோகியாவிலிருந்து தர்மப்பணம் கொண்டுவந்தது. | | | |
| 45 | பவுல் அப்போஸ்தலனுகப் பிரித்தெடுக்கப்பட்டது. | கஸ்பியுபேதஸ் என்பவன் தேசாதிபதியானது. | | |

| வருஷம் கி. பி. | வைதீக சரித்திரம். | பலஸ்தீனுவில் நடந்த சம்பவங்கள். | அந்தந்தக் காலத்தில் நடந்த புறச்சம்பவங்கள். | வருஷம் கி. பி. |
|---|---|---|---|---|
| | பவுலின் முதலாம் பிரயாணம் (ஒருவருஷம்). | | | |
| | | திபேரியு அலெக்சந்தர் தேசாதிபதியானது. | .......... .... . ......... | 46 |
| | | வென்திடியு குமானு தேசாதிபதியானது... | .............................. | 47 |
| 50 | பவுல் மூன்றுவதாக எருசலேமுக்கு விருத்தசேதனத்தைப் பற்றிய விவாதத்தைத் தீர்க்கும்படி போனது. | | | |
| 51 | பவுலின் இரண்டாம் பிரயாணம் 3 வருஷம். அப்போது நாலாவதாக எருசலேமுக்குப் போனான் ......... | அந்தோனி பேலிக்ஸ் தேசாதிபதியானது. | | |
| | | இராசொனித்தி நாடு 2 அகிரிப்பாவுக்குக் கொடுக்கப்பட்டது ........ | கிலவுதியு ராயன் யூதரை ரோமாபுரியிலிருந்து துரத்தினது ............ | 52 |
| 53 | பவுல் ஐரோப்பாவுக்குப் போனது. கொரிந்துவிலிருந்து தெசலோனிக்கேயருக்கு இரண்டு நிருபங்களை எழுதினது. | | | |



| வருஷம் கி. பி. | வைதீக சரித்திரம். | பலஸ்தீனுவில் நடந்த சம்பவங்கள். | அந்தந்தக் காலத்தில் நடந்த புறச்சம்பவங்கள். | வருஷம் கி. பி. |
|---|---|---|---|---|
| 54 | பவுலின் மூன்றும் பிரயாணம் (நாலுவருஷம்). எபேசுவிலிருந்து கலாத்தியர் நிருபத்தை (!) எழுதினது. | | நேரோ ராயனானது ......... | 54 |
| | | ஒரு எகிப்தியனால் உண்டான கலகம். அப். 21. 38 .................... | .............................. | 55 |
| 57 | பவுல் எபேசுவிலிருந்து கொரிந்தியருக்கு முதல் நிருபத்தையும், மக்கெதோனியாவிலிருந்து இரண்டாம் நிருபத்தையும் எழுதினது. | | | |
| 58 | பவுல் கொரிந்துவிலிருந்து ரோமர் நிருபத்தை எழுதினது. அவன் ஐந்தாவதாய் எருசலேமுக்குப் போய் அங்கே பிடிபட்டு, பேலிக்ஸ் முன்பாகக் கொண்டுவரப்பட்டு, செசரியாவில் சிறைச்சாலையிலே போடப்பட்டது. | | | |
| 60 | பெஸ்துவுக்கு முன்பாகப் பவுல் விசாரணைக்கு நிறுத்தப்பட்டதும், ரோமாபுரிக்கு அனுப்பப்பட்டதும். | பொர்க்கியு பெஸ்து தேசாதிபதியானது ... | .............................. | 60 |

| வருஷம். கி. பி. | வைதிக சரித்திரம். | பலஸ்தீனுவில் நடந்த சம்பவங்கள். | அந்தந்தக் காலத்தில் நடந்த புறச்சம்பவங்கள். | வருஷம் கி. பி. |
|---|---|---|---|---|
| 61 | பவுல் ரோமாபுரிக்குக் கைதியாக வந்துசேர்ந்தது. யாக்கோபு தன் நிருபத்தை எழுதினது. (?) | அலங்காரத்தைப்பற்றி எருசலேமிலிருந்து ரோமாபுரிக்குத் தானாபதிகள் அனுப்பப்பட்டது............... | பிரித்தானியாவில் போவடிஷியாளுடன் யுத்தம் .... | 61 |
| 62 | பவுல், எபேசியர், கொலோசெயர், பிலேமோன், பிலிப்பியர், எபிரேயர் (?) நிருபங்களை ரோமாபுரியிலிருந்து எழுதினது. | | | |
| 63 | பவுல் விடுவிக்கப்பட்டது. (?) | அல்பைனு தேசாதிபதியானது .... ..... | ........................... | 63 |
| 64 | யூதா தன் நிருபத்தை எழுதினது. (?)...... | கெசியுபுளோரு தேசாதிபதியானது ... | ரோமாபுரி தீக்கொளுத்தப்பட்டது. கிறிஸ்தவர்களின் முதல் துன்பம் ... .... | 64 |
| | | ரோமருக்கும் யூதருக்கும் உண்டான பெரிய யுத்தத்துக்குத் துவக்கம் ... | ........................... | 66 |
| 67 | பவுல், தீமோத்தேயு முதல் நிருபத்தையும் தீத்து நிருபத்தையும் (?) எழுதினது. | பலஸ்தீனுவுக்கு வெஸ்பாஷியான் சேனுபதி வந்தது ... ............ | ........................... | 67 |
| 68 | பவுல் தீமோத்தேயு இரண்டாம் நிருபத்தை எழுதினது. (?) அவன் இரத்தச் சாட்சியாய் மரித்தது (?) | ............................ | கல்பா ராயனானது ......... | 68 |
| | | | ஓதோ, வைத்தெல்லியு என்பவர்கள் இராயர்களானது. | 69 |
| | | | வெஸ்பாஷியான் இராயனானது. | 69 |
| | | தீத்தூஸ் எருசலேமை அழித்தது | ........................... | 70 |
| | | | தீத்தூஸ் ராயனானது ......... | 79 |
| | | | தொமிஷன் இராயனானது .... | 81 |
| | | | கிறிஸ்தவர்களுக்குண்டான இரண்டாம் துன்பம் ... | 95 |
| 96 | யோவான் தன் நிருபங்களை எழுதினது. (?).... | | | |
| 97 | தன் சுவிசேஷத்தை எழுதினது. (?)...... | ............................ | நெர்வா ராயனானது ......... | 96 |
| 98 | வெளிப்படுத்தலை எழுதினது. (?)........ | | | |
| | | | திராயான் ராயனானது ....... | 98 |

# J.

## நான்கு சுவிசேஷங்களிலும் அடங்கிய சங்கதிகள் நடந்த காலக்கிரம அட்டவணை.

இது ராபின்சன் வேதசாஸ்திரியார் எழுதியதிலிருந்து எடுக்கப்பட்டது.

| பிரிவு. | பொருளடக்கம். | மத்தேயு. அதி. | வா. | மாற்கு. அதி. | வா. | லூக்கா. அதி. | வா. | யோவான். அதி. | வா. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **க-ம் பங்கு.** கிறிஸ்துவின் பிறப்பு குழந்தைப்பருவத்தைப்பற்றிய சங்கதிகள். பதின்மூன்றரை வருஷகாலம். | | | | | | | | |
| 1 | கிறிஸ்துவின் வம்ச அட்டவணை. | 1. | 1–17. | | | 3. | 23–38. | | |
| 2 | யோவான்ஸ்நானன் பிறப்பை தேவதூதன் சகரியாவுக்குத் தெரிவித்தல். (எருசலேம்.) | | | | | 1. | 1–25. | | |
| 3 | கிறிஸ்துவின் பிறப்பை தேவதூதன் மரியாளுக்குத் தெரிவித்தல். (நாசரேத்து.) | | | | | 1. | 26–38. | | |
| 4 | மரியாள், எலிசபெத்தைச் சந்தித்தல்; ஸ்தோத்திரகீர்த்தனை பாடல். | | | | | 1. | 39–56. | | |
| 5 | யோவான்ஸ்நானன் ஜனனம். | | | | | 1. | 57–80. | | |
| 6 | தேவதூதன் யோசேப்பைச் சந்தித்தல். (நாசரேத்து.) | 1. | [illegible] | | | | | | |
| 7 | கிறிஸ்துவின் அற்புத ஜனனம். (பெத்லகேம்.) | | | | | 2. | 1–7. | | |
| 8 | தேவதூதர் அவர் பிறப்பை மேய்ப்பருக்கு அறிவித்தல். (பெத்லகேம் அருகில்.) | | | | | 2. | 8–[illegible] | | |
| 9 | கிறிஸ்துவின் விருத்தசேதனம்; தேவாலயத்தில் சமர்ப்பிக்கப்படல்; சிமியோன் அன்னாள் என்பவர்களின் தீர்க்கதரிசனம். (பெத்லகேம், எருசலேம்.) | | | | | 2. | 21–38. | | |
| 10 | சாஸ்திரிகள், கிறிஸ்துவை தரிசித்தல். (எருசலேம், பெத்லகேம்.) | 2. | 1–12. | | | | | | |
| 11 | கிறிஸ்து எகிப்துக்குச் செல்லுதல்; ஏரோதுவின் கொடுமை. கிறிஸ்து நாசரேத்துக்குத் திரும்புதல். | 2. | 13–23. | | | 2. | 39, 40. | | |
| 12 | பன்னிரண்டாம் பிராயத்தில் கிறிஸ்து பஸ்காபண்டிகை ஆசரிக்கும்படிச் செல்லுதல். (எருசலேம்.) | | | | | 2. | 41, 52. | | |
| | **உ-ம் பங்கு.** கிறிஸ்துவின் போதகத்தொழில் ஆரம்பம். *ஒருவருஷகாலம்; இது, அவர் முப்பதாம்வயதில் ஆரம்பித்தது. | | | | | | | | |
| 13 | யோவான்ஸ்நானன் பிரசங்கம். (வனாந்தரம் யோர்தான்.) | 3. | 1–12. | 1. | 1–8. | 3. | 1–18. | | |
| 14 | கிறிஸ்துவின் ஞானஸ்நானம். (யோர்தான்நதி.) | 3. | 13–17. | 1. | 9–11. | 3. | 21,22. | | |
| 15 | அவர் சோதிக்கப்படல். (யூதேயா வனாந்தரம்.) | 4. | 1–11. | 1. | 12, 13. | 4. | 1–13. | | |
| 16 | யோவான் கிறிஸ்துவைப்பற்றிச் சாக்ஷிபகருதல். (பெத்தாபரா.) | | | | | | | 1. | 15–34. |
| 17 | யோவானின் சீஷரில் இருவர், இயேசுவின் சீஷராகுதல்; அந்திரேயா, பேதுருவை அவரிடம் அழைத்துவருதல். | | | | | | | 1. | 35–42. |
| 18 | கிறிஸ்து கலிலேயாவுக்குத் திரும்புதல், அவருக்குச் சீஷரான பிலிப்பு நாத்தான்வேலை அழைத்துவருதல். | | | | | | | 1. | 43–51. |
| 19 | கானாவூர் கலியாணத்தில் அவர் செய்த முதல் அற்புதம், கப்பர்நகூமுக்குச் செல்லுதல். | | | | | | | 2. | 1–12. |

*யோவான்ஸ்நானன் பிரசங்கித்துவந்த ஆறுமாதங்களையும் அதுமுதல் முதலாம் பஸ்காபண்டிகைவரையும் சென்ற ஆறுமாதங்களையும் கூட்டினால் ஒருவருஷமாகும்.

## ௩-ம் பங்கு.

கிறிஸ்து தமது போதகத்தொழிலைத் தொடங்கின முதலாம் பஸ்காபண்டிகைமுதல் இரண்டாம்பண்டிகை வரை.

ஒருவருஷகாலம்.

| பிரிவு. | பொருளடக்கம். | மத்தேயு. அதி. | வா. | மாற்கு. அதி. | வா. | லூக்கா. அதி. | வா. | யோவான். அதி. | வா. |
| --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- |
| 20 | கிறிஸ்து பஸ்காபண்டிகைக்கு எருசலேமுக்குச் செல்லுதல், தேவாலயத்தில் விற்பனைசெய்தவர்களைப் புறம்பாக்குதல். | | | | | | | 2. | 13–25. |
| 21 | நிக்கொதேமு கிறிஸ்துவை இரவில் தரிசித்தல். (எருசலேம்.) | | | | | | | 3. | 1–21. |
| 22 | கிறிஸ்து எருசலேமைவிட்டு யூதேயாவில் தங்கி ஜனங்களைத் தமக்கு சிஷர்களாக்கினது, யோவான் திரும்ப சாக்ஷிபகருதல். (ஏனோன்.) | | | | | | | 3. | 22–36. |
| 23 | யோவான் சிறையில் அடைபட்டபின் கிறிஸ்து யூதேயாவைவிட்டு கலிலேயாவுக்குத் திரும்புதல். | 4. | 12. | 1. | 14. | 4. | 14. | 4. | 1–3. |
| 24 | கிறிஸ்து சமாரியா மார்க்கமாய்ச் செல்லுகையில் யாக்கோபின் கிணற்றண்டை ஒரு ஸ்திரீயோடு சம்பாஷித்தல்; சமாரியாவில் அநேகர் அவரை விசுவாசித்தல் | | | | | | | 4. | 4–42. |
| 25 | கிறிஸ்து கலிலேயாவில் போதகத்தொழிலை ஆரம்பித்தல். | 4. | 17. | 1. | 14, 15. | 4. | 15. | 4. | 43–45. |
| 26 | அவர் இரண்டாம்விசை கானாவூருக்குப் போய்க் கப்பர்நகூமிலுள்ள ராஜாவின் மனுஷனுடைய குமாரனைச் சுகமாக்குதல். | | | | | | | 4. | 46–54. |
| 27 | நாசரேத்திலுள்ள ஜெபஆலயத்தில் பிரசங்கித்தல்; ஜனங்களால் புறக்கணிக்கப்படல்; *கப்பர்நகூமில் தங்கிப் பிரசங்கஞ்செய்தல். | 4. | 13–16. | 1. | 21, 22. | 4. | 16–32. | | |
| 28 | அற்புதமாய் மீன்பிடித்தல்; பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, யோவான் என்பவர்களைக் கிறிஸ்துநாதர் சிஷராக அழைத்தல். (கப்பர்நகூமுக்கடுத்த கலிலேயாக் கடல்.) | 4. | 18–22. | 1. | 16–20. | 5. | 1–11. | | |
| 29 | கிறிஸ்து ஜெபஆலயத்தில் பிசாசுபிடித்தவனைச் சுகமாக்குதல். (கப்பர்நகூம்.) | | | 1. | 23–28. | 4. | 33–37. | | |
| 30 | பேதுருவின் மாமிக்கும் இன்னும் அநேகருக்கும் சுகமளித்தல். | 8. | 14–17. | 1. | 29–34. | 4. | 38–41. | | |
| 31 | கலிலேயா நாடெங்கும் கிறிஸ்து தமது சிஷருடன் முதல் விசையாகச் செல்லுதல். | 4. | 23–25. | 1. | 35–39. | 4. | 42–44. | | |
| 32 | ஒரு குஷ்டரோகியை குணமாக்குதல்; தம்மிடத்தில் வந்த திரளான ஜனங்களுக்கு விலகி வனாந்தரமான ஓரிடத்திற்குச் செல்லுதல். | 8. | 2, 3. | 1. | 40–45. | 5. | 12–16. | | |
| 33 | கப்பர்நகூமுக்குத் திரும்புதல், திமிர்வாதக்காரனுக்குச் சுகமளித்தல். | 9. | 2–8. | 2. | 1–12. | 5. | 17–26. | | |
| 34 | மத்தேயுவைச் சிஷனாக அழைத்தல். | 9. | 9. | 2. | 13, 14. | 5. | 27, 28. | | |

* லூக். 4. 16–31. இயேசுநாதர் நாசரேத்துக்குப்போன சங்கதியும், மத். 13. 54–58. மாற். 6. 1–6. அவர் நாசரேத்தூருக்குப் போனதாகச் சொல்லிய சங்கதியும் வெவ்வேறான காலங்களில் நடந்தது என்ற அபிப்பிராயத்தினால் இவ்வொழுங்கைக் காட்டியிருக்கிறது. ஆனால் மேற்படி மூன்று சுவிசேஷங்களில் சொல்லியிருக்கிற சங்கதி ஒரேகாலத்தில் நடந்ததாகவும் இயேசுநாதர் கப்பர்நகூமிலிருந்து அநேக அற்புதங்களைச் செய்தபின்பு இச்சங்கதி நடந்ததாக மத்தேயும் மாற்கும் சொல்லியிருக்கிறதாகவும் அபிப்பிராயப்படுகிறவர்களும் உண்டு. லூக். 4. 23.

| பிரிவு. | பொருளடக்கம். | மத்தேயு. அதி. | வா. | மாற்கு. அதி. | வா. | லூக்கா. அதி. | வா. | யோவான். அதி. | வா. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **சா—ம் பங்கு.** | | | | | | | | |
| | **இரண்டாம் பஸ்காமுதல் * மூன்றும் பஸ்காவரை.** | | | | | | | | |
| | ஒருவருஷகாலம். | | | | | | | | |
| 35 | கிறிஸ்து, பஸ்கா உற்சவத்துக்கு எருசலேமுக்குச் செல்லுதல், அவ்விடத்தில் ஒரு வியாதிஸ்தனை ஓய்வுநாளில் சுகமாக்குதல், அதற்கு யூதர்கள் அவர்பேரில் ஏற்படுத்தின குற்றத்தைத் தாம் பிதாவானவருக்கு வல்லமையிலும் மகிமையிலும் கிரியையிலும் சரிசமானராயிருப்பதைக் காட்டிப் பரிகரித்தல், யூதர்கள் அவரைக் கொல்லும்படி ஆலோசித்தல். | | | | | | | 5. | 1–17. |
| 36 | ஓர் ஓய்வுநாளில் சீஷர்கள் கதிர்களைக் கொய்தல். (கலிலேயாவுக்குப் போகும் மார்க்கத்தில்.) | 12. | 1–8. | 2. | 23–28. | 6. | 1–5. | | |
| 37 | ஓய்வுநாளில் சூம்பினகையனை சுகமாக்குதல், பரிசேயர் அவரைக் கொல்லும்படி அந்தரங்க ஆலோசனை செய்தல். (கலிலேயா.) | 12. | 9–14. | 3. | 1–6. | 6. | 6–11. | | |
| 38 | கிறிஸ்து விலகி கலிலேயா கடலுக்குப் போகையில் திரளான ஜனங்கள் அவருக்குப் பின்செல்லுதல், அநேக வியாதிஸ்தரை அவர் சுகமாக்குதல். | 12. | 15–21. | 3. | 7–12. | | | | |
| 39 | கிறிஸ்து மலைத்தேசத்திற்குச் சென்று பன்னிரு அப்போஸ்தலரைத் தெரிந்து ஏற்படுத்தல்; ஜனங்கள் அவரைப் பின்செல்லுதல். (கப்பர்நகூம் அருகில்.) | 10. | 2–4. | 3. | 13–19. | 6. | 2–19. | | |
| 40 | மலைப்பிரசங்கம். | 5. | 1–8, 1. | | | 6. | 20–49. | | |
| 41 | நூற்றுக்குச் சேர்வைக்காரரின் ஊழியனைச் சுகமாக்குதல். (கப்பர்நகூம்.) | 8. | 5–13. | | | 7. | 1–10. | | |
| 42 | நாயீன்ஊர் விதவையின் மகனுக்கு உயிர்கொடுத்தல்; அவர் கீர்த்தி யூதேயா எங்கும் பிரசித்தமாகுதல். | | | | | 7. | 11–17. | | |
| 43 | சிறைச்சாலையில் இருந்த யோவான் கிறிஸ்துவின் தன்மையை அறியும்பொருட்டு தன் சீஷரை அனுப்புதல். (கலிலேயா.) | 11. | 2–19. | | | 7. | 18–35. | | |
| 44 | கோராசின், பெத்சாயிதா, கப்பர்நகூம்பட்டணத்தாரை அவர்கள் அவிசுவாசத்தினிமித்தம் கடிந்துகொள்ளுதல். | 11. | 20–30. | | | | | | |
| 45 | ஒரு பரிசேயன் வீட்டில் பாவியான ஸ்திரீ கிறிஸ்துவுக்கு அபிஷேகஞ்செய்தல். (கப்பர்நகூம்.) | | | | | 7. | 36–50. | | |
| 46 | கிறிஸ்து பன்னிருசீஷருடன், இரண்டாம்விசை கலிலேயாவைச்சுற்றிப் பிரசங்கித்துச் சுகமளித்தல். | | | | | 8. | 1–3. | | |
| 47 | பேய்பிடித்த குருடும் ஊமையுமான மனிதனைச் சுகப்படுத்தல், வேதபாரகரும் பரிசேயரும் கிறிஸ்துவைக் குற்றப்படுத்தல். (கலிலேயா.) | 12. | 22–37. | 3. | 20–30. | 11. | 14,15, 17–25. | | |
| 48 | அவர்கள் அடையாளம் கேட்டபோது கிறிஸ்து சொன்ன உத்தரவு. | 12. | 38–45. | | | 11. | 16,24–36. | | |
| 49 | தமது தாயும் சகோதரரும் தம்மைத் தேடிவந்தபோது, கிறிஸ்து அருளின மறுமொழி. | 12. | 46–50. | 3. | 31–35. | 8. | 19–21. | | |
| 50 | கிறிஸ்து ஒரு பரிசேயன் வீட்டில் பந்தியிருக்கையில், பரிசேயர் சதுசேயரின் வஞ்சனையைக் கண்டித்தல். | | | | | 11. | 37–54. | | |

* யோவான் சுவிசேஷம் 5. 1ல் யூதருடைய பண்டிகையென்று சொல்லியதை பஸ்காபண்டிகையென்று வைத்துக்கொண்டு இந்த ஒழுங்கைக் காட்டியிருக்கிறது. யோவா. 6. 4ல் சொல்லிய பண்டிகை அநேகம் பஸ்கா... ...லாம். யூதருடைய தலைவர் இயேசுவானவரைக் கொல்லும்படி யோசித்திருந்தால், அவர் அந்த உற்சவத்துக்குப் போகவில்லை என்று தோன்றுகிறது. யோவா. 7. ...

| பிரிவு. | பொருளடக்கம். | மத்தேயு. அதி. | மத்தேயு. வ. | மாற்கு. அதி. | மாற்கு. வ. | லூக்கா. அதி. | லூக்கா. வ. | யோவான். அதி. | யோவான். வ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 51 | மாயம், பொருளாசை, கவலையின்மை முதலிய துர்க்குணங்களைக்குறித்துக் கண்டித்துப் பேசுதல். | | | | | 12. | 1–59. | | |
| 52 | கலிலேயரின் மரணத்தைப்பற்றி சில ஜனங்கள் பேசினபோது, கிறிஸ்து அவர்களோடு பண்ணின சம்பாஷணை; கனிகொடாத அத்திமரத்தின் உவமை. | | | | | 13. | 1–9. | | |
| 53 | தம்மிடத்தில் வந்த திரள்ஜனங்களுக்குக் கிறிஸ்து படகிலிருந்து பிரசங்கித்தல்; விதைக்கிறவன் உவமை. | 13. | 1–23. | 4. | 1–25. | 8. | 4–18. | | |
| 54 | களை, கடுகுவிதை, புளித்தமா, மறைக்கப்பட்ட பொக்கிஷம், ஆணிமுத்து, வலை இவைகளைப்பற்றின உவமைகள். | 13. | 24–53. | 4. | 26–34. | | | | |
| 55 | கிறிஸ்து தமது சீஷருடன் கலிலேயாக்கடலைக் கடக்கையில் கொந்தளிப்பை அமர்த்துதல். | 8. | 18–27. | 4. | 35–41. | 8.<br>9. | 22–25.<br>57–62. | | |
| 56 | கதராவில் பேய்பிடித்த இரண்டு மனிதரை குணமாக்கல். (கலிலேயாக்கடலுக்குத் தென்கிழக்குத் திசை.) | 8.<br>9. | 28–34.<br>1. | 5. | 1–21. | 8. | 26–40. | | |
| 57 | லேவிவீட்டில் அவர் விருந்து சாப்பிடுகையில், ஆயக்காரரோடுசகவாசஞ்செய்ததைப்பற்றி நடந்தசம்பாஷணை. | 9. | 10–13. | 2. | 15–17. | 5. | 29–32. | | |
| 58 | யோவானின் சீஷர் உபவாசத்தைப்பற்றிக் கேட்டபோது கிறிஸ்து அருளின மறுமொழி. | 9. | 14–17. | 2. | 18–22. | 5. | 33–39. | | |
| 59 | யவீருவின் குமாரத்திக்கு உயிர்கொடுத்தல்; பெரும்பாடுள்ள ஸ்திரீக்குச் சுகமளித்தல். | 9. | 18–26. | 5. | 22–43. | 8. | 41–56. | | |
| 60 | இரண்டு குருடருக்குப் பார்வை அருளுதல்; பேய்பிடித்த ஊமையனை குணமாக்கல். (கப்பர்நகூம்.) | 9. | 27–31. | | | | | | |
| 61 | கிறிஸ்து நாசரேத்துக்குப் போய் ஜெபஆலயத்தில் பிரசங்கித்தல்; ஜனங்களால் புறக்கணிக்கப்படல். | 13. | 54–58. | 6. | 1–6. | | | | |
| 62 | மூன்றாம்விசை கலிலேயாவைச் சுற்றிப் பிரசங்கித்தல்; பன்னிருசீஷரைப் பிரசங்கிக்கும்படி அனுப்புதல். | 9. | 35–11. 1. | 6. | 7–13. | 9. | 1–6. | | |
| 63 | ஏரோது கிறிஸ்துவின் கீர்த்தியைக் கேள்விப்பட்டு, தான் கொன்ற யோவானே அவர் என்று அனுமானித்தல்; யோவானின் மரணம். | 14. | 1–12. | 6. | 14–29. | 9. | 7–9. | | |
| 64 | பன்னிருசீஷர் திரும்புதல், கிறிஸ்து அவர்களுடன் கலிலேயாக்கடலுக்கு அப்புறத்திலுள்ள வனாந்தரத்துக்குச் செல்லுதல்; அவரோடேபோனதிரளான ஜனங்களுக்குப் பிரசங்கித்தல்; ஐயாயிரம்பேருக்கு அற்புதமாய் ஆகாரம் அளித்தல். | 14. | 13–21. | 6. | 30–44. | 9. | 10–17. | 6. | 1–14. |
| 65 | கிறிஸ்து சீஷரைக் கலிலேயாக்கடல்மார்க்கமாய் அனுப்பிவிட்டு, இரவில் ஜலத்தின்மேல் நடந்து அவர்களிடம் செல்லுதல்; கெனேசரேத்துக்குச் சென்றபோது அநேகர் அவரிடத்திற்கு வருதல். | 14. | 22–36. | 6. | 45–56. | | | 6. | 15–21. |
| 66 | அற்புதமாய்ப் போஷிக்கப்பட்ட ஜனங்கள் கப்பர்நகூமுக்கு அவரைத் தேடிவருதல்; ஜெபஆலயத்தில் தாமே ஜீவஅப்பம் என்று பிரசங்கித்தல்; அநேகர் மனஸ்தாபப்பட்டுப் போய்விடுதல்; பேதுருவின் அறிக்கை. | | | | | | | 6.<br>7. | 22–71.<br>1. |

## ரு-ம் பந்தி.

மூன்றாம் பஸ்காபண்டிகைமுதல் நான்காம் பஸ்காவுக்கு ஆறுநாளைக்குமுன் கிறிஸ்து பெத்தானியாவுக்குச் சென்றதுவரை.

| பிரிவு. | பொருளடக்கம். | மத்தேயு. அதி. | வா. | மாற்கு. அதி. | வா. | லூக்கா. அதி. | வா. | யோவான். அதி. | வா. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இரண்டாம் வருஷகாலம். | | | | | | | | |
| 67 | சீஷர் கைகழுவாமல் சாப்பிட்டதினிமித்தம் எருசலேமில் இருந்துவந்த பரிசேயர், வேதபாரகர் குற்றஞ் சுமத்தல்; அதற்குக் கிறிஸ்து அருளின மறுமொழி. (கப்பர்நகூம்.) | 15. | 1–20. | 7. | 1–23. | | | | |
| 68 | கிறிஸ்து தீருசீதோன்திசைக்குச் செல்லுதல்; கானானிய ஸ்திரீயின் மகளுக்கு குணமளித்தல். | 15. | 21–28. | 7. | 24–30. | | | | |
| 69 | தெக்கப்போலியின் வழியாய் கலிலேயாக்கடலுக்கு அருகிலுள்ள மலைத்தேசத்திற்குத் திரும்புதல்; திரள்ஜனங்கள் அவருக்குப் பின்செல்ல, அநேகருக்குச் சுகமளித்து அற்புதமாய் நாலாயிரம்பேருக்கு ஆகாரம் அருளுதல். | 15. | 29–38. | 7. 8. | 31–37, 1–9. | | | | |
| 70 | ஜனங்களை அனுப்பிவிட்டு படவேறிக்கடந்து, தல்மனூத்தாவுக்குச் செல்லுதல்; பரிசேயர் சதுசேயர் என்பவர்கள் மறுபடியும் அடையாளம் கேட்குதல். | 15. 16. | 39. 1–4. | 8. | 10–12. | | | | |
| 71 | அவர் திரும்பக்கடலைக்கடக்குதல்; பரிசேயரின் புளித்தமாவைக்குறித்துச் சீஷரை எச்சரித்தல். | 16. | [illegible]–12. | 8. | 13–21. | | | | |
| 72 | ஒரு குருடனுக்குப் பார்வை அருளுதல்; பெத்சாயிதா. கலிலியா. | | | 8. | 22–26. | | | | |
| 73 | கிறிஸ்து பிலிப்புசெசரியாவுக்குச் செல்லுதல்; பேதுரு முதலான சீஷர்கள் கிறிஸ்துவை தேவகுமாரன் ... செய்தல் | 16. | 13–20. | 8. | 27–30. | 9. | 18–21. | | |
| 74 | தமது மரணம், உயிர்த்தெழுதல்; சீஷருக்குவரும் துன்பங்கள் இவைகளை முன்னறிவித்தல். (பிலிப்பு செசரியா திசை.) | 16. | 21–28. | 8. 9. | 31–38, 1. | 9. | 22–27. | | |
| 75 | கிறிஸ்து மறுரூபம் அடைதல்; சீஷருடன் சம்பாஷித்தல். | 17. | 1–13. | 9. | 2–13. | 9. | 28–36. | | |
| 76 | சீஷர்கள் சுகப்படுத்தக்கூடாதிருந்த பிசாசுபிடித்த ஒரு மனிதனுக்கு குணமளித்தல். | 17. | 14–21. | 9. | 14–29. | 9. | 37–43. | | |
| 77 | கிறிஸ்து மறுபடியும் தமது மரணம் உயிர்த்தெழுதலை முன்னறிவித்தல். (கலிலேயா.) | 17. | 22, 23. | 9. | 30–32. | 9. | 44, 45. | | |
| 78 | அற்புதமாய் வரிப்பணத்தைச் சம்பாதித்தல். (கப்பர்நகூம்.) | 17. | 24–27. | | | | | | |
| 79 | சீஷர் தங்களில் எவன் பெரியவனென்று வாதாடுதல்; கிறிஸ்து அவர்களுக்குத் தாழ்மை, தன்னடக்கம், பொறுமையைப்பற்றிப் பிரசங்கித்தல். | 18. | 1–35. | 9. | 33–50. | 9. | 46–50. | | |
| 80 | எழுபதுபேரைப்பிரசங்கிக்கும்படி அனுப்புதல்; (சமாரியா.) | | | | | 10. | 1–16. | | |
| 81 | * கிறிஸ்து கடைசிவிசையாக கலிலேயாவை விட்டுப் புறப்பட்டு, கூடாரப் பண்டிகைக்கு எருசலேமுக்குச் செல்லுதல்; போகும் மார்க்கத்தில் சமாரியர் அவரை ஏற்றுக்கொள்ளாமல் அலட்சியஞ்செய்தல். | | | | | 9. | 51–62. | 7. | 2–10. |
| 82 | பத்து குஷ்டரோகிகளுக்குச் சுகமளித்தல். (சமாரியா.) | | | | | 17. | 11–19. | | |

* யோவான் சுவிசேஷம். 7. அதி. 2. வசனமுதல் 11. அதி. 54. வசனம்வரை உள்ள சங்கதிகள் 70–ம் 71–ம் பிரிவுகளில் சொல்லியிருக்கிற சங்கதிகளுக்கு மத்தியில் நடந்ததாகச் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். இயேசுநாதர் கடைசிவிசையாக கலிலேயாவைவிட்டுப் புறப்படுமுன், அவைகள் நடந்ததாகவும், லாசருவை உயிரோடெழுப்பி, வனாந்தரத்திலுள்ள எப்பிராயீம் ஊருக்குப் போனபின்பு, அவர் தமது சீஷருடன் வடக்கிலசென்று, பிலிப்பு செசரியாவுக்கு வந்து அவ்விடத்தில் தமது மரணத்தைப்பற்றி அவர்களுக்கு முதல்முதல் அறிவித்ததாகவும், அப்பால் அவர்களுடன் தனிமையாய் கலிலேயா மார்க்கமாய் எருசலேமுக்குப் போனதாகவும் சொல்லுகிறார். இந்த ஒழுங்கு சரியாயிருக்குமாகில் அவர் எர்மோன் மலையில், மறுரூபமடைந்து, சில வாரங்களுக்குள்ளாக எருசலேமில் மரணமடைந்தார் என்று சொல்லவேண்டிவரும்.

| பிரிவு. | பொருளடக்கம். | மத்தேயு. அதி. | வா. | மாற்கு. அதி. | வா. | லூக்கா. அதி. | வா. | யோவான். அதி. | வா. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 83 | மூன்றும் பண்டிகைக்கு ஆறுமாதத்திற்குப்பின் கிறிஸ்து கூடாரப்பண்டிகையை ஆசரிக்க எருசலேமுக்குச் சென்று, தேவாலயத்தில் பிரசங்கித்தல்; அவரைக்குறித்து ஜனங்கள் பேதமான அபிப்பிராயங் கொள்ளுதல்; அநேகர் அவரை விசுவாசித்தல்; தலைவர் அவரைப் பிடிக்கும்படி எத்தனித்தல். | | | | | | | 7.<br>8. | 11–53.<br>1. |
| 84 | ஒரு விபசார ஸ்திரீயைக்குறித்து அவர் தீர்ப்புச்செய்தல். (எருசலேம்.) | | | | | | | 8. | 2–11. |
| 85 | தாமே உலகத்தின் ஒளியென்றும், அநாதிகாலமாயிருக்கப்பட்ட தேவனென்றும் பிரசங்கித்தல்; யூதர்கள் அவர்மேல் கல்லெறிய எத்தனித்தல். | | | | | | | 8. | 12–59. |
| 86 | நியாயசாஸ்திரி ஒருவன் கிறிஸ்துவை வினவுதல்; நல்ல சமாரியனைக்குறித்து அவர் சொன்ன உவமை. | | | | | 10. | 25–37. | | |
| 87 | கிறிஸ்து மார்த்தாள் மரியாள் வீட்டிற்குச் செல்லுதல். (பெத்தானியா.) | | | | | 10. | 38–42. | | |
| 88 | ஜெபம்பண்ணும்வகையைச் சீஷருக்கு மறுபடியும் கற்பித்தல். (எருசலேம் அருகில்.) | | | | | 11. | 1–13. | | |
| 89 | எழுபதுசீஷர் பிரசங்கித்துவிட்டுத் திரும்பிவருதல். | | | | | 10. | 17–24. | | |
| 90 | ஓர் ஓய்வுநாளில் கிறிஸ்து பிறவிக்குருடனுக்குப் பார்வை அருளுதல்; நல்லமேய்ப்பர் தன்னைமெய்ப்பவராக்குறித்துச் சம்பாஷித்தல்; ஜனங்கள் கிறிஸ்துவைக்குறித்து [illegible] | | | | | | | 9.<br>10. | 1–41.<br>1–21. |



| பிரிவு. | பொருளடக்கம். | மத்தேயு. அதி. | வா. | மாற்கு. அதி. | வா. | லூக்கா. அதி. | வா. | யோவான். அதி. | வா. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 91 | கூடாரப்பண்டிகைக்கு மூன்றுமாதத்துக்குப்பின் தேவாலயப் பிரதிஷ்டைபண்டிகையைக் கிறிஸ்து எருசலேமில் ஆசரித்து, தாம் பிதாவுக்குச் சரிசமானர் என்று பிரசங்கித்தல்; யூதர்கள் அவர் தேவதூஷணஞ்சொன்னதாகக் குற்றம் எற்படுத்தி, அவரைக் கொல்லும்படி பிரயத்தனித்தல்; அவர் யோர்தானின் அக்கரைக்குச் சென்றபோது, அநேக ஜனங்கள் அவரிடத்தில் செல்லுதல். | | | | | | | 10. | 22–42. |
| 92 | லாசரு வியாதியாயிருந்ததைக் கேள்விப்பட்டு, கிறிஸ்து பெத்தானியாவுக்குச்சென்று தாமே உயிர்த்தெழுதலும், ஜீவனும் என்று பிரசங்கித்து லாசருவை உயிரோடெழுப்புதல். | | | | | | | 11. | 1–46. |
| 93 | அநேகர் அவரை விசுவாசித்தல்; யூதசங்கத்தார் அவரைக் கொல்லும்படி நிர்மாணித்தல்; அவர் சீஷருடன் வனாந்தரத்தில் எப்பிராயீம் ஊருக்குச் செல்லுதல். | | | | | | | 11. | 47–54. |
| 94 | அவர் யூதேயாவுக்கும் யோர்தானின் அக்கரைக்கும் சென்றபோது திரள்ஜனங்கள் அவரைப் பின்செல்லுதல்; ஓய்வுநாளில் பெலவீனமுள்ள ஒரு ஸ்திரீக்கு குணமளித்தல். | 19. | 1, 2. | 10. | 1. | 13. | 10–21. | | |
| 95 | பெரேயாமார்க்கமாய் எருசலேமுக்குச் செல்லும் வழியில் பிரசங்கித்தல்; சில பரிசேயர் ஏரோதின் எல்லையைவிட்டுப் போகும்படி கிறிஸ்துவுக்கு அறிவித்தல். | | | | | 13. | 22–35. | | |
| 96 | ஓய்வுநாளில் ஒரு பரிசேயன்வீட்டில் சாப்பிடுகையில் அங்குள்ளவர்களுக்குப் பிரசங்கஞ்செய்தல்; பெரிய விருந்தின் உவமை. | | | | | 14. | 1–24 | | |
| 97 | உத்தம சீஷர்கள் இன்னார் என்று ஜனங்களுக்குப் போதித்தல். | | | | | 14. | 25–35. | | |

| பிரிவு. | பொருளடக்கம். | மத்தேயு. அதி. | வா. | மாற்கு. அதி. | வா. | லூக்கா. அதி. | வா. | யோவான். அதி. | வா. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 98 | ஆயக்காரரும் பாவிகளும் கிறிஸ்துவினிடம் வருதல்; பரிசேயர் முறுமுறுக்குதல்; காணாமற்போன ஆடு, வெள்ளிக்காசு, கெட்டகுமாரனைப்பற்றிய உவமைகள். | | | | | 15. | 1–32. | | |
| 99 | அநீதியுள்ள உக்கிராணக்காரன் உவமை. | | | | | 16. | 1–13. | | |
| 100 | கிறிஸ்து பரிசேயரைக் கடிந்துகொள்ளுதல்; ஐசுவரியவான் லாசருவைப்பற்றிய உவமை. | | | | | 16. | 14–31. | | |
| 101 | பொறுமை, விசுவாசம், தாழ்மையைப்பற்றிப் பிரசங்கித்தல். | | | | | 17. | 1–10. | | |
| 102 | தேவனுடைய ராஜ்யத்தைப்பற்றி பரிசேயர் கேட்ட கேள்விக்குக் கிறிஸ்து உத்தரம் உரைத்தல். | | | | | 17. | 20–37. | | |
| 103 | ஊக்கமாக வேண்டிக்கொண்ட கைம்பெண், ஆயக்காரன், பரிசேயனைப்பற்றிய உவமைகள். | | | | | 18. | 1–14. | | |
| 104 | மனைவி தள்ளப்படுவதைப்பற்றிய கற்பனைகள். | 19. | 3–12. | 10. | 2–12. | | | | |
| 105 | கிறிஸ்து பிள்ளைகளை ஆசிர்வதித்தல். | 19. | 13–15. | 10. | 13–16. | 18. | 15–17. | | |
| 106 | கிறிஸ்து தம்மிடம் வந்த ஒரு பாலியதலைவனுக்குப் போதித்தல்; திராட்சத்தோட்டத்தின் வேலைக்காரரைப்பற்றிய உவமை. | 19.<br>20. | 16–30.<br>1–16. | 10. | 17–31. | 18. | 18–30. | | |
| 107 | எருசலேமுக்குப் போகும் மார்க்கத்தில் கிறிஸ்து தமக்கு வரும் சிறுமை, பாடு, மரணம், உயிர்த்தெழுதலைக் குறித்து மூன்றாம்விசை அறிவித்தல். | 20. | 17–19. | 10. | 32–34. | 18. | 31–34. | | |
| 108 | யாக்கோபு யோவான் என்பவர்களின் பேராசையுள்ள விண்ணப்பம்; அதைப்பற்றி கிறிஸ்து செய்த போதனை. | 20. | 20–28. | 10. | 35–45. | | | | |
| 109 | எரிகோவுக்கு அருகில் இரண்டு குருடருக்குப் பார்வை அருளுதல். | 20. | 29–34. | 10. | 46–52. | 18.<br>19. | 35–43.<br>1. | | |
| 110 | கிறிஸ்து சகேயு வீட்டுக்குச் செல்லுதல். (எரிகோ.) | | | | | 19. | 2–10. | | |



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 111 | எருசலேமுக்குச் சமீபமாய்ப் போகையில் தமது சீஷரின் தப்பிதமான எண்ணத்தை நீக்கும்பொருட்டு தூரதேசத்துக்குப் பிரயாணஞ்செய்த ஒரு பிரபுவைக் குறித்தும், பத்துராத்தலைப்பெற்ற ஊழியரைக்குறித்தும் உவமை சொல்லுதல். | | | | | 19. | 11–28. | | |
| 112 | பஸ்காபண்டிகைக்குக் கிறிஸ்து எருசலேமுக்கு வருவாரோ என்று தலைவர் நினைத்து, அவரைப் பிடிக்கும்படி ஆலோசித்தல்; பண்டிகைக்கு ஆறுநாளைக்குமுன் அவர் பெத்தானியாவுக்குப் போனபோது, அநேகர் அவரிடம் செல்லுதல். | | | | | | | 11.<br>12. | 55–57.<br>1, 9–11. |

## ௯-ம் பந்தி.

### கடைசி பஸ்காபண்டிகை வாரம்.

எருசா.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 113 | முதலாம்நாள். திரள் ஜனங்களுடன் கிறிஸ்து பகிரங்கமாய் எருசலேமுக்குச் செல்லுதல்; பட்டணத்தைப் பார்த்து அதற்கு நேரிடும் நாசத்தை நினைத்துக் கண்ணீர்விடுதல்; சாயரட்சை பெத்தானியாவுக்குத் திரும்புதல். | 21. | 1–11,<br>14–17. | 11. | 1–11. | 19. | 29–44. | 12. | 12–19. |
| 114 | இரண்டாம்நாள். எருசலேமுக்குச் செல்லும் வழியில் கனிகொடாத அத்திமரத்தைச் சபித்தல்; தேவாலயத்தில் விற்பனைசெய்தவர்களைத் துரத்தி, சாயரட்சை பெத்தானியாவுக்குத் திரும்புதல். | 21. | 12, 13,<br>18, 19. | 11. | 12–19. | 19. | 45, 46. | | |
| 115 | மூன்றாம்நாள். மறுபடியும் எருசலேமுக்குப் போகும்போது, தாம் சபித்த அத்திமரம் பட்டுப்போனதைப் பார்த்துக்கொண்டு செல்லுதல். | 21. | 20–22. | 11. | 20–26. | | | | |

| பிரிவு. | பொருளடக்கம். | மத்தேயு. அதி. | வா. | மாற்கு. அதி. | வா. | லூக்கா. அதி. | வா. | யோவான். அதி. | வா. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 116 | தேவாலயத்தில் உபதேசித்தல்; தலைவர் அவரைக் கொல்லும்படி ஆலோசித்தும், ஜனங்களுக்கு பயந்து அவரைப் பிடியாமல் இருக்குதல்; அவர் அதிகாரத்தைப்பற்றி வினவுதல், இரண்டு குமாரரைப்பற்றியும், திராட்சத்தோட்டத்தைப்பற்றியும் உவமைகள். | 21. | 23–46. | 11. 12. | 27–33. 1–12. | 19. 20. 21. | 47,48. 1–19. 37,38. | | |
| 117 | கலியாணவிருந்தின் உவமை. | 22. | 1–14. | | | | | | |
| 118 | இராயனுக்கு வரிசெலுத்துவதைப்பற்றிப் பரிசேயரும் ஏரோதியரும் கிறிஸ்துவை வினவுதல். | 22. | [illegible] | 12. | 13–17. | 20. | 20–26. | | |
| 119 | உயிர்த்தெழுதலைப்பற்றி, சதுசேயர் வினவுதல். | 22. | 23–33. | 12. | 18–27. | 20. | 27–40. | | |
| 120 | ஒரு நியாயசாஸ்திரி கிறிஸ்துவை வினவுதல்; இரண்டு பிரதான கற்பனைகளைக்குறித்து அவர் உரைத்த உத்தரவு. | 22. | 34–40. | 12. | 28–34. | | | | |
| 121 | மேசியா எவரென்பதைக்குறித்துக் கிறிஸ்து தாமே வினவுதல். | 22. | 41–46. | 12. | 35–37. | 20. | 41–44. | | |
| 122 | வேதபாரகர் பரிசேயருடைய நடக்கைக்கு ஒப்பாய் நடக்கக்கூடாது என்று எச்சரித்தல். | 23. | 1–39. | 12. | 38–40. | 20. | 45–47. | | |
| 123 | ஏழைக்கைம்பெண்ணின் தர்மத்தைப் புகழுதல். | | | 12. | 41–44. | 21. | 1–4. | | |
| 124 | கிரேக்கரில் சிலர் கிறிஸ்துவை தரிசிக்க ஆசித்தல்; அவர் தமது பாடுகளையும் மகிமையையுங்குறித்துச் சம்பாஷித்தல். | | | | | | | 12. | 20–50. |
| 125 | கடைசிவிசையாக கிறிஸ்து தேவாலயத்தைவிட்டுப் புறப்படுதல்; பெத்தானியாவுக்குப் போகும் வழியில் ஒலிவமலையிலிருந்து தேவாலயத்தின் அழிவையும், யூதர்களுக்கு வரும் நாசத்தையும் முன்னறிவித்தல். | 24. | 1–42. | 13. | 1–37. | 21. | 5–36. | | |



| பிரிவு. | பொருளடக்கம். | மத்தேயு. அதி. | வா. | மாற்கு. அதி. | வா. | லூக்கா. அதி. | வா. | யோவான். அதி. | வா. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 126 | கடைசி நியாயத்தீர்ப்பைப்பற்றிச் சம்பாஷித்தல்; பத்து கன்னிகைகளின் உவமை; ஐந்து தாலந்துகளின் உவமை. | 24. 25. | 43-51. 1–[illegible] | | | | | | |
| 127 | மூன்றாம்நாள் மாலைதொடங்கி நாலாம்நாள்வரை. அதிகாரிகள் அவரைக் கொல்லும்படி ஆலோசித்தல்; பெத்தானியாவில் நடந்த இராவிருந்தில் மரியாள் கிறிஸ்துவுக்கு அபிஷேகஞ்செய்தல்; யூதாஸ் அவரைக் காட்டிக்கொடுக்கும்படி பிரதான ஆசாரியருடன் ஒப்பந்தஞ்செய்தல்; கிறிஸ்து பெத்தானியாவில் தங்குதல். | 26. | 1–16. | 14. | 1–11. | 22. | 1–6. | 12. | 2–8. |
| 128 | ஐந்தாம்நாள். பஸ்காவை ஆயத்தஞ்செய்யக் கிறிஸ்து இரண்டுசீஷரை அனுப்பி, மற்றச் சீஷர்களுடன் சாயங்காலம் அதை ஆசரிக்கும்படி செல்லுதல். | 26. | 17–19. | 14. | 12–16. | 22. | 7–13. | | |
| 129 | ஐந்தாம்நாள் மாலைமுதல், ஆறாம்நாள் முடிவுவரை. பஸ்காபோஜனத்தைப் பன்னிருவருடன் ஆசரித்தல்; சீஷர் தங்களில் எவன் பெரியவன் என்பதைப்பற்றி வாதாடுதல். | 26. | 20. | 14. | 17. | 22. | 14-18. 24–30. | | |
| 130 | கிறிஸ்து சீஷருடைய கால்களைக் கழுவுதல். | | | | | | | 13. | 1–20. |
| 131 | அவர் தம்மைக் காட்டிக்கொடுப்பவன் இன்னான் என்று தெரிவித்தல்; யூதாஸ் சீஷர் கூட்டத்திலிருந்து புறப்படுதல். | 26. | 21–25. | 14. | 18–21. | 22. | 21–23. | 13. | 21–35. |
| 132 | பேதுரு பாவத்தில் விழுவதையும், பன்னிருவர் ஓடிப்போவதையும் முன்னறிவித்தல். | 26. | 31–35. | 14. | 27–31. | 22. | 31–38. | 13. | 36–38. |
| 133 | இராப்போசனத்திருவிருந்தை ஏற்படுத்தல். 1. கொரி. 11. 23–25. | 26. | 26–29. | 14. | 22–25. | 22. | 19, 20. | | |
| 134 | கிறிஸ்து கடைசிவிசையாக சீஷர்களுடன் சம்பாஷித்து அவர்களுக்காகப் பிரார்த்தித்தல். | | | | | | | 14. 17. | 1. முத. 26. வ. |

| பிரிவு. | பொருளடக்கம். | மத்தேயு. அதி. | வா. | மாற்கு. அதி. | வா. | லூக்கா. அதி. | வா. | யோவான். அதி. | வா. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 135 | கெத்செமனே தோட்டத்தில் பாடுபடுதல். | 26. | 30, 36–46. | 14. | 26. 32. 42. | 22. | 39–46. | 18. | 1. |
| 136 | கிறிஸ்து சத்துருக்களால் பிடிக்கப்படுதல். | 26. | 47–56. | 14. | 43–52. | 22. | 47–53. | 18. | 2–22. |
| 137 | இரவில் பிரதான ஆசாரியருக்குமுன் கிறிஸ்து கொண்டுவரப்படுதல்; பேதுரு அவரை மூன்றுமுறை மறுதலித்தல். | 26. | 57, 58. 69–75. | 14. | 53. 54, 66–72. | 22. | 54–62. | 18. | 13–18, 25–27. |
| 138 | அதிகாலையில் அவர் சங்கத்தாருக்குமுன் கொண்டுவரப்பட்டுக் குற்றஞ்சாற்றப்படுதல். | 26. | 59–68. | 14. | 55–65. | 22. | 63–71. | 18. | 19–24. |
| 139 | பிரதான ஆசாரியரும் தலைவரும் அவரைப் பிலாத்துவுக்குமுன் கொண்டுவந்து நிறுத்துதல். | 27. | 1, 2. 11–14. | 15. | 1–5. | 23. | 1–5. | 18. | 28–38. |
| 140 | பிலாத்து அவர் குற்றமற்றவர் என்று அறிக்கையிட்டு, அவரை ஏரோதுவினிடத்துக்கு அனுப்புதல்; ஏரோது அவரைத் திரும்ப பிலாத்துவிடம் அனுப்புதல். | | | | | 23. | 6–12. | | |
| 141 | பிலாத்து அவரை விடுதலையாக்கப் பார்க்குதல்; யூதர்கள் பரபாசை விடுதலையாக்கவும், கிறிஸ்துவை சிலுவையில் அறையவும் கேட்குதல்; அவரைப் பரியாசம்பண்ணி வாரினால் அடிக்குதல்; யூதர்கள் அவர் தம்மை தேவகுமாரன் என்றும், ராஜா என்றும் சொன்னார் என்று அவர்மேல் குற்றம் ஏற்படுத்தல்; பிலாத்து அவரைச் சிலுவையிலறையத் தீர்ப்புச்செய்தல். | 27. | 15–30. | 15. | 6–19. | 23. | 13–25. | 18. | 39–முடிவு 19. 1–16. வரை. |
| 142 | யூதாஸ் நான்றுகொண்டு சாகுதல்; அப். 1. 18, 19. | 27. | 3–10. | | | | | | |
| 143 | கிறிஸ்து கொலைக்களத்திற்குக் கொண்டுபோகப்படுதல். | 27. | 31–34. | 15. | 20–23. | 23. | 26–32. | 19. | 16, 17. |
| 144 | கிறிஸ்து சிலுவையில் அறையப்படுதல். | 27. | 35–44. | 15. | 21–32. | 23. | 33–43. | 19. | 18–27. |



| பிரிவு. | பொருளடக்கம். | மத்தேயு. அதி. | வா. | மாற்கு. அதி. | வா. | லூக்கா. அதி. | வா. | யோவான். அதி. | வா. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 145 | அவர் சிலுவையில் பிராணத்தியாகஞ்செய்தல்; அப்போது நடந்த அதிசய சம்பவங்கள்; நூற்றிற்குச் சேர்வைக்காரனுடைய சாட்சி. | 27. | 45–56. | 15. | 33–41. | 23. | 44–49. | 19. | 28–30. |
| 146 | கிறிஸ்துவின் திருச்சரீரத்தைச் சிலுவையைவிட்டு இறக்கி, சுகந்தவர்க்கமிட்டுச் சேமித்தல். | 27. | 57–61. | 15. | 42–47. | 23. | 50–56. | 19. | 31–42. |
| 147 | ஏழாம்நாள் கல்லறைக்குக் காவல்வைத்தல். | 27. | 62–66. | | | | | | |
| | **எ–ம் பங்கு.** கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், சீஷருக்குத் தரிசனமாகுதல், பரத்துக்கு எழுந்தருளுதல். நாற்பது நாள். | | | | | | | | |
| 148 | வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையில் கிறிஸ்து உயிரோடெழுந்திருக்குதல். (எருசலேம்.) | 28. | 2–4. | 16. | 1. | | | | |
| 149 | கிறிஸ்துவின் திருச்சரீரத்திற்குச் சுகந்தவர்க்கம் இடும்படி ஸ்திரீகள் கல்லறைக்குப் போனபோது அது வெறுமையாயிருந்ததைக் கண்டு, மகதலா ஊர் மரியாள் அதைப் பேதுருவுக்கும் யோவானுக்கும் அறிவிக்கும்படி செல்லுதல். | 28. | 1. | 16. | 2–4. | 24. | 1–3. | 20. | 1, 2. |
| 150 | மற்ற ஸ்திரீகள் கல்லறையில் இரண்டு தூதரைக் காணுதல்; அந்தத் தூதர் அவர்களுக்குக் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை அறிவித்து, அதைச் சீஷருக்குத் தெரிவிக்கும்படி கற்பித்தல். | 28. | 5–7. | 16. | 5–7. | 24. | 4–8. | | |
| 151 | அப்படியே ஸ்திரீகள் பட்டணத்திற்குப் போகும் மார்க்கத்தில் கிறிஸ்துவைத் தரிசித்தல். | 28. | 8–10. | 16. | 8. | 24. | 9–11. | | |

| பிரிவு. | பொருளடக்கம். | மத்தேயு. அதி. | மத்தேயு. வா. | மாற்கு. அதி. | மாற்கு. வா. | லூக்கா. அதி. | லூக்கா. வா. | யோவான். அதி. | யோவான். வா. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 152 | பேதுருவும் யோவானும் கல்லறைக்கு ஓடி அது வெறுமையாயிருந்ததைக் காணுதல். | | | | | 24. | 12. | 20. | 3–10. |
| 153 | மகதலேனா மரியாள் கல்லறைக்குத் திரும்பிவந்து, கர்த்தரைத் தரிசித்து, சீஷருக்குத் தெரிவித்தல். | | | 16. | 9–11. | | | 20. | 11–18. |
| 154 | கல்லறையைக் காத்திருந்த சேவகர் பட்டணத்திற்கு வந்து அதைக்குறித்துப் பிரஸ்தாபித்தல். | 28. | 11–15. | | | | | | |
| 155 | கிறிஸ்து பேதுருவுக்கும், எம்மா ஊருக்குப்போன இரண்டு சீஷருக்கும் தரிசனம் அருளுதல். (1 கொரி. 15. 5.) | | | 16. | 12, 13. | 24. | 13–35. | | |
| 156 | அன்றிரவில் தோமா இல்லாதபோது கிறிஸ்து தமது சீஷருக்குத் தரிசனமாகுதல். (1 கொரி. 15. 5.) | | | 16. | 14. | 24. | 36–49. | 20. | 19–23. |
| 157 | மறுவாரம் முதலாம்நாள் இரவில் தோமா கூட இருக்கையில் கிறிஸ்து சீஷருக்குக் காக்ஷியாகுதல். | | | | | | | 20. | 24–29. |
| 158 | சீஷர்கள் கலிலேயாவில் இருக்கும்போது அவர்களில் ஏழுபேருக்குத் திபேரியாக்கடலில் தரிசனமாகுதல். | 28. | 16. | | | | | 21. | 1–25. |
| 159 | கலிலேயாவிலுள்ள மலையில் ஐந்நூறு சீஷர்கள் கர்த்தரைத் தரிசித்தல். (1 கொரி. 15. 6.) | 28. | 16–20. | 16. | 15–18. | | | | |
| 160 | யாக்கோபுக்கும் அப்போஸ்தலர்களுக்கும் கிறிஸ்து தரிசனம் அருளுதல். (எருசலேம்.) (அப். 1. 3–8.) (1 கொரி. 15. 7.) | | | | | | | | |
| 161 | கிறிஸ்து பரலோகம் எழுந்தருளுதல். (பெத்தானியா.) (அப். 1. 9–12.) | | | 16. | 19, 20. | 24. | 50–53. | | |



409

# K.

## புதிய ஏற்பாட்டு தள்ளுபடி ஆகமங்கள்.

(192-ம் பக்கம் பார்க்க.)

1. கிறிஸ்துவினாலும் அவருடைய அப்போஸ்தலராலும் அப்போஸ்தலருடைய கூட்டாளிகளாலும் எழுதப்பட்டதாகச் சொல்லப்பட்ட புஸ்தகங்கள் பலவைகளுண்டு. அவைகள் வேதபுஸ்தகத்தைச் சேர்ந்தவைகளென்று திருச்சபையார் ஒருக்காலும் அங்கீகரிக்கவில்லை. அவைகள் இன்னின்னவைகள் என்று பேர்சொல்லுவதும் அவசியமில்லை. என்றாலும், சில புஸ்தகங்களைப்பற்றி மாத்திரம் இங்ஙனம் சொல்லுகிறோம்.

2. ரோமாபுரி கிலேமெந்து கொரிந்தியருக்கு எழுதின இரண்டு நிருபங்கள் சற்று முக்கியமாயுள்ளது. அது அலெக்சந்திரியி கையெழுத்துப்பிரதியில் பின்பாகிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. முதல் நிருபத்துக்குள் கர்த்தா இன்னாரென்று பட்டிருக்கிறது. முதல் நிருபம் கர்த்தா நிச்சயமுள்ளது, இரண்டாம் நிருபம் கள்ளப்புஸ்தகம். பூர்வத்தில் கிலேமெந்து என்ற பெயரால் அநேக புஸ்தகங்கள் பிரசித்தப்படுத்தப்பட்டிருந்தன. அவைகள் யாவும் கள்ளப்புஸ்தகங்களாயிருந்தன. கிலேமெந்து என்பவன் அப்போஸ்தலனாகிய பவுல் பிலி. 4. 3ல் சொல்லிய கிலேமெந்துதானோ என்பதை நாம் திட்டமாய்ச் சொல்லக்கூடாதவர்களாயிருக்கிறோம்.

3. இக்னேசியின் நிருபங்கள்: அவன் பதினொந்து நிருபங்கள் எழுதினதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளில் எட்டு கள்ளநிருபங்கள். மீதியான மற்ற ஏழும் கர்த்தா நிச்சயமுள்ளவைகள். இக்னேசியு அந்தியோகியாவின் கண்காணி. அவன் கி. பி. 107ல் அல்லது வேறு சிலர் சொல்லியபடி கி. பி. 116ல் ரோமாபுரியில் துஷ்டமிருகங்களுக்குப் போடப்பட்டு இரத்தசாட்சியாக மரித்தான்.

4. போலிக்கார்ப்பின் நிருபம்: இது கர்த்தா நிச்சயமுள்ளது. அவன் யோவான் அப்போஸ்தலனுடைய சீஷன். சிமிர்னா பட்டணத்துக் கண்காணி. அவன் கி. பி. 166ல் இரத்தசாட்சியாய் மரித்தான். அவனுடைய நூல்களில் இந்தச் சின்ன நிருபம்மாத்திரம் இப்போதிருக்கிறது. இக்னேசியு இரத்தசாட்சியாய் மரித்தவுடனே, அந்த நிருபத்தைப் பிலிப்பு பட்டணத்துச் சபையாருக்கு எழுதினான். துன்பப்பட்ட கிறிஸ்

துவின் ஊழியக்காரனுக்கு பிலிப்பியர் காட்டின அன்புக்காக அவர்களைப் புகழ்ந்து, அவர்கள் அசைவற்றவர்களாய் உறுதியாய் நிலைநிற்கும்படி புத்திசொல்லி, பவுல் தன் நிருபத்தில் அவர்களுக்குப் போதித்திருக்கிற சுற்றுக்க[illegible]களை அவர்களுக்கு எடுத்துக்காட்டி, அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரருக்கும், சபையின் அவயவங்களுக்கும் நடந்துகொள்ளவேண்டிய கடமைகளை எடுத்துரைத்திருக்கிறுன். பிலிப்பியர், போலிக்கார்ப்புக்கு இக்னேசியு எழுதின நிருபத்தை தங்களுக்கு அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொண்டபோது போலிக்கார்ப்பு அவர்களுக்குத் தன் நிருபத்தையும் எழுதியிருப்பான் என்று தோன்றுகிறது.

5. பர்னபா, எர்மா என்பவர்களின் ஆகமங்கள். இவைகள் அவர்களால் எழுதப்பட்டன என்பதற்குப் புற அத்தாட்சியுமில்லை; அக அத்தாட்சியுமில்லை. சீனாய்மலையில் கண்டுபிடிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதியில், பர்னபாவின் ஆகமம், கிரேக்கபாஷையில் முழுவதும் இருக்கிறது. அதை எழுதினவன் பவுலின் சிநேகிதனாகிய பர்னபாதானே என்பதை ரூபிக்க ஏதுவில்லை. அது எழுதப்பட்ட காலத்தைப்பற்றி விகற்பமான அபிப்பிராயங்கள் உண்டு. சிலர் கி. பி. 107 என்றும், சிலர் 120 என்றும் சொல்வார்கள். எர்மாவின் மேய்ப்பன் என்ற ஆகமம் மூன்று பங்குள்ளது. அது இரண்டாம் நூற்றுண்டின் மத்தியில் எழுதப்பட்டிருக்கலாம்.

6. மேற்சொல்லியவைகளைத்தவிர, அநேக சுவிசேஷங்களும் நடபடி ஆகமங்களும் உண்டு. அப்போகிரிபா சுவிசேஷம் என்ற பேரால் இருபத்திரண்டு சுவிசேஷங்களையும், நடபடி ஆகமம் என்ற பேரால் பதின்மூன்று புஸ்தகங்களையும், ஒருவர் அச்சிட்டிருக்கிறுர். திருச்சபையின் சரித்திரத்தை அறிய விரும்புகிறவர்கள் சடங்குகள், பாரம்பரியங்கள் உண்டான மூலங்களைக் கண்டுகொள்வதற்கு அவைகள் பிரயோஜனமாய் இருக்கலாம். அந்தப் பிரபந்தங்களினுல் உண்டாகிய பிரயோஜனம் அற்பம். அவைகள் கட்டுக்கதைகளால் நிறைந்திருக்கிறது. நடந்ததாக அவைகளில் காட்டப்பட்டிருக்கிற அற்புதங்கள் சுவிசேஷங்களில் காட்டியிருப்பவைகளைவிட அதிகம்; அவைகள் ஒரு நோக்கத்திற்காகச் செய்யப்பட்டதாகக் காணப்படுகிறதில்லை. அற்பவிஷயத்தையிட்டு அவைகள் செய்யப்பட்டதாகக் காட்டப்பட்டிருக்கிறது.



# L.

## புதிய ஏற்பாட்டு ஆகமங்கள் எழுதப்பட்ட காலக்கிரம அட்டவணை.

| புஸ்தகத்தின் பெயர். | புஸ்தகத்தை எழுதினவன். | எங்கே எழுதப்பட்டது. | யாருக்கு எழுதப்பட்டது. | எப்போது எழுதப்பட்டது. |
|---|---|---|---|---|
| மத்தேயு (எபிரேயுவில்.)(?) | மத்தேயு. | யூதேயா. | எபிரேய கிறிஸ்தவர்களுக்கு. | 38(?) |
| 1 தெசலோனிக்கேயர். | பவுல். | கொரிந்து. | புறஜாதியாரான கிறிஸ்தவர்களுக்கு. | 52 |
| 2 தெசலோனிக்கேயர். | பவுல். | கொரிந்து. | ,, | 52 |
| கலாத்தியர். | பவுல். | கொரிந்து. | ,, | 53 |
| 1 கொரிந்தியர். | பவுல். | எபேசு. | ,, | 57 |
| 2 கொரிந்தியர். | பவுல். | மக்கெதோனியா. | ,, | 58 |
| ரோமர். | பவுல். | கொரிந்து. | ,, | 58 |
| மத்தேயு (கிரேக்கில்.) | மத்தேயு. | யூதேயா. | எபிரேய கிறிஸ்தவர்களுக்கு. | 60 |
| யாக்கோபு. | யாக்கோபு. | யூதேயா. | ,, | 60 |
| மாற்கு. | மாற்கு. | ரோமாபுரி. | புறஜாதியாரான கிறிஸ்தவர்களுக்கு. | 61 |
| எபேசியர். | பவுல். | ரோமாபுரி. | ,, | 61 |
| கொலோசெயர். | பவுல். | ரோமாபுரி. | ,, | 62 |
| பிலேமோன். | பவுல். | ரோமாபுரி. | பிலேமோனுக்கு. | 62 |
| பிலிப்பியர். | பவுல். | ரோமாபுரி. | புறஜாதியாரான கிறிஸ்தவர்களுக்கு. | 63 |
| எபிரேயர். | பவுல் (?) | இத்தாலியா. | எபிரேய கிறிஸ்தவர்களுக்கு. | 63 |
| லூக்கா. | லூக்கா. | கிரேக்கை (?) | தேயோப்பிலுவுக்கு. | 63 |
| அப்போஸ்தலர் நடபடி. | லூக்கா. | கிரேக்கை (?) | ,, | 64 |
| 1 பேதுரு. | பேதுரு. | பாபிலோன்? | பொதுவாக. | 64 |
| 2 பேதுரு. | பேதுரு. | பாபிலோன். | ,, | 65 |
| 1 தீமோத்தேயு. | பவுல். | மக்கெதோனியா. | தீமோத்தேயுவுக்கு. | 64 |
| தீத்து. | பவுல். | மக்கெதோனியா. | தீத்துவுக்கு. | 64 |
| 2 தீமோத்தேயு. | பவுல். | ரோமாபுரி. | தீமோத்தேயுவுக்கு. | 65 |
| யூதா. | யூதா. | தெரியாது. | பொதுவாக. | 65 |
| 1 யோவான். | யோவான். | எபேசு. | ,, | 68 |
| 2 யோவான். | யோவான். | எபேசு. | தெரிந்துகொள்ளப்பட்ட அம்மாளுக்கு. | 69 |
| 3 யோவான். | யோவான். | எபேசு. | காயுவுக்கு | 69 |
| வெளிப்படுத்தின விசேஷம். | யோவான். | பத்மு (?) | ஏழு சபைகளுக்கு. | 97 |
| யோவான் சுவிசேஷம். | யோவான். | எபேசு. | பொதுவாக. | 98 |

# M.

## இயேசுகிறிஸ்துவானவர் செய்த அற்புதங்கள்.

| | | | |
|---|---|---|---|
| தண்ணீரைத் திராட்சரசமாக்கினது. | கானாவில். | யோவா. | 2. 1–11. |
| கப்பர்நகூமிலுள்ள ஒரு அதிகாரியின் மகனைக் குணமாக்கினது. | ,, | ,, | 4. 46–54. |
| மீன்வேட்டை. | கலிலேயாக்கடலில். | லூக். | 5. 1–11. |
| பிசாசுபிடித்தவனைச் சுகமாக்குதல். | கப்பர்நகூமில். | மாற். | 1. 21–28. |
| பேதுருவின் மாமிக்குச் சுகமளித்தது. | ,, | ,, | 1. 30, 31. |
| அநேக அற்புதங்கள். | கலிலேயாவில். | ,, | 1. 32–34. |
| குஷ்டரோகியைக் குணமாக்குதல். | கப்பர்நகூமில். | ,, | 1. 40–45. |
| நூற்றுக்குச் சேர்வைக்காரனின் ஊழியனுக்குச் சுகமளித்தது. | ,, | மத். | 8. 5–13. |
| அநேகருக்குச் சுகமருளினது. | கலிலேயாவில். | லூக். | 6. 17–19. |
| விதவையின் மகனை உயிரோடே எழுப்பினது. | நாயீனில். | ,, | 7. 11–17. |
| காற்றை அதட்டி அமைதலுண்டாக்கினது. | கலிலேயாக்கடலில். | மத். | 8. 23–27. |
| பிசாசுபிடித்திருந்த இரண்டுபேரைக் குணமாக்கினது. | கதராவில். | மத். | 8. 28–34. |
| திமிர்வாதக்காரனுக்குச் சுகமளித்தது. | கப்பர்நகூமில். | ,, | 9. 1–8. |
| யவீருவின் மகளை உயிரோடெழுப்பினது. | ,, | ,, | 9. 18–26. |
| இரண்டு குருடருக்குப் பார்வையருளினது. | ,, | ,, | 9. 27–31. |
| பிசாசுபிடித்திருந்த ஊமையும் குருடுமான மனிதனைச் சுகப்படுத்தினது. | ,, | ,, | 9. 32, 33. |
| திரளான ஜனங்களுக்குச் சுகம் கொடுக்கப்பட்டது. | கலிலேயாவில். | ,, | 9. 35. |
| பெரும்பாடுள்ள ஸ்திரீக்குச் சுகமளித்தல். | கப்பர்நகூமில். | லூக். | 8. 43–48. |
| பெதஸ்தா குளத்தில் 38 வருஷம் வியாதியாயிருந்தவனை குணமாக்கினது. | எருசலேமில். | யோவா. | [illegible]1–9. |
| சூம்பின கையையுடைய மனிதன் சுகமாக்கப்பட்டது. | யூதேயாவில். | மத். | 12. 10–13. |
| பிசாசுபிடித்த குருடும் ஊமையுமான ஒருவன் சொஸ்தமாக்கப்பட்டது. | கப்பர்நகூமில். | ,, | 12. 22, 23. |
| ஐயாயிரம்பேர் போஷிக்கப்பட்டது. | தெக்கப்போலியில். | ,, | 14. 15–21. |
| அநேகருக்குச் சுகமருளப்பட்டது. | கலிலேயாவில். | மாற். | 6. 55, 56. |
| இயேசு கடலின்மேல் நடந்தது. | ,, | மத். | 14. 22–32. |
| கானானிய ஸ்திரீயின் மகள் சுகமானது. | புதியதிருவில். | ,, | 15. 21–28. |
| செவிடும் ஊமையுமான மனிதன் சொஸ்தமானது. | தெக்கப்போலியில். | மாற். | 7. 31–37. |
| அநேகர் சுகமானது. | கலிலேயாவில். | மத். | 15. 29–31. |
| நாலாயிரம்பேர் போஷிக்கப்பட்டது. | தெக்கப்போலியில். | ,, | 15. 32–39. |
| குருடனுக்குச் சுகமளித்தது. | பெத்சாயிதா. | மாற். | 8. 22–26. |
| பிசாசுபிடித்திருந்த ஒரு பிள்ளையாண்டான் சுகமாக்கப்பட்டது. | தாபோர். | மத். | 17. 14–21. |
| வரிப்பணம் கொடுக்கும்படி செய்யப்பட்ட அற்புதம். | கலிலேயாக்கடலில். | மத். | 17. 24–27. |
| பிறவிக்குருடனுக்குச் சுகங்கொடுத்தது. | எருசலேமில். | யோவா. | 9. |
| கூனியாயிருந்த ஒரு ஸ்திரீக்குச் சுகமளித்தல். | கலிலேயாவில். | லூக். | 13. 11–17. |
| நீர்க்கோவை வியாதியுள்ள மனுஷன் சுகமாக்கப்பட்டது. | ,, | லூக். | 14. 1–6. |

| | | | |
|---|---|---|---|
| பத்துக் குஷ்டரோகிகளுக்குச் சுகமருளினது. | சமாரியாவில். | லூக். | 17. 11–19. |
| லாசரு உயிரோடே எழுப்பப்பட்டது. | பெத்தானியாவில், | யோவா. | 11. |
| இரண்டு குருடருக்குப் பார்வையருளினது. | எரிகோவில். | மத். | 20. 30–34. |
| அநேகர் சுகமானது. | எருசலேம். | ,, | 21. 14. |
| அத்திமரம் சபிக்கப்பட்டது. | ஒலிவமலையில். | ,, | 21. 18–21. |
| மல்குஸ் என்பவன் காது சுகமாக்கப்பட்டது. | கெத்செமனேயில். | லூக். | 22. 50, 51. |
| மீன்வேட்டை. | கலிலேயாக்கடலில். | யோவா. | 21. 1–14. |

# N.

## இயேசுகிறிஸ்துவானவர் சொன்ன உவமைகள்.

| | சொல்லப்பட்ட இடம். | ஒத்தவாக்கியம். | |
|---|---|---|---|
| விதைக்கிறவன் உவமை. | கப்பர்நகூம். | மத். | 13. 1–23. |
| களைகள். | ,, | ,, | 24–30. |
| தெரியாவண்ணம் பயிரானவித்து. | ,, | மாற். | 4. 26–29. |
| கடுகுவிதை உவமை. | ,, | மத். | 13. 31, 32. |
| புளித்தமா. | ,, | ,, | 33. |
| நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்தின் உவமை. | ,, | ,, | 44. |
| விலையுயர்ந்த முத்து. | ,, | ,, | 45, 46. |
| கடலில் வீசப்பட்ட வலை. | ,, | ,, | 47–50. |
| இரண்டு கடன்காரர். | ,, | லூக். | 7. 40–43. |
| இரக்கமற்ற ஊழியக்காரன். | ,, | மத். | 18. 23–35. |
| நல்ல சமாரியன். | எரிகோ. | லூக். | 10. 30–37. |
| மதியற்ற ஐசுவரியவான். | கலிலேயா. | ,, | 12. 16–21. |
| எஜமானுக்காகக் காத்துக்கொண்டிருந்த ஊழியக்காரர். | ,, | ,, | 35–48. |
| கனிகொடாத அத்திமரம். | ,, | லூக். | 13. 6–9. |
| காணாமற்போன ஆடு. | ,, | ,, | 15. 3–7. |
| காணாமற்போன வெள்ளிக்காசு. | ,, | ,, | 15. 8–10. |



| | சொல்லப்பட்ட இடம். | ஒத்தவாக்கியம். | |
|---|---|---|---|
| கெட்டகுமாரன் உவமை. | கலிலேயா. | லூக். | 15. 11–32. |
| உண்மையில்லாத ஊழியக்காரன் உவமை. | ,, | ,, | 16. 1–12. |
| ஐசுவரியவான் லாசரு. | ,, | ,, | 19–31. |
| அநீதியுள்ள நியாயாதிபதி. | பெரேயா. | ,, | 18. 1–8. |
| பரிசேயன் ஆயக்காரன். | ,, | ,, | 9–14. |
| திராட்சத்தோட்டத்துக்கு அனுப்பப்பட்ட வேலைக்காரர். | ,, | மத். | 20. 1–16. |
| பத்து இராத்தலைப் பெற்ற ஊழியக்காரர். | எரிகோ. | லூக். | 19. 12–27. |
| இராத்திரியில் அப்பங் கேட்ட சிநேகிதன். | எருசலேம். | ,, | 11. 5–8. |
| பெரியவிருந்து. | ,, | ,, | 14. 15–24. |
| இரண்டு குமாரர். | ,, | மத். | 21. 28–32. |
| திராட்சத்தோட்டம். | ,, | ,, | 21. 33–46. |
| கலியாண விருந்து. | ,, | ,, | 22. 1–14. |
| பத்துக்கன்னிகள். | ,, | ,, | 25. 1–13. |
| தாலந்துகள். | ,, | ,, | 14–30. |
| ஆடுகள் வெள்ளாடுகள். | ,, | ,, | 31–46. |

# O.

## யூதருக்குள்ளிருந்த சமயவகுப்புகள்.

யூதர்கள் பாபிலோனிலிருந்து திரும்பிவந்தபின்பு, எஸ்றா என்பவன் நெகேமியாவுடன் சேர்ந்து, யூதருக்குள்ளே சீர்திருத்தலை உண்டுபண்ணி, அந்தந்தக் கிரியைகள் நடந்தேறுவதற்கு இஸ்ரவேலில் 120 பேர் அடங்கிய பெரிய சுனகோகை ஸ்தாபித்தான் என்று சொல்லப்படுவதுண்டு. அவர்கள் எல்லாரும் அவன் விசாரணையின்கீழிருந்து கி. மு. 300ல் பழைய ஏற்பாட்டு ஆகமங்களை ஒன்றாகத் திரட்டிச் சேர்த்தார்கள். அந்த மூப்பர்களுக்குப்பின் தொடர்ச்சியாய் வந்தவர்கள் வேதாகமத்தைப்பற்றி முன்னோர் சொன்ன அபிப்பிராயங்களையும் வியாக்கியானங்களையும், அருமையான பாரம்பரியங்களாக எண்ணி, அவைகளைப் பாதுகாத்துவந்தார்கள். இதிலே வேதாகமத்தைப்பற்றிய அக்கறையுள்ளவர்களாக இரண்டுபட்சத்தார் எழும்பினார்கள். ஒருபட்சத்தார் பாரம்பரியங்களை எல்லாம் தள்ளி, வேதாகமங்களையே விடாதுபிடித்து அநுசரித்

துவந்தார்கள். அவர்கள் நியாயப்பிரமாணம் முழுமையையும் அநுசரிக்கிறவர்களாகக் காட்டி, "நீதிமான்கள்" என்று அர்த்தங்கொள்ளும் சடாக்கீம் என்ற பேரைத் தங்களுக்கு இட்டுக்கொண்டார்கள். மறுபட்சத்தார் வேதாகமத்தோடே பாரம்பரியங்களையும் சேர்த்துத் தங்களை அதிகப் பரிசுத்தமுள்ளவர்களென்று எண்ணி "பக்திமான்கள்" என்று அர்த்தங்கொள்ளும் சாசிடிம் என்ற நாமத்தைத் தங்களுக்குத் தரித்துக்கொண்டார்கள். இவர்களிலிருந்து பரிசேயரும், எசேனரும் எழும்பினார்கள்.

1. சமாரியர் பத்துக்கோத்திரத்தார் குடியிருந்த இடத்தில் வந்து வாசம்பண்ணின அஞ்ஞானிகள். அவர்கள் ஒருவாறு சீர்திருந்தி மோசேயின் நியாயப்பிரமாணத்தை திவ்விய அதிகாரமுள்ளதென்று அங்கீகரித்துப் பழைய ஏற்பாட்டின் மற்ற ஆகமங்களை அதற்குத் தாழ்ந்த அதிகாரமுள்ளவைகளென்று எண்ணிவந்தார்கள். அவர்கள் தங்களை ஒரு சமயவகுப்பாக்கிக்கொண்டு, கெர்சீம் மலையில் ஒரு ஆலயத்தைக் கட்டி, இஸ்ரவேலின் தேவனை வணங்கிவந்தார்கள். நம்முடைய ரட்சகருடைய காலத்தில் அவர்களில் சீர்கேடாயிருந்தவர்களும், மேசியா தோன்றுவதைப்பற்றிய எண்ணத்தை உடையவர்களாய் இருந்தார்களென்று சீகார் ஊர் ஸ்திரீயோடே அவர் பண்ணின சம்பாஷணையினால் விளங்குகிறது.

2. சதுசேயர் ஓர்வகையான ஆஸ்திகராயிருந்தார்கள். அவர்கள் கி. மு. 280ல் அந்த வகுப்பை ஸ்தாபித்தவனாகிய சாதோக் என்பவன் பேரால் சதுசேயர் என்று அழைக்கப்பட்டாலும் சடாக் (நீதி) என்ற வார்த்தையிலிருந்து தங்களுக்குப் பேரை உண்டாக்கினதாகத் தோன்றுகிறது. அவர்கள் துவக்கத்தில் வாய்மொழியாய் வந்த பாரம்பரியங்கள் திவ்விய அதிகாரமுள்ளவைகளல்லவென்று தள்ளினாலும், பிந்தியகாலத்தில், இன்பமே மனிதருடைய சிறந்தநன்மையென்று போதித்த எப்பிக்கூரஸ் என்ற அஞ்ஞான கலைஞானியினுடைய உபதேசங்களை ஒப்புக்கொண்டார்கள். சதுசேயர் மோசேயின் ஆகமங்களைத் தவிர மற்ற வேதாகமங்களை அங்கீகரிக்கவில்லை. அவர்கள் மரித்தோர் உயிர்த்தெழுதலையாவது, சம்மனசுக்களையாவது, ஆத்துமாவின் அழியாமையையாவது ஒப்புக்கொள்ளவில்லை. அவர்கள் தேவன் உண்டென்பதையும், தேவாட்சிதல் உண்டென்பதையும் அங்கீகரித்துக்கொண்டாலும், மறுமையில் பலாபலன்கள் உண்டென்ற உபதேசத்தை மறுத்தார்கள். அவர்கள் குற்றவாளிகளை நியாயந்தீர்க்கும்படி உட்கார்ந்திருக்கும்



போதெல்லாம் வெகு கண்டிப்பான ஆக்கினையைக் கூறுவார்களென்றும், யூதருக்குள்ளிருந்த சமயவகுப்புகளில் அவர்கள் கொஞ்சமானவர்களாய் இருந்தார்களென்றும், அவர்கள் நற்குணசாலிகளாயும் ஐசுவரியமுள்ளவர்களாயும் இருந்தார்களென்றும் யோசேப்புஸ் சரித்திரக்காரன் சொல்லியிருக்கிறான்.

3. பரிசேயர் யூதசமயவகுப்பாருக்குள் அவர்கள் பெருந்தொகையாயுள்ளவர்கள். வேதமார்க்கத்தைக்குறித்து எண்ணமுடையவர்களெல்லாரும் இந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாய் இருந்தார்கள். அவர்கள் சாதாரண ஜனங்களை அற்பமாய் எண்ணினபோதிலும், வெளிவேஷமாய் அவர்கள் காட்டிவந்த புநிதத்தையிட்டு அந்த ஜனங்கள் அவர்களை மகா புண்ணியவான்களாகப் பாவித்து, இரண்டுபேர் மோட்சத்துக்குப் போக இடம்பெற்றால், அவர்களில் ஒருவன் பரிசேயனாயிருப்பான் என்று எண்ணிவந்தார்கள். வேதசாஸ்திரிகளில் அநேகரும், வேதபாரகரும், இந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாயிருந்தார்கள். பரிசேயர் பாரம்பரியங்களை வேதாகமங்களுக்குக் கொஞ்சம் குறைய சமமான அதிகாரமுடையவைகளென்று சாதித்துவந்தார்கள். போதனைக்குரிய விஷயத்தில் பாரம்பரியங்களை வேதாகமத்தைவிட சிரேஷ்டமாக எண்ணினார்கள். அவர்கள் மார்க்க அபிமானிகளாயிருந்து மார்க்க ஆசாரங்களை வெகு கண்டிப்பாய் ஆசரித்துவந்தார்கள். ஆகவே, தங்களை தேவதயவுக்குப் பாத்திரர் என்று எண்ணினார்கள். இவ்விஷயத்தையிட்டு அவர்களை நமது ஆண்டவர் மாயக்காரர் என்று கண்டித்து, ஆயக்காரர் வேசிகளைவிட தேவனுடைய ராஜ்யத்துக்குத் தூரமானவர்கள் என்று பேசியிருக்கிறார்.[1]

4. எசேனர் அதிக விரதமுள்ளவர்கள். பரிசேயரில் ஒரு வகுப்பார் அவர்கள் தங்களை ஒடுக்கி ஜீவனம்செய்து மாயத்தனத்துக்கு விலக்கமாய்க் காத்துக்கொண்டார்கள். நம்முடைய ஆண்டவர் மற்றச் சமயவகுப்பாரை அடிக்கடி கண்டித்துப் பேசியிருந்தும், இவர்களைப்பற்றி அவர் பேசினதாக நாம் வாசிக்கிறதில்லை. புதிய ஏற்பாட்டை எழுதினவர்கள் இவர்களைப்பற்றி விசேஷித்துக் காட்டவுமில்லை. அவர்கள் சந்நியாசிகளைப்போல வனசஞ்சாரம்செய்து, ஆலயத்துக்காவது ஜனக்கூட்டத்தண்டைக்காவது வராமல் விலகிப் பிரத்தியேகமாய்த் தங்களைக் காத்துக்கொண்டார்கள். யோவான்ஸ்நானகன் அந்த வகுப்பாரிடத்தில் வாசம்பண்ணிவந்தான் என்று

[1] மத். 23. 1–33.

அநேகர் அபிப்பிராயப்படுகிறார்கள். அவர்கள் மறுமையில் பாக்கியமுண்டென்பதை நம்பினாலும், உயிர்த்தெழுதலைக்குறித்துச் சந்தேகங்கொண்டார்கள். அவர்கள் பெரும்பாலும் விவாகத்தை விலக்கினார்கள். தரித்திரருடைய பிள்ளைகளை தத்தம் பண்ணிக்கொண்டு, தங்கள் கோட்பாடுகளில் அவர்களைப் பயிற்றுவித்தார்கள். அவர்கள் கூட்டத்தோடே சேரவிரும்பினவர்கள் மூன்றுவருஷம் பரீட்சைநிலையில் இருக்கவேண்டும். அவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்ட பின்பு, தேவனைச் சேவிக்கவும், நீதியானவைகளைச் செய்யவும், தங்கள் கோட்பாடுகளை தங்களைச் சேர்ந்த ஒருவருக்கும் மறைப்பியாதிருக்கவும், தங்கள் ஜீவன்போனாலும் அந்தக் கோட்பாடுகளை மற்றவர்களுக்கு அறிவியாதிருக்கவும் ஆணையிடுவார்கள். அவர்கள் ஐசுவரியத்தை அற்பமாக எண்ணி, அதைத் தங்களைச் சேர்ந்த யாவருக்கும் பொதுவாக வைத்துக்கொள்வார்கள். அவர்கள் எல்லாரும் ஒரேபந்தியில் சாப்பிடுவார்கள். அவர்கள் உடை வெகு சாதாரணமாயிருக்கும்.

5. வேதபாரகர் பிரத்தியேகமான வகுப்பாயிராமல், அவர்களில் அதிகமானவர்கள் பரிசேயவகுப்பைச் சேர்ந்தவர்களாய் இருந்தார்கள். [illegible]ன் வேதத்தைப் பெயர்த்தெழுதும் தொழிலையுடையவர்கள். நியாயப்பிரமாணத்தைக் கற்று, அதை ஜனங்களுக்கு விஸ்தரித்துப் போதிக்கிறவர்களாயிருந்தார்கள்.[1]

6. ஏரோதியர் சமயவகுப்பைச் சேர்ந்தவர்களாயிராமல் ராஜாங்கவகுப்பைச் சேர்ந்தவர்களாயிருந்தார்கள் என்று சொல்லலாம். அவர்கள் ஏரோதோடும் ரோமரோடும் கலந்திருப்பதற்கு அநேக அஞ்ஞானகருமங்களைச் செய்ய உடன்பட்டவர்களாய் இருந்தார்கள்.[3]

7. கலிலேயர் வைதீகவகுப்பாராயிராமல் ராஜாங்கத்தில் கலகத்தை மூட்டிவிட்ட ஒரு கூட்டத்தாரான யூதராயிருந்தார்கள். அவர்களுக்கு முதலாவது தலைவனாயிருந்தவன் கலிலேயனாகிய யூதாஸ்.[3]

8. லிபர்த்தீனர்[4] ரோமசுயாதீன சலாக்கியமடைந்திருந்த யூதர் அல்லது புரோசிலைத்துக்கள் இப்பேரால் அழைக்கப்பட்டார்கள். அவர்களுக்கென்று எருசலேமில் ஒரு ஜெப ஆலயமும் இருந்தது.

[1] எரே. 36. 1–10. [2] மத். 22. 16. [3] அப். 5. 37. [4] அப். 6. 9.



# P.

## புதிய ஏற்பாட்டில் காட்டப்பட்டிருக்கிற பதிதங்கள் சமயவகுப்பார்.

புதிய ஏற்பாட்டை வாசிக்கிறவர்கள் அப்போஸ்தலருடைய காலத்திலேயே கிறிஸ்தவ சபையைக் கெடுக்கத்தக்கதான கொடிய பதிதங்கள் எழும்பின என்பதை அறியலாம். அவைகளில் சிலவை, சுவிசேஷ போதனையோடே[1] நியாயப்பிரமாண சடங்காசாரங்களைச் சேர்த்து, அவைகளை அனுஷ்டிக்கவேண்டும் என்று விருப்பத்தோடே போதனைசெய்த யூதமார்க்க போதகமாரால் எழும்பின. மற்ற பதிதங்கள் அஞ்ஞானிகளுடைய கலைஞானங்களிலிருந்து எடுக்கப்பட்டவைகளாயிருந்தன. அப்போஸ்தலன் அவைகளை மாயமான தந்திரம் என்று சொல்லுகிறார்.[2] இவ்விடத்தில் சிலவற்றைக்குறித்து மாத்திரம் காட்டுவோம்.

1. நிக்கொலாயித்தர். ஏழு உதவிக்காரரில் ஒருவனாகிய நிக்கொலா என்பவன், இந்தக் கள்ள உ[illegible]க்கும் தன்னை நிக்கும் தலைவனாயிருந்தான் என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால், அது சுவிசேஷகனால் சொல்லப்பட்டிருக்கிற அவனுடைய குணம் நடக்கைக்கு நேர்விரோதமாய்க் காணப்படுகிறது.[3] உதவிக்காரனாகிய நிக்கொலா சுவிசேஷத்தைவிட்டு மருளவிழுந்ததாக நமக்கு அத்தாட்சியுமில்லை. நிக்கொலாயித்தர் தூர்வகையான அந்திநோமியர்போல் இருந்தார்கள். அஞ்ஞானிகள் இட்ட பலிகளைச் சாப்பிட்டு, கெட்ட மார்க்கமாய் நடந்துவந்து தங்கள் ஆத்துமாவுக்கு நஷ்டத்தை உண்டுபண்ணினார்கள்.[4]

2. அந்திகிறிஸ்துகள். இவர்கள் சுவிசேஷத்தில் காட்டப்பட்டிருக்கிற உபதேசங்களுக்கு விரோதமாய்த் தப்பறையானவைகளைப் போதித்தவர்கள்.[5] இந்தக் கொள்கையைச் சேர்ந்தவர்கள் **எபியோனியர்.** இவர்கள் எபியோனைச் சேர்ந்தவர்களாயிருக்கலாம், அல்லது "தரித்திரர்" என்று அர்த்தங்கொள்ளும் எபிரெய பதத்திலிருந்து அவர்களுக்குப் பேர்வந்திருக்கலாம். **செரிந்தியர்,** இவர்கள் செரிந்துவின் கொள்கைக்காரர்.

[1] அப். 15. 1. கலா. 1. 6: 5. 2: 6. 12. [2] கொலோ. 2. 8. [3] அப். 6. [4] வெளி. 2. 6. [5] 1 யோவா. 2. 18.

துநோஸ்திகர், "அறிவு" என்று அர்த்தங்கொள்ளும் கிரேக்க வார்த்தையிலிருந்து இந்தப் பேருண்டாயிற்று. ஆதிக்கிறிஸ்தவ நூலாசிரியர்கள் இந்தக் கொள்கைக்கு ஆதிகாரணன் ஸ்தம்பனே வித்தைக்காரனாகிய சீமோன் என்று எழுதிவைத்திருக்கிறார்கள். இந்தத் தப்பறைக்காரருடைய கொள்கைகள் இன்னதென்று திட்டமாய்ச் சொல்ல ஏதுவில்லை. சிலர், இயேசுவையும் கிறிஸ்துவையும் வித்தியாசப்படுத்திப் பேசினார்கள். சிலர், நமது ஆண்டவருடைய தெய்வீகத்தன்மையை மறுத்தார்கள். சிலர், அவருடைய மனுஷத்தன்மையை மறுத்தார்கள். சிலர், அவருடைய பிராயச்சித்தத்தைத் தள்ளினார்கள். எல்லாரும் அவருடைய பரிசுத்த பிரமாணங்களை எண்ணாமற்போனார்கள். இந்தக் கொடிய தப்பறைகளைத் துவக்கத்திலே அபத்தமாக்கும்படி, பரிசுத்த யோவான் அப்போஸ்தலன், பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு, கிறிஸ்துரட்சகருடைய சரியான தெய்வீகத்தையும் மனுஷீகத்தையும் பிராயச்சித்தத்தையும் [illegible] சுவிசேஷத்தையும் நிருபங்களையும் எழுதியிருக்கிறான்.

---

# Q.

# வேதத்தில் வழங்கிவருகிற அளவைவாய்ப்பாடுகள்.

## 1. யூதருடைய நாணயநிறை.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சேரா. | | | யாத். 30. 13. | [illegible] | 0 | 11 |
| 10 | பெக்கா. | | யாத். 30. 26. | 0 | 9 | 2 |
| 20 | 2 | | சேக்கல். யாத். 30. 13. லேவ. 7. 23. மத். 17. 27. | 1 | 2 | 4 |
| 1200 | 120 | | 50 மானே. லூக். 19. 13 | 57 | 4 | 8 |
| 60000 | 6000 | 3000 | 60 தாலந்து | 3437 | 8 | 0 |
| ஒரு செவிந்து நூமியன் அல்லது செக்கலிபுரா. | | | | 6 | 0 | 4 |
| சைக்குலு ஆரியன் அல்லது பொன்சேக்கல் | | | | 18 | 4 | 0 |
| தாலந்து பொன் | | | | 54750 | 0 | 0 |

முந்தின வாய்பாட்டில் காட்டியதில் வெள்ளி அவுன்ஸ் ஒன்றுக்கு ரூ. 2–8–0 ஆகவும், பொன் 40 ரூபாயாகவும் மதிக்கப்படும்.



| | பவுண். | அவுன்ஸ். | அந்தர். | கிரேயின். |
|---|---|---|---|---|
| கேரா | 0 | 0 | 0 | 12 |
| பெக்கா அரைச்சேக்கல் | 0 | 0 | 5 | 0 |
| சேக்கல் | 0 | 0 | 10 | 0 |
| மானே 60 சேக்கல் | 2 | 6 | 0 | 0 |
| தாலந்து 50 மானே | 125 | 0 | 0 | 0 |

## 2. ரோமருடைய நாணய வாய்பாடு.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| காசு. மாற். 12. 42 | 0 | 0 | $6\frac{1}{2}$ |
| கோதிராந்தே. மாற். 12. 42 | 0 | 1 | 0 |
| தேனாரியு. மத். 22. 19 | 0 | 5 | 0 |
| திராக்குமா | 0 | 10 | 0 |
| வெள்ளிக்காசு. மத். 26. 15 | 1 | 4 | 0 |
| ராத்தல் அல்லது மினா | 31 | 4 | 0 |
| தாலந்து | 1937 | 8 | 0 |

அந்நிய ஜாதியாருடைய நாணயத்தில் பார்சியருடைய காசைப் பற்றி முதலாவதாக வேதத்தில் சொல்லியிருக்கிறது. 1 நாளா. 29. 7. எஸ்றா. 2. 69; 8. 27. நெகே. 7. 70—72.

## 3. தூர அளவை.

| | | | | | | மைல். | கெஜம். | அடி. | அங். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஒரு முழம் | | | | | | 0 | 0 | 0 | 22 |
| 400 | ஸ்தாதிவழி. லூக். 24. 13 | | | | | 0 | 243 | 1 | 0 |
| 2000 | 5 | ஒரு ஓய்வுநாட்பிரயாணம். அப். 1. 12 | | | | $\frac{3}{4}$ | 0 | 0 | 0 |
| 4000 | 10 | 2 | ஒரு மைல். மத். 5. 41 | | | 1 | 672 | 0 | 0 |
| 12000 | 30 | 6 | 3 | பார்சான்கு | | 4 | 580 | 0 | 0 |
| 96000 | 240 | 48 | 24 | 8 | ஒருநாட்பிரயாணம். | 33 | 516 | 0 | 0 |

## 4. நீட்டளவை.

| | | | | | | | | அடி. | அங். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஒரு அங்குலம் எரே. 52. 21 | | | | | | | | 0 | $0\frac{7}{8}$ |
| 4 | விரற்கடை. யாத். 25. 25 | | | | | | | 0 | $3\frac{1}{2}$ |
| 12 | 3 | சாண். யாத் 28. 16 | | | | | | 0 | $10\frac{15}{16}$ |
| 24 | 6 | 3 | முழம். ஆதி. 6. 15 | | | | | 1 | $9\frac{3}{4}$ |
| 96 | 24 | 6 | 2 | பாகம். அப். 27. 28 | | | | 7 | $3\frac{1}{2}$ |
| 144 | 36 | 12 | 6 | 1·5 | கோல். எசே. 40. 3—5 | | | 10 | $11\frac{1}{4}$ |
| 192 | 48 | 16 | 8 | 2 | 1·3 | அரபியக்கோல் | | 14 | 7 |
| 1920 | 480 | 160 | 80 | 20 | 13·3 | 10 | சங்கிலி. எசே. 40. 3 | 145 | 11 |

## 5. ஜலவஸ்துக்களை அளக்கும் முகத்தலளவை.

ஒரு காவ் ........................................
1·3 லாக். லேவி. 14. 10 ..............................
5·3 4 காப் ......................................
16 12 3 ஹின். யாத். 30, 24 ............................
32 24 6 2 சேயா .................................
96 72 18 6 3 எப்பா. I இரா. 7. 26. யோவா. 2. 6.... 36
960 720 180 60 30 10 ஓமர். எசே. 45. 14. ஏசா. 5. 10... 360

## 6. தானிய முகத்தலளவை.

படி.

ஒரு காகால் ........................................ 0
20 காப். 2 இரா. 6. 25. வெளி. 6. 6 ........................ 1/4
36 1·8 ஓமர். யாத். 16. 36; 29. 10 ........................ 1/4
120 6 3·3 சேயா. மத். 13. 33 ............................ 3 1/4
360 18 10 3 எப்பா. எசே. 45. 11 ........................ 12 1/2
1800 90 50 15 5 கலம். ஓசி. 3. 2 ........................ 62 1/2
3600 180 100 30 10 கோர் அல்லது ஹோமர். எண். 11. 32. ஓசி. 3. 2. .............. 125

---



# அகராதி.


| | பக்கம். |
|---|---|
| அகிருதி .................... | 54 |
| அதிகாரங்களின் தலைப்பில் காட்டிய பொருளடக்கம். | 27 |
| அத்தாலியா .................. | 174 |
| அத்தேனே .................. | 176 |
| அந்திகிறிஸ்துகள் ............ | 409 |
| அந்தியோகியா பட்டணம்... | 173 |
| அந்தியோகியா (பிசீதியாவிலுள்ளது) ............ | 174 |
| அபிலேனியா .................. | 42 |
| அப்பியுபுரம் .................. | 178 |
| அப்பொல்லோனியா ...... | 175 |
| அப்போகிரிபா ஆகமங்கள், 66, 345; பழைய ஏற்பாட்டு—புதிய ஏற்பாட்டு.... | 399 |
| அப்போஸ்தல அதிகாரம்.... | 18 |
| அப்போஸ்தல நடபடி எழுதப்பட்ட காலம், 215; நோக்கம், 215; பிரிவுகள், 216; ஒத்தவாக்கியங்கள், 217; தள்ளுபடி ஆகமம். | 400 |
| அப்போஸ்தல நடபடியின் காலக்கிரம சங்கதிகளின் அட்டவணை ...... | 184, 373 |
| அமலேக்கியர் .............. | 39 |
| அமாவாசி பண்டிகை ...... | 353 |
| அமோரைன் .............. | 43 |
| அம்பிப்பொலி ............ | 775 |
| அம்மோனியர் ............ | 39 |
| அயிரேன் .............. | 163 |
| அரராத்து .............. | 35 |
| அராமிய பாஷை ........ | 33 |
| அர்மேனியா .............. | 36 |
| அலெக்சந்திரியாபட்டணத் தக்கையெழுத்துப்பிரதி. | 8, 326 |

| | பக்கம். |
|---|---|
| அல்பிரட் ராஜாவின் திருப்புதல் .................. | 25 |
| அளவைவாய்பாடுகள் ..... | 410 |
| அற்புதங்கள் (கிறிஸ்துவானவரின்.) .............. | 402 |
| ஆகாயின் சரித்திரம், 152; அவன் ஆகமப் பிரிவுகள், 153; அதில் வரும் ஒத்த வாக்கியங்கள் .......... | 154 |
| ஆசாரிய உத்தியோகம்...... | 295 |
| ஆசியாவின் ஏழு சபைகள்.... | 179 |
| ஆசோத்து .............. | 171 |
| ஆதாம் [illegible]த்தில் விழுந்தது. | 292 |
| ஆதிசபையில் எழும்பின பதிதங்கள், 409; பதிதர்.... | 190 |
| ஆதியாகமம், 70; பேர், 71; பிரிவுகள், 71; தர்க்கங்கள், 71; கருகளானவைகள், 72; போதனைகள், 73; [illegible]வாக்கியங்கள்... | 74 |
| ஆதிரியாக்கடல் .......... | 178 |
| ஆபகூக்கின் ஆகமம், 150; அவன் சரித்திரம், 150; ஒத்தவாக்கியங்கள் ...... | 151 |
| ஆபிரகாமோடே பண்ணப்பட்ட உடன்படிக்கை .... | 292 |
| ஆபிரகாம் .............. | 37 |
| ஆமாத்து .............. | 48 |
| ஆமோசின் ஆகமம், 1[illegible]0; பிரிவுகள், 141; ஒத்த[illegible]வாக்கியங்கள் .............. | 142 |
| ஆரான் .................. | 37 |
| இக்கோனியா .............. | 174 |
| இக்னேசியுவின் [illegible]ம் .... | 399 |

பக்கம்.

இஸ்ரவேலர் எகிப்தில் அடிமைகளாயிருந்தது ...... 45
இஸ்ரவேலர் பாபிலோனில் சிறைகளாயிருந்தது ... 23
இஸ்ரவேலர் வனாந்தரத்தில் செய்த பிரயாணம் ...... 44
இதுமேயா ............... 170
இராஜ உத்தியோகம் ...... 291
இராஜாக்களின் ஆகமங்கள், 92; ஆக்கியோன், 93; பிரிவுகள், 93; பொருளடக்கம், 94; கருகலானவைகள், 94; ஒத்தவாக்கியங்கள்... 95
இரோத்தப் பள்ளத்தாக்கு. 45
உடன்படிக்கை .......... 3
உத்தியோகங்கள். இராஜ. ஆசாரிய. தீர்க்கதரிசி .... 293
உபாகமம் 81; பொருளடக்கம், 82; ஒத்தவாக்கியங்கள்.................. 83
உயிர்த்தெழுதலின் உபதேசம் .. ............102, 297
உருவகங்கள் ............. 314
உவமைகள் (கிறிஸ்துவின்). 404
உலகில் திருப்புதல் ...... 25
உன்னதப்பாட்டு, 114; ஆக்கியோன், 114; பொருளடக்கம்.................. 115
ஊக்சோ ஜாதியார் ........ 43
ஊர் என்ற பட்டணம் .... 37
எகிப்திய மேய்ப்பர். ராஜாக்கள் ................ 43
எகிப்தில் இஸ்ரவேலர் அடிமைகளாயிருந்தது ...... 23
எகிப்து ................ 41
எக்காளப்பண்டிகை ...... 356
எசேக்கியேலின் ஆகமம், 129; அவன் சரித்திரம், 129; பிரிவுகள், 131; ஒத்தவாக்கியங்கள் ......... 132

பக்கம்.

எசேனர் ................ 407
எஸ்தரின் ஆகமம், 98; அவள் சரித்திரம், 99; ஆகமத்தின் பொருளடக்கம், 99; அது திவ்விய அதிகாரமுள்ளது, 98; அதைச் சேர்ந்த தள்ளுபடியாகம். . 347
எஸ்றாவின் ஆகமம், 97; பொருளடக்கம், 97; பிரிவுகள், 97; ஆகமத்தைச் சேர்ந்த தள்ளுபடியாகம். 3[illegible]
எத்தியோப்பியா .......... 42
எபியோனியர் ............409
எபிரெயசெய்யுள் (செய்யுள் பார்க்க) .......... 358
எபிரெய நிருபம், 269; ஆக்கியோன், 270; எழுதப்பட்டகாலம், 271; நோக்கம், 271; பிரிவுகள், 273; ஒத்தவாக்கியங்கள்......... 273
எபிரெயபாஷை .......... 32
எபிரெயரின் பண்டிகைகள். 351
,, லௌகிக நாள். 351
,, வருஷம்....... 351
,, வைதிகவருஷம். 351
எபிரோன் .......... ..... 40
எபூசியர் ................ 39
எபேசிய நிருபம், 242; எழுதப்பட்ட காலம், 245; நோக்கம், 244; பிரிவுகள், 244; ஒத்தவாக்கியங்கள். 245
எபேசுபட்டணம் ....176, 179
எப்பாப்பிரோதீத்து ...... 251
எப்ரேமி கையெழுத்துப் பிரதிகள் .................. 326
எமோரியர் ............... 39
எரிகோ ................ 49
எருசலேம் ............51, 162
எரேமியாவின் சரித்திரம், 121; ஆகமம், 125; தீர்க்கதரிசனம், 125; நோக்



பக்கம்.

கம், 127; கர்த்தாநிச்சயம், 127; ஒத்தவாக்கியங்கள். 128
எரேமியாவின் புலம்பல் .. 128
ஏரோக்கிலியோன் காற்று ... 177
ஏரோதோது ........ .... 7
ஏரோதியர்............... 408
ஏர்மாவின் மேய்ப்பன் என்ற ஆகமம் ........ ... 191, 400
ஏலிமா ................. 174
ஏலியாப்போலி .......... [illegible]3
ஏசாயாவின் சரித்திரம், 118; ஆகமம் பிரிவு, 119; ஆக்கியோன், 120; தள்ளுபடி ஆகமம், 121; ஒத்தவாக்கியங்கள் .......... 122
ஏவேயர் ................. 34
ஏதோம் ................. 170
ஏத்தாம் ................. 45
ஏத்தியர் ................. 39
ஏலீம் .................... 47
ஏலோயீம் ............68, 105
ஏவியர் ................. 39
ஏனோக்கு ................ 276
ஐபிராத்து நதி .......... 34
ஒபதியாவின் சரித்திரம், 142; ஆகமம் பிரிவுகள், 142; ஒத்தவாக்கியங்கள் .... 143
ஒலிவமலை .............. 168
ஓசியாவின் சரித்திரம், 137; ஆகமம், 136; நோக்கம், 138; பிரிவுகள், 138; ஒத்தவாக்கியங்கள் ........ 139
ஓய்வுநாள் ............ 353
ஓய்வு வருஷம் .......... 356
ஓரேப் பருவதம் ......... 44
ஓன் பட்டணம் .......... 43
கத்மோனியர் ........... 39
கப்பர்நகூம் ............. 168
கடைத்தொகுத்த வாக்கியங்கள். 310

பக்கம்.

கர்த்தர் என்ற வார்த்தையின் அர்த்தம் ............. [illegible]
கலாத்தியர் நிருபம், 224; பிரிவுகள், 225; கர்த்தாநிச்சயம், 226; ஒத்தவாக்கியங்கள்............ 226
கலாத்தியா நாடு ......176, 224
கல்தேயர் .............. 408
கலிலேயாக்கடல் ........ 165
கலிலேயா நாடு ......... 169
கல்வாரி ............... 168
கனோன் ஆகமம். (பழைய ஏற்பாடு.) .......... 60
கனோன் ஆகமம் 158; (புதிய ஏற்பாடு) வரிசை, 186; ஐவக்கத்தில் எழுதப்பட்டவை, 186; திவ்விய அதிகாரத்துக்குரிய ஆகமங்கள், 188; ஒரே ஆகமமாகச் சேர்த்திரட்டப்பட்டது, 189; அதைப்பற்றிய தப்பான எண்ணங்கள், விவாதங்கள், 191; அப்போகிரிபா ஆகமங்கள் ...... 399
காதேஸ் ............... 48
காத் தீர்க்கதரிசி ........ 91
காம் .................. 36
காலக்கணித அட்டவணை.... 328
கானா ................ 163
கானானியர்பாஷை ........ 33
கானானியர் ............. 38
கானான் தேசக்குடிகள் .... 38
கிரான்மர் வேதாகமம் ....... 2[illegible]
கிரேத்தாத் தீவு ...... 178, 17[illegible]
கிலவுதா தீவு .......... 17[illegible]
கிலேமெந்தின் நிருபம் .... 3[illegible]
கிலேமெந்து ............ 3[illegible]
கிறிஸ்தவ காலவதி ....... 1[illegible]
கிறிஸ்துவின் அற்புதங்கள், 402; உயிர்த்தெழுதல், 295; உவமைகள், 404; சகோ

பக்கம்.

தார், 238; ஜீவிய சரித்தி
ரப் பிரிவுகள், 183; சோ
திக்கப்பட்ட இடம், 162;
ஞானஸ்நானம், 182; பிற
ப்பு, 182; [illegible]
சான்றிரமேயாய் 160;
காலக்கணித மேசையாய்,
373; தெய்வீகத்தன்மை.... 18
குவாரன்டேனியா ........ 162
குரேனியர் ............ 410
கூத் .................. 42
கூடாரப்பண்டிகை ........ 355
கெங்கிரேயா ............ 234
கெர்கெசேனர் ............ 166
கெனிசியர் ............ 39
கெனேசரேத்துக்கடல் .... 165
கேனியர் ................ 39
கையெழுத்துப் பிரதிகள்,
புதிய ஏற்பாட்டு, 6, [illegible];
பழைய ஏற்பாட்டு...... 324
கைனியான் ............ 260
கொப்திக் திருப்புதல் ...... 9
கொரிந்தியர் முதல் நிருபம்,
226; எழுதப்பட்ட கார
ணம், 227; பிரிவுகள்,
229; கர்த்தா விசயம்,
229; உத்தவாக்கியங்கள். 229
இரண்டாம் நிருபம்,
230; எழுதப்பட்ட
காரணம், 230; பிரி
வுகள், 232; முதல்
நிருபத்தினுண்
டான பயன், 231;
உத்தவாக்கியங்கள். 233
கொரிந்து பட்டணம் ...... 176
கொலோசெயர் .......... 175
கொலோசெயர் நிருபம், 246;
எழுதப்பட்ட காலம், 247;
பிரிவுகள், 247; உத்தவாக்
கியங்கள் .............. 248

பக்கம்.

கோசேன் நாடு ............ 44
கோடெக்ஸ், அலெக்சந்திரி
னஸ், 326; எப்ரமி, 326;
சினாய்திக்கஸ், 324; பேசா,
327; மான்ற்பாரினஸ்,
328; வாத்திக்கானஸ் ... 325
கோராசின் .............. 166
கோத்தினை .............. 112
சகரியாவின் சரித்திரம், 154;
ஆகமம் பிரிவுகள், 155;
தரிசனங்கள், 155; உத்த
வாக்கியங்கள் .......... 156
சகாரா வனாந்தரம் ........ 42
சங்கீத ஆகமம், 103; ஆக்கி
யோன்கள், 103; பிரிவு
கள், 103; வரிசைப்படுத்
தப்பட்டது, 103; மேசி
யாவைக் குறித்தவைகள்,
106; உத்தவாக்கியங்கள்;
108; சங்கீதங்கள் எழு
தப்பட்ட சமயத்தைக்கா
ட்டிய அட்டவணை...... 363
சதுசேயர் ................ 406
சமாரியர் ................ 406
சமாரியா ................ 164
சர்தை .................. 180
சவக்கடல் ................ 40
ஜலப்பிரளயம் ............ 35
சாலொமோனின் உன்னதப்
பாட்டு ...... 114
,, ஞானத்திருகமம். 384
சிலிசித்தியு ............ 178
சிசேயார் ................ 36
சிமிர்னா ................ 179
சிறையிருப்பிலிருந்து யூதா
திரும்பினது ............ 56
சிறையிருப்புக்கு யூதா போ
னது .................... 56
சீகார் .................. 164
சீகேம் ............ 35, 164



பக்கம்.

சீதோன் ................ 167
சீப்புருஸ் .............. 171
சீமோன் (சூனியவித்தை
க்காரன்.) .............. 410
சீயோன்மலை .............. 51
சீரியபாஷை சுவிசேஷங்கள். 9
சீரா .................. 175
சுருப்பம் ................ 44
சுருக்கியங்கள் கையெழுத்துப்
பிரதிகள் .............. 8
சென்னருக்காம் ........ 36, 47

சுசேதொந்து .............. 45
சுருள் .................. 32
சுவிசேஷம் என்பதின் அர்த்
தம், 193; சுவிசேஷங்கள்
ஒன்றுக்கொன்று இருக்
கிற சம்பந்தம், 193; வித்
தியாசம், 195; சுவிசேஷ
சரித்திரங்கள் காட்டிய அட்
டவணை, 373; பொதுப்
புதான சுவிசேஷங்கள், 194;
தள்ளுபடி சுவிசேஷங்கள். 400
சூர் வனாந்தரம் .......... 46
சூரபோகு (யசா) ........ 405
செசரியா ................ 176
செசரியா (பிலிப்பி,) ...... 167
செப்பனியாவின் சரித்திரம்,
151; ஆகமம் பிரிவுகள்.... 152
செப்துவஜின்ட் திருப்பு
தல் .................... 12
செய்யுள். (எபிரெய) 358;
பாவெளி இணை, 359; உயர்
த்துகின்றபாவணி இணை, 359;
ஆரோகணபாவணி இணை,
360; தொடர்பாவணி
இணை .................. 361
செனிக்கா .............. 409
செர்க்கியபவுல் .......... 174
செலூக்கியா ............ 174
ஜெனிவா வேதாகமம் .... 26

பக்கம்.

சேபா .................. 42
சேம் .................. 36
சேனவொர்ந்த வாக்கியங்
கள் .................. [illegible]
ஞானஸ்நானம். (கிறிஸ்து
வின்) ................ 182
தக்கேபு ................ 274
தப்பறைகள் .......... 191, 409
தமஸ்கு ................ 171
தமிழ்வேதாகமம் ........ 28
தர்சீசு ................ 143
தல்மாத்தியா ............ 261
தலைமுறை(வேதாகமத்தின்). 23
தள்ளுபடி ஆகமங்கள், பழை
ய ஏற்பாட்டு, 345; புதிய
ஏற்பாட்டு .............. 399
தள்ளுபடி சுவிசேஷங்கள். 380
,, நிருபங்கள் .... 380
தாண் .................. 38
தானியேலின் சரித்திரம், 132;
ஆகமம் பிரிவுகள், 133;
திவ்விய அதிகாரம், 135;
அதற்கும் வெளிப்படுத்
தின விசேஷத்துக்கும் இ
ருக்கிற சம்பந்தம், 136;
அதைச் சேர்ந்த தள்ளு
படி ஆகமங்கள், 136;
உத்தவாக்கியங்கள்...... 136
திக்ரிஸ் நதி ............ 35
திண்டேலின் வேதாகமம் .... 25
திரோக்கு .............. 265
தீத்து ................ 260
தீத்துவின் நிருபம், 260; சோ
க்கம், 261; பிரிவுகள்,
162; உத்தவாக்கியங்கள். 163
தீமோத்தேயு .......... 258
தீமோத்தேயுவின் முதல் நிரு
பம், 259; எழுதப்பட்ட
காலம், 258; பிரிவுகள்,
260; உத்தவாக்கியங்கள். 260

பக்கம்.

இரண்டாம் நிருபம், 263; எழுதப்பட்ட காலம், 264; பொருளடக்கம், 264; நோக்கம், 266; பிரிவுகள், 268; உத்தவாக்கியங்கள் ........ 269
திபத்திரா .................... 175
திரு .................... 167
திர்க்கதரிசன ஆகமம், பழைய ஏற்பாடு .... 115
,, புதிய ஏற்பாடு. 282
திர்க்கதரிசனம் பழைய ஏற்பாட்டிலிருந்து புதிய ஏற்பாட்டில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறவை ...... 302
திர்க்கதரிசன வியார்த்தி .... 315
திர்க்கதரிசிகள் ..........31, 372
துரோவா .................. 176
தெக்கப்போலி ............ 167
தெசலோனிக்கேபட்டணம். 175
தெசலோனிக்கேயர் முதல் நிருபம், 219; எழுதப்பட்ட காலம், 220; பிரிவுகள், 221; உத்தவாக்கியங்கள் .............. 222
இரண்டாம் நிருபம், 222; பிரிவுகள், 223; தானியேலின் திர்க்கதரிசனத்துக்கு ஒத்துவருகிற பாகம், 323; உத்தவாக்கியங்கள் ............ 223
தெபேயித் திருப்புதல் .... 9
தெர்பே .................... 174
தென்தேசம் ............ 42
தொடர்வாக்கியங்களின் பிரயோஜனம் ............ 308
தோபேத்தின்ஆகமம் ........ 346
நல்ல துறைமுகம் ........ 177

பக்கம்.

நாகூம் சரித்திரம், 148; ஆகமம், 149; உத்தவாக்கியங்கள் .................... 150
நாசரேத்து .............. 161
நாத்தான் .................. 91
நாயீன் .................... 166
நாலுசுவிசேஷங்கள் ...... 193
நாளாகமங்கள், 95; ஆக்கியோன்கள், 95; பிரிவுகள், 95; பொருளடக்கம், 96; விசேஷங்கள், 96; உத்தவாக்கியங்கள் .......... 97
நிக்கொலாயித்தர் .......... 409
நியாயப்பிரமாணம் .... 31
நியாயாதிபதிகளின் ஆகமம், 87; பொருளடக்கம், 87; பிரிவுகள், 87; ஆக்கியோன், 88; போதனை, 88; உத்தவாக்கியங்கள் .......... 89
நிருபங்கள், 317; அதிலிருக்கிற வருத்தங்கள், 218; அவைகள் எழுதப்பட்ட காலம், 401; தள்ளுபடி நிருபங்கள் ...... ..... 399
நினிவே .................... 54
நீதிமொழிகள், 110; ஆக்கியோன்கள், 110; பிரிவுகள், 110; வியார்த்தி, 111; உத்தவாக்கியங்கள் .. ..... 112
நெகேமியாவின் சரித்திரம், 98; ஆகமம், பிரிவுகள்.... 98
நேபோ .................... 49
நேயாப்போலி .......... 175
நோத் தேசம் ............ 35
நோவா .................... 36
நோவாவின் குமாரர் குடியிருந்த இடங்கள் .......... 36
பஸ்கா .................... 354
பஞ்சாகமம் .............. 61
பண்டிகைகள் .............. 351



பக்கம்.

பதிதங்கள் (ஆதிசபையில் எழும்பின) ............ 409
பதிதர்கள் (ஆதிசபையில் எழும்பின) ............ 190
பத்லவக்கோத்திரத்தார் ...... 50
பத்ரோஸ் .................. 42
பரிசுத்ததேசம் ........ 38
பரிசேயர் .................. 407
பர்னபா .................... 173
பர்னபாவின் நிருபம் ...... 4[illegible]0
பலஸ்தீனு, 37; அதின் பிரிவுகள். .................. 168
பவுல் பிறந்த இடம், 171; குணப்பட்டது, 171; போதிக்கப்பட்டது, 20; தேவனுடைய ஊழியத்துக்குப் பிரித்தெடுக்கப்பட்டது, 173; முதல் பிரயாணம், 173; இரண்டாம் பிரயாணம், 175; மூன்றாம் பிரயாணம், 176; தேவாலயத்தில் பிடிபட்டது, 177; பேலிக்ஸ், பெஸ்து, அகிரிப்பா என்பவர்கள் முன்புக்கு நிறுத்தப்பட்டது, 177; ரோமாபுரிக்கு அனுப்பப்பட்டது, 177; கப்பற்சேதம், 178; முதல் சிறையிருப்பு, 178; இரண்டாம் சிறையிருப்பு, 179; இரத்தசாட்சியாய் மரித்தது, 179; அவன் ஜீவியகாலக்கணிதம், 184; அவனுக்குக் கொடுக்கப்பட்ட முள் ............ 224
பாகால்சேபோன் ........ 45
பாக்கியமலை ............ 166
பாபிலோனியா ........ 36
பாபிலோன் .............. 36
பாபேல் .................. 37
பாப்போ பட்டணம் ...... 174
பாரான் .................. 41

பக்கம்.

பாருக் .................... 349
பார்வோன்கள் .......... 43
பாலிம் சென்றல் .......... 326
பிஸ்கா .................. [illegible]
பிரசங்கியின் ஆகமம், 112; பேர், 113; ஆக்கியோன், 113; எழுதப்பட்டநோக்கம் ... 113
பிரதிஷ்டைப்பண்டிகை .... 356
பிலதெல்பியா .......... 175
பிலிப்பிபட்டணத்துச் சிறைச்சாலைக்காரன் ........ 175
பிலிப்பிபட்டணம் ........ 176
பிலிப்பியர் நிருபம், 251; எழுதப்பட்ட காரணம், 251; நோக்கம், 252; பிரிவுகள், 253; காலம்.... 253
பிலேமோன் நிருபம், 248; எழுதப்பட்ட காரணம், 248; அந்த நிருபத்தைப் பற்றிச் சொல்லப்படும் ஆட்சேபனைகள் ... .... 249
பினீக்ஸ் .................. 177
பீசா கையெழுத்துப் பிரதிகள் .................. 327
பீட் என்பவர் செய்த திருப்புதல் ................ 25
புதிய ஏற்பாட்டின் உபதேச ஆகமங்கள், 219; பூமிசாஸ்திரம், 160; சரித்திர ஆகமங்கள், 193; பிரிவுகள், 4; எழுதப்பட்ட காலக்கிரமம், 186; எழுதப்பட்ட பாஷை .............. 159
புத்தேயோலி ............ 178
பூமிசாஸ்திரம் (பழைய ஏற்பாடு) .............. 34
பூமிசாஸ்திரம் (புதிய ஏற்பாடு .................. 160
பூரிம்பண்டிகை .......... 356
பெதஸ்தா குளம் ........ 164

பக்கம்.
பெத்சாயிதா ............ 166
பெத்தபரா ............ 162
பெத்தானியா (எருசலேமுக்கருகே) ............ 168
பெத்தானியா (யோர்தானுக்கருகே) ............ 162
பெத்தேல் ............ 39
பெத்லெகேம் ............ 160
பெந்தெகொஸ்தே ............ 354
பெரிசியர் ............ 39
பெரிய சபையில் ............ 26
பெரிய வெள்ளிக்கிழமை... 183
பெரியா ............ 170
பெரோயா ............ 160
பெர்கமு ............ 175
பெர்கே ............ 174
பெலிஸ்தர் ............ 39
பெனூயேல் ............ 348
பேதுருவின் பிரயாணம். 172; இரத்தசாட்சியாய் மரித்தது ............ 257
பேதுருவின் முதல் நிருபம், 253; எழுதப்பட்ட காரணம், 254; நோக்கம், 254; பிரிவுகள், 255; ஒத்தவாக்கியங்கள் ............ 255
இரண்டாம் நிருபம், 256; எழுதப்பட்ட காரணம், 256; நோக்கம், 256; பிரிவுகள், 257; காலம், 257; ஒத்தவாக்கியங்கள்.. 257
பைபிள் என்ற வார்த்தைக்கு அர்த்தம் ............ 2
பொழிப்புரைச் சுவிசேஷங்கள் ............ 194
போலிகார்ப்பு ............ 399
மகதலாவின் எல்லை ............ 167
மக்கபேயராகமங்கள் .... 350
மக்கெதோனியா ............ 175

பக்கம்.
மக்பேலா ............ 41
மசோரா ............ 34
மசோரீயர் ............ 34
மத்தேயு ............ 19
மத்தேயு சுவிசேஷம், 197; எழுதப்பட்ட நோக்கம், 198; பிரிவுகள், 199; உள்ளம், 199; ஒத்தவாக்கியங்கள் ............ 200
மம்ரே ............ 40
மல்கியின் சரித்திரம் 156; ஆகமம் பிரிவுகள், 157; ஒத்தவாக்கியங்கள் ............ 157
மகமதியர் சமயம் ............ 360
மாதங்கள் (எபிரெய.) ... 352
மாரா ............ 4[illegible]
[illegible]
மார்ஸ்மேடை ............ 176
மால்த்தாத் தீவு ............ 179
மாற்கு ............ 20[illegible]
மாற்கு சுவிசேஷம், 201; எழுதப்பட்ட நோக்கம், 203; பிரிவுகள், 203; கர்த்தாவின்சரயம், 203; பொருளடக்கம், 204; ஒத்தவாக்கியங்கள் ............ 205
மான்புரீரின் கையெழுத்துப்பிரதி ............ 328
மிக்தோல் ............ 45
மிசர் ............ 42
மிஸ்ராயீம் ............ 42
மீகாவின் சரித்திரம், 146; ஆகமம், 146; பிரிவுகள், 147; ஒத்தவாக்கியங்கள். 148
மீதியானியர் ............ 39
மீறாப்பட்டணம் ............ 171
மூன்று சத்தியம் ............ 178
மெம்பிஸ் ............ 49
மெலித்தாத் தீவு ............ 178



பக்கம்.
மேய்ப்பர் ராஜாக்கள் (எகிப்து) ............ 43
மோசேயின் சரித்திரம், 40; அவன் உபயோகித்தசாதனங்கள் ............ 68
மோவாபியர் ............ 39
யாக்கோபின் நிருபம், 238; அதின் நோக்கம், 239; பிரிவுகள், 240; போதனை, 240; ஒத்தவாக்கியங்கள். 242
யாக்கோபு ....... 40, 41, 44
யாத்திராகமம், 75; பேர், 75; பிரிவுகள், 75; கருத்தானவைகள், 76; ஒத்தவாக்கியங்கள் ............ 76
யாப்பேத்து ............ 36
யூதருடைய சமய கோட்பாடுகள் ............ 405
யூதருடைய சிறையிருப்பு... 23
யூதருடைய பண்டிகைகள். 351
யூதர் சிறையிருப்பிலிருந்து திரும்பினது ............ 56
யூதா, 271; அவன் பேரப்பிள்ளைகள் ............ 275
யூதாவின் நிருபம், 271; எழுதப்பட்ட காலம், 275; நோக்கம், 276; ஒத்தவாக்கியங்கள் ............ 277
யூதித்தாகமம் ............ 347
யூதேயா ............ 169
யூபிலிப்பண்டிகை ............ 357
யோசுவாவின் ஆகமம், 84; ஆக்கியோன், 84; பிரிவுகள், 85; கருத்தானவைகள், 86; ஒத்தவாக்கியங்கள்... 86
யோசேப்பு ............ 43
யோபின் ஆகமம், 100; பொருளடக்கம், 101; நோக்கம், 102; பிரிவுகள், 102; ஒத்தவாக்கியங்கள் ............ 103

பக்கம்.
யோப்பாபட்டணம் ...... 173
யோர்தான் சமபூமி ... .... 40
யோவான் சுவிசேஷம்; 209; எழுதப்பட்டகாலம், 211; நோக்கம், 211; பிரிவுகள், 212; பொருளடக்கம், 213; ஒத்தவாக்கியங்கள் ...... 214
யோவான் நிருபங்கள்.... 277
முதலாம் நிருபம், 277; எழுதப்பட்ட காரணம், 278; நோக்கம், 278; பிரிவுகள், 279; ஒத்தவாக்கியங்கள்.. 280
இரண்டாம் நிருபம், 280; எழுதப்பட்ட காலம், 281; நோக்கம் ............ 281
மூன்றும் நிருபம், 281; எழுதப்பட்ட நோக்கம், 281; பொருளடக்கம் ............ 282
யோவேலின் ஆகமம், 139; சரித்திரம், 139; பிரிவுகள், 140; ஒத்தவாக்கியங்கள்.. 140
யோனாவின் ஆகமம், 143; அவன் சரித்திரம், 143; பொருளடக்கம், 144; ஆட்சேபனைகள், 144; பிரிவுகள், 145; ஒத்தவாக்கியங்கள்.. 146
ரப்பாவியர் ............ 39
ராகாப் ............ 42
ராமசேஸ் ............ 45
ரூத்தின் ஆகமம், 89; பொருளடக்கம், 89; பிரிவுகள்; 89; நோக்கம், 90; ஒத்தவாக்கியங்கள் ............ 90
ரெப்பாயீமியர் ............ 39
ரேகியு ............ 178
ரேகொப் ............ 48
ரோமசபை ............ 236

பக்கம்.

ரோம நிருபம், 233; எழுதப் பட்டகாரணம், 234; நோக்கம், 234; பிரிவுகள், 236; ஒத்தவாக்கியங்கள் .... 237
ரோமாபுரி .................. 177

லத்தின் திருப்புதல் ........ 9
லவோதிக்கேயா .......... 181
லவோதிக்கேயா நிருபம் .... 243

லித்தா .................. 172
லிபர்த்தினர் .............. 408
லிபியா .................. 42

லீஸ்திரா .................. 174
லீயஞேன் .................. 38

லூக்கா சுவிசேஷம், 205; நோக்கம், 206; காலம், 207; பிரிவுகள், 207; கர்த்தாநிச்சயம், 208; ஒத்தவாக்கியங்கள் ........ 209
லூக்காவின் சரித்திரம் ..... 205
லூபியர் ................ 42

லெபேயு ................ 275

லேவியராகமம், 77; பேர், 77; பிரிவுகள், 77; ஒத்தவாக்கியங்கள் .......... 79

வாலந்தினு .............. 191

பக்கம்.

விகற்பமாய்த் தோன்றப்படுகிறவைகள் .......... 96
வியார்த்தி (தீர்க்கதரிசனை). 315
வெர்ஜில் ........ ........
வெளிப்படுத்தின விசேஷம், 282; ஆக்கியோன், 283; காலம், 283; வியார்த்தி, 284; ஒத்தவாக்கியங்கள்.. 286

வேதபாரகர் .............. 408
வேதாகமம், 2, அதில் அடங்கிய அதிகாரங்கள், வாக்கியங்கள், 28; அதிகாரங்களாகவும் வாக்கியங்களாகவும் பிரிக்கப்பட்டது, 28; அதிலடங்கிய ஆகமங்கள், 372, 401; அது ஒன்றாகத் திரட்டிச் சேர்க்கப்பட்டது, 60, 185; காரியநிச்சயம், 6. கர்த்தாநிச்சயம் 5; கொடுக்கப்பட்ட நோக்கம், 23; நம்பப்படத்தக்கது, 15; தலைமையுள்ளது, 22; திவ்விய அருளால் கொடுக்கப்பட்டது, 21; பாதுகாக்கப்பட்டது, 63; பிரிவுகள், 3; புராதனம், 4; பேர்கள் .......... 3
ஹகியோகிராபா ........ 4, 31

ARCHIVES
5598

C. K. S. Press, Vepery, Madras, 1883.